55
272-8
ஆணையர்
தமிழ்நாடு ஆவணக்காப்பகம் மற்றும் வரலாற்று ஆராய்ச்சி
தமிழ்நாடு
எழும்பூர்,

# தமிழ் நாடு

# சட்டமன்றப் பேரவை நடவடிக்கைகள்

# TAMIL NADU
# LEGISLATIVE ASSEMBLY DEBATES

## பணித்துறை வெளியீடு—OFFICIAL REPORT

புதன்கிழமை 1983 அக்டோபர் -26 தொகுதி LII எண் .3

**Wednesdy 26th October 1983 —Volume LII No. 3**

சட்டமன்றப் பேரவைத் துறை, சென்னை-600009

**Legislative Assembly Department, Fort st. George, Madras-600009**

விலை ரூ- 3-50காசுகள்)

(Price Rs. 3–50paise

T.N.L.A Debates

OFFICIAL REPORT

VOL: LII NO: 3 and 4

October 26th and 27

1983

V211,31'N83

N83-52-3&4

136053

## உள்ளடக்கம்

26—10—1983.


பக்கங்கள்

1. வினாக்கள்—விடைகள் :

உடுக்குறியிட்ட வினாக்கள் .. .. 153— 181

2. ஒழுங்குப் பிரச்சினை:

பேரவைக்குள் எதிர்க்கட்சிகள் வரிசையில் திராவிட முன்னேற்றக் கழகம் இரண்டாவது இடத்திற்கு மாற்றப்பட்டிருப்பது—தீர்ப்பு 182

3. தகவல் கோரல்:

(அ) பத்திரிகையில் வந்துள்ள செய்தி . 185

(ஆ) சென்னையிலும் அதன் சுற்றுப்புறங்களிலும் அடை மழையினால் ஏற்பட்டுள்ள சேதம் .. .. 185—186

4. அறிக்கை அளித்தல்:

மதிப்பீட்டுக் குழு .. .. .. 186

5. அரசினர் சட்ட முன்வடிவுகள்:

(அ) சென்னை மாநகரக் காவல் தமிழ்நாடு மாவட்டக் காவல் (இரண்டாம் திருத்த) சட்டமுன்வடிவு, 1983. .. 186—201

(ஆ) பொது விற்பனை வரி (இரண்டாவது திருத்த) சட்ட முன்வடிவு, 1983. .. 201

(இ) கேளிக்கை வரி (நான்காவது திருத்த) சட்ட முன்வடிவு, 1983. .. .. 202

(ஈ) கடன் நிவாரண (இரண்டாவது திருத்த) சட்ட முன்வடிவு, 1983. .. 202

6. அறிவிப்புகள்:

(அ) பொது விற்பனை வரி (இரண்டாவது திருத்த) சட்ட முன்வடிவு 1983 (ஆ.இ.) 201

(ஆ) கேளிக்கை வரி (நான்காவது திருத்த) சட்ட முன்வடிவு, 1983. (ஆ.இ.) .. 202

| | | பக்கங்கள் |
|---|---|---|
| 7. அரசினர் தனித் தீர்மானம்: | | |
| இலங்கை வாழ் தமிழர் பிரச்சினை குறித்து (தொடர்ச்சி). | | 203—210 |
| | திரு. எஸ். சங்கரய்யா | 260—239 |
| | திரு. ப. நெடுமாறன் | 230—246 |
| | திரு. இரா. கருப்பையா | 246—256 |
| | திரு. பி. முகமது இஸ்மாயில் | 251—260 |
| | திரு. எஸ். ஆண்டித்தேவர் | 260—262 |
| | திரு. ஏ. சாகுல் ஹமீது | 262—264 |
| | திரு. ஜி. மூர்த்தி | 264—266 |
| | திரு. என்.வி.என். சோமு | 266—270 |
| 8 பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்: | | 276 |


136053

## தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

1983, அக்டோபர் 26, புதன்கிழமை

(ஐப்பசி 9, ருத்ரோத்காரி, திருவள்ளுவர் ஆண்டு 2014)

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் காலை 9-00 மணியளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. க. இராசாராம் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்:

"அறனறிந்து மூத்த அறிவுடையார் கேண்மை
திறனறிந்து தேர்ந்து கொளல்"

நீதி நெறிகளை அறிந்து, அனுபவம் கனிந்த பெரியோரின் நட்பைத் துணையாகக் கொள்ளுதல் வேண்டும். அவ்வாறு கொள்ளும்போது அந்தப் பெரியோரின் தகுதிக்கு ஏற்றபடி அவரிடம் நடந்து கொள்ள வேண்டிய முறையை ஆராய்ந்து அறிந்து அவரைத் துணையாகக் கொள்ளல் வேண்டும்.

### 1. வினாக்கள்—விடைகள்.

#### உடுக்குறியிட்ட வினாக்கள்.

மாவட்ட அளவிலுள்ள பால் உற்பத்தியாளர் யூனியனையும் பால் வழங்கும் யூனியனையும் இணைத்து அமைக்கும் திட்டம்.

*வினா எண் 21—திரு. செ. செம்மலை, திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன்: மாண்புமிகு பால்வளத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா—

மாவட்ட அளவில் உள்ள பால் உற்பத்தியாளர் யூனியனையும் பால் வழங்கும் யூனியனையும் ஒன்றாக இணைத்து ஒரே அமைப்பின்கீழ் கொண்டுவரும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி: மாவட்ட அளவில் உள்ள பால் உற்பத்தியாளர் கூட்டுறவு ஒன்றியத்துடன் அம்மாவட்டத்தில் உள்ள பால் வழங்கும் கூட்டுறவு ஒன்றியத்தை இணைத்து அமைக்கும் திட்டம் நடைமுறையில் உள்ளது. இவ்வாறு இணைப்பதற்கான சாத்தியக் கூறுகள் இல்லாத இடத்தில் உள்ள பால் வழங்கும் கூட்டுறவு ஒன்றியத்தை பால் நுகர்வோர் கூட்டுறவுச் சங்கமாக மாற்ற நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

திரு. செ. செம்மலை: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆனந்தபாணியில் அமைக்கப்பட்டுள்ள இந்த 3 அடுக்கு முறையில் கிராம அளவில் உள்ள கூட்டுறவு பால் உற்பத்தியாளர் சங்கங்கள் ஆகட்டும், அல்லது மாவட்ட அளவிலுள்ள கூட்டுறவு ஒன்றியங்கள் ஆகட்டும், இதிலே உற்பத்தியாளர்களுக்கு பிரதிநிதித்துவம் இருப்பது போல கன்சுமர்ஸ் அதாவது உபயோகிப்பவர்களுக்கு எந்த விதமான பிரதிநிதித்துவமும் இல்லை. எனவே எப்படி உற்பத்தியாளர்கள் பாதுகாக்கப்பட வேண்டும் என்ற ஒரு நிலை இருக்கிறதோ அதேபோல் நுகர்வோர்கள் நலன்களும் பாதுகாக்க வேண்டும் என்ற அளவில் இப்படிப்பட்ட அமைப்பு முறையில் உபயோகிப்பவர்களுக்கு ஏதாவது பிரதிநிதித்துவம் அளிக்க வழிவகைகள் செய்யப்பட்டிருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழக அரசினுடைய இரண்டு நோக்கங்கள் உற்பத்தியாளர்கள் நலன்கள் பேணி பாதுகாக்கப்பட வேண்டும், நுகர்வோர் நலன்களும் பேணி பாதுகாக்கப்பட வேண்டும் என்பது. அந்த வகையில் உற்பத்தியாளர் நலன்கள் பேணி பாதுகாக்க உற்பத்தியாளர் கூட்டுறவு சங்கங்களையும் நுகர்வோர் நலன்களை பேணி பாதுகாக்க நுகர்வோர்கள் கூட்டுறவு சங்கங்கள் சென்னை போன்ற பெரு நகரங்களிலும் நெய்வேலி போன்ற தொழிற்சாலை மிகுந்த இடங்களிலும் ஏற்படுத்த தொடர்ந்து நடவடிக்கை எடுத்து வருகிறோம். குறிப்பாக இன்றைக்கு சென்னையில் 30 பால் நுகர்வோர் கூட்டுறவு சங்கங்கள் இருக்கின்றன. அது ஏறத்தாழ 80 ஆயிரம் லிட்டர் பாலை அந்த கூட்டுறவு சங்கங்கள் இன்றைக்கு விநியோகம் செய்து வருகிறது. அது மட்டும் அல்ல, 4 லட்சத்து 80 ஆயிரம் லிட்டர் பாலை நுகர்வோர்கள் தாங்கள் நடத்துகின்ற சங்கங்கள் வாயிலாக வினியோகம் செய்து அந்த முறையை இன்றைக்கு வெற்றிகரமாக ஆக்கி வருகிறார்கள். அந்த முறை எல்லா இடங்களுக்கும் விரிவுபடுத்தப்பட வேண்டும்.

திரு. செ. செம்மலை: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்படிப்பட்ட இணைப்புப் பணிகள் அல்லது இணைப்பு முறை எந்த எந்த மாவட்டங்களில் செயற்படுத்தப்பட்டு வருகிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எல்லா மாவட்டங்களில் செயற்படுத்தப்பட வேண்டும் என்பது அரசினுடைய கொள்கை. இன்றைக்கு 15 இடங்களில் தான் பால் கூட்டுறவு வழங்கும் சங்கங்கள் (சப்ளை யூனியன்) என்ற அமைப்பு இருக்கிறது. அத்தனையும் உற்பத்தியாளர் சங்கங்களாக மாற்ற இயலாத இடத்தில் நுகர்வோர் சங்கங்களாக ஆக்கப்படுகின்ற முயற்சியில் அரசு ஈடுபட்டு வருகிறது.



திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன்; மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பால் உற்பத்தியாளர் கூட்டுறவு ஒன்றியத்துடன் பால் வழங்கும் கூட்டுறவு ஒன்றியத்தை இணைப்பதற்கு சாத்தியக் கூறுகள் இல்லாத இடத்தில் உள்ள பால் வழங்கும் கூட்டுறவு ஒன்றியத்தை பால் நுகர்வோர் கூட்டுறவுச் சங்கமாக மாற்ற நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். மாவட்ட அளவில் திண்டுக்கல்லில் இருக்கின்ற பால் வழங்கும் சங்கத்தை பால் உற்பத்தியாளர் சங்கமாக மாற்றும் செயற்குறிப்பு அரசிடம் இருக்கிறதா ? அது விரைவாக செய்து முடிக்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் ஏற்கனவே எடுத்துக் காட்டிய 15 கூட்டுறவு பால் வழங்கு நிலையங்களில், திண்டுக்கல் நகரத்திலேயும் ஒரு கூட்டுறவு பால் வழங்கு சங்கம் இருக்கிறது. அந்தத் திண்டுக்கல் கூட்டுறவு பால் வழங்கு சங்கத்தையும் உற்பத்தியாளர் சங்கமாக ஆக்கி மதுரை மாவட்ட ஒன்றியத்தோடு இணைக்கின்ற தீவிர முயற்சியில் அரசு ஈடுபட்டிருக்கிறது.

திரு. மு. அம்பிகாபதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கூட்டுறவு பால் வழங்கு சங்கங்களில் நீண்ட காலமாகத் தேர்தல் நடத்தப்படாமல் இருக்கிறதே, அதிலே இருக்கிற அதிகாரிகள் சர்வாதிகாரிகளாகச் செயல்படுகிறார்களே, மன்னார்குடியில் உள்ள பால் வழங்கு சங்கத் தொழிலாளர்கள் போராட்டம் நடத்துகிறார்களே, எனவே, தேர்தலை விரைவில் நடத்த அரசு துரித நடவடிக்கை எடுக்க முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : மாண்புமிகு பேரவை தலைவர் அவர்களே, இப்பொழுதுதான் கூட்டுறவுக்கு முழுமையான சட்டம் வந்திருக்கிறது. அதன் அடிப்படையில் விரைவில் தேர்தல் நடக்கும்.

திரு. ஜே. ஹேமச்சந்திரன்: தலைவர் அவர்களே, சில பால் விநியோகம் செய்யும் கூட்டுறவுச் சங்கங்கள் வழங்கும் பாலில் கலப்படம் காணப்படுவதாகவும், குறிப்பாக குமரி மாவட்ட பால் வழங்கும் ஒன்றியம் வழங்கிய பாலை ஹெல்த் டிபார்ட்மெண்ட் அத்தாரிட்டீஸ் பரிசோதனை செய்ததில் கலப்படம் இருப்பதாகக் கண்டுபிடித்து ஒன்றிய நிர்வாக இயக்குநர் உட்பட 18 பேரில் Chief Judicial Magistrate at Nagercoil நீதிமன்றத்தில் Prevention of Food Adulteration Act-ன்படி வழக்கு போடப்பட்டிருப்பது அமைச்சர் அவர்களுக்குத் தெரியுமா? இப்படிப் பால் வழங்கு சங்கங்கள் கலப்படம் செய்த பாலை விநியோகிக்காமல் இருக்க நடவடிக்கை எடுக்கப்படுமா? அப்படி வழங்குவோர் பேரில் நடவடிக்கை எடுக்கப்படுமா?

[1983 அக்டோபர் 26

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்ன தகவலை மையமாக எடுத்து, தொடர்ந்து அதிகாரிகளுடன் கலந்து, தீவிரமான முறையில் நடவடிக்கை எடுத்து சீரமைக்கப் படும்.

திரு. எல். இளையபெருமாள்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குறிப்பாக தென் ஆற்காடு மாவட்டத்தில் பால் சொசைட்டி வைத்திருப்பவர்களும், மற்ற மாவட்டங்களிலே சொசைட்டி வைத்திருப்பவர்களும் ஆதி திராவிடர்களைச் சேர்ப்பதில்லை. அவர்களாக, தனியாக சொசைட்டி வைக்க வேண்டுமானாலும் அனுமதி கொடுப்பதில்லையென்ற நிலைமையில் அந்தந்த ஜில்லாவில் இருப்பவர்கள் செய்கிறார்களே—இது சம்பந்தமாக, தென்னாற்காடு மாவட்ட மக்களிடமிருந்து அமைச்சர் அவர்களுக்கு ஏதாவது புகார் வந்திருக்கிறதா? ஒன்று, அவர்களைச் சேர்க்கட்டும்; இல்லையென்றால் அவர்கள் தனித்து இயங்க அனுமதி வழங்க வேண்டுமென்று அறிவுரையை டெபுட்டி ரிஜிஸ்ட்ரார் ஆப் கோவாப்பரேடிவ் சொசைட்டிஸ் (மில்க்) அவர்களுக்கு அளிக்க அரசு முன்வருமா என்று அறிய விரும்பு கிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதுபோன்ற கூட்டுறவு அமைப்புகளில் சில பிரச்னைகள் வருவது என்பது இயல்பு. அவற்றை அவ்வப் போது அரசாங்கத்தினுடைய பார்வைக்குக் கொண்டு வந்தால் நிச்சயமாக நடவடிக்கை எடுக்கப்படும். குறிப்பாக, தென் ஆற்காடு மாவட்டத்தில் பிரச்னை இருக்குமானால், அரசினுடைய கவனத்திற்குக் கொண்டு வருமாறு பணிவுடன் கேட்டுக் கொள் கிறேன்.

### ஈரோட்டில் துவக்கப்பட்டுள்ள மாட்டுத் தீவனத் தொழிற்சாலை

* வினா எண் 22—திரு. தி. கா. நல்லப்பன் : மாண்புமிகு பால்வளத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஈரோட்டில் ஆரம்பவிழா (திறப்பு) செய்த மாட்டுத் தீவனத் தொழிற்சாலை எப்போது வேலை துவக்கப்படும்?

(ஆ) காலதாமதத்திற்கு என்ன காரணம்?

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : (அ) ஈரோட்டில் உள்ள மாட்டுத் தீவனத் தொழிற்சாலையில் 1982 மார்ச்சு மாதம் முதல் தீவன உற்பத்தி துவங்கப்பட்டு விற்பனை செய்யப் பட்டு வருகிறது.

(ஆ) மின்வெட்டு, தளவாடங்கள் மற்றும் இயந்திரங்கள் கோளாறு, தண்ணீர் தேங்குவது, நிலத்திற்கு அடியில் நீர்க்கசிவு ஆகியவைகள் காரணமாக காலதாமதம் ஏற்பட்டது.



1983 அக்டோபர் 26]

திரு. தி. கா. நல்லப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தத் தொழிற்சாலை 1982 மார்ச்சிலே இருந்து இயங்கி வருவதாக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் குறிப் பிட்டார்கள். ஆனால், திறப்பு விழா நடைபெற்றதற்கும் இந்த 1982 மார்ச்சுக்கும் இடைவெளி அதிகமாக இருக்கிறது. அந்தக் காலதாமதத்திற்கு என்ன காரணம் என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்களா?

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் மூலக் கேள்விக்கு விடை அளிக்கின்ற நேரத்திலேயே தண்ணீர் தேங்குதல், நிலத்திற்கு அடியில் நீர்க் கசிவு, இயந்திரத்திலே சில பழுதுகள் இவைகளையெல்லாம் சீரமைக்க அந்த இடைவெளிக் காலம் தேவைப்பட்டது என்று சொன்னேன். அவை சீரமைக்கப்பட்டு, இன்றையதினம் உற்பத்தி துவங்கி செயல்பட்டு வருகிறது.

(முற்பகல் 9-10)

திரு. தி. கா. நல்லப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தத் தீவனத் தொழிற்சாலை எத்தனை கோடி ரூபாய் முதலீட்டில் ஆரம்பிக்கப்பட்டது? இப்போது எவ்வளவு டன் தீவனம் அந்தத் தொழிற்சாலையில் உற்பத்தி செய்யப் படுகிறது என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிவிப் பார்களா?

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தத் தொழிற்சாலையின் முதலீடு ரூபாய் 82 இலட்சம். இதனுடைய குறியீட்டு கொள் திறன் நாள் ஒன்றிற்கு 100 மெட்ரிக் டன் உற்பத்தி செய்ய வேண்டும் என்பதுதான் ஆனால், மின்வெட்டு காரணமாக தற்போது மாதம் ஒன்றிற்கு 250 டன் தீவனம் தான் உற்பத்தி செய்யப்பட்டு வருகிறது என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர் களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். மின்வெட்டு நீங்கிய வுடன் மறுபடி தீவனம் முழு அளவிற்கு ஆலையில் உற்பத்தி செய்ய இயலும்.

திரு. கு. ரமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தமாட்டுத் தீவனத் தொழிற்சாலை பெரியார் மாவட்டத்தில் உருவாக்கப்பட்டு இருந்தும், அதில் உற்பத்தியாகின்ற தீவனம் பக்கத்திலிருக்கிற கோவை மாவட்டம் போன்ற பகுதிகளுக்கு விநியோகம் செய்கின்ற அளவிற்கு போதுமானதாக இல்லை. கோவை மாவட்டத்தில் மாட்டுத் தீவனம் கிடைப்பதில்லை. கோவை மாவட்டத்திலும் மாட்டுத் தீவனம் நெருக்கடி ஆகவே கோவை மாவட்டத்திலும் ஒரு தீவனத் தொழிற்சாலையை அதிகரித்து இருப்பதால் அங்கே ஒரு தீவனத் தொழிற்சாலையை உடனடியாக ஆரம்பிக்க அரசு முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி;** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கோவை மாவட்டத்தில் மட்டுமல்ல, தமிழகத்தில் பல்வேறு பகுதிகளில் இப்போது பால் பண்ணைகள் உருவாகி வருவதாலும், பால் உற்பத்தியாளர் சங்கங்கள் அதிகரித்து வருவதாலும், பால் உற்பத்தி செய்வோர் முனைந்து செயல்படுகிற காரணமாகவும் இந்த நிலைமை இருக்கிறது. இந்த நிலைமைகளை கருத்தில் கொண்டு தொழிற்சாலைகள் எந்தெந்த இடங்களில் சாத்தியமோ அந்தந்த இடங்களில் உரிய நேரத்தில் ஆரம்பிக்கப்படும்.

**திரு. என். வரதராஜன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தொழிற்சாலைகள் அதனுடைய உற்பத்தித் திறனை அடைந்ததற்குப் பிறகுதான் திறப்பு விழாக்களை நடத்துவது சரியாக இருக்கும். ஆனால் பல்வேறு தொழிற்சாலைகளில் அதற்கு முன்னாலே திறப்பு விழாக்களை நடத்துவதும் பின்னாலே இயந்திரங்களை புகுத்துவதும போன்ற நிலை இருக்கிறது. சமீபத்தில்கூட மிக பிரமாதமாக விளம்பரப்படுத்தப்பட்ட கல்பாக்கம் அணு மின் நிலையத்தின் கதியும் அவ்வாறு இருக்கிறது. இவற்றைப் பற்றியெல்லாம் கவனித்து அவ்வாறு நிகழாமல் இருக்க அரசு ஏற்பாடு செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** கல்பாக்கத்திற்கும்' ஈரோட்டிற்கும் என்ன சம்பந்தம்? உட்காருங்கள்.

நடுநிலைப் பள்ளிகளில் தமிழைக் கற்பிக்கத் தமிழ்ப் புலவர்
பட்டம் பெற்றவர்களை நியமிக்கும் திட்டம்.

*வினா எண் 23—**திரு. என். கிட்டப்பா:** மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நடுநிலைப் பள்ளிகளிலும் தமிழைக் கற்பிக்கத் தமிழ்ப்புலவர் பட்டம் பெற்றவர்களை நியமிக்க வேண்டும் என்று அரசு ஆணை உள்ளதா?

(ஆ) ஆம் எனில், தமிழ்ப் புலவர்களை நியமிக்காத தனியார் பள்ளிகள் மீது என்ன நடவடிக்கை மேற்கொள்ளப் பட்டுள்ளது?

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்:** (அ) நடுநிலைப்பள்ளிகளுக்கான தமிழ் ஆசிரியர் பதவிகள் அரசு நிதிநிலை இடம் தரும் அளவுக்கு ஏற்படுத்தப்பட்டு வருகின்றன. 1981—82, 1982—83 ஆகிய இரண்டு ஆண்டுகளிலும் சேர்த்து ஏற்படுத்திய மொத்தம் 1,000 கூடுதல் தமிழாசிரியர் பதவிகளில் 500 பதவிகள் நடுநிலைப்பள்ளிகளுக்கு (தனியார் பள்ளிகள் உட்பட) ஒதுக்கப் பட்டன. மற்றபடி கேள்வியில் குறிப்பிட்டுள்ளது போன்ற அரசாணை இல்லை.

(ஆ) இக் கேள்விக்கு இடமில்லை.





**திரு. என். கிட்டப்பா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தமிழ் நாட்டிலே நீண்டகாலமாக தமிழ்ப் புலவர் பட்டம் பெற்வர்களுடைய பட்டியலை இங்கே எடுத்துச் சொன்னார்கள். அதிலே எத்தனை பேர்களுக்கு வேலை வாய்ப்பு கிடைத்திருக்கிறது என்று சொன்னார்கள். எத்தனை பேர்கள் படித்தும் வேலை கிடைக்காமல் இருக்கிறார்கள் என்பதையும், அதிலே பெண்கள் எத்தனை பேர்கள் என்பதையும், நீண்ட நாட்களாக வேலை வாய்ப்பின்றி தவித்துக் கொண்டிருக்கிற தாய்மார்களுக்கு முன் இடம் தந்து அதை பயன்படுத்தி அவர்களுக்கும் வேலை வாய்ப்பு அளிக்க அரசு முன் வருமா என்று கேட்க விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. வேலையற்றவர்கள் எத்தனை பேர்கள் என்ற விவரம் என்னிடத்தில் இல்லை. தனியாகக் கேள்வி கேட்க வேண்டும். மற்றபடி பயிற்சி பெற்ற ஆசிரியர்களுக்கு வேலை கிடைக்க வேண்டும் என்பதற்காக நாங்கள் பல முயற்சிகளை எடுத்துக் கொண்டு வருகிறோம். அந்த அடிப்படையிலே 1981-82, 1982—83 ஆண்டுகளில் இந்த அளவிற்கு பதவிகளை ஏற்படுத்தி இருக்கிறோம். எவ்வளவு ஏற்படுத்தினாலும் நிதியாதாரங்களைப் பொறுத்துதான் செய்ய வேண்டிய காரணத்தால் இதைவிட அதிகமாகச் செய்ய முடிவதில்லை.

**திரு. என். கிட்டப்பா:** தலைவரவர்களே, என்னுடைய கேள்வியினுடைய ஒரு முக்கியமான பகுதி, தாய்க்குலத்தைப் போற்றுகின்ற இந்த அரசு, பட்டம் பெற்ற தாய்மார்களுக்கு எத்தனை சதவிகித வேலைவாய்ப்பை அளிக்க இருக்கிறது என்பதாகும். அதனை அறிவிக்க இயலுமா?

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்:** மாண்புமிகு தலைவர் அவர்களே, பொதுவாகவே, தொடக்கப்பள்ளி, உயர் தொடக்கப் பள்ளி, நடுநிலைப்பள்ளி ஆகியவைகளிலே பெரும்பாலும் பெண்களுக்கு முதலிடம் தந்துதான் எடுத்து வருகிறார்கள். தனியாக அதற்கென்று ஒரு அரசாணை இல்லையென்றாலும்கூட, அதிக அளவிற்குப் பெண்கள்தான் பணிபுரிகிறார்கள்.

**திரு. பி. எம். தங்கவேல்ராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, இம்மாதிரி நடுநிலைப்பள்ளிகளில் பட்டதாரி ஆசிரியர்களைத் தலைமையாசிரியர்களாக நியமிக்கும் உத்தேசம் உண்டா? இதற்குமுன் அப்படி ஏதாவது நடுநிலைப் பள்ளிகளில் நியமிக்கப்பட்டிருக்கிறார்களா?

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** மாண்புமிகு தலைவர் அவர்களே, 1980—81 ஆம் ஆண்டு வரையில் 177 நடுநிலைப் பள்ளிகளில் தமிழாசிரியர்கள் பி.எட். தரத் தலைமையாசிரியர்களாகப் பணிபுரிந்து வருகிறார்கள்.

திரு. இரெ. இராசமாணிக்கம்: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, நடுநிலைப்பள்ளிகளில் 500 தமிழ்ப் புலவர்கள் தமிழாசிரியர்களாக நியமிக்கப்பட்டிருப்பதாக அமைச்சரவர்கள் தெரிவிக்கிறார்கள். அதில் ஆண்கள் எவ்வளவு பேர், பெண்கள் எவ்வளவு பேர்? தமிழ்நாட்டில் இதுவரையில் பட்டம் பெற்று வேலையில்லாமல் இருப்பவர்களின் எண்ணிக்கை என்ன?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: தலைவர் அவர்களே, அந்த விவரம் இல்லையென்று முதலிலேயே சொல்லிவிட்டேன். ஆனால் பதவிகளை நாம் உருவாக்குகிறோமே தவிர ஆண்கள் பதவி, பெண்கள் பதவி என்று உருவாக்குவதில்லை. எடுக்கிற பொழுது ஒவ்வொரு மாவட்டத்திலேயும் வேட்பாளர்களைப் பொறுத்துத் தேர்ந்தெடுக்கிறார்கள். எனக்குக் கிடைத்த விவரங்களை வைத்துச் சொல்ல வேண்டுமென்றால் பெரும்பாலும் பெண்கள் இதிலே தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறார்கள்.

திரு. எல். இளையபெருமாள்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய அரசாங்கத்திற்கு, தமிழ்ப் புலவர்களுக்கு உதவி செய்வது என்பது மட்டுமல்ல. குறிப்பாக வேலையற்றிருக்கின்ற பெண்களுக்கு உதவி செய்ய வேண்டுமென்ற எண்ணமும் இருக்கிறது. காட்டுமன்னார்குடி தாலூக்காவில் காட்டுமன்னார்குடியில் உள்ள ஒரு நடுநிலைப்பள்ளிக்குத் தமிழ்ப்புலவர் தேவைப்படுகிறது என்று கடந்த ஐந்து வருடங்களாக நிலைமையிருந்து, டெப்டி இன்ஸ்பெக்டர் ஆஃப் ஸ்கூல்ஸ் அவ்வாறு கொடுக்க வேண்டுமென்று சிபார்சும் செய்திருக்கிறார்கள். அரசிடம் கேட்டு அனுப்பி இன்னும் அந்தப் போஸ்டைப் கொடுக்காததால் பிள்ளைகள் கஷ்டப்படுகிறார்கள். உத்தியோகம் கொடுப்பதற்குத் தயார் என்று பள்ளி நிர்வாகியும் சொல்கிறார். அதிக பிள்ளைகள் இருக்கிறார்கள், தமிழ்ப் புலவரைப் போட வேண்டுமென்று கல்வித்துறை அதிகாரிகளும்சிபார்சு செய்திருக்கிறார்கள். தமிழகத்திலுள்ள பல நடுநிலைப்பள்ளிகளுக்கு—தனியார் பள்ளிகளுக்குக் கேட்டும் கொடுக்காமல் இருக்கும் நிலையில்—அமைச்சரவர்களுக்கும் அந்த ரிப்போர்ட்டை நான் அனுப்பியிருக்கிறேன். எனவே, வருங்காலத்திலாவது, சிபார்சு செய்யப்பட்டிருந்து, தனியார் பள்ளிகளில் வேலை கொடுக்க முன் வந்திருந்தால், வேலையற்றிருக்கும் புலவர்கள் இருக்கும்பொழுது அவர்களது வேலைக்கு உத்தரவாதம் கொடுக்கும் வகையில் அவர்களுக்கு வேலைவாய்ப்பை உண்டாக்குவதுபற்றி அரசு கவனிக்குமா?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: மாண்புமிகு தலைவரவர்களே, இதுபோன்ற பள்ளிகள் ஒன்றல்ல, பல இருக்கக்கூடும். ஏனென்றால் நாங்களே நிதியாதாரத்தைப் பொறுத்து 500 பதவிகளைத் தருகிறோம் என்று சொல்லும்பொழுது, நிறையப் பள்ளிகள் இருக்கின்றன என்ற கருத்தின் அடிப்படையில்தான் சொல்கிறோம். பதவிகளை உருவாக்கித் தரும்பொழுது, குறிப்பிட்ட இதுபோன்ற பள்ளிகளின் விவரங்கள் என்னுடைய கவனத்திற்கு வரும்பொழுது அதிகாரிகள் அந்தக் குறைபாட்டைப் போக்குவார்கள்.



## 1-4-1970-க்குப் பின் நியமிக்கப்பட்டு தேர்வாணைக் குழுவால் தேர்ந்தெடுக்கப்பட்ட அனைத்து பட்டதாரி ஆசிரியர்களையும் வரன்முறைப்படுத்தும் திட்டம்.

*வினா எண் 24—திரு. மு. அம்பாத்துரை: மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா—

1-4-1970-க்குப் பின் நியமிக்கப்பட்டு தேர்வாணைக் குழுவால் தேர்ந்தெடுக்கப்பட்ட (Half-a-million) மேலும் 10 (ஏ) (1) ஆகிய அனைத்து பட்டதாரி ஆசிரியர்களையும் வரன்முறைப் படுத்தும் திட்டம் அரசிடம் உள்ளதா?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: ஆம். 1-4-1970க்குப் பின் ஐந்து இலட்சம் பேருக்கு வேலைவாய்ப்புத் திட்டத்திற்கு உட்பட எல்லா முறைகளிலும் தற்காலிகமாக நியமிக்கப்பட்டு 31-3-1977 தேதியில் ஓராண்டு பணியாற்றியவர்களுக்கு சிறப்புத் தேர்வு ஒன்று பொதுப்பணித் தேர்வாணைக் குழுவால் 1980-ல் நடத்தப்பட்டது. தேர்வு பெற்றவர்கள் பட்டியல் தேர்வாணைக் குழுவிடமிருந்து பள்ளிக்கல்வி இயக்குநரால் பெறப்பட்டுள்ளது. ஆனால், இத்தேர்வுக்கு அனுமதிக்கப்பட்டது குறித்து உயர் நீதிமன்றத்தில் இரு ஆசிரியர்கள் வழக்கு தொடுத்துள்ளதால் அதில் தீர்ப்பாகும் வரை தேர்ந்தெடுக்கப்பட்டவர்களின் பணிவரன்முறை செய்யப்படக்கூடாது என தேர்வாணைக்குழு தெரிவித்திருந்தது. எனவே, அவர்களது பணியினை வரன்முறை செய்ய இயலாதிருந்தது. தற்போது வழக்கு தொடுத்துள்ள இருவருக்கு இரு பணியிடங்களை காலியாக வைத்து விட்டு மற்ற பதவிகளில் தேர்ந்தெடுக்கப்பட்டவர்களை வரன்முறை செய்யலாமென்று, தேர்வாணைக் குழுவின் இசைவுடன் பள்ளிக்கல்வி இயக்குநருக்கு அறிவுரை வழங்கப்பட்டுள்ளது.

(முற்பகல் 9-20)

திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொர்ணம்: பேரவைத் தலைவர் அவர்களே, இந்த குறிப்பிட்ட ஆசிரியர் பிரச்சினை சம்பந்தமாக ஹைகோர்ட் வரை சென்றிருப்பதன் காரணத்தால் காலதாமதம் ஏற்பட்டது என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். ஹைகோர்ட்டிலே அரசு தரப்பிலே அஃபிடவிட் ஏதாவது போட்டு காலாகாலத்திலே அந்த வழக்கினை ஒரு முடிவிற்குக் கொண்டு வந்து ஆசிரியர்களுக்கு நன்மையினை ஏற்படுத்துகின்ற இதனை விரைவாகக் கொண்டு வருவதற்கு அரசு முன்வருமா? அதற்காக ஏதேனும் ஏற்பாடுகள் செய்யப்பட்டிருக்கின்றதா?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: தலைவர் அவர்களே, இப்போது இரண்டு ஆசிரியர்களுக்கான இரண்டு இடங்களை ஒதுக்கி வைத்துவிட்டு மீதி ஆசிரியர்களின் பணியினை வரன்முறைப்படுத்த பள்ளிக் கல்வி இயக்குநருக்குச் சொல்லி இருக்கிறோம்.

[1983 அக்டோபர் 26

**சிறந்த தமிழ் நூல்களுக்குப் பரிசளிக்கும் திட்டம்.**

*வினா எண் 25—திரு. து. புருஷோத்தமன்: மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சிறந்த தமிழ் நூல்களுக்குப் பரிசு அளிக்கும் திட்டம் எத்தனை ஆண்டுகளாக மேற்கொள்ளப்பட்டு வருகிறது?

(ஆ) எந்த ஆண்டுவரை பரிசுகள் அளிக்கப்பட்டுள்ளன?

(இ) பரிசுக்குரிய நூல்களைத் தேர்வு செய்வதற்கான குழுவில் யார், யார் உள்ளனர்?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: (அ) இத்திட்டம் 1947-ல் தொடங்கப் பெற்று செயல்பட்டு வருகிறது.

(ஆ) 1980 ஆம் ஆண்டு வரை வெளியான நூல்களுக்குப் பரிசுகள் வழங்கப்பட்டுள்ளன.

(இ) ஒவ்வொரு முறையும் நூலினை தேர்ந்தெடுக்க தனித்தனியே நிலைக் குழு அமைக்கப்படுகிறது. இதன்படி கடந்த 1975 முதல் 1980 வரை வெளியான நூல்களைத் தேர்ந்தெடுக்க நியமிக்கப்பட்ட நிலைக்குழு உறுப்பினர்களின் பெயர்களாவன:—

| | | | |
|---|---|---|---|
| 1. | டாக்டர் கா. மீனாட்சிசுந்தரம் | .. | உறுப்பினர் |
| 2. | செல்வி என். பாகீரதி | .. | உறுப்பினர் |
| 3. | தமிழ் வளர்ச்சி இயக்குநர் | .. | உறுப்பினர்/ செயலாளர் |

திரு. து. புருஷோத்தமன்: பேரவைத் தலைவர் அவர்களே, இந்தத் தமிழ் நூல்களுக்குப் பரிசளிக்கும் திட்டம் 1976 ஆம் ஆண்டு முதல் 1980 ஆம் ஆண்டு வரை நிறுத்தி வைக்கப்பட்டிருந்ததாகக் கேள்விப்படுகிறோம். அது உண்மையா? பரிசுகள் வழங்கப்படுவது எவ்வாறு வழங்கப்படுகின்றது? பணமாகக் கொடுக்கப்படுகின்றதா? அல்லது பதக்கங்கள் என்ற அளவில் கொடுக்கப்படுகின்றதா? விவரங்களை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: தலைவர் அவர்களே, 1975 முதல் 1980 ஆம் ஆண்டு வரை உள்ள 6 ஆண்டுகளில் வெளி வந்த நூல்களுக்கு சென்னை வள்ளுவர் கோட்டத்தில் பரிசுகள் வழங்கப்பட்டன. அதிலே முதல் பரிசு ரூபாய் 2,000 ஆகவும், இரண்டாம் பரிசு ரூபாய் 1,000 ஆகவும் உயர்த்தப்பட்டிருக்கின்றது.

திரு. து. புருஷோத்தமன்: தலைவர் அவர்களே, பரிசு பெற்ற நூல்களை நூல் நிலையங்களில் எல்லாம் வைக்கின்ற வகையில் பெருமளவில் அவை விநியோகிக்கப்பட்டால் நூல் ஆசிரியர்கள் வெகு அளவில் பலன் அடைவார்கள் அல்லவா?





அப்படிப்பட்ட திட்டம் அரசுக்கு உள்ளதா? தற்போது நடிகர்கள் மற்றும் கலைஞர்களுக்கெல்லாம் அதிகமான அளவில் பரிசுகள் வழங்கப்பட்டு வருகின்றன. அதுபோல் நூல் ஆசிரியர்களுக்கும் அதிகமான அளவில் சலுகைகளை அளித்து அதிகமான நூல்களைத் தேர்ந்தெடுக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: தலைவர் அவர்களே, நூலகங்கள் அவற்றின் நிதிவசதிக்கேற்ப புத்தகங்களை வாங்கும் நிலைமையில் இருக்கின்றன. அந்த நூலகங்கள், குறிப்பிட்ட பரிசு பெற்ற புத்தகங்களின் காப்பிகளை நிறைய வாங்கவேண்டும் என்றுதான் அரசு கருதுகின்றது.

திரு. ரா. கிருஷ்ணன்: தலைவர் அவர்களே, சிறந்த தமிழ் நூல்கள் என்று முடிவு செய்வதற்கான அடிப்படைத் தகுதிகள் யாவை?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: தலைவர் அவர்களே, ஒவ்வொரு ஆண்டும் பல்வேறு துறைகளில் எழுதப்பட்டிருக்கின்ற நூல்களை அவர்கள் அந்தப் பரிசுப் போட்டிக்கு அனுப்புவார்களேயானால் அவற்றை ஆய்ந்து இந்தக் குழு தேர்ந்தெடுத்து ஒவ்வொரு துறைக்கும் ஒரு பரிசு அல்லது இரண்டு பரிசுகளைத் தருகிறார்கள். அந்த அடிப்படையிலே கவிதை, நாவல், மொழி இலக்கியம் பற்றிய ஆராய்ச்சி, தமிழ் பண்பாடு, மானிடயியல், சமூகயியல், பூகோளம், பொருளாதாரம், கணிதம், பொறியியல் என்று இப்படிப் பல்வேறு துறைகளில் அவர்கள் தேர்ந்தெடுத்து பரிசுகளைத் தருகிறார்கள்.

திரு. உ. சுப்பிரமணியன்: தலைவர் அவர்களே, தற்காலத்திலே மிக அவசியமான விஞ்ஞான நூல்களைக் குறிப்பாக கம்ப்யூட்டர் சையன்ஸ் போன்ற நூல்களை எழுதுகின்ற ஆசிரியர்கள் இருக்கிறார்கள். அவர்கள் எழுதிய புத்தகங்களுக்கும் பரிசுகளை வழங்கி அவர்களுக்கு ஊக்கம் அளிக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: தலைவர் அவர்களே, குறிப்பாக அறிவியல் நூல்கள் நிறைய வரவேண்டும் என்றுதான் இந்த அரசு விரும்புகிறது. விஞ்ஞானயியல் சம்பந்தப்பட்ட துறைகளிலே அந்த நூல்கள் அனுப்பப்படுமேயானால் அந்தக் குழு ஆராய்ந்து பரிசுக்குரியதாக இருந்தால் பரிசுகளைத் தர ஏற்பாடு செய்யும்.

திரு. ப. வெங்கடசுப்பிரமணியம்: தலைவர் அவர்களே, அரசு தொடர்புடைய கிளை நூலகங்களில் கூடுதலாக நிதி ஒதுக்கீடு செய்து இப்படிப்பட்ட நல்ல புத்தகங்களை வாங்க அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: தலைவர் அவர்களே, அது தனியாக ஆராயப்பட்டு வருகிறது.

விருத்தாசலம் நகராட்சிப் பகுதியில் செயல்பட்டுவரும்
கல்வி நிறுவனங்கள்.

*வினா எண் 26—திரு. ஆர். தியாகராசன் : மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) விருத்தாசலம் நகராட்சியிலுள்ள கலைக்கல்லூரி, உயர்நிலைப்பள்ளி, பெண்கள் உயர்நிலைப்பள்ளி, தங்கும் விடுதி, ஆகியவை சத்திரங்களிலும் வாடகைக் கட்டிடங்களிலும் செயல்பட்டு வருவது உண்மையா ?

(ஆ) ஆம் எனில் இவைகளுக்குச் சொந்தக் கட்டிடம் கட்டும் திட்டம் அரசிடம் உள்ளதா ?

(இ) ஆம் எனில் எப்போது கட்டப்படும் ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : (அ) விருத்தாசலத்தி லுள்ள கொளஞ்சியப்பர் அரசு கலைக் கல்லூரியும், அரசு மகளிர் மேல்நிலைப் பள்ளியும், சத்திரங்களிலோ, வாடகைக் கட்டிடங் களிலோ செயல்படவில்லை. கல்லூரி மாணவர்களுக்கு மட்டும் தங்கும் விடுதி ஒன்று ரூ. 163 மாத வாடகையாக, தனியார் கட்டிடத்திலும், உயர்நிலைப்பள்ளிப் பெண்கள் தங்கும் விடுதி ஒன்று ரூ. 265 மாத வாடகையாக தனியார் கட்டிடத்திலும், ஆக இரண்டு விடுதிகள் மட்டும் வாடகைக் கட்டிடங்களில் நடைபெற்று வருகின்றன.

(ஆ) மற்றும் (இ) பெண்களுக்கான தங்கும் விடுதி கட்டப் பட்டு வருகின்றது. ஆண்கள் விடுதி கட்டுவது பற்றி பரிசிலனையில் உள்ளது.

தமிழ்நாட்டில் 1982–83-ல் ஆரம்பிக்கப்பட்ட பாலிடெக்னிக்குகள்.

*வினா எண் 27—திரு. பெ. சு. திருவேங்கடம் : மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப் பாரா—

(அ) தமிழ்நாட்டில் 1982–83-ல் ஆரம்பிக்கப்பட்ட பாலிடெக்னிக்குகள் எத்தனை ?

(ஆ) அதனால் பயன்பெற்ற மாணவர்கள் எத்தனை பேர் ?

(இ) தனியார் பாலிடெக்னிக்குகள் எத்தனை ? அரசு நடத்தும் பாலிடெக்னிக்குகள் எத்தனை ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : 1982–83ல் இம் மாநிலத்தில் மொத்தம் 9 பாலிடெக்னிக்குகள் துவக்கப் பட்டுள்ளன.

(ஆ) மேற்கண்ட புதிதாகத் துவக்கப்பட்டுள்ள, பாலி டெக்னிக்குகளில் மொத்தம் 1,170 மாணவர்கள் தொழில் நுட்பக் கல்வி கற்றிட வசதி செய்யப்பட்டுள்ளன.



(இ) இவற்றில் அரசு சார்பில் 2 பாலிடெக்னிக்குகளும் தனியார் சார்பில் 7 பாலிடெக்னிக்குகளும் ஏற்படுத்தப் பட்டுள்ளன. (இதில் அரசு சார்பான பெண்கள் பாலிடெக்னிக் ஒன்றும், தனியார் துறைப் பெண்கள் பாலிடெக்னிக் ஒன்றும் அடங்கும்).

திரு. பெ. சு திருவேங்கடம் : தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொல்லியதிலிருந்து ஒன்பது பாலிடெக் னிக்குகள் (7+2) ஆரம்பிக்கப்பட்டுள்ளன என்று சொன்னார்கள். அவை எந்தெந்த மாவட்டங்களில் ஆரம்பிக்கப்பட்டுள்ளன ? அவற்றை தனியார்கள் ஆரம்பிப்பதாக இருந்தால் அவர்கள் எவ்வளவு ரூபாய் முதலீடு செய்யவேண்டியுள்ளது என்பதை அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்களா ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : தலைவர் அவர்களே, அரசினர் பாலிடெக்னிக் ஒன்று உதகமண்டலத்தில், ஒன்று எட்டயபுரத்தில் ஆரம்பிக்கப்பட்டது. தனியார் பாலி டெக்னிக்குகள் திருவொற்றியூரிலும், கன்னியாகுமரி மாவட்டத்தில் ஒன்றும், சிவகாசியில் ஒன்றும், பழனியில் ஒன்றும் ஆரம்பிக்கப் பட்டிருக்கின்றன. மாநில அரசினுடைய நிதி உதவி இல்லாமல் பெரியார் மாவட்டத்தில் ஒன்று முரட்டுப்பாளயத்திலும் மதுரை கொடைக்கானலில் ஒன்றும் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. இப்போது அரசாங்கத்தைப் பொறுத்தவரையில் நமக்கு நிதி ஆதாரங்கள் இல்லாத காரணத்தால் நாம் எந்தப் பாலி டெக்னிக்கையும் இப்போது ஆரம்பிப்பதற்கில்லை. ஆகவே தனியார்கள் பாலிடெக்னிக்குகள் ஆரம்பிக்க முன்வருவார் களேயானால், மாநில அரசு உதவி இல்லாமல் ஆரம்பிக்க முன்வருவார்களேயானால் அவர்கள் இப்போது நாம் புதிதாகப் போட்டிருக்கிற நிபந்தனையின்படி 25 ஏக்கர் நிலம் தேவைப் படுகிறது. பத்து இலட்சம் ரூபாய் என்டோமென்டாகக் கட்டவேண்டும். அதில் முதல் ஆண்டு ரூபாய் நான்கு இலட்சமும் இரண்டாவது ஆண்டு இரண்டு இலட்சமும், மூன்றாம் ஆண்டு இரண்டு இலட்சமும், நான்காவது ஆண்டு இரண்டு இலட்சமும் கட்டவேண்டும். அதுவரை தற்காலிகமாக இட வசதி தேவைப் படுகிறது. பின்னர் அந்த இடத்தில் கட்டடம் கட்ட ஒரு கோடி ரூபாய் பக்கம் செலவாகும். அதை அவர்கள் ஐந்தாண்டுக் காலத்தில் செலவு செய்யவேண்டியிருக்கும்.

திரு. பெ. சு. திருவேங்கடம் : தலைவர் அவர்களே, தனியார் துறையில் பாலிடெக்னிக் ஆரமபிப்பதற்கு பத்து இலட்சம் ரூபாய் வரை கட்டவேண்டும் என்றும்—ஆண்டு ஒன்றுக்கு இவ்வளவு இலட்சம் கட்டவேண்டும் என்றும் அப்படி கட்டி ஆரம்பிப்பதானால் அனுமதி அளிப்பதாக அமைச்சர் அவர்கள் அறிவித்தார்கள். அப்படியே ஆரம்பித்தும் இருக்கிறார்கள். தனியார்கள் பெரும்பாலும் இதை வியாபார ரீதியில் ஆரம்பித்து ஏராளமாக பணம் சம்பாதிப்பதற்கு ஒரு வழியாக இதை வைத்து— இன்றையதினம் மாணவர்கள் மத்தியில் ரூ. 10,000, ரூ. 11,000

பாலிடெக்னிக்கில் சேருவதற்கு பணம் செலவழிக்கிறார்கள். நமது முதல் அமைச்சர் அவர்கள் கூட அரசாங்கக் கலைக் கல்லூரிகளை விட தொழில் கல்லூரிகள் ஆரம்பிக்கப்படும் என்று சொல்லியிருக்கும் இந்தக் காலகட்டத்தில் அரசாங்கமே ஏன் இந்த பாலிடெக்னிக்குகளை ஆரம்பிக்க முன்வரக்கூடாது என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** தலைவர் அவர்களே, இப்படி ஒரு கருத்தைச் சொல் நாம் தனியார் துறையில் ஆரம்பிக்கிற பாலிடெக்னிக்குகளுக்கு அனுமதி தராமலிருப்பது என்பது ஒரு பெரிய காரியமல்ல. ஆனால் அதன் மூலம் மாணவர்களுக்கு கிடைக்கிற ஒரு நன்மையை நாம் தடுப்பதாகத் தான் இருக்கமுடியுமே தவிர ஒரு குறைப்பாட்டைச் சொல்லி கிடைக்கிற நன்மையை நாம் தடுப்பது என்பது புத்திசாலித்தனமாகாது. இப்போது அவர்கள் நாம் சொல்கிற நிபந்தனைகளின் அடிப்படையில் அதன் நிர்வாகத்தில் கூட நம்முடைய தொழில் கல்வித் துறை இயக்குநர் அவர்களும் இருப்பார்கள். அவர்கள் 100 இடங்கள் தந்தால் ஐம்பது இடங்கள் பொறுத்து நம்முடைய வழிமுறைகளை அவர்கள் பின்பற்ற வேண்டும். ரிசர்வேஷனை பின்பற்றவேண்டும். மீதி ஐம்பது இடங்களை அவர்கள் இஷ்டப்படி யாருக்கு வேண்டுமானாலும் தரலாம். அதை அவர்கள் விற்கிறார்கள் என்று சொல்வது என்பது சாதாரணமாக பலயிடங்களில் சொல்கிறார்கள். ஆனால் நாம் அப்படி அதிகமான அளவிற்கு வியாபார ரீதியில் நடத்துபவர்களைக் கட்டுப்படுத்த அல்லது எப்போது வேண்டுமானாலும் அனுமதியை பின்வாங்கிக் கொள்ள நமக்கு அதிகாரம் இருக்கிறது. ஆனால் அதேநேரத்தில் இவற்றையெல்லாம், புதிதாக வருகிற தனியார் பாலிடெக்னிக்குகளைத் தடுப்பது என்பது அறிவுடைமையாகாது.

(முற்பகல் 9-30)

**திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கூறிய பதிலில் தனியார்கள் 7 பாலிடெக்னிக்குகள் ஆரம்பிப்பதற்கு அனுமதி கொடுக்கப்பட்டிருக்கின்றது என்று தெரிவித்தார்கள். ஆனால் அரசு பாலிடெக்னிக்குகள் ஆரம்பிக்க வேண்டுமென்றால் அதற்கு 1 கோடி மூலதனம் வேண்டுமென்றும், அதற்குப் பணமில்லை என்றும் சொன்னார்கள். தயவுசெய்து, இதை மீண்டும் மறு பரிசீலனை செய்யவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். தனியார் பாலிடெக்னிக்குகளில் யாரையும் பணமில்லாமல் சேர்ப்பதில்லை. இந்த வாரம் 5,000, அடுத்த வாரம் 15,000, அதற்கு அடுத்த வாரம் 20,000 என்று இப்படி ஏறிவிடுகின்ற காரணத்தினால், பின்தங்கிய பகுதிகளிலே இருக்கின்ற மாணவர்கள் பயன்பெற முடியாமல் போகின்றது. எனவே, பின்தங்கிய பகுதிகளில் பாலிடெக்னிக்குகள் ஆரம்பிப்பதற்கு அமைச்சர் அவர்கள் வழிவகை செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.



**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** மாண்புமிகு தலைவர் அவர்களே, அதற்கு நாம் வேண்டுமானால் அவர்களுக்கு அனுமதி தராமல் இருப்பதுபற்றி சிந்தித்துப் பார்க்கலாம்.

**திரு. கோவைத்தம்பி :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சமீபத்தில் மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள் கோவையில் பேசும்போது, அடிப்படைக் கல்வி தொழிற் கல்வியாக மாறவேண்டும் என்ற கருத்தைத் தெரிவித்தார்கள். அப்படி அடிப்படைக் கல்வி தொழிற்கல்வியாக மாறவேண்டு மென்று கருதும்போது, இந்த பாலிடெக்னிக்குகள் ஆரம்பிப் பதற்கு இருக்கின்ற நிபந்தனைகளைக் கொஞ்சம் தளர்த்தினால், வேகமாக பள்ளிகள் போல் ஆங்காங்கே எல்லா மாவட்டங்களிலும் பாலிடெக்னிக்குகள் ஆரம்பிப்பதற்கும், அதேபோல் அடிப்படைத் தொழிற் கல்வி பெறுவதற்கும் அரசினிடம் ஏதேனும் திட்டம் இருக்கின்றதா என்பதையும் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** மாண்புமிகு தலைவர் அவர்களே, நிறைய பேர்கள் இதைத் துவங்க முன்வருகின்ற காரணத்தினால், மாண்புமிகு உறுப்பினர் திருவேங்கடம் அவர்கள் ஏற்கனவே தெரிவித்ததுபோல், தவறான அடிப்படையில் அதிலும் வியாபார ரீதியாக செயல்பட அவர்கள் நினைப்பார்களானால், அப்படிப்பட்டவர்களைத் தடுக்கின்ற வகையிலேதான் இந்த ஆண்டு இந்த நிபந்தனைகளைப் போட்டிருக்கிறோம். சென்ற ஆண்டு பெரிய நிபந்தனைகளைப் போடவில்லை. நல்லவர்களை அல்லது வசதி உள்ளவர்களை, பணத்தை எதிர்பாராமல் சமூக சேவை செய்யவேண்டுமென்ற அடிப்படையிலே இதைச் செய்கின்றவர்களை ஊக்குவிக்கின்ற வகையில் இந்த நிபந்தனைகளைப் போட்டிருக்கிறோம். இதற்கு மேலும் இந்த நிபந்தனைகளைத் தளர்த்தினால், மோசமான நபர்கள் உள்ளே நுழைய இடம் ஏற்படும்.

**திரு. உ. சுப்பிரமணியன் :** பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டில் கலைக் கல்லூரிகள் அதிகமாக இருக்கின்ற காரணத்தினால், அங்கே படித்து வெளிவருகின்ற மாணவர்களுக்கு வேலைவாய்ப்பு சரியாக கிடைக்காத காரணத்தினால், வேலையில்லாத் திண்டாட்டம் மிகுந்திருக்கிறது. இந்த நிலையில் தொழிற் கல்வியை அதிகப்படுத்துவதற்கு, வருங்காலத்திலாவது சில குறிப்பிட்ட இடங்களில் புதியதாக கலைக் கல்லூரியை துவக்குவதற்குப் பதிலாக பாலிடெக்னிக்குகளை அதிகமாக ஆரம்பிப்பதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** மாண்புமிகு தலைவர் அவர்களே, அந்த அடிப்படையிலேதான் எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் இப்போது இந்த அளவில் இருக்கின்றன. இது நிறைய பேர்களை ஊக்குவித்து, நிறைய பாலிடெக்னிக்குகள் ஆரம்பிக்க முன்வந்திருக்கிறார்கள். இந்த அடிப்படையிலே என்ஜினியரிங் கல்லூரிகள் ஆரம்பிக்க சில்பேர்கள் முன் வருகிறார்கள். அவர்களுக்கு இருக்கின்ற வசதிகளைப் பார்த்து,

அவர்கள் நடத்துவார்களா என்பதையெல்லாம் நாம் பார்க்க வேண்டும். நடந்த இயலாதவர்கள் இதை ஆரம்பித்து, நடுவில் விட்டுச் செல்வது அல்லது தவறாக இந்த உரிமைகளைப் பயன்படுத்துவது ஆகிய நிலைமைகளைத் தவிர்ப்பதற்கு நாம் சில நிபந்தனைகளைப் போட்டிருக்கிறோம். வசதியுள்ளவர் களுக்கு அனுமதி தருவதற்கு நமக்குச் சங்கடம் இல்லை. நிறைய பாலிடெக்னிக்குகள் தேவைப்படுகிறது. பாலிடெக்னிக்கு களுக்கு ஆசிரியர்கள் தேவைப்படுகின்றது. பாலிடெக்னிக்கு ஆரம்பிப்பதற்கு ஆசிரியர்கள் தேவைப்படுகிறது. தொழிற்கல்வி முதல்வர் அவர்கள் புதியதாக வெளியிட்ட மாண்புமிகு அடிப்படையில் பிரம்மாண்டமான அளவில் ஒரு கருத்தின் திட்டத்தை உருவாக்கினால், நிறைய தொழிற் கல்வி ஆசிரியர்கள் தேவைப்படுகிறார்கள். இதையெல்லாம் பார்க்கும்போது, நிறைய பாலிடெக்னிக்குகள் ஆரம்பிக்கின்ற சூழ்நிலை இருக்கின்றது. நிறைய பாலிடெக்னிக்குகள் வருகின்றபோது, அதற்கேற்ப கல்லூரிகள் தேவைப்படுகின்றது.

திரு. பாபு ஜனார்த்தனன் : பேரவைத் தலைவர் அவர்களே, வசதி படைத்தவர்கள் பல இடங்களில் பணத்தை முதலீடு போட்டு, இந்த பாலிடெக்னிக்குகளில் நன்கொடை பெறுகின்ற அளவில் நடக்கின்றது. இந்த அளவில்தான் நன்கொடை பெறவேண்டும் என்ற ஒரு அறிவிப்பை அறிவித்து, இதற்கு ரசீது கொடுக்கின்ற ஒரு நிலை இருக்கவேண்டும். ஆனால், அதே நேரத்தில் வட ஆற்காடு மாவட்டம், ஏழைகள் வசிக்கின்ற பகுதியாக இருக்கின்ற காரணத்தினால், பாலிடெக்னிக்குகள் ஆரம்பிப்பதற்கு குறைந்த அளவிலே நிபந்தனைகளை போட்டால் அதனால் ஏழை மாணவர்கள் பலனடைவார்கள். இதை அரசு பரிசீலிக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : மாண்புமிகு தலைவர் அவர்களே, நாம் முதலில் போட்டுள்ள நிபந்தனைப்படி, 10 இலட்சம் கட்டவேண்டும். இப்போது பலர் கேட்டுக் கொண்டதற்கிணங்க, முதலில் 4 இலட்சம், இரண்டாவது ஆண்டு 2 இலட்சம், மூன்றாவது ஆண்டு 2 இலட்சம், நான்காம் ஆண்டு 2 இலட்சம் கட்ட வேண்டுமென்ற அடிப்படையில் சொல்லியிருக்கிறோம். ஆனால் செலவைக் குறைக்க முடியாது. அந்த கோர்சுக்குத் தகுந்தபடி கட்டிடங்கள் இருக்கவேண்டும். சாமான்கள், எந்திரங்கள் இருக்க வேண்டும். குறைக்க முடியாது. அதைக் குறைத்தால், அதிலே ஒன்றும் குறைந்துவிடும். இந்த நிலைமைகளுக்கு ஏற்ப படிப்பின் தரம் நிபந்தனைகளை ஏற்றுக்கொண்டு, யார் பாலிடெக்னிக்குகள் ஆரம்பிக்க முன் வந்தாலும், நாம் அதைப்பற்றிப் பரிசீலிக்கலாம். இந்த நிபந்தனைகளை மேலும் தளர்த்துவதற்கு இல்லை. அந்த அளவிற்கு தனிப்பட்ட நிலையில் வந்து இந்தப் பெரிய காரியத்தை யாரும் நடத்த முடியாது. அவர்கள் இடையில், நிறுத்தி விடுவார்களானால், நாம் எடுத்துக்கொண்டு சங்கடப்பட வேண்டியிருக்கும். ஆகவே, பணம் இருக்குமானால் நாம் ஓரளவிற்கு சமாளிக்க முடியும். மேலும் அந்த நிபந்தனைகளைத் தளர்த்துவது என்பது சரியாக இருக்காது.



திரு. கு. ரமணி ; தலைவர் அவர்களே, கோவை மாநகரத்தை சுற்றியிருக்கும் பகுதியில் பல்லாயிரக்கணக்கான மாணவர்கள் தொழிற்கல்வி பெறமுடியாத சூழ்நிலையில் இருக்கிறார்கள். அரசுத் துறையில் பாலிடெக்னிக் ஒன்று அங்கே ஆரம்பிக்க வேண்டும் என்று நான் கேட்டுக்கொண்ட நேரத்தில், பணம் இல்லை என்று காரணம் சொல்லப்பட்டது. ஆனால் கோவை மாவட்டத்தில், நகரத்திலிருந்து ஒரு 10 மைல் தொலைவில் தனியார் துறையில் ஒரு பாலிடெக்னிக் ஆரம்பிக்கப்பட்டு இருக்கிறது. தற்போது புதிதாக ஆரம்பிக்கப்பட்டுள்ள 7 பாலிடெக்னிக்குகளில், இரண்டு பாலிடெக்னிக்குகள் தான் அரசுத் துறையில் ஆரம்பிக்கப்பட்டு இருக்கின்றன. இந்தத் தொழிற் கல்வியில் தனியார் துறைக்கு அதிக வாய்ப்பு கொடுப்பது என்பது எந்த நிலைமைக்குக் கொண்டு போய் விடும் என்பதனை அரசு புரிந்திருக்கிறதா ? அப்படியானால் அப்படிப்பட்ட நிலைமையை மாற்றுவதற்கு என்ன ஏற்பாடு செய்யப்படும் ? அரசுத் துறையில் அதிகப்படியான பாலிடெக்னிக்குகள் உண்டாக்குவதற்கு வேண்டிய நடவடிக்கைகளை அரசு எடுக்குமா ? தனியார் துறையில் பாலிடெக்னிக்குகள் ஆரம்பிப்பதற்கு நிபந்தனைகள் வைத்திருப் பதாக சொல்லியிருக்கிறார்கள். அந்த நிபந்தனைகளை வைத்து எந்த அளவிற்கு அவர்களை நாம் கட்டுப்படுத்த முடியும் ? அவர்கள் ஆயிரக்கணக்கில் பணம் திரட்டுவதற்கான முயற்சிகளை தடுக்க என்ன தடுப்பு நடவடிக்கைகள் அரசு வைத்துள்ளது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் ; தலைவர் அவர்களே, பாலிடெக்னிக் நிர்வாகத்தை நாம் கண்காணித்து வருகிறோம். அவர்கள் தவறு செய்கிறபோது நாம் அவர்கள்மீது நடவடிக்கை எடுக்க எல்லாவிதமான அதிகாரத்தையும் வைத்து இருக்கிறோம். அவர்களுக்கு அளிக்கப்பட்ட 'ரிகக்னிஷனை' வாபஸ் வாங்கிக் கொள்ளலாம். நீலகிரி மாவட்டத்தில் பாலிடெக்னிக் எதுவும் இல்லை என்பதால், ஊட்டியில் அரசுத் துறையில் ஒரு பாலிடெக்னிக் ஏற்படுத்தப்பட்டது. அதற்குப் பிறகு, புதுக்கோட்டை மாவட்டத்தில் அறந்தாங்கியில் ஒரு பாலிடெக்னிக் ஆரம்பித்து இருக்கிறோம். அதற்குப்பிறகு எட்டயபுரத்தில், பாரதி நூற்றாண்டு விழாவையொட்டி, அரசு சார்பில் ஒரு மகளிர் பாலிடெக்னிக் ஆரம்பித்து இருக்கிறோம். அதற்குப் பிறகு அரசு சார்பில் நாம் எங்குமே பாலிடெக்னிக் ஆரம்பிக்கும் நிலைமையில்லை. அடுத்த ஆண்டு, அல்லது அதற்கு அடுத்த ஆண்டு நமக்கு நிதி வசதி அதிகம் வருகிறபோது இதைப் பற்றி சிந்திக்கவேண்டிய நிலைமையேற்படலாம். அதற்கிடையில், தனியாரிடத்தில் இருக்கும் வசதிகளை நாம் பயன்படுத்திக் கொள்ளலாம் என்ற முறையிலேதான், நாம் இந்த அனுமதியைத் தந்து கொண்டு வருகிறோம்.

தனியார் ஆரம்பிக்கும் பாலிடெக்னிக்குகளில் 50% இடங்கள் நாம் கொடுத்துள்ள கைய்ட்லைன்ஸ் அடிப்படையில் அவர்கள் அட்மிஷன் கொடுக்கவேண்டும். இல்லையென்றால் அந்தப்

பாலிடெக்னிக்குகளில் படித்த மாணவர்களைப் பரிட்சை எழுதக் கூட நாம் அனுமதிக்கமாட்டோம். இந்த முறையை நாம் கண்டிப்பாகப் பின்பற்றி வருகிறோம். மீதமுள்ள 50% இடங்களுக்கு அவர்கள் யாரை வேண்டுமானாலும் போட்டு நிரப்பிக் கொள்ளலாம் என்று அனுமதி அளித்து இருக்கிறோம். காரணம், அவர்கள் முழுத் தொகையும் போட்டு, முழு செலவும் செய்து அந்தப் பாலிடெக்னிக்கை நடத்துவதால், இந்தச் சலுகை அவர்களுக்குத் தருகிறோம். அவர்களுக்கு நாம் எந்த விதமான உதவியும் தருவது இல்லை. பண உதவியும் தருவது இல்லை. ஆசிரியர்களுக்கு சம்பளம் வழங்குவதற்குக் கூட நாம் பணம் தருவது இல்லை. வேறு செலவுகளுக்குக் கூட பணம் தருவது இல்லை. அவர்களேதான் முழுச் செலவையும் ஏற்றுக்கொள்ள வேண்டும். எல்லாச் செலவுகளையும் செய்து, அவர்கள் அந்தப் பாலிடெக்னிக்குகளை நடத்துகின்ற காரணத்தால் இந்தச் சலுகையைத் தந்து இருக்கிறோம், இன்னும் சொல்லப்போனால், நம்முடைய அனுமதியைப் பெறாமலேயே கூட ஆரம்பிக்கக்கூடிய சில பகுதியினர் இருக்கின்றனர். அப்படிச் செய்கிறவர்களிடத்தில் இந்தப் பேச்சு பேசுவதற்குக் கூட உரிமையில்லாமல் போய் விடுகிறது.

நம்முடைய எண்ணம் எல்லாம் எந்த அளவிற்கு அதிக பட்ச மாணவர்களுக்கு நன்மையைப் பெற்றுத் தரமுடியும் என்பதுதான். தனியார்கள் கொள்ளை லாபம் அடிக்கவேண்டும் என்பதற்காக இதைச் செய்யவில்லை. இந்த தொழிற்கல்விக் கூடங்கள் மூலமாக எந்த அளவிற்கு அதிகமான மாணவர்கள் நன்மைபெற்று இருக்கிறார்கள் என்பது தான் நம்முடைய குறிக்கோள். நாம் யாரையும் தேடிப்போய் இதை ஆரம்பியுங்கள் என்று சொல்லவில்லை. அவர்களே வருகிறார்கள். அதை நாம் பரிசீலித்து அனுமதி கொடுக்கிறோம். இப்போது 7—8 பேர் வந்து கேட்டு இருக்கிறார்கள். அவர்களெல்லாம் நம்முடைய நிபந்தனைகளைப் பூர்த்தி செய்து விட்டால், நாம் அவர்களுக்கு அனுமதி தர இருக்கிறோம்.

திரு. இரா. கருப்பையா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கலைக் கல்லூரிகளைப் புதிதாக ஆரம்பிப்பதற்கு அரசு தடை விதித்து இருக்கிறது. அதே நேரத்தில் புதிய பாலிடெக்னிக்குகளை ஆரம்பிப்பதிலும் அரசுக்குச் சிரமம் இருப்பதாக அரசு அறிவித்து இருக்கிறது. தற்போது அதிகமான மாணவர்கள் தொழிற்கல்வி பெறுவதற்குத்தான் விரும்புகிறார்கள். அந்த நிலைமைதான் தற்போது இருந்து வருகிறது. ஆகவே, இதைக் கருத்தில் கொண்டு, தற்சமயம் மாநிலத்தில் உள்ள அனைத்துப் பாலிடெக்னிககுகளிலும் மாலைநேர வகுப்பு அல்லது ஷிப்ட் சிஸ்டத்தில் வகுப்புகள் துவங்குவதற்கான ஏற்பாடுகளை அரசு எடுக்குமா? திருச்சியிலே இருக்கின்ற அரசினர் பாலிடெக்னிக்கில் அங்கேயிருக்கின்ற தொழிலாளர்களுக்கு மட்டும் மாலை நேர வகுப்புகள் நடத்தப்படுகிறது. அந்த மாலைநேர வகுப்புகளில் மாணவர்களையும் சேர்த்துக்கொள்வதற்கான ஏற்பாடுகளை அரசு செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.



(முற்பகல் 9-40)

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : தலைவரவர்களே, புதிய கலைக் கல்லூரிகள் ஆரம்பிக்கவில்லை என்பது உண்மைதான். அதேநேரத்தில் 1977-ல் பட்ட வகுப்பில் படித்துவந்த மாணவர்கள் எண்ணிக்கையைப்போல இப்போது இரண்டு மடங்குகளுக்கு மேல் அந்த மாணவர்களின் எண்ணிக்கை பெருகியிருக்கிறது. அதாவது புதிதாக கலைக்கல்லூரிகளை ஆரம்பித்தால் எந்த அளவுக்கு மாணவர்கள் அதிகமாகப் படிக்க வாய்ப்பு ஏற்படுமோ அந்த அளவுக்கு மாணவர்கள் கூடுதலாக சேர்ந்திருக்கிறார்கள். மாண்புமிகுஉறுப்பினர்களுக்கே நன்றாகத் தெரியும். 1978-ல் நாம் பி.யு.சி. வகுப்பை எடுத்துவிட்டதால் சுமார் 3,000 ஆசிரியர்கள் உபரியாக இருந்தது பற்றி கவலை தெரிவிக்கப்பட்டது. வேலையிழப்பு ஏற்படாது என்று அப்போது உறுதிமொழிகள் எல்லாம் அளிக்கப்பட்டதும் தெரியும். அதன்படி அவர்கள் அத்தனை பேர்களுக்கும் வேலை கொடுக்கப்பட்டிருக்கிறது. ஆக, ஏற்கெனவே இருந்ததற்குமேல் 3,000 ஆசிரியர்கள் சேர்க்கப்பட்டு, புதிதாக ஆரம்பிக்கப்பட்ட பிரிவுகளில் சேர்ந்து மாணவர்கள் படிக்கிறார்கள். ஆகவே, கலைக் கல்லூரியைப் பொறுத்தமட்டில் புதிய கல்லூரிகள் திறக்கப்படவில்லையே தவிர, மாணவர்களுடைய எண்ணிக்கை இரண்டு மடங்குகளுக்கு மேல் பெருகியிருக்கிறது என்பதைக் குறிப்பிட விரும்புகிறேன்.

பாலிடெக்னிக்குகளில் ஷிப்ட் முறையைக் கொண்டுவர நாம் ஆதரவாகத்தான் இருக்கிறோம். இப்போதுகூட 7, 8 பாலிடெக்னிக்குகளில் ஷிப்ட் சிஸ்டம் ஆரம்பிக்கப்பட்டிருக்கிறது. அந்த அந்த பாலிடெக்னிக் நிர்வாகம் ஆசிரியர்களைக் கலந்து, அவர்களுடைய ஒப்புதலைப் பெற்று — அவர்களுடைய ஒப்புதல் இல்லை என்றால் நடத்துவது கடினம் — கோரிக்கை அனுப்பினால் ஷிப்ட் சிஸ்டம் ஆரம்பிக்க ஆதரவு தர தயாராக இருக்கிறோம்.

**தமிழ்நாடு பூமிதான வாரிய விதிகளில் மாற்றங்கள் செய்யும் திட்டம்.**

*வினா எண் 28—திரு. எஸ். இராசாராமன் : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாடு பூமிதான வாரிய விதிகளில் சில மாற்றங்கள் செய்வதற்கான செயற்குறிப்பு அரசின் ஆய்வில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரங்கள் என்ன?

மாண்புமிகு திரு.பு. குழந்தைவேலு :(அ) மற்றும் (ஆ) தமிழ்நாடு பூமிதான வாரிய விதி 15(2)(ii)-ஐ பூமிதான விவசாயிகளுக்கு நில அடமான வங்கிகள் அளிக்கும் கடன்களுக்கு அரசு உத்தரவாதம் (Government Guarantee) அளிக்கும் வகையில் மாற்றம் செய்யும் செயற்குறிப்பு ஆய்வில் உள்ளது.

திரு. எஸ். இராசாராமன் : தலைவரவர்களே, பூமிதான வாரியத்தில் சில மாற்றங்களைச் செய்வதாக அமைச்சரவர்கள் சொன்னார்கள். அப்படிச் செய்கிறபோது பூமிதான இயக்க

தலைவர்களையும் பொதுமக்களையும் வழக்கறிஞர்களையும் சந்தித்து, விசாரித்து, அவர்களுடைய ஆலோசனைகளைப் பெற்று, மாற்றம் செய்ய அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : தலைவர்களே, ஏற்கெனவே இதற்காக ஒரு குழு இருக்கிறது. அந்தக் குழுவிலே நானும் ஒரு அங்கத்தினராக இருக்கிறேன். இவைகளை எல்லாம் பரிசீலனை செய்துதான் ஏற்றுக்கொள்கிறோம்.

திரு. எஸ். இராசாராமன் : தலைவரவர்களே, பூமிதான இயக்கத்திற்கு நிலத்தை அன்பளிப்பாக வழங்கிய பெரியவர்களுடைய ஆலோசனைகளையும் கேட்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : அப்படிப்பட்ட பெரியவர்களின் மேலான ஆலோசனைகளின் அடிப்படையில்தான் இந்த மாற்றங்களை எல்லாம் செய்ய உரிய நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

குடிநீர் விநியோகத்திற்காக நகராட்சிகளுக்கு ஜெனரேட்டர் வழங்கும் திட்டம்.

*வினா எண் 29—திரு. எம். சின்னசாமி : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மின்வெட்டு காரணமாகக் குடிநீர் விநியோகத்திற்கு நகராட்சிகளுக்கு ஜெனரேட்டர் கொடுக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது முதல் அமுலுக்கு வரும்?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : (அ) மற்றும் (ஆ) : மின்வெட்டு காரணமாக குடிநீர் விநியோகம் பாதிக்கப்பட்டுள்ள தனி மின் பாதை அமைக்கப்படாத சில நகராட்சிகளுக்கு தனி மின் பாதை அமைக்க உரிய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. ஜெனரேட்டர் அல்லது டீசல் எஞ்சின் பம்ப்செட் வாங்கவும் அனுமதி கொடுக்கப்பட்டிருக்கிறது.

காஞ்சிபுரம் அருகில் பாலாற்றின் மீது பாலம் அமைக்கும் திட்டம்.

*வினா எண் 30—திரு. ப. வெங்கடசுப்பிரமணியம் : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) காஞ்சிபுரம் அருகில் பாலாற்றின் மீது பாலம் அமைக்க கோரிக்கை ஏதேனும் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் மீது அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன?



மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : (அ) ஆம்.

(ஆ) அரசின் குறைந்த நிதி வசதியின் காரணமாக காஞ்சிபுரம் வந்தவாசி சாலையிலும், உத்திரமேரூர்—காஞ்சிபுரம் சாலையிலும் இரண்டு பாலங்கள் அமைக்கும் பணி உடனடியாக மேற்கொள்ள இயலாது. எனினும் இனிவரும் ஆண்டுகளில் அரசின் நிதிவசதியினை கருத்திற்கொண்டு இப்பணியை மேற்கொள்வது குறித்து பரிசீலிக்கப்படும்.

திரு. ப. வெங்கடசுப்பிரமணியம் : தலைவரவர்களே, காஞ்சிபுரத்தை ஒட்டியுள்ள அந்த பாலாற்றில் 1976-77 ஆம் ஆண்டிலே 2,3 பஸ்கள் அடித்துச் செல்லப்பட்ட ஒரு பயங்கரமான சூழ்நிலை ஏற்பட்டுள்ளதால் குறைந்த பட்சம் அந்த இடத்திலாவது ஒரு மேம்பாலம் கட்ட அரசு நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: தலைவரவர்களே, அந்த இடத்தில் ஏற்கெனவே பல விபத்துக்கள் ஏற்பட்டிருக்கின்றன. அவை அரசின் கவனத்திற்கு வந்திருக்கின்றன. ஆனாலும் பாலம் கட்ட வேண்டுமென்றால் ஏறத்தாழ 4 கோடி ரூபாய் செலவாகும் என்று மதிப்பிடப்பட்டுள்ளது. இரண்டு பாலங்களை உடனடியாக கட்ட வேண்டுமென்றால் 8 கோடி ரூபாய் தேவை. ஆகவே, அடுத்தாண்டு ஒரு பாலம் கட்டும் பணியையாவது எடுத்துக் கொள்ளலாமா என்பது அரசின் பரிசீலனையில் இருந்து வருகிறது.

பரமக்குடியிலுள்ள பாரதிநகர் பகுதியில் செய்யப்பட்டுள்ள ஆக்கிரமிப்பு.

*வினா எண் 31—திரு. ஆர். தவசி: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா—

இராமநாதபுரம் மாவட்டம் பரமக்குடியில் பாரதிநகர் என்ற இடத்தில் ஐயப்பன் கோவில், பிள்ளையார் கோவில், சுப்பிரமணியர் கோவில் என்ற பெயரால் தேசிய நெடுஞ்சாலைக்குச் சொந்தமான ரோடுகளையும், நகராட்சிக்குச் சொந்தமான இடங்களையும் ஆக்கிரமிப்பு செய்யப்பட்டுள்ளது அரசுக்குத் தெரியுமா?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : ஆம்.

தமிழ்நாட்டிலுள்ள முக்கிய சுற்றுலா மையங்களுக்கு விமானப் போக்குவரத்து விடும் திட்டம்.

*வினா எண் 32—திரு. இரா. தாமரைக்கனி : மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா—

தமிழ்நாட்டில் உள்ள முக்கிய சுற்றுலா மையங்களுக்கு விமானப் போக்குவரத்து விடும் செயற்குறிப்பு எந்நிலையில் உள்ளது?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : மைய அரசின் அனுமதி பெற மாநில அரசு வலியுறுத்தி வருகின்றது. அண்மையில் மூன்றாவது நிலை விமானப் போக்குவரத்து (Third level Air Service) அமைப்பின் கீழ் 'வாயுதூத்' விமானம் வடகிழக்கு பகுதியில் சில நிலையங்களுக்கு 26-1-81-ம் நாள் முதல் விடப்பட்டு வருகின்றது என்றும், தகுந்த விமானம் தேர்ந்தெடுக்கும் விஷயமும் இன்னும் முடிவு எடுக்க வேண்டிய நிலையில்தான் உள்ளது என்றும், இந்தியாவின் மற்ற பகுதிகளிலும் 'வாயுதூத்'-ன் செயலை விரிவாக்கும் கருத்துரும் ஆராய்ந்து வருகின்றது என்றும் மைய அரசு தெரிவித்துள்ளது.

திரு. இரா. தாமரைக்கனி : பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டிலுள்ள எந்தெந்த சுற்றுலா மையங்களுக்கு இப்படி சுற்றுலாப் பயணிகளுக்காக விமானம் விடும் செயற்குறிப்பு அரசின் பரிசிலனையில் உள்ளது. மைய அரசின் அனுமதி கிடைக்க ஏன் காலதாமதம் ஆகிறது. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அதைத் துரிதப்படுத்தி வேண்டிய நடவடிக்கைகள் எடுப்பாரா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : பேரவைத் தலைவர் அவர்களே, மத்திய அரசு இன்னும் அனுமதியே கொடுக்கவில்லை. முதலிலே தூத்துக்குடியிலே ஏற்படுத்த முயற்சி எடுத்துக் கொண்டிருக்கிறோம். மத்திய அரசு அதைக் கொள்கை ரீதியாக ஒப்புக்கொள்கிறதா என்பதைப் பார்த்து பிறகு எந்தெந்த இடம் என்பதை விரிவாகப் பார்ப்பதற்கு வாய்ப்பாக இருக்கும்.

திரு. இ. எஸ். எம். பக்கிர் முகமது: மாண்புமிகு தலைவர் அவர்களே, தஞ்சை பெரிய சுற்றுலா தலமாக இருக்கிறது. தஞ்சாவூரிலும் இப்படிப்பட்ட 'ஏர் போர்ட்' இன்னமும் இருக்கிறது. ஆக அதற்கு முன்னுரிமை கொடுத்து அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : பேரவைத் தலைவர் அவர்களே, மத்திய அரசு நமக்கு முதல் உரிமை கொடுக்குமே யானால் நாமும் மாண்புமிகு உறுப்பினர் கோரிக்கையை ஏற்கலாம். தாங்களும் அதற்கு முயற்சி எடுப்பீர்கள் என்று நான் நம்புகிறேன்.

திரு. இரா. தாமரைக்கனி : பேரவைத் தலைவர் அவர்களே, வெளிநாடுகளில் எல்லாம், எல்லா சுற்றுலா மையங்களுக்கும் விமானப் போக்குவரத்து இருக்கிறது. அதேபோல தமிழ்நாட்டில் உள்ள எல்லா சுற்றுலா மையங்களுக்கும், தமிழக அரசே ஒரு 'மினி' விமான சர்வீசை விடுவதற்கு ஏற்பாடு செய்யுமா?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : பேரவைத் தலைவர் அவர்களே, தமிழக அரசே விடுவதாக இருந்தாலும் கூட, மத்திய அரசின் அனுமதி தேவை. அதற்காகத்தான் இப்போது முயற்சிகளை எடுத்துக் கொண்டிருக்கிறோம்.





திரு. கோவைத்தம்பி : பேரவைத் தலைவர் அவர்களே, முன்பு கூட மைய அரசு ஒரு திட்டம் தந்தது. சேலத்திற்கு விமான நிலையம் அமைப்பது குறித்து ஒரு கருத்து இருப்பதாக மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்குத் தெரியும் என்று கருது கிறேன். அப்படி இல்லை என்றால் சேலத்திலாவது ஒரு விமான நிலையத்தை அமைக்க துரித நடவடிக்கை எடுப்பார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே அப்படி ஒரு கருத்துரு இருக்கிறது. இதற்கும் அதற்கும் சம்பந்தம் இல்லை. இது வேறு அது வேறு.

திரு. கே. எஸ். ஜி. ஹாஜாசெரீப் : தலைவர் அவர்களே, இன்டஸ்டிரியலில் மிகவும் அட்வான்சாக உள்ள இடம் தூத்துக்குடி. மற்ற முக்கியமான ஊர்களுக்கு விமான போக்குவரத்து நடத்து வதற்கு இந்த அரசு மத்திய அரசை கேட்டிருக்கிறதா? அப்படி என்றால் எந்தெந்த இடத்திற்கு கேட்டிருக்கிறீர்கள். மத்திய அரசிலிருந்து என்ன பதில் வந்திருக்கிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் முதலிலேயே சொன்னேன். நாம் அனுமதி கேட்டோம். அந்த அனுமதியை சில காரணங்களாலே கொடுக்க முடியாமல் தாமதப்படுத்தி இருக்கிறார்கள். அவர்கள் சொல்லி இருப்பது எல்லாம், 'நாங்கள் ஆய்ந்து கொண்டிருக் கிறோம். அது வெற்றி பெறுமா என்று தெரிந்துதான் உங்களுக்கு பதில் சொல்ல முடியும்' என்று சொல்லி இருக்கிறார்கள். அவர்களிடமிருந்து முடிவான பதில் வருகிறபோது, எந்தெந்த இடங்கள் எடுத்துக்கொள்வது என்பதில் தடையேதும் இல்லை.

**எல்லா போக்குவரத்துக் கழக தொழிலாளர்களுக்கும் வீட்டுவசதி ஏற்படுத்தும் திட்டம்.**

*வினா எண் 33—திரு. என். பழனிவேல் : மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கூட்டுறவுச் சங்கங்கள் மூலம் மாநிலத்தில் உள்ள எல்லா போக்குவரத்துக் கழக தொழிலாளர்களுக்கும் வீட்டுவசதி ஏற்படுத்தித் தருவதற்கு அரசு ஆலோசித்து வருகிறதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : (அ) ஆம்.

(ஆ) இதற்கான ஆணையை 1981ஆம் ஆண்டு மே திங்கள் அன்று அரசு பிறப்பித்துள்ளது. இத்திட்டத்தை நிறைவேற்றிட கீழ்க்காணும் நடைமுறைகளைப் பின்பற்ற போக்குவரத்துக் கழகங்கள் அறிவுறுத்தப்பட்டுள்ளன:

1. கூட்டுறவுச் சட்டத்தின் விதி முறைகட்கு ஏற்ப கூட்டுறவு வீட்டுவசதி சங்கம் துவக்குதல்;

2. உரிய நிலங்களை வாங்குதல்;

3. மாநில, மத்திய கூட்டுறவு வீட்டுவசதி சங்கம் மூலமாக ஹட்கோ நிறுவனத்திடம் கடன் பெறுதல்;

4. மேற்கொள்ளவிருக்கும் திட்ட மதிப்பீட்டுத் தொகையில் 30 சதவீதத்தை முன் வைப்புத் தொகையாக வசூலித்தல்.

அவ்வாறே கழகங்கள் தக்க நடவடிக்கைகளை எடுத்து வருகின்றன.

**திரு. என். பழனிவேல் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, போக்குவரத்துத் துறையில் பணிபுரியக்கூடிய தொழிலாளர்களுக்கு கூட்டுறவுச் சங்கங்கள் மூலமாக குடியிருப்புகள் கட்டிக் கொடுப்பதற்கு அரசு முயற்சிகள் மேற்கொண்டு வருவதாகச் சொன்னார்கள். இன்று வரையில் தமிழகத்திலே அப்படி எத்தனை வீடுகள் கட்டிக் கொடுக்கப்பட்டிருக்கின்றன? அப்படி கட்டிக் கொடுக்காமல் இருந்தால் அந்தக் காலதாமதத்திற்குக் காரணம் என்ன என்பதை அமைச்சர் அவர்கள் அறிவிப்பாரா?

(முற்பகல் 9–50)

**மாண்புமிகு திரு. சு. முத்துசாமி :** தலைவர் அவர்களே, முதலிலே காலதாமதத்திற்கான காரணங்கள் என்ன என்பதைச் சொல்லிவிடுகிறேன். இந்தச் சங்கம் ஆரம்பிக்க வேண்டும் என்று நாம் 1981-ல் அதற்கான முயற்சிகளை எடுத்தோம். அப்படிப் பட்ட முயற்சி எடுத்தபோது, அதை உடனடியாக செய்யமுடியவில்லை. ஏன் என்றால் தொழிலாளர்கள் மத்தியில் சில ஐயப்பாடுகள் இருந்த காரணத்தால், தொழிலாளர்கள் ஆர்வம் காட்ட முதலில் அச்சப்பட்டார்கள். அதற்குப் பிறகு நாம் எடுத்த முயற்சிகளின் காரணமாக ஓரளவுக்கு இதிலே நம்பிக்கை வந்து இந்தச் சங்கத்திலே இப்போது உறுப்பினர்களாக இணைத்துக் கொள்வதற்கு முன்வந்து இருக்கிறார்கள். அப்படி நடவடிக்கை எடுத்ததன் காரணமாக சேரன் போக்குவரத்தில் 982 வீடுகளைக் கட்டிக் கொடுத்திருக்கிறார்கள். கட்டபொம்மன் போக்குவரத்துக் கழகத்தில் இப்போதுதான் இடம் வாங்க முயற்சிகளை எடுத்துக்கொண்டு வருகிறார்கள். அதிலேயும் சில சங்கடங்கள் இருக்கின்றன. தேவையான இடங்களை வாங்கி அதை நாம் தொழிலாளர்கள் இடத்திலே காட்டுகிறபோது, அந்த இடங்கள் அவர்களுக்குப் பிடிப்பதில்லை. தொழிலாளர்கள் காட்டுகின்ற இடங்களில் வீடுகள் கட்டுவதற்கு இடங்கள் கிடைப்பதில்லை. இப்படி பல்வேறு சங்கடங்கள் இருக்கின்றன.



அதேபோல்தான் பல்லவன் போக்குவரத்துக் கழகத்தில் 10 ஏக்கர் 27 சென்ட் நிலம் வாங்கப்பட்டு, 224 வீடுகள் கட்டுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது. சோழன் போக்குவரத்துக் கழகத்தில் 9 ஏக்கர் நிலங்கள் வாங்கப்பட்டு 87 வீடுகள் கட்டுவதற்கும், இன்னொரு இடத்திலே 10 ஏக்கர் வாங்கி, 103 வீடுகள் கட்டுவதற்கும் முயற்சிகள் எடுக்கப்பட்டு இருக்கின்றன.

அதேபோல் பாண்டியன் போக்குவரத்துக் கழகம் 115 வீடுகளைக் கட்டுவதற்கு இடம் வாங்குவதற்கான நடவடிக்கைகளை எடுத்துவருகிறது. அண்ணா போக்குவரத்துக் கழகம் 13 ஏக்கர், 18 சென்ட் நிலம் வாங்குவதற்கு ஏற்பாடுகளைச் செய்து கொண்டிருக்கிறது. பட்டுக்கோட்டை அழகிரிசாமி போக்குவரத்துக் கழகத்திலே 232 வீடுகளைக் கட்டுகின்ற வகையில் அதற்கு திட்டங்கள் போட்டுக் கொண்டிருக்கிறார்கள். 29 ஏக்கர் நிலம் வாங்கப்பட்டிருக்கிறது. இரண்டே இரண்டு போக்குவரத்துக் கழகங்கள்தான் இப்போது இந்தச் சங்கத்தை ஆரம்பிப்பதற்கான முயற்சிகளை எடுத்திருக்கிறது. மற்றவைகள் எல்லாம் ஏற்கனவே சங்கங்கள் அமைத்து, அதற்கான இடங்கள் வாங்கப்பட்டிருக்கின்றன.

**திரு. என். பழனிவேல் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்றைக்கு போக்குவரத்துத் துறையில் பணியாற்றிக் கொண்டு இருக்கக்கூடிய தொழிலாளர்கள் நகர்ப்புறங்களில் குடியிருப்பது என்று சொன்னால் அது மிகவும் சிரமமான ஒரு பிரச்சினையாக இருக்கிறது. அவர்கள் வாங்குகின்ற சம்பளத்தில் கிட்டத்தட்ட கால்பங்கு ஒவ்வொரு மாதமும் வாடகை கொடுப்பதற்கே சரியாகி விடுகிறது. ஆகவே அரசாங்கம் இதை வெகு விரைவாக துரிதப்படுத்தி எல்லா கார்ப்பரேசன்களிலும் பணிபுரியக்கூடிய அந்தச் சாதாரண ஊழியர்களுக்கு—இந்த ஆண்டு ஒரு இலக்கை நிர்ணயித்துக்கொண்டு, 2 லட்சமோ, 1 லட்சமோ, 50 ஆயிரமோ என்று ஒரு இலக்கை நிர்ணயித்துக்கொண்டு—1983–84-ஆம் ஆண்டில் கட்டிக் கொடுப்பதற்கு அரசு முயற்சிக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சு. முத்துசாமி :** தலைவர் அவர்களே, அப்படி ஒரு இலக்கிட்டுத்தான் நாம் ஆரம்பித்தோம். ஆனால் இதில் ஏற்படுகின்ற சங்கடங்கள் என்னவென்றால் தொழிலாளர்கள் முழுமையான ஒத்துழைப்பு கொடுப்பதில்லை. அதற்குப்பின்பு இப்போது அவர்கள் ஒத்துழைப்பு கொடுக்கிறபோது தேவையான இடங்கள் கிடைப்பதில் சிரமங்கள் ஏற்படுகின்றன. அது மட்டுமல்லாமல், சில நேரங்களில் நமக்கு கடன் வசதி கிடைப்பதிலும் சில சிரமங்கள் இருக்கின்றன. இதிலே, தொழிலாளர்கள் 30 சதவிகிதம் இந்த மதிப்பீட்டுத் தொகையில் அவர்கள் முன் தொகையாக செலுத்தவேண்டியிருக்கிறது. இதிலும் சில சங்கடங்கள் இருக்கின்றன. எனவே நமக்கு இருக்கும் ஆர்வமோ, வேகமோ எந்த வகையிலும் குறையவில்லை. குறைவாகவும் இல்லை. ஆனால் தொழிலாளர்களுக்கு இருக்கின்ற பிரச்னைகளும், நடைமுறையில் இருக்கின்ற சில பிரச்னைகளும் தான் சில சிக்கல்களை ஏற்படுத்திக் கொண்டிருக்கின்றன.

திரு. மு. அரங்கநாதன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நீலகிரி மலைப் பகுதியில் வீட்டுப் பிரச்னை மிகவும் அதிகமாக இருக்கிறது. அங்கே இருக்கக்கூடிய சேரன் போக்குவரத்துக் கழகத்தில் பணியாற்றக்கூடிய ஊழியர்களுக்கு முன்னுரிமை கொடுத்து, அவர்களுக்கு வீடு கட்டித்தர அரசு முன் வருமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : பேரவைத் தலைவர் அவர்களே, ஜனத்தொகை வேகமாக முன்னேறி வருவதன் காரணமாக பல இடங்களில் இந்தப் பிரச்சினை இருந்து கொண்டுதான் இருக்கிறது. நீலகிரியிலே மட்டும் இந்தப் பிரச்சினை இருக்கிறது என்று சொன்னால் அதை ஒப்புக்கொள்ள முடியாது. எல்லா இடங்களிலும் இருக்கிறது என்பதை நாம் ஏற்றுக்கொள்ளத்தான் வேண்டும். வேண்டுமானால் மாண்புமிகு உறுப்பினர் சொல்லிய கருத்துக்களை மனதிலே கொண்டு அங்கேயுள்ள நிலைமைகளைப் பார்த்து கொஞ்சம் அதிகமாக வேலைகளைச் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கலாம்.

போக்குவரத்துக் கழகங்களுக்கான டீசலுக்கு மானியம் வழங்க கோரிக்கை.

*வினா எண். 34—திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன்: மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா—

போக்குவரத்துக் கழகங்களின் நஷ்டங்களைச் சரிகட்ட போக்குவரத்துக் கழகங்களுக்கு டீசலுக்கு மானியம் வழங்க மைய அரசை மாநில அரசு கோரியுள்ளதா?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: இம்மாநில அரசு போக்குவரத்துக் கழகங்களுக்கு தேவைப்படும் டீசலை சற்று விலை குறைத்தோ அல்லது சற்று குறைந்த கலால் வரியுடனோ அளிக்கும்படி மைய அரசைக் கேட்டது. இம்மாநில அரசின் கோரிக்கை ஏற்றுக்கொள்ளப்படவில்லை.

திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாநிலங்களிலுள்ள அனைத்துப் போக்குவரத்துக் கழகங்களுக்கும் ஆண்டு ஒன்றுக்கு எவ்வளவு டீசல் செலவாகிறது? இப்போது எண்ணெய் உற்பத்தி செய்கின்ற நாடுகள் இந்தியப் பேரரசுக்கு ஒரு கணிசமான அளவிற்கு எண்ணெயினுடைய விலையைக் குறைத்திருக்கிறது. அதைக் காரணம் காட்டி மீண்டும் மாநில அரசு போக்குவரத்துக் கழகங்களுக்கு மான்ய விலையில் டீசல் வழங்க மத்திய அரசை மாநில அரசு வற்புறுத்துமா என அறிய விரும்புகிறேன்.



மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: பேரவைத் தலைவர் அவர்களே, 2,532 லட்சம் லிட்டர்கள் ஒரு ஆண்டுக்கு நம்முடைய போக்குவரத்து கழகங்களுக்காக மட்டும் நாம் செலவழித்துக் கொண்டிருக்கிறோம். இந்த உணர்வை நாம் இப்போது வெளிப்படுத்தித்தான் ஏற்கனவே மத்திய அரசாங்கத்திடம் கேட்டோம். ஆனால் அவர்கள் அப்படிப்பட்ட நடவடிக்கை எடுக்கமுடியாது என்று சொல்லியிருக்கிறார்கள். வேண்டுமானால் மீண்டும் ஒருமுறை நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய உணர்வையும் இந்தச் சட்டமன்றத்தினுடைய உணர்வையும் பிரதிபலிக்கின்ற வகையில் கடிதம் எழுதுவதிலே எனக்கு ஒன்றும் தடையில்லை.

திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன்: பேரவைத் தலைவர் அவர்களே, டீசல் விலை உயர்வின் காரணமாகத்தான் இன்று பல்வேறு போக்குவரத்துக் கழகங்கள் எல்லாம் நல்ல நிலையில் இயங்கிக்கொண்டு இருந்தாலும் வருவாய் ஈட்டுகின்ற சூழ்நிலையை எட்டமுடியாமல் போயிருக்கிறது. அதேசமயத்தில் போக்குவரத்துக் கழகங்கள் அபிவிருத்தி செய்யப்படவேண்டும் என்று உலக வங்கியிடம் கடன் கோருகின்றபோதுகூட உலக வங்கி கட்டணங்களை உயர்த்தவேண்டும் என்று நிபந்தனை மாநில அரசுக்கு விதித்து இருக்கிறதா? ஆம் என்றால் அரசு அதன் மீது எடுத்த நடவடிக்கை என்ன என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அப்படிப்பட்ட ஒரு நிலைமை இருப்பது உண்மைதான். நாம் உலக வங்கியிடம் கடன் கேட்கிற போதாக இருந்தாலும் சரி, அல்லது பிளானிங் கமிஷனிடம் கேட்பதாக இருந்தாலும் சரி, கட்டணத்தை உயர்த்தவேண்டும் என்று சொல்லி வைத்திருக்கிற கட்டணத்திற்கும் ஆகின்ற செலவிற்கும் பொருத்தமாக இல்லாமல் இருக்கிறது என்று சொல்லி அவர்களுடைய உணர்வை வெளியிடுகிறார்கள். கடந்த காலத்தில் ஏற்பட்ட வறட்சி காரணமாக அரசாங்கம் எடுக்கப்பட்ட நடவடிக்கையை தள்ளிப் போட்டுக்கொண்டே இருந்தது. அதைப்பற்றி தற்போது முடிவெடுக்க வேண்டிய நிலைமை ஏற்பட்டிருந்தாலும் கூட, அதற்காக மீண்டும் உலக வங்கி வற்புறுத்தினாலும் கூட, நிலைமையை மிகத் தீவிரமாக பரிசீலித்துத்தான் எடுக்கவேண்டும் என்கிற உணர்வில், வேகமாக இதில் முடிவெடுக்காமல் இருக்கிறோம்.

திரு. தி. அன்பழகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, டீசலின் விலை உயர்வு போக்குவரத்துக் கழகங்களில் ஏற்படுகிற நஷ்டங்களுக்கு ஒரு காரணமாக அமைவதால், டீசல் போன்ற எரிபொருள்களின் விலையை உயர்த்தும்போது மைய அரசு மாநில அரசினுடைய கருத்தை அறிந்துதான் செயல்பட வேண்டும் என்று மைய அரசை மாநில அரசு வற்புறுத்துமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாம் அப்படி வற்புறுத்துவதற்கான வாய்ப்பு இல்லை.

லீக்கோ கரி மூலம் பேருந்தை இயக்கும் திட்டம்.

*வினா எண். 35—டாக்டர் கே. சமரசம்: மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) லீக்கோ கரி மூலம் பஸ்ஸை இயக்க ஆய்வு ஏதேனும் செய்யப்பட்டுள்ளதா?

(ஆ) ஆம் எனில் அதன் விவரம் என்ன?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: (அ) ஆம்.

(ஆ) எம்டிஈ 6870 என்ற சோழன் போக்குவரத்துக் கழக டாடா பேருந்தில் பொருத்தப்பட்ட பெட்ரோல் எஞ்சினை கரிவாயு எஞ்சினாக மாற்றி கும்பகோணம் பேருந்து நிலையம்—நீலத்தநல்லூர் தடத்தில் 11-11-1982 முதல் இயக்கப்பட்டது. பேருந்து எஞ்சினை மாற்றியமைக்கும் செலவு அதிகமாகிறது. அதிகமான அளவுக்குப் பயணிகளை ஏற்றிச் செல்ல முடியாது. மேலும் மேற்படி கரிவாயு பேருந்துகளில் இருந்து வெளிவரும் அதிகமான புகை உடல் நலத்திற்கு ஊறு விளைவிக்கக் கூடியது என்ற காரணங்களினால் இயக்கம் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது.

டாக்டர் கே. சமரசம்: பேரவைத் தலைவர் அவர்களே, லீக்கோ கரி மூலம் பேருந்துகளை இயக்குவதிலே ஏற்படுகிற சங்கடங்களை, விளக்கி வரும்போது சுற்றுப்புறச் சுகாதார சூழ்நிலைகள் பாதிக்கப்பட்டு, அது உடல் நலத்திற்கு ஊறு விளைவிக்கக்கூடியது என்ற காரணங்களினால் நிறுத்தி வைக்கப்நிபட்டிருப்பதாக அமைச்சர் அவர்கள் கூறினார்கள். அப்படி றுத்திவைத்ததற்காக நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். அதே நேரத்தில், வளர்ந்து வரும் விஞ்ஞான யுகத்தில், இன்சாட் பான்றவைகளை வானில் செலுத்தும் வகையில் முன்னேற்ற மடைந்துள்ள இந்தியாவில், போக்குவரத்துத் துறைகளில் இந்தியாவிற்கே வழிகாட்டியாக இருந்துவரும் தமிழகம், எலக்ட்ரானிக் முறைகளைப் பயன்படுத்தி பேருந்துகளை விடுவதற்கு ஆய்வு செய்யுமா என்று அறியவிரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: பேரவைத் தலைவர் அவர்களே, மிக அருமையான யோசனை. எனக்குக் கூட ஆசையாக இருக்கிறது. ஆனால் நடைமுறையில் பல சிக்கல்கள் இருக்கின்றன. இன்னும் அந்த அளவுக்கு வளர்ச்சி அடையவில்லை என்றாலும், முயற்சி எடுப்பதிலே நாம் காலம் தாழ்த்த வேண்டிய அவசியம் இல்லை என்று நான் கருதுகிறேன்.

திரு. துரைமுருகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, டீசல், லீக்கோ கரி போன்றவற்றைப் பயன்படுத்தி நாம் பஸ்களை இயக்குவதிலே அதிகமான அளவிற்கு லாப நோக்கம் இருக்க வேண்டும் என்பதுதான் கேள்வியின் அடிப்படை.



அதிக ரூட்டுகளில் அதிகமான அளவில் பஸ்களை அரசு போக்குவரத்துக் கழகங்கள் விட்டால், அதிக லாபமும் வரும். நான் வேலூரிலே இருக்கிற ஆர்.டி.ஓ.வை, இது குறித்துக் கேட்டேன். டைமிங் கான்பெரன்ஸ் போட்டு, புது ரூட்டுகளில் பஸ்களைக் கொடுக்கக்கூடாது என்று ஓரல் இன்ஸ்டிரக்ஷன்கள் கொடுத்திருப்பதாக அறிந்தேன். அப்படி ஆணை இடப்பட்டிருக்கிறதா? அதனுடைய நோக்கம் என்ன?

மாண்புமிகு பேரவைத் தலைவர்: லீக்கோ கரிக்கும் டைமிங் கான்பெரன்ஸுக்கும் என்ன சம்பந்தம்? (குறுக்கீடு) கேள்வியை நானே புரிந்து கொள்ளத்தான் கேட்கிறேன். டைமிங்ஸ் ரெகுலரைஸ் செய்வது பஸ் போக்குவரத்தை நெறிமுறைப் படுத்துவதற்காக. டீசல், லீக்கோ கரி போன்றவற்றைப் பயன்படுத்தி பஸ்ஸை இயக்குவது குறித்தது மூலக்கேள்வி.

திரு. துரைமுருகன்: லாபத்தை அடிப்படையாக வைத்துத் தான் கேள்வி கேட்கப்பட்டிருக்கிறது. அதிகமாக லாபம் வர அதிக அளவில் பேருந்துகளை விடலாமே, அப்படி விடுவது தடை செய்யப்பட்டிருக்கிறதா என்கிற வகையில்தான் நான் கேட்டேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அவர் கேட்டுவிட்டார், அதனால் நான் அதிலே இருக்கிற ஒரே ஒரு பாயின்ட்டுக்கு பதில் சொல்லி விடுகிறேன். நிறைய பஸ்கள் விட்டால் நிறைய லாபம் வரும் என்ற வாதத்தை ஏற்றுக்கொள்ள முடியாது. ஏனெனில் கலெக்ஷன் ஒவ்வொரு ரூட்டில் ஒவ்வொரு விதமாக இருக்கும். அதிலும், எந்தெந்த ரூட்டுகளில் எப்படி எப்படி கலெக்ஷன் இருக்கிறது என்பதைப் பார்ப்பதற்காக ஒரு கமிட்டி கூட போடப்பட்டிருக்கிறது. சில ரூட்டுகளில் 100 வீடுகள் தாம் இருக்கின்றன. ஆனால், 5 மைல் போனால்தான் வீடுகள் இருக்கின்றன என்கிற காரணத்திற்காக அந்த இடங்களில் கூட நாங்கள் மக்களின் நலன் கருதி பேருந்துகளை விட்டிருக்கிறோம். அங்கே கலெக்ஷன் குறைவுதான். ஆயிரம் பேருக்கும் 50 வண்டிகளும் ஓடுகிறது, 200 வண்டிகளும் ஓடுகின்றன. நீங்கள் சொல்கிற மாதிரி நிறைய வண்டிகள் விடுவதினால் லாபம் அதிகமாக இருக்கும் என்றால் நிச்சயமாக அதிகஅளவில் வண்டிகளை விட்டிருப்போம். பேருந்துகளை அதிகப்படுத்த, அதிகப்படுத்தத்தான் நட்டம் அதிகமாக வருகிறது. லாபம் வரவில்லை. ஆகவே மக்களுடைய நன்மையைக் கருதிப் பார்த்து பேருந்துகளை விட வேண்டும் என்று நாங்கள், விஞ்ஞான ரீதியாக ஆய்வு நடத்தி, அதற்கேற்ப வண்டிகளை விட ஏற்பாடுகள் செய்துகொண்டிருக்கிறோம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினாக்கள்—விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு: ஓர் உரையின் தொடக்கத்தில் (*) உடுக்குறியிடப் பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]

## 2. ஒழுங்குப் பிரச்சினை.

### பேரவைக்குள் எதிர்க்கட்சிகள் வரிசையில் திராவிட முன்னேற்றக் கழகம் இரண்டாவது இடத்திற்கு மாற்றப் பட்டிருப்பது—தீர்ப்பு

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** நேற்று மாண்புமிகு உறுப்பினர் திரு. வி. கிருஷ்ணமூர்த்தி அவர்கள் ஒரு ஒழுங்குப் பிரச்சினை மூலமாக திராவிட முன்னேற்றக் கழகமும் காங்கிரஸ் கட்சியும் ஒரே எண்ணிக்கையில் அதாவது 32 உறுப்பினர்களைக் கொண்டதாக இருக்கிறது என்றும் அதற்கு ஆதாரமாக காங்கிரஸ் கட்சி உறுப்பினர் திரு. ஹாஜா ஷெரீப் அவர்களுக்கு ஓட்டு உரிமை இல்லாததால் அவர்களை காங்கிரஸ் கட்சி உறுப்பினர் எண்ணிக்கையில் சேர்க்கக் கூடாது என்றும் குறிப்பிட்டார்கள். மேலும் அவர்கள் தனது கருத்துக்கு வலுவூட்டும் வகையில் அமைச்சரவையில் அமைச்சராக இருக்கும் மேலவை உறுப்பினர்கள் பேரவை நடவடிக்கைகளில் பங்கு கொள்ள உரிமையிருந்தாலும் அவர்களுக்கு பேரவையில் ஓட்டளிக்கும் உரிமை இல்லாததால் அவர்களை பேரவையின் ஆளும் கட்சி உறுப்பினர்களின் எண்ணிக்கையில் சேர்க்க இயலாது என்றும் குறிப்பிட்டார்கள். அதனால் காங்கிரஸ் கட்சியின் எண்ணிக்கை 31 தான் என்றும் குறிப்பிட்டார்கள்.

இதே பொருள் குறித்து உறுப்பினர்கள் திருவாளர்கள் ஆர். உமாநாத், ப. நெடுமாறன், மு. அம்பிகாபதி ஆகியோரும் ஒழுங்குப் பிரச்சினை எழுப்பினார்கள்.

(முற்பகல் 10-00)

நான் எனது தீர்ப்பை பின்னர் வழங்குவதாக அறிவித்திருந்தேன். மேலெழுந்தவாரியாகப் பார்த்தபொழுது எடுத்துவைத்த பிரச்சினையில் பொருள் உள்ளதாகத் தென்பட்டது. ஆனால் இதை ஆராய்ந்து பார்த்ததில் இதில் எந்தவிதமான ஒழுங்குப் பிரச்சினையும் இருப்பதாகத் தெரியவில்லை.

ஒரு உறுப்பினர் மீது உறுப்பினரின் தேர்தல் செல்லாது என்ற காரணத்திற்காகவோ அல்லது வேறு எந்த ஒரு காரணத்திற்காகவோ அவர் உறுப்பினர் பதவியை இழக்கவேண்டிய நிலை சட்டப்படி ஏற்பட்டு நீதிமன்றம் அவர் உறுப்பினராக இருக்கத் தகுதியில்லை என்ற தீர்ப்பு கொடுத்த பின் அந்த தீர்ப்பின் மீது உச்ச நீதிமன்றத்தில் மேல்முறையீடு அனுமதிக்கப் பெற்று அதன்மீது இடைக்கால உத்தரவு வழங்கப்பெற்றிருப்பின் எந்தத் தீர்ப்பின்மீது மேல்முறையீடு செய்யப்பட்டிருக்கிறதோ அந்தத் தீர்ப்பே இல்லை என்ற நிலையில் இடைக்காலத் தடை உத்தரவு கொடுக்கப்படுகின்றது எனப்பொருள்படும். எனவேதான்



இடைக்காலத் தடையில் உச்ச நீதிமன்றம் என்னென்ன நிபந்தனைகளுக்கு உட்பட்டு இடைக்காலத் தடை விதித்திருக்கின்றதோ அந்த நிபந்தனைகளுக்கு உட்பட்டுத்தான் பேரவையில் உறுப்பினராக இயங்குகிறாரே அன்றி உறுப்பினர் அல்ல என்ற நிலையில் இல்லை.

திரு ஹாஜா ஷெரீப் அவர்களின் மீதான வழக்கில் உச்ச நீதிமன்றத்தின் இடைக்காலத் தடை உத்தரவு பின்வருமாறு இருக்கிறது:

"Pending disposal of appeal there shall be interim stay of the Operation of the G. O. Ms. No. 2026, Public (Election III) Department dated November 10, 1981 issued by the Governor of Tamil Nadu under Article 191(1) (d) of the Constitution subject to the condition that though the appellant may attend the proceeding of the State Legislative Assembly and participate in the proceedings in the State Legislative Assembly and continue to function as Chairman of the Public Accounts Committee and member of the Estimates Committee but he shall not vote as a member in the State Legislative Assembly or draw his salary for the period subsequent to the date of the impugned order.

எனவே, இதிலிருந்து உறுப்பினர் திரு ஹாஜா ஷெரீப் அவர்கள் உறுப்பினருக்கான ஊதியமோ அல்லது உறுப்பினர் என்ற முறையில் ஓட்டளிப்பது நீங்கலாக இதர எல்லா விதத்திலும் மேல்முறையீடு பைசல் ஆகும்வரை அவர் உறுப்பினர் என்றே கருதப்படுவார் என்பது புலனாகிறது. மேலும் அவரை அவரது கட்சி உறுப்பினர் எண்ணிக்கையில் சேர்க்கக் கூடாது என்று எந்தத் தடையும் இல்லை.

உறுப்பினர் கூறுவது சரி என்று எடுத்துக்கொண்டால் அவர் வேறு எந்த வகையிலுமே பங்கு கொள்ள இயலாது என்று ஆகிறது. அதாவது பேரவையின் குழுக்களிலும் பங்குகொள்ள இயலாது என்ற நிலையும் வந்துவிடுகிறது. இது வெளிப்படையாகவே தவிர்க்கப்பட்டுள்ளது.

கீழ்க்கண்ட தேர்தல் வழக்குகளிலும் இடைக்காலத் தடை இருந்தபோது அந்தந்தக் கட்சி உறுப்பினர்கள் அந்தந்தக் கட்சி உறுப்பினர்களின் எண்ணிக்கையோடுதான் இதுவரை கணக்கிடப் பட்டார்கள்.

| | |
|---|---|
| 1958 ஆம் ஆண்டு ஆர். எம். கரியமாணிக்கம் அம்பலம் | (காங்கிரஸ்.) |
| எஸ். தங்கவேலு | (காங்கிரஸ்.) |
| 1959 ஆம் ஆண்டு டி. வேலுச்சாமி | (காங்கிரஸ்.) |
| எம். ஏ. முத்தையா செட்டியார் | (காங்கிரஸ்.) |
| 1966 ஆம் ஆண்டு கே. எஸ். அப்துல் அஸீஸ் | (காங்கிரஸ்.) |
| 1978 ஆம் ஆண்டு வி. மலைச்சாமி | (தி. மு. க.) |
| 1980 ஆம் ஆண்டு ஆர். [illegible] | (காங்கிரஸ்.) |

எனவே ஒரு உறுப்பினர் தேர்தல், சட்டப்படி செல்லாது என்று ஒரு நீதிமன்றம் தீர்ப்பளித்து அது சட்டப்படி நிலை நாட்டப்பட்ட பின்புதான் அவர் உறுப்பினர் இல்லை என்ற முடிவுக்கு வர இயலும். உச்ச நீதிமன்றம் ஏதாவது உறுப்பினர் மீது நிபந்தனைகளின்பேரில் இடைக்காலத் தடை விதித்திருந்தால் அதை உறுப்பினர் மீறுவாரேயானால் அது அவருக்கும் அந்த நீதிமன்றத்திற்கும் உள்ள பிரச்சினையாகும்,

எனவே, இந்த அவையைப் பொறுத்தவரை தற்பொழுது உள்ள நிலையில் திரு ஹாஜா ஷெரீப் அவர்கள் உறுப்பினராகவே கருதப்பட்டு அவர் சார்ந்துள்ள கட்சியின் உறுப்பினர்களின் எண்ணிக்கையோடு கணக்கிடப்படுவார். எனவே, சட்டமன்றப் பேரவையில் காங்கிரஸ் கட்சியின் எண்ணிக்கை அவரையும் சேர்த்து 32 ஆகவே கருதப்படுமேயன்றி அவரைத் தனிப்பட்ட உறுப்பினராகக் கருதி காங்கிரஸ் கட்சியின் உறுப்பினர் எண்ணிக்கை 31 என்று கருத இயலாது.

எனவே, திரு. வி. கிருஷ்ணமூர்த்தி அவர்களின் ஒழுங்குப் பிரச்சினையில் உறுப்பினரின் விவாதத் திறமைதான் மேலோங்கி இருப்பதாகத் தெரிகிறதேயன்றி அப்பிரச்சினையில் ஏதும் சட்டப் பிரச்சினை இருப்பதாகத் தெரியவில்லை.

எனவே, இப் பிரச்சினையில் எந்தவிதமான ஒழுங்குப் பிரச்சினையும் இல்லை என்று தீர்ப்பளிக்கிறேன்.

திரு. துரைமுருகன் : பாயின்ட் ஆப் ஆர்டர் சார். தங்களுடைய தீர்ப்பின் மீது நான் எதையும் பேசப் போவது இல்லை. ஒரே ஒரு விளக்கத்தை மட்டும் தெரிந்துகொள்ள விரும்புகிறேன். தாங்கள் படித்தீர்களே இப்படிப்பட்டவர்கள், இந்தக் கட்சியைச் சேர்ந்தவர்கள் என்று, அவர்கள் எல்லாம் சம்பளம் வாங்கக்கூடாது வோட்டுப் போடக் கூடாது என்று நிபந்தனைகள் நீதிமன்றத்தால் விதிக்கப்பட்டு இருந்தனவா?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : எல்லோருக்கும் அதேமாதிரி நிபந்தனை தான் இருந்தது. சிலருக்கு கலந்துகொள்ளவே கூடாது என்ற நிபந்தனை கூட இருந்துள்ளது.

திரு. ப. பொன்னுரங்கம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சிறிது நேரத்திற்கு முன்பு தாங்கள் தீர்ப்பு வழங்கினீர்கள். அதிலே உதாரணங்கள் சொன்னீர்கள். நான் ஒரு விளக்கம் தெரிந்துகொள்ள விரும்புகிறேன்....

மாண்புமிகு பேரவைத் தலைவர் : தீர்ப்பின் மேல் பேசக் கூடாது, வேறு ஏதாவது இருந்தால் சொல்லுங்கள்.



திரு. ப. பொன்னுரங்கம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரே ஒரு விளக்கத்தைக் கேட்க விரும்புகிறேன். பில்லில் டிவிஷன் நடந்தால் வோட்டுப் போட அவருக்கு உரிமை உண்டா?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : என் அறையில் வந்து கேளுங்கள்.

### 3 தகவல் கோரல்

### (அ) பத்திரிக்கையில் வந்துள்ள செய்தி

திரு. மு. அம்பிகாபதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நீங்கள் எங்களுக்குப் பாதுகாப்பு அளிக்க வேண்டும் என்று முதலில் கேட்டுக்கொள்கிறேன். ஏன் என்றால் எங்கள் மாவட்டத்தைச் சார்ந்த அமைச்சர் திரு. கோவேந்தன் அவர்கள் தன்னைக்கொலை செய்ய சதி நடப்பதாகப்பத்திரிக்கையில் செய்தி வந்திருக்கிறது. அதை அவரும் மறுக்கவில்லை....

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பத்திரிக்கையில் வந்த செய்தியை வைத்து திடீர் என்று இங்கே விவாதங்களை கிளப்பக் கூடாது.

### (ஆ) சென்னையிலும் அதன் சுற்றுப்புறங்களிலும் அடைமழையினால் ஏற்பட்டுள்ள சேதம்

திரு. என். எஸ். வி. சித்தன்: மாண்புமிக்க பேரவைத் தலைவர் அவர்களே, சென்னையிலும் அதன் சுற்றுப்புறங்களிலும் மற்றும் கரையோரப் பகுதிகளிலும் கடந்த 3 தினங்களாக மழை பொழிந்துகொண்டிருக்கிறது. சென்னையில் அதன் சுற்றுப் புறங்களில் இருக்கிற பல்வேறு தாழ்வான பகுதிகளில் மழை நீர் தேங்கியிருக்கிற காரணத்தால் குடிசைவாழ் மக்கள் அல்லல் படுகிறார்கள் என்று செய்திகள் வருகின்றன. எனவே இந்த மழை காரணமாக, வெள்ளம் காரணமாக ஏற்பட்ட சேதம் பற்றியும் அரசின் நிவாரண நடவடிக்கைகள் பற்றியும் 'அறிக்கை வைக்கப்படுமா என்பதைத் தங்கள் மூலமாகத் தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இது எல்லாக் கட்சியும் முக்கியம் என்று கருதுகிற பிரச்சனைதான். அதைப்பற்றி ஏதாவது ஒரு அறிவிப்பு கொடுத்து கவனத்தை ஈர்க்க வேண்டும்.

[1983 அக்டோபர் 26

திரு. என். எஸ். வி. சித்தன்: மாண்புமிக்க பேரவைத் தலைவர் அவர்களே, அவை முன்னவர் அவர்கள் இங்கே இருக்கிற காரணத்தால் இப்போது விவரங்கள் இல்லாவிட்டாலும் இன்னொரு நாளைக்கு அறிக்கை சமர்ப்பிக்கப்படுமா என்பதை நான் உங்கள் மூலமாகக் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

(முற்பகல் 10-10)

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நேற்றும், நேற்றைய முன்தினமும் தொடர்ந்து இன்றும் கூட பெருமழை காரணமாகக் குடிசைப் பகுதிகளும் மற்றவைகளிலும் பெரும் சேதத்திற்கு உள்ளாகி இருக்கின்றன. அதற்கான நடவடிக்கைகள் முறைப்படி மாநகராட்சி மூலமாக, மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் மூலமாக அரசினுடைய பல்வேறு துறைகள் மூலமாக எடுக்கப்பட்டு வருகின்றன. எந்த எந்த அளவு எந்த எந்த இடத்தில் எப்படி எப்படி சேதம் ஏற்பட்ட விவரங்கள் அதற்கு நடவடிக்கைகளும் மற்றவைகள் எல்லாம் அது நடந்து முடிந்த பிறகுதான் எடுத்துச் சொல்லமுடியும். ஏதேனும் ஒரு வகையில் அதைப்பற்றி கேள்வியாகவோ மற்ற வகையிலோ கேட்பர்களானால் அவர்களுக்கு முழு விவரங்களையும் பின்னர் எடுத்துச் சொல்ல முடியும். இன்றைய நிலையில் எடுத்துச் சொல்வதற்கு இல்லை.

4 அறிக்கை அளித்தல்

மதிப்பீட்டுக் குழு

திரு. எஸ். ஜகத்ரட்சகன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழக 7-வது சட்டமன்றப் பேரவையின் மதிப்பீட்டுக் குழுவின் தலைவர் என்ற முறையில் 'வனத்துறை" பற்றிய மதிப்பீட்டுக் குழு அளித்த பரிந்துரைகளின் மீது அரசு எடுத்துள்ள நடவடிக்கைகள் பற்றிய இருபதாவது அறிக்கையை நான் பேரவைக்கு அளிக்கின்றேன்.

5 அரசினர் சட்ட முன்வடிவுகள்

(அ) சென்னை மாநகரக் காவல், தமிழ்நாடு மாவட்டக் காவல் (இரண்டாம் திருத்த) சட்ட முன்வடிவு, 1983.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்.

''1983 ஆம் ஆண்டு சென்னை மாநகரக் காவல் தமிழ்நாடு மாவட்டக் காவல் (இரண்டாம் திருத்த) சட்ட முன்வடிவை பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்க வேண்டும்.''



1983 அக்டோபர் 26]

திரு. ரா. உமாநாத் : மாண்புமிகு தலைவர் அவர்களே, இது அடிப்படையான ஒரு பிரஜா உரிமை பிரச்னை என்ற சீரியசான இஷ்யூவாக இருப்பதாலே —— நாங்கள் எப்பொழுதும் இன்ட்ரடக்ஷனிலே அப்ஜக்ட் பண்ணுகிற பொழுது, சரி என்று கேட்டுவிட்டு, அமைச்சரை இன்ட்ரடியூஸ் பண்ணச் சொல்கிறீர்கள் —— தயவுசெய்து இதையும் நீங்கள் அந்த மாதிரி பார்க்காமல் ஒரு டெசிஷன் கொடுக்கவேண்டும். வேறு வழியில்லை. எங்களுடைய existence itself is at stake ஆகவே, முதலிலே நான் வேண்டிக் கொள்கிறேன். இந்தச் சட்டத்தினுடைய போனபைடையே நான் சேலஞ்ச் பண்ணுகிறேன். இது ஒரு கறுப்புச் சட்டம். இந்தச் சட்டம் ஜனநாயகப் படுகொலை என்று நான் சொல்வேன். Declaration of war to liquidate the opposition என்றுதான் நான் கூறுவேன். அதாவது, இந்தச் சட்டம், எதிர்க்கட்சிகளின் மீது ஒரு யுத்தம் பிரகடனப்படுத்துகிற மாதிரி இருக்கிறது என்று நான் கூறுவேன். In fact இது ஒரு undeclared emergency என்று கூறினால்கூட மிகையாகாது என்று நான் சொல்வேன். இந்தச் சட்டம் ஜனநாயகத்தின் மீது விதிக்கப்பட்ட death sentence. ஆகவே, நீங்கள் இதை இன்ட்ரடியூஸ் செய்ய அனுமதித்தால், ஜனநாயகத்தின் மீது மரண தண்டனை விதித்தது ஆகும் —— it will amount to death sentence என்று நான் கூறுவேன். ஆகவே தான் இதனுடைய போனபைடை நான் சேலஞ்ச் பண்ணுகிறேன். இந்தச் சட்டத்தினுடைய கிளாசசின் மெரிட்சுக்குள்ளே நான் போகவில்லை. இன்ட்ரடக்ஷனைத்தான் நான் அப்ஜக்ட் செய்கிறேன். தொண்டர் படைகளை அமைப்பதும், அதற்குத் தகுந்த டிரெயினிங் கொடுப்பதும் அனைத்துக் கட்சிகளும் வருஷக்கணக்காக, அனுபவித்து வரக்கூடிய உரிமை. இதை நாங்கள் விட்டுக் கொடுக்கத் தயாராக இல்லை. இதிலே, ஆயுதம் தாங்கிய டிரெயினிங் கொடுக்கக் கூடாது என்று கொடுக்கப்பட்டுள்ளது. ஆனால், நான் சொல்வது, அந்த explanation is a sheer hypocrasy. அது, இந்த ஆர்டினன்ஸ் போட்டபிறகு நடைமுறையில் தெரிந்து போயிற்று. திருநெல்வேலி ஜங்க்ஷனிலே DMK Members were arrested. அவர்கள் என்ன கையிலே ஆயுதமா வைத்திருந்தார்கள்? ஒன்றுமே வைத்திருக்கவில்லை. அதே மாதிரி, சேலத்திலே, கல்யாண மண்டபத்திலே, இந்த ஆர்டினன்சை யூஸ் பண்ணி DMK Members were arrested. அவர்கள் ஆயுதமா வைத்திருந்தார்கள்? எந்த ஆயுதமும் வைத்திருக்கவில்லை; குச்சி கூட வைத்திருக்கவில்லை. தமிழ் நாட்டினுடைய பண்டைக் காலத்திலிருந்து இருக்கக்கூடியது, பண்பாட்டில் இருப்பது, சிலம்பு விளையாட்டு —— லேபர் மினிஸ்டர் அவர்கள் இதில் அக்கறை காட்ட வேண்டும் —— அதைக் கூட ஆட முடியாது இதன்படி. ஆயுதம் என்றால், ஸ்டிக் —— குச்சி கூட உபயோகிக்கக் கூடாது. மாண்புமிகு இராகவானந்தம் அவர்கள் சிலம்பு விளையாட்டு என்று அடிக்கடி சொல்வார். அதுவும் விளையாட முடியாது. அரசின் நோக்கம் என்னவென்றால், purpose என்ற ஆங்கில வார்த்தைக்கு 'நோக்கம்' என்று தமிழில்

சொல்கிறேன், எதிர்க்கட்சிகள் தொண்டர் படைகளை அமைப்பதைத் தடுப்பது, அதே சமயத்திலே ஆளுங்கட்சி மாஜி இராணுவத்தினரை வைத்து ஒரு தொண்டர் படையை அமைத்து, அதற்கு அமைதி காக்கும் படை என்று ஒரு சட்ட வடிவம் கொடுத்து, எதிர்க்கட்சிகள் மீது gundaism, rowdyism, gangsterism and vandalism அதாவது, சூறையாடுவது உட்பட நடத்துவது என்பது தான் அதனுடைய பர்ப்பஸ். அதற்கு இந்த சட்ட வடிவிலே இதைக் கொண்டு வந்திருக்கிறது என்று கடுமையாக நான் சொல்கிறேன். 'மோஸ்ட் அட்ராஷியஸ்', காரணம் என்னவென்று சொன்னால் அரசியல் பிரசங்க டேப் கூட பப்ளிக் மீட்டிங்லே ப்ளே பண்ணக்கூடாது. இந்தச் சட்டத்திலே இருக்கிறது. இதுவரைக்கும் ஜனங்கள் என்ன நினைத்துக் கொண்டிருந்தார்கள் என்றால் 'ஆர்ம்ஸ் ட்ரெயினிங்' தான் கூடாது என்று. ஆனால் இதிலே என்னவென்று சொன்னால் கிராமபோன் ரெக்கார்டுகளில் இருக்கிற அரசியல் பாடல்களும் தடை செய்யப்படும் என்று போட்டிருக்கிறது. எல்லாவற்றிற்கும் மேலாக கடுமையானது என்னவென்று சொன்னால் இந்தச் சட்டப்படி ரோட்டிலே எழுதக் கூடாது; சுவற்றிலே எழுதக் கூடாது; எந்தச் சின்னமும் போடக் கூடாது; கார்ட்டூன் போட முடியாது; இவ்வளவும் கம்ப்ளீட்டாக தடை செய்யப்பட்டு விட்டது என்று சொன்னால் இன்னும் என்ன பாக்கி இருக்கிறது? தேர்தல் சின்னங்களை வேறு எங்கே எழுதுவது? ஜனநாயக நாட்டில் போராட்டங்கள் நடக்கிறபோது பல கோஷங்கள் இருக்கின்றன; அவற்றை எல்லாம் எங்கே போய் எழுதுவது? எங்கள் நெற்றியிலேயா எழுதுவது? அல்லது கழுதை மீதா எழுதுவது? அல்லது வான வெளியில் சென்றா எழுத முடியும்? ஆகவே தான் நான் அட்ராஷியஸ் என்று சொன்னேன். You will extinguish the existing rights. பாக்கி என்ன இருக்கிறது? ஆளும் கட்சிக்காரர்களுக்கு இந்தப் பிரச்னை இல்லை. ஆனால் அவர்கள் சொல்வார்கள், எங்களுக்கும் தானே இந்தச் சட்டம் பொருந்தும் என்று; ஆனால் அவர்களுக்கு இந்தப் பிரச்னை இல்லை. அவர்கள் பிரம்மாண்டமான போஸ்டர்கள் போடுவார்கள். They have got sufficient money. They have got crores of rupees. அவர்களுக்கு போஸ்டர்கள் போடமுடியும். அதுவும் வித்தோ போஸ்டர்கள். பலவிதமான போஸ்கள் போட முடியும். எழுதுகிற போஸ், கையை ஆட்டும் போஸ், நடனமாடும் போஸ்: அவ்வளவு போஸ்களையும் போட முடியும். ஆனால் எங்களைப் போன்ற பார்ட்டிகளுக்கு சுவற்றைத் தவிர வேறு என்ன இருக்கிறது?

உங்களுடைய கவனத்திற்கு ஒன்றைக் கொண்டு வர விரும்புகிறேன். நம்முடைய மாண்புமிகு அமைச்சர் பண்ருட்டி இராமச்சந்திரன் அவர்கள் ஐ. நா. வினுடைய கமிட்டியிலே சொல்கிறபோது ஒரு சென்டன்சை சொன்னார். அதாவது "மிஸ்டர் ஜெயவர்த்தனே மஸ்ட் சீ தி ரைட்டிங்ஸ் ஆன் தி வால்'' என்று அவர் சொன்னார். ஆனால் இவர்கள் இப்போது



சுவற்றிலே எழுதுவதேகூடாது என்று சொன்னால் ஜெயவர்த்தனே போய் எப்படி ரைட்டிங்ஸ் ஆன் தி வால்-ஐ பார்ப்பார்கள்? நான் சொல்கிறேன் அவரால் ''ரைட்டிங்ஸ் ஆன் தி வால்'' பார்க்க முடியாது. அப்புறம் நான் என்ன சொல்கிறேன் என்றால், Perhaps the Government has started seeing the writing on the walls. அந்த பயத்தினாலே தான் என்று நான் நினைக்கிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : மாண்புமிகு உறுப்பினர் ''ரைட்டிங்ஸ் ஆன் தி வால்'' என்றால் சுவரைப் பார்க்கக் கூடாது. அதிலிருக்கிற உணர்ச்சியைத்தான் பார்க்க வேண்டும்.

திரு. ரா. உமாநாத் : நான் ஒன்றைச் சொல்கிறேன். அதாவது சீப்பை ஒளித்தால் கல்யாணம் நிறுத்த முடியாது என்று தமிழில் ஒன்றைச் சொல்வார்கள். ஆகவே, சுவற்றில் எழுதுவதைத் தடுத்தால் அவர்களுடைய கொள்கையை அம்பலப் படுத்தக் கூடியதை தடுப்பது என்கிறீர்கள். நீங்கள் அடிக்கடி 'ஜெயிப்போம், ஜெயிப்போம்' என்று சொல்கிறீர்கள். அப்படி ஜெயிக்கிறவர்கள் ஏன் சுவற்றில் எழுதுவதைப் பார்த்து பயப் படவேண்டும்? Why should you fear about the writing on the wall? ஏற்கெனவே மக்களுடைய ஒவ்வொரு உரிமையையும் இந்தச் சட்டமன்றத்திலே சட்டம் கொண்டு வந்து பறித்து விட்டீர்கள். எங்களுடைய உரிமைகள் ஒவ்வொன்றாக எல்லாவற்றையும் பறித்து விட்டீர்கள். உரிமைகள் பறிக்கப்பட்டு, பின் தள்ளப்பட்டு பின் தள்ளப்பட்டு இப்போது நாங்கள் சுவற்றோடு போய் நிற்கிறோம். பேக் டு தி வால் பொசிஷன் என்று சொல்வார்கள், பின்னால் சுவர் இருக்கிற போது இனியும் நாங்கள் பின் வாங்க முடியாது. இந்த நிலையில் இந்தச் சட்டம் வந்தால் நாங்கள் பின் வாங்க முடியாது. Back to the wall position. We cannot take it lying low. இதை அவையில் இன்ச் இன்ச்சாக நிச்சயமாக பைட் பண்ணுவோம். எந்தத் தியாகம் செய்ய வேண்டி வந்தாலும் செய்து இந்தச் சட்டத்தை அனுமதிக்க மாட்டோம். We will no tolerate it.

போலீஸ் மானியத்திற்கு முதல்வர் அவர்கள் பதில் கூறுகிற போது ஒன்றைச் சொன்னார்கள். தஞ்சாவூர் பெசன்ட் பயரிங்கைப் பற்றிச் சொல்லும் போது அண்ணா அவர்கள் கூறியதாக் கூறினார். அவர் என்ன சொன்னார் என்றால், ஒன்றும் செய்ய முடியாத ஓரு புழு கூட துன்புறுத்தப்பட்டால் தன் உடம்பை நெளித்து தன் எதிர்ப்பைக் காட்டும் என்றார்.

(முற்பகல் 10-20)

இந்தச் சர்க்காருக்கு நான் ஞாபகப்படுத்த விரும்புகிறேன். நாங்கள் புழுக்கள் அல்ல, மக்களுக்காகப் போராடும் மனிதர்கள், மனிதனுடைய சுயமரியாதைக்கேற்ப இந்த அவையிலே கட்டாயம் இந்தச் சட்டத்தை எதிர்த்து முறியடிப்போம். அவ்வாறு

நாங்கள் செய்வதற்கு இடங்கொடுக்காமல் இந்தச் சட்டமுன் வடிவையே அறிமுகம் செய்யாமல் வாபஸ் செய்வது நல்லது என்று கூறி, எங்களுடைய ஆட்சேபணையைத் தெரிவிக்க விரும்புகிறேன்.

திரு. அ. ரகுமான்கான் : மாண்புமிகு சபாநாயகரவர்களே, இங்கே கொண்டுவரப்பட்டிருக்கும் இந்த அவசரச் சட்டத்தைப் பற்றி நம்முடைய உமாநாத் அவர்கள் சிறப்பாகச் சொல்லியிருக்கிறார்கள். ஆளுகின்ற கட்சியைச் சேர்ந்தவர்கள் ஆயுதப் பயிற்சி செய்யும் விதத்திலே அவர்களுக்கென்று ஒரு தொண்டர் படையை வைத்துக்கொண்டால், அரசாங்கம் பார்த்து சம்மதித்தால் அதற்கு அனுமதி கொடுக்கலாம் என்ற பிரிவு இருக்கிறது. ஆகவே, அரசாங்கம் தங்கள் கட்சியின் சார்பாகத் தொண்டர் படை என்று வைத்துக்கொண்டு ஆயுதப்பயிற்சி செய்ய அனுமதி தரலாம். ஆனால், அதேநேரத்தில் பிற கட்சிகள் ஆயுதப் பயிற்சியே இல்லாமல் தொண்டர்படை வைத்திருந்தால்கூட கமிஷனர் பொது அமைதிக்கு அபாயகரமானது என்று சொல்லி கைது செய்து ஆறு மாதம் ஜெயில், இரண்டாயிரம் ரூபாய் அபராதம் என்று போட்டு எதிர்க்கட்சிகளை நசுக்கும் கடுமையான ஒரு சட்டமாகும் இது.

ஆர்ம்ஸ் என்று விளக்கம் கொடுக்கும்பொழுது கை கூட, சிறு கம்பு கூட, "லத்தி அன்ட் ஸ்டிக்ஸ்" என்று கொடுத்திருக்கிறார்கள். சின்னக் குச்சிகூட ஆர்ம்ஸ் என்று கொடுத்திருக்கிறார்கள். அப்படிப் பார்த்தால் எதிர்க்கட்சித் தொண்டர்கள் ஊர்வலத்திலே கொடிபிடித்துக் கொண்டு போகிறார்களே, அந்தக் கொடி கட்டப்பட்டிருக்கின்ற சின்னக் குச்சிகூட சேரும் அளவிற்கு சின்ன ஸ்டிக் என்று டெபனிஷன் கொடுக்கின்ற அளவிற்கு எதிர்க்கட்சித் தொண்டர்கள் ஊர்வலத்தில் கொடி பிடித்துக்கொண்டு போவதுகூடத் தடை செய்யப்படும் சூழ்நிலை இருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இப்பொழுது பெண்களும், ஆண்களும் ஜூடோ பயிற்சி பெறுகிறார்கள். அந்தத் துறையைச் சார்ந்த பயிற்சி பெற்றவர்களுக்கு, வீர விளையாட்டு வீரருக்கு வீடு கூடக் கொடுத்திருப்பதாகக் கேள்விப்படுகிறேன். ஜூடோ பயிற்சியில் கைகளால் சண்டை போடுவதுகூட ஆர்ம்ஸ்தான். இதன் மூலமாக ஜூடோ பயிற்சியும் தடை செய்யப்படும் நிலைமைகூட ஏற்படுகிறது. ஒரு புறத்திலே ஜூடோ பயிற்சியை விரும்புகிறீர்கள், இன்னொரு புறத்திலே அதைத் தடை செய்யும் விதத்தில் சட்டம் கொண்டு வருகிறீர்கள்.

அடுத்து, முக்கியமான பிரச்சினை என்னவென்று கேட்டால், மாண்புமிகு உறுப்பினர் திரு. உமாநாத் அவர்கள் சொல்லியதைப் போல, எதிர்க் கட்சிகளைச் சேர்ந்தவர்கள் பேசினால் அது கண்ணியக் குறைவானது, ஒழுக்கக் குறைவானது என்று சொல்லி கமிஷனர் தடை விதிக்கலாம். அந்தத் தடையை மீறினால் ஆறு மாதம் ஜெயில், இரண்டாயிரம் ரூபாய் அபராதம்.





அரசியல் கட்சிப் பாடல்களை ரெக்கார்டு செய்து அரசாங்கத்திற்கு எதிரான கருத்துக்களை ரெக்கார்டு செய்து போட்டால் அது கண்ணியக் குறைவானது என்று சொல்லி உள்ளே தள்ளி விடலாம்.

நாடகத்தில் நாங்கள் ஒரு பெயரை வைத்து, பாருங்கள் எம். ஜி. ஆர். சர்க்கார் என்று சொல்லி முதலமைச்சரைப் போல் வேஷம் போட்டு நடித்தால், அதற்கும் ஆறு மாதம் ஜெயில், இரண்டாயிரம் ரூபாய் அபராதம்.

ஆட்சியின் அலங்கோலங்களைப்பற்றிக் கார்ட்டூன்களையோ, சித்திரங்களையோ போட்டால் அதற்கும் ஆறு மாதம் ஜெயில், இரண்டாயிரம் ரூபாய் அபராதம்.

கண்காட்சி நடத்தினால், சர்க்காரின் திட்டங்களில் உள்ள குறைபாடுகளைச் சுட்டிக்காட்டினால் அதற்கும் ஆறு மாதம் ஜெயில், இரண்டாயிரம் ரூபாய் அபராதம்.

அதுமட்டுமல்லாமல், இந்தி ஆதிக்கம் ஒழிக என்று சொல்கிறோம் என்றால், மார்வாடிகள் மனம் வருத்தப்படுகிறார்கள் என்று சொல்லக்கூடும். மதம், இனம், மொழி, வட்டாரம் ஆகியவற்றிற்கு எதிராக வெறுப்புணர்ச்சியைத் தூண்டுகிறது என்று கமிஷனர் சொல்லிவிட்டால், இங்கேயுள்ள மார்வாடிகளின் மனத்தைப் புண்படுத்துகிறது என்று சொல்லிவிட்டால் அதற்கும் ஆறு மாதம் ஜெயில், இரண்டாயிரம் ரூபாய் அபராதம்.

பிற மாநிலங்களைச் சார்ந்தவர்களின் ஆதிக்கம், அதாவது மலையாளிகளின் ஆதிக்கம் இருக்கக் கூடாது; கன்னடியர்களின் ஆதிக்கம் இருக்கக் கூடாது; சன்ஸ் ஆஃப் தி சாயில் என்று சொல்லி, மண்ணின் மைந்தர் என்று சொன்னால் பிற மாநிலத்தவர்களின் மனத்தைப் புண்படுத்துகிறது என்று சொல்லி உள்ளே தள்ளி விடலாம்.

சூத்திரர்கள், தாழ்த்தப்பட்ட மக்கள், பிற்படுத்தப்பட்ட மக்கள் என்று எங்களைச் சொல்லாதீர்கள், நீங்களே உயர்ந்த ஜாதிக்காரர்கள் என்று சொல்லிக்கொண்டு அதிகாரங்களைப் பெறுகிறீர்கள் இது நியாயமா என்று கேட்டால் அதற்கும் ஆறு மாதம் ஜெயில், இரண்டாயிரம் ரூபாய் அபராதம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : உறுப்பினரவர்கள் சட்ட முன் வடிவின் தன்மையைப் பற்றிப் பேச வேண்டும். திரு. உமாநாத் அவர்கள் பேசும்பொழுது பாயின்டோடு பேசினார்கள். இப்பொழுது பேசுகின்ற உறுப்பினரவர்கள் மலையாளி, கன்னடியர்கள் என்று ஆரம்பித்து எப்பொழுது இந்தப் பிரச்சினைக்கு வருவது? இந்தச் சட்டமுன் வடிவை அறிமுகப்படுத்துவதை எதற்காக எதிர்க்கிறோம் என்று மட்டும் சொல்லலாமே தவிர, சொற்பொழிவுபோல் ஆற்ற முடியாது. சட்டமுன்வடிவு ஆய்வுக்கு வரும்பொழுது அதுபற்றிய விவரங்களைப் பேசலாம்.

[1983 அக்டோபர் 29

திரு. அ. ரகுமான்கான் : தலைவர் அவர்களே, நான் இந்த சட்டத்தினுடைய ஷரத்துகளுக்குள்ளே போக விரும்பவில்லை. மொத்தத்திலே இங்கே கொண்டுவரப்பட்டிருக்கக்கூடிய அவசரச் சட்டம் பயங்கரமான ஜனநாயக விரோதச் சட்டம். இந்த அதிகாரத்தை துஷ்பிரயோகம் செய்கின்ற சட்டம் என்பதால் தான் எங்கள் கட்சியினைச் சேர்ந்த திரு. கோபால்சாமி, திரு. ஆறுமுகம் போன்றவர்களை, அதாவது ஆயுதம் ஏதும் இன்றி பயிற்சி செய்த தொண்டர் படையினைச் சேர்ந்தவர்களைக் கைது செய்திருக்கிறீர்கள்.

மேலும், கமிஷனர் கையிலே அதிகப்படியான அதிகாரங்களைக் கொடுப்பது என்பது போலீஸ் ராஜ்யத்தை உருவாக்கத்தான் துணை புரியும். ஏற்கெனவே பத்திரிகைச் சட்டம் கொண்டு வந்து அரசாங்கத்தைப் பற்றி அமைச்சர்களைப் பற்றி எழுதக் கூடாது என்று சொல்லியிருக்கிறீர்கள். தேசியப் பாதுகாப்புச் சட்டத்தின் கீழ் யாரை வேண்டுமானாலும் விசாரணை இல்லாமல் உள்ளே வைக்கலாம் என்ற நிலைமை ஏற்படுத்தப்பட்டு இருக்கின்றது. எனவே எதிர்க்கட்சியினரையும் மற்றவர்களையும் நசுக்குவதற்குரிய கடுமையான சட்டம் இது என்று சொல்லிக்கொள்கிறேன்.

இங்கே நாவலர் அவர்கள் இருக்கிறார்கள். பத்திரிகைச் சட்டம் வெளியே வாபஸ் வாங்கிக்கொள்ளப்படுகின்றது என்று பேப்பரிலே வந்திருக்கிறதே, தவிர அதன் நிலைமை என்ன என்பது கூட சொல்லப்படவில்லை. எனவே, ஜனநாயகத்தைக் குழி தோண்டிப் புதைக்கின்ற பயங்கரமான சட்டம் இது என்று சொல்லி இதனை நான் எதிர்க்கிறேன்.

திரு. ப. நெடுமாறன் : மாண்புமிகு அவைத் தலைவர் அவர்களே, எனக்கு முன்னாலே பேசிய மாண்புமிகு உறுப்பினர்கள் சுட்டிக்காட்டியதைப் போல இது ஒரு ஜனநாயக விரோதச் சட்டம் என்பதிலே சந்தேகம் இல்லை. என்ன நோக்கத்திற்காக, என்ன அவசரத்திற்காக இந்தச் சட்டம் கொண்டு வரப்பட்டிருக்கின்றது என்பது யாருக்கும் புரியவில்லை. அதற்கான சூழ்நிலைகள் ஏதும் இன்றைக்குத் தமிழகத்திலே இல்லை. அப்படி இருந்தும் கூட இவ்வளவு ஒரு மோசமான சட்டத்தை இவர்கள் ஒரு அவசரச் சட்டமாகப் பிறப்பித்து பின்னர் அதைச் சட்டமன்றத்தில் வைப்பது என்பது உண்மையிலேயே ஜனநாயக விரோதப் போக்கு என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். அவர்கள் சொன்னது போல இந்தச் சட்டம் அவசரக் கோலத்திலே தான் தயாரிக்கப்பட்டிருக்கின்றது என்பதற்கு ஒரு உதாரணத்தைச் சுட்டிக் காட்ட விரும்புகிறேன்.

ஊர் காவல் படை, பாரத சாரணர் படை, காவல் படை, தீயணைப்புப் படை, தேசிய மாணவர் படை, இந்திய ராணுவப் படை ஆகிய இவற்றைத் தவிர, வேறு யாரும் ஆயுதம் தாங்கி, பயிற்சியிலே ஈடுபட்டால் அவர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்படும் என்று இந்த சட்டத்திலே சொல்லப்பட்டிருக்கின்றது. நம்முடைய சிறைகளிலே காவலர்கள் இருக்கிறார்கள். அவர்கள்





ஆயுதம் தாங்கி சிறை வாயில்களுக்குள்ளேயும், சிறைக்கு வெளியேயும் பயிற்சி செய்கிறார்கள். அவர்கள் அணி வகுப்பு நடத்துகிறார்கள். இந்தச் சட்டத்தின்படி இன்றைக்கு சிறைக் காவலர்களைக் கூட அரசாங்கம் பிடித்து உள்ளே போட வேண்டிய ஒரு நிலைமை இருக்கின்றது என்றால் இது எல்லா வகையிலும் ஒரு மோசமான சட்டம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

சாலையிலே எழுதினால் கூட, சுவரிலே எழுதினால் கூட அவர்களுக்கு கடுமையான தண்டனை விதிக்கப்படும் என்று இதிலே இருக்கின்றது. படங்கள், சின்னங்கள், அடையாளச் சித்திரங்கள் இவைகளை எல்லாம் யாராவது காட்சிப் பொருளாக வைத்தாலும் அவர்கள் மீதும் இந்தச் சட்டம் பாயும். அப்படியானால் இலங்கையில் கொடுமைகள் நடைபெறுவது குறித்து புகைப்படங்களை பல்வேறு கட்சிகளைச் சேர்ந்தவர்கள் மற்றும் இலங்கைத் தோழர்கள், மக்கள் அந்த உண்மைகளை அறிய வேண்டும் என்பதற்காக காட்சியாக வைத்திருக்கிறார்கள். உலக சமாதான அமைப்புகள் சார்பில் வியட்நாம் கொடுமைகள், கொரியா கொடுமைகள் மற்றும் அமெரிக்கா குண்டு வீசி மக்களைக் கொடுமைப்படுத்துகின்றது என்றெல்லாம் புகைப்படக் காட்சி வைக்கிறார்கள். அதெல்லாம் கூட இந்தச் சட்டத்தின்படி குற்றமாகும். மொத்தத்தில் எதிர்க் கட்சிகள் அல்லது கட்சி சார்பற்றவர்கள்கூட எந்தக் காரியத்தையும் ஜனநாயகரீதியில் செயல்படுத்த முடியாத அளவுக்கு இந்தச் சட்டம் இருக்கின்றது என்ற காரணத்தால் இதற்கு அறிமுக நிலையிலேயே மிகக் கடுமையாக எங்கள் கட்சியின் சார்பிலே எங்களுடைய எதிர்ப்பைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

(முற்பகல் 10·30)

திரு. மு. அம்பிகாபதி : மாண்புமிகு சட்டமன்றப் பேரவைத் தலைவர் அவர்களே, 1888 சென்னை மாநகர காவல் சட்டம் மற்றும் 1889 தமிழ்நாடு மாவட்ட காவல் சட்டம் ஆகியவற்றை மேலும் திருத்துவதற்கான இந்த சட்டமுன்வடிவின் மீது இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் கடுமையாக எதிர்க்கிறோம். காரணம், சாதாரண ஜனநாயக உரிமைகளைக்கூட தடுக்கின்ற முறையில் இந்தச் சட்டம் இங்கே அறிமுகப்படுத்தப்பட்டு இருக்கிறது. சுவரில் எழுதினால் அபராதம், தெருக்களில் எழுதினால் அபராதம் என்கிற முறையில் இந்தச் சட்டம் கூறுகிறது. அதைப்போலவே, உடற்பயிற்சி செய்யக்கூடாது, கம்பு விளையாட்டு கற்றுக்கொள்ளக்கூடாது என்று சொல்லப்பட்டு இருக்கிறது. இப்படிச் சொல்லியிருப்பதன்மூலம் தமிழகத்தின் பாரம்பரியத்திற்கே நீங்கள் சவால் விட்டு இருக்கிறீர்கள் என்பதை நான் இங்கே தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

தொழிற்சங்கங்களைப் பொறுத்தவரையில், ஏ. ஐ. டி. யு. சி., சி. ஐ. டி. யு, தி. மு. க. தொழிற்சங்கம் ஆகியவற்றிற்கு சுவர்களிலும், தெருக்களிலும் எழுதுவதன் மூலமே தங்கள் கருத்துக்

களை வெளியிடமுடியும். அந்த வகையில் நாங்கள் தொடர்ந்து சுவர்களிலும், தெருக்களிலும் எழுதப்போகிறோம். நீங்கள் வேண்டுமானால் எங்களை சிறையின் உள்ளே தள்ளி விட்டு, சட்டசபையை நடத்துங்கள்.

மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் நடித்த படங்களில், குறிப்பாக, தாய்க்குப் பின் தாரம் என்ற படத்தில் சாண்டோ சின்னப்பா தேவரோடு சிலம்பு விளையாட்டு வருகிறது. அந்த பட்த்தை தடை செய்யப்போகிறீர்களா? நாடோடிமன்னன் படத்தில் குத்துச் சண்டை வருகிறது. அதை தடை செய்யப் போகிறீர்களா? மந்திரிகுமாரியில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களே, பயிற்சி வகுப்பு நடத்துகிறார் எஸ், ஏ. நடராஜ னுடன் கத்தி சண்டை செய்கிறார். இப்படி நீங்கள் எடுத்தப் படம் பூராவும் சிலம்பு விளையாட்டு கற்றுத்தரும் படங்கள் தானே! அதையெல்லாம்விட்டு, இப்படிப்பட்ட ஜனநாயக உரிமைகளைப் பறிக்கும் விதத்தில் நீங்கள் சட்டம் கொண்டு வந்து இருப்பதை நாங்கள் கடுமையாக எதிர்க்கிறோம்.

மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இந்தச் சட்டத்தை அறிமுகம் செய்வதைக் கைவிடவேண்டும். தரையில் எழுதக் கூடாது, சுவற்றில் எழுதக்கூடாது, பயிற்சி வகுப்புகள் நடத்தக் கூடாது என்று சொன்னால், அமெரிக்க ஏகாதிபத்தியம் டிகோகார்சியாவில் ராணுவத்தளம் அமைத்து இருப்பதை நாங்கள் கண்டித்து எழுதத்தான்போகிறோம், நீங்கள் வேண்டுமானால் எங்களைச் சிறையில் பிடித்து அடையுங்கள். இலங்கையில் ஜெயவர்த்தனே தமிழ் மக்கள்மீது இழைத்து வரும் கொடுமைகளுக்கு அமெரிக்க ஏகாதிபத்திய சதிகார ரீகன் சதி என்று எழுதுவோம். எங்களைப் பிடித்து உள்ளே தள்ளுங்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மந்திரிகுமாரி சினிமாவில் ஆரம்பித்து, ரீகன் வரை வந்து விட்டீர்கள். இப்படி உலக அரசியலையே இந்த நிலையில் பேசுவது என்று சொன்னால், சட்டமன்றத்தின் நேரம் போதாது. ஆகவே, சுருக்கமாக பேசி முடியுங்கள்.

திரு. மு. அம்பிகாபதி: இது மாதிரி கம்பு விளையாட்டு, தொண்டர் படை பயிற்சி என்பது எங்களுடைய கட்சிக் கூட்டங்களைக் கட்டுப்படுத்தவும். தொழிற்சங்கக் கூட்டங்களை ஒழுங்குப்படுத்தவும், அந்த இடங்களுக்கு வரும் மக்களுக்குப் பாதுகாப்புகொடுக்கவும் செய்யப்படுகின்ற ஒன்றாகும். ஆயுதம் வைத்து இருந்தால் குற்றம் என்று சொல்கிறீர்கள். கம்பு வைத்து இருந்தால் குற்றம் என்று சொன்னால், கம்பு கம்பு வைத்துக் கொண்டு நடக்கமுடியாது. முதியவர்கள் கொண்டு நடப்பவனையெல்லாம் சந்தேகப்பட்டு தடிவைத்து விடுவார்கள். சந்தேகக் கேஸ் யார் மீது கேஸ்போட் தலையில் எண்ணை இல்லையா, வா, சந்தேக கேஸ் போடுகிறார்கள் என்று சொல்கிறார்கள். அவன் தலையில்தான் எண்ணை இல்லையே





என்ன சந்தேகம் தடி வைத்துக்கொண்டு நடப்பதே குற்றம் என்று சொன்னால் நீங்கள் மனித அடிப்படை உரிமைகளை பறிக்கும் அளவுக்கு வந்து இருக்கிறீர்கள் ஆகவே, இந்தச் சட்டத்தை அறிமுக நிலையிலேயே நான் எதிர்க்கிறேன். மாண்புமிகு அமை ்சர் அவர்கள் இதை அறிமுகம் செய்யக் கூடாது என்றுகேட்டு, இந்தச் சட்டத்தைக் கடுமையாக எதிர்க்கிறேன்.

திரு. வி. கி ,ஷ்ணமூர்த்தி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய சகோதரர் ரகுமான்கான் அவர்கள் திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் எடுத்து வைத்த கருத்துக்களோடு, அமைச்சர் அவர்கள் இங்கே அறிமுகம் செய்ய கொண்டு வந்து இருக்கக்கூடிய இந்தச் சட்டம் அரசியல் சட்டத்திலே கூறப்பட்டு இருக்கும் அடிப்படை உரிமை களைப் பறிப்பதற்கு ஒப்பானதாக இருக்கிறது என்பதையும், இந்தச் சட்டத்திலே இருக்கும் பல ஷரத்துக்கள் unconstitutional என்றும் திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் நான் தெரிவித்து, என்னுடைய சில கருத்துக்களைக் கூற விரும்பு கிறேன்.

அரசியல் சட்டத்தின் 19—வது பிரிவு 1-வது உபபிரிவில் All citizens shall have the right

(a) to freedom of speech and expression;

(b) to assemble peaceably and without arms;

(c) to form associations or unions;

என்று அடிப்படை உரிமைகள் அரசியல் சட்டத்திலே கொடுக்கப் பட்டு இருக்கிறது.

மாநில அரசாக இருந்தாலும் சரி மத்திய அரசாக இருந் தாலும் சரி அவர்கள் சில ரீசனபிள் ரெஸ்டிரிக்ஷன்ஸ், சில வரையறைகளை, கட்டுப்பாடுகளை விதிப்பதற்கு அரயசில் சட்டம் 19-வது பிரிவு 2-வது உட்பிரிவில் உரிமை கொடுத்திருக்கிறார்கள். என்றாலும் இங்கே கொண்டு வரப்பட்டிருக்கிற இந்தச் சட்டத்தின் நோக்கம் சந்தேகத்திற்கு உரியதாக இருக்கிறது. 'டிரில்' பண்ணுவதைக்கூட சட்ட விரோதம் என்று சொல்லக்கூடிய அளவுக்கு நிலைமை இருக்கிறது. அரசியல் சட்டத்திற்கு உட்பட்டு, to assemble peaceably andwithcut arms அதாவது கையிலே ஆயுதம் கூட இல்லாமல் ஒரு காக்கிச் சட்டையைப் போட்டுக் ெ ாண்டு திருநெல்வேலியில் திராவிட முன்னேற்றக் கழக பாராளுமன்ற உறுப்பினர் திரு. கோபால்சாமி தலைமையில் நடைபெற்ற டிரில் பயிற்சியை அரசாங்க உத்தரவு மூலம் தடைசெய்து, அவரை கைது செய்திருக்கிறார்கள்.

அதைப்போன்று சேலத்தில் பாராளுமன்ற உறுப்பினர் திரு. அர்ச்சுனன் தலைமையில் நடைபெற்ற பயிற்சியும் தடை செய்யப்பட்டு, கைதுசெய்யப்' ட்டிருக்கிறார். ஆக to assemble

peaceably and without arms என்று அரசியல் சட்டத்தில் கூறக்கூடிய அடிப்படை உரிமையை இந்தச் சட்டத்தின் மூலம் தடுத்திருக்கிறார்கள்; தடுக்க முயற்சி செய்கிறார்கள் என்பதை வலியுறுத்திக்கூற விரும்புகிறேன்.

இந்தச் சட்டத்தை நம்முடைய அமைச்சர் அவர்கள் இங்கே இன்றைக்கு அறிமுகம் செய்வதை நிறுத்திவிட்டு, அட்வகேட் ஜெனரல், லீகல் எக்ஸ்பர்ட்களை கலந்து ஆலோசித்து, பின்னால் நல்லமுறையில் கொண்டுவரலாம். அட்வகேட் ஜெனரல் இந்த அவையில் அமர்ந்து பேச உரிமை பெற்றவர்கள். அவர்கள் இங்கே வந்து, நாங்கள் எழுப்புகின்ற சந்தேகங்களுக்கு விளக்கம் அளித்து, இது அரசியல் சட்டத்திற்கு உட்பட்டுதான் இருக்கிறது அன்ரீசனபிளாக இல்லை என்று ஒருவேளை விளக்கம் அளிப்பதாக இருந்தால் அதற்குப் பிறகு வேண்டுமானால் அமைச்சரவர்கள் இந்த சட்ட முன்வடிவை அறிமுகம் செய்வது பற்றி யோசிக்கலாம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

ஏற்கெனவே அருமை சகோதரர் ரகுமான்கான் அவர்களும் மற்றவர்களும் சொன்னதைப்போல அரசியலில் பழிவாங்கும் எண்ணம் ஏற்படக்கூடாது. பழிவாங்கக்கூடிய அளவுக்கு இந்த சட்டம் அமையக்கூடாது. மக்களுடைய சுதந்திரத்தைப் பறிக்கக்கூடிய நிலையிலே இந்தச் சட்டம் இருக்கிறது. ஆகையால் இன்றையதினம் இந்த சட்டத்தை இங்கே அறிமுகம் செய்யதாங்கள் அனுமதிக்கக்கூடாது. அட்வகேட் ஜெனரலை அழைத்து, அவர்களுடைய கருத்தை இந்த மன்றத்திலே இருக்கின்ற உறுப்பினர்கள் தெரிந்த பிறகு அட்வகேட் ஜெனரலை விட நான் அறிவு, திறன் ஆற்றல் பெற்றிருக்கிறேன் என்று லா மினிஸ்டர் நினைத்தாலும் எங்களுக்கு இருக்கிற சில ஐயப்பாடுகளை நீக்கிய பின்னால் இந்தச் சட்ட முன்வடிவை அறிமுகம் செய்ய தாங்கள் அனுமதிக்க வேண்டும். ஆகவே, இந்த சட்ட முன்வடிவை அறிமுகம் செய்வதை நாங்கள் கடுமையாக எதிர்க்கிறோம் என்று கூறி அமர்கிறேன்.

திரு. என். எஸ். வி. சித்தன்: மாண்புமிக்க தலைவரவர்களே, அமைச்சரவர்களாலே கொண்டுவரப்பட்டிருக்கிற 1983 ஆம் ஆண்டு சென்னை மாநகரக் காவல் தமிழ்நாடு மாவட்டக் காவல் (இரண்டாம் திருத்த) சட்டமுன்வடிவை இந்திய தேசிய காங்கிரஸ் கட்சியின் சார்பிலே வன்மையாக எதிர்க்கிறோம்.

இந்த மாமன்றத்திலே எதிர் வரிசையிலே இருக்கிற கிட்டத்தட்ட எல்லா எதிர்க்கட்சியினரும் இந்த சட்ட முன்வடிவை எதிர்க்கிறார்கள். இன்றைக்கு அரசு இப்படிப்பட்ட ஒரு மசோதாவை மிக அவசரமாக ஏன் கொண்டு வருகிறது என்பதுபற்றி நாங்கள் சிந்திக்கிறோம். ஜனநாயக குரல் வளையை நெரிக்க வேண்டுமென்று, ஜனநாயக உரிமையை நசுக்க வேண்டுமென்று இப்படிப்பட்ட ஒரு மசோதாவைக் கொண்டுவருவதற்கு முன்னாலே இங்கே அமர்ந்திருக்கிற





அனைத்துக் கட்சித் தலைவர்களையும் அழைத்துப் பேசி, அவர்களோடு விவாதம் செய்த பின்னால் கொண்டுவருவதாக இருந்தால் ஓரளவுக்கு பயனுடையதாக இருக்கும்.

எனக்கு முன்னாலே பேசிய எதிர்க்கட்சி உறுப்பினர்கள் சொன்னதைப்போல் சாதாரணமான ஒரு கூட்டம் கூட இதனால் கூட்டமுடியாமல் போய்விடும். இன்னும் சொல்லப்போனால் காங்கிரஸ் கட்சி சேவா தள அமைப்பு என்ற ஒரு அமைப்பை வைத்திருக்கிறது. அந்த அமைப்பில் கட்சிக் கட்டுப்பாடு, ஒழுங்கு பற்றி தொண்டர்களுக்கு பயிற்சி அளிக்கப்படுகிறது. நீண்டகாலமாக இந்த அமைப்பை வைத்துக்கொண்டிருக்கிறோம். அதுகூட இந்தச் சட்டத்தால் சட்டவிரோதம் என்று கூறப்பட்டு, தடைசெய்யப்பட்டுவிடும் என்று நாங்கள் கருதக்கூடிய அளவுக்கு நிலைமை ஏற்பட்டிருக்கிறது. இன்னும் சொல்லப் போனால் சாதாரண அரசியல் கட்சிகளுக்கு இருக்கிற சாதாரண உரிமைகள் கூட இதனால் பறிக்கப்பட்டுவிடக்கூடிய நிலைமை இருக்கிறது. சுவரிலே எழுதக்கூடாது, விளம்பரம் செய்யக் கூடாது, கார்டூன் போடக்கூடாது என்பது நிச்சயமாக ஒரு ஜனநாயக அரசு கொண்டுவரக்கூடிய சட்டமாக இருக்க முடியாது என்று கூறி அரசாங்கம் இதை இந்த நிலையில் திருப்பப் பெற்று, பின்னால் எதிர்க்கட்சித் தலைவர்களை அழைத்துப் பேசிய பிறகு கொண்டுவரலாம் என்ற யோசனையைக்கூறி, இந்திய தேசிய காங்கிரஸ் கட்சியின் சார்பிலே இதை எதிர்க்கிறோம்.

(முற்பகல் 10-40)

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த சட்டமுன்வடிவைப் பொருத்த வரைக்கும் எதிர்க்கட்சிகளை நசுக்குகிற எண்ண நோக்கோடோ அல்லது சட்டரீதியாக மக்களுக்குள்ள உரிமைகளைப் பறிக்கக் கூடிய எண்ண நோக்கோடோ கொண்டு வரப்படுவதல்ல என்பதை முதற்கண் தெளிவுபடுத்த விரும்புகிறேன். மாண்புமிகு மரியாதைக்குரிய உறுப்பினர் உமாநாத் அவர்கள் பேசுகிற போது கூட அதைப் பற்றிச் சற்றுக் கடுமையாகச் சொன்னார்கள். எதிர்க்கட்சிகளை அழிக்கக் கூடிய ஒரு கருப்புச் சட்டம்-அன் டிக்ளேர்டு எமர்ஜென்சி ஜனநாயகத்தின் மீது விதிக்கப்பட்ட மரணத்தண்டனைச் சட்டம் என்று சொன்னார்கள். அத்தகைய எந்த ஒரு நோக்கோடு இந்தச் சட்டம் கொண்டுவரப்படவில்லை.

உதாரணமாக கேரள மாநிலத்தில் கம்யூனிஸ்ட் இயக்கம் ஆட்சி பீடத்தில் இருந்தபொழுது, இதே போன்ற சட்டம் 17-10-1979ல் ஜி. ஓ. எண். 17188 எஸ். எஸ். எ./78 ஹோம் என்ற ஆணைப்படி உத்தரவு இட்டு, கேரள மாநிலத்தினுடைய போலீஸ் ஆக்ட், 1960, அதன் பிரிவு 21ஏ 6-11-79 அன்று மாற்றப்பட்டு, பொதுமக்கள் மத்தியிலே அமைதியை குலைக்கின்ற விதத்திலே, பொது அமைதியை, போது பார்து

காப்பை, பொது ஒழுங்கை நிலை நாட்டி, நடைமுறைப்படுத்த ஆயுதங்கள் ஏந்தி பயிற்சிகளை பெறுவது பொது அமைதியை பொது பாதுகாப்பை பொது ஒழுங்கை பாதிப்பதாக இருக்கிறது என்ற நோக்கோடு, கேரள மாநிலத்தில் இந்தச்சட்டம் கொண்டு வரப்பட்டு இன்று வரையில் நடைமுறையில் இருந்து வருகிறது. அதைப்போல உத்திரப்பிரதேசம் மாநிலத்தில் அதே நோக்கோடு இந்தச் சட்டம் கொண்டுவரப்பட்டு, பொது அமைதி, பொது பாதுகாப்பு, பொது ஒழுங்கு ஆகியவற்றை நிலைநாட்டி, ஆயுதப் பயிற்சி வன்முறையில் இறங்கிவிடக்கூடாது என்ற நன்நோக்கோடு பொதுமக்களை பாதுகாக்க வேண்டும் என்ற நோக்கோடு ஒரு குறிப்பிட்ட கும்பல் 10 பேர், 100 பேர்கள் ஆயுத பயிற்சி பெற்று வன்முறையில் ஈடுபட்டு மக்களை பாதிப்புக்கு ஆளாக்கி விடாக் கூடாது என்கிற நோக்கோடு இந்த இரண்டு மாநிலங்களிலும் இந்தச் சட்டத்தை கொண்டு வந்திருக்கிறார்கள்.

அந்த அடிப்படையில்தான் இந்தச் சட்டம் தமிழகத்திலே தற்போது கொண்டுவரப்பட்டுள்ளது. மாண்புமிகு உறுப்பினர் ரகுமான்கான் அவர்கள் பேசும்போது ஆளும் கட்சிக்கு இது பொருந்தாது. எதிர் கட்சிகளுக்கு மட்டுமே இது பொருந்தும், என்ற வகையில் நடைமுறைக்கு வரும் என்று சொன்னார். கண்டிப்பாக அப்படி வராது. உத்திரவாதம் தருகிறோம். ஆயுதங்கள் ஏந்தி வன்முறையில் ஈடுபட்டு மக்களுக்கு பாதிப்பை ஆபத்தை, ஏற்படுத்தக் கூடிய அளவுக்கு யார் ஈடுபட்டாலும், அவர்களுக்கு பாதகமாகத்தான் இந்தச் சட்டம் இருக்கிறது என்பதை சொல்ல விரும்புகிறேன்.

அதைப்போலவே, திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய துணைத் தலைவர், மாண்புமிகு உறுப்பினர் வழக்குரைஞர் கிருஷ்ணமூர்த்தி அவர்கள் பேசும்போது, அரசியல் சட்டத்தின் 19(1) பிரிவைச் சுட்டிக்காட்டி அதற்கு மாறாக இது இருப்ப தாகவும் அது சட்ட ரீதியாக செல்லாது என்ற கருத்துப்பட சொன்னார்கள். அது தவறு. இதற்கு அட்வகேட் ஜெனரல் ஆலோசனையையும் பெற்றுக்கொள்ளலாம். அவரே நல்ல வழக்கறிஞர். வழக்கறிஞருடைய ஆலோசனையையும் பெற்று இருப்பார் என்று நான் கருதுகிறேன். 19(1)ஐ பொருத்த வரையில் to assembles peaceably and without arms மிகத் தெளிவாக போடப்பட்டிருக்கிறது. அதை மாண்புமிகு உறுப்பினர் படித்து இருப்பார் என நான் கருதுகிறேன். with arms, with a view to create disturbance to the peace என்ற முறையில் ஆயுதப் பயிற்சி என்று இருக்கிறது. கண்டிப்பாக 19(1)லே மக்களுக்கு கொடுக்க பட்டிருக்கின்ற அடிப்படை உரிமைகளைப் பாதுகாப்பதற்காக அது அமையுமே தவிர, பறிப்பதற்காக அமையாது என்று கூறி, மீதி விளக்கத்தை ஆய்வு செய்கின்றநேரத்திலே சொல்லு கிறேன் என்று சொல்லி இந்த சட்டமுன்வடிவை அறிமுகம் செய்ய அனுமதி கோருகிறேன்.





திரு. என். சங்கரய்யா: தலைவர் அவர்களே, இங்கே பல கட்சிகள் பல காரணங்களை எடுத்துக் கூறியும், அரசாங்கம் இந்த சட்ட முன்வடிவை அறிமுகப்படுத்துகின்ற நிலை ஏற்பட்டு இருக்கிறது. கன்னியாகுமரி மாவட்டத்தில் வகுப்புக் கலவரம் நடந்தபோது நாங்கள் சொன்னோம். ஆர். எஸ். எஸ். போன்ற இயக்கத்தினுடைய ஆயுதப் பயிற்சியைத் தடை செய்ய வேண்டும் என்று சொன்னபோது முதல் அமைச்சர் அவர்கள் அதற்கான சட்டம் கொண்டுவரப்படும் என்று சொன்னார்கள். ஆனால் இப்போது கொண்டு வந்திருகின்றசட்டம், ஆர். எஸ். எஸ். இயக்கத்தினுடைய ஆயுதப் பயிற்சியை தடை செய்வதற்காக அல்ல. ஜனநாயக முறையிலே இயங்கும் எதிர்க்கட்சிகளை தொழிற்சங்கங்களை தடை செய்யும் அளவிற்கு இருக்கிறது. எனவே அரசாங்கம் இதை வாபஸ் பெற்றுவிட்டு, பின்னால் இது சம்பந்தமாக அனைத்துக் கட்சிகளும் சேர்ந்து யோசிக்கலாம். அதற்கென குறிப்பிட்ட சட்டத்தைக் கொண்டு வரலாம் என்று நான் கூற விரும்புகிறேன்,

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: தலைவர் அவர்களே, ஆர். எஸ். எஸ். மட்டும் தடை செய்ய தனியாக ஒரு சட்டம் கொண்டுவரப்படுமானால் that would be constitutionaly discriminatory. ஆனால் இது எல்லோருக்கும் பொருந்தக் கூடிய ஒன்று.

திரு. என். சங்கரய்யா: ஆர், எஸ். எஸ். இயக்கத்தை தடை செய்ய வேண்டும் என்று சொல்லவில்லை. அந்த அதிகாரம் இந்தச் சட்டமன்றத்திற்குக் கிடையாது. அது மத்திய அரசாங்கம் சம்பந்தப்பட்ட விஷயம். ஆனால் அந்த இயக்கம் நடத்துகின்ற ஆயுதப் பயிற்சியை, பள்ளிகளிலே, கல்லூரிகளிலே நடத்துகின்ற பயிற்சியை தடை செய்யவேண்டும் என்ற நோக்கத்திற்காக கொண்டுவரப்பட வேண்டும். அதைப் பற்றி கலந்து ஆலோசிக்க வேண்டியிருப்பதால் இந்தச் சட்டத்தை வாபஸ் பெறவேண்டும் என்று கூறி, இப்போது கொண்டுவருகின்ற இந்தச் சட்டத்தை அறிமுகப்படுத்துவதற்கு எதிர்ப்பைத் தெரிவிக்கின்ற முறையில் எங்களது மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி சட்டப்பேரவையை விட்டு வெளிநடப்பு செய்கிறது.

(மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி உறுப்பினர்கள் வெளிநடப்புச் செய்தனர்).

திரு. அன்பில் தர்மலிங்கம்: எவ்வளவு எடுத்துச்சொல்லியும் ஜனநாயக விரோதமான இந்தச் சட்டத்தை அறிமுகப்படுத்தித் தான் தீருவோம் என்று அரசு சொல்கிறபோது, இதை ஆரம்பத்திலேயே எதிர்த்து திராவிட முன்னேற்றக் கழகம் வெளிநடப்பு செய்கிறது.

(திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் வெளிநடப்புச் செய்தனர்).

திரு. இரா. கருப்பையா : தலைவர் அவர்களே, இந்தச் சட்டத்தினுடைய கொடுமைகளை இந்தச் சட்டமன்றத்திலே இருக்கின்ற இந்திய கம்யூனிஸ்ட் கட்சியும் மற்ற இதர கட்சிகளும் எடுத்து விளக்கிக்கூறியும், அரசுத் தரப்பிலே அமைச்சர் அவர்கள் இதை எப்படியும் அறிமுகப்படுத்தியே தீரவேண்டும் என்ற முறையிலே, ஜனநாயக உரிமைகளைப் பறிக்கக்கூடிய இந்தச் சட்டத்தை நிறைவேற்ற வேண்டும் என்ற போக்கை எதிர்க்கக் கூடிய முறையிலே இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பிலே வெளிநடப்பு செய்கிறோம்.

(இந்திய கம்யூனிஸ்ட் கட்சி உறுப்பினர்கள் வெளிநடப்புச் செய்தனர்).

திரு. பழ. நெடுமாறன்; மாண்புமிகு அவைத் தலைவர் அவர்களே, ஜாதி மத வெறியைத் தூண்டக்கூடிய அமைப்புகள் நடத்துகிற பயிற்சிக்கு இந்தச் சட்டத்தை உட்படுத்தும் வகையிலும் இது பற்றிய ஒரு மறு பரிசீலனை செய்து, இதை ஒரு செலக்ட் கமிட்டிக்கு அனுப்புவதற்கு இந்த நிமிடத்திலே கூட அமைச்சர் அவர்கள் யோசிப்பார்களானால், எல்லாக் கட்சிகளும் இதற்கு ஒத்துழைப்புத்தர தயாராக இருக்கிறது. ஆனால் அரசாங்கம் அதற்குத் தயாராக இல்லாத இந்த நிலையில் நாங்கள் வெளிநடப்புச் செய்கிறோம்.

(காமராஜ் காங்கிரஸ் கட்சி உறுப்பினர்கள் வெளிநடப்புச் செய்தனர்).

திரு. எஸ். ஆண்டித்தேவர்; மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தத் தடைச் சட்டத்தைப் பற்றி எதிர்க் கட்சிகள் எவ்வளவு சொல்லியும் கேட்காமல், வகுப்பு வாதங்களைத் தடை செய்கின்ற அளவுக்கு எதிர்க்கட்சிகளோடு கலந்து பேசி முடிவு செய்ய இதை ஒரு செலக்ட் கமிட்டிக்கு அனுப்பவேண்டும் என்று எடுத்துக்கூறியும், இதை அறிமுகப்படுத்தவேண்டும் என்று இருக்கிற இந்த நிலைக்கு எதிர்ப்பு தெரிவித்து நாங்கள் வெளிநடப்புச் செய்கிறோம்.

(பார்வார்ட் பிளாக் கட்சி உறுப்பினர் வெளிநடப்புச் செய்தார்).

திரு. என். எஸ். வி. சித்தன்; மாண்புமிக்க பேரவைத் தலைவர் அவர்களே, இந்தச் சட்டத்தை அறிமுகப்படுத்துகின்ற நிலையிலே எதிர்க்கட்சி வரிசையிலே உள்ள பெரும்பாலானவர்கள் வெளிநடப்பு செய்கின்ற காரணத்தாலும், இதற்கு முன்பாக சொல்லியபடி ஜனநாயகத்தின் குரல்வளையை இது நெறிக்கின்ற காரணத்தாலும் அரசாங்கம் இந்த நிலையிலே திரும்பப் பெற்று, பின்னால் கொண்டுவரலாம் என்று நாங்கள் கருதுகிறோம்.

திரு. பொ. விஜயராகவன்; தலைவர் அவர்களே, இந்த அவசரச் சட்டம், ஒரு ஆள் தூக்கிச் சட்டம் என்று கூறி இந்தச் சட்டத்தை எதிர்த்து ஜனதாக் கட்சி வெளிநடப்பு செய்கிறது.



(ஜனதா கட்சி உறுப்பினர்கள் வெளிநடப்பு செய்தனர்).

திரு. க. ராமமலை; மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தச் சட்டத்தை அறிமுகப்படுத்துவதைப் பொறுத்தவரையில் எந்த நோக்கத்திற்காக கொண்டுவரப்பட் கிறது என்பதிலே எனக்கு உடன்பாடு உண்டு. குறிப்பாக ஆயுதப் பயிற்சி செய்வதைத் தடை செய்யவேண்டும் என்ற வகையிலே இது கொண்டுவரப்பட்டிருக்கிறது. ஆனால் மற்ற பிரச்சினைகளைப் பொறுத்தவரையில் விளம்பரம் செய்வது, அல்லது சுவரொட்டிகள் போன்ற பிரச்சினைகளிலே எதிர்க் கட்சிகள் ஒரு நியாயமான ஐயம் கொண்டிருப்பதன் காரணமாக (குறுக்கீடு) நான் அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்வ தெல்லாம் எல்லாக் கட்சியினரும் கலந்து பேசி இதை ஒரு செலக்ட் கமிட்டிக்கு அனுப்ப வேண்டும் என்று கேட்டுக்கொண்டு, அமைகிறேன். வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவை முன்னுள்ள கேள்வி: " 1983-ஆம் ஆண்டு சென்னை மாநகரக் காவல் தமிழ்நாடு மாவட்டக் காவல் (இரண்டாம் திருத்த) சட்ட முன்வடிவை பேரவை முன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்க வேண்டும்".

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறை வேற்றப்பெற்று, அனுமதி வழங்கப்பெற்றது.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்; இச்சட்ட முன்வடிவை பேரவை முன் அறிமுகம் செய்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இச்சட்ட முன்வடிவு அறிமுகம் செய்யப்பெற்றிருக்கிறது.

(முற்பகல் 10-50)

## 6. அறிவிப்புகள்

### (அ) பொது விற்பனை வரி (இரண்டாவது திருத்த) சட்ட முன்வடிவு, 1983 (ஆ.இ.)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவைக்கு ஓர் அறிவிப்பு "தமிழ்நாடு 1983 ஆம் ஆண்டு பொது விற்பனை வரி (இரண்டாவது திருத்த) சட்டமுன்வடிவை பேரவையில் அறிமுகம் செய்ய ஆளுநர் தமது இசைவைத் தெரிவித்துள்ளார்.

## 5. அரசினர் சட்ட முன்வடிவுகள் (தொடர்ச்சி)

### (ஆ) பொது விற்பனை வரி (இரண்டாவது திருத்த) சட்ட முன்வடிவு, 1983.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : தலைவரவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்:

''தமிழ்நாடு 1983 ஆம் ஆண்டு பொது விற்பனை வரி (இரண்டாவது திருத்த) சட்ட முன்வடிவை பேரவை முன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்கவேண்டும்.''

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப் பெற்று, அனுமதி வழங்கப்பெற்றது.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: தலைவர் அவர்களே, இச்சட்ட முன்வடிவை பேரவை முன் அறிமுகம் செய்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இ சட்ட முன்வடிவு அறிமுகம் செய்யப்பெற்றிருக்கிறது.

6. அறிவிப்புகள் (தொடர்ச்சி.)

(ஆ) கேளிக்கை வரி (நான்காவது திருத்த) சட்ட முன்வடிவு 1983. (ஆ. இ.)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவைக்கு ஓர் அறிவிப்பு. தமிழ்நாடு 1983 ஆம் ஆண்டு கேளிக்கை வரி (நான்காவது திருத்த) சட்ட முன்வடிவை பேரவையில் அறிமுகம் செய்ய ஆளுநர் தமது இசைவைத் தெரிவித்துள்ளார்.

5. அரசினர் சட்ட முன்வடிவுகள் (தொடர்ச்சி.)

( ) கேளிக்கை வரி (நான்காவது திருத்த) சட்ட முன்வடிவு, 1983.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்:

''தமிழ்நாடு 1983–ஆம் ஆண்டு கேளிக்கை வரி (நான்காவது திருத்த) சட்ட முன்வடிவை பேரவை முன் அறிமுகம் செய்ய அனுமதி அனுமதி அளிக்க வேண்டும்.''

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, அனுமதி வழங்கப்பெற்றது.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: தலைவரவர்களே, இச்சட்ட முன்வடிவை பேரவை முன் அறிமுகம் செய்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இச்சட்ட முன்வடிவு அறிமுகம் செய்யப்பெற்றிருக்கிறது.

(ஈ) கடன் நிவாரண (இரண்டாவது திருத்த) சட்ட முன்வடிவு, 1983.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்:





''தமிழ்நாடு 1983 ஆம் ஆண்டு கடன் நிவாரண (இரண்டாவது திருத்த) சட்ட முன்வடிவை பேரவை முன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்கவேண்டும்.''

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, அனுமதி வழங்கப்பெறறது.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: இச்சட்ட முன்வடிவை பேரவை முன் அறிமுகம் செய்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இச்சட்ட முன்வடிவு அறிமுகம் செய்யப்பெற்றிருக்கிறது.

7. அரசினர் தனித் தீர்மானம்.

இலங்கைவாழ் தமிழர் பிரச்னை குறித்து. (தொடர்ச்சி).

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இலங்கைவாழ் தமிழர் பிரச்சினையைப் பற்றிய அரசினர் தனித் தீர்மானத்தின் மீது மேலும் விவாதம். திருத்தங்கள் கொடுத்துள்ள உறுப்பினர்கள் அவற்றை முன் மொழிய வேண்டும். முன் மொழியப் பெற்ற திருத்தங்கள் வழி மொழியப் பெறவேண்டும்.

திரு. என். எஸ். வி. சித்தன்: தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட திருத்தங்களை மொழிகிறேன்:

'' ஈ பகுதியில் : கடைசி வரியில் நடவடிக்கையெல்லாம் எடுக்க முன்வந்த என்பதற்கு பதிலாக எடுத்துவரும் என்ற திருத்தத்தை சேர்த்துக் கொள்ளவும்.

ஒ பகுதியில் : 2வது வரியில் குடியுரிமை என்ற வார்த்தைக்கு அடுத்து மொழியுரிமை என்று சேர்த்துக் கொள்ளவும்.

ஓ பகுதியில் : கீழ்க்கண்ட தொடர் வாக்கியத்தை முதலாவதாக சேர்த்துக கொள்ள வேண்டும்.

''நிராதரவாக தமிழகம் திரும்பியுள்ள இலங்கை வாழ் தமிழர்கள் மீண்டும் இலங்கைக்கு சென்று குடியேறுவதற்கும், மீண்டும் தங்களுடைய இழந்த சொத்துக்களையும், வீடுகளையும் திரும்பிபெறுவதற்கும்''

திருத்தங்கள் முறையே வழி மொழியப்பெற்றன.

திரு. மு. அம்பிகாபதி: தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட திருத்தங்களை மொழிகிறேன்:

[திரு. மு. அம்பிகாபதி] [1983 அக்டோபர் 26

பாரா 'ஊ' விற்கும் 'எ' விற்கும் இடையே கீழ்க்காணும் பகுதியை தனிப் பாராவாக சேர்த்துக் கொள்ள வேண்டும். ''பத்து லட்சத்திற்கும் அதிகமான தமிழ் மலைத் தோட்டத் தொழிலாளர்கள் கடந்த முன்னூறு ஆண்டுகளுக்கும் மேலாக இலங்கையில் தேயிலைத் தோட்டங்களை உருவாக்கி, செல்வத்தை வளர்த்து, உலகப் புகழ்பெற உதவி செய்தவர்கள். 1948-ம் ஆண்டுக்குப் பிறகு அவர்களுடைய குடியுரிமை பறிக்கப்பட்டு நாடற்றவர்களாக, அவல நிலையில் உள்ளனர். அவர்கள் பிரச்சினை சம்பந்தமான இந்திய அரசுக்கும் இலங்கை அரசுக்கும் ஏற்பட்ட உடன்படிக்கை காலாவதியானதால், அவர்களுடைய வருங்காலம் எந்தவிதமான பாதுகாப்புமின்றி ஒரு இக்கட்டான நிலை ஏற்பட்டிருக்கிறது. இவ்விஷயத்தில் இந்திய அரசு தலையிட்டு அவர்களுக்கு இலங்கை மலையகத்திலேயே, குடியுரிமை, வாழும் உரிமை பெறுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று, இந்திய அரசை இந்த அவை வற்புறுத்துகிறது.''

பாரா 'ஏ' ல் உள்ள 'இலங்கை வாழ் தமிழருக்கு வாழ்வளிக்க வேண்டிய வல்லரசான அமெரிக்கா வாழ்வளிக்க முன்வராமல் தமிழினத்தின் அழிவுக்கு காரணமாக அமையும்' என்ற வாசகங்களை நீக்க வேண்டும்.

''இலங்கை தமிழர் படுகொலை சம்பந்தமான தீர்மானத்தில் (ஏ) பகுதியில் – தமிழர் இனத்தையே அழிக்கும் பணியில் என்று உள்ளது. பணியில் என்பதற்கு பதிலாக கொடுஞ்செயலில் என்று மாற்றக்கோரி இந்தத் திருத்தத்தைத் தருகிறேன்.''

திருத்தங்கள் முறையே வழிமொழியப்பெற்றன.

திரு. என். சங்கரய்யா : தலைவர் அவர்களே, நான் கீழ்க் கண்ட திருத்தங்களை மொழிகிறேன்:

பாரா (உ)வில் முடிவடைகிற இடத்தில் கீழ்க்காணும் வாசகத்தை சேர்க்க வேண்டும்.

''அத்துடன் உலக மக்களின் ஆதரவையும், இந்திய மக்கள் அனைவரின் பேராதரவையும் இலங்கையிலுள்ள ஜனநாயக சக்தி களின் ஆதரவையும் திரட்டுவதற்கு இந்திய அரசு முன் முயற்சி எடுத்திட வேண்டுமென இப்பேரவை கோருகிறது.''

பாரா (ஊ)வில் 9–வது வரியில்

''இந்திய அரசு, இலங்கையில் ஏற்பட்டிருக்கும் பிரச்சினையை தீர்த்து வைக்கும் பொறுப்பை ஏற்றுக்கொண்டு'' என்றிருக்கும் வரிகளை நீக்கி அதற்குப் பதிலாக பின்வரும் வரியை சேர்த்துக் கொள்ள வேண்டும்.

''இலங்கையில் ஏற்பட்டிருக்கும் தமிழர்களின் பிரச்னை களுக்கு தீர்வு காணும் பொறுப்பை கொண்டுள்ள இந்திய அரசு''.



1983 அக்டோபர் 26] [திரு. என். சங்கரய்யா]

பாரா (எ)

பாரா முழுவதையும் நீக்கிவிட வேண்டும்.

பாரா (ஏ)வில் 9-வது வரியில்:

''இப்பேரவை அதிர்ச்சியும், கவலையும் அடைந்திருப்பதோடு இலங்கை வாழ் தமிழர்களுக்கு வாழ்வளிக்க வேண்டிய வல்லர சான அமெரிக்கா, வாழ்வளிக்க முன்வராமல், தமிழினத்தின் அழிவுக்கு காரணமாக அமையும் ஆயுதங்களை வழங்க முன்வந் திருக்கும் போக்கை வன்மையாக கண்டிப்பதோடு, ஆயுதச் வழங்குவது—கடற்படைத்தளம் அமைப்பது போன்ற அநியாயம்

செயல்களை அமெரிக்கா அறவே கைவிட வேண்டுமென்றும் வலியுறுத்துகிறது. என்று வரும் வாசகங்கள் அனைத்தையும் நீக்கிவிட்டு, அவற்றிற்குப் பதிலாக கீழ்காணும் வரிகளை சேர்த்துக்கொள்ள வேண்டும்.

''இப்பேரவை அதிர்ச்சியும், கவலையும் அடைகிறது. அமெரிக்கா இலங்கை அரசுக்கு ஆயுதங்களை வழங்க முன்வந் திருக்கும் போக்கை வன்மையாக கண்டிக்கிறது. ஆயுதங்கள் வழங்குவது, கடற்படைத்தளம் அமைப்பது போன்ற அமெரிக் காவின் செயல்கள் இலங்கைத் தமிழர்கள் உள்ளிட்ட இலங்கை நாட்டின் சுதந்திரத்திற்கும் இந்தியாவின் சுதந்திரத்திற்கும் ஆபத்தை உண்டாக்குகிறதென்று இப்பேரவை கருதுகிறது. இத்தகைய அநியாயச் செயல்களை அமெரிக்கா அறவே கைவிட வேண்டுமென்று வலியுறுத்துகிறது.''

பாரா (ஐ)–யில் 5வது வரியில்:

''ஐக்கிய நாடுகள் அவையின் மூலமோ, அல்லது'' என்று வரும் வாசகங்களை நீக்கிவிட வேண்டும்.

பாரா (ஒ)வில் 5வது வரியில்:

இலங்கைவாழ் தமிழர்கள் அனைவரும் மன அமைதியும் நம்பிக்கையும் கொள்ளத்தக்க முறையிலும் என்று இருக்கும் வரிகளுக்கு பதிலாக கீழ்காணும் வரிகளை சேர்த்துக்கொள்ள வேண்டும்:

''இலங்கைவாழ் தமிழர்கள் அனைவரும் மன அமைதியும் நம்பிக்கையும் கொள்ளத்தக்க முறையிலும், அத்துடன் இலங்கை வாழ் தமிழ் மக்களுக்கும் சிங்கள மக்களுக்கும் இடையில் பரஸ்பர நட்பும், நம்பிக்கையும் ஏற்படும் வகையிலும்.''

பாரா (க)

''பாரா முழுவதையும் நீக்கிவிட்டு அதற்கு பதிலாக பின்வரும் பாராவை சேர்த்துக்கொள்ளவும்.''

"ஐ.நாவின் பொதுசபைக்கு இந்திய அரசின் குழுவில் ஒருவராகச் சென்ற தமிழக அரசின் மின்துறை அமைச்சர் ஐ.நா.வின் விசேஷ அரசியல் குழுவில் இப்பிரச்னை பற்றி பேசியிருக்கிறார்."

"பயங்கரவாத செயல்களை ஒடுக்கும் பெயரால் இலங்கையில் சிறுபான்மை தமிழ்மக்கள் வன்முறைக்கு இலக்காகக்கூடாதென்றும் இந்தியா இந்தக் கமிட்டியில் அந்தப் பிரச்னையை எழுப்புவதற்கும் இதுவே முக்கிய காரணமென்றும், இலங்கை தமிழர் பிரச்னையை சர்வதேச பிரச்னையாக்க இந்தியா முயற்சிப்பதாக கூறப்பட்ட புகாரை மறுத்தும், பேச்சு வார்த்தைகள் மற்றும் இந்தியப் பிரதமரின் விசேஷத் தூதர் ஜி. பார்த்தசாரதியின் சமரச முயற்சிகள் மூலம் இப்பிரச்னைக்கு அமைதியான முறையில் தீர்வு ஒன்று காணவே இந்தியா உண்மையில் விரும்புகிறது என்றும் மாண்புமிகு மின்துறை அமைச்சரவர்கள் மிகத் தெளிவுபட சரியான கருத்துக்களை முன்வைத்து பேசியதை இப்பேரவை பாராட்டுகிறது."

திருத்தங்கள் முறையே வழிமொழியப்பெற்றன.

திரு. இரா. கருப்பையா: தலைவர் அவர்களே, நான் கீழ்க் கண்ட திருத்தங்களை மொழிகிறேன்:

பாரா 'ஐ' விற்கும் 'எ' விற்கும் இடையே கீழ்க்காணும் பகுதியை தனிப் பாராவாக சேர்த்துக் கொள்ளவேண்டும்:

"பத்துலட்சத்திற்கும் அதிகமான தமிழ் மலைத் தோட்டத் தொழிலாளர்கள் கடந்த முன்னூறு ஆண்டுகளுக்கும் மேலாக இலங்கையில் தேயிலைத் தோட்டங்களை உருவாக்கி, செல்வத்தை வளர்த்து, உலகப் புகழ்பெற உதவி செய்தவர்கள். 1948 ஆம் ஆண்டுக்குப் பிறகு அவர்களுடைய குடியுரிமை பறிக்கப்பட்டு நாடற்றவர்களாக, அவல நிலையில் உள்ளனர். அவர்கள் பிரச்சினை சம்பந்தமான இந்திய அரசுக்கும் இலங்கை அரசுக்கும் ஏற்பட்ட உடன்படிக்கை காலாவதியானதால், அவர்களுடைய வருங்காலம் எந்தவிதமான பாதுகாப்புமின்றி ஒரு இக்கட்டான நிலை ஏற்பட்டிருக்கிறது. இவ்விஷயத்தில் இந்திய அரசு தலையிட்டு அவர்களுக்கு இலங்கை மலையகத்திலேயே, குடியுரிமை வாழும் உரிமை பெறுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று, இந்திய அரசை இந்த அவை வற்புறுத்துகிறது".

பாரா 'ஏ'வில் உள்ள 'இலங்கை வாழ் தமிழருக்கு வாழ்வளிக்க வேண்டிய வல்லரசான அமெரிக்கா, வாழ்வளிக்க முன் வராமல் தமிழினத்தின் அழிவுக்கு காரணமாக அமையும்' என்ற வாசகங்களை நீக்க வேண்டும்.

பாரா (2) : கீழ்க்காணும் வாசகத்தை சேர்க்கவேண்டும் :





"அத்துடன் உலக மக்களின் ஆதரவையும் இந்திய மக்கள் அனைவரின் ஆதரவையும் இலங்கையிலுள்ள ஜனநாயக சக்திகள் ஆதரவையும் திரட்டுவதற்கு முன் முயற்சி எடுக்கவேண்டும் என்றும் கேட்டுக் கொள்ளுகின்றது."

பாரா (எ) முழுமையாக நீக்கிவிடவும்.

பாரா (ஏ) 16வது வரியில் "போன்ற" என்ற சொல்லுக்குப் பின்னர் கீழ்க்காணும் வாசகங்களைச் சேர்க்கவும்:

"அமெரிக்காவின் செயல்கள் இலங்கை நாட்டின் சுதந்திரத்திற்கும், பிரதானமாக இந்தியாவின் சுதந்திரத்திற்கும் ஆபத்தை உண்டாக்கும் நடவடிக்கை என்று இப்பேரவை கருதுகிறது. இத்தகைய அநியாயச் செயல்களை அமெரிக்கா அறவே கைவிட வேண்டும் என்று வலியுறுத்துகிறது."

பாரா (ஊ)—11வது வரியில் "பிரச்சினையைத் தீர்த்து வைக்கும் பொறுப்பை ஏற்றுக் கொண்டும்" என்பதற்கு பதிலாக "தமிழர்களின் பிரச்சினைகளுக்கு தீர்வுகாணும் கடமையையும் பொறுப்பையும் கொண்டுள்ள இந்திய அரசு" என மாற்றி அமைக்கவும்.

திருத்தங்கள் முறையே வழிமொழியப்பெற்றன:

டாக்டர் கே. சௌரிராஜன்: தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட திருத்தங்களை மொழிகிறேன்:

(1) பத்தி (அ)-க்குப் பதிலாக கீழ்க்கண்டவற்றைச் சேர்த்துக் கொள்ளவும்:

"மேற்கண்ட கொடுஞ்செயல்களைத் தொடர்ந்து செய்து வரும் சிங்கள இனவெறியர்களையும், அவர்களுக்கு உடந்தையாக நின்று அட்டூழியங்கள் பலவற்றையும் நடத்தி வரும் இலங்கை இராணுவத்தினர்—காவல்துறையினர் ஆகியோரையும், அவர்களுக்கு ஆதரவு அளித்து வரும் அதிபர் ஜெயவர்த்தனே தலைமையிலுள்ள அரசையும் கண்டித்து பாராளு மன்றத்தில் தீர்மானம் நிறைவேற்ற மத்திய அரசை இப்பேரவை கேட்டுக் கொள்கிறது."

(2) பத்தி (ஏ)-வில் உள்ள கீழ்க்கண்ட சொற்றொடருக்குப் பதிலாக "கவலையும் அடைந்திருப்பதோடு, இலங்கை வாழ் தமிழர்க்கு வாழ்வளிக்க வேண்டிய வல்லரசான அமெரிக்கா, வாழ்வளிக்க முன்வராமல் தமிழினத்தின் அழிவுக்குக் காரணமாக அமையும் ஆயுதங்களை வழங்க முன் வந்திருக்கும் போக்கை வன்மையாகக் கண்டிப்பதோடு, ஆயுதம் வழங்குவது கடற் படைத்தளம் அமைப்பது போன்ற அநியாயச் செயல்களை அமெரிக்கா அறவே கைவிட வேண்டுமென்றும் வலியுறுத்துகிறது"

கீழ்க்கண்டவற்றைச் சேர்த்துக் கொள்ளவும்:

"கவலையும் அடைகிறது. இதைக் கருத்தில் கொண்டு தக்க நடவடிக்கைகளை மேற்கொள்ளவேண்டும் என்று மத்திய அரசை இந்தப் பேரவை வலியுறுத்துகிறது."

(3) பத்தி (ஓ)–வில் உள்ள கீழ்க்கண்ட சொற்றொடருக்குப் பதிலாக "காட்டுமிராண்டிச் சட்டத்தை இப்பேரவை வன்மையாகக் கண்டிப்பதோடு, அதனை பின்பெறச் செய்யவேண்டும் என்றும் வற்புறுத்துகிறது"

கீழ்க்கண்டவற்றைச் சேர்த்துக் கொள்ளவும்:

"காட்டுமிராண்டிச் சட்டத்தை கைவிட இலங்கை அரசை வற்புறுத்துமாறு இந்திய அரசை இந்தப் பேரவை கேட்டுக் கொள்கிறது."

(4) பத்தி (ஓ)–வில் உள்ள கீழ்க்கண்ட சொற்றொடருக்குப் பதிலாக "இப்பேரவை இலங்கை அரசை வற்புறுத்துகிறது".

கீழ்க்கண்டவற்றைச் சேர்த்துக் கொள்ளவும்:

"இலங்கை அரசை வற்புறுத்துமாறு இந்தியப் பேரரசை இந்தப் பேரவைக் கேட்டுக் கொள்கிறது."

திருத்தங்கள் முறையே வழிமொழியப்பெற்றன.

திரு. எல். இளையபெருமாள்: தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட திருத்தத்தை மொழிகிறேன்:

அரசின் தனித் தீர்மானத்தில் கீழ்க்காணும் பகுதியைச் சேர்த்துக் கொள்ளவேண்டும்:

"ஸ்ரீலங்காவில் தமிழ் மக்கள் இனவெறி மதவெறி காரணமாக கொலை செய்யப்பட்டதுடன் அங்குள்ள மூன்றில் ஒரு பங்கான தமிழின மக்களில் தோட்டங்களில் வேலை செய்யும் ஒரு பெரும் பகுதி மக்களாகிய மனித உரிமையை ஜாதி காரணமாக அடைய முடியாத ஆதி திராவிட மக்களுக்கு கொடுக்கப் படாமல் இருப்பதும் அநீதி. இதனை இந்திய அரசுக்கும், தமிழக அரசு மூலம் தெரிவித்து ஸ்ரீ லங்கா அரசுக்கு இப்பேரவை மூலம் பரிந்துரை செய்கிறது."

திருத்தம் முறையே வழிமொழியப்பெற்றது.

திரு. அ. ரகுமான்கான்: தலைவர் அவர்களே, நான் கீழ்க் கண்ட திருத்தங்களை மொழிகிறேன்:

" 1. இலங்கைத் தமிழர் பிரச்சினைகளில் தீர்வு காண முடியாமல் தமிழகமே ஸ்தம்பித்து இருந்தபோது, ஏதாவது ஒரு தியாகத்தைச் செய்தாவது உலக அரங்கின் கவனத்தை இலங்கைத் தமிழர்கள் பக்கம் ஈர்க்க வேண்டும் என நினைத்த தி. மு. கழக தலைவர் டாக்டர் கலைஞர் அவர்களும், பொதுச்





செயலாளர் பேராசிரியர் அன்பழகன் அவர்களும் தங்களது சட்டமன்ற உறுப்பினர் பதவிகளை ராஜினாமா செய்ததற்கு இந்த மன்றம் அவர்களுக்குத் தனது பாராட்டினை தெரிவித்துக் கொள்கிறது.

2. இலங்கைத் தமிழர்களின் எதிர்காலத்தை முன்னிட்டு இன்றுள்ள சூழ்நிலையில் அங்குள்ள தமிழர்களும், சிங்களர்களும் இணைந்து வாழ முடியாத காரணத்தால் இலங்கை வாழ் தமிழர்களுக்கு தனி ஈழம் அமைத்துத்தர உலக நாடுகள் முன் வர வேண்டுமென்று இந்த மன்றம் கேட்டுக்கொள்கிறது.

3. இன்றும் இலங்கையில் தமிழர்கள் வாழும் பகுதியில் கலவரங்கள், கற்பழிப்புகள், இனக்கலவரங்கள் நடந்துகொண் டிருப்பதால், இலங்கை தமிழர்களின் உயிர் – உடமைகளுக்குப் பாதுகாப்பு அளிகக உடனடியாக இலங்கைக்கு இராணுவத்தை அனுப்பவேண்டும் என மத்திய அரசை இப்பேரவை கேட்டுக் கொள்கிறது.

4. முதலமைச்சர் கூட்டிய அனைத்துக் கட்சிகளின் கூட்டத்தில் எடுக்கப்பட்ட முடிவையொட்டி, முதலமைச்சர் தலைமையில் சென்ற தூதுக் குழுவினர் இந்தியப் பிரதமரை சந்தித்துக் கொடுத்த மனுவில் (மெமோராண்டம்) குறிப்பிடப் பட்ட கருத்துக்களை ஐ. நா. மன்றத்தில் இந்தியப் பிரதமர் குறிப்பிடாததை இந்த மன்றம் கண்டிக்கிறது.

5. இலங்கைத் தமிழர் பிரச்சினைகளுக்கு தீர்வு காண வேண்டுமென மதுரையிலிருந்து இலங்கை நோக்கி தியாகப் பயணம் நடத்திய காமராஜ் காங்கிரஸ் தலைவர் திரு. நெடு மாறன் அவர்களையும், அவரோடு சென்ற ஐயாயிரத்திற்கும் மேற்பட்ட தியாக மறவர்களையும் இம்மன்றம் பாராட்டுகிறது.

6. இலங்கைத் தமிழர்களுக்கு எதிராகக் கொண்டு வரப்பட்ட இலங்கை காட்டுமிராண்டிச் சட்டத்தைக் கொளுத் தியும், லங்கைத் தமிழர்களுக்கு ஆதரவாக மத்திய அரசு உடனடி நடவடிக்கை எடுக்க வற்புறுத்தியும் ஆகஸ்டு திங்கள் 5–ஆம் நாள் தி.மு.க. அறிவித்த ரயில் நிறுத்த போராட்டத்தை ஒட்டி முன்கூட்டியே தி.மு.க. தொண்டர்களை கைது செய்த மாநில அரசின் போக்கை கண்டு இம்மன்றம் தனது வருத்தத்தைத் தெரிவித்துக் கொள்கிறது.

7. ஐ. நா. மன்றத்தில் அரசியல் கமிட்டி கூட்டத்தில் பேசிய தமிழக மின்துறை அமைச்சர் ராமச்சந்திரன், இலங்கையில் தமிழ் ஈழப் பிரிவினையை நாம் ஆதரிக்கவில்லை என்றும், அங்கு நடைபெறும் சம்பவங்கள் உள்நாட்டுப் பிரச்சினைகள் என்றும் குறிப்பிட்டிருப்பது, இலங்கைத் தமிழர்களை உலக நாடுகளின் முன்னால் காட்டிக் கொடுக்கும் செயலாக இம்மன்றம் கருதுகிறது.

8. இலங்கைத் தமிழர் பிரச்சினையில் ஐ. நா மன்றம் தலையிட்டு ஆவன செய்ய வேண்டுமென்று, தி.மு.க. நடத்திய கையெழுத்து இயக்கத்தில் சுமார் ஒரு கோடி மக்கள் கையெழுத்திட்டதைப் பாராட்டி, அந்த மக்களுக்கு இந்த மன்றம் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறது.''

திருத்தங்கள் முறையே வழிமொழியப்பெற்றன.

*திரு. என். சங்கரய்யா: தலைவர் அவர்களே, இலங்கை தமிழர்கள் பிரச்சினையைபற்றி தமிழ்நாடு அரசாங்கத்தின் சார்பாக மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் கொண்டுவரப் பட்டிருக்கக்கூடிய இந்தத் தீர்மானத்தைக் குறித்து மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் பின்வரும் கருத்துக்களை நான் தெரிவிக்க விரும்புகிறேன்.

இந்தத் தீர்மானத்திலே இலங்கை தமிழர்கள்மீது நடத்தப் பட்ட பயங்கரமான கொலைகளையும், கொள்ளைகளையும், சூறையாடல்களையும் கண்டனம் செய்யக்கூடிய அந்தப் பகுதி, மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சிக்கு முழுமையாக உடன்பாடு இருக்கக்கூடிய ஒரு பகுதியாகும். இலங்கையிலே வாழ்கிற இலங்கைத் தமிழர்களானாலும் சரி, இந்தியத் தமிழர்களானாலும் சரி, அங்கே குடியேறச் சென்றிருக்கக்கூடிய தோட்டத் தொழிலாளர்களானாலும் சரி அவர்கள் அனைவரும் கடந்த ஜூலை மாத இறுதியிலிருந்து சொல்லொணாக் கொடுமைகளுக்கு ஆளாக்கப்படக்கூடிய முறையிலே அங்குள்ள சிங்கள வெறிக் கூட்டத்தினரால் தாக்கப்பட்டு இருக்கிறார்கள். அவர்கள் வன்முறையாளர்களால் கொடுமைகளுக்கு ஆளாக்கப்பட்டு இருக்கிறார்கள். அந்தக் கொடுமைகளைத் தடுப்பதற்காக ஜெயவர்த்தனே தலைமையிலே உள்ள இலங்கை அரசு முற்றிலும் தவறிவிட்டது. சட்டத்தையும் ஒழுங்கையும் அங்கே நிலைநாட்ட வேண்டிய இராணுவமும் போலீஸும் கலகக் கும்பல்களுக்கு, வன்முறையாளர்களுக்கு உடந்தையாக இருந்து அங்கே உள்ள தமிழ் மக்களுக்கு எதிராக மிகக் கடுமையான நடவடிக்கைகளை மேற்கொண்டதை எவ்வளவு கண்டணம் செய்தாலும் அது போதுமானதாகாது.

(மாண்புமிகு மாற்றுத் தலைவர் தலைமை)

உலகத்திலே உள்ள சில சர்வாதிகார நாடுகள் மைனாரிட்டி மக்களுக்கு இழைக்கின்ற கொடுமைகளை மீறக்கூடிய அளவில் இலங்கையிலே படுகொலைகள் நடந்திருக்கின்றன. உலகத்திலே உள்ள மக்கள் அனைவரும், மனித உரிமைகள் அங்கே அழிக்கப் படுகின்றன என்பதைத் தெரிவிக்கிற இந்த நேரத்திலே மார்க் சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியும் அதை வன்மையாகக் கண்டிக்கிறது. இந்தக் கண்டன இயக்கத்திலே தமிழகத்திலே உள்ள கோடிக் கணக்கான மக்கள் இதய உணர்வோடு மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியும் ஒன்றுபட்டு நின்று இலங்கை வாழ் தமிழ் மக்களைப் பாதுகாப்பதற்காக சர்வ கட்சியினரும் சேர்ந்து நடத்திய இயக்கங்களிலே தன்னுடைய பங்கை ஆற்றியிருக்கிறது என்பதை தமிழ்மக்கள் நன்கு அறிவார்கள்.



இந்த நேரத்திலே தமிழ் நாடு அரசாங்கத்தினாலே நடத்தப் பட்ட சர்வகட்சிக் கூட்டங்களிலே கலந்துகொண்டு இந்தப் பிரச்சினையைத் தீர்ப்பதற்காக யோசனைகளையும் அவ்வப் போது மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி தெரிவித்து வந்திருக்கிறது என்பதை நான் ஞாபகப்படுத்த விரும்புகிறேன். தமிழ்நாடு பூராவும் நடத்தப்பட்ட வேலைநிறுத்தம், கதவடைப்பு என்பவை தமிழ் மக்களுடைய கடுமையான கோபத்தை அங்கே தமிழ் மக்களுக்கு எதிராக நடத்தப்படக்கூடிய கொடுமைகளைக் கண்டித்து — மனித மனச்சாட்சி என்ற அடிப்படையில் நடத்திய மாபெரும் இயக்கம் தமிழக வரலாற்றிலே முக்கியமான இடம் பெறும் என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன். அதிலே பங்கெடுத்துக்கொண்ட சகல மக்களுக்கும் சகல அரசியல் கட்சி களுக்கும் பல்வேறு அமைப்புகளுக்கும் பாராட்டுத் தெரிவிப்பது நியாயமான ஒன்று என்று கூற விரும்புகிறேன்.

அதேபோல் தமிழ்நாட்டு மக்கள் சம்பந்தப்பட்டவரை மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சிக்கும் அரசாங்கத்திற்கும் இடையில் வேறு பல கொள்கைகளிலே கடுமையான அபிப்ராய வித்தியாசங்கள் இருந்தாலும் இலங்கையிலே உள்ள தமிழ் மக்களுடைய பிரச்சினைகளுக்கு தீர்வு காண்பதில் தமிழ்நாடு சர்க்கார் தன்னுடைய பங்கை நிறைவேற்றியிருக்கிறார்கள் என்பதை மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி சர்வ கட்சிக் கூட்டத்திலேயே ஏற்கெனவே கூறியிருப்பதை நான் மீண்டும் இங்கே ஞாபகப் படுத்த விரும்புகிறேன்.

(முற்பகல் 11—00)

அதேபோல் இந்திய அரசாங்கத்திறகும் மார்க்கிஸ் கம்யூனிஸ்டு கட்சி மற்றும் இடதுசாரி ஜனநாயக கட்சிகளுக் கும் அடிப்படையாக அரசியல் கொள்கை பொருளாதார கொள்கை போன்றவற்றில் மிக கடுமையான வித்தியாசங்கள் இருந்தபோதிலும் அந்த வித்தியாசங்களை தீர்ப்பதற்கு கடுமை யான அரசியல் போராட்டம் இந்த நாட்டில் நடந்தபோதிலும் இலங்கையில் வாழக்கூடிய தமிழர்கள் பிரச்சனையில் பொது வாக இந்திய அரசு ஒரு சரியான கண்ணோட்டத்தை கைக் கொண்டது என்பதை மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியினுடைய மத்திய குழு ஏற்கனவே தெரியப்படுத்தியிருக்கிறது என்பதை நான் உங்களுக்கு ஞாபகப்படுத்த விரும்புகிறேன்.

மிகவும் மென்மையான இந்த பிரச்சனையில் இந்திய அரசு தன்னுடைய அயல் நாட்டுத்துறை அமைச்சர் திரு. நரசிம்பராவ் அவர்களை இலங்கைக்கு அனுப்பியது. அதற்குப் பிறகு தான் இலங்கையில் நிலைமைகள் ஓரளவு சீர்திருந்த ஆரம்பித்தன. இலங்கையில் இருக்கக்கூடிய தமிழ் ஐக்கிய முன்னணித் தலைவர்கள் இதை ஒத்துக்கொண்டு இருக்கிறார்கள் என்பதை நாம் நன்கு அறிவோம்.

அதேபோல் இந்திய பிரதமருடைய தூதுவராக
திரு. பார்த்தசராதி அவர்கள் இலங்கைக்கு சென்றதனால்
அங்குள்ள தமிழ் மக்களுக்கு ஏற்படக்கூடிய இன்னல்களிலிருந்து
காப்பாற்றி அவற்றை ஓரளவுக்கு குறைப்பதற்கு உதவியது
என்று நாங்கள் கருதுகிறோம்.

இந்தியாவினுடைய பாராளுமன்றத்திலே நடைபெற்ற
விவாதம் இந்திய மக்களுடைய கண்டனத்தை இந்த
படுகொலைகளைக் கண்டித்து நாடு தழுவிய முறையிலும் உலகம்
தழுவிய முறையிலும் தேசிய முறையிலும் அது வெளிப்படுத்தப்
பட்டு இருக்கிறது என்பதை நாம் பார்க்கவேண்டும்.

திரு. ஜெயவர்த்தனேவின் தம்பி இந்தியாவுக்கு வந்து
இந்திய பிரதமரைச் சந்தித்தபோது அவரைச் சந்தித்துச் இருக்கக்
கூடாது என்று சில விமர்சனங்கள் வந்தன. ஆனால் மார்க்கிஸ்ட்
கம்யூனிஸ்ட் கட்சியைப் பொறுத்தவரை அந்த விமர்சனங்கள்
சரி அல்ல என்று கருதுகிறோம். காரணம் இலங்கை
பிரச்சனை உள்நாட்டுப் பிரச்சனை என்று அவர்கள் சொல்லிக்
கொண்டு இருக்கக்கூடிய நிலையில் அவர்கள் இந்திய அரசிடம்
வந்து பேச்சுவார்த்தை நடத்துகிறார்கள் என்றால் அதிலே
இந்திய அரசுக்கும் இந்திய மக்களுக்கும் பங்கு இருக்கிறது,
தொடர்பு இருக்கிறது. ஆகவே அவர்கள் அதைப்பற்றி கவலைப்
படுவதற்கு இடம் இருக்கிறது என்பதை இலங்கை அரசு
அதை ஏற்றுக்கொண்டு இருக்கிறது என்பது தான் அதன் உட்
பொருள் ஆகும். அப்படிப்பட்ட பேச்சுவார்த்தை இலங்கை
தமிழர்களுடைய இன்னல்களை உடனடியாகக் குறைப்பதற்கு
உதவி செய்தன என்று நாங்கள் கருதுகிறோம்.

இந்திய அரசு நாடாளுமன்றத்திலே தன்னுடைய சொந்த
முத்திரையின் பேரில் இலங்கை அரசை கண்டித்து ஏன்
தீர்மானம் போடவில்லை என்ற ஒரு கேள்வி வருகிறது.
நாங்கள் கருதுகிறோம், இந்தியாவினுடைய பாராளுமன்றத்திலே
இந்திய மக்கள் அனைவருடைய, அனைத்து கட்சியினுடைய
கோபம் ஏற்கனவே பிரதிபலித்தது. ஆனால் இந்த நுணுக்க
மான பிரச்சனையில் இந்திய அரசு முன்வந்து இந்திய பாராளு
மன்றத்திலே ஜெயவர்த்தனே அரசை கண்டித்து ஒரு
தீர்மானத்தை நிறைவேற்றுமானால் பிறகு உடனடியாக அந்த
அரசோடு பேச்சு வார்த்தை நடத்துவது என்ற பிரச்சனைக்கே
இடம் இல்லாமல் போய்விடும் என்ற காரணத்தால் அப்படி
ஒரு கண்டன தீர்மானம் போடாமல் இருந்தது என்பதையும்
இலங்கை அரசோடு இந்திய அரசு பேச்சுவார்த்தைநடத்துவதற்கு
ஒருசூழ்நிலையை உருவாக்கியிருக்கிறது என்பதை நாம் பார்க்க
வேண்டும் என்று நாங்கள் கூறவிரும்புகிறோம். தமிழர்
களுடைய பிரச்சனையாக ஆக்காமல் இது இந்திய மக்கள்,
இந்திய கட்சிகள் ஆகிய அனைத்து இந்திய பிரச்சனை
என்று ஆக்கியது இந்திய ஜனநாயகத்திற்கும் இந்திய ஒருமைப்
பாட்டிற்கும் ஒரு சரியான எடுத்துக் காட்டாக இருக்கிறது
என்பதை நான் இங்கே கூற விரும்புகிறேன். ஆகவே அகில



இந்திய ஆதரவு இயக்கம் என்ற முறையில் இலங்கை தமிழர்
களுடைய பிரச்சனையில் தமிழ் மக்கள் தனியாக இல்லை.
இந்தியாவில் உள்ள 70 கோடி மக்களும் இந்த இலங்கை தமிழர்
பிரச்சனையில் ஒன்றுப்பட்டு இருக்கிறார்கள் என்பது உலகத்
திற்கு தெளிவாக்கப்பட்டிருக்கிறது என்று நான் கூற விரும்பு
கிறேன்.

அதேபோல் உலக மக்களில் பல பகுதியினர் பல்வேறு உலக
நாடுகளின் பத்திரிகைகள் அனைத்தும் இலங்கை தமிழர்களுக்கு
எதிராக இழைக்கப்பட்ட இந்த கொடுமைகளை கண்டித்து
இருக்கிறது என்று கூறுவது பொருத்தமாக இருக்கும்.

நீங்கள் கொடுத்துள்ள தீர்மானம் (உ)வில் தீவிரமான
செயல் முறைகளை இந்திய அரசு மேற்கொள்ளவேண்டும் என்று
சொல்லப்பட்டு இருக்கிறது. அதே தீர்மானத்தில் பேச்சு
வார்த்தையை விரைவுபடுத்தி இந்திய அரசு துரித நடவடிக்கை
எடுக்கவேண்டும் என்று பொருள்படும்படியாக கூறப்பட்டு
இருக்கிறது. அது மிகவும் சரியானது. ஆனால் அதிலே
மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்டு கட்சி ஒரு திருத்தம் கொடுத்து
இருக்கிறது. அந்த பாராவுக்கு பின்னால் ''உலக மக்களின்
ஆதரவையும் இந்திய மக்கள் அனைவரின் பேராதரவையும்
இலங்கையிலுள்ள ஜனநாயக சக்திகளின் ஆதரவையும் திரட்டு
வதற்கு இந்திய அரசு முன் முயற்சி எடுத்திட வேண்டுமென
இப்பேரவை கோருகிறது'' என்று ஒரு திருத்தம் கொடுத்து
இருக்கிறோம். தமிழ்நாடு அரசு இந்தத் திருத்தத்தை பரிசீலனை
செய்து அதனுடைய தேவையை புரிந்து அதை ஏற்றுக்கொள்வார்
கள் என்று நம்புகிறோம். காரணம் என்ன என்றால் இன்றைக்கு
இலங்கையில் ஜனநாயக சக்திகள் ஆதரவும் தமிழர்கள்
பிரச்சனையை தீர்ப்பதற்கு மிகவும் தேவை என்பதை நாம்
ஏற்றுக்கொள்ளவேண்டும். உலகத்து ஆதரவும் தேவை,
இந்திய மக்களுடைய ஆதரவும் தேவை, இலங்கை ஜனநாயக
சக்திகள் ஆதரவும் தேவை என்று இங்கே குறிப்பிட விரும்பு
கிறேன். ஸ்ரீலங்கா கட்சியின் தலைவரான ஸ்ரீமாவோ
பண்டாரா நாயகா அவர்கள் இதில் இந்தியா அக்கறை
காட்டுவது நியாயம் தான். திரு. ஜெயவர்த்தனே அரசு
இந்திய பிரதிநிதியோடு பேச்சுவார்த்தை நடத்துவது அவசியம்
தான் என்று கூறியிருக்கிறார்கள். இலங்கையில் இருக்கக்கூடிய
ஐக்கிய விடுதலை முன்னணி கட்சித் தலைவர்களை நிபந்தனை
யின்றி பேச்சு வார்த்தைக்கு அழைக்க வேண்டும் என்று
இலங்கையில் இருக்கக்கூடிய சிங்களவர்கள் மத்தியில் செல்
வாக்கு பெற்ற ஸ்ரீலங்கா கட்சியினுடைய தலைவர் ஸ்ரீமாவோ
பண்டார நாயகா அவர்கள் கூறியிருப்பது இந்தப் பிரச்சனையை
தீர்ப்பதற்கு மிகவும் முக்கியமான அம்சம் என்பதை நான்
வலியுறுத்த விரும்புகிறேன். காரணம் என்னவென்றால்,
இன்றைக்கு ஜெயவர்த்தனே அரசாங்கம், தனி நாடு என்ற
கோரிக்கையை இலங்கை விடுதலை முன்னணியினர் கை விட்டா
லொழிய, அவர்களிடத்திலே, பேச்சு வார்த்தை நடத்த
மாட்டோம் என்று கூறியதற்கு மாறாக, அவர்கள் அந்த
நிலைக்கு வந்ததற்குச் சில காரணங்கள் இருக்கின்றன,

ஆகவே, அதை ஒரு நிபந்தனையாக்காமல் பேசவேண்டும். அதற்கு மாற்றுத் திட்டம் என்ன என்பதை ஜெயவர்த்தனே அரசாங்கம் அறிவிக்கவேண்டும், அதன் அடிப் படையிலே அவர்கள் பரிசீலனை செய்வதற்கு வாய்ப்பிருக்க வேண்டும் என்று திருமதி பண்டார நாயகா—இலங்கையிலே உள்ள சிங்களர் மத்தியிலே உள்ள பிரதான எதிர்க்கட்சி கூறியிருப்பது இந்தப் பிரச்னையை ஓரளவுக்கு நியாயமான முறை யிலே தீர்க்கப்படுவதற்கு உதவி செய்யும் என்ற காரணத்தால். இலங்கையிலே உள்ள ஜனநாக சக்திகளுடைய ஒத்துழைப்பையும் கோருவதற்கு இந்திய அரசாங்கம் முன் முயற்சி எடுக்க வேண்டு மென்று கோருகிறோம்.

இந்த நேரத்திலே நான் ஒன்றை ஞாபகப்படுத்த விரும்பு கிறேன். இலங்கையிலே உள்ள கம்யூனிஸ்ட் கட்சியை ஜெயவர்த்தனே அரசாங்கம் தடை செய்தது. அப்படி தடை செய்த போதிலும், அதிலே இருக்கக்கூடிய ஓரே ஒரு நாடாளு மன்ற உறுப்பினர்—சிங்களர் தொகுயிலேயிருந்து தேர்ந்தெடுக்கப் பட்டிருந்தாலும் இலங்கைப் பாராளுமன்றத்திலே பிரிவினையை எதிர்த்து, அரசாங்கம் ஒரு பயங்கரமான சட்டத்தைக் கொண்டு வந்த நேரத்திலே அந்த ஒரே ஒரு பிரதிநிதி மட்டும்தான் அந்தப் பயங்கரமான சட்டத்தை எதிர்த்து வெளிநடப்பு செய்தார் என்ற ஒரு பேருண்மையை எவ்வாறு நியாயத்தின் அடிப்படையிலே—தன்னுடைய சிங்கள மக்கள் என்று கூடப் பார்க்காமல், தமிழ் மக்களுக்கு நியாயம் வழங்க வேண்டு மென்ற ஒரு சர்வதேசிய உணர்வு—தொழிலாளி வர்க்கத்தின ருடைய கட்சியாகிய—இலங்கையிலுள்ள கம்யூனிஸ்ட் கட்சி மத்தியிலே இருந்தது. தாங்கள் தடை செய்யப்பட்டிருந்த போதிலும், ஜெயவர்த்தனே அரசாங்கத்தினுடைய கொடுங் கோன்மைக்கு ஆளாக வேண்டியிருந்தாலும், நியாயத்திற்காக, சிங்களத் தமிழ் மக்களின் ஒற்றுமைக்காக, சிலோன் கம்யூனிஸ்ட் கட்சி போராடியதை நாம் ஞாபகத்திலே வைத்துக் கொள்ள வேண்டும்.

அது மட்டுமல்ல, இப்பொழுது தற்காலிகமாக அந்தத் தடையை ரத்து செய்து, ஜெயவர்த்தனே அவர்கள் கூட்டிய மாநாட்டிற்கு வரும்படி இலங்கை கம்யூனிஸ்ட் கட்சிக்கு அழைப்பு கொடுத்தபொழுது, இலங்கை கம்யூனிஸ்ட் கட்சி என்ன சொல்லியிருக்கிறது என்பதை நான் ஞாபகப்படுத்த விரும்புகிறேன். நீங்கள் இந்த மாநாட்டிற்கு இலங்கை விடுதலை முன்னணியினுடைய தலைவர்களை அழைத்தால்தான் இந்த மாநாட்டிற்கே ஒரு பொருள் உண்டாகும் என்று இலங்கை கம்யூனிஸ்ட் கட்சி கூறியிருக்கிறது. அப்படியில்லாமல் போனால், அதிலே பிரயோஜனம் இல்லையென்று அவர்கள் கூறியிருக்கிறார்கள் என்பதையும் நான் உங்கள் கவனத்திற்கு கொண்டு வருகிறேன். ஆகவே, இலங்கையிலே இருக்கக்கூடிய தொழிற்சங்கங்கள், அரசியல் கட்சிகள் ஆகியோருடைய ஆதரவையும் சிங்கள மக்கள் மத்தியிலே இருக்கக்கூடிய ஜனநாயக சக்திகளையும் நாம் திரட்டுவது அவசியம் என்று நாம் இந்திய அரசாங்கத்திற்குக் கூற வேண்டுமென்று இந்தத் தருணத்திலே நாங்கள் கூறுகிறோம்.



'ஊ' என்ற பகுதியிலே உள்ளதற்கு நாங்கள் ஒரு திருத்தம் கொடுத்திருக்கிறோம். 'ஊ' . லே என்ன இருக்கிறது? "..... இந்திய அரசு. இலங்கையில் ஏற்பட்டிருக்கும் பிரச்னையைத் தீர்த்து வைக்கும் பொறுப்பை ஏற்றுக் கொண்டு......" என்று இருக்கிறது. இது தவறான அர்த்தந்திற்கு உட்படுத்தப்படும். இலங்கையிலே ஏற்பட்டிருக்கக் கூடிய பிரச்னையைத் தீர்த்து வைக்கக்கூடிய பொறுப்பு நமக்கு இல்லை. இலங்கையிலே இருக்கக்கூடிய தமிழர்களுக்கு ஏற்பட்டிருக்கக்கூடிய பிரச்னையைத் தீர்த்து வைக்கும் பொறுப்புதான் நமக்கு இருக்கிறதே தவிர, இலங்கைப் பிரச்னையைத் தீர்த்து வைக்கும் பொறுப்பு இந்தியா என்ற ஒரு சுதந்திர நாட்டிற்கு இருக்கிறது என்று சொன்னால், இலங்கை என்ற ஒரு சுதந்திர நாட்டின் பிரச்னையத் தீர்க்க நமக்கு என்ன உரிமை இருக்கிறது என்ற சர்வதேசக் கேள்வி எழுவதற்கு இடம் அளிக்கும். ஆகவே, அது ப்படி இருக்கக் கூடாது என்று அந்த இடத்திலே நாங்கள் திருத்தம் கொடுத்திருக்கிறோம். 'இலங்கையில் ஏற்பட்டிருக்கும் தமிழர்களின் பிரச்னைக்குத் தீர்வு காணும் பொறுப்பு' என்று மாற்றப்பட வேண்டுமென்று திருத்தம் கொடுத்திருக்கிறோம். அது மிகவும் பொருத்தமான திருத்தம் என்பதை அரசாங்கம் பரிசீலனை செய்ய வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அதே போல், நீங்கள் கொடுத்திருக்கக்கூடிய தீர்மானத்திலே என்ன சொல்லியிருக்கிறீர்கள்? ' .. . இந்திய அரசு, இலங்கயில் ஏற்பட்டிருக்கும் பிரச்சனையைத் தீர்த்து வைக்கும் பொறுப்பை ஏற்றுக்கொண்டு,... , என்று குறிப்பிட்டி ருக்கிறீர்கள். அப்படி என்றால், இப்பொழுது அந்தப் பொறுப்பை இந்திய அரசு ஏற்கவில்லையா? ஏற்காமல் இருக்கிறது என்று கருதுகிறீர்களா? அவ்வாறு—அந்த வகையில்—வாக்கியம் அமைப்பது தவறாகும் என்று நாங்கள் கருதுகிறோம். இந்திய அரசு ஏற்கனவே அந்தப் பொறுப்பை ஏற்றுக் கொண்டிருக்கிறது. ஆகவே, வேறு, விபரீதமான அர்த்தம் தோன்றக்கூடிய வகை யில், இலங்கைப் பிரச்னையைத் தீர்ப்பதற்கு, புதிதாக ஏதோ ஒரு பொறுப்பை, இந்திய அரசு ஏற்க வேண்டுமென்ற கருத்தைப் போல் அமைத்து விடக் கூடாது. நம்முடைய நோக்கம் இலங்கைத் தமிழர்கள் பிரச்னையைத் தீர்ப்பதிலே ஏற்கனவே இந்திய அரசுக்கு உள்ள பொறுப்பை, அவர்கள் துரிதமாக நிறைவேற்ற வேண்டுமென்பது. ஆகவே, நாங்கள் கொடுத் துள்ள, இலங்கைத் தமிழர்கள் பிரச்னையைத் தீர்ப்பதிலே இந்திய அரசுக்கு உள்ள பொறுப்பை அவர்கள் துரிதமாக நிறைவேற்ற வேண்டுமென்ற திருத்தத்தையும் அரசாங்கம் பரிசீலிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்ள விரும்புகிறேன்.

(முற்பகல் 11–10)

அடுத்தபடியாக அரசாங்கத்தினுடைய 'எ' பாரா இருக்கிறது. அந்த பாரா முழுவதும் நீக்க வேண்டுமென்று நாங்கள் கூறியிருக்கிறோம். காரணம் என்னவென்றால் முதலில்

நான் கூற விரும்புகிறேன். 'ஓ' என்ற பாராவிலே இந்த
அரசாங்கத்தினுடைய தீர்மானம் என்ன கூறுகிறது' என்றால்,
''நல்லுறவு அடிப்படையில் பேச்சுவார்த்தை இருக்க வேண்டும்.
அதோடு வட்ட மேசை மாநாடு இருக்க வேண்டும். அதிலே
தமிழர்கள் தலைவர்கள் தங்களுடைய மனதிலே உள்ளதை
எல்லாம் தயக்கமின்றி பேசுவதற்கு வாய்ப்பு இருக்க வேண்டும்.
அந்த அடிப்படையிலே ஜனநாயக பண்புடன் இலங்கை அரசு
இதைத்தீர்க்க வேண்டுமென்று சொல்லியிருக்கிறீர்கள், இது
முற்றிலும் சரியானது. அப்படியென்றால் அங்கேயுள்ள
பிரச்னைகளை அவர்கள் இலங்கைத் தலைவர்களை கூட்டி,
பூரணமாகப்பேசி தீர்வு காண வேண்டுமென்று 'ஓ' என்ற
பாராவில் சொல்லிவிட்டு, 'எ' என்ற பாராவில் என்ன
சொல்கிறீர்கள்' ரொம்பவும் ஆச்சரியமாக இருக்கிறது. சிறு
பான்மையினரின் நலன் காக்கும் பொறுப்பு, வாழ்வு அளிக்கும்
பொறுப்பு ஐ. நா.விற்கு உண்டு என்று சொல்லியிருக்கிறீர்கள்.
இங்கே ஐ. நா. வின் சட்ட திட்டங்களைக் கொண்டு வந்திருக்
கிறேன்- அந்த ஐ. நா. வின் சாசனத்திலோ அல்லது அவர்
களுடைய எந்தவிதமான குறிப்புகளிலோ சிறுபான்மையினரின்
நலனைக் காக்கும் பொறுப்பு ஐ. நா.விற்கு அளிக்கப்பட்டிருக்
கிறதா? படித்துப் பாருங்கள். இதைப் பரிசீலனை செய்யும்படி
அரசாங்கத்தைக் கேட்டுக் கொள்கிறேன். இன்றைக்கு நான்
கேட்டுக் கொள்ள விரும்புவது, சிறுபான்மையினருடைய
நலத்தைக்காக்க வேண்டிய பொறுப்பு அந்தந்த நாடுகளிலே
உள்ள பரிபூரணமான அரசுரிமை பெற்ற சுதந்திரமாக நாடு
களின் பிரச்னை. மனித உரிமை என்ற பிரச்னையைத் தான்
ஐ. நா. எடுக்கவேண்டுமே தவிர மைனாரிட்டிகளைப் பாது
காப்பது. அவர்களுக்கு வாழ்வளிப்பது என்ற பொறுப்பை
யெல்லாம் ஐ. நா. எடுக்கும் என்று நாம் ஒப்புக்கொண்டால்
ஒவ்வொரு சுதந்திர நாட்டினுடைய உள் விவகாரத்திலே
மைனாரிட்டிகளுடைய பிரச்னைகள் ஏற்பட்டு விட்டன என்று
கூறி ஐ.நா.வும், அதில் ஆதிக்கம் வகிக்கக்கூடிய அமெரிக்காவும்
தலையிடுவதற்குத்தான் நாம் கதவைத் திறந்து வைப்போம்
என்று நான் கூற விரும்புகிறேன். உதாரணமாக இன்றைக்கு
பஞ்சாப்பிலே உள்ள சீக்கியர்களுடைய பிரச்னை ஒரு
மைனாரிட்டி பிரச்னை. ஆகவே அவர்களுடைய நலன்
காக்கும் பொறுப்பு ஐ. நா. விற்கு இருக்கிறது என்று ஏற்றுக்
கொள்ள முடியுமா? அல்லது அஸ்ஸாமிய மக்கள் இந்தியர்கள்
ங்களைத் தவறாக நடத்துகிறார்கள்; பிரிந்து செல்ல
வேண்டும் என்று சொல்வதை நாம் அதைப் பிரிவினை இயக்கம்
என்று கூறி நாம் அதை எதிர்த்து போராடிக் கொண்டிருக்கிற
போது, இல்லை, அஸ்ஸாமியர்கள் மைனாரிட்டிகள்; அஸ்ஸாம்
இந்தியர்களால் தாக்கப்படுகிறது; ஆகவே தமிழ்நாட்டு அரசாங்
கத்தினுடைய தீர்மானத்தின் அடிப்படையில் அதை பாது
காக்க வேண்டிய பொறுப்பு ஐ. நா. விற்கு இருக்கிறது என்று
அமெரிக்கா கூறுமேயானால் அதை ஏற்றுக் கொள்ள முடியுமா?
அதேபோல மிசோ தனிநாடு வேண்டுமென்று கேட்கிறார்கள்,
அது சரியல்ல என்று கூறுகிறோம். ஒருமைப்பாட்டோடு இந்த



பிரச்னை தீரவேண்டுமென்று கூறுகிறோம். அப்படியென்றால்
மிசோ என்ற இனத்தினுடைய பிரச்னை மைனாரிட்டி பிரச்னை.
அதிலே ஐ. நா.விற்கு உரிமை உண்டு, என்று ஒரு தவறான.
பிற்போக்கான கொள்கையை நாம் ஏற்றுக்கொள்ள முடியுமா?
ஆகவே அரசாங்கம் என்ன நினைத்தாலும் அதனுடைய
இம்ப்ளிகேஷன், அதனுடைய உள் விளைவு அதிலே அடங்கி
யிருக்கிறது என்பதை மார்க்சிஸ்ட் கட்சியின் சார்பிலே நான்
உங்களுக்கு கூற விரும்புகிறேன். அப்படி பொறுப்பு ஐ. நா.
விற்கு இருக்கிறது என்று ஒப்புக்கொண்டால் தவறான விளைவு
கள் ஏற்படும். அதுமட்டுமல்ல, அந்த பாராவில் என்ன
கூறியிருக்கிறீர்கள். தமிழர்களின் பிரச்சினையை நிலையாக
தீர்க்கும்பொருட்டு என்று கூறியிருக்கிறீர்கள். நான் கேட்க
விரும்புகிறேன். தமிழர்கள் பிரச்னையை நிலையாகத் தீர்ப்பது
நமுடைய சார்பிலே செயலாற்ற வேண்டிய இந்திய அரசாங்கம்
தீர்க்கப் போகிறதா? அல்லது ஐக்கிய நாடுகள் சபை தீர்க்கப்
போகிறதா? இரண்டிற்கும் முரண்பாடு ஏற்பட்டிருக்கிறது, ஆகவே
இந்த பாரா 'எ'-வில் நீங்கள் குறிப்பிட்டிருக்கிற, இந்திய
அரசாங்கத்தைக் கேட்கக்கூடிய பாராவில், இலங்கையிலே உள்ள
அரசாங்கம் எப்படி பேச்சுவார்த்தை நடத்த வேண்டுமென்று
அந்தப் போக்கை நிராகரித்து, பிறகு ஐ. நா. வின் கையிலே
அந்தப் பிரச்னையை ஒப்படைப்பது மிகவும் அபாயகரமானது
என்று நான் கூற விரும்புகிறேன். ஆகவே அந்த 'எ' என்ற பாரா
நம்முடைய இந்தத் தீர்மானத்தினுடைய மொத்தமான பாதையை
நிராகரிக்கிறது என்பதை நான் இங்கே குறிப்பிட விரும்புகிறேன்.
பேச்சு வார்த்தை விரைவு படுத்தப்பட வேண்டுமென்று கூறியிருக்
கிறீர்கள். இந்தியாவிற்கும்: இலங்கைக்கும் நீண்ட உறவு பலமுறை
களிலே இருக்கிறது என்று கூறியிருக்கிறீர்கள். கலாச்சாரம்,
சரித்திரம் என்றெல்லாம் கூறியிருக்கிறார்கள். ஆகவே இந்தியா
சுதந்திரமாக செயல்பட, இந்தியாவிற்கும், இலங்கைக்கும்
உள்ள பிரச்னையாக இது பை—லேட்டரல் இஷ்யூ——இரண்டு
நாடுகளுக்கும் இடையே உள்ள பிரச்னையாக தீர்க்கப்படுவதற்கு
பதிலாக, அதிலே என்ன கூறுகிறீர்கள்? ஐ. நா. சபை தன் முழு
செல்வாக்கை பயன்படுத்த வேண்டும்; ஐ. நா. சபை தன்
அதிகாரத்தை பயன் படுத்த வேண்டும்; எப்படி இருக்கிறதென்று
பார்த்தீர்களா? எங்கே போய் விட்டீர்கள் இப்போது? இந்திய
சர்க்காரை வற்புறுத்துவதற்கு பதிலாக வேறு எங்கோ போய்
விட்டீர்கள். அதுதான் ஐ. நா. நியாயத்தை நிலைநாட்ட
வேண்டுமென்று கூறுவது முற்றிலும் தவறு என்பதை மார்க்சிஸ்ட்
கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் அழுத்தமாகக் கூற விரும்பு
கிறேன்.

அதுமட்டுமல்லாமல், இதைப்பற்றி ஐக்கிய நாடுகள்
அவையில் இந்திய அரசு வலியுறுத்த வேண்டுமென்று கேட்டிருக்
கிறீர்கள்- நான் காங்கிரஸ் கட்சி நண்பர்களைக் கேட்டுக்
கொள்ள விரும்புகிறேன். இதைச் சரியாகப் பார்த்திருக்கிறார்
களா என்று கேட்க விரும்புகிறேன். ஏனென்றால்' மார்க்சிஸ்ட்
கம்யூனிஸ்ட் கட்சியைப் பொறுத்தவரைக்கும் அதற்குக் கிடைத்
திருக்கின்ற தகவல் இந்திய அரசு இலங்கை மீது ஐக்கிய

நாடுகள் அவையில் புகாரைக் கொடுக்கவில்லை. அதுதான் இன்றைய நிலைமை. புகாரைக் கொடுத்தால்தானே பிரதமர் பேசுவார்கள். அப்படிக் கொடுக்காமல் இருந்துவிட்டு பிரதமர் பேசவில்லை என்று குறைபட்டுக் கொள்வதில் அர்த்தமே இல்லை. இலங்கை அரசாங்கத்தைப் பற்றிப் புகாரே கொடுக்க வில்லை என்று சொல்லும்பொழுது பிரதமர் எப்படிப் பேசுவார்? இது முன்னுக்குப்பின் முரணாக இல்லையா என்றுதான் கேட்க விரும்புகிறேன்.

மாண்புமிகு முதல்வரவர்களின் தலைமையில் தமிழகத்திலே யிருந்து டெல்லிக்குக்குழு சென்றபொழுதே மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் தோழர் ராமமூர்த்தி அவர் களும், தோழர் வரதராஜன் அவர்களும் முதலமைச்சரவர்களிடத் திலேயும், மின்துறை அமைச்சரவர்களிடத்திலேயும் ஐக்கிய நாடுகள் அவைக்குக் கொண்டு செல்ல வேண்டுமென்ற பகுதியை நீக்க வேண்டுமென்று வற்புறுத்தியிருக்கிறார்கள். ஆனால் மாண்புமிகு முதல்வரவர்களும், மற்றவர்களும் அது இருக்க வேண்டுமென்று கூறினார்கள். நாங்கள் அதே சமயத்தில் இந்திய அரசாங்கத்தினிடத்தில் தனியாக ஒரு குறிப்பைக் கொடுத்தோம். மற்ற விஷயங்களில் மாண்புமிகு முதலமைச்சர வர்களின் கருத்துக்களை ஏற்றுக்கொள்ளும் அதேநேரத்தில் இந்த ஐக்கிய நாடுகள் அவைக்குக் கொண்டு செல்ல வேண்டுமென்று இருக்கின்ற கருத்தை நாங்கள் ஏற்கவில்லை என்று இந்திய அரசாங்கத்தினிடத்தில் தனியாகக் குறிப்பைக் கொடுத்தோம் என்பதை இன்றைக்கு ஞாபகப்படுத்த விரும்புகிறேன்.

இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியும் அதைச் சொன்னாலும்கூட, அவர்கள் ஏற்கனவே அதில் கையெழுத்துப் போட்டு விட்டதால் அதிலிருந்து தாங்கள் விலக விரும்பவில்லை என்றாலும், முதலமைச்சரவர்களிடத்திலேயும், மின்துறை அமைச்சரவர் களிடத்திலேயும், இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் நிலை—இந்தப் பிரச்னையை ஐக்கிய நாடுகள் அவைக்குக் கொண்டு செல்லக் கூடாது என்ற நிலை தெளிவுபடுத்தப்பட்டிருக்கிறது. இதை மாண்புமிகு மின்துறை அமைச்சரவர்கள் சர்வகட்சிக் கூட்டத் தில் ஒப்புக்கொண்டிருக்கிறார்கள்.

எனவே, இந்த இரண்டு கட்சிகளும் அதை ஏற்கவில்லை. ஏன் இதைச் சொல்கிறேன் என்றால், இந்தக் கருத்தைப் புதிதாக இப்பொழுதுதான் நாங்கள் சொல்கிறோம் என்பது அல்ல, ஏற்கனவே தொடர்ச்சியாக எடுத்த நிலைதான் என்பதற்காகக் கூறுகிறேன்.

நேற்றைக்குப் பேசிய காங்கிரஸ் கட்சி உறுப்பினர் திரு. சுந்தரராஜ் அவர்களும், அகில இந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர் திரு. வின்சென்ட் அவர்களும் விவரமாகப் பேசினார்கள். ஐக்கிய நாடுகள் அவை எந்தப் பிரச்னையைத் தீர்த்திருக்கிறது என்று கேட்டார்கள். காஷ்மீர் பிரச்னையைத் தீர்த்ததா, காங்கோ பிரச்னையைத் தீர்த்ததா, கொரியா பிரச்னையைத் தீர்த்ததா, சைப்ரஸ் பிரச்னையைத்



தீர்த்ததா என்று கேட்கிறார்கள். அது உண்மை. அப்படி யென்றால் அவர்களுடைய வாதம்தான் என்ன? ஐக்கிய நாடுகள் அவைக்குக் கொண்டு போவதால் பிரச்னை தீராது என்ற கருத்தை இங்கே அவர்கள் பேசுகின்ற நேரத்தில், அந்த உறுப்பினர் சார்ந்திருக்கின்ற அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் ஐக்கிய நாடுகள் அவைக்குக் கொண்டு செல்ல வேண்டுமென்று சொல்வது சரியல்ல என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். மாண்புமிகு உறுப்பினர் சுந்தரராஜ் அவர்கள் சொல்லும்பொழுது ஐக்கிய நாடுகள் அவைக்குக் கொண்டு போவதால் பிரயோசனம் இல்லை என்று சொல்லி யிருக்கிறார்கள். ஆகவே, காங்கிரஸ் கட்சியினரும் அந்த நிலையிலேதான் இருக்கிறார்கள்.

திரு. மி. வின்சென்ட்: மாண்புமிகு மாற்றுத் தலைவரவர்களே, நான் அந்தக் கருத்தில் பேசவில்லை. நான் பேசிய நேரத்தில், 1947-ஆம் ஆண்டு காஷ்மீர் பிரச்னை ஐக்கிய நாடுகள் அவைக்குச் சென்றது; 1948-ஆம் ஆண்டு பாலஸ்தீனப் பிரச்னை ஐக்கிய நாடுகள் அவைக்குச் சென்றது; 1974-ஆம் ஆண்டு சைப்ரஸ் பிரச்னை ஐக்கிய நாடுகள் அவைக்குச் சென்றது; 1980—ஆம்ஆண்டு ஈரான்—ஈராக் பிரச்னை ஐக்கிய நாடுகள் அவைக்குச் சென்றது. ஆனால் அந்தப் பிரச்னைகளெல்லாம் வெற்றியடையவில்லை என்பதை அடிப்படையாக வைத்துக்கொண்டு இந்தப் பிரச்னை யும் ஐக்கிய நாடுகள் அவைக்குச் செல்வதில் நியாயமில்லை என்று வாதிடுவது சரியல்ல; ஏனென்றால் இந்தப் பிரச்னைக் கும், இது வரையிலே ஐக்கிய நாடுகள் அவைக்குச் சென்ற பிரச்னைகளுக்கும் வித்தியாசம் இருக்கிறது. இதுவரைக்கும் சென்ற காஷ்மீர் பிரச்னைக்கோ, பாலஸ்தீனியப் பிரச்னைக்கோ சைப்ரஸ் பிரச்னைக்கோ, ஈரான்-ஈராக் பிரச்னைக்கோ அகில உலக நாடுகள் ஒன்று சேர்ந்து தங்களுடைய முழு ஆதரவையும் கொடுக்கவில்லை; சில நாடுகள் ஆதரவு கொடுத்தன, சில நாடுகள் எதிர்த்தன. ஆனால் இன்றைக்கு ஜெயவர்த்தனே செய்து கொண்டிருக்கின்ற கொடுங்கோன்மைகளையும், வன் முறைகளையும் கண்டித்து உலக நாடுகள் எச்சரிக்கை செய்கின் றன. எந்தவொரு நாடும் இலங்கையில் ஜெயவர்த்தனே செய்கின்ற வன்முறைகளை ஏற்றுக்கொள்ளவில்லை. ஆகவே, ஐக்கிய நாடுகள் அவை தலையிட்டே ஆக வேண்டும்; சமாதானப் படையை அனுப்பியே ஆக வேண்டும் என்றுதான் நான் குறிப்பிட்டேன்.

திரு. என். சங்கரய்யா: மாற்றுத் தலைவரவர்களே, அவர் சொன்ன உதாரணம் அவர் கொண்டிருக்கின்ற முடிவுக்கே விரோதமானதாகும். ஐக்கிய நாடுகள் அவை தீர்க்கவில்லை என்று சொல்லும்பொழுது இந்தப் பிரச்னையை மட்டும் தீர்த்து விடும் என்ற முடிவிற்கு எப்படி அவர்கள் வருகிறார்கள் என்று எனக்குத் தெரியவில்லை.

திரு. மி. வின்சென்ட்: மாற்றுத் தலைவரவர்களே, இந்தப் பிரச்னை வேறு; முன்னால் சென்ற பிரச்னைகள் வேறு என்பதைத்தான் சொல்கிறேன்.

திரு. என். சங்கரய்யா: மாற்றுத் தலைவரவர்களே, காஷ்மீர்
பிரச்னை பற்றி இந்தியா பாகிஸ்தானுக்கு எதிராகக் கொடுத்து
பிரச்னை இருக்கிறதே அது தீர்ந்ததா? 1947-ஆம் ஆண்டில்
கொடுக்கப்பட்ட அந்தப் பிரச்னை தீர்ந்ததா? இந்திய ஐக்கிய
நாடுகள் அவைக்குக் கொடுத்த அந்தப் புகாரே தீர்க்கப்படாமல்
இருக்கும்பொழுது, 1983-ஆம் ஆண்டில் அவசரத்திலே கொண்டு
போய் இந்தப் பிரச்னையைக் கொடுப்பதால் மட்டும் அதைத்
தீர்த்து விட முடியுமா என்று கேட்க விரும்புகிறேன். ஆகவே
தான் அதில் எங்களுக்கு உடன்பாடு இல்லை என்பதைத்
தெரிவிததுக்கொள்கிறேன்.

(முற்பகல் 11.20.)

அதேபோல இன்றைக்கு ஐக்கிய நாட்டுச் சபையிலே இந்தப்
பிரச்சினை போகாமல் இருக்கும்போதே அமெரிக்காவினுடைய
பாதுகாப்புச் செயலாளர் இலங்கைக்கு வந்தாகிவிட்டது.
அப்படிப் பிரச்சினை ஐ.நா. சபைக்குப் போகாமல் இருக்கும்
போதே இலங்கைக்கு அமெரிக்காவினுடைய பாதுகாப்புச்
செயலாளர் வந்தாகிவிட்டது என்றால் போய் இருந்தால் என்ன
ஆகிஇருக்கும்? போய் இருந்தால் படைகளோடு அவர்கள் வந்து..

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: மாண்புமிகு பேரவை
தற்காலிகத் தலைவர் அவர்களே, ஐக்கிய நாடுகள் சபை இதிலே
தலையிடுமா, தலையிடாதா, தலையிட்டுத் தீர்க்குமா, தீர்க்காதா
என்ற ஐயப்பாடுகள் எல்லாம் இருக்கலாம். ஐக்கிய நாடுகள்
சபை என்பதில் உலக நாடுகள் எல்லாம் ஈடுபட்டிருக்கின்றன.
அமெரிக்கா, ரஷ்யா போன்ற வல்லரசுகள் எல்லாம் அதிலே
இருக்கின்றன. இப்படி எல்லா நாடுகளும் சேர்ந்து உலக நாடு
களில் அமைதியும், மனித உரிமையும் காப்பாற்றப்படவேண்டும்
என்றும் சிறுபான்மையோர் உரிமை காப்பாற்றப்படவேண்டும்
என்பதற்காகவும்தான் அந்த ஐக்கிய நாடுகள் அவை இருப்பதால்
அங்கே கேட்பதில் தவறு இல்லை. வேண்டுமானால் எதிர்
பார்ப்பது நடக்கவில்லை என்று சொல்லுங்கள். பிரச்சினையை
தீர்க்கமாட்டார்கள் என்று சொல்லுங்கள். சிலவற்றை அவர்கள்
தீர்த்திருக்கலாம். பலவற்றை அவர்கள் தீர்க்காமல் இருந்திருக்
கலாம். ஆனால் தலையிடவேண்டும் என்று கேட்பதிலே தவறு
இல்லை. அப்படிக் கேட்கின்றபோது அவர்கள் தலையிடவும்
செய்யலாம், தலையிடாமலும் போகலாம். எனவே கேட்பதிலே
தவறில்லை. கட்டாயம் அவர்கள் தான் செய்வார்கள், எனவே
அவர்களை நமபித்தான் வாழ்கிறோம் என்று இல்லை. கேட்க
வேண்டும் என்ற முறைப்படி கேட்டோம் என்பதைத் தெரிவித்துக்
கொள்கிறேன்.

திரு. என். சங்கரய்யா: தற்காலிகத் தலைவர் அவர்களே,
அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் ஆதிக்கம் இன்று ஐ.நா.சபையிலே
இருக்கின்றது. நமது அரசாங்கத்திலே இருந்து சர்வ கட்சி
தூதுக்குழு டெல்லிக்குச் சென்றபோது, இப்பிரச்சினை ஐக்கிய



நாட்டுச் சபைக்குச் சென்றால் இந்தியாவிற்குச் சாதகமாக
இருக்காது என்று அரசு கருத்து தெரிவிக்கப்பட்டது. அப்படி
இருந்தும் கூட உலகத்திலே உள்ள நிலைமைகள் தெரிந்தும் கூட
இப்படித் தீர்மானம் போடுவது எவ்வளவு பெரிய ஆபத்து என்று
எங்களுடைய பிரதானமான ஆட்சேபனையைத் தெரிவித்தோம்.
அப்படி ஐக்கிய நாட்டுச் சபைக்குக் கொண்டு சென்றால்
இந்தியாவினுடைய ஒவ்வொரு உள்நாட்டு மைனாரிட்டி
பிரச்சினைகளையும் ஐக்கிய நாட்டுச் சபைக்குக் கொண்டு
செல்ல வேண்டும் என்று ஏகாதிபத்திய பிற்போக்கு சக்திகள்
சொல்லும் என்பதுதான் எங்களுடைய பிரதானமான
ஆட்சேபணை. இந்தப் பிரச்சினை இந்திய தமிழர்களுக்கும்
இலங்கைத் தமிழர்களுக்கும் உள்ள பிரச்சினை. எனவே இந்த
பிரச்சினை அந்த வட்டத்திற்குள்ளேதான் தீர்க்கப்படவேண்டும்.
எனவே இப்பிரச்சினையை ஒரு காரணமாக ஆக்கி ஏகாதி
பத்தியத்தினுடைய விளையாட்டுப் பொம்மையாக நாம் ஆக்கப்
படுவதற்கு அனுமதிக்கக்கூடாது. இன்றைக்கு ஐக்கிய நாடுகள்
சபையிலே பிரதானமான பங்கு வகிக்கக்கூடிய அமெரிக்கா
பற்றி இங்கே என்ன சொல்லியிருக்கிறார்கள்? இங்கே கொடுத்
திருக்கக்கூடிய தீர்மானத்திலே 'ஏ' பாராவிலே அரசாங்கம்
என்ன சொல்லியிருக்கிறது? "இலங்கை வாழ் தமிழருக்கு வாழ்
வளிக்க வேண்டிய வல்லரசான அமெரிக்கா, வாழ்வளிக்க முன்
வராமல்" என்று சொல்லியிருக்கிறார்கள். என்ன நம்பிக்கை
இது? அமெரிக்கா எப்படி வாழ்வளிக்கும்? அவர்கள் என்ன
எழுதிக் கொடுத்திருக்கிறார்களா? அல்லது அவர்களுக்கு
அவ்வாறு பாத்தியதை இருக்கின்றதா? இன்றைக்கு அமெரிக்கா
மற்ற நாடுகளை எந்த அளவுக்குச் சுரண்டுகின்றது என்பது
தெரியுமா? கிரேனாடா நாட்டிலே இடதுசாரி சர்க்கார் ஏற்பட்டு
விட்டது என்ற ஒரே காரணத்திற்காக கப்பற் படையை
அனுப்பி அந்த நாட்டையே கபளிகரம் செய்கின்றது. இப்படிப்
பட்ட அமெரிக்க ஏகாதிபத்தியம் தமிழர்களுக்கு வாழ்வளிக்குமா?
அதுதான் அவர்களுடைய கடமை என்று நமபுகிறீர்களா?
வியட்நாம் பிரச்சினையாக இருக்கட்டும், கொரியா பிரச்சினை
யாக இருக்கட்டும். இந்தியா-பாகிஸ்தான் பிரச்சினையாக இருக்
கட்டும், இப்படிப்பட்ட எந்தப் பிரச்சினையாக இருந்தாலும்
அவர்கள் வாழ்வளிப்பதற்காகத் தலையிடவில்லை. சுதந்திர
நாடுகளின் உரிமையை கபளிகரம் செய்து அந்த நாடுகளில்
தன்னுடைய ஆதிக்கத்தை ஏற்படுத்த வேண்டும் என்பதற்காகத்
தான் தலையிட்டிருக்கிறார்கள். ஆகவேதான் சொல்கிறேன்.
இது மிகவும் தவறான கொள்கை. இது இந்தியாவின் சுதந்
திரத்திற்கே ஆபத்தை உண்டுபண்ணக்கூடிய கொள்கை.
இலங்கை, மற்றும் இந்தியாவின் சுதந்திரத்திற்கே ஆபத்து உண்டு
பண்ணக்கூடியது என்று குறிப்பிட்டிருக்கிறோம். எனவே இங்கே
கொடுக்கப்பட்ட தீர்மானத்தில் உள்ள மற்றவற்றை எல்லாம்
ஏற்றுக்கொண்டு சிலவற்றிற்கு மட்டும் திருத்தத்தைக் கொடுத்
திருக்கிறோம். இலங்கைத் தமிழர்களுக்கும், இலங்கைக்கும்,
இந்திய நாட்டிற்கும் ஆபத்தை உண்டுபண்ணும் என்று திருத்தம்
கொடுத்திருக்கிறோம். எனவே அது குறித்து நீங்கள் பரிசீலனை
செய்யவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து 'ஐ' என்ற பாராவிலே "ஐக்கிய நாடுகள் அவையின் மூலமோ அல்லது" என்று குறிப்பிட்டிருப்பது இருக்கக்கூடாது. "உலகச் செஞ்சிலுவைச் சங்கத்தின் மூலமோ அல்லது இந்திய தூதுவராலயத்தின் மூலமோ" என்றுதான் இருக்கவேண்டும். ஐக்கிய நாடுகள் அவைக்கு இதிலே ஒரு பங்கைக் கொடுக்க முடியாது.

அடுத்து காட்டுமிராண்டி சட்டத்தை வன்மையாகக் கண்டிக்கிறோம் என்பதைப் பற்றி குறிப்பிட்டிருக்கிறோம். அந்தச் சட்டம் வாபஸ் பெறப்படவேண்டும் என்றும் இலங்கையில் உள்ள தமிழ் மக்களின் பிரதிநிதிகளின் முன்னிலையில் பேச்சு வார்த்தை நடத்தப்படவேண்டும் என்றும் அதிலே குறிப்பிட்டிருக்கிறோம்.

அதேபோல் 'ஒ' என்ற பாராவிலே ஒரு திருத்தம் கொடுத்திருக்கிறோம். இந்த அரசாங்கம் கொண்டுவந்திருக்கக்கூடிய தீர்மானத்தின் பிரதான சாராம்சத்தை ஏற்றுக்கொள்கிறோம். ஆனால் சில முக்கியமான திருத்தங்களைக் கொடுத்திருக்கிறோம். அதைப்பற்றித்தான் இப்போது பேசிக்கொண்டிருக்கிறேன்.

அந்தத் திருத்தம் என்னவென்றால், அந்தப் பேச்சுக்கள் இலங்கை தமிழர்களுக்கு மன நிறைவையும் கொடுக்கவேண்டும் என்பதாகும். எங்களுடைய யோசனை என்னவென்றால், அது இலங்கைத் தமிழர்களுக்கு திருப்தியைக் கொடுக்க வேண்டும். பாதுகாப்பு கொடுக்கவேண்டும். அதோடு, தமிழர்கள்-சிங்களவர் மக்கள் மத்தியில் நம்பிக்கை ஏற்படும் வகையில் அந்த வட்ட மேஜை மாநாடு இருக்கவேண்டும் என்று தெரிவிக்கும் முறையில் நாங்கள் யோசனை கூற விரும்புகிறோம். அப்படிச் செய்தால் தான் இந்தப் பிரச்சனையில் நாம் நம்முடைய பொறுப்பை நிறைவேற்றியவர்களாக ஆவோம். ஆகவே, அந்த 'ஓ' பாரா பூராவையும் நீக்கிவிட்டு நாங்கள் கூறியுள்ள வகையில் அந்தப் பாராவை சேர்க்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு அமைச்சர் திரு. இராமச்சந்திரன் அவர்கள் ஐ.நா. சபையில் பேசியதைப் பற்றிச் சொன்னார்கள். நான் அது குறித்து கூறவிரும்புகிறேன். காரணம், தமிழ் மக்கள் தவறான அபிப்பிராயத்தை கொள்ளக்கூடாது என்பதற்காகச் சொல்கிறேன். இந்தியா, இலங்கை அரசாங்கத்தை எதிர்த்து ஏதோ ஒரு புகாரை ஐ.நா. சபையிடம் கொடுத்துள்ளதுபோலவும் அதை ஐ.நா. சபை விவாதத்திற்கு எடுத்துக் கொண்டு நடைபெற்ற விவாதத்தில் நம்முடைய அமைச்சர் பேசியது போலவும் சிலர் நினைத்துக்கொண்டு இருக்கிறார்கள். நான் தெரிவிக்க விரும்புகிறேன், ஐ.நா. சபையில் உள்ள ஸ்பெஷல் பொலிடிகல் கமிட்டி என்ற விசேஷ அரசியல் குழுவிலே ஏற்கனவே ஒரு நிகழ்ச்சி நிரல் இருந்தது. சர்வதேச நிலையில் அகதிகள் பிரச்னையை எப்படிச் சமாளிப்பது என்ற முறையில் அந்தப் பிரச்னை ஆய்வு செய்யப்பட்டு, அறிக்கை அங்கே பரிசீலனைக்கு வந்தது. அதிலே நுழைந்து மாண்புமிகு அமைச்சர்





திரு. இராமச்சந்திரன் பேசியிருக்கிறாரே ஒழிய இந்திய சர்க்கார்
இலங்கைக்கு எதிராக புகார் கொடுத்து, அந்தப் புகார் ஐக்கிய
நாடுகள் சபையில் எடுத்துக்கொள்ளப்பட்டு, இலங்கை அரசை
எதிர்த்து அங்கே இந்தியா பேசியது என்று யாரும் அர்த்தம்
கொள்ளக்கூடாது. ஏற்கனவே இந்திய சர்க்காருக்குத் தெரியும்.
அப்படிப்பட்ட அகதிப் பிரச்னை அங்கே வரப்போகிறது.
அதிலே பேசுவதற்கு நாம் தமிழ்நாட்டு அமைச்சருக்கு வாய்ப்புக்
கொடுக்கலாம் என்று ஏற்பாடு செய்யப்பட்டு இருக்கிறது.
அவர் என்ன சொல்லியிருக்கிறார் என்றால், 'இந்தியன் எக்ஸ்
பிரஸ்' பத்திரிகையில் வந்ததை நான் வாசிக்கிறேன்.

'The issue was raised in a low key manner by India in the special
Political committee during consideration of its agenda item concerning
the international co-operation to avert new flows of refugees.'
புதிதாக அகதிகள் வருவதைச் சமாளிப்பதற்கு என்ன செய்ய
வேண்டும்? சர்வதேச அளவில் அது எப்படி சமாளிக்கப்பட
வேண்டும் என்று ஏற்கனவே போட்டு இருந்த நிகழ்ச்சியில்
பங்கேற்கும்போது அவர்கள் 'லோ கீயில்' குறைந்த ஸ்தாயில்
பேசியிருக்கிறார். முழு ஸ்தாயில் அவர் பேசவில்லை. ஏனென்
றால், இந்தியா, இலங்கைப் பிரச்னையை ஐக்கிய நாடுகள்
சபைக்கு எடுத்துச் செல்லவில்லை. அதனால் பேசவில்லை.

"The danger off low of refugees into India is all too real, Thous-
ands have come and more are coming. As has been stated categori-
cally by our Prime Minister, India does not intervene in the internal
affairs of Sri Lanka or indeed any other Country. India does not
support any separatist movement nor does it support or condone resort
to violence of any kind.

Following the tragic events of July 1983 the Prime Minister of
India offered her good offices to help in the process of rebuilding con-
fidence and resuming a dialouge between the communities and this offer
has been accepted by the Prisident of Sri Lanka. It is our sincere
hope that in the spirit of democracy that has characterised the policy
of Sri Lanka a vitable political solution will soon be found assuring
safety and legitimate rights to the Tamils as full and equal citizens so
that the people of Sri Lanka can live together in peace and harmony.
இதிலே எங்களுக்கு முழுமையான உடன்பாடு. அவர் என்ன
சொல்லியிருக்கிறார்? இந்திய அரசாங்கம் திரு. பார்த்தசாரதி
அவர்களை அனுப்பி, இலங்கை அரசோடு பேச்சு வார்த்தை
நடத்தியிருக்கிறது. இலங்கையில் உள்ள தமிழ் மக்களுக்கு
முழு உரிமை கிடைக்க, அவர்கள் நல்ல அமைதியோடு வாழ,
அந்த நம்பிக்கையை உருவாக்க, அனைவரும் ஒன்று சேர்ந்து
வாழ வழிவகுக்கவேண்டும் என்று தான் குறிப்பிட்டு இருக்கிறார்.

இன்னொன்றையும் நாம் கவனிக்கவேண்டும் என்று விரும்பு
கிறேன்.

"Apart from the statements of India and Sri Lanka and their exchanges, no other member State chose to comment on the subject in the committee."

இந்தப் பிரச்னை பற்றி இலங்கைப் பிரதிநிதியும், இந்தியப் பிரதிநிதியும் பேசினார்கள். அவர்கள் கருத்துப் பரிமாற்றங்கள் தவிர, இந்தப் பிரச்னை பற்றி வேறு எந்த நாடும் தங்களுடைய கருத்தை அங்கே தெரிவிக்கவில்லை. இது எதைக் காட்டுகிறது என்றால், இது ஒரு முழுமையான இலங்கைக்கு எதிரான பிரச்னையாக இந்தியா கொண்டு போகவில்லை. இரண்டு நாடுகளுக்கும் இடையே உள்ள ஒரு 'ரெப்யூஜி' பிரச்னையில் ஒரு கருத்தாக இது பேசப்பட்டு இருக்கிறது என்று தான் அங்கே சொல்லப்பட்டு இருக்கிறது.

அது மட்டுமல்ல, அவர் மறுபடியும் பேசியிருக்கிறார்.

"Exercising his right of reply, Mr. Ramachandran stoutly defended India's action in bringing up the issue of flow of Tamil refugee from Sri Lanka in the wake of the July disturbances and said it was not the intention to internationalise the issue, It was India's hope that the problems in Sri Lanka would be resolved peacefully and with wisdom and justice."

He said India's bonafides were manifest and the good offices of the special envoy of the Prime Minister were still available. We trust the Government of Sri Lanka would make use of that.

We confined ourselves only to the extent of flow of refugees from Sri Lanka. We neither criticised the policies of Sri Lanka nor criticised the actions of the Government of Sri Lanka. In fact, even in my intervention, I had made it clear that we do not propose and we do not intend to interfere in the internal affairs of Sri Lanka.

(முற்பகல் 11-30)

இதுதான் மாண்புமிகு அமைச்சர் இராமச்சந்திரன் அவர்கள் அங்கே பேசிய முக்கிய பகுதி. அங்கே சொல்லியிருக்கக்கூடிய பிரதான பிரச்சனைகளை மட்டும் தமிழிலே மீண்டும் ஒருமுறை கூறுகிறேன். இந்தப் பிரச்சனை சமாதானமாக தீர்க்கப்படும் என்று நம்புகிறோம், இந்தியாவைப் பற்றிய அவருடைய எண்ணம் தெளிவாகச் சொல்லப்பட்டிருக்கிறது. சமாதானத் திற்காக ஜி. பார்த்தசாரதியை அனுப்ப இந்தியா தயாராக இருக்கிறது. இலங்கை அரசு ஏற்றுக்கொள்ள வேண்டும். நாங்கள் ரெப்யூஜி பற்றிப் பேசுகிறோமே தவிர இலங்கை அரசு நடவடிக்கைகளைக் கண்டனம் செய்யவில்லை. எந்த நாட்டின் உள்விவகாரங்களிலும் தலையிடும் எண்ணம் எங்களுக்கு



கிடையாது. இப்படிப்பட்ட சாராம்சத்தைச் சொல்லியிருக்கிறார். அதோடு இன்னொன்றையும் சொல்லியிருக்கிறார். அது ரொம்ப முக்கியமானது,

"It was not the intention to 'internationalise' the issue".

இதை சர்வதேசப் பிரச்னையாக்கக்கூடிய நோக்கம் எங்களுக்கு இல்லை. அப்புறம் ஐக்கியநாட்டு சபைக்குப் போகும் இடம் எங்கே இருக்கிறது? ஆகையால் தமிழ்நாடு சர்க்கார் ஆழ்ந்து சிந்தனை செய்யவேண்டும், ஒரு பக்கம் இந்திய அரசை வற்புறுத்தித்தான் காரியங்களைச்செய்ய வேண்டும். ஆனால் சர்வதேசப் பிரச்சனையாக்குவதை இந்திய அரசு ஏற்றுக்கொள்ளவில்லை. அதனால்தான் பாராளுமன்றத்தில் கண்டனத் தீர்மானம் கொண்டுவரவில்லை, அவர்கள் இலங்கைக்கும் இந்தியாவுக்கும் இடையே உள்ள பிரச்சனையாக இதைக் கருதி, நட்புறவு அடிப்படையில் தீர்வு காண விரும்புகிறார்களே தவிர மூன்றாவது நாடு தலையிட விரும்பவில்லை.

இலங்கையில் ஈழத்தில் வாழும் தமிழர்கள் 12 இலட்சம் பேர், தோட்டங்களில் தொழில் செய்பவர்கள் 10 இலட்சம் பேர், சிறு வியாபாரிகள், விவசாயிகள் 6 இலட்சம் பேர், முஸ்லிம்கள் 4 இலட்சம் பேர்—ஆக மொத்தம் 32 இலட்சம் பேர் வாழ்கிறார்கள். அவர்களில் 20 இலட்சம் பேர் இலங்கையில் 70 அல்லது 80 சதவீதம் சிங்களர் வாழும் பகுதியில் அவர்களுக்கு மத்தியிலே வாழ்கிறார்கள். அவர்களுக்கு நீங்கள் என்ன பரிகாரம் காணப்போகிறீர்கள்? ஈழத்தமிழர் வாழும் பகுதி வறண்ட பகுதி. இராமநாதபுரம் மாவட்டத்தைப் போன்று வறட்சியான பகுதி. அவர்களுக்கு என்ன வசதி செய்துகொடுக்க முடியும்? ஆகையால்தான் தொண்டைமான் போன்றவர்கள் மிக ஜாக்கிரதையாக இருக்கிறார்கள். இந்த 20 இலட்சம் மக்கள் பிரச்சனை முற்றிலும் மாறுபட்டிருக்கிறது. அவர்கள் சிங்களர் மத்தியிலே, கடல் போன்றிருக்கும் அவர்கள் மத்தியிலே வாழ்கிறார்கள். அவர்களுக்கு பாதுகாப்பு இல்லை. ஆகையால் இந்தப் பிரச்சனையை அணுகும்போது இலங்கைவாழ் தமிழர்கள், இந்திய தமிழர்கள், இந்திய வம்சாவழி தமிழர்கள் என்ற மூன்று பகுதியினருக்கும் பாதுகாப்பு அளிக்கின்ற வகையில் தமிழ்நாடு சட்டமன்றமும், இங்கே இருக்கக்கூடிய அரசியல் கட்சிகளும், அரசியல் கண்ணோட்டம் காட்டாமல் அந்த இலட்சக்கணக்கான மக்களின் உயிருக்கும் உடமைக்கும் நிலைத்த பாதுகாப்பு அளிக்கும் வகையில் செயல்பட்டால் சிறப்பாக இருக்கும். அப்படிப் பார்த்தால் இலங்கை ஒரு நாடு. அங்கே சிங்களர்களும் தமிழர்களும் ஒன்றுபட்டு வாழ வேண்டும். தனித்து அல்லது பிரிந்து வாழமுடியாது.

இந்திய நாட்டிலே நாம் பிரிவினையை கைவிட்டுவிட்டோம். இங்கே மைனாரிட்டி பிரச்சினை இல்லாமல் இருக்கிறதா? ஆனால் இந்திய நாடு என்று வைத்துக்கொண்டு, இந்திய

நாட்டுக்குள் தீர்க்கப்பட வேண்டிய பிரச்சினை இது என்று சொல்லி பிரிவினையை கைவிட்டு விட்டோம். ஆகவே இன்றைக்கு உலக நாடுகள் இலங்கைத் தமிழர் பிரச்சனையைத் தீர்க்க முயற்சி செய்ய வேண்டும் என்று கூறுவதில் பொருத்தம் இல்லை.

அதைப்போன்று படையெடுப்பு என்று சொல்வது ஒரு சொலூஷன் ஆகாது; அது பிரச்சனையைத் தீர்க்காது. வங்காள தேசத்தில் படையெடுப்புச் செய்யவில்லையா என்று கேட்கிறார்கள், அந்தப் பிரச்சனை வேறு. மேற்குப்பாகிஸ்தான் இராணுவ ஆட்சியை எதிர்த்துப் போராடினார்கள். அதனால் இந்தியாவுக்கு பிரச்சனைகள் பல வந்தன. இந்தியா பாதிக்கப் பட்டது. வங்காள தேசத்து மக்கள் அகதிகளாக இந்தியாவுக்குள் வந்தவண்ணம் இருந்தார்கள். இந்தியா உலக நாடுகளிடம் சொல்லி தடுக்க முயற்சி செய்தது. ஆனால் பயன் எதுவும் ஏற்படவில்லை. இந்தியா நேரடியாகப் பாதிக்கும் சூழ்நிலை ஏற்பட்டது. வங்காள தேசத்து மக்கள் பாகிஸ்தான் இராணுவ ஆட்சியை எதிர்க்க சுதந்திரப் படை என்ற அமைப்பை ஏற் படுத்தி போராடினார்கள். ஒரு குறிப்பிட்டக் கட்டத்தில் இந்தியாவின் உதவியை நாடினார்கள். இந்தியா அதிலே தலையிடவேண்டியிருந்தது. அதை அந்த நாட்டு 7 கோடி மக்களும் வரவேற்றார்கள். அவர்களே பாதை காட்டினார்கள் உணவு கொடுத்தார்கள். ஒருசில நாட்களிலேயே டாக்கா வீழ்ந்தது. உடனே திரும்பி வந்துவிட்டோம்.

வந்த மச்சான் திரும்பப் போங்கள். நீங்கள் வந்த காரியம் முடிந்துவிட்டது. உடனே போங்கள் என்று சொல்லிவிட்டான். ஆனால் இலங்கைப் பிரச்சினை என்ன? 32 இலட்சம் தமிழர் களுக்காக இந்தியா குறுக்கிடுகிறது என்று வைத்துக் கொள்ளுங்கள். இந்த 32 இலட்சம் பேர்களுக்காக ஒரு பக்கமும், ஒரு கோடி சிங்களவர்களுக்காக மறுபக்கமும் எதிர்த்துப் போராடவேண்டும். பங்களாதேஷின் பிரச்சினை என்னவென்றால் 7 கோடி மக்களும் மேற்குப் பாகிஸ்தானத்தை எதிர்த்துப் போராடினார்கள். ஒருவர் கூட மேற்கு பாகிஸ் தானுக்காக ஆதரவாக இல்லை. ஆனால் இங்கே இலங்கையிலே உள்ள பெரும்பான்மையான மக்களை எதிர்த்து, சிறுபான்மை யான மக்களை ஆதரித்து, இந்த சைன்யம் போகும்போது கட்டாயமாக எதிர்ப்பு ஏற்படும். எதிர்ப்பு மட்டுமல்ல. இலங்கைக்குப் போகிறோம். திரும்பிவரமுடியுமா? திரும்பி வருகிறோம் என்ற பேச்சுக்கே இடமில்லை. இலங்கையை காலனியாக்குவது என்ற பாதையைத் தவிர இந்திய சைன்யம் போய்விட்டு, அவர்களுக்கு ஈழத் தமிழகத்தை ஏற்படுத்திவிட்டு, திரும்பி வருகிறோம் என்ற பேச்சுக்கு இடமில்லை என்பதை நாம் புரிந்துகொள்ள வேண்டும். ஆகவே தான் அந்த காலனி பாதையிலே போனால், இலங்கையும், இந்தியாவும் சேர்ந்து காலனி ஆதிக்கத்தை எதிர்த்து போராடியது. இந்தப் பிரச்சினைக்கு என்று படையெடுத்துப் போனால் தமிழர்களுக்கு நியாயம் அடிபட்டுபோகும். ஆக ஈழத் தமிழர்ப் பிரச்னையும் அடிபட்டுப்போய்விடும்.



70 கோடி மக்களைக் கொண்ட இந்தியா தன்னுடைய பயங்கரமான ஆகாயவிமானங்களையும், கடற்படையையும், ஆயுத பலத்தையும் வைத்துக்கொண்டு 1½ கோடி மக்கள் வாழ்கின்ற சிலோனை பயங்கரமாக தாக்குகிறது என்றால், உலக மக்கள் கண்டனம் இந்தியாவை எதிர்நோக்கி வருமே தவிர, உலக மக்கள் ஆதரவு நிச்சயமாக வராது. எனவே தமிழர் பிரச்சினையின் நியாயம் நிச்சயமாக அழிக்கப்பட்டுவிடும்.

இந்தியா ஒரு பெரிய நாடு.'நாம் இப்போது படை எடுக் கிறோம் என்று சொன்னால், அந்த நாட்டிலே உள்ளவன் இந்தப் பிரச்சினையைத் தீர்க்காமல், யார் இந்தியாவிற்கு எதிராக பாதுகாப்பு கொடுக்க வருவார்கள் என்று தான் போவான். மனித உணர்வு இந்தியா படையெடுக்கும் என்றும் ஆபத்து வந்தால், யாரிடம் போவான்? இந்தியாவிற்கு எதிராக படை யெடுப்பதற்கு யார் உதவுவார்கள்? என்பதை பார்க்கும்போது இந்தியாவிற்கு பரம விரோதி அமெரிக்கா. அதனுடைய படை களைக் கொண்டு வரலாம் என்று போனால் நாம் என்ன செய்ய முடியும்? மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்டு கட்சி எச்சரிக்கை விடுகிறது. நாம் மேலும் மேலும் படையெடுப்பு என்ற பேச்சைப் பேசினால் இலங்கை அரசாங்கம் ஏகாதிபத்யத்திடம் பூரணமாக சரணாகதி அடைந்து தன்னுடைய நாட்டை அதனிடம் ஒப்படைக்கக்கூடிய நிலைமையை நாம் உருவாக்குவோம். அது தமிழ்மக்களுக்கு உதவி செய்யாது.

லெபனானில் இன்றைக்கு அமெரிக்கத் துருப்புகள் இருக் கின்றன. சோவியத் ரஷ்யா என்ன குற்றம் சாட்டுகிறது தெரியுமா? சமாதானத்தைப் பாதுகாக்கப் போன அவர்கள் லெபனானினு டைய உள்நாட்டு பிரச்னையில் ஒரு கோஷ்டியோடு சேர்ந்து கொண்டு போராடுகிறார்கள். அதனாலே அங்கே உள்ள முஸ்லீம் கள் சுட்டுக் கொல்லப்படுகிறார்கள். ஐக்கிய நாடுகள் படை வந்தால் தமிழர்களுக்கு சாதகமாக இருக்குமென்று நினைக் கிறீர்களா? யோசனை பண்ணிப் பாருங்கள். ஏன் தமிழர்களுக்கு சாதகமாக இருக்கவேண்டும்? அவர்களுடைய நோக்கம் இலங்கைக்கும் இந்தியாவிற்கும் சண்டை மூட்டிவிடுவது. இலங் கையிலே ராணுவ தளத்தை ஏற்படுத்துவது. அதனாலே இந்தியாவை அபாயத்திற்கு உள்ளாக்குவது.

ஆகவே, நான் கூற விரும்புவது நாம் படையெடுப்பு என்று பேசினால், அது இலங்கை அரசை ஏகாதிபத்யத்திடம் பூரணமாக சரண் அடையக் கூடிய பாதையை வகுக்கும். அது தவறு. எனவே தான் நான் கூற விரும்புவது. இன்றைக்கு நாம் அணுக வேண்டிய முறை இந்தத் தீர்மானத்தில் குறிப்பிடப்பட்டிருக்கிறது. இந்திய அரசாங்கம் விறுவிறுப்பாக நடவடிக்கை எடுத்து, அவர் களோடு பேசி. இலங்கை இந்த மாதிரி வட்டமேஜை மகா நாட்டைக் கூட்டி, அதிலே அவர்களுடைய அபிப்பிராயத்தை கண்டுபிடிக்கவேண்டும்.

அமிர்தலிங்கம் அவர்கள் தெளிவாகச் சொன்னார்கள். ஈழம் என்ற பிரச்சினையை ஒரு குறிப்பிட்ட காலத்தில் வைத்தோம் பேச்சு வார்த்தை தோல்வியடைந்த நேரத்தில் வைத்தோம்.

இன்றைக்கு மக்கள் மத்தியிலே வாக்கு வாங்க வேண்டும்.
இன்றைக்கு நாங்கள் போகிறோம்.—பேச்சு வார்த்தைக்குப்
போகிறோம். அவர் என்ன சொன்னார்? ஈழத்தை ஏற்றுக்கொள்ள
வேண்டுமென்ற முன் நிபந்தனையோடு போகிறோம் என்று
சொல்லவில்லை. இலங்கை அரசாங்கம் தனி ஈழம் வேண்டியதில்லை
இலங்கையிலே உள்ள தமிழ் மக்களுக்கு சுயாட்சி உரிமையையும்
மற்ற உரிமைகளையும் கொடுக்கக்கூடிய, தமிழர்களுக்கு கல்வித்
துறையிலேயும், அரசாங்கத்திலேயும் பாதுகாப்பு கொடுக்கக்
கூடிய, தமிழ் மொழிக்கு உரிய இடம் கிடைக்கக்கூடிய முறை
யிலே—இந்தப் பிரச்சினையை தீர்த்து அனுப்புவோம். அவர்
களுக்கு பாதுகாப்பும், சுயாட்சி உரிமையும் கிடைப்பதற்கு அந்த
அடிப்படையிலே மாற்றுத் திட்டத்தைக் கொடுத்தால்,—
அமிர்தலிங்கம் ரொம்ப நியாயமாகச் சொல்கிறார்—அதை நாங்கள்
பரிசீலிக்கத் தயாராக இருக்கிறோம். அந்தத் திட்டத்தை
எங்களுடைய மக்கள் மத்தியிலே சொல்ல தயாராக இருக்கிறோம்.
அவர்களுடைய தீர்ப்பை பெற்றுக்கொண்டு மறுபடியும் வரத்
தயாராக இருக்கிறோம் என்று கூறியிருக்கிறார்கள். அவரே
அப்படிச் சொல்லும்போது, இல்லை, நீங்கள் தனி நாடு
கோரிக்கையைக் கைவிடக்கூடாது, நீங்கள் விட்டாலும், நாங்கள்
விடமாட்டோம் என்றால் என்ன அர்த்தம்?

இப்போது நம்முடைய நோக்கம் என்ன? இலங்கையிலே
இருக்கக்கூடிய 32 லட்சம் பேர் நிம்மதியாக வாழவேண்டும்.
இதிலே சொல்லப்பட்டிருக்கிறது. உயிருக்குப் பாதுகாப்பு நிலை
யான பாதுகாப்பு இரண்டாம் தரமான குடிமக்கள் அல்ல: முதல்
தரமான குடிமக்கள் என்ற முறையிலே நடத்தவேண்டும்
என்றால் அவர்களுக்குப் பாதுகாப்பு வேண்டும். தோட்ட தொழி
லாளர்கள் ஏற்கனவே கொஞ்சம்பேர் இங்கே வந்தார்கள். அவர்
களுக்குள்ள பிரச்சினை 7 பேர் வந்தால் இரண்டு பேர்களுக்குத்
தான் வேலை கிடைத்தது. அந்த வேலையை செய்ய அவர்கள்
மிகவும் கஷ்டப்படுகிறார்கள். அவர்களுடைய அனுபவம் மிகவும்
கசப்பானது. இந்த நிலையில் அங்கே உள்ள 2ப இலட்சம் பேர்
களை இங்கே எடுத்துக் கொள்ள முடியுமா? ஏற்கனவே இந்தியா
விலே வறுமைக்கோட்டிற்குக் கீழே 60 சதவீதம் இருக்கும்போது,
இந்தப் புதிய பளுவை ஏற்றுக்கொள்ள முடியுமா? அதனாலேயே
இந்தியப்பிரதமர் சொல்வது, நம் இலட்சக்கணக்கான அகதிகளை
யெல்லாம் இங்கே ஏற்றுக்கொள்ளமுடியாது. அது மனிதாபி
மானத்திற்கு விரோதமானது என்று பார்க்கக்கூடாது. இது
உங்களுடைய பிரச்சினை. உங்களால் தான் உருவாக்கப்பட்டது.
உங்களுடைய நாட்டிலே வாழ்ந்ததால், உங்களுடைய பொருளா
தாரத்தைப் பலப்படுத்தினான். அவன் இல்லாமல் உங்களுடைய
தேயிலைத் தோட்டங்கள் இருக்காது. உங்களுக்கு அயல்
நாட்டுச் செலவாணி கிடைக்காது. ஆகவே பாதுகாக்க வேண்டி
யது உங்களுடைய பொறுப்பு.

(முற்பகல் 11-40)

ஸ்ரீமாவோ பண்டார நாயகாவுக்கும் சாஸ்திரிக்கும் ஏற்பட்ட
ஒப்பந்தம் கூட வேண்டாம் என்றுதான் இலங்கைத்தமிழர்கள்
சொல்லியிருக்கிறார்கள். ஆனால் இந்தியா தன்னுடைய நல்



எண்ணத்தின் அடிப்படையில் ஒரு சிறிய நாட்டுக்கு பளு வேண்டாம்
என்று சொல்லி, சில லட்சக்கணக்கான பேர்களை ஏற்றுக்கொள்
கிறோம் என்று சொன்னார்கள். பாதி நிறைவேற்றப்பட்டது.
அவர்களும் பாதி பேர்களுக்கு குடியுரிமை கொடுத்திருக்கிறார்கள்.
இன்னும் ஒரு சில லட்சம் பேர்களுக்கு குடியுரிமை கொடுக்க
வேண்டியிருக்கிறது. ஆனால் அவர்களுடைய சந்ததி இன்றைக்கு
பெருகியிருக்கிறது. அதனால்தான் இப்போது நான் சொல்கிறேன்.
அவர்களுக்கு அங்கேதான் குடியுரிமை அளிக்கவேண்டும். அவர்கள்
இலங்கையிலே குடியுரிமை பெற்ற மக்களாக வாழவேண்டும்.
அந்த அடிப்படையிலே இலங்கை என்ற அந்த நாட்டின் அமைப்புக்
குள், தமிழர்கள் நிம்மதியாக வாழ்வதற்கு நம்முடைய பேச்சு
வார்த்தைகள் துணை செய்யவேண்டும். இந்திய அரசாங்கமும்,
ஜி.பார்த்தசாரதியும் அவர்களிடம் போய், இலங்கை ஒரே நாடாக
இருக்கவேண்டாம் என்று சொல்ல ஆரம்பித்தாலே, அந்தப்
பேச்சு வார்த்தைஅத்தோடு சமாதி ஆகிவிடும். அதற்கு வழியே
கிடையாது. அந்த அடிப்படையிலே பேச்சு வார்த்தையின் மூலம்
இலங்கைத் தமிழர்களின் பிரச்சினையைத் தீர்க்கவேண்டும்,
அது ஒன்று தான் வழி என்று சொல்ல விரும்புகிறேன்.

கடைசியாக நான் இன்றைக்கும் சொல்கிறேன், அகதிகளாக
நாம் யாரை ஏற்றுக்கொள்கிறோம். அங்கேயிருந்து வாழ்
வதற்கு பயப்படுகிறவர்களை, இந்தியாவிற்கு வரவேண்டும்
என்று விரும்புகின்றவர்களை அகதிகளாக ஏற்றுக்கொண்டு பாது
காப்பு அளிக்கவேண்டியது இந்தியஅரசாங்கத்தின் கடமை. ஆனால்
அப்படி வருவது இன்றைக்கு குறைந்திருக்கிறது. ஏன் என்றால்
இந்திய சர்க்கார் தலையிட்டதற்குப் பிறகு அங்கே நிலைமைகள்
ஓரளவிற்கு அபிவிருத்தி ஆனதிற்குப் பிறகு மறுபடியும் அங்கே
தொழில்கள் நடத்தலாம். அங்கே ஒரு முயற்சியைச் செய்யலாம்
என்று மக்கள் நினைக்கிறார்கள். மக்கள் பெரிய அளவிற்கு
வரவில்லை. இதுதான் உண்மை. இன்றைக்கு பத்திரிகையிலே
பார்த்தேன். மண்டபத்திலே, தலைமன்னாரிலே இந்தியாவிற்கு
வரவேண்டும் என்பதற்காக ஆயிரக்கணக்கானவர்கள் காத்துக்
கொண்டிருக்கிறார்களா என்றால் இல்லை இதுதான் உண்மை.
அப்படி என்றால் நாம் என்ன செய்ய வேண்டும். அதை மேலும்
தனிமைப்படுத்தி, சாந்தப்படுத்தி அங்குள்ள மக்கள் வாழ்வதற்கு
ஏற்பாடுகள் செய்ய வேண்டும், அரசியல் கட்சிகள் என்ற
கண்ணோட்டம் பார்க்காமல், மாநில அரசு, மத்திய அரசு,
எதிர்க்கட்சிகள் என்ற கண்ணோட்டம் பார்க்காமல் இலங்கை
யிலே உள்ள 32 லட்சம் தமிழ் மக்களுக்காக வாழ்வளிக்க
வேண்டும், பாதுகாப்பு அளிக்க வேண்டும் என்று பார்த்தால்,
அதற்கு நாம் செய்ய வேண்டியது, சிங்களர்கள்—தமிழர்கள்
மத்தியில் ஒற்றுமை ஏற்பட, நிலைமை அமைதியாக ஏற்பட
பேச்சுவார்த்தை நடத்தி, தமிழர்கள் முழுபாதுகாப்பு, உரிமைகள்
பெற இலங்கை ஒரே நாடாக இருக்க நீடிக்க இலங்கை—இந்தியா
உறவு பலம் அடைய அமெரிக்காவின் சதித் திட்டங்களை முறி
யடிக்க இலங்கை—இந்திய சுதந்திரத்தை பாதுகாக்க பாடுபடு
வோம். இதுதான் நம்முடைய லட்சியமாக இருக்கவேண்டும்
என்று கூறி நாங்கள் கொடுத்திருக்கின்ற திருத்தங்களை இந்த
அரசாங்கம் பரிசீலிக்க வேண்டும். இதைத் தவிர இலங்கைக்கு

எதிராக சர்வதேச நடவடிக்கைகளை எடுக்கவேண்டும் என்று கூறுவோமானால் அதனுடைய விளைவு என்றுதான் இருக்க முடியும். அவர்களை மேலும் மேலும் ஏகாதிபத்திய முகாமுக் குள்ளே தள்ளுவோமே தவிர, வேறு ஒன்றும் இல்லை. இறுதி யாகக் கூறுகிறேன். இது இலங்கை பிரச்சினை என்று பார்க்கா தீர்கள். அமெரிக்க ஏகாபத்தியம் தென்கிழக்கு ஆசியாவிலே ஏற்கனவே பாகிஸ்தானை இந்தியாவிற்கு எதிராக திரும்பியிருக் கிறது நேபாளத்தின் நிலைமை சரியாக இல்லை; பங்களா தேசத்தின் நிலைமை சரியாகவில்லை என்று உங்களுக்குத் தெரியும். அப்படிப்பட்ட நேரத்தில் ஏற்கனவே தியோகார்சியா என்ற தீவிலே தளம் அமைத்திருக்கிறார்கள். இலங்கையிலே அவர்கள் ராணுவ தளத்தை உண்டாக்க முடியுமானால் இந்தியா விற்கு நான்கு பக்கத்திலும் சுற்றி வளைப்பதற்கான திட்டம், ஏகாதிபத்திய திட்டம். அதைத் தவிர்க்கவேண்டும் என்றால் மிகுந்த ராஜதந்திரத்தோடு, மிகுந்த விவேகத்தோடு, தமிழர்கள் பிரச்சினையாக இலங்கை-இந்தியாவிற்கும் இடையிலுள்ள பிரச்னையாகத் தீர்க்கப்பட வேண்டும். சர்வதேசப் பிரச்சினையாக ஆக்கப்படாமல், தமிழர்களுக்கு முழு பாதுகாப்பு ஏற்படுவதற் காக நம்முடைய இந்திய மக்கள், ஒற்றுமையாக இருக்க வேண்டும். தமிழ் மக்கள் ஒற்றுமையாக இருக்கவேண்டும் என்று கூறி எங்களுடைய திருத்தங்களை தமிழ்நாடு சர்க்கார் பாரபட்சப் பூர்வமின்றி, யதார்த்தமாக அவர்கள் ஆராய்ந்து அதை ஏற்றுக்கொள்ளவேண்டும் என்று கூறி என்னுடைய உரையை முடித்துக்கொள்கிறேன். நன்றி, வணக்கம்.

*திரு. ப. நெடுமாறன்: மாண்புமிகு தலைவர் அவர்களே, நம்முடைய தமிழ் சமுதாயத்தின் வரலாற்றிலே இது போன்ற சோதனை இதுவரை ஏற்பட்டதேயில்லை, என்ற நிலைமையிலே நாம் ஒரு முக்கியமான தீர்மானத்தைப்பற்றி இங்கே விவாதித்து கொண்டிருக்கிறோம். ஏற்கனவே ஆந்திர, கர்நாடக, கேரள சட்டமன்றங்கள் எல்லாம் இலங்கை தமிழ் மக்களுக்கு இழைக்கப் பட்ட கொடுமைகளை பற்றி விவாதித்து தீர்மானம் நிறை வேற்றிய பின்னால் நம்முடைய தமிழகத்தின் சட்டமன்றம் இப்போதாவது கூடி இந்த தீர்மானத்தை இங்கே கொண்டு வந்ததற்காக நான் மகிழ்ச்சி அடைகிறேன். அதை நாம் ஏற்கனவே செய்திருக்கவேண்டும். ஆகஸ்டு மாதம் முதல் வாரத்திலே இதற்காக ஒரு விசேஷ சட்டமன்றக் கூட்டத்தைக் கூட்டியிருக்க வேண்டும், இந்த முக்கியமான பிரச்சினை குறித்து தமிழகத்தின் வரலாற்றிலே இவ்வளவு பெரிய சோதனைஏற்பட்ட தில்லைஎன்ற நிலைமை வந்த பின்னாலும் கூட, அதற்கு 3 மாத காலம் ஆகியிருப்பதைக் கண்டு நான் உண்மையிலே வருத்தப்படு கிறேன். தமிழ் கூறும் நல் உலகம் எல்லாம் இதற்காக வருத்தப் படுகிறது. ஆனால் இந்த நிலைமையிலாவது இந்தத் தீர்மானம் வந்திருப்பதற்காக இந்த அரசாங்கத்திற்கு தமிழ் மக்களின் சார்பிலே என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். அதிலும் இந்தத் தீர்மானம் என்பது சுருங்கச் சொல்லி, விளங்க வைத்தல் என்று நன்னூலிலே சொல்வார்களே அப்படி இருந்திருக்க வேண்டும். நம்முடைய முன்னவர் நாவலர் அவர்களுக்கு அது



நன்கு தெரியும். ஆனால் 3, 4 பக்கங்களுக்கு அந்தத் தீர்மானம் இருந்தாலும் கூட நம்முடைய தமிழ்நாட்டு மக்களின் மன உணர்வுகளை, மனக் கொதிப்புகளை அது முழுமையாக வெளிப் படுத்தவில்லை என்பதை நான் இங்கே சொல்லிக் காட்ட விரும்பு கிறேன்.

வங்கதேசப் போராட்டம் நடைபெற்றக் காலத்தில், அந்தப் போராட்டத்திற்கு முன்னால், வங்க தேச மக்கள் அங்கேயிருந்து அகதிகளாக ஓடி வந்துக் கொண்டிருந்த நேரத்தில், இதேபோன்ற சூழ்நிலை வங்க தேசத்திலே உருவாக்கப்பட்டு, அங்கேயிருந்த மக்கள் பாகிஸ்தானின் ராணுவப் படுகொலைக்கு. இனப் படுகொலைக்கு ஆளாகி, இங்கே ஓடி வந்த நேரத்தில், அது உள்நாட்டுப் பிரச்னை என்று இந்தியா ஒதுக்கி வைக்கவில்லை. இன்றைக்கு இந்திய நாடாளுமன்றத்திலே ஒரு தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. அதன் முக்கியமான பகுதி சில வற்றை இந்த அவையின் கவனத்திற்கு நான் வைக்க விரும்பு கிறேன்.

The people of East Bengal are being sought to be suppressed by the naked use of force, by bayonets, machine guns, tanks, artillery and aircraft. The Government and people of India have always desired. and worked for peaceful normal and fraternal relations with Pakistan. However, situated as India is and bound as the people of the sub-con tinent are by centuries old, ties of history, culture and tradition, this House can not reman indifferent to the macabre ragedy be- ing enacted to close to our border. Throughout the length and breadth of our land, our people have condemned, in unmistakable terms, the atrocities now being perpetrated on an unprecedented scale upon an unarmed and innocent people. This House expresses its perfound sym- pathy for and solidarity with the people of East Begal in their struggle for a democratic way of life.

Bearing in mind the permanent interests which India has in peace, and committed as weare to uphold and defend human rights, this House deman, immediate cessation of the use of force and the massacre of defenceless people. This House calls upon all people and Governments of the world to take urgent and constructive steps to prevail upon the Government of Pakistan to put an end immediately to the syste matic decimation of people which amounts to genocide.

This House records its profound conviction that the historic up- surge of the 75 million people of East Bengal will triumph. The House wishes to assure them that their struggle and sacrifices will receive the whole-hearted symphathy and support of the people of India."

நாடாளுமன்றத்திலே நிறைவேற்றப்பட்ட அந்த என்று தீர்மானத்தின் சாரமும், அந்தத் தீர்மானத்தின் வாசகங்களிலே தொனிக்கின்ற அந்த உறுதிப்பாடும், இன்று ஆளும் கட்சி கொண்டு வந்திருக்கக்கூடிய இந்த தீர்மானத்திலே இல்லை என்பதை சுட்டிக்காட்ட விரும்புகிறேன். இன்னும் தெளிவாக

இன்னும் உறுதியாக நம்முடைய தமிழக மக்களின் மனக் கொதிப்பை இந்திய மக்களின் மனக்கொதிப்பை உணர்த்தும் வகையில் இந்தத் தீர்மானம் அமைந்திருக்க வேண்டும்.

அடுத்து இலங்கையில் நடைபெற்றுக் கொண்டிருக்கக்கூடிய கொடுமைகளை ஒரு நட்-—ஷெல்லிலே சுருக்கமாகச் சொல்ல வேண்டும் என்றால் 1948 ஆம் ஆண்டு இலங்கை விடுதலைப் பெற்ற நாளிலிருந்து, அங்கு வாழும் தமிழர்கள் தொடர்ந்து கொடுமைப்படுத்தப்படுகிறார்கள் என்றுதான் சொல்லவேண்டும். 1948ல் 10 லட்சம் இந்திய வம்சா வழி வந்த தமிழர்கள் ஏறத்தாழ 150 ஆண்டுகளுக்கு மேலாக இலங்கையிலே வாழ்ந்து, தங்களுடைய ரத்தத்தை வேர்வையை சிந்தி, ரப்பர் தோட்டங்களையும், தேயிலைத் தோட்டங்களையும் உருவாக்கி, அந்த நாட்டை வளம் கொழிக்கும் நாடாக்கி அந்த நாட்டின் தேசிய வருமானத்தில் 70 சதவீதத்தை ஈட்டிக்கொடுத்த தமிழர்கள் தங்களுடைய வாக்குரிமை பறிக்கப்பட்டு, இந்தியாவுக்கும் சொந்தம் இல்லாமல், இலங்கைக்கும் சொந்தம் இல்லாமல் நாடற்றவர்கள் என்ற பெயரால் அனாதைகள் ஆக்கப்பட்டார்கள்.

அதைத் தொடர்ந்து இன்று வரையில் ஏறத்தாழ 5 லட்சம் தமிழர்கள் அகதிகளாக மாற்றப்பட்டு தமிழகத்திற்கு ஓடி வந்துக் கொண்டிருக்கிறார்கள். இன்னும் 6 லட்சம் பேர்கள், நாடற்றவர்களாக, எந்த உரிமையும் அற்றவர்களாக அங்கே வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். சிங்களம் மட்டுமே அங்கே ஆட்சி மொழியாக்கப்பட்டு தமிழுக்கு அங்கே உரிய இடம் இல்லை என்பதும் நிலையாக்கப்பட்டு விட்டது. ஸ்டேண்டர்டைசேஷன் என்ற பெயராலே அங்கேயுள்ள தமிழ் மாணவர்கள் தங்களுக்கு உரிய கல்வியைக் கற்பதற்கு தடை. 1956 ஆம் ஆண்டிலேயிருந்து தொடர்ச்சியாக, 1968, 1971, 1974 198, ஆகிய ஆண்டுகளிலும் இப்போது 1983 ஆம் ஆண்டிலும், அங்கே தமிழர்களுக்கு எதிராக வன்முறை வெறியாட்டங்கள் தொடந்து நடைபெற்றிருக்

[முற்பகல் 11-50]

கிறது. வன்முறை வெறியாட்டங்கள் என்று சொன்னால்
ஏதோ இரண்டு இன மக்களிடையே நடப்பது அல்ல. திட்ட
மிட்டு இலங்கை ராணுவமும் போலீசும் ஆயுதம் இல்லாத
அப்பாவி தமிழ் மக்கள் மீது வன்முறை ஆட்டத்தைத்
தொடர்ந்து நடத்திவருகிறார்கள். அங்கே தமிழர்கள் வாழ்
கின்ற பகுதிகளில் இராணுவ ஆட்சி நடைபெற்று வருகிறது.
அந்தப் பகுதிகளில் எல்லாம் இராணுவத்தின் கட்டுப்பாட்டில்
நிர்வாகம் நடைபெற்று வருகிறது. Prevention of Terrorism Act
என்ற சட்டத்தின் கீழே தமிழர்கள் கைது செய்யப்படுகிறார்கள்.
இளைஞர்கள் விசாரணையில்லாமல் கொடுமைப்படுத்தப்படு
கிற நிலை இருக்கிறது. அங்கே நடைபெறுகிற இராணுவக்
கொடுமைகளைப் பற்றி நான் அதிகமாக சொல்ல வேண்டிய
தில்லை. அதை தமிழகம் நன்கு அறியும்.





குறிப்பாக கிறிஸ்துவ பாதிரிகள், காந்தியத் தொண்டர்கள்' பேராசிரியர்கள் மற்ற சமூக ஊழியர்கள் The cream of the society என்று சொல்லக்கூடியவர்களைக்கூட அவர்கள் விட்டு வைக்கவில்லை. அவர்களை விசாரணையின்றி சிறைக்காவலில் வைத்து அடித்துக்கொன்று விடுகிறார்கள். அதிலும் காந்திய இயக்கம் என்ற பெயரிலே ஒரு இயக்கத்தை மதிப்பிற்குரிய நண்பர் திரு. டேவிட் அவர்கள் நடத்தினார்கள். அதற்கு திரு. ராஜசுந்தரம் என்பவர் செயலாளராக இருந்தார். இந்த இரண்டு பேர்களும் செய்த தவறு என்ன? இலங்கையிலே உள்ள மலைப் பகுதியிலே உள்ள ரப்பர் தோட்டங்களிலே வேலைபார்த்துக் கொண்டிருந்த தமிழர்கள், இந்த இனக் கலவரங்களால் பாதிக்கப்பட்டபோது. அகதிகளாக இந்தியாவிற்கு ஓடிவந்தபோது அவர்களைத் தடுத்து நிறுத்தி நீங்கள் இந்தியாவிற்கு ஓடவேண்டாம், உங்களுக்கு வேண்டியதை நாங்கள் செய்கிறோம், நீங்கள் எங்கள் சகோதரர்கள் என்று சொல்லி அகதிகள் முகாம்களை உருவாக்கி அவர்களுக்கு அபயம் கொடுத்து ஈழத் தமிழர்கள் வாழ்கின்ற பகுதிகளிலே அவர்களைக் குடியேற்றுகிற வேலையைச் செய்தார்கள். ஏறத்தாழ 80 ஆயிரம் பேர்கள் அப்படி குடியமர்த்தப்பட்டார்கள். அவர்களுக்கு வேண்டிய நிவாரணத்தை இவர்கள் செய்ததாலே இந்த இரண்டு பேர்களும் அதிலே தீவிரமாக ஈடுபட்டதாலே இந்த காந்திய இயக்கத்தையே ஒடுக்கவேண்டுமென்று சொல்லி அவர்களைப் பிடித்து கொழும்பு இராணுவச் சிறையிலே வைத்தார்கள். மதிப்பிற்குரிய திரு. ராஜசுந்தரத்தை அங்கே அடித்துக் கொன்றார்கள். இதில் உயிர் தப்பிய நண்பர் திரு. டேவிட் அவர்கள் மட்டகளப்பு சிறையில் அடைக்கப்பட்டார்கள். பிறகு அவர்கள் அங்கிருந்து தப்பி இந்தியாவிற்கு வந்திருக்கிறார்கள். அவர்கள் சொல்லிய செய்திகளைக் கேட்கிறபோது நெஞ்சில் எல்லாம் பதறும். அந்த அளவுக்கு அமைதியாக காந்திய வழியில் மக்களுக்குத் தொண்டு, சேவை செய்துகொண்டு வந்தவர்களைக்கூட இராணுவம் விட்டு வைக்க மறுக்கிறது. அதிலும் குறிப்பாக இந்திய வம்சாவழித் தமிழர்களை ஈழத் தமிழர்கள் வாழுகின்ற பகுதியிலே கொண்டுபோய் குடியேற்றினார்கள் என்பதற்காக அவர்களுக்கு இப்படிப்பட்ட கொடுமைகள் இழைக்கப்படுகின்றன. ஈழத் தமிழர்கள் வாழுகின்ற பகுதியில் உள்ள வவுனியா என்ற பகுதியைச் சேர்ந்த அந்தப் பகுதியின் நாடாளுமன்ற உறுப்பினராக இருக்கின்ற திரு. சிவசிதம்பரம் அவர்கள் அவர்களை குடியேற்றி அவர்களைப் பாதுகாத்து அரவணைத்தார். ஆனால் இன்றைக்கு அவரும் இந்தியாவுக்கு அகதியாக ஓடிவரக்கூடிய நிலைமை ஏற்பட்டிருக்கிறது. ஆகவே அவர்கள் யாரையும் விட்டுவைப்பதாக இல்லை: இலங்கையிலிருந்து தமிழர்களை விரட்ட வேண்டும், அங்கே வாழ்கின்ற தமிழர்களுக்கு இடம் கொடுத்தால் அல்லது அவர்களுக்கு அபயம் கொடுத்தால் அவர்களையும் விரட்ட வேண்டுமென்ற நிலைமை தான் நீடித்துக் கொண்டிருக்கிறது. அதற்கு ஆட்சி பீடத்திலே இருக்கிறவர்கள் துணையாக

இருக்கிறார்கள். அரசாங்கத்தின் தூண்டுகோலின்பேரில்தான் இவ்வளவும் நடக்கிறது. ஆகவே இலங்கைத் தமிழர் பிரச்னை நம்முடைய சமுதாயத்தைப் பாதிக்கிற பிரச்னை என்பதில் தமிழகத்திலே உள்ள 5 கோடி தமிழ் மக்களிடையேயும் எந்தவிதமான கருத்து வேறுபாடும் இல்லை. இதிலே எல்லோரும் ஒன்றுபட்டு இருக்கிறோம். இது ஏதோ ஈழத் தமிழர்களுடைய பிரச்சினை இலங்கையிலே வாழ்கின்ற 35 லட்சம் தமிழர்களுடைய பிரச்சினை என்று அந்தக் கோணத்திலே யாராவது இதைப் பார்த்தால் அது தவறு. இது நம்முடைய தமிழகத்தை, இந்தியாவைப் பாதித்து விட்ட பிரச்சினை என்பதை என்றைக்கும் மறக்கக்கூடாது.

இலங்கையில் திரிகோணமலையில் அன்னிய ராணுவத் தளம் வருவதற்கான ஏற்பாடுகள் நடைபெறுவது உங்களுக்குத் தெரியும். அங்கே அமெரிக்க ராணுவத்தளம் வருவதற்கான ஏற்பாடுகளை அவர்கள் செய்கிறார்கள். திரிகோணமலையில் அமெரிக்க ராணுவதளம் வருவது என்பது இலங்கைக்கோ அல்லது இலங்கையில் வாழ்கின்ற தமிழர்களுக்கோ எதிரானது மட்டும் அல்ல. அது நமக்கு எதிரானது. இந்தியாவுக்கு எதிரானது. இந்தியாவின் வாயிலில், இந்தியாவிலிருந்து சில மைல்கள் தொலைவில் அப்படி ஒரு அபாயம் வருகிற நேரத்தில் அதைப் பார்த்துக்கொண்டு இந்தியா சும்மா இருக்க முடியாது. அது இலங்கை உள்நாட்டுப் பிரச்சினை என்று நாம் ஒதுக்கித் தள்ளிவிடமுடியாது.

வங்காள தேச போராட்டத்தின் போது இந்திய நாடாளு மன்றத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தை நான் இங்கே படித்துக் காட்டினேன். அதிலே தெளிவாகச் சொல்லப்பட்டிருக் கிறது. எதற்கு திரிகோணமலையில் அமெரிக்க ராணுவதளம் வருகிறது? என்ன அவசியம்? எங்கேயோ இருக்கிற ரஷ்யாவையோ, சீனாவையோ, எதிர்க்க இலங்கையில் அமெரிக்க ராணுவ தளத்தை வைக்க விரும்புகிறதா. நிச்சய மாக இல்லை. இந்தியாவை மிரட்டுவதற்காக இங்கே ராணுவ தளத்தை வைக்கிறார்கள். இந்தியா ஏகாதிபத்திய எதிர்ப்புப் பாதையில் செல்கிறது என்பதால் அதை மிரட்டுவதற்காக இங்கே ராணுவதளத்தை வைக்கிறார்கள். வங்காள தேசப் போர்நடைபெற்ற நேரத்தில் அங்கே பாகிஸ்தான் ராணுவம் நிச்சயம் தோற்கும் என்ற நிலை வந்தவுடன் அமெரிக்கா தனது 7-வது கப்பற்படையை அனுப்பியது எல்லாம் உங்களுக்குத் தெரியும்; அன்று கிழக்கு கடற்படை வைஸ் அட்மினரலாக இருந்த மதிப்பிற்குரிய திரு. கிருஷ்ணன் அவர்கள் வங்காள தேசப் போர் பற்றி ஒரு புத்தகத்தை எழுதியிருக்கிறார்கள். அதிலே தெளிவாக சொல்லியிருக் கிறார்கள். எங்களுக்கு சிட்டகாங்கை முற்றுகையிடவேண்டும் என்றுதான் உத்திரவு வந்ததே தவிர இறங்கி தாக்கிப் பிடிக்க வேண்டும் என்று உத்திரவு இல்லை. ஆனால் திடீர் என்று ஒரு உத்திரவு வந்தது; இறங்கித் தாக்கிப்பிடிக்கவேண்டும் என்று. நாங்களும் இறங்கித் தாக்கி பிடித்தோம். பின்னால்தான் எங்களுக்குத் தெரிந்தது 7—வது கப்பற்படை வந்துகொண்டிருக்



கிறது என்று; அவர்கள் வருவதற்குள் வங்காள தேசத்தை பிடித்து விடவேண்டும் என்று உத்திரவு இடப்பட்டிருக்கிறது என்பது தெரிய வந்தது என்று சொல்லியிருக்கிறார்கள். 7-வது கப்பற் படை டிக்கோகார்ஷ்யாவிலிருந்தோ வியட்நாம் கடலிலிருந்தோ வருவதிலே சற்று காலதாமதம் ஆனது. இல்லை என்றால் வங்காள தேசப் போராட்டத்திலே அமெரிக்கா தலையிட்டு இருக்கும். நமக்கு உதவியாக ரஷ்யா வந்து இருக்கும், வங்காள தேசப் போராட்டம் ஒரு பெரிய போராட்டமாக உருவாகி இருக்கும். இதுபோன்ற நிலைமைகள் அப்போது தடுக்கப்பட்டன. இந்தியாவுக்கு வெகு தொலைவில் நம்முடைய கப்பற்படை இருக்கிற காரணத்தால் விரைவில் வரமுடியாமல்போய் நம்முடைய காரியம் அங்கே கெட்டுவிட்டது. ஆகவே இலங்கையிலே இந்தியாவுக்கு அருகிலேயே ராணுவ தளத்தை வைக்கவேண்டும் என்று அமெரிக்கா விரும்புகிறது. இலங்கை அரசு அதற்கு உடந்தையாக இருக்கிறது. இது இந்தியாவினுடைய பாதுகாப்புக்கு எதிரான செயல். இந்துமா கடலிலே அமைதியைக் குலைக்கும் செயல். இதிலே நாம் எச்சரிக்கையாக இருக்கவேண்டும். தெளிவாக இருக்கவேண்டும். இல்லை என்றால் ஆபத்து நம்முடைய தலைக்கு மேலே வந்து சேரும். இந்தப் பிரச்சினையை இந்தக் கோணத்திலேயும் நாம் பார்க்கவேண்டும்.

அதேநேரத்தில் நான் இன்னும் ஒன்றையும் சொல்ல விரும்புகிறேன், இலங்கையில் வாழ்கிற தமிழர்களுக்கு அங்கே ராணுவக் கொடுமைகள் அல்லது இனவெறி கலவரகொடுமைகள் நடந்தது போக இப்போது ஒரு புதிய ஆபத்து ஏற்பட்டு இருக்கிறது. அங்கே காலம் காலமாக, பாரம்பரியம் பாரம் பரியமாக தமிழர்கள் வாழ்கிற பகுதியில் திட்டமிட்டு சிங்கள வர்களைக் குடியேற்றம் செய்து இனவெறிப் போக்கை மேலும் வளர்க்கிறார்கள். இலங்கை அரசு இதைச் செய்கிறது. அங்குள்ள அமைச்சர்கள் இதை முன்நின்று நடத்து கிறார்கள்.

பாலஸ்தீனத்தில் யூதர்கள் புகுந்து அரேபியர்களை விரட்டினார்கள். இந்தப் பிரச்சினை உலகத்தில் மிகப்பெரிய பிரமாண்டமான பிரச்சனையாகி அது இன்னும் இருந்துகொண்டிருக்கிறது. பாலஸ்தீன் அரேபியர்கள் தாங்கள் இழந்த மண்ணை பெறமுடியாமல் இன்னும் போராடிக்கொண்டு இருக்கிறார்கள். எவ்வளவோ நாடுகள் அவர்களுக்கு எத்தனையோ வகைகளில் உதவி செய்தும் இழந்த மண்ணை அவர்கள் மீட்க முடியாத நிலைமை இருக்கிறது. இலங்கையில் தமிழர்கள் வாழ்கிற பகுதிகளில் திட்டமிட்டு சிங்களவர்களைக் குடியேற்றுவது என்பது இலங்கை அரசு ஒரு நீண்ட சதித் திட்டத்தில் ஈடுபட்டு அதில் அவர்கள் திட்டவட்டமாக செயல் பட்டு வருகிறார்கள் என்பதை மறக்கக்கூடாது. இந்தப் பிரச்சினையை இலங்கை அரசு இன்டர்நேஷனலைஸ் செய்ய விரும்புகிறது. இதை ஒரு சர்வ தேசப் பிரச்சினையாக்க விரும்பு கிறது. அமெரிக்கா போன்ற நாடுகளை எல்லாம் தன்னுடைய பக்கம் ஈர்த்து இந்தியாவை மிரட்ட விரும்புகிறது என்பதை மறந்துவிடக் கூடாது.

(நண்பகல் 12-00)

அதேநேரத்தில் பேச்சுவார்த்தைக்குத் தயாராக இருக்கக்கூடிய தமிழர் தலைவர்களைப் பார்த்து இலங்கை அதிபர் ஜெயவர்த்தனே என்ன சொல்கிறார்? நீங்கள் பிரிவினை கொள்கையைக் கைவிட்டால்தான் பேச்சுவார்த்தை என்று சொன்னார். அவர்கள் பேச்சுவார்த்தையிலேதான் எல்லாம் பேச வேண்டுமே தவிர, ஒரு நிபந்தனையை விதித்து, அதற்குப் பின்னாலேதான் பேச்சுவார்த்தை என்று சொல்வார்களேயானால், அந்த நிபந்தனையை தமிழர்கள் ஏற்க முடியாது என்ற நிலையை எடுக்கவேண்டிய சூழ்நிலையை ஏற்படுத்தி இருக்கிறார்கள். இப்பொழுது இரண்டாவது நிபந்தனை போடுகிறார்கள். இலங்கையிலே, விடுதலை இயக்கத்திலே, மிகத் தீவிரமாக ஈடு பட்டிருக்கக்கூடிய இளைஞர்களுடன் எந்தவிதமான தொடர்பும் இல்லையென்று மதிப்பிற்குரிய தலைவர் அமிர்தலிங்கம் அறிவிக்க வேண்டுமென்றும், அப்படி அறிவித்தால்தான் பேச்சு, என்று அடுத்த நிபந்தனை போடுகிறார். பேச்சுவார்த்தை நடத்தாமல் இருப்பதற்கு என்ன, என்ன, நிபந்தனைகள் எல்லாம் போட வேண்டுமோ, அதையெல்லாம் அவர்கள் போட்டு, பேச்சு வார்த்தைக்குத் தயாராக இல்லை என்பதை இலங்கை அரசு தெளிவாக எடுத்துக் காட்டிக் கொண்டிருக்கிறது.

அதுமட்டுமல்ல. உலக நாடுகளுக்கெல்லாம் இலங்கை அமைச்சர்கள் சென்று, இந்தியாவைப் பற்றி விரோதமான பிரச்சாரத்திலே திட்டமிட்டு ஈடுபடுகிறார்கள். இந்தியாவைப் பற்றி துஷ்பிரச்சாரம் செய்கிறார்கள். அது தொடர்ந்து நடக்கிறது. நம்முடைய மதிப்பிற்குரிய பிரதமர் இந்திரா காந்தி அவர்கள் திரு. ஜி. பார்த்தசாரதி அவர்களை ஒரு சுமுகமான சூழ்நிலை ஏற்பட வேண்டுமென்பதற்காக அனுப்பினார். திரு. பார்த்தசாரதி போய்விட்டு வந்தவர், திரும்பவும் இலங்கைக்கு எப்பொழுது போவார் என்பது தெரியவில்லை. இலங்கை அரசு அவரை அழைப்பதற்கு இன்னமும் தயாராக வில்லை. ஆனால், பேச்சு வார்த்தைக்கு இலங்கை அரசு முற்றிலுமாகத் தயாராகவில்லை. இந்தப் பிரச்சினையை ஒரு சர்வதேசப் பிரச்சினையாக்கி, இந்தப் பிரச்சினையில் இந்தியாவை மிரட்டவும், இலங்கையிலே வாழ்கிற தமிழர்களை அங்கேயிருந்து அகதிகளாக்கி, இந்தியாவிற்கு விரட்டியடிக்கவும் அவர்கள் திட்டமிட்டு இருக்கிறார்கள் என்பதுதான் இதுவரை வந்திருக்கிற செய்திகளிலிருந்து நமக்குத் தெரிகிறது. நம்மைப் பொறுத்தவரையிலே, தமிழகத்திலே சகல கட்சிகளும் நிதான மாக இந்தப் பிரச்சினையை அணுக வேண்டுமென்பதிலே எனக்கு ஆட்சேபணை இல்லை. ஏனென்றால் இந்தப் பிரச்னை என்பது இப்பொழுது ஏதோ இலங்கையிலே தமிழர்கள் பாதிக்கப்படு கிறார்கள். ஆகவே, இந்தியாவிலே உள்ள தமிழர்கள் அதற்காகக் குரல் கொடுக்கிறார்கள், அதைப்பற்றி அக்கறை செலுத்து கிறார்கள் என்பது அல்ல. மாறாக, இந்தப் பிரச்சினை 1983 ஆம் ஆண்டு, முதல் தடவையாக இந்தியா பூராவையும் ஈர்த்த பிரச்சினையாக இருக்கிறது. இந்தியா பூராவும் இருக்கிற சகல அகில இந்திய கட்சிகளும் இந்தப் பிரச்சனையிலே தங்களுடைய கவலையைத் தெரிவித்து இருக்கின்றன. இந்திய அரசு இதிலே



தலையிட வேண்டிய அவசியம் இந்த ஆண்டுதான் ஏற்பட்டிருக் கிறது. இந்தியப் பிரதமர் மதிப்பிற்குரிய இந்திரா காந்தி அவர்கள் இந்தப் பிரச்சினையிலே தன்னுடைய அக்கறையை வெளிப்படுத்தியிருக்கிறார்கள். ஆக, இந்தப் பிரச்சினை இந்த ஆண்டுதான் முதன்முறையாக, மொத்தத்திலே, அகில இந்தியாவையும் பாதிக்கின்ற பிரச்சினை என்பது ஒப்புக்கொள்ளப் பட்டிருக்கிறது. இது நல்ல வரவேற்கக்கூடிய ஓர் அம்சம். இந்த அம்சத்தின் அடிப்படையிலே நாம் இன்னொன்றை யோசித்துப் பார்க்கவேண்டும். இலங்கையிலே வாழ்கிற தமிழர்கள் சகல உரிமைகளோடும் அங்கே வாழ்வதற்கான ஏற்பாடுகளைச் செய்து கொடுக்க நாம் தவறினோமானால், அதிலே நாம் போதுமான அக்கறையைச் செலுத்தி அங்கே வாழ்கிற தமிழர்களுக்குப் பாதுகாப்பு செய்து கொடுக்கத் தவறினோமானால், நிச்சயமாக அங்கே வாழ்கிற தமிழர்கள் அகதிகளாக இந்தியாவிற்கு விரட்டி அடிக்கப்படுவார்கள் என்பதிலே சந்தேகம் இல்லை. வந்து கொண்டே இருக்கிறார்கள். அந்தத் தொகை நாளுக்கு நாள் அதிகரிக்கும். ஆனால், அதனுடைய விளைவுகள் என்ன ஆகும் என்பதை நாம் யோசித்துப் பார்க்கவேண்டும். இலங்கையிலே வாழ்கிற தமிழர்களைப் பாதுகாப்பதற்கு நமக்கு வக்கில்லை, வகையில்லை என்ற ஒரு நிலை ஏற்பட்டு விடுமானால், நிச்சய மாகச் சொல்கிறேன், அகதிகள் இந்தியாவை நோக்கி ஓடி வருவதற்கு அது முடிவாக இருக்காது, ஆரம்பமாக இருக்கும். உலகம் பூராவும் வாழ்கிற இந்தியர்கள். தமிழர்கள்—இவர்கள் மலேசியாவிலே வாழ்ந்தாலும், சிங்கப்பூரிலே வாழ்ந்தாலும், ஆப்பிரிக்க நாடுகளிலே வாழ்ந்தாலும், அரேபிய நாடுகளிலே வாழ்ந்தாலும், அவர்கள் அத்தனை பேர்களும் அங்கே இருந்து எல்லாம் விரட்டி அடிக்கப்படுகிற நிலைமையையும் அகதிகளாக இந்தியாவிற்கு வந்து குவியக் கூடிய நிலைமையையும் ஏற்படுத்தும்.

நான் இன்னொன்றையும் உங்களுடைய கவனத்திற்கு வைக்க விரும்புகிறேன். நாம் அத்துமீறி இன்னொரு நாட்டுக்குச் சென்று படையெடுப்பு நடத்த வேண்டும், அல்லது அந்த நாட்டை அடக்கி வைக்க வேண்டுமென்ற எண்ணத்திலே நான் சொல்ல வில்லை. மனித உரிமைகள் பறிக்கப்படுகின்றன. ஐக்கிய நாடு களின் சாசனம் வழங்கி இருக்கக்கூடிய மனித உரிமைகள் இலங்கையில் வாழ்கிற தமிழர்களுக்கு அளிக்கப்படவில்லை. மனித உரிமைகளைப் பாதுகாக்க வேண்டிய கடமை, உலகம் பூராவும் இருக்கக்கூடிய ஜனநாயக நாடுகள் அத்தனைக்கும் உண்டு. அந்த அடிப்படையிலே, இலங்கையிலேயிருந்து தமிழர்கள் விரட்டி அடிக்கப்படக்கூடிய நிலைமைக்கு முற்றுப் புள்ளி வைக்கத் தவறினால், மற்ற நாடுகளிலும் அதனுடைய விளைவுகள் ஏற்பட்டு, தமிழனை அடித்தால் என்ன என்று கேட்பதற்கு நாதி இல்லை. ஆகவே, எல்லா நாடுகளிலும் இருக்கக்கூடிய தமிழர்களை விரட்டி அடிக்கலாம் என்ற நிலைமை நிச்சயமாக வந்துவிடும். அண்டை நாடான பர்மாவிலிருந்து பிலிப்பைன்ஸ் வரை இருக்கக்கூடிய தென் கிழக்கு நாடுகளிலே இந்தியர்கள் மட்டுமல்ல, ஏராளமான சீனர்கள்கூட இருக்

கிறார்கள். நம்மைவிட எண்ணிக்கையிலே அ கமானவர்கள் பர்மாவிலே 10 லட்சம் சீனர்கள் இருக்கிறார்கள். மலேசியாவில்
இரண்டாவது பெருந்தொகை சீன மக்கள் தொகை. இந்தோ
னேசியாவில் சீனர்கள் நிறைய பேர் வாழ்கிறார்கள.
பிலிப்பைன்ஸ் வரையில் சீனர்கள் விரிந்து பரந்து
இருக்கிறார்கள். இதுவரையில் ஒரு சம்பவம் உண்டா?
சீனர்களை அந்த அந்த நாட்டு அரசாங்கம் அல்லது மற்றவர்கள்
அடித்து விரட்டினார்கள் என்று சொல்ல முடியுமா? செஞ்சீன
நாட்டு அரசாங்கம் தெளிவாக ஒரு கொள்கையை உறுதியாக
கடைபிடித்தது. அந்தந்த நாடுகளில் வாழ்கிற சீனர்களுக்கு
அந்த நாட்டு மக்களுக்கு அளிக்கப்படுகிற சகல உரிமைகளும்
அளிக்கப்பட வேண்டும். அளிக்கத் தவறினால் அது தவறு.
அவர்களை நாங்கள் எந்த காலத்திலும் திரும்ப எடுத்துக்
கொள்ள மாட்டோம். அது அந்தந்த நாடுகளின் பிரச்னை
என்று ஒரு தெளிவான கொள்கையை செஞ்சீனா கடைபிடித்த
காரணத்தாலே பர்மாவிலேயிருந்து பிலிப்பைன்ஸ் வரையில்
இருக்கிற நாடுகளில் வாழ்கிற சீன மக்கள் பாதுகாப்போடு
வாழ்கிறார்கள். உரிமைகளோடு வாழ்கிறார்கள். அவர்களைத்
தொடுவதற்கு யாராக இருந்தாலும் அஞ்சுகிறார்கள். ஆனால்
தமிழர்கள் என்று சொன்னால் யார் வேண்டுமானாலும், எதை
வேண்டுமானாலும் செய்யலாம் என்ற நிலைமை ஏற்பட்டு
விட்டது. இதற்கு காரணம் என்ன? கடந்த காலத்தில் இந்திய
அரசாங்கம் கடைபிடித்த பாலிசி ஆப் அப்பீஸ்மெண்ட், இதை
கடைபிடித்ததின் விளைவு இந்த அவல நிலை இன்றைக்கு
ஏற்பட்டிருக்கிறது. அண்டை நாடான பர்மாவிலே ஆறு
லட்சம் தமிழர்கள் வாழ்கிறார்கள். ஐராவளி சமவெளிப்
பகுதியை அவர்கள் வளம் கொழிக்கும் பூமியாக மாற்றினார்கள்.
நான் வட்டிக் கடைக்காரர்களைச் சொல்லவில்லை. அங்கே
தொழிலாளர்களாக வாழ்ந்தவர்கள் ஆறு லட்சம் பேர்கள்
விரட்டியடிக்கப்பட்டார்கள். ஏன் என்று நாம் கேட்கவில்லை.
அந்த நாட்டு மக்களுக்கு அளிக்கப்பட்ட உரிமைகள் அவர்
களுக்கும் அளிக்கப்படவேண்டுமென்று இந்திய அரசு வற்புறுத்த
தவறியது. அதைத் தொடர்ந்து இன்றைக்கு இலங்கையிலே
அவல நிலை ஏற்பட்டிருக்கிறது. நாளைக்கு மற்ற நாடுகளிலே
இந்த நிலை பரவக்கூடும். ஆகவே இதற்கு நாம் ஒரு முற்றுப்
புள்ளி வைக்க வேண்டும். கடந்த காலத்திலே சேதுசமுத்திரத்
திட்டத்தை அமல் நடத்த வேண்டுமென்று தமிழகம் ஒன்றுப்
பட்டு கோரியும்கூட அதை இந்திய அரசாங்கம் இலங்கை
ஆட்சேபிக்கிறது என்று கூறியது. சேது கால்வாய்த் திட்டம்
அமலாக்கினால் கொழும்புத் துறைமுகம் முக்கியத்துவம்
இழக்கும்; தூத்துக்குடி துறைமுகமும், ஈழத் தமிழர்கள் வாழக்
கூடிய காங்கேசன்துறையும் செழிப்படையும்; கொழும்புத்துறை
முகத்தின் முக்கியத்துவம் போய் விடும் என்ற காரணத்தால்
இலங்கை அரசு ஆட்சேபித்தது என்ற காரணத்தாலே சேது
சமுத்திரத் திட்டத்தை குப்பைக் கூடையிலே தூக்கி இந்திய
அரசாங்கம் போட்டது. பாலிசி ஆப் அப்பீஸ்மெண்டிற்கு இது
ஒரு உதாரணம்,





மறைந்த லால் பகதூர் சாஸ்திரி அவர்கள் சிரிமாவோடு
செய்து கொண்ட ஒப்பந்தம்—நேருஜி இருந்த போது அப்படி
ஒரு ஒப்பந்தத்திற்கு அவர் இணங்கவில்லை—இந்திய வம்சாளி
தோட்டத் தொழிலாளர்களை திரும்பவும் எடுத்துக் கொள்கிற
வகையிலே ஒரு ஒப்பந்தத்தை சாஸ்திரி செய்தார். நேருஜியின்
கொள்கைக்கு விரோதமாக அந்த ஒப்பந்தம் செய்யப்பட்டது.
அதன் விளைவாக அங்கேயிருந்த தமிழர்களை நாம் திரும்ப
பெறவேண்டியவர்களாக ஆனோம். எப்படிப்பட்ட தமிழர்கள்?
தொழிலாளித் தமிழர்கள், 150 ஆண்டுகளாக பரம்பரை, பரம்
பரையாக அங்கே வாழ்ந்து அந்த மண்ணை வளம் கொழிக்கச்
செய்த தொழிலாளர்கள். அவர்களை அகதிகளாக நாம் திரும்ப
எடுத்துக்கொள்வதென்று செய்ததன் முடிவு ஐந்து
இலட்சத்திற்கு மேற்பட்ட அகதிகள் இந்திய மண்ணிலே வந்து
குவிந்திருக்கிறார்கள். இன்னும் எத்தனை லட்சம் வரப்
போகிறார்கள் என்று யாருக்கும் தெரியாது. இது பாலிசி ஆப்
அப்பீஸ்மெண்ட்டிற்கு இன்னொரு உதாரணம்.

அடுத்து கச்சத் தீவை இலங்கைக்கு நாம் கொடுத்தோம்.
தாரை வார்த்துக் கொடுத்தோம். அதன் விளைவு இன்றைக்கு
இராமேஸ்வரம் தீவிலே நம்முடைய மீனவர்கள் சென்று மீன்
பிடிக்க முடியாத நிலைமை ஏற்பட்டிருக்கிறது. ஆகவே
இலங்கை ஆட்சேபித்தது என்பதற்காக கடந்த காலத்தில்
இந்திய அரசாங்கம் செய்த தவறு இன்றைக்கு விஸ்வரூபம்
எடுத்து அங்கே வாழ்கிற தமிழர்களை பெரிய அளவிற்கு
பாதித்துவிட்டிருக்கிறது. இன்னமும் பாதித்துக் கொண்டிருக்
கிறது. இந்த காலத்தில் நாம் அதை பார்த்துக் கொண்டு
இருக்க முடியாது. கடந்த காலத்தில் செய்யப்பட்ட தவறுகள்
நிவர்த்தி செய்யப்பட வேண்டும். இந்திய அரசாங்கம் உறுதி
யான ஒரு நிலையை எடுக்க வேண்டும் என்பதை நான் இங்கே
வற்புறுத்த விரும்புகிறேன். நம்முடைய மரியாதைக்குரிய
பிரதமர் இந்திரா காந்தி அவர்கள் இந்தப் பிரச்னையில்
ஆரம்பத்திலே ஒரு நிலையை எடுத்திருந்தாலும்கூட, பின்னாலே
யதார்த்தமான உண்மையை தெளிவாக புரிந்துகொண்டு
இலங்கையிலே நடப்பது திட்டமிட்ட இனப்படுகொலை
என்பதை உணர்ந்து, ஆகஸ்ட் 15—ஆம் தேதி டெல்லி
செங்கோட்டையிலிருந்து அவர்கள் பேசிய பேச்சிலே இதைத்
தெளிவாகச் சொன்னார்கள். இட் இஸ் ய கிளியர் ஜெனோசைட்
என்று அவர்கள் வற்புறுத்திச் சொன்னார்கள். இந்த உணர்வு
வந்த பின்னால், இனப்படுகொலை அண்டை நாட்டிலே நடக்
கிறது என்பதை பார்த்த பின்னால், அதை சர்வதேச
பிரச்சினையாக்கி மூடி மறைப்பதற்கு இலங்கை அதிபர் முயற்சி
செய்கிறார் என்பதை அறிந்த பின்னாலே, இந்தப் பிரச்னையை
நாமும் சர்வ தேசங்களுக்கும் எடுத்துச் சென்று, அனைத்து உலக
நாடுகளுக்கு அறிவிக்க வேண்டும்: வங்காள தேசத்தில் பிரச்னை
வந்தபோது எப்படி அதை அறிவித்து உலகறிய செய்தோமோ
அந்த அக்கிரமத்தை, அதேபோல இலங்கையிலே
நடைபெற்றுக் கொண்டிருக்கிற கொடுமைகளை உலகறியச்
செய்யவேண்டியது நம்முடைய கடமை.

(பிற்பகல் 12-10)

அது இந்திய அரசாங்கத்தின் கடமை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். மதிப்பிற்குரிய பாரதப் பிரதமர் இந்திரா காந்தி அம்மையார் அவர்கள் இதுவரையில் எடுத்துக்கொண்டிருக்கின்ற நடவடிக்கைகளுக்கு என்னுடைய பாராட்டுதல்கள் உண்டு. ஆனால், அந்த நடவடிக்கைகள் மட்டும் போதுமானவை அல்ல. இன்னும் தீவிரமாக நடவடிக்கைகளை எடுத்திருக்க வேண்டும். ஆனால் அவ்வாறு எடுப்பதற்கு என்ன காரணத்தினாலா அவர்கள் தயங்குகிறார்கள் என்று எனக்குத் தெரியவில்லை.

ஐக்கிய நாடுகள் அவையின் பேரவையில் மதிப்பிற்குரிய நமது பிரதமர் இந்திரா காந்தி அம்மையார் அவர்கள் பேசும் பொழுது பல்வேறு உலகப் பிரச்னைகளைப்பற்றித் தன்னுடைய கவலையைத் தெரிவித்துப் பேசினார்கள். அதை நான் வரவேற்கிறேன்; பாராட்டுகிறேன்

அவர்கள் சொன்னார்கள், தென் மேற்கு ஆப்பிரிக்காவிலே வெள்ளை இனவெறி ஆதிக்கத்தை எதிர்த்து சுதந்திர வீரர்கள் எப்படிப் போராடுகிறார்கள் என்று. அவர் தெளிவாகச் சொன்னார்:

I affirm our total support to the freedom struggle of the people of Namibia under the leadership of SWAPO, and to the Government and people of the front line States who have to endure pressure and provocation, Almost my first conscious thoughts were admiration for those who fought for freedom and concern for those who suffered

அதை நான் வரவேற்கிறேன். ஆப்பிரிக்க நாட்டுச் சுதந்திர வீரர்கள் பற்றி அவர் தெரிவித்த இந்தப் பாராட்டு உண்மையிலேயே இந்தியா பூராவும், உலகம் பூராவும் பாராட்டைப் பெற்றது.

அடுத்து ஒன்றைச் சொன்னார்கள்:

Mr. Nelson Mandela, a flaming symbol of freedom, and many others, are behind prison bars but their voices cannot be stilled and they resound the world over,

என்று சொன்னார்கள். ஆப்பிரிக்க நாட்டு விடுதலைப் போராட்டத்தில் நெல்சன் மெண்டலா என்பவர் வெள்ளை ஏகாதிபத்தியத்தினரால் சிறைச்சாலையிலே அடைக்கப் பட்டிருக்கிறார். Flaming symbol என்று அவரைப்பற்றிக் குறிப் பிட்டது மிகச் சிறப்பானது.

மாண்புமிகு மாற்றுத் தலைவரவர்களே, மதிப்பிற்குரிய இந்திராகாந்தி அம்மையார் அவர்களை உங்கள் மூலமாகக் கேட்க விரும்புகிறேன். மெண்டலா அவர்கள் சுதந்திரப் போராட்டத்தின் சின்னம் என்பதை நாம் மறுக்க முடியாது. உலகத்திலே உள்ள யார் ஒடுக்கப்பட்டாலும், யார் கொடுமைப் படுத்கதப்பட்டாலும், யார் அடிமைப்படுத்தப்பட்டாலும் அதை எதிர்த்துப் போராடுகின்றவர்கள் அவ்வளவு பேர்களும் சுதந்திரப் போராட்டத்தின் சின்னங்கள்தான்.





ஆனால், அண்டை நாடாக இருக்கின்ற இலங்கையிலே, கொழும்பிலே வெளிக்கடை சிறைச்சாலையிலே ஈழ நாட்டின் விடுதலைக்காகப் போராடிய குட்டிமணி, ஜெகன், தங்கதுரை போன்றவர்கள்—எந்தக் குற்றமும் செய்யாதவர்கள், அந்தநாட்டு தமிழ் மக்கள் உரிமையோடு வாழ வேண்டுமென்று கேட்டதற்காக அந்தச் சிறைச்சாலையிலே அவர்கள் மிருகத்தனமாகப் படுகொலை செய்யப்பட்டார்களே அதைப்பற்றி நமது பிரதமர் அவர்கள் பேசியிருக்க வேண்டாமா? மனித உரிமையைப் பறித்த அவ்வளவு கொடுமையான செயலைப்பற்றி ஆப்பிரிக்க நாட்டு விடுதலைக்காகப் போராடியவர்களைப்பற்றிக் குறிப்பிட்ட மதிப்பிற்குரிய பிரதமர் இந்திராகாந்தி அம்மையார் அவர்கள், குட்டிமணி, ஜெகன், தங்கதுரை ஆகியோர்களுக்கு இழைக்கப்பட்ட கொடுமைகளைப்பற்றி, அவர்கள் சிறையிலே படுகொலை செய்யப்பட்டதைப்பற்றி, ஐக்கிய நாடுகள் பேரவையிலே ஒரேயொரு வார்த்தை சொல்லியிருந்திருப்பார் களேயானால் எங்களுடைய மனமெல்லாம் குளிர்ந்திருக்கும். என்ன காரணத்தால் அவர்கள் அவ்வாறு சொல்லவில்லை என்று எனக்குத் தெரியவில்லை.

The turmoil in West Asia remains the most serious threat to peace. Driven from their homes, the Palestinian people are in physical and mental agony. We support the PLO's valiant efforts to secure their legitimate rights.

பாலஸ்தீனிய மக்கள் விடுதலைப் போராட்டத்தைப் பற்றி ஆதரித்துப் பேசியிருக்கிறார்கள். அதை நான் வரவேற்கிறேன் பாராட்டுகிறேன். அதைப்போல பல்வேறு நாடுகளின் பிரச்னை களைப்பற்றியெல்லாம் மதிப்பிற்குரிய இந்திராகாந்தி அம்மையார் அவர்கள் அங்கே குறிப்பிட்டிருக்கிறார்கள். The conspicuous abscent என்று சொல்வார்களே, அதைப்போல, அதிலே விடப்பட்ட ஒன்றே ஒன்று, இலங்கைத் தமிழர்கள் படுகின்ற துயரத்தைப் பற்றி அவர்கள் ஒரு வார்த்தைக்கூடச் சொல்லவில்லை என்பது தான் முக்கியமான பிரச்னை.

எதிர்காலத்திலேயாவது மதிப்பிற்குரிய பிரதமர் இந்திரா காந்தி அம்மையார் அவர்கள் இந்தப் பிரச்னையின் கடுமையை உணர்ந்து பார்த்து, நம்முடைய தமிழக மக்களின் மனக் கொதிப்பை எண்ணிப்பார்த்து இந்தப் பிரச்னையை உலக நாடு களின் மத்தியிலே, உலக அரங்கிலே வைத்து அவர்களது மனிதாபிமானத்தைத் திரட்ட வேண்டும். மனித உரிமைகள் இலங்கையிலே பறிக்கப்படுகின்றன என்பதை அவர்களுக்குத் தெளிவாக்கி அந்த நாடுகளின் ஆதரவை இந்தப் பிரச்னையில் பெற்றுத் தருவதற்கு அவசியமான முயற்சிகளைச் செய்வார்கள் என்று நான் நம்புகிறேன்.

நான் இன்னொன்றையும் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். இந்தப் பிரச்னையிலே இலங்கை அரசாங்கத்தைப் பொறுத்த வரையிலும் எந்த சமரசப் பேச்சுக்கும் அவர்கள் தயாராக இல்லை. பேச்சுவார்த்தை என்ற பெயரால் பேச்சுவார்த்தைக்குப்

புறம்பான காரியங்களிலே அவர்கள் தொடர்ந்து [illegible] கொண்டிருக்கிறார்கள். அங்கே ஓரளவு நியாயம் [illegible] எதிர்கட்சிகளைக் கூட தடை செய்கிறார்கள். யாரும் [illegible] பேசமுடியவில்லை. இங்கே பேசிய இடதுசாரி கட்சிக்குத் தடை. இங்கே பேசிய இடதுசாரிக் கட்சித் தலைவர்கள் எல்லாம் சிறையிலே போடப்பட்டிருக்கிறார்கள். ஒரு [illegible] மிட்ட படுகொலை நடத்தப்படுகின்றது என்கின்றபோது, அந்த அரசாங்கத்தைப் பணிய வைப்பதற்கு நாம் ஏதாவது செய்தாக வேண்டும். இலங்கையிலே படுகொலை ஆரம்பிக்கப்படுகின்றது ஜூலை 23, 24, 25 ஆகிய தேதிகளில். மதிப்பிற்குரிய தமிழர் [illegible] தலைவர் திரு. அமிர்தலிங்கம் அவர்கள் கூட்டிய மாநாடு மன்னாரிலே நடைபெற்ற நேரத்திலே எங்கள் கட்சியின் துணைத் தலைவர், எங்கள் பிரதிநிதி தஞ்சை திரு இராமமூர்த்தி அவர்களை அங்கே அனுப்பினோம். ஆனால் அவர் முன்னாலேயே திரு. ஜெயவர்த்தனே அவர்களுக்கு டெலிபோன் செய்து ராணுவம் சுடுகிறது, எனவே உடனடியாகத் தலையிடுங்கள் என்று சொல்கிறார். அன்றைக்கு மதிப்பிற்குரிய திரு. ஜெயவர்த்தனே அவர்கள் என்ன சொன்னார் என்பதைச் சொன்னால் நீங்கள் அதிர்ச்சி அடைவீர்கள். I am helpless. The army is out of my control என்று அவர் சொல்கிறார். இப்படிச்சொல்கின்ற ஒருவர் ஒரு நாட்டின் ஜனாதிபதியாக இருந்துகொண்டு சொல்கிறார் [illegible] தான் முக்கியம். இந்திய ராணுவத்தை அங்கே படை [illegible] அனுப்பவேண்டுமா வேண்டாமா என்ற சர்ச்சை ஒரு பக்கம். ஆனால் குறைந்த பட்சம் இந்தியாவின் அருகிலே இருக்கக்கூடிய ஒரு நாட்டின் அதிபரைப் பாதுகாப்பதற்காகவாவது நாம் [illegible] செய்யவேண்டியிருக்கின்றது; அப்படி ஒரு சூழ்நிலை ஏற்பட்டு விட்டது. "I am helpless. The army is out of my control" என்று அவர் சொன்னால், அவரைப் பாதுகாப்பதற்காகவாவது நம்முடைய ராணுவத்தை அங்கே அனுப்பி வைக்கவேண்டிய ஒரு பரிதாபமான நிலைமை ஏற்பட்டுவிட்டது. [illegible] இலங்கையிலே வாழ்கின்ற நம்முடைய மக்களுக்கு எதிராக [illegible] உரிமைகளைப் பறிக்கின்ற செயல்கள் இலங்கையிலே நடைபெறு கின்றபோது அதைத் தடுத்து நிறுத்துவதற்கு நம்முடைய இந்திய அரசும் சில நடவடிக்கைகளை எடுக்கவேண்டும். அதைத்தான் நான் வற்புறுத்துகிறேன்.

இலங்கைக்கு ஆயுதங்கள் மற்றும் [illegible] ஏற்றிச் செல்லும் விமானங்கள், கப்பல்கள் ஆகியவற்றிற்கு இந்திய விமான நிலையங்களிலோ அல்லது துறைமுகங்களிலோ அனுமதி மறுக்கப்பட வேண்டும். அதைப்போல இலங்கை யிலிருந்து பொருட்களை ஏற்றிவரும் விமானங்கள், கப்பல்கள் ஆகியவற்றிற்கும் அனுமதி மறுக்கப்படவேண்டும்.

இலங்கையின் உற்பத்திப் பொருட்களான தேயிலை, [illegible] போன்றவற்றை இந்தியாவிற்கு இறக்குமதி செய்வது [illegible] தடை செய்யப்பட வேண்டும்.







இந்தியாவிலிருந்து எந்தப் பொருளும் இலங்கைக்கு ஏற்றுமதி [illegible]படுவதும் முற்றிலுமாகத் தடை செய்யப்படவேண்டும்.

இந்தியாவிலிருந்தும், இந்தியா வழியாகவும் சுற்றுலாப் பயணிகள் இலங்கை செல்வதற்கு அனுமதி மறுக்கப்பட வேண்டும்;

இந்தியா-இலங்கைக்கிடையே கலாச்சாரத் தூதுக் குழுக்கள், விளையாட்டுக் குழுக்கள் பறிமாற்றம் அறவே கைவிடப்பட வேண்டும்.

இலங்கைக்கு இந்தியா அளித்துள்ள தொழில்நுட்ப, பொருளாதார உதவிகள் நிறுத்திவைக்கப்பட வேண்டும். இந்தியா அனுப்பியுள்ள தொழில்நுட்ப, பொருளாதார நிபுணர்களும் உடனே திரும்ப அழைக்கப்பட வேண்டும்.

இலங்கைக்கு மற்ற நாடுகள் அளிக்கும் பொருளாதார உதவிகளை தமிழர்களை ஒடுக்குவதற்காகவே இலங்கை அரசு பயன்படுத்துவதை உலக நாடுகளுக்கு எடுத்துக் காட்டி அந்த உதவிகளை நிறுத்துமாறு அந்நாடுகளுக்கு இந்திய அரசு வேண்டுகோள் விடுக்கவேண்டும்.

இலங்கையில் இந்தியர்கள் தொழில் முதலீடு செய்வதையும் [illegible]கள் தொடங்குவதையும் இந்திய அரசு தடை செய்ய வேண்டும்.

தென்னாப்பிரிக்காவிற்கும், இஸ்ரேலுக்கும் எதிரான சமூக [illegible] பொருளாதார பகிஷ்கரிப்பு நடவடிக்கைகளை [illegible]கொள்ளுமாறு உலக நாடுகளை இந்தியா வற்புறுத்தி [illegible] வெற்றியடைந்ததைப் போல இலங்கைக்கு எதிராகவும் இத்தகைய நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு உலக நாடுகளை இந்திய அரசு வற்புறுத்த வேண்டும். இப்படிப்பட்ட நடவடிக்கைகளை இந்திய அரசு எடுக்கவேண்டும் [illegible] கேட்டுக்கொள்கிறேன்.

இறுதியாக ஒன்றை மட்டும் சொல்லி என்னுடைய [illegible] முடித்துக்கொள்ளுகிறேன், இந்தப் பிரச்சினையிலே அரசியல் கட்சிகளுக்கு அப்பாற்பட்டு நாம் ஒன்றுபட்டிருக் கிறோம். உணர்விலே வேண்டுமானால் வித்தியாசங்கள் இருக்கலாம். அடிப்படையிலே எல்லோரும் ஒன்றுதான். [illegible] மனித உரிமைகளைப் பாதுகாக்க வேண்டும் [illegible] அபிப்பிராயபேதம் இல்லை. 5 கோடி தமிழ் [illegible] ஜாதி, மத, இன பேதங்களுக்கு அப்பாற்பட்டு [illegible]பூர்வமாக எழுந்துநின்ற காட்சிதான் இந்திய அரசைச் [illegible] வைத்தது. அதுதான் உண்மை. அதை யாரும் [illegible] முடியாது. இந்த உணர்வு தமிழர்களின் மத்தியில் [illegible] இந்திய அரசு செயல்பட்டிருக்குமா [illegible]

என்பது சந்தேகம்தான். இன்றைக்கு இலங்கையிலே வாழ்கின்ற தமிழர்களுக்கு பாதுகாப்பு அரணாக இந்தியாவிலே வாழ்கின்ற தமிழ் மக்களின் உணர்வுதான் இருக்கின்றது. இந்தச் சூழ் நிலையிலே நம்மைப் பொறுத்தவரையில் ஈழத்தமிழர்கள் இந்தியத் தமிழர்கள் என்ற பாகுபாட்டைக்காட்டி நாமே இங்கே பேசுவது என்பது இலங்கையிலே வாழ்கின்ற தமிழர் களுக்கு ஆபத்தாக முடியும். அங்கே சிங்கள வெறியர்கள், ஈழத் தமிழர்கள், இந்திய வம்சா வழித் தமிழர்கள், முஸ்லீம் தமிழர்கள், கிறிஸ்துவத் தமிழர்கள் என்று வேறுபாடு காட்ட வில்லை. அங்கே தமிழர்கள் என்று சொன்னாலே யாராக இருந்தாலும் அவர்களுக்கு அடி விழுகிற சூழ்நிலை இருக்கிறது. எரித்துக் கொல்லப்படுகிற சூழ்நிலை இருக்கிறது. இப்படிப் பட்ட சூழ்நிலையில் அந்தப் பாகுபாடுகளை இங்கே நாம் காட்டிக்கொண்டு பேசுவது என்பது உண்மையிலேயே சரியாக இருக்காது என்பதை நான் இந்த நேரத்தில் கேட்டுக்கொண்டு, அதைக் கைவிட வேண்டும் என்று இந்த நேரத்தில் எடுத்துச் சொல்ல விரும்புகிறேன்.

(பிற்பகல் 12-20)

அதே நேரத்தில் இலங்கையில் இருந்து அகதிகளாக இங்கே வந்து இருப்பவர்கள் பற்றியும் இறுதியாகச் சில வார்த்தைகள் சொல்லி, என்னுடைய உரையை இங்கே நான் முடிக்க விரும்பு கிறேன். ஏறத்தாழ 5 லட்சம் பேர் கடந்த சில ஆண்டுகளில் வந்து இருக்கிறார்கள். இப்போது மட்டும் கிட்டத்தட்ட 10,000 பேர் அகதிகளாக வந்து இருக்கிறார்கள். மண்டபத்திலே உள்ள அகதிகள் முகாமாக இருந்தாலும் சரி, திருச்சியில் இருக்கும் அகதிகள் முகாமாக இருந்தாலும் சரி, அவைகள் மிகவும் மோசமான நிலையில் இருக்கின்றன. அங்கே அகதி களுக்குப் போதுமான வசதிகள் இல்லை. ஒரு நாளைக்கு ரூ. 1.15 காசுகள் தான் ஒரு அகதிக்கு தரப்படுகிறது. ரூ. 1.15 எப்படி ஒரு நாளைக்கு போதும். அதுவும் தற்போது தமிழகத் தில் ஏறியிருக்கும் விலைவாசியின் காரணமாக அந்த அகதிகளால் அதை வைத்துக்கொண்டு வாழமுடியவில்லை. ஆகவே, குறைந்த பட்சம் ஒரு நாளைக்கு 5 ரூபாயாவது ஒரு அகதிக்கு கொடுக்க இந்த அரசு ஆவன செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள் கிறேன்.

அகதிகள் அங்கேயிருந்து இங்கே வருகிறபோது, இலங்கையிலே உள்ள ஹைகமிஷ்னர் அலுவலகத்தில் இருந்து எமர்ஜென்சி எமிக்ரேஷன் சர்டிபிகேட் போன்றவற்றை பெற்றுக்கொண்டு வரவேண்டியிருக்கிறது. அவர்கள் வருகின்ற அவசரத்தில் தையெல்லாம் பெற்றுக்கொள்ளாமல் வந்துவிடுகிறார்கள். இன்னொரு முக்கியமான விஷயம், இலங்கையில் இருந்துவரும் அகதிகளுக்கு எப்படிப்பட்ட வேலை அவர்களுக்குக் கொடுக்க வேண்டும் என்று இலங்கையிலேயே முடிவுசெய்து அனுப்



எழுதிக்கொடுத்து விடுவதால் கிறார்கள். அவர்கள் அங்கே வேலைகள் அவர்களுக்குக் இங்கே வந்தவுடன் அப்படிப்பட்ட தெருவில் நிற்கும் அபாயம் கிடைப்பதில்லை. ஆகவே, அவர்கள் பிரச்னைகள் இருக்கின்றன. இருக்கிறது. இப்படி பல்வேறு அதற்காக சில யோசனைகளை நான் இந்த அரசுக்குத் தெரிவிக்க விரும்புகிறேன்.

இராமநாதபுரம் மாவட்டத்தில் மண்டபத்திலும், திருச்சி மாவட்டத்தில் புத்தனேரியிலும் அகதிகள் முகாம் இருப்பது போதுமானதாக இல்லை. ஆகவே, சென்னையிலும், தூத்துக்குடி யிலும் இதுபோன்ற முகாம்கள் அமைக்க வேண்டும். விமானம் மூலம் வருகின்ற அகதிகள், கொழும்பு சென்று தான் விமானம் மூலம் வரவேண்டியிருக்கிறது. கொழும்புக்குச் செல்வதனால் தமிழர்கள் உயிருக்கு ஆபத்து இருக்கின்றது என்ற காரணத்தால், இந்தியாவுக்கும் யாழ்பாணத்திற்கும் இடையே நேரடி விமானப் போக்குவரத்துத் தொடர்பு ஏற்படுத்த வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

மன்னாரிலிருந்து இராமேஸ்வரத்திற்கு தற்போது பெர்ரி சர்வீஸ் விடுவதைப்போல, தூத்துக்குடிக்கும் யாழ்ப் பாணத்திற்கும் இடையே பெர்ரி சர்வீஸ் விடவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

வருகின்றவர்கள் விசா, பாஸ்போர்ட் இந்தியாவிற்கு போன்றவற்றை பெறுவதற்கு கொழும்புக்குச் சென்று பெற வேண்டியிருக்கிறது. ஆகவே, இந்திய தூதுவர் அலுவலகம் ஒன்றை யாழ்ப்பாணத்தில் அமைக்க வேண்டும்.

இந்தியாவிற்கு வரும் அகதிகளை, இந்திய வம்சவழி தமிழர்கள், ஈழத் தமிழர்கள், இலங்கைத் தமிழர்கள் என்று பிரித்துப் பார்த்து அரசாங்கம் உதவி அளிப்பது என்பது சரியல்ல. அகதியாக இலங்கையில் இருந்து யார் வந்தாலும், அவர்கள் எந்தப் பிரிவைச் சேர்ந்தவர்களாக இருந்தாலும், அவர்களுக்கு எந்தவிதமான பாகுபாடும் இல்லாமல் உதவி செய்யவேண்டும்.

இலங்கையில் இருந்து வந்துள்ள அகதிகளுக்கு அரசாங்கம் பல்வேறு வழிகளில் உதவி செய்கிறது. அந்த உதவிகள் போதுமானதாக இல்லை. அதிலும் குறிப்பாக வந்து இருக்கும் அகதிகளில் தோட்டத் தொழிலாளர்களுக்கு தோட்டத் தொழிலைத் தவிர வேறு தொழில் தெரியாமல் இருப்பதால் அவர்களுக்கு வியாபாரம் செய்வதற்கு உதவியோ அல்லது விவசாய நிலம் கொடுத்து உதவியோ செய்வதால், அவர் களுக்கு எந்தவிதமான பயனும் அதனால் ஏற்படுவது இல்லை. அவர்கள் அதை வீணாக்கிவிட்டு மீண்டும் தெருவில் நிற்கும் நிலைமையேற்படுகிறது. ஆகவே, தோட்டத் தொழில்கள் இருக்கும் இடங்களில் அவர்களுக்கு வாழ்வதற்கான ஏற்பாடு களைச் செய்ய வேண்டும். இல்லாவிட்டால், அந்த அகதிகளை

[திரு. ப. நெடுமாறன்] [1983 அக்டோபர் 26

எல்லாம் அந்தமான் தீவிற்கு அனுப்பி அங்கே தோட்டத் தொழிலை ஏற்படுத்தி, அந்த இடங்களில் இந்த அகதிகளை குடியேற்றும் முயற்சியில் மத்திய அரசாங்கம் ஈடுபட வேண்டும். அதைச் செய்ய மத்திய அரசை வலியுறுத்த வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

இலங்கையிலிருந்து வந்திருக்கக்கூடிய அகதிகள். அவர்கள் அங்கிருந்து ரூபாய் எதுவும் எடுத்துவர முடியாது. ஆகையால் ஏதாவது பொருளை வாங்கிக்கொண்டுவந்து. விற்று, ஏதோ மூன்று நான்கு மாதங்களுக்கு வயிற்றுப் பிழைப்பு நடத்தக் கருதுகிறார்கள். ஆனால் சுங்க அதிகாரிகள் அந்தப் பொருள்களுக்கு அதிகமான சுங்க வரி விதித்துவிடுகிறார்கள். அதனால் அவர்கள் கஷ்டப்படுகிறார்கள். எனவே அவர்கள் கொண்டுவருகின்ற பொருள்களுக்கு சுங்க வரி விதிக்காமல் செய்ய நம்முடைய மாநில அரசு இந்திய அரசோடு தொடர்புகொண்டு ஒரு ஏற்பாடு செய்ய வேண்டுமென்று வற்புறுத்திக்கேட்டு, என்னுடைய உரையை முடிக்கிறேன். வணக்கம்.

*திரு. இரா. கருப்பையா: மாண்புமிகு மாற்றுத் தலைவரவர்களே, இலங்கை வாழ் தமிழர்கள் பிரச்னை சம்பந்தமாக நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் முன்மொழிந்திருக்கிற தீர்மானத்தின் மீது இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பாக என்னுடைய கருத்துநிலைக் கூற விரும்புகிறேன்.

இந்தத் தீர்மானத்தில் பொதுவாக இலங்கைத் தமிழர் பிரச்னை சம்பந்தமாகவும், அவர்களுக்கு ஆதரவு திரட்டுவதற்கான நடவடிக்கை எடுப்பதற்காக இந்திய அரசு எடுத்திருக்கிற நடவடிக்கை சம்பந்தமாகவும் அரசுத் தரப்பிலே கூறப்பட்டிருக்கிற விஷயங்களை கம்யூனிஸ்ட் கட்சி ஏற்றுக்கொள்கிறது. இருந்தாலும் இந்த தீர்மானத்திலே சில திருத்தங்கள் தேவை என்று கருதுகிறோம். அந்த அடிப்படையில் இந்தத் தீர்மானத்திற்கான சில திருத்தங்கள் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் கொடுக்கப்பட்டிருக்கின்றன என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இலங்கைத் தமிழர் பிரச்சனை சம்பந்தமாக தமிழ் நாட்டிலே எடுத்துக்கொண்டாலும், இந்திய நாட்டிலே எடுத்துக்கொண்டாலும் இரண்டு கருத்துக்களுக்கு இடமில்லாத வகையிலே தமிழ் மக்களும் இந்திய மக்களும் ஒன்று சேர்ந்து இலங்கை வாழ் தமிழர்களுக்கு இழைக்கப்பட்டிருக்கிற அநீதிகளை கொடுமைகளைக் கண்டிக்கக்கூடிய முறையிலே ஒருமித்த குரலிலே கண்டனத்தை எழுப்பியிருக்கிறார்கள்.

இலங்கையிலே வாழ்கின்ற தமிழர்கள் இரு பிரிவுகளாகக் கருதப்பட்டாலும் யாழ்ப்பாணப் பகுதியிலே இருக்கக்கூடிய சிறுபான்மை இனத்தைச் சேர்ந்த தமிழர்களாக இருந்தாலும், இட்டத்தட்ட சுடந்த மூன்று நூற்றாண்டுகளுக்கு முன்னாலே



1983 அக்டோபர் 26] [திரு. இரா. கருப்பையா]

அங்கே சென்று, செல்வம் கொழிக்கின்ற மலைத் தோட்டங்களை உருவாக்கி, அந்த மலைத் தோட்டப் பகுதிகளிலே வாழ்கின்ற தமிழர்களாக இருந்தாலும், அந்த இரு பகுதியினரும் எந்த அளவுக்கு இன்னல்களுக்கு கொடுமைகளுக்கு ஆளாக்கப்பட்டிருக்கிறார்கள் என்ற உண்மையை நாம் பார்க்க முடிகிறது. காட்டுமிராண்டித்தனமான தாக்குதல் நடைபெற்றிருக்கிறது. தமிழ் இனத்தின் மீது முழுமையாக தாக்குதல் நடைபெற்றிருக்கிறது. இலங்கைத் தமிழர்களும், இந்தியத் தமிழர்களும், இந்திய வம்சாவழி தமிழர்களும் தாக்கப்பட்டுள்ளார்கள்.

அதுமட்டுமல்ல, 10,000 பேர்களுக்குமேல் படுகொலை செய்யப்பட்டிருக்கிறார்கள். 2000 கோடி ரூபாய்க்கும் அதிகமான சொத்துக்கள் கொள்ளையடிக்கப்பட்டுள்ளன. 1,50,000 பேர்கள் அகதிகளாக ஆக்கப்பட்டுள்ளனர். பெண்கள் கற்பழிக்கப்பட்டிருக்கிறார்கள். சொத்துக்கள் சூறையாடப்பட்டிருக்கின்றன. வீடுகள் கொளுத்தப்பட்டிருக்கின்றன. மக்கள் படுகொலை செய்யப்பட்டு, அவர்கள் மீது பெட்ரோல் ஊற்றப்பட்டு கொளுத்தப்படக்கூடிய அளவுக்கு கொடுமையான செயல்கள் நடந்துள்ளன. அவை எல்லாவற்றுக்கும் மேலாக சிறையிலே இருந்த தமிழர் தலைவர்கள் சிறைக்குள்ளேயே படுகொலை செய்யப்பட்டிருக்கிறார்கள். இப்படிப்பட்ட கொடுமையான நிகழ்ச்சிகள் அனைத்தையும் கண்டிக்கக்கூடிய வகையிலே தமிழ்நாட்டில் இருக்கிற 5 கோடி தமிழ் மக்களும் ஒரே குரலில் தங்களுடைய கண்டனத்தை எழுப்பியிருக்கிறார்கள் என்பதை நாம் அறிவோம்.

ஆக, இவ்வாறு தமிழ்நாடு முழுவதும் இருக்கிற தமிழ் மக்களுடைய கண்டனத்தை எழுப்பியிருக்கிற நேரத்தில், தமிழ் மக்களுடைய நலனிலே அக்கறை கொண்டு, நாட்டம் செலுத்தி அவர்களை பாதுகாப்பதற்கு இருக்கிற இந்த மாமன்றமும் இந்தக் கொடுமைகளைக் கண்டிக்க தன்னுடைய கூட்டத்தை உடனே நடத்தி, இந்த மாமன்றத்தின் கண்டனக் குரலையும் எழுப்பி இருந்தால் சாலச்சிறந்ததாக இருந்திருக்கும். காலம் தாழ்த்தி இந்தத் தீர்மானத்தைக் கொண்டுவந்திருக்கிறோம் என்பதை வருத்தத்தோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

இலங்கைத் தமிழர்களுக்கு எதிரான இந்தத் தாக்குதல் ஏதோ திடீரென்று 1983 ஆம் ஆண்டு ஜூலைத் திங்களில் ஏற்பட்டது என்று நாம் கருத முடியாது. அங்கே இருக்கிற ஜெயவர்த்தனே அரசு 1977 ஆம் ஆண்டு ஆட்சிப்பொறுப்பை ஏற்ற பிறகு ஆறாவது முறையாக இம்மாதிரி கொடுமையான தாக்குதல் நடைபெற்றிருக்கிறது என்பதை நான் குறிப்பிட விரும்புகிறேன்.

அந்தத் தாக்குதலை நடத்திய சிங்கள மொழி வெறியர்கள் தங்களுடைய இனத்தைப் பாதுகாப்பதற்காக தமிழ் இனத்தை அழிக்க வேண்டுமென்ற அளவுக்கு அந்தத் தாக்குதலை நடத்தியதாக கூற முடியாது. ஆனால் அங்கே [illegible]

பொறுப்பிலே இருக்கிற ஜெயவர்த்தனே அரசின் துணையோடு அந்தத் தாக்குதல் நடைபெற்றிருக்கிறது. அரசே அதற்கு துணையாக நின்றிருக்கிறது என்று குறிப்பிட விரும்புகிறேன். இந்த நிகழ்ச்சிகளிலெல்லாம் போலீஸ் பங்கு கொண்டிருக்கிறது, இலங்கை இராணுவம் பங்கு கொண்டிருக்கிறது. இலங்கையில் ஆளும் கட்சியாக இருக்கக்கூடிய ஐக்கிய தேசியக் கட்சியும், அதனுடைய கட்சிக் குண்டர்களும் இந்த நிகழ்ச்சிகளிலே பங்கு கொண்டிருக்கிறார்கள். இன்றைக்கும் தொடர்ந்து கொண்டு இருக்கிறது.

(பிற்பகல் 12.30)

அதுமட்டுமல்ல, அந்த நாட்டிலே இராணுவத்திற்கு சகல விதமான அதிகாரங்களும் வழங்கப்பட்டிருக்கின்றன. யாழ்ப் பாணத்தைச் சுற்றி இராணுவம் நிறுத்தப்பட்டிருக்கிறது. ஏதோ திடீரென்று ஜூலை மாதம் நடந்த கலவரத்திற்குப் பின்னாலே இராணுவம் நிறுத்தப்படவில்லை. கடந்த 4 ஆண்டுகளாக இராணுவம் நிறுத்தப்பட்டு அங்கே இருக்கின்ற தமிழர்களை அச்சுறுத்தி வருகின்றது என்பதை நான் சொல்ல விரும்பு கிறேன். இராணுவம் தொடர்ந்து இம்மாதிரியான நிகழ்ச்சி களிலே பங்கு கொண்டிருக்கிறது. இராணுவத்திற்குக் கொடுக்கப் பட்டுள்ள அதிகாரங்கள் கண்டதும் சுடு என்பது மட்டுமல்ல, அப்படி சுட்டவர்களுடைய பிணத்தை அவர்களுடைய உறவினர் களிடத்திலே கொடுக்க வேண்டும் என்ற அவசியம் கூட இல்லை என்று உத்தரவிடப்பட்டிருக்கிறது. அதுமட்டுமல்ல. சுடப் பட்டவர்கள் பிணத்தை பிரேத பரிசோதனை—போஸ்ட் மார்ட்டம் செய்வதற்கான அவசியமும் இல்லை என்ற வகை யிலே அதற்கான முறையிலே உத்தரவிடப்பட்டிருக்கிறது. இராணுவத்தின் ஒரு பகுதி அரசியல் ரீதியாக செயல்படக்கூடிய ஒரு நிலையை ஜெயவர்த்தனே அரசு உருவாக்கியிருக்கிறது என்பதை குறிப்பிட விரும்புகிறேன்.

ஆகவே இம்மாதிரியான முறையிலே கொடுமையான நிகழ்ச்சிகள் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன. அங்கே இருக்கின்ற தமிழ் மக்கள், ஈழத் தமிழர்கள், யாழ்ப்பாணத் தமிழர்கள், மலைத்தோட்டத் தொழிலாளர்கள், இவர் களெல்லாம் மிகக் குறைந்த எண்ணிக்கையில் இருக்கிறார்கள் என்ற உணர்வு யாருக்கும் தேவையில்லை. 1981 ஆம் ஆண்டு ஜனத்தொகை கணக்கெடுப்பின்படி, 1,48,00,000 பேர் கொண்ட இலங்கையிலே சிங்களவர்கள் 1,09,00,000 பேர்தான் இருக்கிறார்கள் என்பதை குறிப்பிட விரும்புகிறேன். இலங்கை யில் வசிக்கிற பூர்வீக தமிழர்கள், மற்றும் இந்திய வம்சாவழி தமிழர்கள் ஆகியோர் 30 லட்சத்திற்கும் அதிகமாக வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். ஆகவே அவர்களுடைய கோரிக்கை என்ன? இலங்கைத் தமிழ் மக்கள் யாராக இருந்தாலும் சிங்கள மக்களோடு சம உரிமையோடு வாழ வேண்டும் என்ற அந்த முறையிலே நடத்தப்பட வேண்டுமென்பதற்கான முறையிலே



அவர்கள் கோருகிறார்கள். இலங்கையிலே ஏற்பட்டிருக்கிற அரசுகள் படிப்படியாக இலங்கைத் தமிழர்களுடைய உரிமைகளை எவ்வாறு பறித்திருக்கிறது என்கின்ற வரலாற்றை நாம் அறிவோம். தமிழ் மொழிக்கு இருந்த உரிமை அங்கே பறிக்கப் பட்டு 1956 ஆம் ஆண்டு சிங்களம் மட்டுமே ஆட்சி மொழியகா இருக்க அதற்கான சட்டத்தை அங்கே இயற்றியிருக்கிறார்கள். அந்தச் சட்டத்தில் தமிழ் மொழி இணை ஆட்சி மொழியாக இருக்குமென்று கூறினாலும், அதற்கான உரிமைகள் வழங்கப் படவில்லை. சிங்களம் மட்டுமே ஆட்சி மொழியாக அங்கே வைக்கப்பட்டிருக்கிறது.

1978 ஆம் ஆண்டிலேயிருந்து சிங்களம் மட்டுமே தனியாக ஆட்சிமொழி என்று சட்டம் உருவாக்கப்பட்டிருக்கிறது. அது மட்டுமல்லாமல் அங்கேயிருக்கின்ற தமிழர்களின் உரிமைகள் எந்த அளவிற்கு பறிக்கப்பட்டிருக்கின்றன என்பதைச் சொல்ல விரும்புகிறேன். இன்றைக்கு இலங்கையிலே 30 லட்சத் திற்கும் அதிகமாக உள்ள தமிழர்கள் அரசு அலுவலகங்களிலே எந்தளவிற்கு இருக்கிறார்கள் என்பதை நாம் பார்க்கின்ற போது 1956 ஆம் ஆண்டு உயர் நிர்வாக அலுவலகங்களில் 30 சதவீதத்திற்கும் அதிகமாக தமிழர்கள் பொறுப்புகளில் இருந்திருக்கிறார்கள். ஆனால் 1972 ஆம் ஆண்டில் அது வெறும் 5 சதவீதமாக குறைக்கப்பட்டு இருக்கிறது. சாதாரண மாக குமாஸ்தாவாக, எழுத்தர்கள் பணியில் 50 சதவீதமாக இருந்த தமிழர்களின் எண்ணிக்கை இன்று 5 சதவீதமாக குறைக்கப்பட்டிருக்கிறது. கடைநிலைப் பணியில் உள்ள ஊழியர்களின் எண்ணிக்கை 40 சதவீதமாக இருந்தது. ஆனால் அதுவும் 5 சதவீதமாக குறைக்கப்பட்டு இருக்கிறது. இராணு வத்தில் ஏற்கனவே 40 சதவீதமாக இருந்த தமிழர்களின் எண்ணிக்கை வெறும் 1 சதவீதமாக குறைக்கப்பட்டிருக்கிறது. காவல்துறையை எடுத்துக்கொண்டால் 17 ஆயிரம் பேர்கள் இருக்கின்ற காவல் துறையில் மொத்தமாக 565 பேர்கள் தான் இன்றையதினம்பணியாற்றக்கூடிய நிலைமையில் இருக் கிறார்கள். கல்லூரிகளிலும் மற்ற தொழிற்பயிற்சி நிலையங் களிலும் இன்றையதினம் தமிழர்களுடைய உரிமைகள் அங்கே பறிக்கப்பட்டு இருக்கக்கூடிய நிலைமைகள் ஏற்பட்டிருக்கின்றன. என்பதை நான் குறிப்பிட விரும்புகிறேன். நான் இந்த விவரங் களைக் குறிப்பிடுவதன் மூலமாக எந்த அளவிற்கு ஒரு கொடுமை யான நிலைமை உருவாக்கப்பட்டிருக்கிறது என்பதை நாம் அனைவரும் தெரிந்துகொள்ளவேண்டும். என்பதற்காகத்தான்.

அதுமட்டுமல்லாமல் இன்றையதினம் இலங்கையிலே வாழ் கின்ற இந்திய வம்சாவழித் தமிழர்கள், மலைவாழ் மக்கள் போன்றவர்கள் இருக்கிறார்கள். அவர்களுக்கு குடியுரிமை மறுக்கப்பட்டிருக்கிறது. 1948 ஆம் ஆண்டு இலங்கை ஒரு டொமினியன் ஸ்டேட்டாக ஆகியபோது, வெள்ளையன் வெளியே செல்லக்கூடிய காலத்தில், இலங்கையிலே வாழக்கூடிய

[திரு. இரா. கருப்பையா] [1983 அக்டோபர் 26

தமிழர்கள், மற்றவர்களுக்கும் சிங்களவர்களுக்கும் சமமான உரிமை இருந்தது. ஆனால் 1948 ஆம் ஆண்டுக்குப் பிறகு அந்த உரிமைகள் பறிக்கப்பட்டு புதிய குடியுரிமைச் சட்டம் 1948 ஆம் ஆண்டிலே உருவாக்கப்பட்டு அவர்கள் அனைவரும் நாடற்றவர்கள் என்ற நிலைமை உருவாக்கப்பட்டிருக்கிறது. 1971-லே சிரிமாவோ பண்டாரநாயக—சாஸ்திரி ஒப்பந்தம் ஏற்பட்டாலும் அதன் அடிப்படையிலேகூட அங்கே இருக்கின்ற தமிழ் மக்களுக்கு குடியுரிமை வழங்கப்படவில்லை என்பதும் குறிப்பிடப்பட வேண்டிய விஷயம். ஆகவே அந்த அடிப்படையிலே அனைத்து உரிமைகளும் பறிக்கப்படும் நிலையிலே இன்றையதினம் அங்கே இருக்கின்ற அரசு ஒரு எதேச்சாதிகாரமான ஆட்சியை நடத்திக்கொண்டிருக்கிறது. இது ஏதோ தமிழர்களுக்கு மட்டும் எதிரானது என்று யாரும் நினைக்க வேண்டாம். அங்கே ஜெயவர்த்தனே ஆட்சி ஏற்பட்ட தற்குப் பிறகு அங்கே இருக்கின்ற அனைத்து மக்களின் ஜனநாயக உரிமைகளைப் பறிக்கக்கூடிய புதிய சட்டங்களை நிறைவேற்றி இருக்கிறார்கள் என்பதை நான் உங்களுக்குக் குறிப்பிட விரும்பு கிறேன்.

ஒரு சாதாரண வாக்கெடுப்பு (Referendum) என்பதன் மூலமாக பாராளுமன்றத்தின் ஆயுளை, அங்கே இருக்கின்ற உயர்ந்தபட்ச ஆட்சிப் பொறுப்பை ஏற்று நிறைவேற்றுகிற பாராளுமன்றத்தினுடைய ஆயுளை ஆறு ஆண்டுக்காலம் நீட்டிப் பதற்கான முறையிலே ஒரு சட்டத்தைக் கொண்டுவந்தார்கள் என்பதும் உங்களுக்குத் தெரியும். அதுமட்டுமல்ல, அந்த நாட்டிலே எட்டில் ஒரு பங்கு வாக்குகளைப் பெறாத கட்சிகள் அரசியல் கட்சிகளாக செயல்பட முடியாத ஒரு நிலையில் ஒரு சட்டத்தைக் கொண்டுவந்திருக்கிறார்கள் என்பதும் அந்தக் கட்சியைச் சேர்ந்தவர்கள் நாடாளுமன்றத்திலேகூட அங்கம் வகிக்க முடியாத நிலையிலே, அந்தக் கட்சிகள் அலுவலகங்கள் வைத்துக்கொள்ளக் கூடாது, பத்திரிகைகள் நடத்தக்கூடாது என்ற அளவிற்கு ஜனநாயக விரோதமான சட்டங்களை இயற்றி யிருக்கிறது என்பதையும் நான் குறிப்பிட விரும்புகிறேன். கட்சி மாறுதல் சம்பந்தமாக, தேர்தல் நடந்தவுடனே 14 நாட் களுக்குள் ஆளுங்கட்சிக்கு கட்சிமாறுவது அங்கே சட்டபூர்வமாக அனுமதிக்கப்படும். சிறிய கட்சிகளிலிருந்து பெரிய கட்சி களுக்கு மாறலாம். எதிர்க்கட்சியிலிருந்து ஆளும் கட்சிக்கு மாறினால் அதை அனுமதிப்பதற்கான முறையில் சட்டம் கொண்டுவரப்பட்டிருக்கிறது. எதிர்க்கட்சிகளினுடைய உரிமை களைப் பறிக்கக்கூடிய முறையிலே இன்றைய தினம் அங்கே பல்வேறு சட்டங்கள் கொண்டுவரப்பட்டிருக்கின்றன என்று நான் குறிப்பிட விரும்புகிறேன். ஆகவே, இம்மாதிரியான முறையிலே அங்கே இருக்கிற சிங்கள மக்கள், தமிழ் மக்கள் ஆகிய இருவகை மக்களுடைய ஜனநாயக உரிமைகளைப் பறிக்கிற .... (மணியடிக்கப்பெற்றது).



1983 அக்டோபர் 26]

(பிற்பகல் 12–30)

மாண்புமிகு மாற்றுத் தலைவர் : (திரு. மா. சின்னராசு) பிரச்னையை முடியுங்கள். வளர்த்துக்கொண்டே போக வேண்டாம். இன்னும் 3 தலைவர்கள் பேச இருக்கிறார்கள். (குறுக்கீடு) இரண்டு நிமிடத்திற்குள் முடித்துவிடுங்கள்.

திரு. இரா. கருப்பையா: காரணம் என்னவென்று சொல்ல வேண்டும் அல்லவா. அதை வளர்ப்பதாக நினைக்கவேண்டாம். நாளைக்கும் விவாதம் இருக்கிறது.

ஆகவே அந்த அடிப்படையில் ஜனநாயக உரிமைகளைப் பறிக்கக்கூடிய முறையிலே இலங்கையிலே ஜெயவர்த்தனே அரசு நடவடிக்கைகள் எடுத்து வருகின்றது என்றும், அவருக்குத் துணையாக அமெரிக்க ஏகாதிபத்தியம், இரைக்கு கழுகு வட்ட மிடுவதைப் போல, இலங்கையின் மீது கண்வைத்துக்கொண்டு தங்களுடைய ஆதிக்கத்தை அங்கே நிலை நிறுத்த, தங்களுடைய இராணுவத்தை அங்கே கொண்டு வந்து இராணுவத்தளமாக இலங்கையைப் பயன்படுத்திக்கொள்ளும் முறையிலே நடவடிக்கை களை எடுத்துவருகிறது. ஆகவேதான் இப்படி மக்களுக்கு எதிரான, ஜனநாயகத்திற்கு எதிரான, விரோதமான நடவடிக்கை களை ஊக்கப்படுத்துவதன் மூலமாக தங்களுடைய காரியத்தை நிறைவேற்றிக் கொள்ளலாம் என்று எண்ணி அங்கே காரியங்களைச் செய்து கொண்டிருக்கிறார்கள் என்றும் நான் குறிப்பிட விரும்புகிறேன்.

இலங்கையில் உள்ள திருகோணமலையில்—டிகோர் கார்ஷி யாவில் உள்ள கப்பற்படைத் தளத்திற்கு 7—வது கடற்படைக்கு (Fuelling centre) ஆக உபயோகப்படுத்தும் அளவில் ஒப்பந்தம் செய்திருக்கிறார்கள். இலங்கை ஏதோ சிறிய நாடு. அந்த நாட்டிற்கு திடீரென்று ஆபத்து ஏற்பட்டு, அதனால் அதை காப்பாற்றுவதற்காக இத்தகைய நிலைமை ஏற்படுத்தப்பட்டி ருக்கிறது என்று நினைப்பதற்கு இடமே இல்லை.

தென் கிழக்கு ஆசியாவில் உள்ள நாடுகளில் இந்திய நாடு மிகப் பெரிய நாடு. ஜனநாயகத் தன்மையோடு உலக சமாதானம், கூட்டுச்சேராமை, ஏகாதிபத்திய எதிர்ப்புக் கொள்கையில் செயல்படக்கூடிய நாடு. இத்தகைய இந்திய நாட்டினுடைய அரசுரிமையை அச்சுறுத்தி, நிர்ப்பந்தத்தை ஏற்படுத்தும் முறையிலே வங்காள தேசத்திலும், பாகிஸ்தானிலும் அமெரிக்க ஏகாதிபத்தியம் இராணுவ தளங்களை உருவாக்கிக் கொண்டிருக்கிறார்கள். இலங்கையையும் அதற்குப் பயன்படுத்த வேண்டும் என்கிற நோக்கத்தோடுதான் இம்மாதிரியான முயற்சி களிலே ஈடுபட்டுக்கொண்டிருக்கிறது அமெரிக்கா. அதற்குக் கருவியாக ஜெயவர்த்தனேயின் அரசும் இன்றையதினம் செயல் பட்டுக் கொண்டிருக்கிறது. இந்தத் திட்டங்களின் ஒரு பகுதியாகத் தான் இலங்கையில் தற்போது இம்மாதிரியான நடவடிக்கைகள் உருவாக்கப்பட்டு செயற்படுத்தப்பட்டு வருகிறது என்பதையும் குறிப்பிட விரும்புகிறேன். அதே காரணமாகத்தான் கலவரங்கள் நடந்ததற்குப் பிறகு சமீபத்தில் அமெரிக்க பாதுகாப்புத்துறை காரியதரிசி திரு, வென்பெர்ஜர் இலங்கைக்கு விஜயம் செய்திருக் கிறார்.

[1983 அக்டோபர் 2
[திரு. இரா. கருப்பையா]

அதனுடைய தன்மைகளைப்பற்றியும் இந்த அவையிலே சமர்ப்பிக்கப்பட்ட அறிக்கையிலே சுட்டிக்காட்டப்பட்டிருக் கிறது. ஆகவே இம்மாதிரியான காட்டுமிராண்டித்தனமான முறையிலே நடைமுறைகள் நடந்துவருவதால் இது இலங்கையிலே இருக்கக்கூடிய தமிழர்களுடைய பிரச்னை என்பது மட்டும் அல்ல, இந்தியாவிற்கு எதிராகவும், இலங்கையினுடைய சுதந் திரத்திற்கு எதிராகவும் நடைபெற்றுக்கொண்டிருக்கிற நிகழ்ச்சி என்பதையும் குறிப்பிடவிரும்புகிறேன்.

ஆகவே நம்முடைய தேசத்தை அச்சுறுத்துவதற்காக இம் மாதிரியான நிலைமைகள் உருவாக்கப்பட்டிருக்கின்றன என்பதைக் குறிப்பிடுவதோடு அங்குள்ள தமிழ் மக்களுடைய உரிமைகளைப் பாதுகாப்பதற்காக, இலங்கையில் இருக்கிற ஒரே கம்யூனிஸ்ட் கட்சி அந்த தமிழ் மக்களுக்கு சிங்கள மக்களைப் போல சமமான உரிமைகள் வழங்கப்பட வேண்டும் என்பதற்காக தொடர்ந்து அங்கே போராடிக்கொண்டு வந்திருக்கிறது, அங்கே இருக்கிற இலங்கைத் தமிழ் மக்களுக்கு, அவர்கள் தோட்டத் தொழிலாளர் களாக இருந்தாலும் சரி சிறுபான்மைத் தமிழர்களாக இருந்தாலும் சரி, அவர்களுடைய உரிமைகள் பாதுகாக்கப்பட வேண்டும் என்பதற்காக போராடுவதன் காரணமாகத்தான் அங்கே இருக்கிற கம்யூனிஸ்ட் கட்சியை, இலங்கை கம்யூனிஸ்ட் கட்சியை இந்தக் கலவரங்கள் நடந்த நேரத்தில் ஜெயவர்த்தனே அரசு தடை செய்தது என்பதையும் குறிப்பிட விரும்புகிறேன்,

அதுமட்டுமல்ல. தடை செய்யப்பட்ட நேரத்திலும் இலங்கை பாராளுமன்றத்திலே உள்ள இலங்கை கம்யூனிஸ்ட் கட்சியினுடைய ஒரே ஒரு உறுப்பினர் சரத் முட்டேடுவெகுமா என்பவர் தலைமறைவாகவே இருந்து அங்கே நடந்த பாராளு மன்றக் கூட்டத்திற்குச் சென்று இலங்கைத் தமிழர்களுக்கு இழைக்கப்பட்டிருக்கிற கொடுமைகளை, அநீதிகளை எதிர்த்து கண்டனக் குரல் எழுப்பி, இந்தக் கொடுமையான நடவடிக்கை கள் நிறுத்தப்பட வேண்டும் என்றும் அவர்களுக்கு சமமான உரிமைகள் வழங்கப்பட வேண்டும் என்றும் குரல் எழுப்பியிருக் கிறார் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அது மட்டுமல்ல, இன்றையதினம் இந்திய அரசாங் கத்தினுடைய முயற்சியால் இந்திய விசேஷ தூதர் திரு. ஜி. பார்த்தசாரதி அவர்கள் இலங்கை சென்று ஜெயவர்த்த னேயைச் சந்தித்ததற்குப் பிறகு வட்டமேஜை மாநாடு நடத்தப் படவேண்டும் என்கிற சூழ்நிலை உருவாக்கப்பட்டதற்குப் பிறகு, வட்டமேஜை மாநாட்டில் இலங்கை கம்யூனிஸ்ட் கட்சி கலந்து கொள்ளவேண்டும் என்று அழைப்பு வந்த அதே நேரத்தில், இலங்கையினுடைய தமிழர் ஐக்கிய விடுதலைக் கட்சியினுடைய பங்கு அந்த வட்டமேஜை மாநாட்டில் இல்லாத நிலையில் கம்யூனிஸ்ட் கட்சி அந்த மாநாட்டிலே பங்கு கொள்வதற்கு முடியாது என்ற முறையிலே அதற்கான ஆட்சேபணையை தெரிவித்து இலங்கை தமிழ் மக்களுடைய உரிமைக்காக தொடர்ந்து போராடிக் கொண்டிருக்கிறது என்பதை நான் குறிப்பிட விரும்புகிறேன்.



1983 அக்டோபர் 26] [திரு. இரா. கருப்பையா]

தமிழ் மக்களுடைய பிரச்சினைகளின் தன்மைகளை ஆராய்ந்து பார்த்து, சிறுபான்மைத் தமிழர்களுக்கு சுயநிர்ணய உரிமை வழங்க வேண்டுமென்ற கோரிக்கையை வைத்து சிங்கள மக்களையும் ஒன்று திரட்டி அதற்காக அங்கே உள்ள கம்யூனிஸ்ட் கட்சி போராடிக் கொண்டிருக்கிறது. தமிழ் மக்களுக்கு சுயாட்சி வழங்க வேண்டுமென்றும் அதன் மூலம் இலங்கையிலே ஒற்றுமையை உருவாக்க முடியும் என்றும் கருதி தமிழ் மக்களுக்கு ஆதரவாக சிங்கள மக்களையும் திரட்டி இயக்கத்தை நடத்திக் கொண்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இவ்வளவு கொடுமையான நிகழ்ச்சிகள் நடந்துகொண்டிருக் கின்ற நேரத்திலே தமிழ் மக்களுக்கு இவ்வளவு இன்னல்கள், இழப்புகள் ஏற்பட்டு இருக்கின்ற நேரத்திலே இந்தப் பிரச்சினைக்கு தீர்வு காணவேண்டுமென்ற அடிப்படை நிலையில், என்ன முறையில் தீர்வுகாண வேண்டுமென்றால் யாழ்ப்பாணத்து பகுதிகளிலே வாழ்கின்ற தமிழ் மக்களுக்கு எல்லாம் முழுமையான உரிமைகள் வழங்கப்பட வேண்டும். அது மட்டுமல்ல, நாடற்றவர்களாக இருக்கின்ற தோட்டங்களிலே வேலை செய்கின்ற மலைவாழ் மக்கள், தோட்டத் தொழிலாளர்கள் ஆகியோர்களுக்கும் முழுமையான குடி உரிமைகள் வழங்கப்பட வேண்டும். அதற்கான நடவடிக்கைகளையெல்லாம் இந்திய அரசு எடுக்க வேண்டுமென்பது இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் கருத்தாகும்.

இங்கே அரசின் சார்பாகக் கொண்டுவரப்பட்டிருக்கின்ற தீர்மானத்திலே சொல்லப்பட்டிருப்பவைகளோடு அங்கே இருக் கின்ற இந்திய வம்சாவழியினருக்கும் குடியுரிமை வழங்க வேண்டும், அதை அவர்களுக்குப் பெற்றுத் தருவதற்கான நடவடிக்கைகளை எடுக்க வேண்டுமென்ற திருத்தத்தை இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பாக நாங்கள் கொடுத்திருக்கிறோம், அதையும் சேர்த்துக்கொள்ள வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

இந்தப் பிரச்சினைக்கு தீர்வு காண்பதற்கு இலங்கையிலே இருக்கின்ற ஜனநாயக சக்திகள் மட்டுமல்ல, இந்தியாவிலே இருக் கின்ற ஜனநாயக சக்திகள் மட்டுமல்ல—இலங்கையில் அடிப்படை மனித உரிமைகள் பறிக்கப்பட்டு எவ்வளவோ கொடுமைகள் இழைக்கப்பட்டு இருக்கின்றன. அதையெல்லாம் எதிர்த்து— உலகம் முழுவதிலும் உள்ள ஜனநாயக உள்ளம் கொண்ட அனைத்து மக்களையும் திரட்டக்கூடிய முறையிலே இந்திய அரசும் இந்தியாவிலே உள்ள அனைத்துக் கட்சிகளும் முயற்சி களை மேற்கொள்ளவேண்டுமென்ற முறையிலே நாங்கள் திருத்தத்தைக் கொடுத்திருக்கிறோம்.

இந்தப் பிரச்சினை சம்பந்தமாக இந்தியப் பிரதமர் திருமதி இந்திரா காந்தி அவர்கள் எடுத்துள்ள முயற்சிகள் சரியானவை என்று இந்திய கம்யூனிஸ்ட் கட்சி கருதுகிறது. இந்தப் பிரச்சினைக்கு அரசியல் ரீதியில் தீர்வு காணவேண்டும், அதற்கான

முறையில் நடவடிக்கைகளை எடுக்கவேண்டுமென்று இந்திய
கம்யூனிஸ்ட் கட்சியின் கருத்தை நான் வலியுறுத்திக் கூற விரும்பு
கிறேன். அதே நேரத்திலே அரசின் தரப்பிலே கொடுக்கப்
பட்டிருக்கின்ற தீர்மானத்திலே இந்தப் பிரச்சினையை ஐக்கிய
நாடுகள் சபையில் இந்திய அரசு எழுப்புவதன் மூலமாக தீர்வு
காணவேண்டுமென்ற முறையிலே சொல்லப்பட்டிருக்கிறது.
இந்தப் பிரச்சினையை ஐக்கிய நாடுகள் சபையில் எழுப்புவதன்
மூலமாக தீர்வு காணமுடியாது என்று இந்திய கம்யூனிஸ்ட் கட்சி
கருதுகிறது. எனவே அந்தப் பகுதி தீர்மானத்திலிருந்து நீக்கப்
பட வேண்டுமென்ற திருத்தத்தை இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின்
சார்பிலே கொடுத்திருக்கிறோம். அதை ஏற்றுக் காள்ள
வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன். ஐக்கிய நாடுகள்
சபையில் எழுப்பப்படவேண்டுமென்று இங்கே பேசிய சில
உறுப்பினர்களும் கருத்துத் தெரிவித்தார்கள். லெபனான்
நாட்டில் சமாதானத்தைப் பாதுகாப்பதற்காக அனுப்பப்
பட்டுள்ள ஐக்கிய நாடுகள் சபையின் படை, பீஸ் கீப்பிங் போர்ஸ்,
சமாதானப் படை சமாதானத்தை பாதுகாப்பதைவிட்டு அந்த
நாட்டின் உள்நாட்டுப் பிரச்சினையிலே தலையிட்டு அங்கே
வேறு ஒரு நிலையை உருவாக்கியிருக்கிறார்கள் என்பதையும்
நான் சுட்டிக்காட்ட விரும்புகின்றேன்.

இந்தப் பிரச்சினையில் நல்ல தீர்வு காணவேண்டுமென்றால்
அரசியல் தீர்வு என்ற முறையிலே நடவடிக்கைகள் எடுக்கப்பட
வேண்டும். அந்தமுறையில் இந்திய அரசு எடுத்திருக்கின்ற
முயற்சிகள் பலன் அளிக்கக் கூடியமுறையில் துரித நடவடிக்கைகள்
மேற்கொள்ளப்படவேண்டும். இன்றைக்கு தமிழகத்திலே
பல்வேறு கருத்துக்கள் பேசப்பட்டு வருகின்றன. வெளியிலே
பொது மேடைகளிலும் பேசப்படுகின்றன. சட்டமன்றத்திலேயும்
அந்தக் கருத்துக்கள் வைக்கப்படுகின்றன. ஈழத்தைப் பாதுகாப்ப
தற்கு படை அனுப்பவேண்டும் அல்லது தனி நாடு ஏற்படுத்த
வேண்டுமென்ற முறையிலே தீர்வு சொல்லப்பட்டிருக்கிறது. படை
அனுப்பவேண்டுமா அல்லது படை அனுப்ப வேண்டாமா
என்பதை, எந்த நேரத்திலே அனுப்புவது என்பதை பொதுக்
கூட்டங்களிலே வைத்து, மேடைகளிலே வைத்து முடிவு எடுக்கிற
பிரச்னை இல்லை. அந்தமாதிரியான முடிவுகள் சரியாக
இருக்காது, நமக்கு பலன் அளிக்காது. படையை அனுப்ப
வேண்டுமா, இல்லையா, அனுப்புவதன் மூலமாக இந்தப்
பிரச்சினைக்குத் தீர்வு காணமுடியுமா என்பது வேறு பிரச்சினை.

(பிற்பகல் 12-50)

அதைப்பற்றி விவரமாக இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின்
சார்பில் கருத்துக்களைக் கூறியிருக்கிறோம். 70 கோடி மக்களைக்
கொண்ட இந்திய நாடு 1½ கோடி மக்களைக் கொண்ட இலங்கை
யோடு மோத, இலங்கைக்கு படையை அனுப்பித்தான் தீர்க்க
முடியும் என்று சொன்னால் எங்களைப் போன்றவர்கள் அதை



ஏற்றுக்கொள்ள முடியாது. அதற்கான முறையில் தீர்வு
ஏற்படுத்துவதற்கான அடிப்படையில் எப்படி உலக மக்களுடைய
ஏற்படுத்துவதற்கு ஆதரவைத் திரட்டி அரசியல் தீர்வு ஏற்படுத்த முடியுமோ அந்த
ஆதரவைத் திரட்டி அரசியல் தீர்வு ஏற்படுத்த முடியுமோ அந்த
அடிப்படையில் முயற்சிகள் மேற்கொள்ளப்பட வேண்டும்.

தனி ஈழத் தமிழ்நாடு வேண்டுமா? வேண்டாமா? என்பது
அங்கு இருக்கின்ற தமிழர்கள்தான் முடிவு செய்ய
வேண்டிய பிரச்சினை. நாம் போய் தனி தமிழ்நாடு ஆக்கிக்
கொள்ளுங்கள் அல்லது வேண்டாம் என்று கூறக்கூடிய நிலையில்
அந்தப் பொறுப்பை ஏற்றுக்கொள்ளவேண்டாம். அவர்கள்
அதுதான் வழி என்று தீர்மானித்து முடிவு செய்தால் நாம்
யாரும் அந்த வழிக்கு நிச்சயமாக குறுக்கே நிற்கமுடியாது.
ஆகவே அதற்கான சூழ்நிலையையும், பக்குவத்தையும் பார்த்து
அவர்கள்தான் முடிவு செய்யவேண்டும். இலங்கையில் வசிக்
கின்ற தமிழர்கள் தான் அதை தீர்மானிக்க வேண்டிய நிலையில்
இருக்கிறார்கள் என்ற கருத்தைக் கூற விரும்புகிறோம். ஆகவே
இந்த அடிப்படையில் இந்த மனித இன படுகொலையை
எதிர்த்து, இலங்கைத் தமிழ் மக்களுக்கு நிரந்தரமாக ஒரு தீர்வு
ஏற்படுத்தக்கூடிய ஒரு முறையில் அவர்களுக்கு முழு உரிமைகள்
பெற்றுத் தருவதற்கு, அங்கு இருக்கின்ற தோட்டத் தொழி
லாளர்கள், மலைவாழ் மக்களுக்கு குடியுரிமை பெற்றுத்
தருவதற்கு எல்லா முயற்சிகளும் மேற்கொள்ள வேண்டும்
என்று கேட்டுக்கொள்வதோடு இந்தத் தீர்மானத்திற்கு இந்திய
கம்யூனிஸ்டு கட்சி கொடுத்து இருக்கிற திருத்தங்களைப் பற்றிக்
கூற விரும்புகிறேன்.

10 லட்சத்திற்கு அதிகமான தமிழ் மக்கள் மலைப் பகுதி
களில் தோட்டத் தொழிலாளர்களாக வேலை செய்து
தங்களுடைய உழைப்பின் மூலம் வளமான பகுதிகளை உருவாக்கிக்
கொடுத்து இருக்கிறார்கள். ஆகவே அவர்களுக்கு குடியுரிமை
வாழும் உரிமை பெற்றுத் தருவதற்கு இந்திய அரசு நடவடிக்கை
எடுக்கவேண்டும் என்ற திருத்தத்தைக் கொடுத்து இருக்கிறோம்.
நம்முடைய தமிழக அரசு இந்தத்திருத்தத்தை நிச்சயமாக ஏற்றுக்
கொள்ளும் என்று நான் நம்புகிறேன். அந்த அடிப்படையில் இந்தத்
திருத்தத்தை ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்
கிறேன்.

அரசின் சார்பாகக் கொடுக்கப்பட்ட தீர்மானத்தில் பாரா
(ஏ) என்பதில் "இலங்கை வாழ் தமிழர்க்கு வாழ்வளிக்க
வேண்டிய வல்லரசான அமெரிக்கா" என்று குறிப்பிடப்பட்டு
இருக்கிறது. அமெரிக்கா வாழ்வு அளித்ததாக இதுவரையில்
வரலாற்றில் இல்லை. போன இடம் எல்லாம் வம்பு, சண்டை
தான். ஆகவே அங்கு இருக்கின்ற மக்களை, இந்த ஏகாதிபத்திய
நாடு அந்த நாட்டில் இருக்கக்கூடிய பன்னாட்டு முதலாளிகளை
சுரண்டுவது என்பது தான் அமெரிக்காவின் கொள்கை. அந்தப்
பகுதியை சேர்க்கவேண்டாம் என்று நான் திருத்தம் கொடுத்து
இருக்கிறேன். ஆகவே அந்தப் பகுதியை நீக்கவேண்டும் என்று
கேட்டுக்கொள்கிறேன்.

[திரு. இரா. கருப்பையா] [1983 அக்டோபர் 26

அடுத்து, (உ) பாராவின் கடைசியிலே ''அத்துடன் உலக
மக்களின் ஆதரவையும் இந்திய மக்கள் அனைவரின் ஆதரவையும்
இலங்கையிலுள்ள ஜனநாயக சக்திகள் ஆதரவையும் திரட்டு
வதற்கு முன்முயற்சி எடுக்கவேண்டும் என்றும் கேட்டுக் கொள்ளு
கின்றது.'' என்ற வாசகங்களை ஏற்று அதை சேர்த்துக்கொள்ள
வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, பாரா (ஏ)யில் 16வது வரியில் 'போன்ற' என்ற
சொல்லுக்குப் பின்னர் ''அமெரிக்காவின் செயல்கள் இலங்கை
நாட்டின் சுதந்திரத்திற்கும், பிரதானமாக இந்தியாவின்
சுதந்திரத்திற்கும் ஆபத்தை உண்டாக்கும் நடவடிக்கை என்று
இப்பேரவை கருதுகிறது. இத்தகைய அநியாயச் செயல்களை
அமெரிக்கா அறவே கைவிட வேண்டும் என்று வலியுறுத்துகிறது''.
ஆகவே இந்தத் திருத்தத்தையும் ஏற்றுக்கொள்ளவேண்டும் என்று
வலியுறுத்தி கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, பத்தி (உ)வில் 11—வது வரியில், ''பிரச்னையைத்
தீர்த்து வைக்கும் பொறுப்பை ஏற்றுக்கொண்டு'' என்பதற்குப்
பதிலாக, ''பிரச்னைகளுக்குத் தீர்வு காணும் கடமையும்
பொறுப்பும் கொண்டுள்ள இந்திய அரசு'' என்கின்ற முறையிலே
மாற்றியமைக்க வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.
ஆகவே, அந்த அடிப்படையில் இந்தத் திருத்தங்களை ஏற்றுக்
கொள்ளவேண்டுமென்று வலியுறுத்துவதோடு, இலங்கைத்
தமிழர் பிரச்னை சம்பந்தமாக, இலங்கையின் ஜெயவர்த்தனே
அரசு அமெரிக்க ஏகாதிபத்தியத்தினுடைய ஒரு கைப்பாவையாக
இருந்து உலக சமாதானத்திற்கும் இந்திய நாட்டினுடைய
சுதந்திரத்திற்கும் இலங்கை மக்களுடைய சுதந்திரத்திற்கும்
ஜனநாயக உரிமைகளுக்கும் பங்கம் விளைவிக்கின்ற
முறையிலே, தமிழர்களுடைய உரிமைகளைப் பறிக்கிற
முறையிலே உள்ள கொடும் நடவடிக்கைகளை எதிர்த்து,
இலங்கைத் தமிழ் மக்களுடைய உரிமைகளைப் பாதுகாப்பதற்
கான முறையிலே இந்திய அரசும் தன்னுடைய நடவடிக்கை
களை துரிதமாக மேற்கொள்ள வேண்டுமென்று வலியுறுத்தி
அதற்கான முறையிலே நம்முடைய தமிழக அரசும் தன்னுடைய
கடமைகளை நிறைவேற்ற வேண்டுமென்பதை நான் வலியுறுத்தி,
இந்தத் தீர்மானத்தின் மீது இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின்
சார்பாக கருத்துக்களைக் கூறி என்னுடைய உரையை
முடிக்கின்றேன்.

*திரு. பி. முகமது இஸ்மாயில் : மாண்புமிகு
தலைவர் அவர்களே, மாண்புமிகு முதல்வர் அவர்கள் இந்த
மன்றத்தில் வைத்திருக்கின்ற தீர்மானத்தின் மீது நடைபெறு
கின்ற விவாதத்தில் பங்குபெற்று, ஜனதா கட்சியின் உணர்வு
களை இந்த மன்றத்தில் வைப்பதற்கு நான் முற்படுகிறேன்.
இலங்கையில் வாழ்கின்ற தமிழர்களுக்கு பல கால கட்டங்களில்
பலவிதமான இன்னல்கள் இழைக்கப்பட்டு வருகின்றன என்பதை
நாம் அறிந்து வருகிறோம். ஆனால், இப்பொழுது ஏற்பட்
டிருக்கிற நிலைமை மிக பயங்கரமானதும், மனித அபிமானத்தை
எல்லாம் கேலிக்கூத்தாக ஆக்குகின்ற அளவிலும் வன்முறை
செயல்கள் நடைபெற்று வருகின்ற செய்திகள் வந்து
கொண்டிருக்கின்றன. இப்பொழுது நடைபெற்... நம்மை எட்டிக்



1983 அக்டோபர் 26] [திரு. பி. முகமது இஸ்மாயில்]

திட்டமிட்ட செயல்கள் என்பதில் எத்தகைய சந்தேகத்திற்கும்
இடம் இல்லை. பல்லாண்டு காலமாக வாழ்கின்ற தமிழர்
களுடைய பல உரிமைகள் ஆளுகின்ற கட்சியினாலும், ஆளுகின்ற
சர்க்காராலும் பறிக்கப்பட்டு, எடுக்கப்பட்டு வந்த நிலை
மாறி, இன்றையதினம் அங்கே வாழ்கின்ற மக்கள் தங்களுடைய
உரிமைகளுக்கு கோரிக்கைகளுக்கு குரல் எழுப்பும்போது அவர்
களை அந்த நாட்டை விட்டே துரத்துவது என்று திட்டமிட்டு
செயலாற்றுவதாக நாம் எண்ண இடம் ஏற்படுகிறது.
கொலைகள் நடைபெறுகின்றன, கொள்ளைகள் நடைபெறு
கின்றன. அங்கே வாழ்கின்ற தமிழ் மக்களுக்குச் சொந்தமான
சொத்துக்கள் சூறையாடப்படுகின்றன. அவர்கள் அகதிகளாக
இன்றையதினம் ஆக்கப்பட்டிருக்கிறார்கள். எனவே, அகதி
களாக இந்த நாட்டை நாடி வந்துகொண்டிருக்கிற நிலையை
நாம் பார்க்க முடிகின்றது. அங்கேயிருந்து ஓடி வருகின்ற
அகதிகள், தமிழ் இன மக்கள் தருகின்ற செய்திகளும், பத்திரிகை
வாயிலாக நம்மை எட்டுகின்ற செய்திகளும் இயற்கையாகவே
தமிழ்நாட்டு மக்களுடைய உணர்வுகளைத் தூண்டிவிட்டுள்ளன.
அந்த உணர்வுகளைப் பிரதிபலிக்கின்ற வகையில் அரசியல்
கட்சிகள், சமூக அமைப்புகள், ஏன் பொதுமக்கள் ஆகிய
அனைத்துப் பிரிவினரும் தங்களுடைய உணர்வுகளை
தங்களுக்கே உரித்தான பாணியில் பலப்பல வழிகளில் எடுத்துக்
காட்டியிருக்கிறார்கள். அரசியல் கட்சிகள் அனைத்தும் ஒன்றாகச்
செயல்பட வேண்டிய ஒரு பிரச்னையில் வேறுபட்ட கருத்துக்கள்
நம்மிடையே நிலவுகிறதோ என்ற தவறான எண்ணம் ஏற்படு
வதற்குக்கூட நாம் வழிவகுத்து விட்டோம் என்ற குறை
பாட்டை நாம் பார்க்க முடிகிறது. இங்கே தமிழகத்தில்
ஆளுகின்ற கட்சி—அரசாங்கம்—எல்லா அரசியல் கட்சிகளுடைய
கருத்துக்களையும் ஒன்றாக இணைத்து, நம்முடைய குரலை
எழுப்புவதற்கு முயற்சியினை மேற்கொண்டது. அதற்காக நான்
நமது அரசாங்கத்தைப் பாராட்டுகிறேன். ஆனால், அரசு
எடுத்துக் கொண்ட நடவடிக்கைகள் தீவிரமாக இல்லாத
காரணத்தால், அரசியல் கட்சிகள் தங்களுக்கே உரித்தான வேறு
மார்க்கங்களையும் வழிகளையும் ஏற்படுத்துவதை நாம் பார்க்க
முடிந்தது. இங்கே அரசியல் கட்சிகள் படை அனுப்ப வேண்டு
மென்று குரல் தந்தார்கள். நிச்சயமாக பிரச்னைக்குப் பரிகாரம்
காண அது உதவாது. அங்கே இயற்றிய சட்டத்தை நாம்
தீயிட்டுக் கொளுத்தினோம். எதுவாயினும் அந்தச் சட்டம்
சட்டப் புத்தகத்தில் இடம் பெற்றுத்தான் இருக்கும். இங்கே
அதிபர் ஜெயவர்த்தனேயுடைய கொடும்பாவியை பல
இடங்களில் கொளுத்திய பிறகும் இன்றையதினம் அதிபர்
ஜெயவர்த்தனே உயிருடன் இருப்பதாகத்தான் செய்திகள் வந்து
கொண்டிருக்கின்றன. எனவே, இவைகள் எல்லாம் இந்தப்
பிரச்னையைத் தீர்ப்பதற்கு நிச்சயமாகப் பரிகாரம் தேடித் தர
முடியாது என்பதை நன்றாக உணர்ந்து கொண்டு ஒருமித்த
குரலிலே தமிழகத்தின் எதிர்ப்புக் குரலையும் ஆக்கபூர்வமான
கருத்துக்களையும் தகுந்த இடங்களுக்கு எடுத்துச் செல்ல
வேண்டிய கடமையை நாம் ஏற்றுக்கொள்ள வேண்டும்,

(பிற்பகல் 1-00)

இன்றையதினம் தமிழக சர்க்கார் முதல்வர் வாயிலாக இந்த
மன்றத்தின் ஒருமித்த கருத்தை வெளியிடுவதற்கு வாய்ப்
பளிக்கிற வகையிலே தீர்மானத்தைக் கொண்டு வந்திருக்கிறார்கள்.
ஜனதா கட்சி இந்தத் தீர்மானத்தை ஏறிது ஆதங்கத்தோடு
ஏற்றுக்கொள்கிறது. இங்கே எழுந்திருக்கிற பிரச்னை தமிழகத்
திலே மட்டுமல்ல, அண்டை மாநிலங்களிலும் எழுந்தது.
ஆந்திரம், கர்நாடகம் மற்றும் கேரள மாநிலங்களில் அங்கே
இருக்கிற சட்டமன்றத்தைக் கூட்டி தங்களுடைய உணர்ச்சிகளை
பிரதிபலித்து இருக்கிறார்கள். தமிழகம் காலம் தாழ்ந்து
இன்றையதினம் தன்னுடைய குரலை சட்டமன்றம் வாயிலாக
ஒலிக்க ஆரம்பித்திருக்கிறது. நாம் இந்த விஷயத்தில் செயல்படுவ
தற்கு சில வரையறைகள் இருக்கின்றன. அதற்கப்பால் நம்மால்
செயல்பட முடியாது என்று நமக்குத் தெரியும். ஆகவே இந்தப்
பிரச்னைக்கு பைசல் காண்பதற்கு வகைகளும், வசதிகளும் பெற்
றிருப்பது மத்திய அரசு என்று நாம் நன்றாக உணர்ந்திருக்கிறோம்.
எனவே மத்திய அரசை தூண்டுகிற பொறுப்பு இங்கே ஆளுகின்ற
பொறுப்பிலே இருக்கிற கட்சிக்கு மட்டுமல்ல, அரசாங்கத்திற்கும்
உண்டு. இந்த அரசு அந்தக் கடமையைச் செய்ய தவறி
விட்டதோ என்ற சந்தேகம் எங்களுக்கு உண்டு. மத்திய அரசு
செய்யத் தவறியதை சுட்டிக்காட்டுவதற்கு, அதில் கண்டனக்
குரலை எழுப்புவதற்கு இந்த அரசு ஏன் தயக்கம் காட்டியது
என்பதை எங்களால் புரிந்து கொள்ளமுடியவில்லை. மத்திய
அரசு 25 நீண்ட நாட்களாக ஆழ்ந்த நித்திரையில் இருந்த பிறகு
தான் இலங்கையிலே நடைபெறுகிற நிகழ்ச்சிகளைப் பற்றி
தன்னுடைய கண்டனக் குரலை எழுப்புவதற்குத் துவங்கியது
என்பதைப் பார்க்க நான் வேதனைப் படுகிறேன். 25 நாட்களாக
தமிழகம் அல்லோலப்பட்டு, இங்கே இருக்கிற மக்கள் அனைவரும்
தங்களுடைய ஒருமித்தக் குரலிலே தங்களுடைய உணர்ச்சிகளை
கொப்பளித்துக் கொண்டிருக்கிறார்கள். அதை பாராமுகமாக
இருந்துவிட்டு இந்தியப் பிரதமர் அவர்கள் 25 நாட்களுக்குப்
பின்னால் தன்னுடைய கண்டனக் குரலை எழுப்பியிருக்கிறார்கள்.
இந்திய அரசு தன்னுடைய கண்டனக் குரலை தக்க நேரத்தில்
எழுப்பியிருந்தால் இலங்கையிலே நடந்த சில சம்பவங்களை
ஒருவேளை தடுத்து நிறுத்தியிருக்க முடியுமோ என்ற நம்பிக்கை
எங்களுக்கு உண்டு. இந்தப் பிரச்னையைப் பொறுத்த அளவில்
இந்திய அரசு பேச்சுவார்த்தைக்காக தூதுவரை அனுப்பியதை
நாங்கள் வரவேற்கிறோம். தூதுவர் மேற்கொண்ட பணி
தொடர்ச்சியாக நடைபெறவில்லை என்பதைப் பார்க்க எங்களுக்கு
கவலை ஏற்பட்டிருக்கிறது. தூதுவரை வரவேற்பதற்கு இலங்கை
அரசு தயாராக இல்லை என்ற நிலைமையை அவர்கள் உருவாக்கி
வருகிறார்கள். அதற்கிடையில் தங்களுடைய நாட்டைக்
காப்பாற்றிக் கொள்வதற்கும் வேறு சில மார்க்கங்களை அந்த
அரசாங்கம் ஆராய்ந்து வருவதாகக் கூட கவலை தருகிற
செய்திகள் நம்மை எட்டிக்கொண்டிருக்கின்றன. இன்னும் இந்திய
அரசாங்கம் தன்னுடைய கருத்தை வலியுறுத்திச் சொல்வதாக





இருந்தால் நிச்சயமாக இலங்கை அரசு பணிந்து வருமென்ற
நம்பிக்கை எங்களுக்கு நிச்சயமாக உண்டு. இந்தப் பிரச்னையை
உலக அரங்கிலே கொண்டு வருவதற்கான வாய்ப்பு இந்திய
அரசிற்குத்தான் இருந்தது. ஐ.நா. சபையிலே மரியாதைக்குரிய
பிரதமர் ஆகஸ்ட் 28-ம் தேதி பேசுவதற்கான வாய்ப்பைப் பெற்றி
ருந்தார். அப்போது நிச்சயமாக இந்தப்பிரச்னையை எழுப்பியிருக்க
முடியும். என்ன காரணத்தாலோ இந்தப் பிரச்னையை
தொட்டுத் தழுவிப் பேசுவதற்குக் கூட மரியாதைக்குரிய பிரதமர்
இந்திரா அவர்கள் தவறி விட்டார்கள். இப்போது நம்முடைய
மரியாதைக்குரிய அமைச்சர் அவர்களை பேச வைத்திருக்
கிறார்கள். அவர்கள் அன்றே இந்தக் கருத்தை வெளியிட்டு
இருந்தால் நிச்சயமாக உலகத் தலைவர்கள் கவனத்தை அது
நிச்சயம் கவர்ந்திருக்க முடியும். உலகத் தலைவர்கள் இந்தப்
பிரச்னையிலே தங்களுடைய கவனத்தை செலுத்துகிற
காரணத்தாலே இலங்கை அரசாங்கம் இதுபற்றி ஆலோசனை
செய்வதற்கு முற்பட்டிருக்கும். அதிலே இந்திய அரசாங்கம்
தன்னுடைய கடமையைச் செய்வதற்கு தவறிவிட்டது என்று
நாங்கள் குற்றம் சாட்டுகிறோம். இந்தப் பிரச்னை பொறுத்
தளவிலே ஆக்கப்பூர்வமான ஆலோசனைகளைத் தருவதற்கு
இந்த மன்றம் கடமைப்பட்டிருக்கிறது. இந்தப் பிரச்னை
நாட்டு மக்களின் உணர்வைத் தூண்டுகிற பிரச்னை என்பது
நிச்சயமாக நமக்குத் தெரியும். நம்முடைய உணர்வை அதிக
மாகக் காட்டுகிறபோது அதனாலே இலங்கையில் வாழுகின்ற
தமிழர்களுக்கு அதிகப்படியான நன்மை ஏற்படுமா என்பதைச்
சிந்தித்துப் பார்க்க கடமைப்பட்டிருக்கிறோம். நாங்கள்
எண்ணுவது இதிலே நாம் அதிகமாக குரல் எழுப்புகிறபோது
இலங்கையிலே வாழ்கிற தமிழர்களுக்கு அதிகமாக துன்பம் அங்கே
விளைகிறது என்பதை நாம் அறிய முடிகிறது. இலங்கையிலிருந்து
வந்து கொண்டிருக்கிற அகதிகள் இந்தக் கருத்தை வெளியிட்டுக்
கொண்டிருக்கிறார்கள். நம்முடைய தமிழ் சகோதரர்கள்
தங்களுடைய குரலை அதிகமாக உயர்த்தாவிட்டால் நாங்கள்
எங்கள் தாயகத்திற்குத் திரும்பிச் செல்வதற்கு சுமுக
மான தீர்வுகள் ஏற்படும் என்று அவர்கள் சொல்லியிருக்கிற
செய்திகளை நாம் பத்திரிகை வாயிலாக பார்க்க முடிகின்றது.
இங்கே அதிகமாக குரல் எழுப்புகிறபோது இலங்கையிலே
வாழ்கிற தமிழர்கள் அந்த நாட்டுப்பற்றில் குறைவாக இருக்
கிறார்களோ என்ற சந்தேகத்திற்குட்பட்டவர்களாகச் செய்
கிறோம். அங்கு வாழ்கின்றவர்களுக்குத் தேவையான ஆக்க
பூர்வமான கருத்துக்களை நாம் சொல்ல வேண்டும். அதற்கு
இந்த அரசாங்கமும், மத்திய அரசாங்கமும் எடுக்கின்ற பயன்
தருகின்ற நடவடிக்கைகளுக்கு உறுதுணையாக நாம் இருக்க
வேண்டுமென்று சொல்லி, அங்கே வாழ்கின்ற தமிழின மக்கள்
இழந்த சுதந்திரத்தை மீண்டும் பெற வேண்டுமென்பதில்
ஜனதா கட்சி அக்கறையுடன் இருக்கிறது என்பதைத் தெரிவித்துக்
கொள்கிறேன். அங்கேயிருக்கிற சிங்கள மக்களுக்கு இருக்கின்ற
அனைத்துக் குடியுரிமைகளையும் அங்குள்ள தமிழர்களும்
பெற்று முழு சுதந்திரம் பெற்ற புருஷர்களாக வாழ வழி

செய்ய வேண்டிய கடமையிருக்கிறது. இதற்கான பேச்சு
வார்த்தைகளை ஆரம்பிப்பதற்கு இந்திய அரசும், இந்த மாநில
அரசும் வற்புறுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.
அப்படிப்பட்ட பேச்சுவார்த்தைகளுக்கு எந்தவிதமான
நிபந்தனையையும் விதிக்காமல் அங்குள்ள மக்கள் தங்களுக்கு
நியாயமான உரிமைகளைப் பெறுவதற்கு, பேச்சுவார்த்தை
களின் அடிப்படையில் சுமுகமான வைகசல் காண்பதற்கு முற்பட
வேண்டுமென்று அந்த அரசாங்கத்தை வற்புறுத்துவதோடு,
இந்த நிலையை எட்டிப்பிடிக்க மத்திய அரசாங்கமும்,
அரசாங்கமும் எடுக்கின்ற ஆக்கபூர்வமான எல்லா மாநில
களுக்கும் ஜனதா கட்சி ஆக்க பூர்வமான உதவிகளைத் தரும்
என்று கூறி, இங்கே முன்மொழியப்பெற்றிருக்கும் இந்தத்
தீர்மானத்தை, முன்பு சொன்னதைப்போல் சிறிது ஆதங்கத்
தோடு ஏற்றுக்கொள்கிறோம் என்று சொல்லி அமர்கிறேன்.

திரு. எஸ். ஆண்டித்தேவர் : மாண்புமிகு மன்றத்தினுடைய
மாற்றுத் தலைவரவர்களே, தமிழக முதல்வரவர்களால்
கொண்டு வரப்பெற்றிருக்கின்ற இலங்கைத் தமிழர் பிரச்சனை
பற்றிய தீர்மானத்தின் மீது அகில இந்திய ஃபார்வர்ட் பிளாக்
கட்சியின் கருத்துக்களையும் இணைத்துக் கொள்ள வேண்டும்
என்று கேட்டுக்கொள்கிறேன். மாண்புமிகு முதல்வரவர்கள்
கொண்டு வந்திருக்கின்ற இந்தத் தீர்மானத்தை எங்களது கட்சி
ஆதரிப்பதோடு, எங்களது கருத்துக்களையும் இதன்மீது
சொல்லலாம் என்று கருதுகிறேன்.

இலங்கைவாழ் தமிழர்கள், இந்திய வம்சா வழித் தமிழர்கள்
என்று இலங்கையிலுள்ள 35 இலட்சம் இலங்கைத் தமிழர்களுக்கு
இழைக்கப்பட்ட கொடுமைகளைப் பற்றித் திருப்பித் திருப்பிச்
சொல்வதைவிட ஆக்கபூர்வமான கருத்துக்களைச் சொல்லலாம்
என்று கருதுகிறேன். அங்கே வன்முறைக்கு ஆளாக்கப்பட்டு,
கற்பழிக்கப்பட்டு, துன்புறுத்தப்பட்டார்கள் என்பதெல்லாம்
தெரிந்ததுதான். இருந்தாலும் தமிழக முதல்வரவர்கள் உடனே
சர்வகட்சியைக் கூட்டி, அனைத்துக் கட்சிகளினுடைய ஆதர
வோடும் தமிழகத்திலே முழுக் கடையடைப்பை நடத்தினார்கள்.
அதற்குமுன்பே, அனைத்துக் கட்சித் தலைவர்களை அழைத்துக்
கொண்டு பிரதமர் இந்திராகாந்தி அம்மையார் அவர்களைப்
பார்க்கச் சென்றார்கள். அங்கே பிரதமர் இந்திராகாந்தி
அம்மையார் அவர்களைப் பார்த்தபொழுது அவர்கள் எந்தக்
கருத்தையும் வெளியிடவில்லை. அன்றைக்குத்தான் வெளி
விவகார அமைச்சர் திரு. நரசிம்மராவ் அவர்கள் இலங்கை
சென்று திரும்பியிருந்தார்கள். அவர்கள் சொல்லும்பொழுது
சொன்னார்கள், நான் இரண்டு நாட்கள் இருப்பதாகத் திட்ட
மிட்டுப் போனேன், ஆனால் ஒரு நாளிலேயே திருப்பியனுப்பப்
பட்டேன், எனக்கே பாதுகாப்பு கொடுக்கமுடியாது என்று
சொன்னார்கள் என்று தெரிவித்தார்கள். அவருக்கே அந்த
அரசு பாதுகாப்பு கொடுக்கமுடியாது என்று சொல்கின்ற
நிலைமை ஏற்பட்டது. மேலும் அவர் பார்க்க விரும்பிய இடங்



களைக்கூட, அகதி முகாம்களைக்கூட பார்க்க அனுமதிக்க
வில்லை, அதைப் பார்க்காமலேயே திரும்பி வந்தேன் என்று
சொன்னார்கள். அவ்வாறு பேசிக்கொண்டிருக்கும்பொழுது நான்
ஒன்றை ஞாபகப்படுத்தினேன்.

Madam, why not we adopt the same steps that we adopted in the
case of Bangla Desh? அதற்குரிய பதிலை அவர்கள் சொல்ல
வில்லை. That is entirely different என்று சொல்லிவிட்டு இருந்து
விட்டார்கள். இலங்கையிலே தூதரகம் தாக்கப்படுகிறது;
இந்திய வங்கி தாக்கப்படுகிறது. இந்திய வமிசாவழித் தமிழர்கள்
ஐந்து இலட்சம் பேர்கள் குடியுரிமையில்லாமல் இந்தியனாகவே
இருக்கிறார்கள். அவர்களைக் கொடுமைப்படுத்தும்பொழுது
இந்திய அரசு அவர்களைத் தன்னுடைய மக்கள் என்று கருத
வில்லையென்றால், மத்திய அரசு பொறுபோடு இல்லை
என்றுதான் அந்தக் கூட்டத்தில் நாங்கள் கருதினோம்.

அந்த மனுவில் நாங்கள் சொல்லியிருந்தோம், ஐக்கிய
நாடுகள் சபைக்கு இந்தப் பிரச்சனையை எடுத்துச் செல்ல
வேண்டும் என்று. அந்த மனுவில் இது இருப்பது பற்றிக்
கம்யூனிஸ்ட் கட்சி கருத்து வேறுபாடு கொண்டிருந்தாலும் மற்ற
அனைத்துக் கட்சிகளும் அந்த மனுவை இந்திராகாந்தி
அம்மையார் அவர்களிடம் கொடுத்த பிறகு, பதினைந்து இருபது
நாட்களுக்குப் பிறகு, ஐக்கிய நாடுகள் அவையிலே பேசிய
பிரதமர் இந்திரகாந்தி அம்மையார் அவர்கள் இதுபற்றி எதுவுமே
குறிப்பிடவில்லை.

இப்படிப்பட்ட தீர்மானங்களை நாம் கொடுத்துக்கொண்
டிருக்க வேண்டியதுதான். இங்கே இந்த மன்றத்தில் உள்ள
அத்தனை அங்கத்தினர்களுக்கும், அமைச்சர்களுக்கும்,
முதலமைச்சரவர்களுக்கும் தெரியும், வெளிவிவகாரத்திலே
மாநில அரசு ஒன்றும் செய்ய முடியாது என்று. ஆகவே,
இப்படிப்பட்ட தீர்மானங்களை மாநில அரசு அனுப்பிக்
கொண்டிருக்கிறது. மத்திய அரசு அதைப் புரிந்து கொண்டு
நடவடிக்கையெடுக்க வேண்டிய அரசாக இருக்கிறது. ஒரு
கட்டத்திலே இந்திராகாந்தி அம்மையார் அவர்கள் சொன்
னார்கள், இலங்கையிலே நடப்பதைப் பார்த்துக்கொண்டு
வேடிக்கையாக இருக்க முடியாது என்று. இப்பொழுது என்ன
செய்து கொண்டிருக்கிறார்கள்? அப்படிச் சொன்னதைத் தவிர,
வேடிக்கைதான் பார்த்துக் கொண்டிருக்கிறார்கள் என்பது
எங்கள் கருத்து.

(பிற்பகல் 1—10)

வங்காள தேசத்திற்கு எடுத்துக்கொண்ட நடைமுறைகளை
இவர்கள் ஏன் இப்போது எடுக்கவில்லை? ஐக்கியநாட்டுச் சபை
யிலே பேச வாய்ப்பிருந்தும் இந்த அம்மையார் அவர்கள் பேச
வில்லை. அதுதான் எங்களுக்கு வருத்தம், தமிழக அரசு இந்தத்

தீர்மானத்தில் திரு. ஜெயவர்த்தனே அவர்களைக்கண்டித்திருப்பது வரவேற்கத்தக்கது. அந்தக் கொடுமைகளை எல்லாம் கண்டித்து முதல்வர் அவர்கள் கொண்டுவந்திருக்கின்ற இந்தத் தீர்மானத்தை எங்கள் இயக்கம் ஆதரிக்கிறது. திரிகோண மலையில் அமெரிக்கா தளம் வைத்து ஒப்பந்தம் செய்திருக்கின்றது. அவ்வாறு அமெரிக்கா ஒப்பந்தம் செய்திருக்கின்றது என்று சொன்னால் அது இந்தியப் பாதுகாப்புக்கு ஆபத்து இல்லையா என்பதையும் இங்கே நீங்கள் குறிப்பிட்டிருக்கிறீர்கள். அதை நான் வரவேற்கிறேன். அதற்கு எதிர்ப்புக் குரல் கொடுக்கவேண்டும். மத்திய அரசு அந்தக் கடமையைச் செய்யவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து இங்கே தமிழ் மக்களுக்கு வாழ்வு கொடுக்கின்ற அமெரிக்கா என்று எழுதி இருப்பதைத் தயவுசெய்து நீக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். அங்கே வாழ்கின்ற 35 இலட்சம் தமிழர்களும் இங்கே திருப்பியனுப்பப்படுகின்ற ஆபத்தான நிலைமையில் ஒன்றை மட்டும் நான் குறிப்பிட்டு என் உரையை முடித்துக்கொள்ளலாம் என்று கருதுகிறேன்.

இப்போது தொடர்ந்து அவர்கள் போடுகின்ற சட்டங்கள் காரணமாக தமிழர்களுக்கு வேலைவாய்ப்பு இல்லை, படிக்க வாய்ப்பு இல்லை என்ற கொடுமை ஏற்பட்டிருக்கின்றது. இப்போது கண்ட இடத்தில் சுடுகின்ற சட்டமும் கொண்டுவரப்பட்டு தமிழர்கள் வாழ்கின்ற பகுதியிலே சிங்கள மக்களைக் குடியேற்றி அவர்களுடைய குடியுரிமையும் பறிக்கப்படுகின்ற நிலைமை இருக்கின்றது. அப்படி அவர்களுடைய குடியுரிமை பறிக்கப்படுமேயானால் அவர்கள் நாடற்றவர்களாக ஆக்கப்படுகின்ற ஒரு அபாயம் இருக்கின்றது. எனவே அவர்களைக் காப்பாற்ற மத்திய அரசு உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும். அது எப்படி என்று நாங்கள் சொல்வதை விட மத்திய அரசின் பொறுப்பிலே இருப்பவர்கள் சொல்லவேண்டும். அந்த மக்கள் அடிப்படை உரிமைகளைப் பெறுவதற்கு, மத்திய அரசின் பொறுப்பிலே இருப்பவர்கள் யாரைப் பார்த்து என்னென்ன செய்ய வேண்டுமோ அதைச் செய்யவேண்டும் என்று வலியுறுத்திக் கேட்டுக்கொண்டு இந்தத் தீர்மானத்தை அகில இந்திய பார்வர்ட் பிளாக் கட்சியின் சார்பாக ஆதரித்து என்னுடைய உரையை முடிக்கிறேன்.

*திரு. ஏ. சாகுல் ஹமீது: மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, இந்த இலங்கைப் பிரச்சினையில் இந்திய யூனியன் முஸ்லிம் லீக் சார்பாக என்னுடைய கருத்துக்களைத்தெரிக்க முன்வருகிறேன்.

ஒரு காலத்தில் சிங்களத்தை, ஈழத்தை ஆண்ட தமிழ் மக்கள் இன்றைக்கு அகதிகளாக விரட்டப்பட்டு சிறுபான்மையோராக, மைனாரிட்டிகளாக ஆக்கப்பட்டு, கொடுமைப்படுத்தப்பட்டு, கொலை செய்யப்பட்டு, கற்பழிப்புக்கு ஆளாக்கப்பட்டிருக்



கிறார்கள் என்பதையெல்லாம் கடந்த ஜூலையிலிருந்து நாம் அறிந்து வருகிறோம். அவர்களுக்கு இழைக்கப்படுகின்ற கொடுமைகளை எண்ணிப்பார்க்கின்றபோது மிகுந்த வருத்தத்தை வேதனையை அளிக்கின்றது. அந்த அரசிலே ஆட்சியிலே அங்கம் வகித்தவர்கள் சிங்கள ஆட்சியிலே பல்வேறு அரசுத் துறைகளிலே அங்கம் வகித்தவர்கள் இன்றைக்கு அவர்களுடைய விகிதாச்சாரம் குறைக்கப்பட்ட நிலைமையில் அகதிகளாக நிறுத்தப்பட்டிருக்கின்ற நிலைமையைப் பார்க்கிறோம். இப்படிப்பட்ட நிலைமையில் தமிழக அரசும், இந்திய அரசும் எடுத்திருக்கின்ற நடவடிக்கைகள் போதுமானவையாக இல்லை.

குறிப்பாக தமிழக அரசு இலங்கைப் பிரச்சினைக்காக உடனே அந்த நேரத்தில் சட்டமன்றத்தைக் கூட்டி விவாதித்து இருக்க வேண்டும். ஆனால் இப்போது காலம் கடந்து சட்டமன்றத்தைக் கூட்டி அந்தப் பிரச்சினை குறித்து விவாதித்துக் கொண்டு இருக்கிறோம். நம்முடைய அண்டை மாநிலங்கள் எல்லாம் கண்டித்து தீர்மானங்கள் போட்டு விவாதித்துவிட்டதற்குப் பிறகு தமிழக அரசு இந்தப் பிரச்சினையிலே விவாதிப்பதில் காலதாமதம் செய்துவிட்டது.

மத்திய அரசு அகில உலகத்திலே இருக்கின்ற பாதிக்கப்பட்ட மக்களுக்காக எல்லாம் குரல் கொடுத்திருக்கின்றது. அவ்வாறு குரல் கொடுத்த பிரதமர் அவர்கள் இலங்கைப் பிரச்சினையிலே, தமிழர்கள் பிரச்சினையிலே குரல் கொடுக்கத் தவறிவிட்டார்கள் என்பதுதான் எங்களுடைய குற்றச்சாட்டாகும்.

இந்திய சர்க்காரும், தமிழக அரசும் இதிலே இன்னும் தீவிரமாக போதிய கவனம் வைக்கவேண்டும் என்பதுதான் எங்களுடைய கோரிக்கை. இப்படி இலங்கையிலே பாதிக்கப்பட்ட மக்கள், விரட்டப்பட்ட மக்கள் இன்றைக்குத் தமிழகத்திற்கு வந்து கொண்டிருக்கிறார்கள். இராமேஸ்வரத்திலே அவர்கள் இறங்குவதற்கு கட்டுப்பாடுகள் இருக்கின்றன. கொடுமைப் படுத்தப்பட்டதன் காரணத்தால் வந்த அகதிகளுக்குப் போதிய உதவிகள் கிடைக்கவில்லை. இந்த அரசு அவர்களுக்கு போதிய உதவிகளை அதிகமான அளவில் கொடுக்கவேண்டும் என்று இந்திய யூனியன் முஸ்லிம் லீக் சார்பாக நான் கேட்டுக்கொள்கிறேன்.

(மாண்புமிகு பேரவைத் தலைவர்-தலைமை.)

இலங்கைப் பிரச்சினையில் தமிழக அரசும் இந்திய அரசும் தீவிரமாக நடவடிக்கை எடுக்காவிட்டால் தமிழகத்தில் இருக்கின்ற மற்ற அனைத்து அரசியல் கட்சிகளும் இதற்குத் தகுந்த ஒரு போராட்டத்தை நடத்தி இந்திய சர்க்காரின் கவனத்தை ஈர்க்க வேண்டிய சூழ்நிலைமை இருக்கின்றது. தமிழகத்திலே இருக்கின்ற மக்கள்தான் இந்த நிலைமையை உருவாக்கவேண்டும். அப்படி உருவாக்காமல் விட்டுவிட்டால் இலங்கைப் பிரச்சினையில் ஒரு தீர்வு கிடைக்க முடியாது என்பதுதான் எங்களுடைய கருத்து.

இலங்கையில் வாழ்கின்ற தமிழர்களுக்கு சம வாய்ப்புகள் ஒரு
நீண்ட கால அடிப்படையில் கிடைக்கின்ற வகையில் அந்த
மக்கள் சுமுகமாக வாழ்கின்ற வகையில் உரிய வழிமுறையை தமிழக
மக்கள்தான் வழியமைத்துக் கொடுத்தாக வேண்டும். இட்டிக்
கொடுக்கவேண்டும் என்று கேட்டு எனக்கு வாய்ப்பளித்ததற்கு
நன்றி கூறி என்னுடைய உரையை முடித்துக்கொள்கிறேன்.

திரு. ஜி. மூர்த்தி: மாண்புமிகு பேரவைத் தலைவர்களே,
தமிழக முதலமைச்சர் அவர்களால் முன்மொழியப்பட்டு இருக்
கின்ற இலங்கைத் தமிழர்கள் பிரச்சினையில் இந்தியக் குடியரசுக்
கட்சியின் சார்பில் என்னுடைய கருத்துக்களைத் தெரிவித்துக்
கொள்ள விரும்புகிறேன். இலங்கையில் வாழ்கிற ஏறத்தாழ 35
இலட்சம் தமிழர்களின் பிரச்சினைகளை ஒட்டுமொத்தமாகக்
கருத்திலே கொண்டு மத்திய சர்க்காரும், மாநில சர்க்காரும்
அணுகவேண்டும் என்று முதற்கண் நான் கேட்டுக்கொள்கிறேன்.
அங்கே வாழ்கின்ற தோட்டத் தொழிலாளர்கள், இந்திய வம்சா
வழி தமிழர்கள், ஈழத் தமிழர்கள், மூரி என்று அழைக்கப்படுகின்ற
தமிழ் பேசும் முஸ்லீம்கள், இப்படி பல்வேறு வகையில் ஏறத்தாழ
35 லட்சத்திற்கு மேற்பட்ட தமிழ் மக்கள் இலங்கையில் வாழ்
கிறார்கள். ஆனால் 12 லட்சம் மக்கள் தொகை கொண்ட
ஈழத்திலே ஏற்பட்ட போராட்டத்தின் விளைவாக இன்றைக்கு
இலங்கையே எரிந்து கொண்டு இருக்கிறது. அந்த 12 லட்சம்
மக்கள் கொண்ட ஈழத்தைப் பிரித்து விடுவதாலே மட்டும்,
அதனைத் தனிநாடு என்று அறிவிப்பதாலே மட்டும் அங்கேயுள்ள
அந்தப் பிரச்சினை தீர்ந்துவிடுமா? இலங்கையிலே உள்ள
தோட்டத் தொழிலாளர்கள்-இந்தியவம்சா வழியில் வந்தவர்கள்
அவர்கள் ஆதிதிராவிடமக்கள். அவர்கள் இலங்கை பூராவும்
இருக்கிறார்கள். அங்கேயுள்ள விடுதலைப் புலிகள் செய்த
போராட்டத்தின் காரணமாக ஆர்ப்பாட்டத்தின் காரணமாக
அந்தத் தோட்டத் தொழிலாளர்கள் சிங்களவர்களால் காட்டு
மிராண்டித்தனமாகத் தாக்கப்பட்டு இருக்கிறார்கள். ஈழத்திலே
உள்ள விடுதலைப் புலிகள் 12 இராணுவ வீரர்களைக் கொன்ற
காரணத்தால் தோட்டத் தொழிலாளர்கள் ஏறத்தாழ 500–600
பேர்கள் கொல்லப்பட்டு இருக்கிறார்கள். தமிழ் ஈழம் என்று
தனியாகப் பிரிப்பதுதான் இந்தப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு
வழி என்று சொன்னால் அந்தத் தோட்டத் தொழிலாளர்கள்
எல்லோரையும் ஈழத்திற்கு கொண்டுவந்து விடமுடியுமா? இதையும்
சிந்தித்துப் பார்க்கவேண்டும்.

தோட்டத் தொழிலிலே ஈடுபட்டுள்ள தமிழர்கள் இந்தத்
தோட்டத் தொழிலை நம்பித்தான் இருக்கிறார்கள். அவர்கள்
ஏறத்தாழ 10 லட்சம் பேர்கள் இருக்கிறார்கள். அவர்கள்
எல்லாம் ஆதிதிராவிட மலைவாழ் மக்கள். அவர்கள்
நிலை என்னவாகும் என்பதையும் எண்ணிப்பார்க்க வேண்டும்.

நாம் நடத்துகின்ற உணர்ச்சி மிக்கப் போராட்டங்கள், ஆர்ப்
பாட்டங்கள், ஊர்வலங்கள் அந்த மக்களின் துன்பத்தைப் போக்கு
வதற்கு எந்த அளவிற்குப் பயன்பட்டு இருக்கிறது என்பதை
எண்ணிப்பார்க்க வேண்டும். நாம் இங்கே நடத்திய ஆர்ப்பாட்
டங்கள், ஊர்வலங்கள் அந்த மக்களின் துன்பத்தை குறைப்பதற்கு



பதிலாக அங்கேயுள்ள சிங்கள இனவெறியர்களைத் தூண்டிவிட்டு
இருக்கிறது. ஆகவே, நான் கேட்டுக்கொள்வது எல்லாம், அந்த
மக்களின் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்காக தமிழகத்தில் உள்ள
அனைத்துக் கட்சித் தலைவர்களும் சந்தித்துப் பேசி முடிவு
எடுப்பது கடமையென்பது என்னுடைய தாழ்மையான வேண்டு
கோளாகும் என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

அங்கேயுள்ள நிலைமைகளை நம்முடைய பாரதப் பிரதமர்
அவர்கள் கண்டித்துப் பேசியிருக்கிறார்கள். திரு. பார்த்தசாரதி
அவர்களைத் தூதுவராக அனுப்பி அந்தப் பிரச்சினைக்கு ஒரு
தீர்வு காணவேண்டும் என்று சொல்லியிருக்கிறார்கள். அவர்களு
டைய முயற்சிகள் இன்னும் முடிவுறாமல் இருக்கின்றன. இந்த
நேரத்தில் இன்றைக்குத் தமிழகத்திலே உள்ள மக்களின் உள்ள
பூர்வமான நிலைகளை அறிந்து, அந்த மக்களின் பிரச்னைகளுக்கு
ஆதரவு தரவேண்டும். அதற்காக இங்கே எந்தவிதமான
போராட்டங்களோ, ஆர்ப்பாட்டங்களோ செய்யாமல் இருக்க
வேண்டும். நாம் எடுக்கின்ற நடவடிக்கைகளின் பயனாக, அங்கே
எந்தவிதமான அசம்பாவிதங்களும் நடந்துவிடாமல், அங்கேயுள்ள
மக்களுக்கு எந்த வகையில் நாம் பாதுகாப்பு தரமுடியுமோ
அவற்றை நாம் தரவேண்டும். அந்த மக்கள் நல்வாழ்வு வாழ
நிரந்தர வழிவகைகளை நாம் காணவேண்டும். அந்த
உணர்வு இருப்பதை நான் பார்க்கிறேன். அதற்காகப் பாராட்டு
கிறேன். இங்கே போராட்டங்கள் நடத்துவதன் மூலம் அங்கே
உள்ள பிரச்சினைகள் தீர்ந்து விடாது. இன்றைக்கு பாரதப்
பிரதமர் எவ்வளவோ முயற்சிகளை எடுத்துக்கொண்ட போதிலும்
கடைசியாக அவர்கள் ஒரு கட்டத்தில் பின்வாங்கியிருக்கிறார்கள்.
இருப்பினும், இலங்கை அகதிகள் விஷயத்தில் நல்லதொரு
முடிவை எடுப்பேன் என்று பாரதப் பிரதமர் சொல்லி இருக்
கிறார்கள். அதை முற்றிலுமாக நிறைவேற்றுகின்ற சூழ்
நிலைகளை நாம் சிந்தித்து ஆகவேண்டும்.

இலங்கையில் இருந்து அகதிகளாக வருபவர்களை நாங்கள்
ஏற்றுக்கொள்ளமாட்டோம் என்று பாரதப் பிரதமர் அவர்கள்
சொல்லியிருக்கிறார்கள். இது எந்த அளவிற்கு பாதகத்தை
ஏற்படுத்தும் என்பதை நாம் சிந்தித்துப் பார்க்கவேண்டும்.
அங்கேயிருந்து தோட்டத் தொழிலாளர்கள், தமிழர்கள் அகதி
களாக வந்தால் அவர்களை நாம் ஏற்றுக்கொண்டாக வேண்டும்.
பாரதப் பிரதமர் அவர்கள் இதுகுறித்து நன்றாக சிந்தித்துப்
பார்த்து ஒரு முடிவு எடுக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்
கிறேன்.

பங்களா தேசத்தில் இருந்து ஒரு கோடி பேருக்கு மேலாக
இங்கே அகதிகளாக வந்து தஞ்சம் புகுந்தார்கள். அவர்களுக்கு
பல கோடி ரூபாய்கள் செலவு செய்து நாம் பல ஏற்பாடுகளைச்
செய்து கொடுத்து இருக்கிறோம்.

(பிற்பகல் 1-20)

அதற்குப் புதுவரி விதித்திருக்கிறோம். ஸ்டாம்ப் வெளியிட்டிருக்
கிறோம். நன்கொடை வசூலித்திருக்கிறோம். அந்தக் கருணையை
இப்போது மீண்டும் காட்டி, இலங்கைவாழ் தமிழர்கள் அகதி
களாக வருவதைக் கருத்திலே கொண்டு, அந்த மக்களுக்காக புது
வரி என்ன, புதிய சட்டம் போட்டால்கூட இந்தியநாடு ஏற்றுக்
கொள்ளும் என்பதை எங்கள் கட்சியின் சார்பாகத் தெரிவித்துக்
கொள்கிறேன்.

இலங்கையிலே வாழுகின்ற தமிழ் மக்களுடைய பிரச்சினையை
ஒரு சர்வதேசப் பிரச்சினையாகக் கருதி, அவர்களுடைய நிரந்
தரமான பாதுகாப்பிற்கு சீக்கிரத்திலே தீர்வு கண்டு, அந்த
மக்களுக்குப் பாதுகாப்பு அளித்து, சுபிட்சமான வாழ்வுக்கு பேச்சு
வார்த்தை மூலம், உடன்பாடு மூலம் வழிவகை காணவேண்டு
மென்று கேட்டு, முடித்துக்கொள்கிறேன். நன்றி, வணக்கம்.

திரு. என். வி. என். சோமு: மாண்புமிகு பேரவைத் தலைவர்
அவர்களே, இந்தத் தீர்மானத்திலே என்னுடைய கருத்துக்களைக்
கூறுவதற்கு வாய்ப்பளித்ததற்காக நன்றி தெரிவித்துக்கொள்
கிறேன்.

இந்த இலங்கைத் தமிழர் பிரச்சினை தமிழ்நாட்டைப்
பொறுத்தவரையில் ஏறத்தாழ 30, 35 ஆண்டுகளுக்கு மேலாக
இருந்துவருகிறது. திராவிட முன்னேற்றக் கழகத்தைப் பொறுத்த
வரையில் சென்ற ஜூன் மாதம் 25-ந்தேதி, இந்தப் பிரச்சினை
இலங்கையிலே வெடித்தபோது, திராவிட முன்னேற்றக் கழகத்
தலைவர் கலைஞர் அவர்கள் 7 மணி நேரத்தில் 7 இலட்சம் பேர்
கொண்ட ஒரு மகத்தான ஊர்வலத்தை நடத்தி, தமிழ் மக்களின்
துடிப்பை, உணர்ச்சி வெள்ளத்தை வெளியிட்டார்கள். அந்த
உணர்ச்சித் துடிப்போடு நம்முடைய அரசும் எதிர்க்கட்சித் தலை
வராய் இருந்த கலைஞர் அவர்களோடு சேர்ந்து உணர்ச்சித்
துடிப்பை மத்திய அரசுக்குப் பிரதிபலித்திருந்தால் இன்றைக்கு
இலங்கையில் ஏற்பட்டிருக்கக்கூடிய வன்முறையைத் தவிர்த்
திருக்கலாம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திராவிட முன்னேற்றக் கழகத்தைப் பொறுத்தவரையில்
இன்று நேற்று அல்ல; நம்முடைய பெறற்கரிய பெருந் தலைவர்
பேரறிஞர் அண்ணா அவர்கள் உயிரோடு இருக்கும்போதும்
1961 ஆம் ஆண்டில் இந்தப் பிரச்சினை தூத்துக்குடியில் நடந்த
பொதுக்குழுவில் விவாதிக்கப்பட்டு அன்றையதினம் ஐ. நா.
பொதுச் செயலாளருக்கு தந்தி கொடுத்தார்கள். அண்ணா
அவர்கள் அந்த தந்தியில் குறிப்பிட்டுள்ளதை இங்கே நான்
குறிப்பிட விரும்புகிறேன்.

''இலங்கையில் வாழும் 25 இலட்சம் தமிழர்களை அழித்
தொழிக்கும் பயங்கர நிலைமையை அடக்கவும், அடக்குமுறை
கொடுமையில் இருந்து அவர்களை விடுவிக்கவும் திராவிட முன்
னேற்றக்கழகம் ஒரு வேண்டுகோளைத் தந்துள்ளது. இலங்கையில்



தமிழர் தலைவர்கள் சிறைப்படுத்தப் பட்டுள்ளனர்.
தமிழர்கள் அச்சத்திலும் ஆபத்திலும் அழுத்தி வைக்கப்பட்
டுள்ளனர். நீங்கள் ஐ. நா. சபை சார்பில் தயவுசெய்து இந்தப்
பிரச்சினையில் தலையிட்டு அமைதிப்படுத்தவும், மனித உரிமை
களைப் பாதுகாக்கவும், நிலைமையை நேரிடையாக கண்டறிய
ஒரு ஆய்வுக்குழுவை நியமிக்கவும் தமிழ் மொழியையும்,
தமிழர்களையும் அழிக்கச் செய்யும் முயற்சிகளைத் தடுத்து
நிறுத்தவும் ஆவன செய்ய வேண்டுகிறோம். தமிழ்நாடு முழு
வதும் இந்த வேண்டுகோளை விடுகிறது. உடனடியாக ஐ. நா.
சபை ஈடுபட்டு நீதி தேடினால் அதன் மதிப்பு உயர்வதாகும்.
நீதியையும் அமைதியையும், ஒற்றுமையையும் நிலைநாட்ட ஐ. நா.
சபை இலங்கைத் தமிழர் பிரச்சினையில் ஈடுபடுமென எதிர்ப்
பார்க்கிறோம் - சி. என். அண்ணாதுரை, பொதுச்செயலாளர்,
10-5-1961'' என்று ஒரு தந்தியை அன்றைக்கே அனுப்பியிருக்
கிறார்கள்.

திராவிட
அந்த அடிப்படையிலேதான் இன்றைக்குக்கூட
முன்னேற்றக் கழகம் தமிழ்நாட்டு மக்கள்தொகை 5 கோடி
என்றாலும் ஒரு கோடி மக்களிடம் கையெழுத்து வாங்கி ஐ.நா.
சபைக்கு அனுப்பி வைத்திருக்கிறது. அது மட்டுமல்ல.
அன்றைக்கு நடைபெற்ற தூத்துக்குடி பொதுக்குழுவில் ஒரு
தீர்மானத்தை எங்கள் தலைவர் கலைஞர் அவர்கள் கொண்டு
வந்து பேசியிருக்கிறார்கள். அந்தத் தீர்மானம்—''இலங்கைத்
தமிழர்கள் தமது மொழி உரிமை காக்கும் அறப்போரில் ஈடுபட்டு
செய்துவரும் அரிய தியாகத்தை இப்பொதுக்குழு பாராட்டுகிறது.
முதுபெரும் தலைவர் செல்வநாயகம் அவர்கள் உண்ணா
நோன்பில் ஈடுபட்டுள்ள இந்நிலையிலும் பெடரல் கட்சித்
தலைவர்களெல்லாம் கைது செய்யப்பட்டிருப்பதோடு இலங்கை
வடக்கு-கிழக்கு மாநிலங்களில் இராணுவ ஆட்சி நிறுவ கொடிய
அடக்குமுறைகளை ஏவி வருவதைக் கண்டு இப்பொதுக்குழு
தன்னுடைய வன்மையான கண்டனத்தைத் தெரிவிக்கிறது.
வெளிநாடுகளில் வாழும் சிறுபான்மை இனத்தவர் நசுக்கப்
படும்போதெல்லாம் அவர்தம் உரிமை காக்க ஐ.நா.வில் வாதிடும்
இந்திய அரசாங்கம் அண்டை நாடான இலங்கையில் தமிழ்
இனத்தவர் படும் இன்னல் குறித்து கவலைப்படாமல் வாய்
மூடிக்கிடப்பதை இப்பொதுக்குழு கண்டிக்கிறது. இலங்கைத்
தமிழருக்கு நீதி கோரி உடனடியாகத் தலையிட்டு ஆவன செய்ய
வேண்டுமென்று இந்தியப் பிரதமரையும் ஐ. நா. மன்றப் பொதுச்
செயலாளரையும் இப்பொதுக்குழு கேட்டுக்கொள்கிறது. இது
காறும் கொடிய அடக்குமுறைக்கு ஆளான இலங்கைத் தமிழருக்கு
நமது அனுதாபத்தைக் காட்டவும் இந்திய அரசுக்கும் இலங்கை
அரசுக்கும் நமது கண்டனத்தைத் தெரிவித்து நீதி வழங்கத்
தூண்டவும் வருகிற மே திங்கள் ஏழாம் நாள் நாடெங்கும்
கண்டன ஊர்வலமும் பொதுக் கூட்டமும் நடத்தவும் மே

[திரு. என். வி. என். சோமு] [1983 அக்டோபர் 26

எட்டாம் நாள் சென்னையில் இலங்கை ஹைகமிஷனர் அலுவலகத்
திற்கு ஊர்வலமாகச் சென்று ஹைகமிஷனரிடம் அமைதியான
முறையில் நமது கண்டனத்தைத் தெரிவித்துக்கொள்வது எனவும்
இப்பொதுக்குழு தீர்மானிக்கிறது.

முன்மொழிந்தவர்: மு. கருணாநிதி, எம்.எல்.ஏ.

வழிமொழிந்தவர்கள்: என். வி. நடராசன், ,,
கே. ஏ. மதியழகன், ,,

இதை நான் இங்கே குறிப்பிடுவதற்குக் காரணம் அன்றிலிருந்து
இன்று வரை எங்கள் கட்சியான திராவிட முன்னேற்றக் கழகம்
இலங்கைத் தமிழர் பிரச்சனையிலே எவ்வளவு உணர்ச்சித் துடிப்
போடு, உள்ளத்துடிப்போடு, உளப்பூர்வமாக ஈடுபட்டு வருகிறது
என்பதை எடுத்துக்காட்டுவதற்காகத்தான்.

ஏழு மணி நேரத்தில் 7 இலட்சம் பேர் ஊர்வலத்தை திரட்டி
னோம். வீடுகளில் கறுப்புக்கொடி ஏற்றி எங்களுடைய
எண்ணத்தை தெரிவித்தோம். மத்திய சர்க்கார் அலுவலகங்
களிலே ஆர்ப்பாட்டம் செய்தோம். ரயில் நிறுத்த போராட்டம்
செய்தோம். இரண்டு பாராளுமன்ற உறுப்பினர்கள் உண்ணா
விரதம் இருந்தார்கள். இலங்கைத் தமிழர்களை கொத்தடிமை
களாக ஆக்குகிற சட்டத்தை எரித்தோம். கண்டனக்
கூட்டங்கள் நடத்தினோம். இலங்கைத் தூதுவர் அலுவலகம்
முன்பு மறியல் செய்தோம். இத்தோடு எங்கள் போராட்டம்
நின்று விடவில்லை. நாளை தமிழகத்திற்கு ஜெயவர்த்தனே
வருவாரானால், திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில்
அவருக்குக் கறுப்புக் கொடி காட்டுவோம் என்று திராவிட
முன்னேற்றக்கழகத்தின் தலைவர் கலைஞர் அவர்கள் பிரகடனம்
செய்து இருக்கிறார்கள் என்பதை இந்த நேரத்தில் தெரிவிக்க
விரும்புகிறேன்.

ஆனால் இன்றைக்கு இலங்கையிலே இவ்வளவு கோர
விளைவுகள் ஏற்படுவதற்குக் காரணம், ராஜீவ் காந்தி அவர்கள்
திருச்சியிலே கலந்து கொண்ட ஒரு நிகழ்ச்சியிலே பேசினார்.
என்ன பேசினார்? இது இலங்கையிலே உள்ள உள்நாட்டுப்
பிரச்சனை. அவர்களுக்காக அதிகம் பேசினால் லண்டன் வாழ்
தமிழர்களுக்காகவும் பேசவேண்டும். அது முடியாத காரியம்
என்று ராஜீவ் காந்தி அவர்கள் ஜூலை 15 ஆம் தேதி திருச்சியிலே
பேசுகிறார். அதை அடுத்து அவருடைய அன்னையார் மதிப்பிற்
குரிய பாரதப்பிரதமர் இந்திராகாந்தி அவர்கள் கல்பாக்கத்தில்
23-ம் தேதி ஜூலை மாதம் பேசுகிறார். தமிழர் பிரச்சினை
இலங்கை உள்நாட்டுப் பிரச்சனை. அதில் இந்திய அரசு தலையிட
விரும்பவில்லை என்று தெரிவித்து இருக்கிறார். திருச்சியிலே
15 ஆம் தேதி ராஜீவ் காந்தி பேசுகிறார். கல்பாக்கத்திலே
இந்திரா காந்தி பேசுகிறார். 24 ஆம் தேதி இலங்கையிலே
அடக்குமுறை கட்டவிழ்த்து விடப்படுகிறது என்றால் அதை
இன்னும் கூட இந்திய அரசாங்கம் தலையிடாமல் எவ்வளவு
வலுவாக தெளிவாக தைரியமாக உணர்ச்சிபூர்வமாக தலையிடா
மல் இருக்கிறது என்பதை இந்தச் சபைக்கு நான் தெரிவித்துக்
கொள்கிறேன்.



1983 அக்டோபர் 26]

திரு. என். எஸ். வி. சித்தன்; மாண்புமிகு பேரவைத் தலைவர்
அவர்களே, திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர் அவர்கள்
தமிழகத்திற்கு கல்பாக்கத்திற்கு வந்திருந்த மாண்புமிகு பாரதப்
பிரதமர் அவர்கள் பேசியதாகச் சொல்லி இங்கே சொன்ன
கருத்து மாறுபட்ட கருத்து. அது மாதிரி பத்திரிகையில்
எதுவும் வரவில்லை. பத்திரிகையில் வந்த செய்தியை நான்
வாசிக்கிறேன். ''இலங்கையிலே அண்மையில் நிகழ்ந்து வரும்
சம்பவங்களைக் கண்டு, அதிலும் இந்திய வம்சா வழித்
தமிழர்கள் பாதிக்கப்படுவதைக் கண்டு பாரதம் ஆழ்ந்த
கவலைகளைத் தெரிவிக்கின்றபோது. அதை அந்த நாட்டு உள்
நாட்டுப் பிரச்சினையில் இந்தியா தலையிடுவதாக எடுத்துக்
கொள்ளக்கூடாது'' என்று தெளிவாகப் பேசியிருக்கிறார்.

திரு. என். வி. என். சோமு: நான் படிப்பது 24-7-83 தினத்
தந்தி பத்திரிகை. 'தமிழர்களின் பிரச்சினை, இலங்கை உள்
நாட்டுப் பிரச்னை. அதிலே தலையிட இந்திய அரசு விரும்ப
வில்லை' என்பது 24-7-1983 தேதியிட்ட தினத்தந்தி பத்திரிகை
யிலே வெளிவந்து இருக்கிறது. சென்னைப் பதிப்பில் வந்திருக்
கிறது என்பதை அன்புக்குரிய இந்திரா காங்கிரஸ் உறுப்பினர்
அவர்களுக்கு நான் பணிவோடு எடுத்துக்காட்ட விழைகிறேன்.
ஆக ராஜீவ்காந்தி 14 ஆம் தேதி பேசினார்.....

மாண்புமிகு பேரவைத் தலைவர்: ஆளுக்கொரு தமிழ் பத்திரி
கையை படிப்பதைவிட ஏதாவதொரு ஆங்கிலப் பத்திரிகையில்
இருந்து 'கோட்' செய்தால் பரவாயில்லை. அவர்களது ஆங்கிலப்
பேச்சை தமிழ்பத்திரிகை நிருபர்கள் ஒவ்வொருவிதமாக மொழி
பெயர்த்திருப்பார்கள்.

திரு. என். வி. என். சோமு: தலைவர் அவர்களே, நான் திரு.
சித்தன் அவர்களைக் கேட்கவிரும்புகிறேன். இலங்கைப் பிரச்சினை
தமிழர் பிரச்சினை என்பது உள்நாட்டு விவகாரம் இல்லை
என்பதை ஒப்புக்கொள்கிறாரா?

திரு. என். எஸ். வி. சித்தன்: இந்தப் பிரச்சினையில் நிறைய
பேசியாகிவிட்டது. இந்தியா தலையிடவில்லை. இந்தியா
தலையிட்டிருப்பதாக எந்த நாடும் சொல்லவில்லை. இந்தியா
தலையிடவில்லை என்று சொல்லிக்கொண்டே வரிசையாக அடுத்
தடுத்து நிகழ்ச்சிகளை என்னாலே சொல்லமுடியும். பாரதப்
பிரதமரை பொறுத்தவரையில் அடுக்கடுக்காக நடவடிக்கை
எடுத்துக்கொண்டு இருக்கிறார். நான் மீண்டும் சொல்ல
விரும்புவது நாம் இங்கே பேசுகிற பேச்சுக்கள் அங்கே இருக்கின்ற
தமிழர்களுக்கு துணை செய்வதாக அமையவேண்டுமே தவிர,
மாலையிலே மேடையிலே முன்வரிசையிலே உட்கார்ந்து இருப்ப
வர்கள் பாராட்டுவார்கள் என்பதற்காக பேசுவதைப்போல
பேசுவது முறையல்ல. மாண்புமிகு அவைத் தலைவர் எனக்கு
அனுமதி கொடுப்பார்களேயானால் நிறைய நிகழ்ச்சிகளை அடுக்
கடுக்காக எடுத்துச் சொல்லமுடியும்.

திரு. என். வி. என். சோமு: தலைவர் அவர்களே, அது உள்நாட்டுப் பிரச்சினையா இல்லையா அல்லது பங்களாதேஷ் போன்ற கொடுமையான பிரச்சினையா இல்லையா என்பதை..

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அந்தப் பிரச்சினையில் உள்ளே போகாமல் என்ன வரைமுறைகளைக் கொண்டு வரலாம்; எதைச் செய்தால் நலமாக இருக்கும் என்று மட்டும் சொல்லுங்கள். நேரமாகிவிட்டது, சீக்கிரம் முடித்துவிடுங்கள்.

திரு. என். வி. என். சோமு: தலைவர் அவர்களே, இலங்கையிலே தமிழ் மக்கள் கொல்லப்படுவதாவது 1970-71-லே கிழக்கு வங்காளத்தில் நடந்த இனப்படுகொலையின்போது என்ன பாதிப்பு உண்டானதோ அதே நிலைதான் இந்தியாவிலே உருவாகியது என்று ஆங்கிலப் பத்திரிகையான 'லிங்க்' சென்ற ஆண்டு ஆகஸ்ட் மாதத்தில் எழுதி இருப்பதை இந்த அவைக்கு நான் கொண்டுவர விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவையின் இன்றைய அலுவல்கள் இத்துடன் முடிவுற்று, 27-10-1983 காலை 9-00 மணி அளவில் பேரவை மீண்டும் கூடும்.

பின்னர் பேரவை பிற்பகல் 1-30 மணி அளவில் ஒத்திவைக்கப் பெற்றது.



## 8. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்.

### (அ) சட்டப்படிக்கான விதிகளும், ஆணைகளும்.

165. தமிழ் பல்கலைக் கழகத்தின் முதல் துணைவேந்தரை நியமனம் செய்வது குறித்து கல்வித் துறையின் 15-9-1981 ஆம் நாளிட்ட 2060 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. (தமிழ்நாடு 1982-ஆம் ஆண்டு தமிழ் பல்கலைக்கழக சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 9/1982) 49(2) பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது).

166. தமிழ் பல்கலைக் கழகத்தின் முதல் பதிவாளரை நியமனம் செய்வது குறித்து கல்வித்துறையின் 30-9-1981 ஆம் நாளிட்ட 2187 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. (தமிழ்நாடு 1982 ஆம் ஆண்டு தமிழ் பல்கலைக்கழக சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 9/1982, 49(2) பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது).

167. தமிழ் பல்கலைக் கழகத்தின் நிதி அலுவலரை நியமிப்பது குறித்து கல்வித் துறையின் 1-2-1982 ஆம் நாளிட்ட 169 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. (தமிழ்நாடு 1982 ஆம் ஆண்டு தமிழ் பல்கலைக்கழக சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 9/1982) 49(2) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப்பெந்றது.)

168. தமிழ்நாடு மாநில தொழில் மேம்பாட்டுக் கழகத்தின் 1981-82 ஆம் ஆண்டிற்கான பதினோறாவது ஆண்டறிக்கை (தமிழ், ஆங்கிலம்) (1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619 ஏ பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது).

### (ஆ) அறிக்கைகள், அறிவிப்புகள், ஏனையதாள்கள்.

21. வனத்துறை பற்றி மதிப்பீட்டுக்குழு அளித்தபரிந்துரைகள் மீது அரசு மேற்கொண்டுள்ள நடவடிக்கைகள் பற்றிய மதிப்பீட்டுக் குழுவின் இருபதாவது ஆண்டறிக்கை (ஏழாவது சட்டமன்றப் பேரவை (தமிழ்).

## LIST OF AGENTS FOR THE SALE OF TAMIL NADU GOVERNMENT PUBLICATIONS, IN MADRAS CITY.

1 Account Test. Egmore, Madras-8.
2 The City Book Company, Madras-4.
3 Higginbothams (Private) Limited, Madras-2.
4 P. Varadachary and Company, Madras-1.
5 C. Subbiah Chetty and Company, Madras-5.
6 The Universal Book House, Moore Market, Madras-3.
7 C. Sitharaman and Company, Madras-14.
8 Mohan Pathippagam and Book Depot, Madras-5.
9 C. Venkatesan Chetty and Company, No. 8-C, Pycrofts Road, Madras-5.
10 The South India Saiva Siddhanta Works Publishing Society (Tirunelveli) Limited, Madras-1.
11 The Sangam Publishers, No. 11, Sunkurama Chetty Street, Madras-1.
12 New Century Book House (Private) Limited, Madras-2.
13 Kalaivani Book Centre, No. 1, Ponniamman Koil Street, Egmore, Madras-8.

### IN MOFUSSIL OF TAMIL NADU.

1 A. Venkatasubban & Company, Vellore (North Arcot) District.
2 Bharathamatha Book Depot, Thanjavur (Tanjore District).
3 P. V. Nathan Company, Kumbakonam (Tanjore District).
4 Appar Book Stall, Thanjavur.
5 P. N. Swaminathan and Company, Bazaar Street, Pudukkottai.
6 Palaniappa Bros., Tiruchirappalli-2.
7 S. R. Subramania Pillai, Tirunelveli Junction.
8 B. Aruldoss, Villupuram (South Arcot District).
9 Vasantham Stores, Booksellers, 9/31, Cross Cut Road, Coimbatore-12.
10 Mercury Book Company, 20, Karuppa Gounder Street, Coimbatore-1.
11 S. M. Jegannatham Book House, 35, Nandhi Koil Street, Tiruchirappalli-1.
12 Ganesh Stores, South Car Street, Sivakasi.
13 Mary Martin, Booksellers, Kottagiri (The Nilgiris).
14 A. K. Chandriah Chettiar & Sons, Salem-1.
15 Parameswari Book Shop, No. 46D, Old Market Street, Salem.
16 Meenakshi Pathippagam, Pudukkottai.
17 K. V. Narayana Iyer & Sons, Dindigul, Madurai District.
18 Jayakumari Stores, Nagercoil (Kanyakumari District).
19 Baby Stores, Booksellers, Villupuram (South Arcot District).
20 Dinamani Stores, No. 3/1, Old Post Office Road, Coimbatore-10.
21 Kumaran Book Depot, Booksellers, Erode-1.
22 Vasa Book Company, No. A. Annaji Rao Street, Erode-1.
23 Radhamani Stores, 6-A, Raja Street, Coimbatore-1.
24 Ajantha Book Center, Salem-1.
25 Sri Vidya, 63, Tennure High Road, Tiruchirappalli-2.
26 Sri Ramavilas Book Shop, 90, Amman Sannathi, Madras-1.

### IN OTHER STATES.

1 Jain Book Agency, New Delhi.
2 Inter National Book House, Trivandrum.
3 The Book Syndicate, Hyderabad-1.
4 Labour Law Publications, Hyderabad.
5 Puthaghalevam, Pondicherry.
6 Prabu Book Service, Gurgaon, Haryana.
7 K. P. Bagchi & Company, 286, R.B. Gandhi Street, Calcutta-11.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY DEPARTMENT PUBLISHED UNDER RULES 303 AND 306 OF THE TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY RULES (CORRECTED UPTO 5TH NOVEMBER 1979) AND PRINTED BY THE DIRECTOR OF STATIONERY AND PRINTING, MADRAS.

# தமிழ் நாடு
# சட்டமன்றப் பேரவை நடவடிக்கைகள்

# TAMIL NADU
# LEGISLATIVE ASSEMBLY DEBATES

## பணித்துறை வெளியீடு—OFFICIAL REPORT

வியாழக்கிழமை 1983 அக்டோபர் -27 தொகுதி LII எண் .4

**Thursday 27th October 1983 —Volume LII No. 4**

சட்டமன்றப் பேரவைத் துறை, சென்னை-600009

**Legislative Assembly Department, Fort St. George, Madras-600009**

ரூ. 3-50 காசுகள்]

[Price Rs. 3–50 paise

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

**1983, அக்டோபர் 27, வியாழக்கிழமை.**

**ஐப்பசி 10, ருத்ரோத்காரி, திருவள்ளுவர் ஆண்டு 2014.**

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்ட மன்றப் பேரவை மண்டபத்தில் காலை 9—00 மணியளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. க. இராசாராம் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்:

"மனந்தூய்மை செய்வினை தூய்மை இரண்டும்
இனந்தூய்மை தூவா வரும்."

ஒருவருடைய உள்ளம் தூய்மையாக இருத்தல், அவர் செய்யும் செயல் தூய்மையாக இருத்தல் ஆகிய இரண்டும் அவர் மேற்கொண்டுள்ள பண்பாட்டின் தூய்மை காரணமாகவே அமையும்.

**1, வினாக்கள்—விடைகள்.**

**உடுக்குறியிட்ட வினாக்கள்.**

**ஓட்டல்களில் உணவுப் பண்டங்களின் விலையேற்றத்தைத் தடுப்பதற்கான நடவடிக்கை.**

*வினா எண் 41—திரு. ப. சுந்தரம், திரு. து. புருஷோத்தமன்: திரு. பெ. சு. திருவேங்கடம்: திரு. ரா. கிருஷ்ணன்: மாண்புமிகு நிதி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னையில் உள்ள ஓட்டல்களில் இட்லி, தோசை, பொங்கல், காபி போன்றவைகள் விலையேற்றத்தைக் தடுக்க அரசு என்ன நடவடிக்கை எடுத்துள்ளது?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** (அ) அரசு, உணவுப் பண்டங்களின் மீது எடை, விலை நிர்ணயிப்பது குறித்து ஆராய்ந்து வருகிறது.

(ஆ) அத்தியாவசியப் பொருட்களின் கொள்முதல் விலை, தொழிலாளர்களின் சம்பளம், சம்பந்தப்பட்ட பிற செலவினங்கள் (overheads) உணவு விடுதி உரிமையாளருக்கு இலாபம் (Profit) ஆகியவற்றை மனதிற்கொண்டு விலை நிர்ணயிக்கப்படுவது பற்றி அரசு ஆராய்ந்து வருகிறது.

மேலும் ஆதரவற்ற விதவைத் தாய்மார்களுக்கு நிதியுதவி அளித்து மலிவு விலையில் சிற்றுண்டிகள் தயாரித்து விற்க அரசு ஆரம்ப கட்டமாக சென்னையில் 8 சிறு உணவு விடுதிகளை ஆரம்பித்துள்ளது. இவை முழு அளவில் செயல்பட ஆரம்பித்தால் மேலும், மேலும் விரிவாகவும், பரவலாகவும் உணவு விடுதிகளில் விற்கப்படும் உணவுப் பண்டங்களின் விலைகள் ஓரளவிற்குக் கட்டுப்படுத்தும் என நம்பலாம்.

## உள்ளடக்கம்

27--10--1983.


பக்கங்கள்

1. வினாக்கள்—விடைகள்—

உடுக்குறியிட்ட வினாக்கள் .. . 207—303

2. தகவல் கோரல்—

(அ) பத்திரிகை தடைச் சட்டத்தை ரத்து செய்வது .. ..?04—303

(ஆ) சென்னை நகரில் மழையால் ஏற்பட்டுள்ள பாதிப்பு .. ..304—305

(இ) உறுப்பினர்கள் கொடுத்துள்ள அறிவிக்கைகள் .. ..306—313

3. அறிக்கை அளித்தல்—

விதி 106—ன் கீழ் வருவாய்த் துறை அமைச்சரின் அறிக்கை .. ..313—315

4. முதல் துணை மதிப்பீடுகள், 1983-84, அளித்தல் .. 315

5. அறிவிப்பு—

முதல் துணை மதிப்பீடுகள், 1983—84, வெட்டுத் தீர்மானங்கள் கொடுப்பது ..315—316

6. மிகைச் செலவிற்கான மானியக் கோரிக்கைகள் 1975—76, 1976-77, 1977-78 அளித்தல் .. 317

7. அரசினர் தீர்மானம் விதி 32—ஐத் தளர்த்தல் ..317—372

8. அரசினர் தனித் தீர்மானம்—

இலங்கைவாழ் தமிழர் பிரச்சினை குறித்து—(தொடர்ச்சி). .. ..317—342

திரு. வி. கிருஷ்ணமூர்த்தி,

திரு. கே. எஸ். ஜி. ஹாஜாசெரீப், 342—352

மாண்புமிகு டாக்டர் எம். ஜி. இராமச்சந்திரன் .. ..356—372

9. பேரவைமுன் வைக்கப் பெற்ற ஏடுகள் ..373—374


128—176—i

திரு. பொ. சு. திருவேங்கடம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உணவு அமைச்சர், உணவுப் பண்டங்களின் விலையை நிர்ணயிப்பது குறித்து அரசின் ஆய்வில் உள்ளதாக ஓராண்டிற்கு முன்னதாகவே கூட இப்படிப்பட்ட பதிலைச் சொன்னார்கள். ஆனால் நாளுக்கு நாள் சென்னை மாநகரத்தில் மட்டும் அல்ல, தமிழகத்தில் இருக்கிற எல்லா ஓட்டல்களிலும் விலைவாசிகள் மிக அதிகமாக உயர்ந்து கொண்டே இருக்கிறது. இதற்கு ஏதாவது முடிவு எடுத்து கட்டுப்படுத்த வேண்டாமா? ஆகவே, விரைவாக நடவடிக்கைகளை எடுத்து இந்த உணவுப் பண்டங்களின் விலைவாசியைக் குறைக்க அரசு நடவடிக்கை எடுக்க முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதை எப்படிக் கட்டுப்படுத்த வேண்டும் என்றால், அரசு சட்டம்தான் கொண்டு வரவேண்டும். இதற்காக ஒரு சட்டத்தை ஆந்திர அரசு கொண்டு வந்தபோது அதன்பேரில் தடை உத்தரவு பெற்று, உயர்நீதி மன்றத்திற்குச் சென்று அதன் பிறகு உச்ச நீதிமன்றத்திற்கும் சென்றார்கள். ஆகையால்தான் இன்று வரையில் நடவடிக்கை எடுக்க முடியாமல் இருந்தது. ஆனால் இந்த வழக்கிற்கு அண்மையிலே தான் உச்சநீதி மன்றம் தீர்ப்பு அளித்தது. அந்த மனுவை தள்ளுபடி செய்து, விலைவாசிகளைக் கட்டுப்படுத்துவதற்கான உரிமை மாநில அரசுக்கு உண்டு என்று உச்ச நீதிமன்றம் இப்போதுதான் நமக்கு நீதி வழங்கியிருக்கிறது,

ஆகவே, அதன் அடிப்படையில் ஆராய்ந்து நாம் இனி சட்டத்தைக் கொண்டுவர வேண்டும். ஆனால் சட்டத்தைக் கொண்டு வருவதன் மூலமாக அதை நிறைவேற்றுகின்ற காலத்திலே பல சங்கடங்களும், மற்றவைகளும் ஏற்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. ஆகவே, அவர்களாகவே விலைவாசியை உள் அடக்கி வைத்து கூடுமானவரையில் அவர்களே ஒருமுடிவுக்கு வருவார்களேயானால் நல்லது என்ற தன்மையின் அடிப்படையில் அரசு கருதுகிறது. ஆனால் உணவுப் பண்டங்களை தயாரிக்கக் கூடிய மூலப் பொருள்கள், அத்தியாவசிப் பொருள்களின் விலைவாசிகள் உயர்ந்து கொண்டே போவதால், அதன் காரணமாக உணவுப் பண்டங்களின் விலையையும் தாங்கள் ஏற்ற வேண்டிய அவசியம் ஏற்படுகிறது என்று ஓட்டல் முதலாளிகள், அவர்களைக் கூப்பிட்டு இது விஷயமாகப் பேசும்போது, செயலாளரிடத்திலும் என்னிடத்திலும் தெரிவித்தார்கள் ஆகவே, இந்த உணவுப் பண்டங்களுக்கு தேவையான அத்தியாவசியப் பொருட்களை மலிவு விலைக்கு, அடக்க விலைக்கு அல்லது நியாய விலைக்கு எங்களுக்கு வழங்குவீர்களே யானால், அந்த அடிப்படையில் பண்டங்களின் விலையையும் தாங்கள் குறைத்து விற்க முடியும் என்று சொல்கிறார்கள்.





ஆனால் பொது விநியோகத்திற்கு என்று ஒதுக்குகிற அரிசி, கோதுமை, மைதா சர்க்கரைப் போன்ற அத்தியாவசியப் பொருட்களை நியாய விலையில் இப்படிப்பட்ட வியாபார நோக்கத்தோடு பயன்படுத்துகிற நிறுவனங்களுக்குத் தரக்கூடாது என்று மத்திய அரசு உத்தரவிட்டிருக்கிறது. என்றாலும்கூட இருக்கின்ற நியாயமான விலை ஏற்றங்களைப் பார்த்து, தயாரிக்கின்ற உணவுப் பண்டங்கள் அதனுடைய பொருட்களின் விலைவாசி ஏற்றத்தின் நியாய அடிப்படையில் விற்க வேண்டும் என்ற முடிவுகளின் அடிப்படையில் எந்த அளவுக்கு அதனைக் கட்டுப்படுத்த உரிமை இருக்கிறதென்ற முறையிலே கோயம்புத்தூர் அவினாசிலிங்கம் மனை இயல் கல்லூரி முதல்வர் அவர்களையும், அடையார் கேட்டரிங் டெக்னாலஜி முதல்வர் அவர்களையும், பாமர மக்கள் அதிகம் உபயோகிக்கும் இட்டிலி, மெதுவடை, தோசை, காப்பி ஆகிய பண்டங்களுக்கும், ஜனதா சாப்பாட்டிற்கும் நியாயமான விலையை எந்த அளவுக்கு நிர்ண யிக்கலாம் என்று அரசுக்கு யோசனை கூறு படி கேட்டுக் கொள்ளப்பட்டிருக்கிறார்கள். அந்த அறிக்கை வந்தபிறகு, அதன்மீது தக்க நடவடிக்கை எடுக்கலாம் என்று அரசு எண்ணிக் கொண்டிருக்கிறது.

திரு. பெ. சு. திருவேங்கடம்: பேரவைத் தலைவர் அவர்களே, இதிலே இரண்டு பிரச்னைகள் இருக்கின்றன. ஒன்று, விலைவாசி ஒரு பக்கத்திலே உயர்ந்துகொண்டேயிருக்கிறது. பல பண்டங்களினுடைய விலை உயர்கிறபோது சம்பந்தப்பட்ட பண்டங்களை உபயோகித்து தயாரிக்கப்படும் ஓட்டல் உணவுப் பண்டங்களின் விலையையும் அவர்கள் உயர்த்துகிறார்கள். ஆனால் ஒரு கால கட்டத்திலே குறிப்பிட்ட மூலப் பண்டத்தின் விலை குறைகிறபோது, அந்த ஓட்டல் முதலாளிகள் உணவுப் பண்டங்களின் விலையை குறைப்பது இல்லை. அப்படியே நிறுத்தி வைத்துவிடுகிறார்கள்.

இரண்டாவது, இட்டிலி, தோசை போன்ற உணவுப் பண்டங்களின் அளவுகள், அவைகள் நாளுக்கு நாள் குறைந்து கொண்டே வருகின்றன. 6 மாத காலத்திற்கு முன்பு இருந்த அளவை விட இப்போது இன்னும் குறைக்கிறார்கள். அதற்கு உதாரணத்தை சட்டமன்ற உறுப்பினர்கள் விடுதியிலேயே பார்க்கலாம். ஆகவே, அதைக் கட்டுப்படுத்துவதற்கு, உயர்த்தாமலேயே பண்டங்களின் எடையை நிர்ணயிக்க அரசு வழி வகுக்க வேண்டும். இதைக் கட்டுப்படுத்துவதற்கு கண்காணிப்பதற்கு ஏதாவது பறக்கும் படை என்று ஒன்றை அமைத்தாவது அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும். அதே சமயத்தில் உணவுப் பண்டங்களின் விலை ஏற்றத்தைக் குறைக்க, ஓட்டல் முதலாளிகளுக்கு தகுந்த விலைவாசிகளில் பண்டங் களுக்கான பொருட்களைக் கொடுப்பதற்கு அரசு தீவிரமாக யோசித்து நடவடிக்கை எடுக்குமா என்றும் அறிய விரு பு கிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவர் அவர்களே, அதைத்தான் நான் முதலிலேயே குறிப்பிட்டிருக் கிறேன். அவர்கள், தங்களுக்கு என்ன என்ன காரணங்களால்

விலையை ஏற்ற வேண்டிய அவசியம் ஏற்பட்டது என்றும் பல மாநிலங்களின் நிலைமைகளை ஒப்பிட்டுப் பார்க்கிறபோது தமிழகத்திலே தான் குறைந்த விலையில் விற்கப்படுகின்றன என்றும் ஏ, பி, சி, என்ற முறையிலே அவர்கள் பிரித்து வைத்து அந்த அடிப்படையிலே விலைகளை நிர்ணயம் செய்திருக்கிறோம் என்று சொல்கிறார்கள். அவர்கள் சொல்கிற காரணங்கள் எந்த அளவுக்கு நியாயமானவை என்பதை துறையினர் ஆராய்ந்து கொண்டு வருகிறார்கள். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னது போல எடை, அளவு, விலை இவைகளையெல்லாம் கட்டுப்படுத்தி ஒரு கட்டுப்பாட்டின் கீழே கொண்டுவர வேண்டுமென்றால், அப்படிச் செய்கிறபோது அதை மீறுகிறவர்களைத் தண்டிக்க வேண்டுமென்ற முறையிலே சட்டத்தைக் கொண்டுவர வேண்டும். அதைத்தான் நாம் ஆராய்ந்து கொண்டு இருக்கிறோம். அதைக் கொண்டு வந்தால் நாம் சோதனைகளைச் செய்வதற்காக பரவலாக அலுவலர்களை நியமனம் செய்ய வேண்டும். அதுமட்டுமல்லாமல் அடிக்கடி சோதனைகள் செய்ய வேண்டிய அவசியமும் ஏற்படும். அப்போது அதிலே ஏற்படுகின்ற குறைபாடுகள் காரணமாக நாம் எதிர்பார்க்கின்ற பலனைத் தர இயலுமா என்பதையும் ஆராய வேண்டும். இருந்தாலும் எந்த அளவுக்குக் கட்டுப்படுத்தமுடியுமோ அந்த அளவுக்கு அரசு முயற்சிகளை எடுத்துக் கொண்டிருக்கிறது. ஆனால் அவர்கள் எந்த அளவுக்கு ஏற்றியிருக்கிறார்கள், அது நியாயமா என்பதைப் பற்றி எல்லாம் துறையினர் ஆராய வேண்டுமென்று நாம் சொல்லியிருக்கிறோம்.

**திரு. ரா. கிருஷ்ணன்:** தலைவர் அவர்களே, ஓட்டல் உணவுப் பண்டங்களின் விலை நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாக வளர்ந்து கொண்டே வருகிறது. அது மட்டுமல்ல, அவைகளின் அளவிலும் தரத்திலும் குறைவும் தொடர்ந்து இருந்து வருகிற ஒரு நிகழ்ச்சியாக இருக்கிறது. இந்த நிலைமையைக் கட்டுப்படுத்துவதற்கு இயலாமல் போனதற்கு காரணம் அந்த அந்தத் துறை அதிகாரிகளும் அலுவலர்களும் இதிலே முறையாகச் செயல்படவில்லைஎன்பதுதான் என்னுடைய குற்றச்சாட்டாகும். ஓட்டல் உரிமையாளர்கள் சங்கத் தலைவர் திரு. புருஷோத்தமன் அவர்கள் சமீபத்திலே ஓட்டல் பண்டங்களின் விலையைக் குறைக்க இயலாது என்று சொல்லிவிட்டார். அதற்குக் காரணம் என்ன என்றால் சில நன்கொடைகள் சத்துணவு போன்ற திட்டங்களுக்கு....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** கேள்வியை மட்டும் கேட்க வேண்டும், நாட்டு நடப்பு பூராவையும் உறுப்பினர் சொல்லிக் கொண்டிருக்கக் கூடாது.

**திரு. ரா. கிருஷ்ணன்:** அதைக் கட்டுப்படுத்தக்கூடிய, முறையிலே ஆக்கப் பூர்வமான நடவடிக்கை எடுக்கவும் அங்கங்கே ஓட்டல்களில் வேலை செய்கின்ற ஊழியர்களுக்கும் முறையாக சம்பளம் வழங்கப்படாத நிலைமை இருக்கிறது. அதோடு சுகாதார முறைப்படி நடத்தப்படாத நிலைமை இருக்கிறது—இதையெல்லாம் சரிசெய்யக்கூடிய முறையிலும் அலுவலர்களை ஏற்படுத்தி ஆக்கப்பூர்வமான சோதனைகள் செய்வதன் மூலமாக கண்காணிக்க அரசு முன்வருமா?



**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** தலைவர் அவர்களே, அதுபற்றி ஒரு சட்டம் கொண்டுவரலாமா என்ற முறையிலே முயற்சியை மேற்கொண்டபோது—ஏற்கெனவே ஒரு தடையுத்தரவு இருந்தது, அதனுடைய முடிவை எதிர்பார்த்துக் கொண்டிருந்தோம், உச்ச நீதி மன்றம், உணவுப் பண்டங்களின் விலைகளைக் கட்டுப்படுத்த அரசுக்கு உரிமை இருக்கிறது என்ற தீர்ப்பை அளித்திருக்கிறது— அந்தத் தீர்ப்பின் அடிப்படையில் ஒரு பக்கம் நாம் சட்டத்தை உருவாக்கிக் கொண்டிருக்கிறோம். இது சம்பந்தமாக ஓட்டல் முதலாளிகளை அழைத்துப் பேசிய போது குறைந்த விலைக்கு பண்டங்களைத் தாருங்கள் என்று கேட்டார்கள். நாம் தரமுடியாது, தருவதற்கும் இயலாது என்று தெரிவித்துவிட்டோம். ஏனென்றால் பொது விநியோகத்திற்கு மலிவு விலையில் உணவுப் பண்டங்களைக் கொடுக்க வேண்டாமென்று மத்திய அரசு சொல்லியிருக்கிறது. இருந்தாலும் அதைக் கட்டுப்படுத்தவும் மாண்புமிகு உறுப்பினர் கூறியதுபோன்று சட்டம் கொண்டுவந்தால் தனி அலுவலர்கள் சோதனை செய்வதற்கு நியமனம் செய்யப்பட வேண்டும், எடை எப்படி இருக்க வேண்டும், தரம் எப்படி இருக்க வேண்டும், ஏ, பி, சி பிரிவுகள் எப்படி எப்படி இருக்க வேண்டும் என்பதையெல்லாம் நிர்ணயித்து அதன்படி அவர்கள் நடத்துகிறார்களா என்று பார்க்க வேண்டும். அப்படிப் பார்க்கிறபோது மீறுகிறவர்களுக்கு தண்டனை அளிப்பதுபற்றி முடிவு எடுக்க வேண்டுமென்பதற்காகத்தான் துறையினர் இதைப்பற்றி ஆராயுமாறு கேட்டுக் கொள்கிறார்கள்.

**திரு. ரா. கிருஷ்ணன்:** தலைவர் அவர்களே, ஓட்டல்களிலே கலப்படம் அதிகரித்து இருக்கிறது, சிக்கனுக்குப் பதிலாக காகம் போடக்கூடிய நிலைமை இருக்கிறது. தண்ணீரிலே பாலைக் கலப்படம் செய்கிறார்கள். கலப்படம் செய்கிறவர்களைக் கடுமையாகக் கண்டிக்கக்கூடிய முறையிலே சட்டத் திருத்தம் கொண்டுவர அரசு ஏற்பாடு செய்யுமா?

(முற்பகல் 9—10)

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கலப்படப் பொருட்களை தடுத்து நிறுத்துவதற்காக ஏற்கனவே சட்டம் நடைமுறையில் இருந்து வருகிறது. நல்வாழ்வுத்துறை மூலமாக அதற்காக அதிகாரிகளும் மற்றவர்களும் இருந்து இந்த கலப்படப் பொருட்களை எல்லாம் ஆராய்ந்து பல்வேறு வழக்குகளைப் போட்டுக்கொண்டு வருகிறார்கள். மாண்புமிகு உறுப்பினர் கூறுவது போன்று இந்தக் கலப்பட தொழிலை ஓரளவுக்கு நடத்திக் கொண்டு இருக்கிறார்கள். இருந்தாலும் அதிகாரிகள் அவைகளை ஓரளவுக்கு கண்டுபிடிக்கிறார்கள். கண்டுபிடித்து நீதிமன்றத்திற்கு போய் வழக்குகள் போடுகிறார்கள். நீதிமன்றத் திலிருந்து தீர்ப்பு வருவதற்குள்ளாக நீதிமன்றத்தின் கட்டளை களின் காரணமாக பல வழக்குகள் வலிவு இழந்து போகக்கூடிய நிலைமை ஏற்பட்டு விடுகிறது. ஆகவே என்ன செய்யலாம் என்று அரசு யோசித்துக் கொண்டு இருக்கிறது. ஏற்கனவே கலப்

பட்டத்தைத் திருப்புவதற்கு தனியாகச் சட்டம் இருந்து வருகிறது. அதன் மூலம் நடவடிக்கை எடுத்துக் கொண்டு வருகிறார்கள்.

திரு. ம. இன்பராசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஜனதா சாப்பாடு போன்ற வகையில் குறைந்த விலையில் சாப்பாடு போடுகின்ற நிறுவனங்களுக்கு ஊக்கம் தருகின்ற முறையில் விற்பனை வரி போன்றவற்றிலிருந்து சலுகை தந்து அது போன்ற ஸ்தாபனங்கள் நிறைய முன் வருகின்ற சமூக ஸ்தாபனங்களுக்கு ஊக்கம் அளிக்க அரசு முன் வருமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் முதலிலேயே கூறியபடி பொது விநியோகத்திற்கு மலிவான விலையில் மானியத் தொகையில் சப்சிடி ரேட்டில் கொடுக்கக்கூடாது என்று மத்திய அரசு சொல்லியிருக்கிறது. உணவுப் பண்டங்களைப் பொறுத்த வரையில் இப்போது விற்பனை வரி இல்லை. குறைந்த விலையில் உணவு பண்டங்களை விற்க முன்வருகிறவர்களுக்கு ஊக்கம் அளிக்க வேண்டும் என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டார்கள். அதற்குத் தேவையான நடவடிக்கைகளைச் செய்யவும் அதற்கான உதவிகளைச் செய்யவும் அரசு ஆயத்தமாக இருக்கிறது. அந்த அடிப்படையில் தான் சிறு சிறு உணவு விடுதிகளுக்கு குறைந்த விலையில் உணவுப் பொருட்களை தருவதற்கு, விதவைகளுக்கு பணம் அளித்து உதவித் தொகை அளித்து அவைகளை அமைத்து அதன் மூலமாக ஏற்பாடுகளைச் செய்து வருகிறோம். பரீட்சார்த்தமாக முக்கியமான இடங்களில் அதாவது சென்னையில் மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலக வளாகத்திலும் பள்ளிக்கல்வி இயக்குநர் அலுவலக வளாகத்திலும், இராணிமேரிக் கல்லூரி வளாகத்திலும், காவல்துறை ஆணையாளர் அலுவலக வளாகத்திலும், காயிதேமில்லத் மகளிர் கலைக் கல்லூரி வளாகத்திலும், தரமணியில் உள்ள மகளிர் பாலிடெக்னிக் வளாகத்திலும் மேலும் 2 தனி இடங்களிலும் இதற்கு அனுமதி அளித்து அது நடைபெற்றுக் கொண்டு வருகிறது. அதனுடைய வெற்றியின் தன்மையைக் கண்டு பரவலாக ஆக்கலாம் என்ற எண்ணம் அரசுக்கு இருந்து வருகிறது.

**சத்துணவுத் திட்டத்திற்கென்று சிறப்புப் பரிசுச் சீட்டுக் குலுக்கல் நடத்தும் திட்டம்.**

***வினா எண் 42**—திரு. செ. செம்மலை, திரு. ஏ. எம். சேதுராமன், திரு. சி. கணேசன்: மாண்புமிகு நிதி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சத்துணவுத் திட்டத்திற்கென்று தமிழ்நாடு அரசு சிறப்புப் பரிசுச் சீட்டுக் குலுக்கல் நடத்த உத்தேசித்துள்ளதா;

(ஆ) ஆம் எனில் எப்பொழுது நடத்தப்படும்?



மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: (அ) அரசின் பரிசீலனையில் உள்ளது.

(ஆ) இன்னமும் முடிவு எடுக்கப்படவில்லை.

திரு. செ. செம்மலை: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சத்துணவுத் திட்டத்திற்கு என்று பயனுள்ள வகையில் நாம் ரூ. 150 கோடி செலவு செய்து கொண்டு இருக்கிறோம். ஆனால் அதே நேரத்தில் வெளி மாநில பரிசுச் சீட்டுகள் இங்கே விற்கப்படுவதன் மூலம் கிட்டத்தட்ட 100 கோடி ரூபாய்க்கு மேல் நம் தமிழ்நாட்டின் பணம் வெளி மாநிலங்களுக்குப் போகிற நிலைமை இருக்கிறது. அந்த அளவுக்கு தமிழ்நாட்டில் பரிசுச் சீட்டுகளை வாங்குகிற மோகம் அதிகரித்துக் கொண்டு போகிறது. எனவே அந்த நிலைமையைப் போக்கவும் நம்முடைய மாநில பரிசுச் சீட்டை அதிக அளவில் மக்கள் விரும்பத்தக்க அளவில் அவ்வளவு வருமானமும் நம் தமிழ்நாட்டுக்கே வரக்கூடிய வகையில், நம்முடைய பரிசுச் சீட்டுகளை அதிக அளவில் விற்பனை செய்வதற்கு வெளி மாநில பரிசு சீட்டுகளை கட்டுப்படுத்துகிற வகையில் முடிந்தால் அதை தடை செய்கின்ற வகையில் ஏதாவது திட்டம் அரசிடம் உள்ளதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குழந்தைகள் மதிய சத்துணவுத் திட்டத்திற்கு பயன்படுகின்ற வகையில் இந்த பரிசுச் சீட்டை நடத்தி அதன் மூலம் வருகின்ற வருவாயை இந்த நல்ல செயலுக்குபயன்படுத்தலாம்என்றயோசனையை அடிப்படையாக மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தெரிவித்தார்கள். அந்த அடிப்படையில் அதற்கு என்று தனியாக ஒரு பரிசுச் சீட்டு நடத்தலாமா என்பது பற்றி அரசும் அது சம்பந்தப்பட்ட துறையும் ஆராய்ந்து வருகிறது. சில பல முடிவுகளை வெளியிடுகின்ற காலத்திலேயே இந்தியா முழுவதில் இருக்கின்ற 22 மாநிலங்களும் பரிசுச் சீட்டுகளை நடத்திக் கொண்டு வருகிறார்கள். இப்போது இதற்கு என்று ஒரு பரிசு சீட்டு நடத்த வேண்டும் என்ற எண்ணத்தின் அடிப்படையில் மற்றைய மாநிலங்களோடு போட்டி போடத் தக்க அளவுக்கு நம்முடைய மாநில பரிசு சீட்டும் கவர்ச்சிகரமாக இருக்க வேண்டும் என்றும்—அவர்கள் இப்போது 1 கோடி, 2 கோடி பரிசு என்று போய்விட்டார்கள். நம்முடைய பரிசு சீட்டு 1 லட்சம், 10 லட்சம் பரிசு என்று இருக்கிறது. ஆகவே இதனை எப்படி ஈடு கட்டுவது என்பதை நாம் ஆராய்ந்து கொண்டு வருகிறோம். தமிழகத்தைப் பொறுத்தவரையில் பரிசுச் சீட்டு முகவர்களாக இருந்துபணியாற்றுகிறவர்கள் பலரை நானும்அழைத்து, தனியாகப் பல யோசனைகளைக் கேட்டிருக்கிறேன். இந்தத் துறையினரும் கேட்டிருக்கிறார்கள். அவர்கள் சிலபல யோசனைகளைச் சொல்லியிருக்கிறார்கள். அந்த யோசனைகளுடைய அடிப்படையிலே அப்படி நாம் ஒரு பரிசுச் சீட்டை நடத்த வேண்டுமென்ற எண்ணத்தை நடைமுறைப்படுத்துகின்றபோது நமக்குப்

பலன் அளிக்கக்கூடிய வகையில் அமைய வேண்டும் என்ற அடிப்படையிலே அவைகளை ஆராய்ந்து வருகிறது. பிற மாநிலச் சீட்டுகள் நம்முடைய மாநிலத்திலேதான் அதிகமாக விற்பனை ஆகின்றன. எல்லா மாநிலங்களுடைய பரிசுச் சீட்டுகளும் குறைந்தது 65%, 70% தமிழகத்திலே விற்பனை ஆகின்ற சூழ்நிலையிருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறுவது போன்று அதை எந்த அளவுக்குக் கட்டுப்படுத்தலாம். எந்த அளவுக்குத் தடை செய்ய இயலும் என்பதைப் பற்றி ஆராயும்படி சட்டத் துறையை நாம் கேட்டிருக்கிறோம். பிற மாநிலங்களுடைய பரிசுச் சீட்டுகளை விற்பதை, பம்பாய் அரசாங்கம் ஒரு சட்டத்தின் மூலம் தடுத்தது. இப்பொழுது, பம்பாய் உயர்நீதி மன்றத்திலே ரிட் வழக்குப்போட்டு, இடைக்கால தடைபெற்று, மறுபடியும் அங்கு விற்றுக் கொண்டிருக்கிறார்கள். அதனுடைய முடிவையும் நாம் எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறோம். அதே நிலையில், நம்முடைய சட்டத் துறையையும் ஆராயும்படி சொல்லியிருக்கிறோம். இதைத் தடை செய்ய இயலுமா என்பதை முதலிலே காணுவது; தடை செய்ய இயலாவிட்டால் கட்டுப்பாடாவது செய்ய வேண்டுமென்ற நிலைமையை ஏற்படுத்துவது; அல்லது பிற மாநில பரிசுச் சீட்டுகளை இங்கே விற்பனை செய்வதற்கு வரி விதித்து, அதன்மூலம் வருவாய் பெற முடியுமா என்பதைப் பற்றியும் ஆராயும்படியாக சட்டத் துறையினர் கேட்கப்பட்டிருக்கிறார்கள். இவையெல்லாம் முடிவுக்கு வந்தபிறகு, திட்டவட்டமாக ஒரு முடிவை எடுத்து, அரசு இந்த அவைக்கு அறிவித்து செயல்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. செ. செம்மலை: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நமது அரசாங்கத்தின் மூலம் நடத்தப்பட்டு வரும் இந்தப் பரிசுச் சீட்டு குலுக்கலை மேலும் இலாபகரமாக செய்ய தனியார் யாராவது முன் வந்தார்களா? அப்படி தனியார் மூலம் நடத்தினால், அரசுக்கு அதிகம் இலாபம் வரும் என்று சொல்லலாம். இந்தப் பரிசுச் சீட்டை நடத்தும் பொறுப்பைத் தனியாருக்கு விட அரசு பரிசீலிக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய மாநில பரிசுச் சீட்டு பிற மாநிலங்களுடைய பரிசுச் சீட்டுகளோடு போட்டி போடுகிற அளவுக்கும், நம்முடைய மாநிலத்திலேயே நம்முடைய பரிசுச் சீட்டுகள் அதிகமாக விற்பனையாகி, அதன் மூலம் வருகிற வருமானம், நல்லபல செயல்களுக்குப் பயன்பட வேண்டுமென்ற நோக்கத்தின் அடிப்படையில் கைதேர்ந்த முகவர்களையெல்லாம் அழைத்துப் பேசியதிலே அவர்கள் பல்வேறு யோசனைகளைச் சொல்லியிருக்கிறார்கள். அரசே நடத்தலாம் என்றும், 5, 6 வழிகளைச் சொல்லியிருக்கிறார்கள். அந்த 5, 6 வழிகளிலே எந்த ஒரு குற்றங்குறையும் ஏற்படாத ஒரு வழியைத் தேர்ந்தெடுத்து அந்த முறையில் மக்களுக்கு



நம்பிக்கையும், அவர்களது நன் மதிப்பையும் பெற்று நிறைவேற்றுகின்ற முறையிலே, நடைமுறைப்படுத்திக் கொண்டு வருவதற்கான வழியை இப்பொழுது ஆராய்ந்து கொண்டு வருகிறோம். விரைவிலே, இதுபற்றி முடிவு எடுக்கப்படும்.

திரு. ஏ. எம். சேதுராமன்: மாண்புமிகு தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய சத்துணவுத் திட்டத்தின் அடிப்படையில் இரண்டு வயதிலிருந்து பத்து வயது வரை உள்ள குழந்தைகளுக்கு இப்பொழுது மதிய உணவு இலவசமாக அளிக்கப்படுகிறது என்பதை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் 1984 ஆம் ஆண்டிலிருந்து பதினைந்து வயது வரை உள்ள குழந்தைகளுக்கு, அந்த மதிய உணவுத் திட்டத்தை அமுல்படுத்த இருக்கிற காரணத்தாலும், கோடிக் கணக்கான பணம் அதற்காகச் செலவழிக்கப்பட வேண்டிய அவசியம் ஏற்பட்டிருக்கிற காரணத்தாலும், இந்தப் பரிசுச் சீட்டுத் திட்டத்தை விரைவில் அமுல்படுத்துவதற்கும், அதே நோக்கில் வெளி மாநிலங்கள் நடத்துவதைப் போல், கோடிக் கணக்கான தொகை பரிசுச் சீட்டுத் திட்டத்தை இங்கு கொண்டுவந்து, அந்த வருமானத்தைத் தமிழ்நாடு, தமிழக அரசு ஏற்றுக் கொள்ளும் நிலைமையை அரசு உருவாக்க இயலுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் முதலிலேயே குறிப்பிடுகிற பொழுது, இந்தப் பிரச்சனைகளையெல்லாம் ஆராய்ந்து தக்க ஒரு முடிவெடுக்க இருக்கிறது என்பதைப்பற்றித்தான் அரசு ஆலோசித்துக் கொண்டிருக்கிறது என்று சொன்னேன். அதுபற்றி விரைவிலே அரசு ஆராய்ந்து தக்கதொரு முடிவு எடுக்கும்.

திரு. சி. கணேசன்: பேரவைத் தலைவர் அவர்களே, இங்கே எழுப்பப்பட்டிருக்கிற வினா, குறிப்பாக, சத்துணவுத் திட்டத்திற்கென்று நடத்தப்படவிருக்கின்ற பரிசுச் சீட்டுத் திட்டத்தைப் பற்றியதுதான். சத்துணவுத் திட்டத்திற்காக இந்தப் பரிசுச் சீட்டைப் புகுத்தி, ஏற்கனவே, சிறப்பாக நடந்து கொண்டு வருகிற இந்த சத்துணவுத் திட்டத்தை மேலும் பொருளாதார ரீதியில் வலுப்படுத்தி, அது என்றைக்கும் வாழக் கூடிய தன்மானத்தைப் பெறவேண்டுமென்ற நோக்கத்தோடுதான் இந்த அரசு ஏற்கனவே இதை அறிவித்திருக்கிறது. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இது பரிசீலனையில் இருப்பதாக அறிவித் தார்கள். ஆனால், அந்தப் பரிசீலனை எப்பொழுது முடிவடையும்? வெகுவிரைவிலே அதை அறிமுகப்படுத்தி, அப்படி அறிமுகப் படுத்துவதன் மூலமாக, மக்களுக்கு ஒரு எழுச்சியை உண்டாக்கி, அந்த எழுச்சியின் மூலமாக, இந்த வருமானத்தைப் பெருக்கி, அதன் மூலமாக, பாமர மக்களுக்கு விரைவாகப் பயன்படுத்த வேண்டுமென்ற நோக்கத்திலேதான், ஏற்கனவே அரசு அறிவித்தது. அந்தப் பரிசீலனை எப்பொழுது முடியும்? எந்தக் காலத்திலே அது நடைமுறைக்கு எடுத்துக் கொள்ளப்படும் என்பதை அரசு அறிவிக்குமா?

(முற்பகல் 9-20)

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இவ்வளவு காலத்திற்குள் என்று திட்டவட்டமாக எடுத்துச் சொல்வதற்கில்லை. ஆனாலும் கூட திட்டவட்டமான, தெளிவான, நல்லதொரு முடிவை பெறவேண்டுமென்று எல்லோரையும் 2, 3 முறைகள் அழைத்து வைத்து பேசி ஒரு சுமுகமான முறையை தேர்ந்தெடுக்க விரும்பினோம். இரண்டு, மூன்று மாநிலங்களில் மாநிலமே நடத்தி அதை நடத்த முடியாத அளவிற்கு போய் கைவிட்டு விட்டார்கள். பாண்டிச்சேரி மாநிலத்தில் நடத்தி அதிலே சிலபல குற்றங்கள் வந்ததன் காரணமாக அடியோடு நிறுத்தி விட்டார்கள். ஆகவே, இப்படிப்பட்ட சூழ்நிலைகளுக்கு இடம் தராத வகையிலே, சந்தேகத்திற்கு இடமில்லாத வகையிலே இருக்க வேண்டும். சிறப்பாகவும் அமைய வேண்டும். அதோடு எல்லோருடைய ஒத்துழைப்பும் இருக்க வேண்டும். இதிலே குளறுபடிகள் எதுவும் ஏற்படக் கூடாது என்பதற்காக இப்போது ஒரு மாதத்திற்குள்ளாக இரண்டு முறைகள் அதிகாரிகளை வைத்து நான் பேசியிருக்கிறேன். விரைவில் அதுபற்றி முடிவெடுக்கப்படும் என்பதை மட்டும் கூறிக் கொள்ள விரும்புகிறேன்.

திரு. மு. அம்பிகாபதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்திலே இருக்கிற ஏழை, எளிய மக்கள் கோவிலை நம்பிக் கெட்டார்கள். அடுத்து நசிவான சினிமாப் படங்களைப் பார்த்துக் கெட்டிருக்கிறார்கள். இப்போது பரிசுச் சீட்டு காதலில் மூழ்கி ஏழை, எளிய மக்கள் சாப்பிடாமல்கூட (குறுக்கீடு) பரிசுச் சீட்டு விளம்பரங்களைப் பார்த்தால் ஆச்சரியமாக இருக்கும். குடிசையிலே இருக்கிற நீ மாடி வீட்டிற்குப் போகலாம். மாடி வீட்டிலே இருக்கிற நீ ஏர்—கண்டிஷன் ரூம் வைத்துக் கொள்ளலாம். அம்பாசிடர் கார் வைத்திருக்கிற நீ இம்பாலா கார் வைத்துக் கொள்ளலாம் என்று ஒரு மாயையை மக்கள் மத்தியிலே உருவாக்கி அவர்களை ஏமாற்றுகிற இந்தப் பரிசுச் சீட்டுத் திட்டத்தை ஒழிக்க அரசாங்கம் முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த பரிசுச் சீட்டை அகில இந்திய அளவிலே ஒழிக்கின்ற அதிகாரம் எந்த மாநில அரசிற்கும் இல்லை. இந்த மன்றத்திற்கும் இல்லை. ஆனால் மத்திய அரசு இந்த பரிசுச் சீட்டு முறையை அடியோடு ஒழித்துவிட, இதனால் ஏழை எளிய மக்கள் கெடாத வகையிலே ஒரு சட்டத்தைக் கொண்டு வருமேயானால் அதை முழு மனத்தோடு வரவேற்க தயாராக இருக்கிறோம். நாம் மட்டும் ஒழித்துவிட்டு, மற்ற 21 மாநிலங்கள் முழுவதும் இங்கே சந்தையாக தமிழகத்தைப் பயன்படுத்துவார்களானால் நாம் ஏமாளிகள் என்ற பெயர் எடுக்க வரும் என்ற காரணத்தினால்தான், இதை



மத்திய அரசே கொண்டு வருமானால் நாம் வரவேற்கத்
தயாராக இருக்கிறோம். அவர்கள் போட்டி போடும்போது
நாம் சமாளிக்க வேண்டிய நிலையில் இருக்கிறோம். மற்றொரு
கருத்தைக் கூட முகவர்கள் கூறினார்கள். 2 கோடி, 5 கோடி,
10 கோடி என்று போவது அநியாயம் என்று சொன்னார்கள்.
மத்திய அரசே சட்டம் கொண்டு வந்து பரிசுச் சீட்டு என்றால்
10 இலட்சத்திற்கு மேலே போகக் கூடாது. 5 இலட்சத்திற்கு
மேலே போகக் கூடாது என்று சட்டத்தை வைத்தால் கூட
நல்லது என்று முகவர்கள் கூறினார்கள். ஏனென்றால்
மாநிலத்திற்கு மாநிலம் போட்டி போட்டுக் கொண்டு போவது
சரியல்ல. அதற்கு மத்திய அரசே ஒரு உச்ச வரம்பை
வைக்க வேண்டும். இப்போது மத்திய அரசு பரிசு விழுவதிலே
40 சதவீதம் இன்கம் டாக்ஸ் என்று வைத்திருக்கிறது. மத்திய
அரசே 85 சதவீதம் இன்கம் டாக்ஸ் என்று போட்டு ஏதாவது
செய்தால் அந்த அளவிற்காவது குறைக்க முடியுமே என்று சிலர்
யோசனைகளைச் சொல்லியிருக்கிறார்கள். அப்படி அந்த
வகையிலே இதிலே இருக்கிற கேடுகள் நீங்க வேண்டும் என்பது
தான் நம்முடைய எண்ணம். அதற்கான முயற்சிகளை இந்த
அரசு மேற்கொண்டு வருகிறது.

நவீன அரிசி ஆலைகள் அமைக்கும் திட்டம்.

திரு. இரெ. இராசமாணிக்கம் : மாண்புமிகு
* வினா எண் 43—
நிதி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—
(அ) தமிழகத்தில் நவீன அரிசி ஆலைகள் எந்தெந்த
மாவட்டங்களில் அமைக்க அரசு உத்தேசித்துள்ளது?
(ஆ) தஞ்சை மாவட்டத்தில் எந்த இடத்தில் அமைக்க
அரசு முடிவு செய்துள்ளது?
மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : (அ) மற்றும் (ஆ)
தஞ்சை மாவட்டத்தில் சீர்காழி வட்டத்தில் எருக்கூர் என்ற
கிராமத்தில் நவீன அரிசி ஆலை அமைக்க அரசு உத்தேசித்
துள்ளது.

திரு. இரெ. இராசமாணிக்கம் : மாண்புமிகு தலைவர்
அவர்களே, நெல் மார்க்கெட்டிலே முக்கியமாக இடம் வகிப்பது
தஞ்சை மாவட்டத்தில் குத்தாலம் ஆகும். ஆகவே குத்தாலம்
பக்கத்திலே நவீன அரிசி ஆலை அமைப்பது பொருத்தமுடைய
தாக இருக்கும். ஆகவே அதிக அளவிலே நெல் உற்பத்தி
யாகின்ற குத்தாலம் பகுதியிலே நவீன அரிசி ஆலையை
அமைக்க அரசு முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு
பேரவைத் தலைவர் அவர்களே, தஞ்சாவூர், முகவை, குமரி,
புதுக்கோட்டை ஆகிய மாவட்டங்களில் எல்லா வாய்ப்புக்
கூறுகளையும் அடிப்படையாக வைத்து வல்லுநர் குழு ஆராய்ந்து
பார்த்த பிறகு தஞ்சை மாவட்டத்தினுடைய இந்த பகுதி
ஏற்றதென்று அவர்கள் முடிவு எடுத்ததன் காரணமாக ...

காழிக்கு பக்கத்திலே எருக்கூர் தேர்ந்தெடுக்கப்பட்டது. அங்கே 21.30 ஏக்கர் நிலம் இதற்காக எடுக்கப்பட்டுள்ளது. இதற்காக ஒப்பந்தப் புள்ளிகள் பெறப்பட்டு கட்டிட வேலைகளை ஆரம்பிப்பதற்கான முயற்சிகளும் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன. இதற்கு வேண்டிய இயந்திரங்கள் வாங்குவதற்கான ஒப்பந்தப் புள்ளி ஆய்வு செய்யப்பட்டு அதை வெளியிடுவதற்கான ஆவணங்கள் ஆயத்தமாக உள்ளன. இனிமேல் வேறு இடத்திற்கு மாற்றுவதற்கு இல்லை. ஆனால் வேறு 5 நவீன ஆலைகள் அதேபோல வரவேண்டுமென்று நாம் கேட்டுக்கொண்டிருக்கிறோம். அப்படி திட்டக் குழு அனுமதி அளிக்கின்ற நேரததில், வேறு எங்கெங்கே வைத்துக் கொள்ளலாம் என்று யோசிக்கின்ற நேரத்தில், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறுகின்ற குத்தாலத்தையும் யோசனையில் ஒன்றாக சேர்த்துக் கொள்ளலாம்.

திரு. இரெ. இராசமாணிக்கம் : தலைவர் அவர்களே, இப்போது சீர்காழி பகுதியிலே அமைக்கவிருக்கிற நவீன அரிசி ஆலைக்கு ஆகக்கூடிய செலவுத் தொகை எவ்வளவு? அந்த ஆலை ஒரு நாளைக்கு எவ்வளவு அரிசி உற்பத்தி செய்யக்கூடிய திறன் உள்ளது என்பதை அறிவிக்க இயலுமா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு தலைவர் அவர்களே, அரிசி ஆலையினுடைய மதிப்பீடு 2 கோடி ரூபாய் அளவில் அமைக்கப்படுவதாக இருக்கும். இந்த ஆண்டு 1983-84-ல் ஒரு கோடி ரூபாய் செலவழிப்பதற்கு அனுமதி அளிக்கப்பட்டு 30 லட்சம் ரூபாய் இதுவரையில் செலவழிக்கப்பட்டுள்ளது. ஒரு நாளைக்கு 100 டன் அரிசி அரைக்கிற அரவைத் திறன் கொண்டதாக அது அமையும்.

தமிழகத்தில் நகர்ப்புற நில உச்சவரம்பு சட்டத்தின் கீழ் கையகப்படுத்தப்பட்டுள்ள நிலங்கள்.

* வினா எண் 44— திரு. க. பாரமலை : மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழகத்தில் நகர்ப்புற நில உச்சவரம்பு சட்டத்தின் கீழ் 1983 மார்ச் முடிய தமிழக அரசு கையகப்படுத்தியுள்ள நிலங்கள் எவ்வளவு?

(ஆ) அவை எந்தெந்த வகையான காரியங்களுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கிறது?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: (அ) மற்றும் (ஆ) சுமாராக 740 ஏக்கர் அதிகப்படியான காலி நிலங்கள் எடுக்கப்பட்டுள்ளன. இவை, அரசாங்கம் மற்றும் அரசுத்துறை நிறுவனங்கள், வீட்டுவசதி வாரியம், தமிழ்நாடு குடிசைமாற்று வாரியம், காவல் துறை வீட்டு வசதி வாரியம், பொது நிறுவனங்களுக்குக் கொடுக்கப்பட்டு வருகிறது.



திரு. க. பாரமலை : தலைவர் அவர்களே, இந்த உபரி நிலம் சுமார் 740 ஏக்கர் எடுக்கப்பட்டிருக்கிறது என்றும், அவற்றை அரசுத் துறைகளுக்கு வழங்கியிருப்பதாகவும் அமைச்சர் அவர்கள் தெரிவித்தார்கள். மத்திய அரசு, தாழ்த்தப்பட்ட மலைவாழ் மக்கள் கமிஷன் பரிந்துரையை ஏற்று அப்படி உபரியாகக் கிடைக்கிற, நில உச்சவரம்புச் சட்டத்தின்கீழ் கிடைக்கிற நிலங்களை பகிர்ந்தளிப்பதில் நகரங்களில் வாழ்கிற குறைந்த வருவாய் உள்ள தாழ்த்தப்பட்ட மக்களுக்கு முன் உரிமை வழங்கவேண்டும் என்ற பரிந்துரையை ஏற்று மாநில அரசுக்கு தாக்கீது அனுப்பியிருப்பதாகச் சொல்லப்படுகிறது. அது உண்மையா? அப்படி தாக்கீது வந்திருந்தால் அதன்மீது அரசால் எடுக்கப்பட்ட நடவடிக்கை என்ன என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : தலைவர் அவர்களே, அப்படி தாக்கீது வந்ததாக என்னிடம் தகவல் இல்லை. வந்தால் அரசு அதையும் பரிசீலனை செய்யும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. எல். இளையபெருமாள் : தலைவர் அவர்களே, நமது அமைச்சர் அவர்கள் சொல்கிறபோது, சுமார் 740 ஏக்கர் நிலம் எடுக்கப்பட்டிருப்பதாகவும், அதை அரசு ஊழியர்களுக்குக் கொடுப்பதாகவும் சொல்கிறார்கள். நமது அரசாங்கம் தீண்டாமையை ஒழிக்கவேண்டும், ஜாதியற்ற சமுதாயத்தை ஏற்படுத்த வேண்டுமென்றெல்லாம் சொல்லி வருகிறது. அப்படியிருக்கிறபோது ஆதி திராவிட மக்கள், மலைவாழ் மக்கள் இவர்களுக்கு நகரப்புறங்களில் கிடைக்கிற இடத்தில் 50 சதவீதத்தையாவது ஒதுக்கி வீடற்ற மக்கள் வீடு கட்டிக்கொள்ள, ஜாதியற்ற சமுதாயத்தை உருவாக்க அரசாங்கம் முன்வருமா? அதோடு, நிலங்களை எடுக்கவேண்டிய நேரத்தில் அரசாங்கம் மௌனம் சாதித்து நீண்ட நாட்களாக இதை எடுக்கிற பணியைக் கூட —— கை விட்டதாகச் சொல்லவில்லை —— அமைதியாக அதில் உறக்கமாக இருப்பதாகக் கருதுகிறேன். அதற்குச் காரணம் என்ன என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : தலைவர் அவர்களே, கேள்வி நேரத்தில் தேவையான ஒன்றை கேட்டுவிட்டு இப்படியா என்று கேட்கவேண்டுமே தவிர குற்றச்சாட்டுக்கள் சொல்வதை எப்போதும் நாம் கேள்வி நேரத்தின்போது பின்பற்றுவதில்லையென்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். நான் முதலிலே சொல்லியபோது 740 ஏக்கர் எடுக்கப்பட்டுள்ளன என்பதைத் தெரிவித்திருக்கிறேன். எடுக்கப்பட்ட அந்த நிலங்களை அரசுத் துறைகளுக்கு, உள்ளாட்சி மன்றங்களுக்கு, அரசாங்க நிறுவனங்களுக்கு, தொழில் நிறுவனங்களுக்கு, காவல் துறை வீட்டு வசதி வாரியத்திற்கு —— வாரியம் என்று சொல்லும்போது ஆதிதிராவிடர் வீட்டு வசதி வாரியம் என்பதும் வருகிறது ——

என்று இவைகளுக்கு முதலில் கொடுக்கப்படுகிறது. கடைசியாக தனியார்களுக்குக் கொடுக்கப்படுகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

*வினா எண் 45— திரு. ச. பாலகிருஷ்ணன் : மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) பெரியார் மாவட்டத்தில் நில உச்சவரம்பு சட்டத்தின் மூலம் அரசு எடுத்த உபரி நிலம் எத்தனை ஏக்கர்?

(ஆ) அவைகளில் ஆதிதிராவிடர்களுக்குக் கொடுக்கப்பட்ட நிலம் எத்தனை ஏக்கர்?

**மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் :** (அ) மற்றும் (ஆ): பெரியார் மாவட்டத்தில் 7,286 ஏக்கர் நில உச்சவரம்புச் சட்டத்தின் மூலமாக அறிவிக்கப்பட்டுள்ளது. அதிலே 3194 ஏக்கர் எடுக்கப்பட்டுள்ளது. இதில் 2,400 ஏக்கர் 2355 நபர்களுக்குக் கொடுக்கப்பட்டுள்ளது. மேற்படி நபர்களில் 953 நபர்கள் ஆதி திராவிடர்கள் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. ச. பாலகிருஷ்ணன் :** தலைவர் அவர்களே, நில உச்ச வரம்புச் சட்டத்தின்மூலம் எடுக்கப்படுகிற நிலங்களை எந்தத் தகுதி அடிப்படையில் ஏழை மக்களுக்குக் கொடுக்கிறார்கள்? அப்படி கொடுக்கப்படுகிற நிலங்களுக்கு கிரயத் தொகை ஏதாவது அவர்களிடமிருந்து வசூலிக்கப்படுகிறதா?

**மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் :** தலைவர் அவர்களே, நில உச்சவரம்புச் சட்டத்தின்கீழ் நிலத்தை எடுக்கிறபோது அதிலே முதலில் யார் அந்த நிலத்தை அனுபவம் செய்திருக்கிறார்களோ அவர்களுக்கு முன் உரிமை கொடுக்கப்படுகிறது. நிலத்தினுடைய கிரயம் வசூல் செய்யப்படுகிறது. அவர்களிடமிருந்து 15 தவணைகளில் வசூலிக்கப்படுகிறது. ஆனால் எடுக்கப்பட்டவர்களுக்கு பத்துத் தவணைகளில் திருப்பிக் கொடுக்கப்படுகிறது.

(முற்பகல் [illegible]-30)

**திரு. என். வரதராஜன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் பதில் சொல்லுகிறபோது, 2,017 ஏக்கர் நிலம்தான் உச்சவரம்பு சட்டத்தின்கீழ் மிச்சமாகி, 236 பேர்களுக்கு விநியோகிக்கப்பட்டிருப்பதாகச் சொன்னார்கள். சுமார் 20 இலட்சம் மக்கள் இருக்கக்கூடிய ஒரு மாவட்டத்தில், கிட்டத்தட்ட 15 இலட்சம் மக்கள்



கிராமப்புறத்திலே இருக்கிறபோது, 236 பேர்களுக்கு விநியோகம் செய்யப்பட்டிருப்பது என்பது மிகவும் குறைவு. நிலச் சீர்திருத்தச் சட்டத்தின் மூலம் பெரிய மாறுதலை ஏற்படுத்த வேண்டுமென்ற அடிப்படையைச் சொல்லக்கூடிய நேரத்திலே, மாநில அரசு இந்த நிலச் சீர்திருத்தச் சட்டத்தை தீவிரமாக, துரிதமாக நிறைவேற்றுவதற்கான முயற்சிகளை எடுக்க முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் :** பேரவைத் தலைவர் அவர்களே, பெரியார் மாவட்டத்தில் மட்டுமே எடுக்கப்பட்ட நிலங்கள் 7,286 ஏக்கர்கள். அவைகளில் கொடுக்கப்பட்டது 2,355 பேர்கள் என்றும், அதிலே ஆதி திராவிடர்கள் 953 பேர்கள் என்றும் சொல்லியிருக்கிறேன். நிலச் சீர்த்திருத்தச் சட்டத்திலே தவறுகள் நடைபெற்றிருந்தால் அவைகளைத் தீர்ப்பதற்காகத் தான் ஒரு சட்ட முன்வடிவு இங்கே கொண்டு வந்து, நிறைவேற்றப்பட்டு, மத்தியப் பேரரசுக்கு அனுப்பப்பட்டது. நிலச் சீர்திருத்தச் சட்டத்தை எல்லாக் கட்சிகளும் ஏகமனதாக ஆதரித்தது. இந்தியத் துணைக் கண்டத்திலேயே, தமிழகத்திலே அப்படி நிறைவேற்றப் பட்ட சட்டம், ''போன மச்சான் திரும்பி வந்தான் பூ மணத்தோடே'' என்று சொல்வார்களே, அதேபோல் திரும்பி வந்துவிட்டது. ஆகவே, திரும்பவும் அதை வலியுறுத்தி, இந்த அவைமுன் உங்கள் அனுமதிக்காக சட்ட முன்வடிவு கொண்டு வரப்பட இருக்கிறது என்பதை தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. ச. பாலகிருஷ்ணன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த நில உச்ச வரம்புச் சட்டத்தின்மூலம் எடுக்கப்பட்ட நிலங்களை, பல இடங்களில் அந்த நிலத்தின் சொந்தக்காரர்களே தங்களுடைய கட்டுப்பாட்டின் கீழ் வைத்துக் கொண்டிருப்பது அரசுக்குத் தெரியுமா? அப்படி அவர்கள் தங்கள் கட்டுப்பாட்டின்கீழ் வைத்துக் கொண்டிருக்கக்கூடிய நிலங்களை அரசு எடுத்து, ஏழை மக்களுக்கு விநியோகம் செய்வதற்கான வழிமுறைகளை, ஏற்பாடுகளை செய்திருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் :** பேரவைத் தலைவர் அவர்களே, எடுக்கப்பட்ட நிலங்களை அவர்களே வைத்துக் கொண்டிருப்பதாக அரசுக்குத் தகவல் இல்லை. அப்படி வைத்துக் கொண்டிருந்தால், அது தவறு. அரசு அதை அனுமதிக்காது. அப்படியிருந்தால், உறுப்பினர் அவர்கள் அதைப்பற்றிய விவரங்களைச் சொன்னால், அதற்கான நடவடிக்கை எடுக்கப்படும்.

**திரு. இரா. கருப்பையா :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நில உச்ச வரம்புச் சட்டத்தின் மூலம் அதிகமான விவசாயிகளுக்கு நிலம் பகிர்ந்து அளிப்பதற்கான வாய்ப்பு

இல்லாத காரணத்தினால், நிலத்தை உழுபவனுக்கே, அந்த நிலத்தைச் சொந்தமாக்கும் சட்டத்தைக் கொண்டு வருவதற்கு இந்த அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் :** பேரவைத் தலைவர் அவர்களே, உழுபவனுக்கே நிலத்தைச் சொந்தமாக்க வேண்டும் என்பதுதான் இந்த அரசினுடைய கொள்கை. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இந்த அவையிலே இதை அறிவித்திருக்கிறார்கள். அதற்கான சட்டம் கொண்டு வருவதற்கான எல்லாவிதமான நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டு வருகிறது. எவ்வளவு விரைவிலே கொண்டுவர முடியுமோ, அவ்வளவு விரைவிலே கொண்டு வருவதற்கான முயற்சியை இந்த அரசு செய்யும்.

## வேதாரண்யம் உப்பளத்தில் குத்தகைக்கு விடப்பட்டுள்ள நிலங்கள்.

*வினா எண் 46— **திரு. எம். எஸ். மாணிக்கம் :** மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தஞ்சை மாவட்டம் வேதாரண்யம் உப்பளத்தில் யார் யாருக்கு எத்தனை ஏக்கர் நிலம் குத்தகைக்கு விடப்பட்டுள்ளது?

(ஆ) இந்த நிலங்களுக்கு எவ்வளவு வரி வசூலிக்கப்படுகிறது?

(இ) இந்த வரியைக் குறைக்கும் எண்ணம் அரசுக்கு உண்டா?

**மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் :** (அ) மற்றும் (ஆ)

| | குத்தகைதாரர். | குத்தகைக்கு விடப்பட்ட நிலங்களின் அளவு (ஏக்கரில்). | குத்தகைத் தொகை (ஏக்கர் ஒன்றுக்கு). |
|---|---|---|---|
| | (1) | (2) | (3) |
| | | | ரூ. |
| 1 | விம்கோ நிறுவனத்திற்கு. | 12265.00 | 4.50 |
| 2 | மேட்டூர் கெமிக்கல்ஸ் நிறுவனம். | 3500.00 | 4.50 |
| 3 | திரு. வி. அப்பாகுட்டி. | 454.50 | 40.00 |
| 4 | திருமதி வேதாம்பாள் ஆச்சி. | 20.71 | 0-62 |
| 5 | வேதாரண்யம் உப்பு உற்பத்தி மற்றும் விற்பனையாளர் சங்கம். | 236.00 | 40.00 |



(இ) மேலே கூறப்பட்ட வரியைக் குறைப்பதற்கென்ற பொதுவான செயற்குறிப்புகள் ஏதும் இல்லை. ஆனால் அரசு ஆணை நிலை எண் 1086 வருவாய், நாள் 22—6—82-ல் உப்பு உற்பத்தி செய்வதற்காக குத்தகைக்கு விடப்படும் நிலங்கள் அனைத்துக்கும் ஒரு படித்தான குத்தகை வரி நிர்ணயிக்கப்பட்டுள்ளது. ஆனால் இந்த ஆணை 22—6—82க்கு முன்னால் விடப்பட்ட குத்தகைகளுக்குப் பொருந்தாது.

**திரு எம். எஸ். மாணிக்கம் :** மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, பல்வேறுபட்ட நிறுவனங்களுக்கும், தனிப்பட்டவர்களுக்கும் குத்தகைக்கு உப்பள நிலங்கள் வழங்கப்பட்டதாக அமைச்சரவர்கள் சொன்னார்கள். நிறுவனங்களுக்கு வழங்கப்படுகின்ற நேரத்தில் குத்தகைத் தொகை 4 ரூபாய் சொச்சம் என்ற அளவிலும், தனிப்பட்டவர்களுக்கு 40 ரூபாய் என்ற அளவிலும் குத்தகைக்கு விடப்பட்டுள்ளதாகச் சொல்லப்பட்டுள்ளது. அந்த 40 ரூபாய் என்பது அதிகமாக இருக்கிறது என்று கூறி அதைக் குறைக்கவேண்டுமென்று கேட்டிருக்கிறார்கள். அப்படி அதைக் குறைக்கின்ற எண்ணம் அரசுக்கு இருக்கிறதா? இப்படி வேறுபாடு இருப்பதற்குக் காரணம் என்ன?

**மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் :** பேரவைத் தலைவரவர்களே, இந்த வேறுபாட்டை இந்த அரசும் உணர்கிறது. ஆனால் இந்த நிறுவனங்களுக்கெல்லாம் இப்பொழுது இப்படிக் கொடுக்கப்பட்டது அல்ல. நிறுவனங்களுக்குக் கொடுக்கப்பட்ட குத்தகைத் தொகையை ஏற்றுவதற்கு வாய்ப்பிருக்கிறதா என்று இந்த அரசு ஆராய்ந்து அதை ஏற்றுவதற்கும், அதேநேரத்தில் தனிப்பட்ட நபர்களுக்கு அதிகமாக இருக்கின்ற குத்தகைத் தொகையைக் குறைப்பதற்கும் பரிசீலனை செய்கிறது. அதன்மீது தக்க நடவடிக்கையை இந்த அரசு எடுக்கும்.

**திரு. எம். எஸ். மாணிக்கம் :** மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, குத்தகை வைத்திருப்பவர்களிலே சிலர் தனிப்பட்டவர்களின் பெயரிலே பினாமியாக வைத்துக்கொண்டு பி.மெமோ. வைத்து அனுப்புகிறார்கள். குத்தகைக்குப் பெறும் நேரத்தில் அவர்கள் ஒவ்வொருவருமே லீசுக்கு விண்ணப்பித்திருக்கிறார்கள். அவ்வாறு கொடுக்காமல், பணக்காரர்கள் பினாமியாக இருக்கின்ற நிலைமையை மாற்றி நிலமற்ற ஏழை மக்களுக்கு அந்த உப்பள நிலங்களைக் குத்தகைக்குக் கொடுக்க அரசு முன்வருமா?

**மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் :** பேரவைத் தலைவரவர்களே, சமுதாயம் கெடுவதற்கு முதல் காரணம் பினாமிதான். எல்லாயிடங்களிலும், எல்லாத் துறைகளிலும் பினாமி இருக்கிறது. கூடியவரையில் பினாமியை ஒழிப்பதற்கு இந்த அரசு எல்லாவிதமான முயற்சிகளையும் எடுக்கும்.

திரு. பொ. உத்திராபதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தஞ்சை மாவட்டத்திலே வேதாரண்யத்தில் உள்ள உப்பளங்களைப்பற்றிச் சொன்னார்கள். பினாமியாக ஆயிரக் கணக்கான ஏக்கர் நிலங்களை வைத்துக்கொண்டு இருப்பவர்கள், இந்த ஆண்டுகூட அந்த நிலங்கள் முழுவதிலும் உப்பை உற்பத்தி செய்யாமல் சிறிது நிலத்தில் மட்டும் உப்பு உற்பத்தி செய்யும் சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது. பினாமியாக நிலத்தை வைத்துக் கொண்டு, தரிசாகப் போட்டிருக்கும் நிலங்களை எடுத்து உப்பு உற்பத்தியிலே ஈடுபட்டு வேலை செய்யும் தொழிலாளர்களுக்குப் பகிர்ந்து அளிப்பதற்கு அமைச்சரவர்கள் விரிவான நடவடிக்கை எடுப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : பேரவைத் தலைவரவர்களே, நான் முதலிலே சொன்னபடி, பினாமி எல்லாயிடத்திலும் இருக்கிறது. அதை ஒழிப்பது மிகவும் கடினமாக இருக்கிறது. ஆனால் மாண்புமிகு உறுப்பினரவர்கள் கூறியதிலிருந்து இதையொரு யோசனையாக அவர்கள் சொல்லியிருக்கலாம் என்று நான் கருதுகிறேன். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னபிறகு இப்படிப்பட்ட பினாமிகளை ஒழிப்பதற்காகப் பொதுமக்களைக் கொண்ட ஒரு கமிட்டியைப் போடலாம் என்று நான் நினைக்கிறேன். அதற்கான முயற்சிகளை இந்த அரசு எடுக்கும்.

### 1980-81ஆம் ஆண்டுகளில் உரிமம் வழங்கப்பட்ட கனரகத் தொழிற்சாலைகள்.

*வினா எண் 54— திரு. மா. சுப்பிரமணியன் : மாண்புமிகு தொழில் அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 1980-81ஆம் ஆண்டுகளில் அரசால் எத்தனை கனரகத் தொழிற்சாலைகள் தொடங்க உரிமம் வழங்கப்பட்டுள்ளது?

(ஆ) அரசு பரிந்துரைத்த அனைத்து கனரகத் தொழிற்சாலைகளுக்கும் மத்திய அரசால் அங்கீகாரம் அளிக்கப்பட்டதா?

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு : (அ) மற்றும் (ஆ): 1980ம் ஆண்டு அரசு பரிந்துரை செய்த 108 விண்ணப்பங்களில் மைய அரசு 57 விண்ணப்பங்களுக்கு உரிமம் தந்துள்ளது. 23 விண்ணப்பங்களை நிராகரித்துவிட்டது. 6 விண்ணப்பங்கள் மைய அரசின் பரிசீலனையில் உள்ளன. 22 விண்ணப்பங்கள் திரும்பப் பெறப் பெற்றவை. உரிமம் தேவையற்றவை போன்ற முடிவுகள் எடுக்கப்பட்டவை.

1981 ஆம் ஆண்டு அரசு பரிந்துரைத்த 92 விண்ணப்பங்களில் மைய அரசு 44 விண்ணப்பங்கட்கு உரிமம் தந்துள்ளது. 23 விண்ணப்பங்களை நிராகரித்துள்ளது. 22 விண்ணப்பங்கள் மைய அரசின் பரிசீலனையில் உள்ளன. 3 விண்ணப்பங்கள் திரும்ப பெற பெற்றவை, மற்றும் உரிமம் தேவையற்றவை போன்ற முடிவுகள் எடுக்கப்பட்டவை.



### Weavers in the State.

*Q. No. 55—THIRU P. VENKATASUBRAMANIAN ; Will the Hon. the Minister for Industries be pleased to state—

(a) the total number of weavers in the State;

(b) how many of them are Handloom weavers and

(c) how many among them are members of Co-operative Societies?

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு : (அ) மற்றும் (ஆ): 13.34 இலட்சம் நெசவாளர்கள்.

(இ) இவர்களில் 3.22 இலட்சம் நெசவாளர்கள் கூட்டுறவு சங்கத்தில் உறுப்பினர்களாக சேர்ந்துள்ளார்கள்.

### ஆறாம் ஐந்தாண்டுத் திட்ட காலத்தில் கைத்தறி நெசவாளர்களுக்கு வீடுகள் கட்டிக்கொடுக்கும் திட்டம்.

* வினா எண். 56—திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம் : மாண்புமிகு தொழில் அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கைத்தறி நெசவாளர்களுக்கு ஆறாவது திட்டத்தில் வீடுகள் கட்ட தமிழக அரசிடம் திட்டம் ஏதேனும் உள்ளதா?

(ஆ) ஆம் எனில் அதன் விவரம் என்ன?

(இ) மத்திய அரசு உதவி உண்டா?

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு : (அ) ஆம்.

(ஆ) மற்றும் (இ): ஆறாம் ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் கூட்டுறவு கைத்தறி நெசவாளர் சங்க உறுப்பினர்கட்கு 5,000 வீடுகள் கட்டிக் கொடுக்க திட்டமிடப்பட்டு அமல்படுத்தப் பட்டு வருகிறது. இத்திட்டத்தின் கீழ், சொந்தமாக நிலம் பெற்றுள்ள கூட்டுறவு கைத்தறி நெசவாளர் சங்கங்களின் உறுப்பினர்களுக்கு ரூ. 8,000 மதிப்புள்ள வீடுகள் கட்டிக் கொடுக்கப்பட்டுள்ளன. இதற்கு முன்னாலே 8 ஆயிரம் ஆக இருந்த தொகையை இப்போது 12 ஆயிரமாக வைத்து ஹட்கோவிடமிருந்து கடனாகப் பெற்றும் ஆயிரம் ரூபாயை

அரசு மானியமாகக் கொடுத்தும் மீதி ஆயிரம் ரூபாயை அவர்களே போட வேண்டும் என்று சொல்லி வீடுகள் கட்டிக் கொடுக்கப்படுகின்றன.

திரு. ப. வெங்கடசுப்பிரமணியம்: பேரவைத் தலைவரவர்களே, தற்பொழுது கோவாப்டெக்ஸிலே கூட்டுறவுச் சங்கங்களிலே உற்பத்தியான சரக்குகள் எவ்வளவு தேங்கிக்கிடக்கின்றன? தீபாவளிப் பண்டிகையை முன்னிட்டு எவ்வளவு விற்பனையாகும் என்று அரசால் எதிர்பார்க்கப்படுகிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, இந்தக் கேள்வி மூலக்கேள்வியோடு தொடர்புடையது அல்ல என்றாலும் விவரத்திற்காகச் சொல்கிறேன். இப்பொழுது கோவாப்டெக்ஸிலே இருக்கின்ற துணிகளின் மதிப்பு சுமார் நூறு கோடி ரூபாய்க்கு இருக்கிறது. சென்ற ஆண்டு தீபாவளி மாதத்தில் சுமார் 35 கோடி ரூபாய்க்கு வியாபாரம் நடந்தது. இந்த ஆண்டு தீபாவளி மாதத்தில் சுமார் 50 கோடி ரூபாய்க்கு வியாபாரம் நடக்கும் என்று கருதப்படுகிறது. 20 சதவிகிதம் முதல் 40 சதவிகிதம் வரையில் ரிபேட் கொடுக்கப் படுகிறது.

(முற்பகல் 9-40)

திரு. ப. வெங்கடசுப்பிரமணியம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கூட்டுறவுத் துறைக்கு மேலும் அதிக உற்பத்தியினைத் தரத்தக்க அளவுக்கு சிறப்புத் திட்டம் ஏதேனும் உள்ளதா? தனியார் துறையில் உள்ள நெசவாளர்கள் பலன் அடைகின்ற வகையில் சிறப்புத் திட்டங்களை அரசு வைத்துள்ளதா என்ற விவரங்களை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏறக்குறைய 3.22 இலட்சம் நெசவாளர்கள் கூட்டுறவு அமைப்புக்களின் கீழ் கொண்டுவரப் பட்டிருக்கிறார்கள். இது அகில இந்திய அளவில் சுமார் 60 சதவீதம். எனவே நெசவாளர்களை கூட்டுறவுத் துறையின் கீழ் கொண்டுவருவதில் தமிழ்நாடு அரசு முதலிடத்தில் இருக்கின்றது. இப்போது 61 சதவீதமாக இருக்கின்றது. 6-வது ஐந்தாண்டுத் திட்டத்தில் இது 67 சதவீதத்திற்கு மேல் இருக்கவேண்டும் என்று முடிவு செய்து பணிகள் நடந்து வருகின்றன. அந்த நெசவாளர்களை ஊக்குவிக்க ஆயுள் இன்ஸ்யூரன்ஸ் திட்டம், வீடு கட்டிக் கொடுக்கின்ற திட்டம் போன்றவை செயல்படுத்தப் படுகின்றன. இந்தத் திட்டங்களின் மூலம் நெசவாளர்களை மாஸ்டர் வீவர்கள் மற்றும் தனி முதலாளிகளின் பிடியிலே இருந்து விடுவித்து கூட்டுறவுத் துறையின் கீழ் கொண்டு வருகின்ற அளவில் அவர்களை உற்சாகப்படுத்துகின்ற பணிகள் நடைபெற்றுக்கொண்டு இருக்கின்றன.





திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் பதில் சொல்கின்றபோது 13.34 இலட்சம் நெசவாளர்கள் இம் மாநிலத்திலே இருப்பதாகச் சொன்னார்கள். அவர்களுக்கு 5 ஆயிரம் வீடுகள் கட்டிக் கொடுப்பதாகச் சொன்னார்கள். அந்த 13½ இலட்சத்திற்கும் அவர்களுக்குக் கட்டிக் கொடுக்கப்படுகின்ற 5 ஆயிரம் வீடுகளுக்கும் இடையிலே ரொம்ப இடைவெளி இருக்கின்றதே, இதைக் குறைக்கவேண்டும் என்று அரசாங்கம் முடிவெடுத்திருக்கின்றதா? இதிலே மத்திய அரசு மானியமாக ஏதாவது உதவி செய்யத் தயாராக இருக்கின்றதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு: தலைவர் அவர்களே, உறுப்பினர்களின் எண்ணிக்கை 3.25 இலட்சமாக இருப்பது உண்மை. கட்டிக் கொடுக்கப்படுகின்ற வீடுகளின் எண்ணிக்கை 500 தான், எல்லோருக்கும் வீடு கட்டிக் கொடுக்கவேண்டும் என்றுதான் அரசு விரும்புகின்றது. ஆனால் இதை ஃபேஸ்ட் ப்ரோகிராமாக எடுத்து கொஞ்சம் கொஞ்சமாகத் திட்டமிட்டுச் செய்து கொண்டிருக்கிறோம். ஆனால் 3.25 இலட்சம் நெசவாளர்களும் வீடு இல்லாமல் இருக்கிறார்கள் என்பது பொருள் அல்ல. யார் யார் வீடு இல்லாமல் இருக்கிறார்களோ அவர்களுக்குக் கட்டிக்கொடுக்கப்படுகின்றது அல்லது சொந்தமாக நிலம் மட்டும் வைத்திருக்கிறார்கள் என்றால் அப்படிப்பட்டவர்களுக்கு அந்த நிலத்திலே 12 ஆயிரம் ரூபாய் செலவு செய்து அதாவது ஹட்கோ மூலமாகக் கடன் பெற்றும், அரசு மானியமாக ஆயிரம் ரூபாய் கொடுத்தும் வீடுகளைக் கட்டிக் கொடுக்கிறோம்.

இத்திட்டத்தினைப் பொறுத்தவரையில் மத்திய அரசு எந்த விதமான உதவியும் செய்யவில்லை. இன்ஸ்யூரன்ஸ் திட்டத்தைப் பொறுத்தவரையில் நெசவாளர்கள் சம்பாதிப்பதில் ஒரு ரூபாய்க்கு 6 பைசா அவர்கள் தருகிறார்கள், மாநில அரசு 3 பைசா கொடுத்து யாராவது மரணம் அடைந்தால் அவர்களுடைய குடும்பத்திற்கு 3000 ரூபாய் கொடுக்கின்றது. இந்த இரண்டு திட்டங்களும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பொறுப் பேற்றதற்குப் பிறகு கொண்டு வரப்பட்ட திட்டங்கள். எனவே இதிலே கூட மத்திய அரசு பங்கு எதுவும் இல்லை. ஆனால் மாநில அரசு போடுகின்ற தொகைக்கு இணையாக மத்திய அரசும் போடவேண்டும் என்று கேட்டுக் கொண்டிருக்கிறோம்.

திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் பதில் கூறுகின்றபோது, மத்திய அரசு எந்தவிதமான உதவியும் செய்ய வில்லை என்று சொன்னார்கள். ஏற்கனவே நெசவாளர்களைப் பொறுத்தவரையில் அதிகம் சிரமப்படுகிறார்கள். ஆகவே, அவைகளை மீண்டும் மத்திய அரசிடம் வற்புறுத்தி எடுத்துச் சொல்லியும், மானியம் கொடுக்கவேண்டியதன் அவசியத்தை எடுத்துச்சொல்லியும், அவைகளை பெற்றுத் தருவதற்கு மாநில அரசு ஏதாவது நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வருகின்ற ஆண்டு கோவாப்டெக்ஸ் நிறுவனம் ஆரம்பித்து 50 ஆண்டுகள் ஆகிறது. ஆகவே, அந்த 50 ஆம் ஆண்டு பொன்விழாவைக் கொண்டாடும் வகையில் பல்வேறு விதமான சலுகைகளை மாநில அரசு அறிவிக்க இருக்கிறது. அதேபோல் மத்திய அரசும் அறிவிக்கவேண்டும் என்று நாங்கள் கேட்டு இருக்கிறோம். இப்போது சமீபத்தில் எல்லா மாநில கைத்தறி இயக்குனர்களின் மாநாட்டை மத்திய அரசு கூட்டியது. அதிலே நம்முடைய மாநிலத்தைச் சேர்ந்த டைரக்டர் ஆப் ஹேண்ட்லூம்ஸ் அண்ட் டெக்ஸ்டைல்ஸ் அவர்கள் கலந்து கொண்டார்கள். நான் ஏற்கனவே சொன்னதைப்போல, ஆயுள் இன்ஷுரன்ஸ் திட்டத்திற்கு 6 பைசா தொழிலாளர்கள் தருகிறார்கள், 3 பைசா மாநில அரசு தருகிறது. இறந்தவர்கள் குடும்பத்திற்கு ரூ. 3000 இதனால் கிடைக்கிறது. ஆகவே, மாநில அரசு கொடுக்கும் 3 பைசாவைப்போல மத்திய அரசும் 3 பைசா கொடுக்கவேண்டும் என்று கேட்டு இருக்கிறோம். வீடு கட்டும் திட்டத்திற்கு ஆயிரம் ரூபாய் சப்சிடி மாநில அரசு கொடுக்கிறது. அதைப்போல மத்திய அரசு கொடுக்கவேண்டும் என்று வலியுறுத்தி இருக்கிறோம். இப்படி நெசவாளர்களுக்கு நன்மை செய்வதிலே மாநில அரசோடு, மத்திய அரசும் ஒத்துழைக்க வேண்டும் என்று நாங்கள் ஏற்கனவே எடுத்துச் சொல்லியிருக்கிறோம். தொடர்ந்து அதை வற்புறுத்துவோம்.

திரு. என். பழனிவேல்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தற்சமயம் சுமார் 100 கோடி ரூபாய் பெறுமானமுள்ள கைத்தறித் துணிகள் தேங்கியிருப்பதாக அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். சமீபத்தில் சில இடங்களில் ஏழை, எளியவர்களுக்கு இலவசமாக வேஷ்டி, சேலைகளை அரசு வழங்கியிருப்பதாக தெரிகிறது. அப்படி இலவசமாக வேஷ்டி சேலைகள் வழங்குவதற்காக ஸ்டாக்கில் இருக்கும் துணிகளை பெரிய அளவில் கொள்முதல் செய்து அந்த ஏழை எளியவர்களுக்குக் கொடுக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா ? இப்போது கொள்முதல் செய்து வினியோகிக்கப்பட்டது, கூட்டுறவுத் துறையில் உள்ள ஹேண்ட்லூம் துணிகளை வாங்கித்தான் கொடுக்கப்பட்டதா ? அல்லது வேறு இடங்களில் இருந்து வாங்கப்பட்டதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கோவாப்டெக்ஸில் இப்போது கையிருப்பில் இருக்கும் மொத்த துணியின் மதிப்பு 100 கோடி ரூபாய். இந்த 100 கோடி ரூபாய் மதிப்புள்ள துணிகளை நாங்கள் சிறிய சிறிய நெசவாளர் கூட்டுறவு சங்கங்களிடமிருந்து கொள்முதல் செய்து வாங்கி வைத்து இருக்கிறோம். காரணம், அவர்களிடத்தில், அது தேங்கிவிட்டால் அவர்களால் சமாளிக்க முடியாது. தற்போது தீபாவளி சீசனாக இருப்பதால் கிட்டத்தட்ட 610 பிராஞ்சுகளில் இந்த கோவாப்டெக்ஸ் துணிகள் விற்கிறது. அந்தக் கடைகளின் மூலமாக தற்போது விற்பனை நடந்து வருகிறது. இந்த



மாதத்தில் மட்டும் சுமார் 50 கோடி ரூபாய்க்கு விற்பனையாகும் என்று கருதப்படுகிறது. ஏன் இந்த அளவிற்குத் துணி வாங்கி வைத்து இருக்கிறோம் என்றால் சிறிய சிறிய நெசவாளர்கள் தங்களுடைய உற்பத்தியைத் தாங்களே வைத்துக் கொண்டு இருந்தால், தாங்க மாட்டார்கள். ஆகவே, கோவாப்டெக்ஸ் அவற்றை வாங்கி வைத்துக் கொண்டு கொஞ்சம் கொஞ்சமாக விற்பனை செய்து வருகிறார்கள். ஆகவே, தேக்கம் என்று சொல்வதற்கில்லை. தற்போது அவற்றில் பாதிக்கு மேல் விற்பனையாகிவிடும்.

அடுத்த கேள்வியைப் பொறுத்தவரையில், ஏறத்தாழ 10 கோடி ரூபாய் செலவில் 35 லட்சம் ஏழை எளிய நிலமற்ற விவசாயிகள் ஆகியோருக்கு வேஷ்டி சேலைகள் மாண்புமிகு புரட்சி தலைவர் அவர்கள் அறிவித்த திட்டத்தின் அடிப்படையில் கொடுக்கப்பட்டது. இவைகள் ஏழை எளிய விவசாயப் பெருமக்கள் நிலமற்ற தொழிலாளர்களுக்கு வழங்கப்பட்டது. அந்த 10 கோடி ரூபாய்க்கு வாங்கப்பட்ட வேஷ்டி சேலைகள் அனைத்தும் கோவாப்டெக்ஸ் நிறுவனத்திடமிருந்துதான் வாங்கி, விநியோகிக்கப்பட்டது. வேறு யாரிடமிருந்தும் வாங்கப்படவில்லை.

திரு. ஏ. சி. சண்முகம் : தலைவர் அவர்களே, கூட்டுறவுச் சங்கங்களில் இப்போது எல்லாம் துணிகள் அதிகமான அளவில் தேங்கியுள்ளன. குறிப்பாக ஆரணியில் 1½ கோடி ரூபாய் மதிப்புள்ள பட்டுச்சேலைகள் தேங்கியுள்ளன. இந்த தீபாவளி சீசனை முன்னிட்டு அவற்றைக் கொள்முதல் செய்ய நடவடிக்கை எடுக்கப்படுமா ?

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு : தலைவர் அவர்களே, மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் திரு. சண்முகம் அவர்கள் சில நெசவாளர் சங்கப் பிரதிநிதிகளுடன் வந்து இந்தக் கோரிக்கையை என்னிடத்தில் தெரிவித்தார்கள். நான் உடனடியாக கோவாப்டெக்ஸோடு தொடர்பு கொண்டேன். சமீபத்தில் அவர்கள் 50 லட்சம் ரூபாய்க்கு ஆரணியில் இருந்து வாங்கி இருக்கிறார்கள். இன்னும் அந்தத் தகவல் அவர்களுக்கு வந்து சேரவில்லை என்று நினைக்கிறேன். வந்தால் மகிழ்ச்சி அடைவார்கள் என்று நம்புகிறேன்.

திரு. இ. எஸ். எம். பக்கீர் முகமது : தலைவர் அவர்களே, கோவாப்டெக்ஸ் நிறுவனம் வாங்குகிற துணிகளுக்கு கூட்டுறவுச் சங்கங்களுக்கு உரிய தொகையை உடனடியாகக் கொடுக்காமல் இருப்பதால் அவர்கள் மிகவும் கஷ்டப்படுகிறார்கள். மேலும், கைத்தறி நெசவாளர்களுக்கு வீட்டு மனைப்பட்டா கொடுக்க உத்தேசம் உள்ளதா ? மனை இருந்தால் 5000 ரூபாய் வீடு கட்ட கடன் கொடுக்கலாம் என்று சொல்கிறார்கள். ஆகவே, வீட்டு மனைப்பட்டா கொடுக்க அரசுக்கு உத்தேசம் உள்ளதா என்று அறிய விரும்புகிறேன்.

[1973 அக்டோபர் 27

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு: மாண்புமிகு பேரவைத்
தலைவர் அவர்களே, நெசவாளர்களுக்கு என்று தனியாக மட்டு
மல்ல. நெசவாளர்கள், ஆதிதிராவிடர்கள், சமூகத்தில் நலிந்த
பிரிவினர் ஆகியோருக்கு அந்தந்தப் பகுதியில், ஆர். டி. ஓ.
தாசில்தார் மூலமாக நிலமற்றவர்களுக்கு மனைப்பட்டா
கொடுக்கப்படுகிறது. அப்படி நிலம் பெற்று இருப்பார்களானால்
அதை வைத்துக் கொண்டு இருப்பவர்களுக்கு சுமார் 12,000
ரூபாய் வரையில்கூட ஹட்கோ மூலமாகக் கொடுக்கப்படுகிறது.
70 சதவீதம் கடனாகவும், ஆயிரம் ரூபாய் மானியம் என்றும்,
மீதமுள்ளதை அவர்கள் சொந்த செலவில் கட்டிக் கொள்ள
வேண்டும். இதற்கு 10,000 பேர் மனு போட்டு இருக்கிறார்கள்.
ஆகவே பட்டாவும் கொடுக்கப்படுகிறது, வீடுகளும் கட்டிக்
கொடுக்கப்படுகிறது.

மதுரை மாவட்டத்தில் கிடைக்கும் கனிவளங்கள்

* வினா எண் 57— திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன்:
மாண்புமிகு தொழில் அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு
விடையளிப்பாரா—

(அ) மதுரை மாவட்டத்தில் என்னென்ன கனிவளங்கள்
எந்தெந்த பகுதியில் கிடைக்கும் என்பதை அரசு ஆராய்ந்து கண்டு
பிடித்துள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு : (அ) ஆம்.

(ஆ) தொழில் மற்றும் வணிகத் துறையின் மாநில
புவியமைப்பியல் பிரிவும் மற்றும் இந்திய புவியமைப்பியல் ஆய்வுக்
கழகம், மதுரை மாவட்டத்தில் கனிமங்கள் பற்றி ஆய்வுகளை
மேற்கொண்டன. அதன் பயனாக அம் மாவட்டத்தில் பல பட்டங்
களில் சுண்ணாம்புக்கல், கிராபைட், பாக்சைட், மாலிப்டினைட்,
செம்பு, அப்படைட், வெங்கக்கல், கனிமம், மணிக்கற்கள், மைக்கா
பெரில் கங்கார் முதலிய கனிமங்கள் கிடைப்பது கண்டறியப்
பட்டது.

கன்னியாகுமரி மாவட்டத்தில் பொதுத்துறையில் துவக்கப்
படவுள்ள திட்டங்கள்.

* வினா எண் 58— திரு. ஜே. ஹேமச்சந்திரன் : மாண்புமிகு
தொழில் அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கன்னியாகுமரி மாவட்டத்தில் பொதுத்துறையில்
ஏதேனும் தொழில்கள் துவங்குவதற்கான திட்டங்கள் அரசின்
பரிசீலனையில் உள்ளதா ?



1983 அக்டோபர் 27]

(ஆ) ஆம் எனில் என்னென்ன தொழில்கள் துவங்கப்பட
இருக்கின்றன ?

(இ) அதற்கான நிதி விவரங்கள் என்ன ?

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு : (அ) கன்னியாகுமரி மாவட்டத்தில் பொதுத் துறையிலோ அல்லது கூட்டுத் துறையிலோ தொழில்கள் துவங்குவதற்கான திட்டங்கள் அரசின் பரிசீலனையில் தற்போது எதுவும் இல்லை. எனினும், மீன் பிடிக்கும் படகுத் தொழிலாளர்கள், ஊரக மருத்துவப் பணியாளர்கள், உணவுத் தொழில்கள், தீப்பெட்டித் தொழில்கள் ஆகிய ஏறத்தாழ 290 தொழிற் பிரிவுகளுக்கு 31—12—82 வரை ரூ. 303.45 இலட்ச அளவில் தமிழ்நாடு தொழில் முதலீட்டு நிறுவனம் கடனாக வழங்கியிருக்கிறது.

(ஆ) மற்றும் (இ) இவ் வினாக்களுக்கு இடமில்லை.

(முற்பகல் 9-50)

திரு. ஜே. ஹேமச்சந்திரன்: தலைவரவர்களே, தமிழ்நாட்டிலே ரப்பர் உற்பத்தி செய்யும் ஒரே மாவட்டம் குமரி மாவட்டம்தான். அங்கே தமிழக அரசு வன தோட்டக் கழகத்துக்குச் சொந்தமான அரசு ரப்பர் தோட்டத்தில் கிடைக்கும் ரப்பரைப் பயன்படுத்தி அரசுப் போக்குவரத்துக் கழகங்களுக்குத் தேவையான டயர் போன்றவற்றை உற்பத்திச் செய்யும் ஒரு தொழில் நிறுவனத்தைத் தொடங்க 1979-80 ஆம் ஆண்டில் கட்டபொம்மன் போக்குவரத்துக் கழகம் ஒரு திட்டம் தயாரித்து கொடுத்ததாகத் தெரிகிறது. அது பரிசீலிக்கப்பட்டதா ? என்ன முடிவு எடுக்கப்பட்டது ? அதை அமுல்படுத்த உடனடியாக நடவடிக்கை எடுக்கப்படுமா ?

மாண்புமிகு திரு. எஸ் திருநாவுக்கரசு : தலைவரவர்களே, 1980 ஆம் ஆண்டு வரையில் சுமார் 110 இலட்சம் மோட்டார் டயர்கள் தேவை என்று எதிர்பார்த்து, அதன்படி 1976 ஆம் ஆண்டு வரையில் 12 தொழில் நிறுவனங்களுக்கு டயர் உற்பத்திச் செய்ய மத்திய அரசு உரிமம் வழங்கியிருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னதைப்போன்று அந்தத் திட்டம் பரிசீலிக்கப்பட்டது. அதற்கு சுமார் 40 அல்லது 45 கோடி ரூபாய் செலவாகும் என்று கணக்கிடப்பட்டு, அது மத்திய அரசுக்கு அனுப்பப்படுகின்ற சூழ்நிலையில் ஏற்கெனவே நான் சொன்னதைப் போன்று சுமார் 110 இலட்சம் மோட்டார் டயர்கள் உற்பத்திச் செய்யப்படுவதற்கான லைசென்ஸ் கபாசிட்டி முழுமையாகக் கொடுக்கப்பட்டுவிட்ட காரணத்தால் இந்த 40 அல்லது 45 கோடி ரூபாய் செலவாகும் திட்டத்தைத் தொடங்கினால் அது வியாபார ரீதியில் இலாபகரமாக இருக்காது என்பதால் திட்டம் கைவிடப்பட்டது. அது குறித்து மேற்கொண்டு எந்தவிதமான சிந்தனையும் பரிசீலனையில் இல்லை.

திரு. ஜே. ஹேமச்சந்திரன் : தலைவரவர்களே, ஆசியாவிலேயே மிகப்பெரும் 'மெகனைஸ்டு டயர்'ஃபாக்டரியான'டார்ஃபார்கோ' என்ற தொழில் நிறுவனம் தற்போது மூடிக்கிடப்பதன் காரணமாக நூற்றுக் கணக்கான தொழிலாளர்களுக்கு வேலையிழப்பு ஏற்பட்டிருக்கிறது என்ற பின்னணியில் ஏற்கெனவே 'டயர் டெவலப்மென்ட் ஸ்கீமில்' மத்திய அரசு பல கோடி ரூபாய் செலவழிப்பதாகத் தெரிகிறதே, அந்த ஸ்கீமைப் பயன்படுத்தி இந்தத் தொழில் நிறுவனத்தை தமிழக அரசு ஏற்று நடத்த நடவடிக்கை எடுக்கப்படுமா ?

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புதிதாக ஆரம்பிக்கப்படுகிற தொழிற் சாலைகளைப் பற்றியது மூலக் கேள்வி: இங்கே மூடிய தொழிற் சாலைகளைத் திறப்பது பற்றி கேட்கிறார்கள். இது குறித்து மாண்புமிகு தொழிலாளர் நல அமைச்சரிடம் தனிக் கேள்வி போடுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

1981 முதல் 1982 டிசம்பர் முடிய வெளிநாடுகளுக்கு
ஏற்றுமதி செய்யப்பட்ட வெங்காயத்தின் அளவு

* வினா எண் 47— திரு எஸ் இராசாராமன் : மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 1981 முதல் 1982 டிசம்பர் முடிய தமிழகத்தில் விளையும் சின்ன, பெரிய வெங்காயம் வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்பட்ட அளவு எவ்வளவு ?

(ஆ) அதன் மொத்த மதிப்பீடு எவ்வளவு ?

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து: (அ) 1981 ஆம் ஆண்டு முதல் 1982 டிசம்பர் முடிய தமிழ் நாட்டிலிருந்து தேசிய கூட்டுறவு விவசாய விற்பனை இணையத்தின் மூலமாக ஏற்றுமதி செய்யப்பட்ட சின்ன வெங்காயத்தின் மொத்த அளவு 12,624.543 மெட்ரிக் டன். பெரிய வெங்காயத்தின் மொத்த அளவு 22,804.410 மெட்ரிக் டன் ஆகும்.

(ஆ) அதன் மொத்த மதிப்பு ரூ. 6,42,45,812.55 ஆகும்.

மதுரை மாவட்டத்தில் புகையான் நோயினால் பாதிக்கப்
பட்ட நெற்பயிர்.

* வினா எண் 48—திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள்: மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ)* மதுரை மாவட்டத்தில் நெற்பயிருக்குப் புகையான் நோய் ஏற்பட்டு பாதிக்கப்பட்டுள்ளது அரசின் கவனத்திற்கு வந்துள்ளதா ?



(ஆ) ஆம் எனில் அதன் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை என்ன ?

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து : ஆம். 1982–83 ஆம் ஆண்டில் நெற்பயிருக்கு புகையான் தாக்குதல் ஏற்பட்டது.

(ஆ) 1982–83 ஆம் ஆண்டு மொத்தம் 16,469.25 ஏக்கரில் தாக்கிய புகையான் பூச்சி உடனடியாக முற்றிலும் தடுக்கப்பட்டு விட்டது. அதற்காக ரூ. 5,66,000 மதிப்புள்ள பூச்சி மருந்துகள் 50 சத மானியத்தில் வழங்கப்பட்டன. மேலும் மருந்து தெளிக்க/தூவ ரூ. 98,000-க்கு மானியத் தொகையும் விவசாயிகளுக்கு வழங்கப்பட்டது.

திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மதுரை மாவட்டத்திலே ஏற்பட்ட புகையான் நோய் உடனடியாகத் தீர்க்கப்பட்டுவிட்டதாக அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அது ஓரளவுக்கு தீர்க்கப்பட்டு விட்டாலும் கூட சிறு சிறு விவசாயிகள் உடனடியாக மருந்து வாங்கி அடிக்க முடியாத நிலை ஏற்பட்டிருக்கிறது. அதன் காரணமாக மீண்டும் வெகு விரைவில் அந்த நோய் பரவி அதனால் மக்கள் பாதிக்கப்படுகிறார்கள். எனவே ஏழை மக்களைக் காப்பாற்ற, அரசே வேளாண்மைத் துறை மூலமாக எங்கெங்கே இந்த நோய் கண்டிருக்கிறதோ அந்த இடத்திலே அரசே மருந்தை அடித்து, பணத்தைப் பின்னால் விவசாயிகளிடம் இருந்து வசூலித்துக் கொள்ளலாம். இதை அமைச்சர் அவர்கள் கவனித்து நடவடிக்கை எடுப்பார்களா ?

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சிறு விவசாயிகளுக்கு உதவி செய்ய வேண்டும் என்ற நோக்கோடு 50 சதவிகிதம் மானியத்தொகையாக உதவிகள் வழங்கப்படுகின்றன.

திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள் : தலைவர் அவர்களே, இந்தச் சிறு விவசாயிகளுக்கு மருந்து வாங்கி அடிப்பதற்குத் தேவையான ஸ்பிரேயர்கள் கிடைக்காத காரணத்தினால், அவர்கள் உடனடியாக அந்த மருந்தை வாங்கி அடிக்க முடியவில்லை. 50 சதவிகிதம் மானியம் கொடுத்தாலும் கூட, வாழைக்கு முடிகொத்து நோய் வந்தது போல இந்த நோய் இப்போது வந்திருக்கின்றது. எனவே எல்லோருக்கும் ஸ்பிரேயர் கிடைக்காத காரணத்தினாலே அரசே இந்த மருந்தை அடித்துவிட்டு அதற்குண்டான தொகையை செஸ் மூலமாகக் கூட வசூலித்துக் கொள்ளலாம். இதற்கான வழிவகைகளை அமைச்சர் செய்வாரா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து: தலைவர் அவர்களே அரசு பரிசீலிக்கும்.

[1983 அக்டோபர் 27

### தீவிர தென்னை அபிவிருத்தித் திட்டத்தை விரிவு படுத்தும் திட்டம்.

* வினா எண் 49— திரு. சி. கணேசன் : மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தீவிர தென்னை அபிவிருத்தித் திட்டத்தை கன்னியாகுமரி, கோயமுத்தூர், தருமபுரி மாவட்டங்கட்கு விரிவுபடுத்த அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

(ஆ) ஆம் எனில் அதன் விவரம் என்ன ?

**மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து :** (அ) தீவிர தென்னை அபிவிருத்தித் திட்டம், தற்போது கன்னியாகுமரி, கோயம்புத்தூர் தருமபுரி மாவட்டங்களில் அமுல்படுத்தப்படுகிறது.

(ஆ) இத்திட்டத்தின்கீழ் செயல்விளக்கப் பாத்திகள், பயிற்சி, பார்வையிடல், விவசாயிகள் சுற்றுப்பயணம் ஆகியவை மேற்கொள்ளப்படுகின்றன.

**திரு. சி. கணேசன் :** பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த ஈராண்டு கால வறட்சியாலே பல்லாயிரக்கணக்கான தென்னை மரங்கள் காய்ந்து போனது அரசு அறியும். அவற்றை ஈடுகட்டுகின்ற வகையில் அதற்குச் சொந்தக்காரர்களிடத்தில் வட்டியில்லாத பணமோ அல்லது நீண்டகாலக் கடனோ கொடுத்து அவர்களை ஊக்குவிக்கின்ற வகையில், அழிந்து போன மரங்களுக்குப் பதிலாக அதே இடத்திலே வேறு தென்னைக் கன்றுகளை நட்டு, மீண்டும் அதை அபிவிருத்தி செய்யும் திட்டம் அரசிடம் இருக்கிறதா ?

**மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து :** தலைவர் அவர்களே தென்னை வளர்ச்சிக் கழகம் மூலமாக புதிய தென்னைப் பரப்பு சாகுபடி திட்டத்திற்காக ஹெக்டேருக்கு 3,000 ரூபாய் மானியம் கொடுக்கப்படுகிறது. மாண்புமிகு உறுப்பினர் ஏற்கனவே இருந்து பட்டுப்போன, அழிந்து போன மரங்களைப் பற்றிக் கேட்கிறார்கள். அதைப் பற்றி முழுமையான விவரங்களை ஆராய்ந்து உரிய நடவடிக்கையை அரசு எடுக்கும்.

**திரு. சோ. அழகர்சாமி :** பேரவைத் தலைவர் அவர்களே இந்த தென்னை அபிவிருத்தித் திட்டத்தின் அடிப்படையிலே அரசாங்கத்தின் உதவி பற்றி அமைச்சர் அவர்கள் சொன்னார்கள் நீண்டகால பயிரான இந்தத் தென்னை, இந்த ஆண்டு ஏற்பட்ட வறட்சியின் காரணமாக பல்லாயிரக்கணக்கான மரங்கள் பட்டுப் போய் அழிந்து விட்டன. அந்த இடங்களில் புதிய தா கன்றுகளை நடுவதற்கு ஒரு ரூபாய் தருகிறோம் என்று சொன்னார்கள். ஆனால் இப்போது ஒரு ரூபாய் மானியம் மட்டும் என்று சொல்லுகிறார்கள். ஆகவே அழிந்து போன கன்றுகளுக்குப் பதிலாக புதிய கன்றுகளைக் கொடுக்க அரசு ஆவன செய்யுமா



1983 அக்டோபர் 27]

**மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து :** தலைவர் அவர்களே, செய்கின்ற உதவி, ஒதுக்கீடு செய்கின்ற நிதியின் அளவைப் பொருத்துதான் அமையும். இதிலே எந்த அளவுக்கு விவசாயிகளுக்கு உதவி செய்ய முடியுமோ அந்த அளவுக்கு அரசு செய்யும்.

### கோவில்பட்டி குடிநீர்த் திட்டம்

* வினா எண் 50— திரு. சோ. அழகர்சாமி : மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

திருநெல்வேலி மாவட்டம் கோவில்பட்டி நகரத்திற்குத் தாம்பிரபரணி நதியிலிருந்து குடிதண்ணீர் கொண்டுவரும் போது வழியிலுள்ள குடிதண்ணீர் இல்லாத கிராமங்களுக்கு இதிலிருந்து தண்ணீர் கொடுக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

**மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் :** கோவில்பட்டி குடிநீர்த் திட்டத்தின் மூலம் தாமிரபரணியிலிருந்து கோவில்பட்டி தவிர 23 வழியோரக் கிராமங்களுக்குக் குடி தண்ணீர் வழங்கப்பட்டு வருகிறது. மேலும் வழியோரக் கிராமங்களுக்குக் குடிநீர் வழங்கும் திட்டமெதுவும் அரசின் பரிசீலனையில் இல்லை.

**திரு. சோ. அழகர்சாமி :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய கோவில்பட்டி நகரத்தின் வழியாக ஏற்கனவே உள்ள பல கிராமங்களுக்கு நல்ல தண்ணீர் கிடையாது. உப்புத் தண்ணீர் தான் கிடைக்கிறது. அங்குள்ள மக்கள் பல மைல் தூரம் சென்று தான் நல்ல தண்ணீர் கொண்டுவரவேண்டியிருக்கிறது. மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள் பாரதியாரின் நூற்றாண்டு விழாவில் கலந்து கொண்டு நெல்லையில் இருந்து வருகிறபோது, பல்லாயிரக்கணக்கானவர்கள் தண்ணீருக்காக காத்துக்கொண்டிருக்கின்ற நிலையில், எல்லாக் கிராமங்களுக்கும் இந்த தாமிரபரணி ஆற்றுத் தண்ணீர் சப்ளை செய்யப்படும் என்று வாக்குறுதி கொடுத்தார்கள். அப்போது இருந்த குடிநீர் வடிகால் வாரியத் தலைவரும் அதற்கான ஏற்பாடுகள் செய்துகொண்டு இருக்கிறோம் என்று சொன்னார்கள். ஆனால் இப்போது அமைச்சர் அவர்கள் இது இல்லை என்று சொல்வது, ரொம்பவும் மோசமான காரியம். எனவே இதை மறுபரிசீலனை செய்து எல்லாக் கிராமங்களுக்கும் தண்ணீர் கொடுப்பதற்கு நடவடிக்கை எடுப்பாரா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முதலில் 10 வழியோரக் கிராமங்களுக்கு குடி தண்ணீர் கொடுப்பதற்காக திட்டம் வகுக்கப்பட்டது. பின்னர் இது 23 வழியோரக் கிராமங்களுக்குக் கொடுப்பதற்கு முடிவு எடுக்கப்பட்டது.

(முற்பகல் 10-10)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இந்தக் கேள்வி முடிகிற வரையில் வினாக்கள்—விடைகள் நேரம் நீட்டிக்கப்படுகிறது.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்; தலைவர் அவர்களே. ஒரு வேண்டுகோள். கிருஷ்ணா நதி நீர் பற்றிய கேள்விகள் எல்லாம் பின்னால் வருகின்றன. எனவே அதை அச்சடித்து வைப்பது சரியாக இருக்காது என்று நினைக்கிறேன். வேண்டு மானால் திங்கட்கிழமை இதை எடுத்துக்கொள்ளலாம்.

எனவே, 1996 ஆம் வருஷத்திலே 25.41 மில்லியன் காலன் தண்ணீர் கொடுக்கவேண்டுமென்று திட்டமிட்டு இருக் கிறார்கள். அந்தத் திட்டங்கள் எல்லாம் நிறைவேறவேண்டும் என்று சொன்னால் இப்போது இருக்கிற 23 கிராமங்களோடு நிறுத்திக்கொண்டால்தான் முடியும். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் முதல்வர் அவர்கள் சொன்னதைப் பற்றிச் சொல் கிறார்கள். அதைப் பற்றிய முழுத்தகவல்களையும் எழுத்து மூலமாகக் கொடுத்தால் அதைப்பற்றி விசாரித்து, இதற்காக புதியதாக ஒரு திட்டம் போடவேண்டுமா? அல்லது இதிலேயிருந்து கொடுக்கலாமா— இதிலே இருக்கிற தண்ணீரைப் பகிர்ந்து கொடுத்தால் இந்த திட்டம் நிறைவேறாது, பலன் இல்லாமல் போய்விடும்—என்பதைப் பற்றி பரிசீலிக்கலாம். எந்தெந்த கிராமங்கள் என்று முழு விவரத்தையும் தரவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

திரு. சோ. அழகர்சாமி ; பேரவைத் தலைவர் அவர்களே, இந்த திட்டம் ஆரம்பத்திலே கோவில்பட்டி நகராட்சிக்கு மட்டும் தான் போடப்பட்ட திட்டம். அங்கே தண்ணீர் அதிகமாக இருக்கிற காரணத்தால் எட்டயபுரத்திற்கு நீட்டிக்கப்பட்டு, பிறகு கழுகுமலைக்கு விஸ்தரிக்கப்பட்டு, அதுவும் போதாது என்று ராமநாதபுரம் மாவட்டத்தில் உள்ள சாத்தூருக்கும் செல்கிறது. ஆகவே எங்கள் ஊர் வழியாக நல்ல தண்ணீர் செல்லும்போது நாங்கள் உப்புத் தண்ணீர் சாப்பிட்டுக்கொண்டு இருக்கவேண்டுமா என்று கேட்கிறார்கள். எனவே எங்களுக்கு ஒரு டேப், குழாய் போட்டுக் கொடுக்கக்கூடாதா என்று பலர் கேட்கிறார்கள். அப்போதிருந்த வாட்டர் போர்ட் சேர்மன் அவர்கள் அங்கீகாரம் அளித்து பல ஊர்களுக்கு டேப் போடப்பட்டிருக்கிறது. எனவே குறையுள்ள அந்தக் கிராமங்களுக்கு உடனடியாக டேப் போட்டுக் கொடுக்க நடவடிக்கை எடுக்கப்படுமா என்பதை அறிய விரும்பு கிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: பேரவைத் தலைவர் அவர்களே, எங்கள் ஊர் வழியாகத்தான் போகிறது, ஆகவே எங்களுக்குப் போகத்தான் மற்ற ஊர்களுக்குக் கொடுக்க வேண்டும் என்று சொல்வது சரியல்ல. அப்படியானால், தஞ்சாவூர் மாவட்டத்தில் உள்ளவர்கள், எங்கள் ஊரிலேதான் நெல், அரிசி விளைகிறது, எனவே எல்லாவற்றையும் எங்களுக்குத் தான் கொடுக்கவேண்டும் என்று சொன்னால் என்ன செய்வது?



'தட் ஈஸ் நாட் தி பிராப்பர்வே'. தண்ணீர் இருக்கின்ற இடத்தி லிருந்து தண்ணீர் இல்லாத இடத்திற்கு கொடுப்பதுதான் சரியாக இருக்கும். சாத்தூருக்கு 5.25 லட்சம் காலன் தண்ணீர் வழங்க உத்தேசிக்கப்பட்டிருக்கிறது. நான் முன்பு சொன்னதைப் போல் எந்தெந்த கிராமத்திற்குக் கேட்கிறார்கள். எந்த கேட்டகரியில் வருகிறது போன்ற விவரங்களைக் கொடுத்தால் அரசு அதை பரிசீலனை செய்யும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினாக்கள்—விடைகள் முடிவுற்றன.

*[குறிப்பு : ஓர் உரையின் தொடக்கத்தில் (*) உடுக்குறியிடப் பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]*

## 2. தகவல் கோரல்.

### (அ) பத்திரிகை தடைச் சட்டத்தை ரத்து செய்வது.

திரு. ரா. உமாநாத்: பாயிண்ட் ஆப் ஆர்டர். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த சட்டப் பேரவையைப் பொறுத்த வரைக்கும் இந்த பத்திரிகைத் தடைச் சட்டத்தை நிறைவேற்றியிருக்கிறார்கள். நம்முடைய சட்டப் பேரவையைப் பொறுத்தவரைக்கும் 'அன்னல்' பண்ணி அந்த பில் ஆக்ட் ஆகிற வரைக்கும், ஏற்கனவே இருக்கும் ஆக்ட், சட்டம் இட் ஈஸ் இன் போர்ஸ். இந்த சட்டப்பேரவையைப் பொறுத்தவரைக்கும் இதுவரைக்கும் ஏற்கனவே உள்ள ஆக்ட் 'அன்னல்' பண்ணி ஒரு பில்லும் கொண்டுவரப்படவில்லை. ஆனால் சீப் மினிஸ்டர் சொல்கிறார். It is dead என்று. How can it be? Our powers are taken away. ஏற்கனவே உள்ள ஆக்ட் போர்சில் இருக்கிறபோது, டெட் என்று சொல்வது சரியில்லை. ஆகவே மாண்புமிகு முன்னவர் அவர்களிடமிருந்து பதில் வேண்டும். ஏற்கனவே உள்ள ஆக்ட் 'அன்னல்' பண்ணுவதற்கு பில் கொண்டுவரப்படுமா?

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெளியிலே பேசப்படுகிற கருத்தை வைத்து இங்கே பேச முடியாது. (கூச்சல், குழப்பம்)

திரு. ரா. உமாநாத்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சட்டத்தை 'டெட்' என்று சொன்னதற்குப் பிறகு, so far as we are concerned it is still in force. அதை அன்னல் பண்ணுவதற்கு ஆக்ட் கொண்டு வருகிறார்களா இல்லையா என்று எங்களுக்குத் தெரிய வேண்டாமா? (குறுக்கீடுகள்)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. உமாநாத் அவர்கள் பேசி முடித்த பிறகு, திரு. கிருஷ்ணமூர்த்தி பேசலாம்.

திரு. ரா. உமாநாத் : இந்தச் சட்டத்தை ரத்து செய்து மறு சட்டம் இங்கே கொண்டு வருகிற வரைக்கும், அது அப்படியே அமுலிலே இருக்கிறது. அப்படி இருக்கிறபோது, டெட் என்று சொன்னால் அர்த்தம் இல்லை. ஆகவே தான் கேட்கிறேன் அரசாங்கம் அன்னல் பண்ணுகிற ஒரு சட்டத்தைக் கொண்டு வருகிறார்களா? இல்லையா? அதைப் பண்ணாமல் இப்படிச் சொல்லிக் கொண்டிருந்தால் அது தப்பு. ஆகவே It is wrong. I want the Leader of the House to tell the House what they are going to do.

திரு. வி. கிருஷ்ணமூர்த்தி: தலைவர் அவர்களே, மாண்புமிகு முதல்வர் அவர்கள் பல்வேறு காலக் கட்டத்தில், தமிழ் நாட்டிலே நிறைவேற்றப்பட்ட இந்தச் சட்டத்தினை நாங்கள் அமல்படுத்த மாட்டோம் என்று சொன்னார்கள். பிறகு பீகார் மாநிலத்திலே இந்தச் சட்டம் வாபஸ் வாங்கப்பட்டதற்குப் பிறகு—இங்கே அமல்படுத்தாமல் இருப்பது என்பது வேறு, இந்தச் ட்டம் உயிரோடு இருப்பது என்பது வேறு. It is a Democles sword hanging on the pressmen. அந்தச் சட்டத்தை வைத்துக் கொண்டு, அதை அமல் படுத்தாமல் இருப்பேன் என்றால், நாளை எங்கானும் ஒரு இடத்திலே பத்திரிகையிலே, கோவையிலோ, திருநெல்வேலியிலோ பத்திரிகையாளர்கள் ஏதாவது எழுதி விட்டு, அங்கே இருக்கிற போலீஸ்காரர்கள் ஏதாவது நடவடிக்கை எடுக்க முயற்சித்தால் சட்டரீதியாகத்தான் அவர்கள் செயல்படுகிறார்கள் என்று அர்த்தம். ஆகவே நம்முடைய மாண்புமிகு மார்க்கிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி உறுப்பினர் உமாநாத் அவர்கள் சொன்னது போல, அரசாங்கம் சொன்னதை இன்றையதினம் சட்டபூர்வமாக ஆக்க வேண்டும். The Act should be annulled. There should be a motion before this House. Unless and until it is repealed, the Act has got force. Otherwise, it will be misused. We have got apprehensions over the promises of the Chief Minister. The promises of the Chief Minister are not clearly implemented. It is a fact. We wanta categorical assurance from the Government. Are the Government going to repeal the Act or not? We want an answer.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முதலமைச்சர் அவர்கள் கூறிய கருத்துக்களையும், மாண்புமிகு உறுப்பினர் உமாநாத் அவர்கள் எழுப்பியிருக்கிற பிரச்னைகளையும், அதிலே இருக்கிற சட்டப் பிரச்னைகளையும் ஆராய்ந்து, என்ன முடிவை அரசு எடுக்கும் என்பதை இந்த நிலையில் என்னால் சொல்ல இயலாது; என்றாலும் அதைப்பற்றி ஆராய்ந்து இந்த அவைக்கு அரசு அறிவிக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

(ஆ) சென்னை நகரில் மழையால் ஏற்பட்டுள்ள பாதிப்பு.

திரு. மு. அம்பிகாபதி : ஸ்பீக்கர் சார், பாயிண்ட் ஆப் ஆர்டர், மிக முக்கியமான விஷயம் சென்னை மாநகரத்திலே பலத்த மழை பெய்திருக்கிறது; இதனால் குடிசை வாசிகள் பெரிதும்



பாதிக்கப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். (குறுக்கீடு) சட்டமன்ற விடுதியில் வராண்டாவினுள்ளேயே தண்ணீர் வந்து விட்டது. என்னுடைய அறையினுள்ளேயே தண்ணீர் வந்துவிட்டது .... (மணியடிக்கப் பெற்றது)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் அவர்கள் விதி 106-ன் கீழ் பேரவைக்கு ஓர் அறிக்கையை அளிப்பார்கள்.

3. அறிக்கை அளித்தல்

விதி 106-ன் கீழ் வருவாய்த்துறை அமைச்சரின் அறிக்கை.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 24-10-1983 அன்று நாகப்பட்டிணத்திலிருந்து 350 கிலோ மீட்டர் தொலைவில் மையம் கொண்ட காற்றழுத்தம், பிறகு பலவீனம் அடைந்தது. அதன் விளைவாக தமிழ்நாட்டில் பரவலாக மழை பெய்தது. சென்னையிலும் அதன் சுற்றுப்புறங்களிலும் பலத்த மழை பெய்தது. கடந்த 4 நாட்களாக சென்னையிலே பெய்த மழையின் அளவு மீனம்பாக்கத்திலே 244 மில்லி மீட்டர். நுங்கம்பாக்கத்தில் 226 மில்லி மீட்டர். இந்த பலத்த மழையின் காரணமாக சென்னையில் தாழ்வான பகுதிகளில் நீர் தேங்கி குடிசை வாழ் மக்கள் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பாதிக்கப்பட்ட இடங்களையெல்லாம் சுற்றிப் பார்த்துவிட்டு, உடனடியாக தேவையான உதவிகளைச் செய்ய வேண்டும் என்று தெரிவித்துள்ளார்கள். மாநகராட்சி அதிகாரிகள் பாதிக்கப்பட்டவர்களை, அருகிலுள்ள மாநகராட்சி பள்ளிகளில் தங்க வைத்திருக்கிறார்கள். வட சென்னையில் பாதிக்கப்பட்ட இடங்கள் கொருக்குப் பேட்டை, காசிமேடு (பூங்காவனக் குப்பம்), வில்லிவாக்கம், குளத்தூரிலுள்ள ஆதி திராவிடர் குடியிருப்பு, அண்ணாநகரில் வ. வு. சி. நகர். கெல்லிஸில் செம்மன் பேட்டை, ஓட்டேரி நல்லா அருகில் கல்யாணபுரம், வ.உ.சி. நகர்.

(முற்பகல் 10-10)

தென் சென்னையில் அசுதீன் பகதூர் காலனி, பத்திரிக்கரை, வைகுண்டபுரம், தர்மாபுரம், தாமஸ்ரோடு, ஜோஜாத்தோட்டம், திடீர் நகர், பாரதி நகர், கோவிந்தசாமி நகர், கபாலிவன போஜனத் தோட்டம், சண்முகாபுரம், ஜாபர்கான்பேட்டை. பாதிக்கப்பட்டவர்களை பாதுகாப்பான இடங்களில் வைத்து அவர்களுக்கு உணவுப் பொட்டலங்கள் வழங்கப்படுகின்றன. ஏனைய நிவாரணப் பணிகளைச் செய்ய வருவாய்த் துறை அதிகாரிகள் நடவடிக்கை எடுத்து வருகின்றனர். பாதிக்கப்பட்ட

[திரு. எஸ். டி. சோமசுந்தரம்] [1983 அக்டோபர் 27

குடிசைகளின் எண்ணிக்கை சுமார 4 ஆயிரம். பாதிக்கப்பட்ட மக்களின் எண்ணிக்கை சுமார் 21,350. இயற்கை சீற்றங்களான புயல், வெள்ளம் ஏற்படும் காலத்தில் பெரும்பாலும் குடிசை வாழ் மக்கள் பாதிக்கப்படுகின்றனர். அப்படிப் பாதிக்கப் பட்டவர்களை உடனடியாக அருகில் உள்ள பள்ளிக் கட்டிடங்கள் அல்லது புயல் காப்பகங்கள் ஆகியவற்றில் தங்க, அவர்களுக்கு அடைக்கலம் கொடுத்து உணவுப் பொட்டலங்கள் வழங்கப்படுகின்றன. அவர்களுக்கு தடுப்பு ஊசிகள் குத்தப்படுகின்றன. மேலும் பாதிக்கப்பட்ட ஒவ்வொரு குடும்பத்திற்கும் 5 கிலோ அரிசியும் ஒரு லிட்டர் மண்ணெண்ணெயும் ஒரு வேட்டி அல்லது லுங்கியும் ஒரு புடவையும் இலவசமாகக் கொடுக்கப்படுகிறது. இதைத் தவிர முழுமையாகப் பாதிக்கப்பட்ட குடிசை ஒன்றுக்கு ரூ. 200 மானியமாகவும் பகுதி சேதமடைந்த குடிசை ஒன்றுக்கு ரூ. 50 மானியமாகவும் கொடுக்கப்படுகிறது. குடும்பத்தின் வருமானம் ஈட்டுபவர் புயல் வெள்ளத்தால் இறந்துபோய் அவருடைய குடும்பம் வறுமைக்குள்ளானால், இறந்துபோனவரின் வாரிசுதாரருக்கு முதல் அமைச்சர் நிவாரண நிதியிலிருந்து ரூபாய் ஆயிரம்வரை நிதி உதவி அளிக்கப்படுகிறது. வெள்ளம் காரணமாக 5 பேர்கள் இறந்ததாகத் தகவல் வந்திருக்கிறது. அதை நன்றாக ஆராய்ந்து உரியவர்க்கு உரிய நடவடிக்கை எடுக்கப்படும்.

## 2. தகவல் கோரல் (தொடர்ச்சி).

### (இ) உறுப்பினர்கள் கொடுத்துள்ள அறிவிக்கைகள்.

**திரு. மு. அம்பிகாபதி:** ஏற்கெனவே இதே பொருள் குறித்து நாங்கள் ஒத்திவைப்புத் தீர்மானம் கொடுத்திருந்தோம். அதை எடுத்துக் கொண்டே இந்த ரிப்ளையைக் கொடுத்திருக்கலாம். ஏன் எங்களுடைய உரிமையைப் பறிக்கிறீர்கள்?

**திரு. ரா. உமாநாத்:** தலைவர் அவர்களே, நாடாளுமன்றத்திலே என்ன நிலைமை என்று நேற்றுக்கூட தாங்கள் ஒரு ரூலிங் கொடுக்கிறபோது—நாங்கள் அப்ஜெக்ஷன் ரெய்ஸ் பண்ணியபோது—சொன்னீர்கள். ஆகவே அங்கே இருக்கிற பழக்கம் தங்களுக்குத் தெரியும். ஒத்திவைப்புத் தீர்மானமோ கவன ஈர்ப்போ கொடுத்தால் அதன் பேரிலேதான் சபையிலே அரசுத் தரப்பிலே பதில் சொல்வார்கள். அரசுத் தரப்பிலே ரிப்ளை செய்ய மெட்டிரியல்ஸ் தயாராக இருந்தால், அதுபற்றி ஒத்திவைப்புத் தீர்மானமோ கவன ஈர்ப்புத் தீர்மானமோ வந்திருந்தால் அந்தத் தீர்மானத்தின் மீதுதான் கட்டாயமாக ரிப்ளை செய்வார்கள். அப்படிச் செய்கிறபோது உறுப்பினர்களுக்கு பேச உரிமை உண்டு. ஆனால் அப்படியில்லாமல் வெறும் ஸ்டேட்மெண்டை வைத்தால் நாங்கள் பேசமுடியாது. இப்படி அசெம்பிளியை மதிக்காமல் இருந்தால் எங்களுடைய உரிமையை



136053

1983 அக்டோபர் 27] [திரு. ரா. உமாநாத்]

எப்படிப் பாதுகாக்கமுடியும்? I strongly protest against the Government.

**திரு. சோ. அழகர்சாமி:** நாங்கள் எல்லாம் இதைப்பற்றி ஒத்திவைப்புத் தீர்மானம் கொடுத்திருக்கிறோம். பல உறுப்பினர்கள் அங்கங்கே நடந்தவைகளை நேரிலேயே போய்ப் பார்த்து விவரங்களை அறிந்து வைத்திருக்கிறார்கள். அவர்கள் எல்லாம், அரசாங்கத்தின் கவனத்திற்கு வராத தகவல்களைத் தெரிவிக்க வேண்டிவரும்....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அவைக்கு அறிவிக்க வேண்டுமென்று அரசுத் தரப்பிலே விரும்பினார்கள், (குறுக்கீடு). உறுப்பினர்கள் கொடுத்த ஒத்திவைப்புத் தீர்மானம், கவன ஈர்ப்புத் தீர்மானம் ஆகியவற்றை நான் தள்ளிவிடவில்லை.

**திரு. ரா. உமாநாத்:** நாங்கள் ஒத்திவைப்புத் தீர்மானமோ கவன ஈர்ப்புத் தீர்மானமோ கொடுத்திருக்கிறபோது அதற்குப் பதில் என்று வருகிறபோது We get credit among the people that we are championing the cause என்பதுதான் நிலைமை. அதை ஃபோர்ஸ்டால் செய்து தடுப்பதற்கு என்று அரசு இப்படி கொடுக்கலாம் அல்லவா?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இரண்டு நாட்களுக்கு முன்பு இந்தப் பேரவையிலே உறுப்பினர்கள் இங்கே சென்னையிலே பெய்த பெரு மழை கொடுமைகள் பற்றி கேட்கும் போது உடனடியாக தகவல் தருவதற்கு இல்லை இரண்டொரு நாட்களில் தகவல் தரப்படும் என்று தெரிவித்ததன் அடிப்படையில் இப்போது இந்த அறிக்கை இங்கே தரப்பட்டதே தவிர மாண்புமிகு உறுப்பினர்கள் திரு. உமாநாத், திரு. அம்பிகாபதி போன்றவர்கள் கொடுத்திருக்கின்ற ஒத்திவைப்புத் தீர்மானத்திற்கு பதில் என்ற முறையிலோ அதை எடுத்துக் கொள்ளக் கூடாது என்ற நோக்கத்திலோ இது கூறப்படவில்லை, 2 நாட்களுக்கு முன்பு இங்கே கேட்கப்பட்டதற்குதான் அதை விளக்குவதற்குதான் இந்த அறிக்கை தரப்பட்டிருக்கிறது. ஒத்திவைப்புத் தீர்மானம் முறைப்படி வரும். அப்போது மாண்புமிகு உறுப்பினர்கள் அவர்களுடைய முழு கருத்துக்களையும் பல்வேறு இடங்களில் பல்வேறு மாவட்டங்களில் இருக்கிற சூழ்நிலையை விளக்குவதற்கு வாய்ப்பு இருக்கிறது. அது தடுக்கப்படவில்லை என்பதை கூற விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பார்லிமெண்டு சம்பிரதாயத்தை சொல்கிறேன். பார்லிமெண்டில் ஒரு அறிக்கை தரவேண்டும் என்று அரசு விரும்பினால் அதை அனுமதிப்பதுதான் வழக்கம்.

**THIRU. R. UMANATH:** When there is no Adjournment Motion or calling Attention.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இது அறிக்கை தான். ஒத்திவைப்புத் தீர்மானம் வந்தால் அதில் நீங்கள் விவாதிக்க உரிமையுண்டு. கால் அட்டன்ஷன் மோஷன் வந்தால் அதில் நீங்கள் விவாதிக்க உரிமை இருக்கிறது. அதை தவிர்க்கவில்லை. தடுக்கப்படவில்லை.

திரு. ரா. உமாநாத்: இப்போது விளக்கம் ஒன்றும் கேட்க முடியாதே?

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நீங்கள் கொடுத்து இருக்கிற கால் அட்டன்ஷன் மோஷனுக்கு உயிர் இருக்கிறது. நாளையிலிருந்து அவைகளை எடுத்துக் கொள்ளயிருக்கிறேன்.

திரு. ரா. உமாநாத்: நாளைக்கு நீங்கள் ஒத்திவைப்புத் தீர்மானம் எடுத்துக்கொண்டாலும் இந்த ஸ்டேட்மெண்டு Government's unilateral statement. It will go to the press, of course, with your permission. மக்கள் என்ன நினைப்பார்கள்? எங்களுடைய தீர்மானங்கள் நாளைக்கு எடுத்துக்கொண்டால் அது நாளைய மறுநாள்தான் பத்திரிகையில் வரும். நாளைய மறுநாள் அதை பத்திரிகையில் பார்க்கிற மக்கள் என்ன நினைப்பார்கள்? இவ்வளவு பெரிய நாசங்கள் நடந்து இருக்கின்றன. நாங்கள் தேர்ந்தெடுக்கப்பட்ட இந்த சட்டசபை உறுப்பினர்கள் அசெம்பிளியில் போய் வாயை மூடிக்கொண்டு பேசாமல் இருக்கிறார்கள் என்று எங்களை திட்டமாட்டார்களா. நீங்கள்தான் எங்களுடைய உரிமைகளை புரடெக்ட் பண்ணவேண்டும்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் அவர்கள் இன்றுள்ள நிலையை விளக்குகின்ற முறையில் இந்த அறிக்கையை வெளியிட்டு இருக்கிறார்கள். இந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள கருத்துக்களைப் பயன்படுத்திக்கொண்டு ஒத்திவைப்புத் தீர்மானம் வருகின்றபோது இந்த நிலைமைகளை எல்லாம் எடுத்துச்சொல்வதற்கு உறுப்பினர்களுக்கு உரிமையுண்டு. மக்கள் யாரும் உறுப்பினர்களுடைய மதிப்பை—எடுத்துச் சொல்கின்ற மதிப்பை—குறைத்து மதிப்பிடுவார்கள் என்று சொல்லமுடியாது. நேற்றும், நேற்றைக்கு முன்நாளும் இலங்கை பிரச்சனையை எடுத்துக்கொண்ட காரணத்தால் இந்த ஒத்திவைப்புத் தீர்மானங்கள் எல்லாம் தள்ளிவைக்கப்பட்டு இருக்கிறதே தவிர வாய்ப்பு அளிக்கக்கூடாது என்பது அல்ல. ஒத்திவைப்புத் தீர்மானம் வரும்போது உறுப்பினர்கள் தங்கள் முழு கருத்துக்களையும் எடுத்துச் சொல்லலாம். அப்போது இருக்கிற நிலைமைகளை வைத்து அதற்கு வருவாய்த் துறை அமைச்சரோ அல்லது உரிய அமைச்சரோ பதில் சொல்வதற்கு வாய்ப்பு இருக்கிறது. அது தவிர்க்கப்படவில்லை. தடுக்கப்படவில்லை என்பதை கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

திரு. சு. பாலன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முன்னவர் அவர்கள் சொன்ன கருத்தை ஏற்றுக்கொள்கிறேன். அமைச்சர் அவர்கள் கொடுத்த பதிலில் 25-ம் தேதி பெய்த பெருமழையின் காரணமாக என்னுடைய



தொகுதியில் கட்டிடம் இடிந்து விழுந்ததன் காரணமாக ரமேஷ் என்ற குழந்தை இறந்து இருக்கிறது—அந்தத் தகவல் இல்லை. அந்தத் தகவல் அமைச்சருக்கு கொடுக்கப்படவில்லையா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அறிக்கையில் அந்த விவரங்கள் எல்லாம் வராது. இந்த மன்றத்திற்கு ஒன்றை நினைவுப்படுத்த விரும்புகிறேன். முந்தா நாள் முதலமைச்சர் அவர்கள் வெள்ளப் பகுதிகளைச் சுற்றிப் பார்த்துவிட்டு அவைக்கு வந்தார்கள். அன்றைக்கு ஒரு உறுப்பினர் இதைப்பற்றி அறிக்கை அவையில் வைக்கப்படுமா என்று கேட்டார்கள்.

திரு. என். எஸ். வி. சித்தன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான்தான் அதைப்பற்றிக் கேட்டேன்.

திரு. ரா. உமாநாத்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திரு. சித்தன் கேட்டதைப்பற்றி எங்களுக்கு கவலை இல்லை. எங்கள் உரிமையை டிமாலிஷ் பண்ணவேண்டாம் என்று கேட்டுக்கொள்கிறேன். He cannot have an exclusive right.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அறிக்கை அளிக்க வேண்டுமென்று திரு. சித்தன் கேட்டார் என்று தான் சொன்னேன். அவ்வாறு கேட்பதில் தவறு இல்லை.

திரு. ரா. உமாநாத்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, almost all the Members hereopposed it. அதனால் எதிர்காலத்திலாவது இந்தமாதிரி அரசு ஸ்டேட்மெண்டு கொடுக்க வேண்டும் என்று கேட்டால் அதுபற்றி ஒத்திவைப்புத் தீர்மானம் இருந்தால் அதன் மூலம் எடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். எதுவும் இல்லை என்றால் அரசுஸ்டேட்மெண்டு கொடுக்கலாம். அதை நீங்கள் கொஞ்சம் கான்ஸியஸ் ஆக கைடு செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: ஏற்றுக்கொள்கிறேன். அதைப் பற்றி மேலும் தொடராமல் விட்டுவிடலாம்.

(முற்பகல் 10-20)

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: பேரவைத் தலைவர் அவர்களே, நான் நடந்த நிகழ்ச்சிகளைப் பற்றி இப்பொழுது அவையின் முன்னாலே கொண்டு வரும்போது, விவரங்களை அவைக்கும், அதே நேரத்தில் அவையின் மூலமாக பொது மக்களுக்கும், அதேநேரத்தில் அதிகாரிகள் துரிதமாக நடவடிக்கை எடுக்கவேண்டுமென்ற காரணத்தினாலும்தான்இந்த அறிக்கையை வைத்தேனே ஒழிய—அதல்லாமல், அரசு ஏதோ முந்திக்கொண்டு இங்கே இருக்கிற தேர்ந்தெடுக்கப்பட்ட சட்டமன்ற உறுப்பினர்கள் கொண்டு வருவதற்கு முன்னாலே கொண்டுவர வேண்டுமென்ற அந்த நோக்கத்திலே கொண்டு வரவில்லையென்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அது மட்டுமல்ல, இங்கே இருக்கிற உறுப்பினர்கள் ஒத்தி வைப்புத் தீர்மானம் கொடுத்திருக்கிறார்கள் என்பதோ, அல்லது கவன ஈர்ப்புத் தீர்மானம் கொடுத்திருக்கிறார்கள் என்பதோ, அரசுக்கும் தெரியாது, எனக்கும் தெரியாது. அரசினுடைய கடமையைச் செய்வதற்காக அமைச்சரவையிலே இருக்கிற நான் . . . . . . (கூச்சல்—குழப்பம்)

திரு. ரா. உமாநாத்: உங்களைக் குற்றப்படுத்துகிறார். He is accusing the Speaker. நீங்கள் தெரிவிக்கவில்லையென்று சொல்கிறார். அரசுக்கும் தெரியாது. எனக்கும் தெரியாது என்று சொல்கிறார்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. உமாநாத் சொல்கிறபொழுது, அரசு முந்திக் கொண்டு கொடுப்பதா என்று கேட்டார்கள். நாங்கள் கொடுத்திருக்கிறோம். எங்களுக்கு முன்னால் கொடுத்ததாக, பொது மக்களுக்குச் சொல்ல வேண்டுமென்பதற்காக அரசு கொடுக்கிறது என்று சொன்னார்கள். அந்தக் குற்றச்சாட்டை மறுப்பது என்னுடைய கடமையாகும். மாண்புமிகு உறுப்பினர் அந்தக் குற்றச்சாட்டைச் சொல்லியிருக்கிறார். யார், யார் என்ன கொடுத்திருக்கிறார்கள் என்பதெல்லாம் எனக்குத் தெரியாது. அதையெல்லாம் பார்க்கிற நிலை எனக்குக் கிடையாது. (குறுக்கீடுகள்)

திரு. ரா. உமாநாத்: எனக்கு அப்படித் தெரியாது என்று சொன்னால், நீங்கள் செய்யவில்லையென்று மறைமுகமாகச் சொல்கிறார் அமைச்சர். He is casting aspersions on the Speaker.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொல்ல வந்த கருத்து, வருவாய்த் துறை தீர்மானத்தை இந்த அவையிலே கொண்டு வருவதற்கு அனுமதி வேண்டுமென்று கேட்டிருப்பதன் காரணமாக, ஒத்தி வைப்புத் அமைச்சர் முந்திக் கொண்டு இந்த அறிக்கையை வைத்தார் என்று சொல்லப்பட்ட குற்றச் சாட்டுக்குப் பதில் சொல்ல வருவாய்த் துறை வருகின்றபொழுது, அவர்கள் என்ன சொன்னார்கள். எனக்கு எந்த மோட்டிவும் கிடையாது, எனக்கு இதுபற்றித் தெரியாது என்று விளக்க வந்தாரே தவிர . . . . . . (குறுக்கீடுகள)

திரு. ரா. உமாநாத்: தெரியாது என்றால், "The Speaker's department has not done their duty" என்று சொல்கிறார்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: ஒத்திவைப்புத் தீர்மானம் பற்றிய அறிவிப்பு அவைத் தலைவருடையபார்வைக்கு வருவதும் அவைத்தலைவர் ஒத்திவைப்புத் தீர்மானத்தை அறிந்திருப்பதும், ஒத்தி வைப்புத் தீர்மானம் வந்திருக்கிற நிலையில் அறிக்கையை வாசிக்க அனுமதி அளிப்பதும் முழுவதும்



அவைத் தலைவரைப் பொறுத்ததுதான். அவைத்தலைவருக்குத் தெரியும். அவை முன்னவருக்குத் தெரியும். மற்ற அமைச்சர்கள் எல்லோருக்கும் தெரியாது. அவர்கள் அந்த பாயின்டைக் கொண்டுவர முற்படுகிறார்கள். தனக்கு எந்த மோட்டிவும் இல்லை என்று சொல்கிறார். அந்த அளவோடு நிறுத்திக் கொள்ளுங்கள்.

திரு. மு. அம்பிகாபதி: நான் தீர்மானம் கொடுத்திருக்கிறேன். ஆகவே, நான் அதன்மீது பேச வேண்டும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. அம்பிகாபதி இப்பொழுது பேசமுடியாது. அவர் கருத்து என்ன என்று எனக்குத் தெரியும். (குறுக்கீடு) அவர் ஏற்கனவே சொல்லிவிட்டார்

திரு. மு. அம்பிகாபதி: ஒத்திவைப்புத் தீர்மானம் கொடுத்திருப்பது நான்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: ஒரே ஒரு ஒத்திவைப்புத் தீர்மானம்தான். 10 தடவைகள் சொன்னாலும் அதேதான். அதைத் திரும்ப திரும்பச் சொல்லாதீர்கள். உட்காருங்கள். ஒத்தி வைப்புத் தீர்மானம், கவன ஈர்ப்புத் தீர்மானம் எல்லாம் வந்திருக்கின்றன. வந்தவை அந்தந்த இலாக்காக்களுக்கு போயிருக்கின்றன. அவை உடனடியாக அமைச்சர் அவர்களின் கவனத்திற்கு வராது. அது முடியாத காரியம். ஆகவே அமைச்சர் அவர்கள் தனக்கு தெரியவில்லை என்றுசொல்வதிலே தவறில்லை. தீர்மானங்கள் வந்தவுடன் நான் இலாக்காக்களுக்கு அனுப்பிவிட்டேன். என்னுடைய பொறுப்புகளை அன்றன்றே முடித்துவிட்டுத்தான் நான் அலுவலகத்திலிருந்தே போகிறேன். இலாக்காவிற்கு அனுப்பியிருக்கிறேன். அந்த இலாக்காவினர் அமைச்சரின் கவனத்திற்கு கொண்டு வராமல் இருந்திருக்கலாம். அதில் சபாநாயகரை அமைச்சர் குறை சொல்கிறார் என்று கூறி சபாநாயகருக்கும், அமைச்சருக்கும் இடையில் பிரச்னையை எழுப்ப வேண்டாம். ஏனென்றால் பத்திரிகைகளில் வருகிறபோது வெவ்வேறு விதமாக அவை வெளிவரும்.

திரு. சோ. அழகர்சாமி: தீர்மானம் கொடுத்தது தலைவருக்குத் தெரியும். இன்றைக்கு அறிக்கை வைக்கப் போகிறார் என்பதும் பேரவைத் தலைவருக்குத் தெரியும். பேரவைத் தலைவருடைய அனுமதியோடுதான் அமைச்சர் அவர்கள் அறிக்கை வைக்கிறார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இந்த அறிக்கையை வைப்பதில் என்னுடைய முழு அனுமதியோடு தான் வைத்தார்கள். அதிலே ஒரு சந்தேகமும் இல்லை.

திரு. சோ. அழகர்சாமி: தாங்கள் பாராளுமன்றத்தில் நிறைய அனுபவம் பெற்றவர்கள். இவ்வளவு பெரிய சேதம் ஏற்பட்டிருக்கிறபோது எதிர்க்கட்சி வரிசையில் இருப்பவர்கள் இந்தப்

பிரச்னையை எடுப்பதற்கு யாருமே தயாராக இல்லையா என்று வெளியிலே உள்ள மக்கள் நினைக்கக் கூடிய முறையிலே எங்களுக்கு ஒரு வாய்ப்பும் அளிக்காமல், முன்கூட்டியே தீர்மானம் கொடுத்திருந்தும்கூட, தாங்கள் அந்தத் தீர்மானத்திற்கு பதில் அளிக்க வேண்டுமென்று சொல்லாமல் அறிக்கையை சமர்ப்பிக்கச் சொல்லியிருக்கிறீர்களே, அது சரிதானா என்பதில் உங்களுடைய விளக்கத்தை பெற விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. என். எஸ். வி. சித்தன் அவர்கள் நேற்றே கேட்டார்கள். ஏன் ஒரு அறிக்கை கொடுக்கவில்லை என்று கேட்டிருக்கிறார்கள். ஏன் அறிக்கை வைத்தீர்கள் என்று நீங்கள் கேட்கிறீர்கள். முதலமைச்சர் அவர்கள் வெள்ளப் பகுதிகளைச் சுற்றிப் பார்த்தார் என்று தகவல் வருகிற போது நீங்கள் ஏன் அறிக்கை வைக்கவில்லை என்று கேட்டது திரு. என். எஸ். வி. சித்தன்; இதற்காக அறிக்கை வைக்கப்பட்டிருக்கிறது. நீங்கள் கொடுத்திருக்கிற ஒத்திவைப்புத் தீர்மானம், கவன ஈர்ப்புத் தீர்மானங்களை நாளையிலிருந்து எடுத்துக் கொள்வதாக சபைக்கு அறிவித்திருக்கிறேன்.

திரு. சோ. அழகர்சாமி: ஒத்திவைப்புத் தீர்மானம் கொடுத்திருந்தால் அதை எடுத்துக் கொண்டு அதற்கு அமைச்சர் அவர்கள் பதில் சொல்வது தான் பொருத்தமாக இருக்கும். எதிர்க்கட்சி வரிசையிலே இருப்பவர்கள் தகவல் கேட்பதற்கோ அல்லது அவர்களுக்கு தகவலை இந்த அவையில் சொல்வதற்கோ, வாய்ப்பிருக்கும். இது தலைவருக்கு தெரியாததல்ல. தீர்மானங்கள் இல்லாது போனால் அறிக்கை வைப்பதில் ஆட்சேபணை இல்லை. அல்லது எல்லோரும் அலுவல் ஆய்வுக் குழுவிலே முடிவு செய்து வெள்ளை அறிக்கை வைத்து அதன் மீது விவாதம் வைத்துக் கொள்ளலாம் என்றால் அது வேறு விஷயம். இது அப்படியில்லை. எதிர்க்கட்சியிலே இருப்பவர்கள் எல்லாம் தீர்மானங்களைக் கொடுத்திருக்கிறார்கள். அவர்களுக்கு எதுவுமே அக்கறை இல்லை என்பதைப் போலவும், ஆளும் கட்சிக்காரர்கள்தான் முன்கூட்டியே பார்த்து அறிக்கை வைத்ததைப் போல இருக்கிறது. இதன் காரணமாக எங்கள் உரிமைகள் பறிக்கப்படுகின்றனவே என்று தான் கேட்கிறேன். (கூச்சல், குழப்பம்)

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முதலிலே அதற்கு விளக்கம் தரப்பட்டு இந்த அவை அதை ஏற்றுக்கொண்டிருக்கும் என்று தான் கருதுகிறேன். ஆகவே நிலைமையை விளக்குவதற்காக மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் அவர்கள் இங்கே அறிக்கை வைத்தார்கள். அந்த அறிக்கை முழு விளக்கத்தையும், முழு விவரத்தையும் தெரிவித்துவிட்டது என்று அவர்கள் சொல்லவில்லை. குறிப்பிட்ட அளவிற்கு, அரசிற்கு தெரிந்து அளவிற்கு மட்டும் சொல்லப்பட்டிருக்கிறது. ஒத்தி வைப்புத் தீர்மானத்தை அனுமதிக்கிற, ஒத்தி வைப்புத் தீர்மானத்தை





எடுத்துப் பேசுகிற அத்தகைய அனுமதியை மறுத்து விட்டோம் என்று பேரவைத் தலைவர் அவர்கள் கூறவில்லை. அந்த வாய்ப்பு அப்படியே இருக்கிறது. ஆகவே அந்த ஒத்திவைப்புத் தீர்மானத்தைக் கொண்டு வருகிற போது, விவாதிக்கிற போது, எல்லா நிலைமைகளையும் மாண்புமிகு உறுப்பினர்கள் எடுத்துத் தெரிவிக்கிற போது அதற்கேற்றபடி வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் இருக்கிற நிலைமைகளை எடுத்துச் சொல்வதற்கு வாய்ப்பு இருக்கிறது. ஆகவே அந்த உரிமைகள் பறிக்கப்படவில்லை. ஆனால் தாங்கள் சும்மா இருந்து விட்டோமோ, இது பற்றி பேசாமல் இருந்து விட்டோமோ எனகிற நிலைமை ஏற்படுகிறது என்று சொல்கிறார்கள். இப்போது இதுவரையில் நடந்த விவாதத்தின் மூலமாக அந்த ஐயப்பாடு போய் விட்டதன் காரணமாக இந்தப் பிரச்னையை இத்தோடு முடித்து விட்டு அடுத்த நிகழ்ச்சிக்குப் போகலாம் என்று நான் கருதுகிறேன்.

(முற்பகல் 10-30)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இனி இந்த மாதிரி குறைபாடுகள் இல்லாமல் பார்த்துக் கொள்ளலாம்.

4. முதல் துணை மதிப்பீடுகள். 1983—84—அளித்தல்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: மாண்புமிகு அவைத் தலைவர் அவர்களே, 1983—84 ஆம் ஆண்டுக்குரிய முதல் துணை மதிப்பீடுகளை இம்மாமன்றத்தில் வைக்க முன் வந்துள்ளேன். இந்தத் துணை மதிப்பீடுகள் ரூபாய் 158.75 கோடி நிதியொதுக்கத்திற்கு வகை செய்கின்றன. இதில் ரூபாய் 136.49 கோடி வருவாய்க் கணக்கின் கீழ் வருகிறது. ரூ. 22.26 கோடி மூலதனச் செலவு, கடன் கணக்குகளின் கீழ் வருகின்றது. இந்த மதிப்பீடுகளுடன் வைக்கப்பட்டுள்ள விரிவான அறிக்கை இச்செலவினங்களுக்கான காரணங்களை விளக்குகிறது. நான் இதில் முக்கியமான சில செலவினங்களை மட்டும் மாண்புமிகு உறுப்பினர்களின் கவனத்திற்குக் கொண்டு வர விழைகிறேன்.

கடந்த வருடத்தில் வடகிழக்குப் பருவ மழை பொய்த்ததாலும், நடப்பு ஆண்டில் தென்மேற்குப் பருவ மழை காலந்தாழ்த்திப் பெய்ததாலும் ஏற்பட்ட மிகக் கடும் வறட்சி நிலையால் இம்மாநிலம் பெரிதும் பாதிக்கப்பட்டிருந்ததை மாண்புமிகு உறுப்பினர்கள் அறிவர். கிராமப் பகுதிகளிலும் நகர்ப்புறப்பகுதிகளிலும் வறட்சியால் பாதிக்கப்பட்ட மக்களின் துயர் துடைக்க இம்மாநில அரசு பெருமளவில் நிவாரண நடவடிக்கைகளை நிறைவேற்ற வேண்டி வந்தது. வறட்சி நிவாரணப் பணிக்களுக்காக மைய அரசு ரூபாய் 68.36 கோடி வரை செலவினங்களை அனுமதித்திருக்க, மாநிலஅரசு ரூ. 88.76 கோடி வரையிலான செலவினங்களுக்கு அனுமதி வழங்கியுள்ளது. மைய அரசு ஈடு செய்யாத சில செலவினங்களும் இந்த அனுமதியில் அடங்கும்.

வறட்சியால் பாதிக்கப்பட்ட பகுதிகளில், சிறு பாசன, பெரும்பாசன ஏரிப்படுகைகளில் கிணறுகள் தோண்டுவதற்காக ரூ. 3.09 கோடி செலவிட அனுமதி வழங்கப்பட்டுள்ளது. மேலும் வேலை வாய்ப்புகளை உருவாக்கித்தரும் பணிகள் வகையில், கசிவு நீர்க் குட்டைகள் வெட்டுதல், பாசன ஏரிகளை ஆழப் படுத்துதல், செப்பனிடுதல் பணிகளுக்காக ரூ.10.69 கோடியும் 50 ஏக்கருக்கு மேல் ஆயக்கட்டுள்ள பாசன ஏரிகளை ஆழப்படுத்துதல் செப்பனிடுதல் பணிகளுக்காக ரூ. 6.27 கோடியும் செலவிட அனுமதி வழங்கப்பட்டுள்ளது. தற்பொழுது இப்பேரவையின் முன் வைக்கப்பட்டுள்ள இந்த துணை மதிப்பீடுகளில் இச்செலவினத் தொகைகள் சேர்க்கப்பட்டுள்ளன. அன்றியும் வேளாண்மைப் பொறியியல் துறை வறட்சியால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் கசிவு நீர்க் குட்டைகளை வெட்டுவதற்காக ரூ. 144 இலட்சம் செலவிட அனுமதி வழங்கப்பட்டுள்ளது. இந்தத்துணை மதிப்பீடுகளில் இத்தொகைக்காகவும் வகை செய்யப்பட்டுள்ளது. வறட்சியால் பாதிக்கப்பட்டுள்ள கிராமப் பகுதிகளில், குடிநீர் வழங்குவதற்காக, துளைக் கிணறுகள் தோண்டுவதற்கு நடப்பாண்டில் ரூ. 10.16 கோடி செலவிட அனுமதி வழங்கப் பட்ட தொகை துணை மதிப்பீடுகளில் சேர்க்கப்பட்டுள்ளது. குடிநீர் தட்டுப்பாடின்றிக் கிடைக்கும் வகையில் 2,1538 துளைக் கிணறுகள் தோண்டப் பட்டுள்ளன. சென்னை மாநகரின் குடிநீர்ப் பிரச்சினையைப் பொறுத்தமட்டில், மிக இடர்ப்பாடான ஒரு கால கட்டத்தைக் கடக்க வேண்டியிருந்தது என்பதை மாண்புமிகு உறுப்பினர்கள் அறிவர். வறட்சிக் கால அளவில் சென்னை மாநகரில் குடிநீர் தட்டுப்பாடின்றிக் கிடைப்பதற்காக அனுமதி வழங்கப்பட்ட ரூபாய் 4-88 கோடி நிதியொதுக்கமும் இத்துணை மதிப்பீடுகளில் இடம் பெறுகிறது. சென்னை மாநகரில் செயற்கை மழை பெய்விப்பதற்காக ரூ. 27 இலட்சம் செலவிட அனுமதி வழங்கப்பட்டது. இச்செலவினத்தையும் இத்துணை மதிப்பீடுகள் உள்ளடக்கியுள்ளன.

தஞ்சாவூர் மாவட்டத்தில் வடிமுனைக் கிணறுகள் இறக்கு வதற்காக அனுமதி வழங்கப்பட்ட ரூ. 1.50 கோடி செலவினமும் வறட்சியால் பாதிக்கப்பட்டுள்ள பகுதிகளில் தனியார் பாசனக் கிணறுகளை ஆழப்படுத்துவதற்காக கடனாக அளிக்கப்பட்ட ரூ. 5.00 கோடி செலவினமும் இத்துணை மதிப்பீடுகளில் இடம் பெறுகின்றன. இந்த இரண்டு இனங்களுக்கும் ஆகும் செலவை மத்திய அரசு ஈடு செய்யாது.

கிருஷ்ணா நதியிலிருந்து 15 டி.எம்.சி நீரைப் பெறுவதன் மூலம் சென்னை மாநகருக்குக் குடிநீர் வழங்கும் திட்டம் நடப்பாண்டில் துவக்கி வைக்கப் பட்டது, என்பதை மாண்புமிகு உறுப்பினர்கள் அறிவர். இந்த வகையில் இரண்டு மாநிலங்களும் செய்து கொண்ட ஒப்பந்தத்தின்படி இத்திட்டத்திற்காக முதல் தவணைத் தொகையாக ஆந்திர மாநிலத்திற்கு ரூ. 30 கோடி



அளிக்கப்பட்டது. இத்தொகை இந்தத் துணை மதிப்பீடுகளில் சேர்க்கப்பட்டுள்ளது. இத்திட்டம் குறித்து நமது மாநிலத்திற்குள் நிறைவேற்றப்படவிருக்கும் பணிகளினிமித்தம் அனுமதி வழங்கப் பட்டுள்ள ரூ. 2.10 கோடியும் இந்தத் துணை மதிப்பீடுகளில் சேர்க்கப்பட்டுள்ளது.

சாராயம், இந்தியாவில் தயாரிக்கப்படும் அயல்நாட்டு மது வகைகள் ஆகியவற்றின் மொத்த விற்பனை வணிகத்தை 1983-ஆம் ஆண்டு ஜூன் திங்கள் முதல் நாளிலிருந்து மாநில அரசே மேற் கொண்டது. அரசு விற்பனைக் கழகம், இந்த மொத்த விற்பனை வணிகத்தை மேற் கொள்கிற வரையில், இதனை மதுவிலக்கு ஆயத்தீர்வைத் துறையே நடத்தி வந்தது. சாராயம், இந்தியாவில் தயாரிக்கப்படும் அயல்நாட்டு மது வகைகள் ஆகியவற்றை இந்த இடைக்காலத்தில் வாங்கு வதற்காக ரூ. 24 கோடிக்கு அனுமதி வழங்கப்பட்டது. இத்தொகைக்கும் இந்தத் துணை மதிப்பீடுகளில் வகை செய்யப் பட்டுள்ளது.

1983-84 ஆம் ஆண்டு வரவு—செலவுத் திட்ட மதிப்பீடுகளில் நிதியொதுக்கம் செய்யப்பட இயலாத சில முக்கியமான செலவினங்களை மட்டும் நான் இங்கு கோடிட்டுக் காட்டி யுள்ளேன். இந்தத் துணை மதிப்பீடுகளில் சேர்க்கப்பட்டுள்ள அனைத்து திட்டங்களுக்கும் ஒப்புதல் அளிக்குமாறும் அவற்றிற்குத் தேவையான நிதியொதுக்கத்தை வழங்குமாறும் இப்பேரவையைக் கேட்டுக் கொள்கிறேன். வணக்கம்.

## 5. அறிவிப்பு.

### முதல் துணை மதிப்பீடுகள், 1983-84—வெட்டுத் தீர்மானங்கள் கொடுப்பது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவைக்கு ஓர் அறிவிப்பு. 1983–84 ஆம் ஆண்டிற்கான செலவு குறித்த முதல் துணை மதிப்பீட்டு அறிக்கையில் கண்டுள்ள மானியக் கோரிக்கைகளின் மீது வெட்டுத் தீர்மானங்கள்கொடுக்க விரும்பும் உறுப்பினர்கள் அவைகளை பேரவையின் 205 வது விதிக்கிணங்க, 28-10–1983 வெள்ளிக்கிழமை மாலை 3–00 மணிக்குள் செயலாளரிடம் சேர்ப்பிக்க வேண்டும்.

## 6. மிகைச் செலவிற்கான மானியக் கோரிக்கைகள், 1975-76, 1976-77, 1977-78, அளித்தல்.

மாண்புமிகு டாக்டர் இரா நெடுஞ்செழியன்: மாண்புமிகு அவைத் தலைவர் அவர்களே, 1975–76, 1976-77, 1977-78ஆம் ஆண்டில் சில மானியக் கோரிக்கைகளில் இறுதியாக அனுமதிக்கப்பட்ட நிதியொதுக்கத்தைவிட மிகையாகச் செலவான சில இனங்களுக்கு மானிய அறிக்கைகளை இம்மன்றத்தில் வைக்க முன் வருகிறேன்.

[டாக்டர் இரா. நெடுஞ்செழியன்] [1983 அக்டோபர் 27

1975-76, 1976-77, 1977-78 ஆம் ஆண்டுகளுக்குரிய நிதியொதுக்கக் கணக்குகளை ஆராய்ந்து பார்த்து சில மானியக் கோரிக்கைகள் மீது அனுமதிக்கப்பட்ட நிதியொதுக்கத்தைவிட மிகையாகச் செலவாகி இருப்பதை பொதுக் கணக்கு ஆய்வுக் குழு 1980-81, 1981-82, 1982-83 சுட்டிக் காட்டியுள்ளது. மிகைச் செலவிற்கான காரணங்களைப் பரிசீலித்தப் பின்னர் ஒவ்வொரு மானியத்திலும் இறுதியாக அனுமதிக்கப்பட்ட நிதியொதுக்கத்தைவிட மிகையான செலவிற்குரிய மானியக் கோரிக்கைகளை சட்டப்பேரவை முன் வைத்து அனுமதி பெறுமாறு பொதுக் கணக்கு ஆய்வுக்குழு பரிந்துரைத்துள்ளது. அவ்வண்ணமே, 1975-76, 1976-77, 1977-78 ஆம் ஆண்டுகளுக்கான மிகைச் செலவிற்குரிய மானியக் கோரிக்கையின் விரிவான அறிக்கைகள் இப்பொழுது இம்மன்றத்தில் வைக்கப் படுகின்றன. மொத்தத்தில் மிகைச் செலவு முறையே 1975-76 ஆம் ஆண்டில் ரூ. 6.16 கோடியும், 1976-77 ஆம் ஆண்டிற்கு ரூ. 3.54 கோடியும் 1977-78 ஆம் ஆண்டிற்கு ரூ. 3.40 கோடியு மாகும். இம் மூன்றாண்டுகளில் பெரும்பாலும் ''மருத்துவம், ''பாசனம்'' ஓய்வூதியங்களும் ஓய்வுக்கால பயன்களும் என்ற தலைப்புகளின் கீழ் மிகைச் செலவு ஏற்பட்டுள்ளது; ஒவ்வோர் இனத்திலும் மிகைச் செலவு ஏற்பட்டதற்கான காரணங்கள் அந்தந்த மானியக் கோரிக்கைகளின் இணைப்பில் விளக்கப் பட்டுள்ளன.

மத்திய அரசு நிறுவனங்களிடமிருந்து வாங்கிய மருந்துகளின் விலை உயர்வாலும், உணவுப்பொருள்கள், எக்ஸ்-கதிர் பிலிம்கள் பிலிம் பொருத்திகள், டெவலப்பர்கள் போன்ற பொருட்களின் விலை உயர்வாலும், அரசு மருத்துவ மனைகளில் சிகிச்சை பெற்ற நோயாளிகளின் எண்ணிக்கை அதிகரித்ததனாலும் மருத்துவ மானியத்தில் இன்றியமையாத வகையில் மிகைச் செலவு ஏற்பட்டது.

1972 ஆம் ஆண்டு வெள்ள நிவாரணப் பணிகள் நிறைவேற்றப் படுவது தொடர்பாக ஏற்பட்ட செலவைப் பாசனத் துறையின் அந்தந்தப் பணித்தலைப்புகளின் கீழ் வகைப்படுத்தியதாலும், வட்டி வகையிலும், கருவிகள், தளவாடங்களின் விலை வகையிலும் ஓய்வூதியத் தொகைகள் வகையிலும் ஆன செலவினங்களை பாசனத் தலைப்புகளின் கீழ் சரி கட்டியதாலும் பாசன மானியத்தின் கீழ் முக்கியமாக மிகைச் செலவு ஏற்பட்டது.

ஓய்வூதியம் பெறுபவர்களின் தொகை அதிகரித்ததாலும், அதிக ஓய்வூதியம் செலுத்தப்பட்டதாலும், ஓய்வூதியம் பெறுபவர்களுக்கு உயரிய வீதத்தில் அகவிலைப்படி வழங்கப் பட்டதாலும் ஓய்வூதியம், ஓய்வுக்கால பயன்கள் என்ற மானியத்தில் மிகைச் செலவு ஏற்பட்டது.

1975-76, 1976-77, 1977-78 ஆம் ஆண்டுகளுக்குரிய மிகைச் செலவிற்கான மானியக் கோரிக்கை அறிக்கைகளை இம்மன்றம் ஏற்று இசைவளிக்க வேண்டுகிறேன்.



7. அரசினர் தீர்மானம்.

விதி 32-ஐத் தளர்த்தல்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவர் அவர்களே நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்,

''தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதி 32-ஐ தளர்த்தி இப்பேரவை இன்று, 27-10-1983 அன்று அரசினர் அலுவல்களை எடுத்துக் கொள்ள வேண்டும்.''

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறை வேற்றப்பெற்றது.

8. அரசினர் தனித் தீர்மானம்.

இலங்கைவாழ் தமிழர் பிரச்னை குறித்து (தொடர்ச்சி)

திரு. வி. கிருஷ்ணமூர்த்தி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மன்றத்தின் முன் விவாதத்திற்கு இருக்கக்கூடிய, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் முன்மொழியப்பட்ட தீர்மானத்தின் மீதும் எங்களுடைய கட்சியின் அருமை சகோதரர் திரு. ரகுமான்கான் அவர்களால் எங்களுடைய கழகத்தின் சார்பிலே கொடுக்கப்பட்ட அந்த தீர்மானத்தையும், வலியுறுத்தி, என்னுடைய கருத்துக்களை நான் இங்கே கூற விரும்புகிறேன்.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இந்தத் தீர்மானத்தை ஒரு மிகப் பெரிய தீர்மானமாக இந்த மன்றத்தின் பரிசீலனைக்கு வைத்து இருக்கிறார்கள். இந்தத் தீர்மானத்தை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இந்தச் சட்டமன்றத்தின் கூட்டத் தொடர் துவங்கிய உடனே அலுவல் ஆய்வுக் குழுவிலே வைத்து, ஒரு ஒருமித்த கருத்தைத் திரட்டி, ஒருமித்த தீர்மானமாகக் கொண்டு வந்து இருப்பார்களானால் அது வேறு விஷயம். ஆனால் இன்றையதினம் நம்முடைய முதலமைச்சர் அவர்கள் ஒரு நீண்ட தீர்மானத்தைக் கொண்டு வந்து இருக்கிறார்கள். இந்தத் தீர்மானத்திலே பல்வேறு வாசகங்கள் கூறப்பட்டு இருந்தாலும் இந்தத் தீர்மானத்தைக் கொண்டு வரக்கூடிய நேரத்தையும் திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பிலே என்னால் சொல்லாமல் இருக்க முடியவில்லை.

(முற்பகல் 10-40)

பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இலங்கையிலே படுகொலைகள் தொடர்ந்து நடைபெற்ற சமயத்திலே சர்வகட்சிக் கூட்டத்தைக்

கூட்டினார்கள். அந்தச் சர்வகட்சிக் கூட்டத்திலே கலந்து கொண்டு, பாரதப் பிரதமரிடத்திலே இன்னின்ன காரியங்களை உடனடியாகச் செய்யவேண்டும் என்று எல்லாக் கட்சிகளும் சேர்ந்து கூறினார்கள். அதை எடுத்துக்கொண்டு முதலமைச்சர் அவர்களும், மற்றவர்களும் எங்களுடைய கழகத்தின் சார்பில் பாராளுமன்ற உறுப்பினர் டாக்டர் கலாநிதியும் மற்றவர்களும் சென்று, பாரதப் பிரதமரிடத்தில் கொடுத்ததை நான் மறுக்கவில்லை.

எங்களுடைய கருத்து எல்லாம், இந்தப் பிரச்னையில் ஏறத்தாழ 3,000, 4,000 பேர்கள் இந்திய வம்சா வழி தமிழர்கள் அவர்கள் தமிழ் பேசுகிறார்கள் என்ற ஒரே காரணத்திற்காக— அவர்கள் கிருஸ்துவர்களாக இருந்தாலும் சரி, இந்துக்களாக இருந்தாலும் சரி, முஸ்லீம்களாக இருந்தாலும் சரி—சிங்கள வெறியர்களால் நாள்தோறும் இலங்கையிலே பல பகுதிகளிலே கொலை செய்யப்படுகிற ஒரு நேரத்திலே தமிழகத்திலே இருக்கிற பல்வேறு பகுதிகளிலும் கொந்தளிப்பு ஏற்பட்டு, மக்கள் உணர்ச்சி பிழம்பாக நின்று, தமிழகமே ஒன்று திரண்டு இருந்த சமயத்திலே நம்முடை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இந்தச் சட்டசபையைக் கூட்டி இருந்து, இந்த சட்டசபையிலே தினந்தோறும் இலங்கையிலே நடைபெறுகின்ற அட்டூழியங்களை, இலங்கையிலே நடைபெறுகின்ற அநியாயங்களை நம்முடைய மாண்புமிகு உறுப்பினர்கள் எடுத்துச் சொல்வதற்கு வாய்ப்பு அளித்து இருப்பார்களானால், தமிழ்நாடு அவர்களுக்கு மிகவும் கடமைப்பட்டு இருக்கும். திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் நாங்கள் எங்களுடைய நன்றியை தெரிவித்து இருப்போம்.

ஆனால் இன்றையதினம் ஏறக்குறைய 3 மாதத்திற்குப்பிறகு, இப்படி ஒரு நீண்ட தீர்மானமாக இங்கே கொண்டு வந்து இருக்கிறீர்கள். இது எப்படி இருக்கிறது என்று ஆங்கிலத்தில் சொல்ல வேண்டுமானால், "இன் எ லெஷர்லி மேனர்" கொண்டு வந்து. இருக்கிறீர்கள். மிகமிகத் தாமதமாகக் கொண்டுவந்து இருக்கிறீர்கள். இதை நாங்கள் கண்டிக்காமல் எப்படி பாராட்டுத் தெரிவிக்கமுடியும் என்பதை திராவிட முன்னேற்றக்கழகத்தின் சார்பில் எங்களால் கூறாமல் இருக்க முடியவில்லை.

மத்திய அரசினுடைய செயலைப் பாராட்டி, மாநில அரசு
கடைபிடிக்கக்கூடிய கொள்கையைப் பாராட்டி, ஐ.நா. சபையிலே
அருமைச் சகோதரர் மாண்புமி[illegible] இராமச்சந்திரன் [illegible]வர்கள்
ஆற்றிய உரையைப் பாராட்டி ஒ[illegible] நீண்ட தீர்மானத்தை [illegible]ங்கே
கொடுத்திருக்கிறீர்கள். நான் ஏ[illegible] கனவே சொன்ன[illegible] [illegible]போல
இந்தத் தீர்மானம் கூட தேவை[illegible]லை. இரண்டாவ[illegible] உலக
யுத்தம் நடந்தபோது, பிரிட்ட[illegible] குண்டு வீசிய ச[illegible]த்தில்,
பிரிட்டிஷ் துருப்புகள் எல்லாம் ப[illegible]வறு நாடுகளிலே யுத்[illegible]திலே
இறங்கியிருந்தபோது, ஜெர்ம[illegible]ர் இலண்டன்மீது [illegible]ண்டு
போட்ட சமயத்தில் அந்த நாட்டி[illegible] பிரதமர் வின்ஸ்ன்ட[illegible]ர்ச்சில்
அவர்கள் 'அவுஸ் ஆஃப் கா[illegible]'ஸை' தொடர்ந்து [illegible]த்திக்



கொண்டிருந்தார்கள்; மக்களை ஊக்கப்படுத்திக் கொண்டிருந்தார்கள்; ஜெர்மனிய வீரர்கள் செய்யக்கூடிய அட்டூழியங்களை, அநியாயங்களைக் கண்டித்துக்கொண்டிருந்தார்கள். அதனால் தான் சர்ச்சில் அவர்களுடைய பணியை இன்றும் அனைத்து நாடுகளும் பாராட்டுகின்றன ஜெர்மனைத் தவிர,

அதைப்போன்று நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இந்த மன்றத்தை ஆகஸ்ட் மாதத்திலே, சர்வ கட்சிக் கூட்டத்தைக் கூட்டுவதற்கு முன்னதாகவே, இன்னும் சொல்லப் போனால் தந்தி மூலம் அந்த மன்றத்தைக் கூட்டியிருந்தால் திராவிட முன்னேற்றக் கழகம் அவரை பாராட்டும் என்று நான் பெருமையோடு சொல்வேன். உடனுக்குடன் இந்த மன்றத்திலே கருத்துக்களை எடுத்து வைக்க நாங்கள் எல்லாம் தயாராக இருப்போம்.

ஆனால் இன்றையதினம் எங்களுடைய தலைவரான அருமைச் சகோதரர் அன்பில் அவர்களும் துணைத் தலைவரான நானும் இங்கே அமர்ந்து பேசுகிறோம் என்றால் நாங்கள் மகிழ்ச்சியோடு இந்த மன்றத்திலே அமர்ந்திருக்கவில்லை. எங்களுடைய கட்சித் தலைவர் கலைஞர் அவர்கள் இங்கே இருந்தால் இந்தத் தீர்மானத்திலே எப்படியெல்லாம் பேசியிருப்பார்களோ, எங்களுயை பொதுச் செயலாளர் பேராசிரியர் அவர்கள் இங்கே இருந்தால் எப்படி எல்லாம் கருத்துக்களை எடுத்து வைத்திருப்பார்களோ அந்த அளவுக்கு எங்களால் பேச முடியுமா? கருத்துக்களைச் சொல்ல முடியுமா என்றால் முடியாது. ஆகவே, நாங்கள் எல்லாம் வேதனையோடுதான் இதிலே கலந்துகொள்கிறோம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

நம்முடைய முதலமைச்சர் அவர்கள் ஆகஸ்ட் மாதத்திலே இந்த சட்டமன்றத்தைக் கூட்டியிருந்தால் எங்களுடைய பேராசிரியர் அவர்களும் கலைஞர் அவர்களும் இந்த மன்றத்திலே தங்களுடைய கருத்துக்களை, ஆணித்தரமான கருத்துக்களை, அரசுக்குச் சொல்லவேண்டிய ஆலோசனைகளை, முதலமைச்சர் பின்பற்றவேண்டிய நடைமுறைகளை தெரிவித்திருப்பார்கள்.

அதுமட்டுமல்ல, இன்றையதினம் இந்தத் தீர்மானத்தை நம்முடைய மணிமாறன் போன்றவர்கள் அல்லது எதிர்தரப்பிலே இருப்பவர்களில் யாராவது கொண்டுவருவதுதான் முறை, நம்முடையமுதலமைச்சர் தான் எடுத்த நடவடிக்கை பற்றி அவரே பாராட்டிக் கொள்கிறார் என்றால் அது எப்படி பொருத்தமாக இருக்கும் என்று எனக்குத் தெரியவில்லை. ஆகையால்தான் இது காலம் கடந்த, இன்னும் சொல்லப் போனால் மிக மிக காலம் கடந்த, இன்னும் சொல்லப்போனால் நீத்தார் நினைவுநாள் கொண்டாடுவதைப் போன்று இது காலம் கடந்த செயலாக இருக்கிறது என்று கூற விரும்புகிறேன்.

கிராமங்களிலே சொல்வார்கள். தாய் உயிரோடு இருக்கும் போது தண்ணீர் கொடுக்காதவன், செத்த பிறகு கோ தானம் கொடுப்பான் பத்து பேரை அழைத்து சொர்க்கத்திற்குப் போக என்று சொல்வார்கள். அதைப்போன்று இலங்கையிலே தமிழர்களுக்கு கொடுமைகள் இழைக்கப்பட்டு, தமிழ் இனம் அழிந்து கொண்டிருக்கும்போது அதற்குஎன்று குரல் எழுப்ப முடியாததற்கு என்ன காரணம்? என்ன தயக்கம்? அருமைச் சகோதரர் நெடுமாறன் அவர்கள் இந்த சட்டமன்றத்தை அப்போது கூட்டாததற்கு என்ன காரணம் என்று கேட்டார்கள். தமிழ்நாடு முழுவதும் கொந்தளிப்பு, உண்ணாவிரதம் போன்ற நிலைமைகள் ஏற்பட்டு, உணர்ச்சி பிழம்பாக தமிழகம் இருந்தபோது ஏன் தமிழ்நாட்டில் உடனடியாக முதலமைச்சர் சட்டமன்றத்தை கூட்ட முன்வரவில்லை என்பதை மீண்டும் சொல்ல விரும்புகிறேன். ஆகையால்தான் இந்தப் பிரச்னையில் மத்திய அரசுக்கு மிகவும் அனுசரணையாக இருந்து சூடு உண்டாகாமல் ஆறப்போடுகின்ற முறையில் மாநில அரசு அணுகி இருக்கிறது என்பதை இங்கே தெரிவித்துக் கொள்கிறேன்.

நேற்றைக்கு முன்தினம் நாவலர் அவர்கள் இந்தத் தீர்மானத்தை எடுத்து வைத்த சமயத்தில் சில கருத்துக்களைச் சொன்னார்கள். எல்லோரும் ஒருமித்த கருத்தாக இருந்து இதை ஆதரிக்க வேண்டுமென்ற பாணியில் சொன்னார்கள். முதலமைச்சர் கூட்டிய அந்த கூட்டத்திலே—முதலமைச்சர் வடித்து எடுத்த தீர்மானத்திலே எங்களுடைய கருத்து மாறுபட்டிருந்தாலும், நாங்கள் சொல்லக்கூடிய கருத்துக்கள் மற்றக் கட்சிக்காரர்கள் அந்தக் கூட்டத்தில் கூறிய கருத்துகளுக்கு மாறுபட்டிருந்தாலும்—முதலமைச்சர் காட்டுகின்ற அந்த முயற்சிக்கு உறுதுணையாக இருக்க வேண்டுமென்றுதான் பிரதமர் அவர்களிடம் கொடுக்கப்பட்ட அந்த மனுவை திராவிட முன்னேற்றக்கழகம் ஏற்றுக் கொண்டு, அதிலிருந்து நாங்கள் பணியாற்றினோம். பிரச்னை வந்தவுடனே முதலமைச்சர் உரிய நடவடிக்கை எடுத்திருந்தால் சிறப்பாக அமைந்திருக்கும். எல்லாவற்றையும்விட இப்படிப்பட்ட ஒரு 'வழவழா கொழகொழா' என்ற தீர்மானம் போட வேண்டிய அவசியம் ஏற்பட்டிருக்காது.

(முற்பகல் 10-50)

மிகச் சுருக்கமான முறையிலே மாநிலஅரசாங்கம் கைக்கொள்ள வேண்டிய கடமை மத்திய அரசாங்கம் கைக்கொள்ள வேண்டிய கடமை என்பதைப்பற்றிச் சொல்லியிருக்கலாம். மாண்புமிகு அவையினுடைய தலைவர் நம்முடைய நாவலர் அவர்கள் நேற்றைக்கு முன்தினம் இந்த மன்றத்திலே பேசுகிறபோது சொன்னார்கள். எங்கள் கட்சியினுடைய கொள்கை எங்கள் கொள்கை. அமைச்சர் அவையிலே உள்ள அமைச்சர்களில் ஒரு சிலர் பேசுகின்ற கருத்துக்கள் அவர்களுடைய தனிப்பட்ட கருத்துக்கள். எங்கள் கருத்துக்கள் எல்லாம் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தலைமையிலே எடுக்கக்கூடிய முடிவுகள் தான் எங்கள் கருத்துக்கள். அதுதான் எங்களுடைய கொள்கை என்று திட்டவட்டமாகச் சொன்னார்கள். அதைத்தான் அவர் சொல்லவேண்டும்.



ஆனால் நான் சொல்வதெல்லாம் நம்முடைய சகோதரர் மாண்புமிகு காளிமுத்து அவர்கள், அதேபோல நம்முடைய எஸ். டி. எஸ். அவர்கள் மற்றும் இயக்கத்திலே இருக்கக்கூடிய பல்வேறுபட்டவர்களும் என்ன கருத்தை கொண்டிருக்கிறார்கள். அந்தக் கருத்துக்கள் சரியான கருத்தா? நியாயமான கருத்தா? என்பதை சீர்தூக்கிப் பார்ப்பது நியாயமான காரியமா? இல்லையா என்பதை கேட்க விரும்புகிறேன்.

இந்த இலங்கைப் பிரச்னையில் திராவிட முன்னேற்றக் கழகம் தனியான கொள்கையை வைத்துக்கொண்டு இருப்பதாக நான் சொல்லவரவில்லை. நம்முடைய பேரறிஞர் அண்ணா அவர்கள் வகுத்த கொள்கையை—நாம் அத்தனை பேரும் திராவிட முன்னேற்றக் கழகத்திலே ஒன்றாக இருந்த நேரத்தில்—கடைபிடிக்கிறோம். எங்களுக்கு இருக்கக்கூடிய உணர்வு, எங்களுக்கு இருக்கக்கூடிய ஆதங்கம், தமிழர்கள் செத்து மடிகிறார்களே, அவர்களை காப்பாற்றுவதற்கு உடனடியாக நடவடிக்கையை எடுக்கவில்லையே, எடுக்க முடியவில்லையே என்கிற ஒரு ஆதங்கம் உங்களுக்கு இல்லாமல் இருக்கும் என்று நான் நினைக்கவில்லை. நீங்கள் பார்த்துக்கொண்டு சும்மா இருக்கிறீர்கள் என்று சொல்ல வரமாட்டேன். அந்த உணர்ச்சி உங்களுக்கும் இருக்கும். இருக்க வேண்டும். ஆனால் அந்த உணர்வுகளை நீங்கள் ஆட்சியிலே இருக்கிற காரணத்தாலே வெளிக்காட்டிக் கொள்வதிலே சில சிரமங்கள் இருப்பதும் திராவிட முன்னேற்றக் கழகத்திற்குத் தெரியும். ஏனென்றால் நாங்களும் ஆட்சியில் இருந்தோம், நீங்களும் இன்றையதினம் இருந்து கொண்டிருக்கிறீர்கள்.

ஆனால் இதுவரையிலும் நடைபெறாத ஒரு கொலைவெறி சம்பவங்கள் தமிழன் என்று சொல்லப்படுகிற காரணத்தாலே சாகடிக்கப்படுகிறான். படுகொலை செய்யப்படுகிறான். இது தான் அங்கே இருக்கக்கூடிய அரசாங்கத்தின் கொள்கை. இன்றையதினம் இருக்கின்ற சமயத்தில். உங்கள் கொள்கையை நாங்கள் ஏற்றுக் கொள்ளவில்லை என்று சொல்லலாம். ஆனால் நம்முடைய அமைச்சர் பெருமக்கள், உங்களிடம் உள்ள உறுப்பினர்களுடைய கொள்கைக்கு மதிப்பு தந்து, அதை ஏற்றுக் கொண்டு அமல் நடத்த நீங்கள் முயற்சி செய்யவேண்டும் என்பது தான் திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் நான் வலியுறுத்திக் கூற விரும்புகிறேன்.

நம்முடைய நாவலர் அவர்கள், நடமாடும் பல்கலைக் கழகம் என்று போற்றப்படுபவர். திராவிட முன்னேற்றக் கழகத்தில் இருந்த நேரத்தில், பல்வேறு இடங்களில் அவர் பேசிய பேச்சுக்களை கேட்டவர்களில் நானும் ஒருவன். எங்களுடைய குருநாதரே அவர்தான். அவர் செல்லும் கூட்டங்களுக்கு எல்லாம் நானும் சென்றிருக்கிறேன். நாங்கள் மாறாமல் இருக்கிறோம். ஆனால் அவர் அதை மறந்துவிட்டு இன்றையதினம் மவுனமாக இருக்கிறார். ஏதோ சந்தர்ப்பத்தால் சூழ்நிலைக் கைதியாக இருக்கலாம். வீராவேசமாக சொல்வார்கள். மிகச் சாதுர்யமாக பேசுவார்கள். "போற்றுவோர் போற்றட்டும், புழுதிவாரி தூற்றுவோர் தூற்றட்டும், தொடர்ந்து சொல்வேன் ஏற்றதொரு

கருத்தை எமதுள்ளம் வென்றால் எடுத்துரைப்பேன் எவர் வரினும் அஞ்சேன், நில்லேன்'' என்று எத்தனையோ கூட்டங்களில் முழங்கி இருக்கிறார். திரு. காளிமுத்து அவர்களும் திரு. சோமசுந்தரம் அவர்களும் என்னுடைய நண்பர்கள், இப்போது மாண்புமிகு நண்பர்கள். இந்த அமைச்சரவையிலே விரிசல் இருக்கிறது. பூசல் இருக்கிறது என்கின்ற பிரச்சினைக்கு நான் வரவில்லை. அவர்கள் திராவிட முன்னேற்றக் கழகத்தின் பாசறையில் இருந்தவர்கள். அண்ணாவின் தம்பியாக இருந்தவர்கள். ஆனால் இன்றையதினம் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் அமைச்சர்கள். அவர்கள் மாறாமல் இருக்கலாம். திராவிட முன்னேற்றக் கழகத்தின் கொள்கைதான் அவர்கள் கொள்கை. அவர்கள் கொள்கைதான் திராவிட முன்னேற்றக் கழகத்தின் கொள்கை. காரணம் திராவிட முன்னேற்றக் கழகமும், அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகமும் அண்ணாவின் கொள்கையை கடைபிடிப்பவர்கள். அந்தக் கொள்கையை இன்றையதினம் நாங்கள் கைக்கொள்கிறோம், பின்பற்றுகிறோம் என்பதைத்தான் இங்கே நான் குறிப்பிட விரும்புகிறேன். நாவலர் அவர்கள் மறந்திருக்கமாட்டார்கள். 1952-லே திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய செயற்குழு ஒரு தீர்மானம் போட்டது. தமிழர்கள் பாதிக்கப்படுகிறார்கள், பிரஜா உரிமை மறுக்கப்படுகிறது. அதற்காக இந்திய அரசாங்கம் சிலோன் அரசாங்கத்திடம் நியாயம் கேட்க வேண்டும், அதற்காக இந்திய அரசாங்கம் பாடுபடவேண்டும் என்று 1952-ல் ஒரு தீர்மானம் போட்டது திராவிட முன்னேற்றக் கழகம். நம்முடைய அறிஞர் அண்ணா அவர்கள் எழுதியது திராவிட நாடு பத்திரிகையிலே வந்திருக்கிறது. அதை நாம் இன்றும் லைப்ரரியிலே பார்க்கலாம். தொடர்ந்து திராவிட முன்னேற்றக் கழகம் இலங்கையிலே நம்முடைய சொந்தக்காரர்களுக்கு, நம்முடைய சகோதரர்களுக்கு, நம்முடைய உறவினர்களுக்கு நியாயம் வழங்கவேண்டும், அநியாயம் நடக்கக்கூடாது என்று பல போராட்டங்களை நடத்தியிருக்கிறது.

1957-ல், பண்டாரநாயகாவும், ஈழத் தந்தை செல்வா அவர்களும் சேர்ந்து ஒரு ஒப்பந்தத்தைச் செய்தார்கள். அந்த ஒப்பந்தத்தின் ஷரத்துக்கள் என்னவென்றால், தமிழ் பேசக்கூடிய இடங்களுக்கு மாநில அந்தஸ்து கொடுத்து, தமிழர்களுக்கு எல்லாம் உரிமை கொடுத்து, சிங்களவர்களும் தமிழர்களும் சமமாக இருந்து, அந்த நாட்டிலே தனி நாடு கோரிக்கை எல்லாம் இல்லை, மாநில அந்தஸ்து கொடுத்து, தமிழும் சிங்களமும் ஆகிய இரண்டு மொழிகளும் ஆட்சி மொழியாக ஆக்குவது போன்ற பல ஷரத்துக்கள் அடங்கிய ஒப்பந்தத்தை இன்றையதினம் உள்ள ஸ்ரீமாவோ பண்டாரநாயகாவின் கணவரான திரு. பண்டாரநாயகா அவர்களும், ஈழத் தந்தை செல்வா அவர்களும் செய்து கொண்டார்கள். இப்போது இருக்கிற ஜெயவர்த்தனே அவர்கள் அப்போது எதிர்க்கட்சித் தலைவராக இருந்தார். இந்த ஒப்பந்தத்தை அவர்கள் பெரிய அளவிலே எதிர்த்தார்கள். அதோடு மட்டுமல்ல, நான் அதை எதிர்த்து கண்டிக்க [illegible]



மாக ஊர்வலம் செல்வேன் என்று சொன்னார்கள். தமிழர்களுக்கு உரிமைகள் கொடுக்கக்கூடாது. தமிழ் மாநிலம் தனியாக பிரிக்கக்கூடாது, தமிழர்களுக்கு பெடரலிசம், மாநில அந்தஸ்து கொடுக்கக்கூடாது, பிரஜா உரிமை கொடுக்கக்கூடாது என்றார்கள். அதேபோல். தமிழர்களின் தாய் மொழியான தமிழை ஆட்சி மொழியாக அங்கீகரிக்கக் கூடாது என்று போராட்டம் நடத்தினார்கள். போராட்டம் நடத்தியது மட்டுமல்ல, அந்த ஒப்பந்தத்தை ஒரு பெரிய பெட்டியில் வைத்து, இன்றையதினம் யார் யார் ஜெயவர்த்தனேவுக்குத் துணையாக ஆட்சியில் இருக்கிறார்களோ, அவர்கள் எல்லாம் அன்றைக்கு அவரோடு சேர்ந்து, அந்த ஒப்பந்தத்தை ஒருபெட்டியில் வைத்து பண்டாரநாயகர் அவர்களுடைய வீட்டுக்கு முன்பாகச் சென்று கொளுத்தினார்கள். அதை சாம்பலாக்கினார்கள். அதற்குப் பிறகுதான் பண்டாரநாயகா அவர்கள் அந்த ஒப்பந்தத்தை கிழித்து எறிந்தார்கள். இதற்குப் பிறகுதான் பண்டாரநாயகா தொடர்ந்து பிரதமராக இருப்பார்களேயானால் தமிழர்களுக்கு ஓரளவிற்கு நியாயம் செய்வார். உரிமைகளைக் கொடுத்து விடுவார் என்று நினைத்துத்தான் அந்த சூழ்நிலையிலேதான் பண்டாரநாயகா அவர்கள் கொலை செய்யப்பட்டார்கள். இதுதான் வரலாறு. அன்றையதினம் எதிர்க்கட்சித் தலைவராக இருந்த ஜெயவர்த்தனேதான் இன்றையதினம் இலங்கையின் அதிபராக இருக்கிறார்கள். நான் கேட்க விரும்புகிறேன் ஓநாயிடம் ஆடு நியாயம் கேட்பதைப் போல, ஓநாய் ஆட்டுக்குச் சுதந்திரம் கொடுப்பது போல, நீங்கள் இந்த தீர்மானத்தைக் கொண்டு வந்து இருக்கிறீர்கள். இலங்கைத் தமிழர்களுக்கு நியாயம் வழங்குங்கள், அவர்களுக்கு உரிமை வழங்குங்கள் என்றவகையில் தீர்மானம் கொண்டுவருவது எந்த விதத்திலே நியாயம் என்பதை நான் கேட்க விரும்புகிறேன்.

நம்முடைய முதலமைச்சர் அவர்கள், அதேபோல் நம்முடைய அவைத் தலைவர் நாவலர் அவர்கள் இந்தத் தீர்மானத்தை இங்கே கொண்டு வந்திருக்கின்ற சமயத்தில் சொல்லுகிறார்கள், நம்முடைய அமைச்சர் பண்ருட்டி ராமச்சந்திரன் அவர்கள் ஐக்கிய நாட்டு சபையிலே இந்தப் பிரச்னையைப் பற்றி பேசியதற்காக நன்றி தெரிவிக்கின்ற வகையில் ஒரு தீர்மானத்தைக் கொண்டு வந்திருக்கிறார்கள்.

நேற்றையதினம் அருமைச் சகோதரர், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர் சொன்னார்கள். எதை எதை எல்லாம் ஐக்கிய நாட்டுச் சபையிலே அவர்கள் பேசினார்கள். என்பதை மிக விளக்கமாகச் சொன்னார்கள். நான் அந்தப் பிரச்சினைக்குப் போகவில்லை? நான் கேட்பதெல்லாம் நீங்கள், இந்திய அரசாங்கம், அல்லது பாரதப் பிரதமர் அவர்கள் செய்யத் தவறிய ஒரு காரியத்தில், செய்ய முயற்சிக்காத ஒரு காரியத்திற்கு நீங்கள் ஆட்சிப்பொறுப்பிலே இருக்கின்ற காரணத்தாலே நீங்களும் அவர்களுக்கு உறுதுணையாக இருந்து அவர்கள் போட்டவலையிலே சிக்கலிலே நீங்கள் சிக்கி மாட்டிக்கொண்டீர்களோ என்றுதான் திராவிடமுன்னேற்றக்கழகம் அஞ்சுகிறது.

(முற்பகல் 11-00)

ஏனென்றால் என்ன பேசியிருக்கிறார்கள் எங்களுடைய அருமை சகோதரர் பண்ருட்டி ராமச்சந்திரன் அவர்கள்? India does not support any separatist movement என்று பேசியிருக்கிறார். தமிழ் ஈழம் வேண்டும் என்று இன்றையதினம், யாழ்ப்பாணத்திலேயும் மட்டக்குளத்திலேயும், திருகோண மலையிலேயும் உள்ள தமிழர்கள் விரும்புகிறார்கள். பாராளுமன்ற உறுப்பினர்கள் தேர்தல் வந்த சமயத்திலே, அதை ஒரு கண்டிஷனாக வைத்து, தனி ஈழம் தான் எங்களுடைய முடிவான முடிவு அது தான் எங்களுடைய பிரச்னையைத் தீர்க்கும் என்று முடிவெடுத்து, அந்தக் கண்டிஷனில்தான் தேர்ந்தெடுக்கப்பட்டார்கள். ஆனால் எப்போது இந்தப் பிரச்சினைக்கு தீர்வு கேட்டார்கள் தெரியுமா? இலங்கையிலே உலகத் தமிழ் மாநாடு நடந்த சமயத்திலே, அன்றையதினம் இருந்த அரசாங்கம், அந்தத் தமிழ் மாநாட்டிலே கலந்துக் கொள்ள வந்தவர்களையெல்லாம் அடித்து, சுட்டுப் பொசுக்கி 7, 8 பேர்களை பிணமாக ஆக்கியதற்குப் பிறகு, எங்களுடைய தாய் மொழி தமிழ் மொழி, அதைக் காப்பாற்றுவதற்காக நாங்கள் உலகத்தமிழ் மாநாட்டை நடத்துகிறோம் என்றால், அதைக்கூட தடுத்து எங்களைச் சுட்டு வீழ்த்துகிறார்களே என்று குண்டடி பட்டதற்குப் பிறகு, கொலை செய்யப்பட்டதற்குப் பிறகு, ஈழத் தந்தை செல்வா அவர்கள் இனி பொறுத்து இருக்க வேண்டிய அவசியம் இல்லை. தனி நாடு வேண்டும். தனி தமிழ்நாடு இருந்தால்தான் தமிழர்கள் அந்த நாட்டிலே இருக்க முடியும் என்கிற நிலைமைக்குத் தள்ளப்பட்டார்களே தவிர, ஏதோ திராவிட முன்னேற்றக் கழகமோ அல்லது எங்கள் கட்சியினுடைய தலைவர்களோ அங்கே போய் செல்வாவை அழைத்து தனி நாடு கேளுங்கள் என்றோ, அல்லது யாழ்ப்பாணத்திற்கு சென்று பிரச்சாரம் செய்து, அதன் காரணமாக அந்த முடிவை அவர்கள் ஏற்றுக் கொண்டிருக்கிறார்கள் என்றோ நிலைமை இல்லை. They have been driven to the necessity of demanding separation. அதுதான் இருக்கக்கூடிய பரிட்சார்த்தமான உண்மை. இது நியாயமா இல்லையா என்பதை சிந்தித்துப் பார்க்க வேண்டியது விவரம் தெரிந்தவர்களுக்கு கடமையாகும். தனி ஈழத்தைப் பொறுத்தவரையில் எந்தவிதமான சந்தேகமும் கிடையாது. காரணம் அங்கே இருக்கக் கூடிய தமிழ் மக்கள் விரும்புகிறார்கள். அந்த நிலைமைக்கு அவர்கள் துரத்தப்பட்டிருக்கிறார்கள். அப்படி துரத்தப்பட்டதற்குப் பிறகு தனி ஈழம் இருந்தால் தான், யாழ்பாணத்திலே தமிழர்கள் இருக்க முடியும் என்ற நிலைமைக்கு தள்ளப்பட்ட பிறகு அவர்கள் அப்படி முடிவெடுத்தார்கள். அதைக்கூட நாங்கள் உடனடியாக ஏற்றுக் கொள்ளவில்லை.

எப்போது ஏற்றுக் கொண்டோம் என்றால் இலங்கையில் இருக்கக்கூடிய ஆயிரக்கணக்கான தமிழர்கள் அழிக்கப்பட்டதற்குப் பிறகுதான், கோடிக்கணக்கான ரூபாய் மதிப்புள்ள சொத்துக்கள் அழிக்கப்பட்டதற்குப் பிறகுதான், தமிழ் தாய்மார்கள் கற்பழிக்கப்பட்டதற்குப் பிறகுதான், இளம் குழந்தைகள் வெந்தணலில் வீசி எறியப்பட்டதற்குப் பிறகுதான், இரயிலலே போகிற தமிழர்கள் என்றாலும் வெட்டிக்கொல்வதுதான் எங்கள் நோக்கம் என்று சிங்களத்திலே இருக்கிற மிலிடெரி சொல்லிய சமயத்தில்தான், அவர்கள் கேட்பதில் நியாயம் இருக்கிறது, அது தவிர வேறு வழி இல்லை, அவர்கள் கேட்கிற தமிழ் ஈழம் கோரிக்கை நியாயமான கோரிக்கைதான் என்று திராவிட முன்னேற்றக் கழகம் அதை ஏற்றுக்கொண்டது.



அத்தோடு மட்டும் அல்ல. இன்னொன்றையும் நான் சொல்ல விரும்புகிறேன். தமிழ் ஈழம் தான் வேண்டும் என்று எந்தவிதமான சந்தேகத்திற்கும் இடம் இல்லாமல் அவர்கள் விரும்புகிற காரணத்தினால், யாழ்ப்பாணத்திலே இருக்கக்கூடியவர்கள் விரும்புகிற காரணத்தினால் மட்டக்குளத்திலே இருக்கக் கூடியவர்கள் விரும்புகிற காரணத்தினால், திருகோணமலையிலே இருக்கக்கூடியவர்கள் விரும்புகிற காரணத்தினால், இன்னும் சொல்லப்போனால், அந்தப் பிரச்சினையை வைத்து பாராளுமன்றத்திலே உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிற காரணத்தினால் அந்தக் கொள்கை திராவிட முன்னேற்றக் கழகத்திற்கும் ஏற்புடைய கொள்கை என்று சொல்லலாமே தவிர, நாங்கள் அவர்களை அழைத்து தமிழ் ஈழம் கேளுங்கள் என்றோ, அல்லது அதை அவர்கள் ஏற்றுக்கொள்ள வேண்டும் என்றோ சொல்லுகிற அளவுக்கு நாங்கள் இல்லை. ஆனால் அவர்கள் கேட்பது நியாயமா இல்லையா என்று நீங்கள் ஏன் சொல்லக் கூடாது? அவர்கள் பிரச்சினையை அவர்கள் பார்த்துக் கொள்ளட்டும் என்று நம்முடைய நாவலர் அவர்கள் மன்றத்திலே முழங்கினார்கள்.

35 லட்சம் தமிழர்கள் இருக்கிறார்கள் என்றால் அதிலே பத்து லட்சம் பேர்கள் கண்டியிலே, பதலை போன்ற மலைத் தோட்டங்களிலே வீடற்று, குடிஉரிமை சயற்று, மரங்களிலேயும் பொந்துகளிலேயும் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். 2 லட்சம் தோட்டத் தொழிலாளர்கள் இருக்கிறார்கள். இன்னும் ஏறக்குறைய இரண்டு இலட்சம் பேர்கள் கதிர்காமத்திலும் கொழும்பிலும் ஆண்டாண்டுக் காலமாக வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். இன்னும் சொல்லப்போனால் செத்தவர்கள் எல்லாம் நாடற்றவர்களா? செத்தவர்கள் எல்லாம் கள்ளத்தனமாக ஓடத்திலே போய் அங்கே வாழ்ந்திருந்தவர்களா? அல்ல. சிலோன் அரசாங்கமே பார்த்து நூற்றுக் கணக்கான வருஷங்கள் அங்கே அவர்கள் வாழ்ந்த காரணத்தினால், சிட்டிஸனாக இருந்த காரணத்தினால், சிலோன் சிட்டிஸன்ஷிப்ரைட்ஸ் கொடுத்தார்கள். ஆனால் இன்றையதினம் அவர்கள் கொழும்பு நகர வீதிகளிலே சுட்டுப் பொசுக்கப்பட்டிருக்கிறார்கள் என்றால் என்ன காரணம்? இதையெல்லாம் எப்படி அணுக வேண்டும் என்று தங்களுடைய அறிக்கையில் அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் ஏன் திட்டவட்டமாகச் சொல்ல மறுக்கிறது என்று எங்களுக்குத் தெரியவில்லை.

நம்முடைய அருமைச் சகோதரர் பண்ருட்டி இராமச்சந்திரன் அவர்கள் ஐக்கிய நாட்டு சபையிலே போய் பேசியிருக்கிறார்கள். அவர் பேசியது அவருடைய கருத்தை அல்ல. நான் அந்த அளவுக்கு விவரம் தெரிந்தவன். இராமச்சந்திரன் அவர்கள் தன்னுடைய சொந்தக் கருத்தை அங்கே சொல்ல முடியாது. அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய கருத்தையும் சொல்ல முடியாது. ஏனென்றால்,—திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்த நானே இன்றையதினம் அம்மையாருடைய தயவிலே அங்கே போய் ஐக்கிய நாட்டு சபையிலே பேசுகிறேன் என்றால்கூட, அவர்கள் எழுதிக் கொடுத்ததைத்தான் நான் படிக்க முடியுமே தவிர,—இந்திய அரசாங்கத்தினுடைய அதிகாரிகள் என்ன எழுதிக் கொடுக்கிறார்களோ அதைத்தான் நான் படிக்க முடியுமே தவிர,—என்னுடைய கருத்துக்களை அங்கே பேசமுடியாது என்று எனக்குத் தெரியும்.

ஆனால் அதற்கு நம்முடைய இராமச்சந்திரன் அவர்கள்தானா கிடைத்தார்கள்? தமிழர்களின் இனம் படுகொலை செய்யப்படுகின்ற பிரச்னையில், ஈழத் தமிழர்களுக்கு தமிழ் ஈழம் வேண்டும் என்று விடுதலை கோரிக்கை வைக்கப்படுகின்ற பிரச்சினையில், அந்தக் கோரிக்கை தூக்கி எறியப்படுகின்ற விதத்தில் போய் அங்கே படிப்பதற்கு எங்களுடைய அருமைச் சகோதரர் இராமச்சந்திரன் அவர்கள் தான் கிடைத்தாரா? என்னுடைய அருமை சகோதரர் பண்ருட்டி இராமச்சந்திரன் அவர்களை வேறு வேலைக்கு நீங்கள் அனுப்பியிருக்கக் கூடாதா? அதற்கு அவர்தானா கிடைத்தார்? தமிழ் ஈழம் வேண்டுமென்று இலங்கைத் தமிழர்கள் கேட்கிறார்கள். திரு. அமிர்தலிங்கம் பேசுகிறார்கள், திரு. சிவசிதம்பரம் பேசுகிறார்கள், மற்றவர்கள் எல்லாம் பேசுகிறார்கள். நாவலர் அவர்கள் நேற்றைக்கு முன்தினம் இங்கே பேசினார்கள். இலங்கையிலே உள்ளவர்கள் தமிழ் ஈழம் வேண்டாமென்றா சொன்னார்கள்? ஜெயவர்த்தனே பிரித்துக் கொடுத்தால்கூட எங்களுக்கு தேவையில்லை என்றா சொல்லியிருக்கிறார்கள்? அவர்கள் தமிழ் ஈழம் எங்களுடைய கோரிக்கையல்ல என்று சொல்லிவிட்டார்களா? எத்தனை கூட்டங்களில் எத்தனை இடங்களில் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். "This is our ultimate goal. But we are prepared to consider alternative suggestions." என்பதைத்தானே உள்ளடக்கியது. இன்றையதினம் பாராளுமன்ற உறுப்பினர்கள் பதவி போய்விடும் என்றும் இலங்கை ஒரே நாடு, அதை ஏற்றுக்கொள்ளாவிட்டால் பாராளுமன்ற உறுப்பினர் பதவி போய்விடும் என்று சட்டம் போட்டும்கூட அவர்கள் எங்கள் பதவி போனாலும் பரவாயில்லை, எங்களுக்கு தமிழ் ஈழம் வேண்டுமென்றுதானே சொல்லி அவர்கள் அந்த உறுதிமொழியை எடுக்காமல் இருக்கிறார்கள். இதிலிருந்து என்ன புரிந்து கொள்ள முடிகிறது? அவர்கள் தமிழ் ஈழம் வேண்டாமென்று சொல்கிறார்களா? தமிழ் ஈழம் வேண்டாமென்று மறுக்கிறார்களா? தமிழ் ஈழத்தை விடுதலைப் புலிகள் மட்டுந்தான் வேண்டுமென்று கேட்கிறார்களா? இங்கே சிவசிதம்பரம், அப்பா பிள்ளை, அமிர்தலிங்கம் தமிழ் ஈழம் தேவையில்லை என்று



சொல்லிவிட்டு போகட்டுமே யாழ்பாணத்திற்கு, தெருவிலே அவர்கள் நடைபோடட்டுமே; தமிழ் ஈழம் திராவிட முன்னேற்றக் கழகத்தின் கொள்கையா அவர்கள் தலையில் திணிப்பதற்கு? அது அவர்களே ஏற்றுக்கொண்ட கொள்கை, அவர்களே ஒப்புக்கொண்ட கொள்கை, அதை வைத்துத் தேர்தலில் நின்றார்கள். அதன் காரணமாக பாராளுமன்றத்திற்கு வந்தார்கள். அப்போது திராவிட முன்னேற்றக் கழகம் தமிழ் ஈழம் வேண்டுமென்று உடனடியாக ஏற்றுக்கொள்ளவில்லை. இந்திய வம்சாவழியினருக்கு பிரஜா உரிமை கொடுக்கப்பட வேண்டுமென்று கோரக் கூடிய காலம். பிரஜா உரிமை என்றாலும் சிடிஸன்ஷிப் என்றாலும் ஒன்றுதான். அவன் பேசுவது தமிழ். தமிழ் அவன் பேசுகிறான் என்பதால் அவன் கொல்லப்படுகிறான், அவனைச் சேர்ந்தவர்கள் கற்பழிக்கப்படுகிறார்கள் என்ற நிலை வந்ததற்குப் பிறகு தமிழ் இனம் ஒழிக்கப்படவேண்டுமென்ற திட்டத்திலே ஜெயவர்த்தனேயின் ஆட்சி நடைபெறுகிறபோது தமிழ் ஈழம் கோரிக்கை நியாயமானது என்று திராவிட முன்னேற்றக் கழகம் ஏற்றுக்கொண்டதே தவிர வேறல்ல.

அதைத் தான் நான் புரட்சித் தலைவர் அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன். நாமெல்லாம் அண்ணாவினுடைய தம்பிகள் அல்லவா? அண்ணாவினுடைய கொள்கைகளைப் பின்பற்றவேண்டுமல்லவா? அதிலே சில தம்பிகள் மட்டும் பின்பற்றி நீங்கள் எல்லாம்—பெரும்பான்மையானவர்கள்—பின்பற்றாமல் இருந்தால் அண்ணா அவர்களுக்கு செய்யக்கூடிய நல்ல காரியமாக இருக்காது. ஆகவே நான் நம்முடைய முதலமைச்சர் அவர்களை பணிந்து கேட்டுக்கொள்கிறேன். நீங்கள் அண்ணாவின் கொள்கையை ஏற்றுக்கொள்ளுங்கள். அண்ணா அவர்கள் என்ன சொன்னார்கள்? அவர்கள் 1961-இல் ஐக்கிய நாடுகள் சபைக்கு கேபிள் அனுப்பினார்கள். நான் நினைக்கிறேன், நம்முடைய முதலமைச்சர் அவர்களும் நாவலர் அவர்களும் இருந்துதான் வழி நடத்தியிருப்பார்கள், நாங்கள் எல்லாம், எங்களைப்போன்றவர்கள் எல்லாம் அன்றைக்கு சிறுவர்களாக இருந்து இருக்கக் கூடும். ஐக்கிய நாடுகள் சபைக்கு நம்முடைய அண்ணா அவர்கள் மிக நீண்ட தந்தியைக் கொடுத்தார்கள். ஒரு நாட்டினுடைய தனி உரிமையில் தலையிடலாமா, உள்நாட்டுப் பிரச்சினையிலே தலையிடலாமா, அதற்கு உரிமை இருக்கிறதா, ஐக்கிய நாடுகள் சபையினுடைய சார்ட்டர் ஆப் டிமாண்டிலே இருக்கிறதா என்று அதைப்பற்றியெல்லாம் கவலைப்படாமல் அறிஞர் அண்ணா அவர்கள் என்ன செய்தார்களோ, அதைத்தான் நாம் பின்பற்ற வேண்டும். அதுதான் தமிழர்களுக்கு நாம் செய்யக் கூடிய நன்றிக் கடனாகும், அப்போது தான் நாம் அண்ணா அவர்களின் வழி வந்தவர்கள் என்று பெருமைபட பூரித்து சொல்லிக்கொள்ள உரிமை படைத்தவர்கள் ஆவோம். அண்ணா அவர்கள் ஐக்கிய நாடுகள் சபையின் செக்ரட்டரி ஜெனரலுக்கு—9–5–1961 சென்னை வால்டாக்ஸ் சாலையிலிருந்து மாபெரும் கண்டன ஊர்வலம் கிளம்பிற்று அந்த ஊர்வலத்திலே அண்ணா அவர்கள் இந்தியப் பிரதமர்முதல் இலங்கைப் பிரதமர் வரை எல்லோருக்கும் ஒரு வேண்டுகோள் மக்கள் சார்பில் அனுப்பினார்கள். அன்று

அண்ணா சொன்னது இன்றைக்கும் பொருத்தமாக இருக்கும். என்ன அனுப்பினார்கள்? நான் அதைப் படித்தால் மிக நீண்டதாக இருக்கும். நான் அதைச் சொல்லவேண்டியதில்லை. முதலமைச்சர் அவர்கள் இந்தப் பத்திரிகையைப் படித்திருப்பார்கள். கடைகளிலே விற்கக்கூடிய பத்திரிகை தான், சுருக்கமாக நான் அதைச் சொல்ல விரும்புகிறேன். அவர் சொன்னது, இலங்கை வாழ் தமிழர்கள் தங்களுக்கே உரிய கலை, பண்பாடு, கலாச்சாரம் ஆகியவற்றைக்கொண்ட சிறுபான்மை நாட்டினம் என்பதுதான். It is a Nation என்பதுதான் அது. முஸ்லீம்கள் அதைத்தான் சொன்னார்கள். பாகிஸ்தானைக் கேட்ட சமயத்தில் Muslim is a Nation என்று சொன்னார்கள். நாங்கள் தேசியவாதிகள், எங்கள் கலை, கலாச்சாரம், மொழி இவைகள் எல்லாம் மாறுபட்டவை. ஆகவே இந்தியாவோடு சேர்ந்து இருக்க நியாயமில்லை. ஆகவே எங்களுக்கு பாகிஸ்தான் வேண்டும், பாகிஸ்தான் ஜிந்தாபாத் என்று கேட்டார்கள். அதைத்தான் அறிஞர் அண்ணா அவர்கள் அன்றையதினமே சொன்னார்கள், Tamil is a Nation என்று. இலங்கையிலே இருக்கக்கூடிய தமிழர்கள் ஒரு தனி இனத்தைச் சேர்ந்தவர்கள், சிங்களர்கள் தனி இனத்தைச் சேர்ந்தவர்கள்.

(முற்பகல் 11-10)

சிங்களர்களும், தமிழர்களும் அங்கே ஒன்றாக இருந்து இருந்து பார்த்தார்கள். நீண்ட கால சரித்திரத்தை நீங்கள் பார்த்தால் அந்தச் சரித்திரத்தில் தமிழர்கள் தனியாக இருந்தார்கள், தமிழ் மன்னன் கடைசியாக சிறைப்பிடிக்கப்பட்டு வேலூர் சிறையில் செத்தான் என்றுதான் இன்றையதினம் சரித்திரம் இருக்கிறது. சிங்களர்களும் தமிழர்களும் என்றையதினமும் ஒன்றாக இருந்ததாக சரித்திரம் கிடையாது.

டச்சுக்காரன் யாழ்ப்பாணத்தையும், திரிகோணமலையையும் கைப்பற்றிய பிறகு பிரிட்டீஷ்காரன் சிங்களத்தை கைப்பற்றிய பிறகு அவர்கள் அதை விட்டுபோன பிறகு தொல்லைகள் வந்தன. அதன் காரணமாக அவர்கள் இன்றையதினம் வேதனை அடைந்து கொண்டிருக்கிறார்கள். அதற்குப் பிறகு நம் போன்றவர்கள் அந்தப் பிரச்சனையிலே ஈடுபட வேண்டியவர்களாக இருக்கிறோம். இந்தத் தீர்மானத்திலே அறிஞர் அண்ணா அவர்கள் என்ன சொல்கிறார்கள். Tamil is the minority nation என்று சொல்கிறார்கள். அதிலே தலையிடலாமா, அது வேற்று நாடு அதன் விவகாரதில் தலையிடுவது நியாயம் இல்லை. ஒரு தனி நாடு பிரச்சனையிலே மத்திய அரசு தலையிடுவது நியாயம் அல்ல அல்லது ஒரு நாட்டு அரசாங்கத்திலே இன்னொரு நாட்டு உள்விவகாரத்திலே தலையிடலாமா என்று இன்றைக்கு பேசுவது அல்ல. அன்றையதினம் பேசிய சமயத்தில்தான் அறிஞர் அண்ணா அவர்கள் ஐக்கிய நாட்டுசபைக்கு அனுப்பிய தந்தியிலே சொன்னார்கள், ஒரு சிறுபான்மை நாட்டின் மைனாரட்டி நேஷனுக்கு எதிரான இனவெறி கொலை கொடுங்கோன்மையை தகர்க்கி ஒடுக்கலாம் என்கிற தனி மனித உரிமைகளுக்கு எதிரான



அறைகூவல் என்று ஐக்கிய நாடுகள் மன்றம், தனிப்பட்ட பல நாடுகளும் அப்போதைக்கப்போது தெளிவாக காட்டியிருக்கிறது. எந்த நாடும் தலையிடவோ மற்ற வழிகளைச் சொல்லவோ, ஆலோசனைகளைக்கூறவோ மனிதாபிமான ஜனநாயக முறையைப் பின்பற்றி இந்தப் பிரச்சனையை தீர்க்கவேண்டும் என்று கேட்கவோ உலகத்தில் யாருக்கும் உரிமை இல்லை என்பது போன்ற அறிக்கைகளை இலங்கை அரசு அடிக்கடி வெளியிட்டுக் கொண்டிருக்கிறது என்பதை அன்றையதினம் அண்ணா அவர்கள் சுட்டிக்காட்டி கண்டித்து இருக்கிறார்கள்.

அதோடு மட்டும் அல்ல. அவர்களுடைய தந்தியில் ஒரு வாசகம். இலங்கையிலுள்ள சிறுபான்மைநாட்டினரை மைனாரட்டி நேஷனை, தமிழ் மக்கள் தங்கள் துயரங்களை களைந்து அவர்களுக்கு உரிய சுதந்திரத்தைப் பெற வழி செய்யுங்கள். This is dictated by our Leader.

1961-லே இலங்கையிலுள்ள சிறுபான்மை மக்களுடைய துயரங்களைக் களைந்து அவர்களுடைய சுதந்திரத்திற்கு வழி செய்யுங்கள் என்று ஐக்கிய நாட்டு சபைக்கு அவர்கள் தந்தி அனுப்பியிருக்கிறார்கள் என்றால் அந்தக் கொள்கைகளைக் கொண்டவர்களாகத்தான் நாம் இருக்க வேண்டும், நீங்களும் இருக்க வேண்டும் என்று நான் விரும்புகிறேனே தவிர வேறு ஒன்றும் இல்லை.

ஆனால் இன்றையதினம் நம்முடைய அருமை சகோதரர் பண்ருட்டி இராமச்சந்திரன் அவர்கள் பேசியிருப்பதைப் பற்றி மற்றவர்கள் சொன்னார்கள், நான் அதிகமாகச் சொல்ல விரும்பவில்லை. "In fact even in my intervention, I had made it clear that we do not propose and we do not intend to interfere in the internal affairs of Sri Lanka." நாங்கள் இலங்கையினுடைய உள் விவகாரத்தில் தலையிட விரும்பவில்லை. அதிலே நாங்கள் நுழையவும் விரும்பவில்லை என்று ஆணித்தரமாக கூறியிருக்கிறார்கள். இது உங்களுடைய கொள்கையாக இருக்குமா என்பது எனக்குத் தெரியாது. அதை நீங்கள்தான் விளக்க வேண்டும். ஆனால் அவர் ஐக்கிய நாட்டுச் சபையில் பேசும்போது இந்தியாவின் கொள்கையைப் பிரதிபலிப்பவராக இருக்கிறார்கள். ஒருவேளை இந்திராகாந்தியின் கொள்கையாக இருக்கலாம். அதைச் சொல்வதற்கு நாம் தான் கிடைத்தோமா, வேறு யாரும் கிடைக்கவில்லையா? வடக்கு இருக்கக்கூடியவர்கள் அதை சொல்லியிருக்கக்கூடாதா? தமிழனுடைய உரிமைகளை ஒரு தமிழனை விட்டு பறிப்பதற்கு செய்யக்கூடிய சூழ்ச்சியில் புரட்சித் தலைவர், முதலமைச்சராகிய நீங்கள் இவ்வளவு எளிதில் சிக்கிக் கொண்டீர்களே என்று நான் என்னுடைய வருத்தத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

128-176—8

அடுத்து, உள்நாட்டுப் போர் எல்லாம் வந்துவிடும் என்று சொல்கிறார்கள். நாம் அத்தனை பேரும் திராவிட நாடு தனியாக வேண்டும் என்று கேட்டவர்கள். திராவிட நாடு தனியாக கேட்ட நேரத்தில் தெளிவாகச் சொன்னார்கள் அறிஞர் அண்ணா அவர்கள். திராவிட நாடு வேண்டாம் என்று சொன்னதற்குப் பிறகுதான் அந்த எண்ணமே இல்லாமல் இந்தியா நம்முடைய நாடு, நாம் அத்தனை பேரும் இந்தியர்கள் என்று சொல்வதிலே நமக்கு நிகரானவர்கள் வேறு யாரும் இல்லை என்பதை நான் சொல்ல வேண்டியது இல்லை. மத்திய அரசாங்கத்தில் இருக்கக்கூடிய பல தலைவர்கள் சொல்லியிருக்கிறார்கள். ஆனால் என்ன நடைபெறுகிறது என்பதை என்னால்சொல்லாமல் இருக்கமுடியவில்லை. எனக்குப் பிறகு மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் பேச இருக்கிறார்கள். நான் இந்திராகாந்தி அம்மையாரைப் பற்றி குற்றஞ்சாட்டி குறை சொல்வதாகக் கருதக்கூடாது. யார் இந்த இந்திராகாந்தி அம்மையார் அவர்கள்? கடந்த பாராளுமன்றத் தேர்தலில் நாங்கள் அத்தனை பேரும் ஒன்றாக இருந்து, அவர் பிரதமராக வரவேண்டுமென்று — திராவிட முன்னேற்றக் கழகம் — நேருவின் மகளே வா, நிலையான ஆட்சியைத் தருக என்ற வாசகத்தோடு கடற்கரையிலே பெரிய விழா எடுத்து, அவர்கள் பிரதம மந்திரியாக வரவேண்டுமென்று கூக்குரல் எழுப்பியவர்கள்; பாராளுமன்றத்திற்கு அவர்கள் வரவேண்டுமென்று பாடுபட்டவர்கள். பிரதம மந்திரியாக வரவேண்டுமென்று பாடுபட்டவர்கள் நாங்கள். தேர்தல் முடிந்ததற்குப் பிறகு டெல்லியிலே இருக்கக்கூடிய சென்ட்ரல் ஹாலிலே மாண்புமிகு பிரதம மந்திரி அவர்கள், தன்னை பிரதம மந்திரியாக ஆக்குவதற்கு முக்கிய காரணமாக இருந்தவர்களில், வித்தகர்களாக இருந்தவர்களில் ஒருவராக கலைஞர் இருந்தார் என்று அவரை முன்வரிசையிலே பக்கத்திலே வைத்துக் கொண்டு என்னுடைய சகோதரர் கருணாநிதி அவர்கள், என்னுடைய கட்சியிலே இருக்கிற மற்றவர்கள் உதவி செய்யாத நேரத்திலே, நான் பல தொல்லைகள் அவருக்குக் கொடுத்திருந்தாலும் அதையெல்லாம் மறந்துவிட்டு என்னைப் பிரதமராக ஆக்குவதற்கு முயற்சி செய்தவர்தான் இங்கே பக்கத்திலே உட்கார்ந்திருக்கிற கலைஞர் என்று அவர்கள் பெருமையோடு சொன்னார்களே, அந்த உரிமை எனக்கு இருக்கிறது. ஆகையினால்தான் நாங்கள் சொல்வதெல்லாம், பிரதமர் அவர்கள் இன்னும் சற்று வேகமாகச் செயலாற்றியிருக்க வேண்டும்; கடமையாற்றியிருக்க வேண்டும். அவர்கள் செயலாற்றாமல் இருந்தது கண்டிக்கத்தக்கது என்றுதான் என்னுடைய அருமை சகோதரர் ரகுமான்கான் அவர்கள் தீர்மானத்தைக் கொடுத்தார்கள்.

நான் நேற்றையதினம் டி.வி.யிலே தேசிய நிகழ்ச்சியைப் பார்த்துக் கொண்டிருந்தேன், தேசிய நிகழ்ச்சியிலே கல்கத்தா தூர்தர்ஷன் கேந்திராவிலே இருந்து ஒன்றை ஒளிபரப்பிக்





கொண்டிருந்தார்கள். அந்த ஒளிபரப்பிலே ஒரு பாடல் வருகிறது. பாகிஸ்தான் பிரிவதற்கு முன்னாலே, பாகிஸ்தானிலே பிறந்த கவிஞர் இக்பால் பாடிய பாடலை ஒளி பரப்பினார்கள்.

''சாரே சாஹசே அச்சா,
ஹிந்துஸ்தான் ஹமாரா, ஹமாரா'' என்று அந்தப் பாடலை 50 பெண்களும் ஆண்களும் சேர்ந்து பாடுகிறார்கள். உலகத்திலே இருக்கக்கூடிய நாடுகளிலே எங்களுடைய பாரதம் தான் — இந்துஸ்தான் மிகச் சிறந்த நாடு; நமது இந்தியர்கள் தான் சிறந்தவர்கள் என்று அவர்கள் சொல்கின்றார்கள். அந்த உணர்வு நமக்கு இருக்க வேண்டுமென்பதிலே மாறுபட்ட கருத்து கிடையாது. அந்த உணர்வு நமக்கு இருக்க வேண்டும். அந்த உணர்வு நமக்கு இருக்க வேண்டுமா? இருக்க வைப்பதற்கு நம்முடைய பாரதப் பிரதமர் அவர்கள் முயற்சி செய்கிறார்களா என்பதைத்தான் இங்கே இருக்கக்கூடிய நாம் அத்தனை பேரும் எண்ணிப்பார்க்கவேண்டும்.

நான் மற்ற நாடுகளுக்குச் செல்லவில்லை, பாலஸ்தீன நாடுகளுக்கு பரிவு உணர்வோடு இந்திரா காந்தி அவர்கள் பரிந்து பேசுவது பாராட்டப்பட வேண்டியது. பாச உணர்வோடு செயலாற்றுகின்றார்கள், பாராட்டப்பட வேண்டியது. அங்கே இஸ்ரேல் மக்கள், முஸ்லீம்களை கொலை செய்கிறார்கள் என்றால், மனித உரிமைகள் என்கின்ற சமயத்தில், மனிதர்களைக் காப்பாற்ற வேண்டுமென்ற நிலையில், அவர்களுக்கு தனி நாடு வேண்டுமென்று கோரிக்கை விடுகின்ற சமயத்தில், நாம் அத்தனை பேரும் ஒன்றாக இருக்கிறோம். அதேபோலத்தான், மற்ற மற்ற நிகழ்ச்சிகள். என்ன நடைபெற்றது வங்காள தேசத்தில்? கிழக்கு பாகிஸ்தானில், வங்க பந்து அன்றையதினம் தனி நாடு வேண்டுமென்று முதலிலே கோரிக்கை விடவில்லை. அவர் சில உரிமைகளைக் கேட்கிறார், மறுக்கப்படுகிறது. மறுக்கப்படுவதோடு மட்டுமல்ல, பாகிஸ்தான் இராணுவம் வங்காளிகளைப் பழி வாங்குகிறது. அவர்கள் பேசுவது உருது. இவர்கள் பேசுவது வங்காளம். அந்த மொழித் தகராறிலே ஈடுபட்டதன் விளைவாக வங்காள தேசத்திலே பெரும் படுகொலைகள் நடைபெற்றன. அந்தப் படுகொலைகள் நடைபெற்ற சமயத்திலே, இந்திய நாட்டிலே என்ன என்ன நடைபெற்றன? என்ன என்ன நிகழ்ச்சிகள் எல்லாம் நடைபெற்றன என்பதை நான் இங்கே சொல்லிக்கொள்ள விரும்பவில்லை.

நான் பாடத்திலே படித்திருக்கிறேன். எங்கே சாதுக்கள் தாக்கப்படுகிறார்களோ, எங்கே சாதுக்களும் தரித்திரர்களும் தாக்கப்படுகிறார்களோ அங்கே எல்லாம் இறைவன் உருவெடுத்து வருவான் என்று கீதையிலே சொல்லியிருக்கிறார்கள். நான் அதைத்தான் ஞாபகப்படுத்த விரும்புகிறேன்.

''பவித்ராணாய சாதுனாம்
விநாசாயச துஷ்க்ருதாம்,
தர்ம சம்ஸ்தாபனார்தாய,
சம்பவாமி யுகே யுகே''

நான் கேட்பதெல்லாம் வங்காள தேசத்திலே இருக்கக்கூடிய வங்காளிகள் அல்லல்படுகின்ற சமயத்தில், பாகிஸ்தான் வெறியர்களால் சூறையாடப்பட்ட சமயத்தில் நாம் எல்லாம் ஒன்றாக இருந்து பிரதமருக்கு ஒத்துழைப்பு கொடுத்திருக்கிறோமே, அவர்களுக்காக வந்த ஒரு எண்ணத்தினுடைய அடிப்படையில், பல்லாயிரக்கணக்கான, கோடிக்கணக்கான ரூபாய்களைச் செலவழித்தாலும் பரவாயில்லை, இந்திய இராணுவத்திலே பலபேர்கள் செத்தாலும் பரவாயில்லை, தர்மத்திற்காக, நியாயத்திற்காக நான் ஈடுபடுகின்றேன், அந்த யுத்தத்தில் இறங்குகின்றேன் என்று அவர்கள் ஈடுபட்டார்களே, அது யுகம், யுகம் என்றால், இன்னொரு யுகம் வந்தால்தான் அவர்கள் ஈடுபடுவார்களோ? இலங்கை விஷயத்திலே ஈடுபட்டார்களா? அங்கே காட்டிய பரிவுணர்வை, அங்கே காட்டிய தீவிரத்தினை இலங்கையிலே ஆயிரக்கணக்கானவர்கள் மடிந்த சமயத்திலும், கொலை செய்யப்பட்ட சமயத்திலேயும் காட்டவில்லையே? அந்தப் பரிவுணர்வு அம்மையாருக்கு வரவில்லையே. அதைச் செய்யவில்லையேயென்றுதான் நான் ஆதங்கப்படுகிறேன், கோபப்படவில்லை. இங்கே எல்லாம் இந்தியர்கள்தான். நம்முடைய காலிலே ஒரு காயம் ஏற்பட்டுவிட்டால் கண்ணிலே இருந்து கண்ணீர் வருகிறது. கால்தானே, அது போனால் போகட்டும் என்று இருப்பதில்லை. மலை வாழ் தமிழர்கள், யாழ்ப்பாண தமிழர்கள், கொழும்புத் தமிழர்கள் என்று அவர்களே தீர்த்துக்கொள்ளட்டும் என்று நாவலர் பாணியிலே நாம் பேசுவது நியாயமா என்று நான் கேட்கிறேன்.

(முற்பகல் 11-20)

இன்றையதினம் மலையிலே இருக்கிற தமிழர்கள் அல்லது கொழும்புவிலே இருக்கிற தமிழர்கள் என்ன ஆவது? என்றெல்லாம் மனக்குறைகளைக் கேட்கிறோம். இந்தியாவிலிருந்து பாகிஸ்தான் பிரிவதற்கு முன்னதாக இதைத்தான் கேட்டார்கள், பாகிஸ்தானில் இருக்கிற இந்துக்கள் என்ன ஆவது? இந்தியாவில் இருக்கிற முஸ்லீம்கள் என்ன ஆவது? இதைத்தான் பிரிட்டிஷ்காரன் கேட்டான். தனி நாடு பிரியக் கூடாது என்று ஜெயவர்தனே இன்று பேசுகின்றார். ஜெயவர்தனே பேசுவதையே நாம் பேசினால் என்ன நியாயம்? தனி நாடு கூடாது என்று ஜெயவர்தனே பேசுகின்றார் என்றால் ஜெயவர்தனே பேசுவதையே நாமும் நம்முடைய கொள்கையாக ஏற்றுக்கொள்ள வேண்டாம். அது நமக்கு ஒத்து வராது என்று தலைவர் அவர்களை, நாவலர் அவர்களை, மற்றுமுள்ளவர்களை கேட்டுக்கொள்ளவிரும்புகிறேன். உங்களுக்கென்று ஒரு நிலை இருக்கலாம். இந்தப் பிரசினைகளை எப்படி நீங்கள் அணுக வேண்டும்? எப்படி இதை எடுத்துச் செல்ல வேண்டும் என்பதிலே சில போக்குகள் அரசாங்கத்திலே இருப்பதால் உங்களுக்கும் சில கட்டுப்பாடுகள் இருக்கலாம். கட்டுப்பாடுகள் இருக்க வேண்டும். அதிலே இருக்கக் கூடிய இரகசியங்களை உங்களால் சொல்ல முடியாது. ஆனால் இதுதான் கொள்கையென்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்



தனிப்பட்ட முறையிலே, அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய தலைவர் என்ற முறையிலே சொல்ல வேண்டுமென்று என்னுடைய கருத்தைச் சொல்கிறேன். இங்கே இலங்கையிலே தமிழ் ஈழம் உண்டானால்தான் பிரச்னைகள் தீரும். இல்லையென்றால் 1947-ல் தொடங்கி, 52-லிருந்து, 61-லிருந்து, 72-லிருந்து, 77-லிருந்து, 80-லிருந்து, இருந்து வந்த பிரச்னை இன்றையதினம் கட்டுமீறிப் போய் தமிழர்கள் கொலை செய்யப்படுகிறார்கள். இதற்கு ஒரு பர்மனென்ட் நிவாரணம் வேண்டுமென்றால் இதுதான் என்னுடைய நிலை என்று இரகசியமாகவாவது சொல்லியிருக்கிறீர்களா? நீங்கள் முதலமைச்சர் என்ற முறையிலே சொல்ல வேண்டியதில்லை, தனிப்பட்ட முறையிலாவது நீங்கள் சொல்லியிருக்கிறீர்களா? பிரதமர் அவர்கள் நான்—இண்டர்பிரன்ஸ், நான் தலையிட மாட்டேன் என்று சொன்னால் அதற்கெல்லாம் தஞ்சாவூர் பொம்மையைப்போல தலையை ஆட்டிக் கொண்டுதான் இருக்க வேண்டுமா? அதைத் தான் கேட்க விரும்புகிறேன். அந்த தலையிடாத கொள்கையை ஏன் நாம் வங்காளத்திலே அமல்படுத்தவில்லை? அங்கே வங்கபந்து; யாழ்ப்பாணத்தில் தமிழர்கள் செத்தால் அவர்கள் நாயா? அங்கே இருக்கக்கூடியவர்கள் மனிதர்கள் இல்லையா? நம்முடைய உற்றார் உறவினர் இல்லையா? இன்றைக்கு தமிழர்கள் அங்கே வதைக்கப்படுகிறார்கள். எங்கேயாவது நடக்கக் கூடிய காரியமா? வெளிக்கடைச் சிறையிலே குட்டிமணியும், ஜெகனும் மற்ற 37 பேர்களும் அடைக்கப்பட்டிருக்கிறார்கள். குட்டிமணியும், ஜெகனும் அங்கே அடைக்கப்பட்டு அவர்களுக்கு தூக்கு தண்டனை வழங்கப்பட்ட சமயங்களிலே கூட குட்டிமணியும், ஜெகனும் சொன்னதாக பத்திரிகையிலே வந்திருக்கிறது. நான் பார்த்தேன். எங்களுக்கு தூக்கு தண்டனை கொடுக்கட்டும், அதற்காக நாங்கள் கவலைப்படவில்லை. எங்களுக்காக வழக்காடியதற்காக உங்களுக்கு நன்றி என்று வக்கீல்களுக்கு நன்றியைச் சொல்லியிருக்கிறார்கள். நாங்கள் சாவதைப் பற்றி கவலைப்படவில்லை. ஆனால் ஒரே ஒரு வேண்டுகோள் என்று அரசாங்கத்திற்கு வேண்டுகோள் விடுத்திருக்கிறார்கள். நாங்கள் செத்தால் எங்களை தூக்கிலே போட்ட பிறகு எங்களுடைய கண்களை எடுத்து இலங்கையிலே இருக்கக் கூடிய கண்ணில்லாத தமிழனுடைய கண்ணிலே எங்கள் கண்களைப் பொருத்துங்கள். நாங்கள் தூக்கிலே செத்தாலும் எங்களுடைய கண்கள் மூலமாக தமிழ் ஈழத்தைப் பார்ப்போம் என்றார்கள். அந்த குட்டிமணி, ஜெகன் போன்றவர்களை, சிறைச்சாலையில் இருக்கக்கூடியவர்களை வெளிக்கடையில் இருக்கிற, மிகப்பெரிய செக்யூரிட்டி பிரிசன் என்று சொல்லப்படுகிற அந்த சிறைசாலையில் ஜூலை 26 ஆம் தேதி எப்படி கொலை செய்யப்பட்டார்கள் என்று பத்திரிகையிலே வருகிறது. தமிழ்நாட்டிலே இருக்கிற ஹிந்துப் பத்திரிகையிலே வந்தது. மான்செஸ்டர் கார்டியன் அல்லது லண்டனிலிருந்து வந்த பத்திரிகையிலிருந்து வந்ததை எடுத்துப் போட்டிருந்தார்கள், நான் பார்த்தேன். அங்கே இருக்கிறவர்கள் குட்டிமணியையும், ஜெகனையும் அழைக்கிறார்கள். மண்டியிடச் சொல்கிறார்கள். சொன்னதோடு மட்டுமல்ல, அவர்கள் நாக்கை இழுத்து அறுக்கிறார்கள்,

அதிலிருந்து வருகிற ரத்தத்தை பாட்டிலிலே அடைக்கிறார்கள். அதில் தண்ணீரை கலக்குகிறார்கள். அவர்களுடைய கண்களைத் தோண்டி காலில் போட்டு நசுக்குகிறார்கள். இந்த கண்தான் ஈழத் தமிழகத்தைப் பார்க்கப் போகிறது? என்று கேட்கிறார்கள். அதோடு மட்டுமல்ல, பாட்டிலிலே எடுத்த ரத்தத்தை தண்ணீரைக் கலந்து, ஜெயவேவா, ஜெயவேவா என்று சிங்கள மொழியில் கோஷம் போட்டுக் கொண் தண்ணீரைப் போல தமிழனுடைய ரத்தத்தைக் குடிக்கிறார்கள் என்றால் மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்களைக் கேட்கிறேன், இன்னுமா அமைதி காக்க வேண்டும்? அதை உடனடியாக தடுத்து நிறுத்த வேண்டுமென்று அவர்களுக்கு ஏன் எண்ணம் வரவில்லை? சுட்டிக்காட்ட வேண்டாமா? என்றையதினம் அவர்கள் சுட்டிக்காட்டினார்கள்? நாம் அத்தனை பேரும் சேர்ந்து தேர் இழுக்கிறோம். அங்கே இருக்கக்கூடிய மலைவாழ் தமிழர்கள், யாழ்ப்பாணத் தமிழர்கள், கொழும்புத் தமிழர்கள் அத்தனை பேருக்கும் நல்வாழ்வு கிடைக்க வேண்டும். வேலை வாய்ப்புகள் கிடைக்க வேண்டும். அவர்களுடைய பிரச்னைகள் தீர்த்து வைக்கப்பட வேண்டும். அதற்காக நாம் அத்தனை பேரும்சேர்ந்து ஒரு தேர் இழுக்கிறோம். நீங்கள் ஒரு வடத்தைப் பிடித்து இழுக்கிறீர்கள், நாங்கள் ஒரு வடத்தைப் பிடித்திழுக்கிறோம். இரண்டு பேரும் ஒரே பக்கத்தில் வடங்களைப் பிடித்து இழுக்க வேண்டுமே தவிர நீங்கள் எதிர்ப்பக்கத்தில் பிடித்திழுத்தால் அல்லது குறுக்கே பிடித்திழுத்தால் தேர் போகுமா? அப்படி இழுத்தால் பேர் போகாது.

அண்ணாவின் கொள்கைகளையும் திட்டங்களையும் நாங்கள் சொல்கிறோம். அண்ணா அவர்கள் எதைச் செய்ய வேண்டுமென்று சொல்வார்களோ அதைத்தான் திராவிட முன்னேற்றக் கழகம் சொல்கிறது. திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சியில் இல்லாத காரணத்தால்தான் இதைச் சொல்கிறது என்பது அல்ல, திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சியிலே இருந்தாலும் இதைத் தான் நாங்கள் சொல்லியிருப்போம். தைத்தான் நாங்கள் சொல்கிறோம். அந்தத் துணிவு உங்களுக்கும் வர வேண்டுமென்று தான் கேட்டுக்கொள்கிறேன்.

இன்னொன்றையும் சொல்ல விரும்புகிறேன். அருமைத் தலைவர் திரு. நெடுமாறன் அவர்கள் நெடும் பயணம் சென்றார்கள். ஆனால் அன்றைக்கு என்ன நடந்தது? அவ்வாறு அவர் சென்றதைப் பற்றி பாராட்டக்கூட வேண்டாம் அல்லது ஐக்கிய நாடுகள் அவைக்கு நாங்கள் கோடிக்கணக்கான கையெழுத்துக்களை அனுப்பியிருக்கிறோமே, அதற்காக நன்றி கூடச் சொல்ல வேண்டாம். ஆனால் அவைகளைப்பற்றி கிண்டல் செய்யாமல் இருக்கக் கூடாதா? நம்மை நாமே கத்தியால் குத்திக்கொள்ள வேண்டுமா? நெடுமாறன் சென்ற நெடும்பயணம் பிசுபிசுத்துப் போய்விட்டது என்றும், ஒட்டைப் படகு என்றும், இரண்டு பேர்கள் ஏறினார்கள் என்றும், ஒரு பர்லாங் தூரம்கூடப் போக முடியவில்லை, அவர்களைக் காப்பாற்றுவதற்குத்தான் செல்லவேண்டி இருந்தது என்றும் கூறி நம்மை நாமே ஒருவர் காலை ஒருவர் இந்தப் பிரச்னையிலே இழுத்துக் கொள்ளலாமா என்றுதான் கேட்க விரும்புகிறேன்.



வேறு வேறு பிரச்னைகளிலே வேண்டுமானால் நாம் அவ்வாறு இழுத்துக் கொள்ளலாம், ஆனால் இந்தப் பிரச்னையிலே அப்படி இழுத்துக் கொள்ளலாமா? ஆகவேதான் சொல்கிறேன், இதில் உங்களுக்கு தெளிவான திட்டவட்டமான ஒரு நிலை இல்லை. நீங்கள் எதற்காகவோ அஞ்சுகிறீர்கள். எதிலேயோ நீங்கள் சிக்கி இருக்கிறீர்களோ என்னவோ தெரியவில்லை. நீங்கள் அஞ்சத் தேவையில்லை. நாம் அண்ணாவின் தம்பிகள் அல்லவா? ஏன். நாம் அஞ்ச வேண்டும்? அப்பொழுதெல்லாம் நாவலர் அவர்கள் திருப்பித் திருப்பிச் சொல்வார்கள், இப்பொழுது சொல்வார்களோ என்னவோ தெரியவில்லை. அவர்கள் சொல்வார்கள், ஏற்றதொரு கருத்து என் உள்ளத்தில் எழுந்தது என்றால் எடுத்துரைப்பேன், எவர்வரினும் அஞ்சேன் என்று. ஆகவேதான் நான் கேட்க விரும்புகிறேன். மத்திய அரசாங்கத்திற்கு நீங்கள் நன்றி வேறு தெரிவித்துப் பாராட்டுகிறீர்களே, அது சரியா?

மத்திய அரசாங்கத்தில் என்ன செய்து விட்டார்கள்? 3,000 பேர்கள் கொலை செய்யப்பட்டபொழுது அதுபற்றி ஒன்றும் பேசாமல் பார்த்துக்கொண்டு அமைதியாக இருந்து விட்டார்கள். பங்களாதேஷ் பிரச்னையின்பொழுது கண்டனத் தீர்மானம் போடுகிறார்கள், உடனடியாக மிலிடரி அனுப்பப்படுகிறது, கோடிக்கணக்கான ரூபாய் செலவழிக்கப்படுகிறது, வங்காள தேசம் விடுதலை பெற வேண்டுமென்று பாடுபட்டார்கள். ஆகவேதான் நான் சொல்ல விரும்புகிறேன், இந்தப் பிரச்னை வந்தபொழுது பாராளுமன்றத்திலே எங்கள் கட்சியைச் சேர்ந்த உறுப்பினர்கள் — இங்கே சட்டமன்றம் கூடவில்லையென்றாலும் கூட — தினம் தினம் இராஜ்ய சபாவிலும், லோக்சபாவிலும் கால் அட்டென்ஷன் நோட்டீஸ்களைக் கொடுத்து, அட்ஜெர்ன் மெண்ட் மோஷன்களைக் கொடுத்து சொல்லிய காரணத்தால் ஒரு நிலைமைக்கு வந்திருக்கிறது என்று எங்களைப் போன்றவர்கள் கருதுகிறோம்.

திராவிட முன்னேற்றக் கழகம் விரும்பியதெல்லாம், பாரதப் பிரதமர் ஒரு கண்டனத்தைத் தெரிவித்திருந்தால், ஒரு அல்டிமேட்டம் கொடுத்திருந்தால் அது பெரிய தப்பு இல்லை என்பதாகும். சுண்டைக்காய் நாடாக ஒன்று இருக்கிறது. சாதாரணமாக கிராமத்திலே பார்த்தால்கூடத் தெரியும். ஒரு அப்பாவிப் பெண்ணிடம் ஒருவன் தகராறு செய்கிறான் என்றால் அங்கே இருப்பவர்கள் என்ன சொல்ல வேண்டும்? அவனைப் பார்த்து, "நீ சரியாக நடந்து கொள், இல்லையென்றால் உதை வாங்குவாய்" என்று சொன்னால் நிலைமை வேறு. அதைப் போல் பெரிய நாடாகிய இந்தியா இந்தப் பிரச்னையிலே தலையிட வேண்டுமென்றுகூடச் சொல்லவில்லை; அல்லது பட்டாளத்தை அனுப்பி இலங்கையைக் கபளீகரம் செய்து ஆக்கிரமிக்க வேண்டுமென்ற கருத்தைக்கூட திராவிட முன்னேற்றக் கழகம் சொல்லவில்லை. ஆனால் பிரச்னையைத் தீர்ப்பதற்கு, "நீங்கள் இந்தத் தேதிக்குள் இந்தப் பிரச்னையைத் தீர்க்க வேண்டும்; கொலைவெறியைத் தடுத்து நிறுத்த வேண்டும்; இல்லையென்றால் இந்தியாவிலிருந்து பட்டாளம் வரும் சூழ்நிலை

ஏற்படும் அல்லது கடுமையான நடவடிக்கைகளை எடுக்க வேண்டி
வரும்'' என்று சூசகமாகவாவது பாரதப் பிரதமர் மதிப்பிற்குரிய
இந்திராகாந்தி அம்மையார் அவர்கள் பார்லிமெண்டிலே
சொல்லியிருந்தால் நிலைமை இவ்வளவுக்கு மோசமாக
ஆகியிருக்காது என்பதைத்தான் சொல்ல விரும்புகிறேன். ஒரு
காரியத்தைக்கூடச் செய்யாத ஒரு பிரதமருக்கு நன்றி வேறு
தேவையா என்றுதான் என்னைப் போன்றவர்கள் கேட்க
விரும்புகிறோம்.

எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் இன்றைக்கு நீண்டதொரு
விளக்கம் சொல்லக்கூடும். நான் கேட்கிறேன், ஐக்கிய நாடுகள்
அவைக்கு நம்முடைய பாரதப் பிரதமர் அவர்கள் சென்றார்கள்.
அங்கு அவர்கள் பேசுகிற நேரத்தில் இலங்கைப் பிரச்னையைப்
பற்றிச் சொல்லியிருக்கக் கூடாதா? அருமைச் சகோதரர் திரு.
நெடுமாறன் அவர்கள் சொன்னார்களே, டெல்லி செங்
கோட்டையில் நம்முடைய பிரதமர் அவர்கள் பேசும்பொழுது
இலங்கையில் நடக்கின்ற இனப் படுகொலையைப் பார்த்துக்
கொண்டு சும்மா இருக்க முடியாது, கண்டிக்கிறேன் என்று
சொன்னதாக. இதை பாராளுமன்றத்திலே பிரதமர் அவர்கள்
சொல்லியிருக்க வேண்டும். ஆனால் அங்கே சொல்லவில்லை.
எல்லோரும் செத்ததற்குப் பிறகு, தமிழர்களின் சொத்துக்கள்
சூறையாடப்பட்ட பிறகு ஆகஸ்ட் 15 ஆம் தேதி பேசியதை
முன்பே பேசியிருக்கக் கூடாதா?

(முற்பகல் 11-30)

ஐக்கிய நாடுகள் அவையிலே மற்ற நாடுகளைப்பற்றியெல்லாம்
பிரதமர் அவர்கள் பேசுகிறார்கள். அமெரிக்க வல்லரசு செய்யக்
கூடிய காரியங்களைப் பற்றியெல்லாம் பேசுகிறார்கள்.
கூட்டு சேரா நாடுகளினுடைய தலைவி என்ற அளவிலே
இருக்கின்ற பிரதமர் அவர்களுக்கு நான் சொல்லிக்கொள்கிறேன்.
அதிலே ஒன்றும் தவறு இல்லை, ஒரே ஒரு வார்த்தை
இந்தியாவிற்குப் பக்கத்திலே உள்ள நாடான இலங்கையிலே
நடைபெறுவது பற்றி கூறி இருக்கலாம் அல்லவா? இப்படிப்பட்ட
நிகழ்ச்சிகள் இனிமேல் நடைபெறாமல் இருக்கவேண்டும்,
அதற்குரிய நடவடிக்கைகளை அந்த அராசங்கம் எடுக்கவேண்டும்
என்பது மட்டுமல்ல, எடுக்கத் தவறி விட்டார்கள் என்ற
அளவுக்காவது அவர்கள் சொல்லி இருப்பார்களேயானால்
செத்தவர்களின் குடும்பத்திற்கு அது அனுதாபம் சொல்கின்ற
அளவிலாவது இருந்திருக்கும். அதைக்கூடச் சொல்லாமல் ஒரு
பாரதப் பிரதமர் இருக்கும்போது, அதைக்கூடக் கண்டிக்காத
ஒரு பிரதமர் இருக்கும்போது இதைப்பற்றி நாம் என்ன சொல்ல
வேண்டி இருக்கின்றது. எனவே இலங்கைத் தமிழர்களைப்
பேணிப் பாதுகாத்து அவர்களுக்கு ஒத்தாசை செய்யவேண்டுமே
தவிர அந்தப் பிரச்சினையில் தலையிட மாட்டேன் என்று
இத்தனை பேரும் செத்ததற்குப் பிறகும் பிரதமர் அவர்கள்



சொல்லாத நிலைமையில் நமக்கு இந்தியன் என்ற உணர்வு
அல்லது நாம் அத்தனை பேரும் இந்தியர்கள் என்ற உணர்வு,
இந்தியா பரந்த தேசம் சிறந்த தேசம் இந்தியர்களாக
இருப்பதற்கு நாம் பெருமைப்படவேண்டும் என்று எல்லோரும்
எண்ணுவது போன்ற உணர்வு எப்படி வரும், எப்படி நாம்
எண்ண முடியும் என்பதை புரட்சித் தலைவர் அவர்கள் தயவு
செய்து சிந்தித்துப் பார்க்கவேண்டும் என்று கேட்டுக்
கொள்கிறேன்.

இத்தனை நிகழ்ச்சிகள் இலங்கையிலே நடந்திருந்தாலும் கூட
மத்திய அரசு என்ன செய்தது? நடைபெற்ற நிகழ்ச்சிகளைப்
பற்றி நம்மை விட மிக நன்றாக அவர்களுக்குத் தெரியும்.
ஜெயவர்தனே லண்டனிலே பேட்டி கொடுக்கிறார். அம்னெஸ்டி
இன்டர்னேஷனலிலே இருப்பவர்கள் குற்றச்சாட்டு சொல்
கிறார்கள். இனப்படுகொலையை ஜெயவர்த்தனே அரசாங்கம்
செய்கின்ற , சிறைச்சாலையிலே இருப்பவர்களுக்குத் துன்பம்
கொடுக்கப்படுகின்றது, விடுதலைப் புலிகள் சுட்டுக்கொல்லப்
படுகிறார்கள், போஸ்ட் மார்ட்டம் கூடச் செய்வதில்லை, அந்த
அளவுக்கு போலீசாருக்கு அனுமதி வழங்கிவிட்டார்கள் என்று
குற்றச்சாட்டு சொன்னபோது இந்த ஜெயவர்த்தனே என்ன
சொல்கிறார்? அப்படித்தான் செய்வேன், இதை விட இன்னும்
வேகமாகச் செய்வேன், என்னுடைய நாட்டிலே இருக்கக்கூடிய
மக்களுக்கு நான் எதை வேண்டுமானாலும் செய்வேன் என்று
கூறினார்கள். 15—7—83 அன்று லண்டனில் அவர் அவ்வாறு
சொன்னது குறித்து எங்கள் தலைவர் அவர்கள் இங்கே
எழுதினார்கள். நான் ஒன்றைச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.
மத்திய அரசுக்கு இந்த நிகழ்ச்சிகள் எல்லாம் நடக்கும்
என்று தெரியாதா? பிறகு ஏன் அவர்கள் வாளாவிருந்தார்கள்?
தொலைபேசி மூலமாகவோ அல்லது இந்திய தூதர் மூலமாகவோ
இப்போது திரு. ஜி. பார்த்தசாரதியை அனுப்பினீர்களே
அவ்வாறு அவர் மூலமாகவோ இப்படி எல்லாம் கொடுமைகள்
செய்யாதீர்கள் என்று ஏன் சொல்லி இருக்கக்கூடாது? லாகூரிலும்
மற்ற இடங்களிலும் போராட்டங்கள் என்று வருகின்றபோது
அங்கே ஜனநாயகம் வேண்டும் என்று வீரம் கொண்டு
வெகுண்டெழுந்து பாரதப் பிரதமர் அவர்கள் பாராளு
மன்றத்திலே பேசினார்கள். அந்த நாட்டிலே ஜனநாயகம்
வேண்டும் என்று கேட்பதற்கு உரிமை இருக்கிறதல்லவா? அதே
போன்று இந்த நாட்டிலேயும் கொடுமைகளும், கொள்ளைகளும்
நடக்கின்றதே, அதை ஏன் கண்டிப்பதற்கு அம்மையார்
அவர்களுக்கு நேரம் இல்லை? மனம் இல்லையா? என்ன
காரணம்? ஆகவே தான் இதிலே இந்திய அரசாங்கம்
மெத்தனத்தைக் காட்டி இருக்கின்றது. நீங்களும் மெத்தனத்தை
காட்டினீர்கள். இப்போதும் கூட இதிலே மெத்தனத்தைத் தான்
காட்டியிருக்கிறீர்கள். இந்த மெத்தனம் காரணமாகத்தான்
தமிழர்கள் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். நான் ஒன்றை
மனதாரச் சொல்லிக்கொள்கிறேன். நீங்கள் உடனடியாகச்
சட்டசபையைக் கூட்டியிருப்பீர்களேயானால் இந்த 3,000

பேர்கள் செத்திருக்கமாட்டார்கள். அது 300 பேர்களோடு அல்லது 200 பேர்களோடு முடிந்திருக்கும். அதிகப்படியாகச் செத்தவர்களையாவது காப்பற்றியிருக்கலாம்.

தமிழகத்திலே இருக்கின்ற 5 கோடி மக்களும் முதலமைச்சரின் பின்னால் நின்று ஒரே குரலில் சிங்களர்களைக் கண்டிக்கிறார்கள் என்ற நிலைமை வந்திருந்தால் அவர்கள் பின் வாங்கி இருப்பார்கள். அதனால் ஆயிரக்கணக்கான பேர்களைக் காப்பாற்றி இருக்கலாம். எனவே அப்படிச் செய்வதற்கு நீங்கள் தவறி விட்டீர்கள் என்று நான் திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பிலே சொல்லாமல் இருக்க முடியவில்லை. இன்னொன்று சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். உங்களுக்கு என்று ஒரு கொள்கை வைத்து......

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு திராவிட முன்னேற்றக் கழகத்தின் துணைத் தலைவர் அவர்கள் இங்கே வீரம் கொப்பளிக்க, விவேகம் முன்னுக்கு வர பல்வேறு......

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. நெல்லிகுப்பம் கிருஷ்ணமூர்த்தி அவர்கள் பேசி முடிக்கட்டும்.

திரு. வி. கிருஷ்ணமூர்த்தி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நாமெல்லாம் இந்தியர்கள். அப்படி இருக்கும்போது நம்முடைய தமிழர்கள் சாகடிக்கப்பட்டபோது, கொலை செய்யப்பட்டபோது ஜெனோசைட் செய்யப்பட்ட போது நம்முடைய பாரதப் பிரதமர் அவர்கள் நடவடிக்கை எடுக்காமல் இருந்தார்கள். எடுக்கவேண்டிய நடவடிக்கைகளைக் கூட எடுக்காமல் இருந்தார்கள். அவர்களை நீங்கள் கண்டித்திருக்கலாம் அல்லவா?

டிஸ்அப்ரூவல் சொல்லலாம் அல்லவா? நீங்கள் இப்படிச் செய்து இருக்கக்கூடாது. இப்படி செய்து இருக்கலாம் என்று சொல்லலாம் அல்லவா? மத்திய அரசாங்கம் வாளா இருந்தது ஏன்? வடக்கே இருக்கும் மக்களுக்கு ஒரு நீதி, தெற்கே இருக்கக் கூடிய தமிழர்களுக்கு ஒரு நீதியா? தமிழனுக்கு ஒரு நீதியா, சீக்கியர்களுக்கு ஒரு நீதியா என்ற நிலையிலே மத்திய அரசாங்கம் செயல்பட்டு இருக்கிறது என்ற குற்றச்சாட்டை நான் திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் சொல்ல விரும்புகிறேன்.

இன்னொன்றையும் நான் சொல்ல விரும்புகிறேன். இலங்கைக்குப் படை அனுப்பவேண்டும் என்று திராவிட முன்னேற்றக் கழகம் சொல்லியது, இலங்கைக்குப் படை அனுப்பி, அதை இந்தியாவின் ஒரு பகுதியாக ஆக்கிக் கொள்ளவேண்டும் என்பதற்காக அல்ல. பாராளுமன்ற உறுப்பினர் திரு. சுப்பிரமணியசுவாமி சொல்வது போல் நாங்கள் சொல்லவில்லை. அங்கே பிரச்னைகளைத் தீர்ப்பதற்காகவும், அங்கே இனவெறி



தாண்டவம் ஆடிய காரணத்தாலும், அவற்றைத் தடுத்து நிறுத்துவதற்காக இந்திய அரசாங்கம் ராணுவத்தை அனுப்பி அமைதி காப்பாற்றவேண்டும் என்பதற்காக நாங்கள் கேட்டோம். நாங்கள் ராணுவத்தை உடனடியாக அனுப்புங்கள் என்று எப்போது கேட்டோம் என்றால், இலங்கையிலே தமிழர்கள் வெளியே வரமுடியவில்லை, அந்த நாட்டில் உள்ள பாராளுமன்ற உறுப்பினருக்குப் பாதுகாப்பு இல்லை, அவருடைய உயிருக்கும் உடமைக்கும் பாதுகாப்பு இல்லை, அவர் வீட்டிற்குள்ளே அடைந்து கிடக்கவேண்டிய நிலை, அங்கேயுள்ள தமிழர்கள் இலங்கை ராணுவத்தால் சுட்டுக்கொல்லப்பட்ட நேரத்தில் நாங்கள் சொன்னோம். அந்த நிலையில் தமிழர்களைக் காப்பாற்றவேண்டும் என்று சொன்னால், இந்திய ராணுவம் அங்கே அனுப்பப்பட்டால் ஒழிய முடியாது என்ற நிலை இருந்த நேரத்தில் சொன்னோம்.

ஆனால், அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் ஒரு பெரிய வால்போஸ்டர் போட்டார்கள். அதை சென்னையில் எல்லா இடத்திலும் ஒட்டினார்கள். 'அமிர்தலிங்கமே சொல்கிறார், இப்போது இந்தியாவில் இருந்து படை வரத் தேவையில்லை.' இப்போது என்றால் எப்போது? அவர்கள் 20-8-83 அல்லது 19-8-83 அன்று சொல்கிறார், இந்தியாவில் இருந்து ராணுவம் வரத் தேவையில்லை. அது உங்களுடைய கொள்கை. நீங்கள் வைத்து இருக்கும் கொள்கை. ராணுவம் அனுப்பத் தேவையில்லை என்பது உங்களுடைய கொள்கை. அதை அவர் 20-8-83 அன்று சொன்னார் என்பதற்காக அதைத் தலையில் தூக்கி வைத்துக்கொண்டு, சென்னை பூராவிலும் ஒரு வால்போஸ்டர் போட்டு ஒட்டினீர்கள். அது என்ன அவ்வளவு முக்கியத்துவம் வாய்ந்ததா ஜெயவர்த்தனே சொல்லக்கூடிய ஒரு காரணத்தை நீங்கள் சொல்லலாமா? ராணுவம் வரக்கூடாது என்று அவர் சொன்னதை நீங்கள் வால்போஸ்டர் போட்டு ஒட்டவேண்டுமா? நான் கேட்கிறேன், அதே திரு. அமிர்தலிங்கம் அவர்கள் ஜூலை மாதத்தில் குட்டிமணி, ஜெகன் போன்றவர்கள் சிறைச்சாலையில் இருந்த போது கொல்லப்பட்டார்களே, திரிகோணமலையில் இருந்த தமிழர்கள் கொல்லப்பட்டார்களே, அப்போது சொன்னார், 'இந்தியா உடனடியாக ராணுவத்தை அனுப்பவேண்டும்'. இதை அவர் எங்கே இருந்துகொண்டு சொன்னார், ஈழத்திலே இருந்து கொண்டு சொன்னார், ஜாப்னா சிடியில் இருந்து கொண்டு சொன்னார், — உடனடியாக ராணுவத்தை இந்தியா அனுப்ப வேண்டும். அதை ஏன் வால்போஸ்டர் போட்டு நீங்கள் ஒட்டியிருக்கக்கூடாது? அதை ஏற்றுக்கொள்வதற்கு பதிலாக, அவர் ராணுவத்தை இப்போது அனுப்பத் தேவையில்லை என்று சொன்னவுடனே நீங்கள் வால்போஸ்டர் போடுகிறீர்கள். ஜெயவர்த்தனே சொல்லும் கருத்தை அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் ஏன் வால்போஸ்டர் போட வேண்டும்? ஆகவேதான் திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் சொல்கிறோம், இத்தனை நடைபெற்ற பிறகும், இந்த

தீர்மானத்தில் மத்திய அரசுக்கு நன்றி தெரிவிப்பதில் எந்த விதமான நியாயமும் இல்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அருமை சகோதரர் திரு. காளிமுத்து அவர்கள் காலையில் இங்கு இருந்தார். இப்போது இல்லை. அவருடைய கருத்துக்கள் சிந்திக்கவேண்டிய கருத்துக்கள். அவை தனிப்பட்ட கருத்துக்கள் என்று நாவலர் சொன்னாலும், அவைகள் சிந்திக்கவேண்டிய கருத்துக்கள். அவைகளை நீங்கள் சிந்திக்கவில்லை. you should not close your mind. திரு. சோமசுந்தரம் அவர்கள் சொன்னாலும் திரு. புலமைப்பித்தன் அவர்கள் சொன்னாலும், அவர்கள் தெரிவிக்கின்ற கருத்திலே நியாயம் இருக்கிறதா என்று பார்க்க வேண்டுமே தவிர, நீங்கள் அவற்றை ஒதுக்கிவிடுவது சரியல்ல. தேவைப்பட்ட நேரத்தில் இன்னல்பட்ட இலங்கைத் தமிழர்களுக்கு எந்தவிதமான உதவியும் நீங்கள் செய்யவில்லை என்பதை நான் இங்கே சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

எங்களுடைய கட்சியைச் சேர்ந்த எங்களுடைய தலைவர் டாக்டர் கலைஞர் அவர்கள் அப்போது பேசிய பேச்சு. — இந்திய அரசாங்கம் இலங்கையிலே நடைபெற்ற அமளிகளைத் தவிர்ப்பதற்காக ராணுவத்தை அனுப்பி இருக்கவேண்டும். அனுப்பாமல் இருந்தது தவறு என்று பேசினார். சமீபத்தில் இந்திய பாதுகாப்பு அமைச்சர் வெங்கட்ராமன் அவர்கள் — நாங்கள் அவரை பாராளுமன்றத் தேர்தலில் ஆதரித்ததற்கு நல்ல பரிசு கொடுத்து இருக்கிறார்கள் — கலைஞர் இப்படி ராணுவத்தை அனுப்பு என்று சொல்வது முட்டாள்தனம் என்று சொன்னார்கள். சிறந்த பேச்சு. ஏனென்றால் கலைஞர் அவர்கள் நம்முடைய வெங்கட்ராமன் அவர்களை தென் சென்னையில் நிற்கவைத்து, அவர் பாராளுமன்றத்திற்குச் செல்ல வேண்டும், அது தமிழகத்திற்கு உதவியாக இருக்கும் என்று நம்பினாரே அது முட்டாள்தனம்தான். ஆகையால் தான் வெங்கட்ராமன் முட்டாள்தனம் என்று சொன்னார். ஆனால் எங்கள் தலைவர் அதற்கு 'ரீ ஆக்ஷன்' கொடுக்கவில்லை.

(முற்பகல் 11-40)

மாண்புமிகு அமைச்சர் காளிமுத்து அவர்கள் சில கருத்துக்களை வெளியிட்டிருக்கிறார்கள். எங்களுடைய கருத்துக்களும் அவர்களுடைய கருத்துக்களும் இந்தப் பிரச்னையில் ஒத்திருக்கிறது. அவர்களுடைய கருத்துக்கள் இப்படி சில நேரங்களில் எங்கள் கருத்துக்களோடு ஒத்து வருகிறது. ஆனால் எல்லா நேரங்களிலும் அல்ல. அவர் மந்திரியாக இருந்து பேசினார் என்றாலும், அண்ணா தி.மு.க. தொண்டன் என்ற முறையில் பேசினார் என்றாலும் இந்தப் பிரச்னையில் அவர் கூறிய கருத்துக்களுக்கு எங்கள் சிரம் தாழ்ந்த வணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கிறோம்.



வெங்கட்ராமன் அவர்கள் பட்டாளத்தை அனுப்பினால் 'இன்டர்நேஷனல் சிச்சுவேஷன்' வரும் என்று சொல்லட்டும்; இந்தியாவுக்கு கெட்ட பெயர் வரும் என்று சொல்லட்டும்; பரவாயில்லை. அப்படிச் சொல்லாமல் முட்டாள்தனம் என்று சொல்கிறார். அதனால்தான் அமைச்சர் காளிமுத்து அவர்கள் அப்படிக் குறிப்பிட்டார்கள். அவர்கள் குறிப்பிட்ட வார்த்தைகளை நான் இந்த மன்றத்தில் சொல்லமாட்டேன்; அந்த அளவுக்குச் சொன்னார்கள். அந்த அளவுக்கு விமர்சித்தார்கள். திராவிட முன்னேற்றக் கழகம் சொல்லக் கூடிய கருத்துக்களை, தமிழ் ஈழம் வேண்டுமென்று சொல்லக்கூடிய கருத்துக்களைத் தான் அங்கே காளிமுத்துவும் மற்றவர்களும் பேசுகின்றார்கள். அவர்களுடைய புத்தகத்திலே போட்டிருக்கிறார்கள். சிங்களர்களும் தமிழர்களும் சேர்ந்து வாழ வேண்டுமென்று யார் சொன்னாலும் அவர்கள் ஜெயவர்த்தனேயின் கைக்கூலிகள், ஜெயவர்த்தனேயின் கண்காணிகள் என்று அண்ணா தி.மு.க. தொண்டர்கள் பேசுகிறார்கள் என்றால் அவர்கள்தான் உண்மையான தொண்டர்கள். மாறுபட்ட கருத்து இருக்கலாம். இருந்தாலும் அந்த எண்ணம் புரட்சித் தலைவருக்கு வரவேண்டும். அந்த எண்ணம் நாவலருக்கு வரவேண்டும். அந்த எண்ணத்தில் அண்ணா தி.மு.க. ஆட்சி நடத்த வேண்டுமென்று சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

இன்னொரு கருத்தையும் சொல்லியிருக்கிறார்கள். தமிழனுக்குப் பிறந்த எவனும் இலங்கையில் தமிழனுக்கு தனி நாடு வேண்டாம் என்று சொல்லமாட்டான்; அவன் தமிழனே அல்ல என்று சொல்லக்கூடிய அந்தக் கருத்துக்கள் திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு ஏற்புடைய கருத்துக்கள். அந்தக் கருத்துக்கள் அண்ணாவின் கருத்துக்கள். இலங்கையில் இருக்கக் கூடிய 35 இலட்சம் தமிழர்களைக் காப்பாற்றக்கூடிய கருத்துக்கள். அந்தக் கருத்துக்கள் உங்களுக்கும் ஒத்த கருத்துக்களாக இருக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இன்னும் ஒன்றை மட்டும் சொல்லி முடித்துக்கொள்கிறேன். இந்திரா காந்தி அம்மையாருக்கும் இந்த விஷயத்தில் எங்களுக்கும் கருத்து வேறுபாடு உண்டு. இந்தப் பிரச்சனையில் அவர்கள் சரியான நடவடிக்கை எடுக்கவில்லை என்ற குற்றச்சாட்டு உண்டு. ஆனால் தமிழக அரசு பொறுப்பை ஏற்றிருக்கக்கூடிய நீங்கள் இன்னும் சரியாகச் செயல்பட்டிருக்க வேண்டும். நீங்கள் சரியான முறையில், சீரிய முறையில் செயல்படவில்லை என்று சொல்கிறோம். அதைத்தான் தமிழ்நாட்டில் எல்லா இடங்களிலும் சொன்னோம், சொல்கிறோம். திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில கண்டனக் கூட்டங்களை நடத்தி, அங்கெல்லாம் சிலோன் அரசு இயற்றிய சட்டங்களைக் கொளுத்தி, கோஷம் போட்டோம். அந்த நேரத்திலே நீங்கள் இந்த சட்டமன்றத்தைக் கூட்டியிருக்க வேண்டும். இங்கே அப்போது கண்டனம் தெரிவிக்க வாய்ப்பளித்திருக்க வேண்டும். (மணியடிக்கப்பெற்றது.) இறுதியாக ஒன்றைமட்டும் சொல்லி முடித்துக் கொள்கிறேன். (குறுக்கீடுகள்.)

மத்திய அரசே மத்திய அரசே
இந்திரா அரசே மத்திய அரசே

பாலஸ்தீன விடுதலைக்குப் பரிந்துபேசும் மத்திய அரசே!
பாலஸ்தீன விடுதலைக்குப் பரிந்துபேசும் மத்திய அரசே!!
வங்கதேச விடுதலைக்கு வரிந்துகட்டிய இந்திரா அரசே!
வங்கதேச விடுதலைக்கு வரிந்துகட்டிய இந்திரா அரசே!!
எங்கள் தமிழனை எங்கள் தமிழனை
சிங்கள நாய்கள் கொல்வதா

எங்கள் தமிழனை எங்கள் தமிழனை
சிங்கள நாய்கள் கொல்வதா

இந்திக்காரன் செத்திருந்தால் இந்திய ராணுவம்
சென்றிருக்கும்

இந்திக்காரன் செத்திருந்தால் இந்திய ராணுவம்
சென்றிருக்கும்

ஏனோ தயக்கம் ஏனோ தயக்கம்
இந்திரா அரசே, எம்.ஜி.ஆர். அரசே!

ஏனென்றால் அன்றையதினம் நாங்கள் இப்படித்தான் முழக்கமிட்டோம். இதுதான் திராவிட முன்னேற்றக் கழகத்தின் முழக்கமாக என்றைக்கும் இருக்கும் என்று திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் தெரிவித்துக்கொள்கிறேன். வணக்கம்.

திரு. கே. எஸ். ஜி. ஹாஜாசெரீப்: மிஸ்டர் டிப்டி ஸ்பீக்கர் சார், மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இங்கே கொண்டு வந்த தீர்மானத்தை நாங்கள் முழுமையாக ஆதரிக்கிறோம். ஆனால் சில திருத்தங்களைக் கொடுத்திருக்கிறோம். அதை அவர்கள் ஒப்புக்கொள்ள வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

எங்களுடைய கட்சியின் சார்பாக சிங்கள வெறியர்களால் தாக்கப்பட்ட தமிழர்களுக்கு, நம் வம்சாவழியினர்களுக்கு நம்முடைய அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன். கொலை, கொள்ளை, தீவைப்பு, கற்பழிப்பு ஆகிய இவ்வளவையும் சிங்களக்காரர்கள் நம்முடைய தமிழர்கள் பேரிலே, தமிழ் வம்சாவழியினர் பேரிலே அவர்கள் தொடுத்தது மிகவும் மிருகத்தனமான செயல். இதை எந்த தேசமும் ஏற்காது என்பதை நான் சொல்ல முடியும். யாரும் கண்டிக்காமல் இருக்க மாட்டார்கள். நாமும் கண்டித்தோம். ஆனால் என்னுடைய நண்பர் திரு. கிருஷ்ணமூர்த்தி அவர்கள், இது பத்தாது, செய்தது பத்தாது நீங்கள் உடனுக்குடனே 'ஆர்மியை' அனுப்பி அதைத் தடுத்திருக்க வேண்டும் என்று சொன்னார்கள். அது வாஸ்தவத்திலே அவர்





சொன்னாரா அல்லது கருத்துக்காக சொன்னாரா அல்லது அரசியல் ஆதாயம் தேடச் சொன்னாரா என்பது எனக்குத் தெரியவில்லை.

Ceylon is a Sovereign State. We are a Sovereign State.

நாம் எப்படி ஒரு தனி தேசமாக விளங்குகிறோமோ அதே மாதிரி சிலோனும் தனி தேசமாக விளங்குகிறது. நாம் எப்படி உலக நாடுகள் அவையிலே அங்கத்தினராக இருக்கிறோமோ, அதேமாதிரி அவர்களும் உலக நாடுகள் அவையிலே அங்கத்தினராக இருக்கிறார்கள். அங்கே நடக்கக்கூடிய விஷயத்தில் தலையிட்டு நாம் நம்முடைய துருப்புக்களை அனுப்பி இருந்தால் என்ன கதி ஏற்பட்டிருக்கும் என்பதை அவர்கள் உணர வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். அவர்கள் உணர்வார்கள். அவர் களுக்கும் அந்த உணர்ச்சி இருக்கிறது. ஆனால் வாதத்திற்காக, 'நோம்புக்கு மாவிடிக்காமல், வீம்புக்கு மாவிடிக்கிறார்கள்' என்று நான் சொல்கிறேன் (சிரிப்பு — ஆரவாரம்).

சர்ச்சில், இரண்டாவது மகாயுத்தத்தின்போது அனுதினமும் அவருடைய கேபினட் அல்லது பார்லிமெண்டை கூட்டிக் கொண்டு வந்தார்கள் என்று சொன்னார். இது உலக மகா யுத்தம் அல்ல. பிரிட்டன் அந்த மகாயுத்தத்தில் மிகவும் ஈடுபட்டுக் கொண்டிருந்தது. அதன் காரணமாக அவர் கேபினட் அல்லது பார்லிமெண்டை அடிக்கடி கூட்டக்கூடிய நிலைமை இருந்தது.

இப்போது பாரதப் பிரதமர் இந்திரா அம்மையார் இதைப் பற்றி வன்மையாகக் கண்டிக்கவில்லை என்று அவர் குறை கூறினார். எந்தெந்த தேதியில், எந்தெந்த இடத்தில், எப்படி எப்படி அவர்கள் பேசினார்கள் என்பதை எல்லாம் தொகுத்து வைத்திருக்கிறேன். அதை நான் சொல்கிறேன். மிலிட்டரி ஆக்ஷன் எடுப்பது நல்லதா அது முடியுமா என்பதை நாம் மிகவும் கவனமாக ஆராயவேண்டும்.

நாம் மிலிட்டரி ஆக்ஷன் எடுத்திருந்தால் ஒரு சில மணி நேரத்திற்குள் அவர்களை அடக்கிவிட்டிருக்க முடியும்.

We could have taken aerial, ship and land—military action within a few hours. We have curtailed it. ஆனால் என்ன நேர்ந்திருக்கும்? It would have taken a bad and sad turn. It would have reflected in our country. I am asking my learned friend, "Is it a responsible statement that he and his party are making"?

நம்முடைய தமிழ்நாடு மிகவும் பாதிக்கப்பட்டிருக்கும். நம்முடைய தமிழ்நாட்டின் ஜனத்தொகை என்ன? 4.75 கோடிக்கு மேல் இருக்கிறது. எவ்வளவு இன்டஸ்டிரிகள் வளர்ந்திருக் கின்றன. 30 வருஷத்துக்கு முன்பு இங்கே என்ன இருந்தது. இந்த 30, 35 ஆண்டுகளில் நாம் எப்படி வளர்ந்திருக்கிறோம்,

கார்கள் செய்யவில்லையா, இரயில் பெட்டிகள் செய்யவில்லையா, நூற்றுக்கணக்கான மில்கள் வரவில்லையா, [illegible] பாக்டரி வரவில்லையா, சைக்கிள் தயாரிக்கவில்லையா, மிலிட்டரி தளவாடங்களைச் செய்யவில்லையா, எவ்வளவு பெரிய பாக்டரிகள் எல்லாம் இங்கே இருக்கின்றன. அப்படி இருக்கும் போது நாம் இராணுவ நடவடிக்கைகளை எடுத்திருந்தால் என்ன ஆகியிருக்கும்? It will be a confl gration of the whole Tamil Nadu and the people of Tamil Nadu would have suffered a very callous and most sorrowful experience in this matter. I congratulate the Hon. Chief Minister who is before me, for his very stead fastness and for the patience he is exercising in this issue. எவ்வளவு ஆத்திரமூட்டும்

(முற்பகல் 11--50)

வகையில் நடந்து கொண்டார்கள்? இந்திரா காந்தி அம்மையார் அவர்கள் எவ்வளவு பொறுமையாக இருந்தார்கள்? பொறுப்பில் இருப்பவர்கள் மிகவும் பொறுமையாக இருக்கவேண்டும் என்று காமராஜ் அவர்கள் அடிக்கடிச் சொல்லிக் கொண்டு வருவார், பங்களாதேசுக்கு உதவிக்குச் சென்றவர்கள், ஏன் சிலோனுக்கு உதவி செய்யவில்லை என்று அவர்கள் சொன்னார்கள். பங்களாதேஷ் நிலைமை வேறு. That was a separate issue altogether. 35 லட்சம் பேர்கள் அங்கே மடிந்தார்கள். பாகிஸ்தான் வெறியர்களால் கொலை செய்யப்பட்டார்கள். கற்பழிக்கப்பட்டார்கள். 7, 8 மாதங்களாக ஒரு டம்மி கவர்ன்மென்ட் கல்கத்தாவிலேயிருந்து அடிக்கடி எங்களுக்கு உதவி செய்யுங்கள் என்று கோரி வந்தார்கள். உலக தேச தலைவர்களிடம் எல்லாம் சென்று அவர்களுடைய ஒப்புதலை வாங்கிக் கொண்டோம். இதற்கிடையில் கோடிக்கணக்கான அகதிகள் நம்முடைய ஊர்களுக்கு வந்தார்கள். அதைத் தடுப்பதற்கு நாம் அங்கே சென்று அதை அடக்கினோம், ஒடுக்கினோம். அதிலேயும் அமெரிக்காக்காரன் அவர்களுக்காக பரிந்து வந்தான். 2, 3 நாட்கள் தாமதமாக சென்றிருந்தால் விஷயம் வேறாக இருந்திருக்கும். அவர்கள் நம்முடைய நாட்டுக்கு வருவதைத் தடுப்பதற்காகத்தான் நாம் அந்த நடவடிக்கைகளை எடுத்தோம். அதுவும், இதுவும் ஒன்றாக நான் கேட்கிறேன். பாகிஸ்தானுக்கு அனுதாபம் தெரிவித்திருக்கிறீர்களே, ஏன் இதற்கு மட்டும் அனுதாபம் தெரிவிக்கவில்லை என்று சொன்னார்கள். பாகிஸ்தானில் ஜியா அவர்கள் இராணுவ அதிகாரத்தில் இருக்கிறார்கள். ராணுவ ஆட்சியை எதிர்த்து அங்கே உள்ள பொதுமக்கள் பெரிய ஆர்ப்பாட்டம் செய்கிறார்கள். We want democracy. We are a democratic country. We are the second biggest democratic country in the whole world. We want every country to have democracy. We do not want autocracy or despotism anywhere in the world. எதற்காக சொன்னோம்? அதிலே நம்முடைய பங்கு இருக்கிறது. பாகிஸ்தான் யுத்தம் மூண்டால் — யுத்தம் மூளத்தான் போகிறது. பாகிஸ்தான் அணி அகதிகள் நான்கு வழியாக இந்தியாவிற்கு வருவார்கள். குஜராத் மாநிலம்





வழியாக வரலாம். ராஜஸ்தான் மாநிலம் வழியாக வரலாம். காஷ்மீர் மாநிலம் வழியாக வரலாம். பஞ்சாப் மாநிலம் வழியாக வரலாம். அதைத் தடுப்பதற்காக அவர்கள் பெரிய வார்னிங் என்ற விதத்தில் சொன்னார்கள். இதையெல்லாம் எடுத்துக் கொண்டு அவர்களுக்குச் சாதகமாக இருக்கிறார்கள் என்று சொன்னால், அதை மக்கள் ஏற்றுக்கொள்ளமாட்டார்கள், மக்கள் சிரிப்பார்கள் என்று நான் சொல்லிக் கொள்ள ஆசைப் படுகிறேன். Sir, very big leaders from Ceylon have come here. I had a pleasant opportunity of meeting them and I discussed with them and talked to them. அவர்களை நான் கேட்டேன். மிலிட்டரி ஆக்ஷன் எடுத்திருக்க முடியுமா என்று. "No, no, it is not possible. It is not advisable" என்று அவர்கள் சொன்னார்கள். எப்போது சிங்கள வெறியர்கள் மிகவும் கொடுமையாக இருந்த நேரத்தில், ஒரு மணிக்கு ஒரு தடவை இந்திராகாந்தி அம்மையார் அவர்கள் அடிக்கடி ஜெயவர்த்தனே அவர்களோடு தொலைபேசில் பேசிக் கொண்டிருந்தார்கள். கடுமையாகப் பேசினார்கள். உடனே அதை நிறுத்துங்கள், அப்படி இல்லை என்றால், விஷயம் வேறு விதமாக இருக்கும் என்று ஒரு அதட்டல் கொடுத்தார்கள். நான் வெளியுறவு அமைச்சர் நரசிம்மராவை அனுப்புகிறேன் என்றார்கள். அதற்குப் பின்னால்தான் இதிலே ஜெயவர்த்தனே மிலிட்டரியையும், போலீசையும் அடக்குவதற்கு ஆரம்பித்தார்கள். விஷயம் சுமுகமாக நடந்தது அப்படி இல்லை என்றால், விஷயம் வேறு விதமாக ஆகியிருக்கும் என்று சொல்லியிருக்கிறார்கள். We would have been annihilated to a very great extent and we would not be here என்று சொன்னார்கள். இதையெல்லாம் இந்திரா அம்மையார் எடுக்கவில்லையா? இதை எப்படி அவர்கள் சொல்வார்கள்? பிரதமர் அல்லவா? இதுபற்றி பேசியிருந்தால் விஷயம் வேறுவிதமாக ஆகியிருக்கும். அராஜகமாக பேசியிருக்கலாம். அப்படி பேசியிருந்தால் அங்கே இருக்கக்கூடிய நம்முடைய மக்களைத்தான் மிகவும் பாதித்து இருக்குமே தவிர, அதை ஒரு முடிவிற்கு கொண்டு வந்திருக்காது. இந்த விஷயத்தை நாம் தொடர்ந்து பேசி பேசி ஒரு சுமுகமான முடிவிற்கு கொண்டு வரவேண்டும். அதுதான் நம்முடைய கடமை. அதைத்தான் நம்முடைய தலைவர்கள் கையாளவேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன். இந்த மிலிடெரி ஆக்ஷன் எடுப்பது பற்றிய கருத்துக்களுக்கு இந்தியாவில் இருக்கக்கூடிய எல்லாத் தலைவர்களும், அதற்கு விரோதமாகத்தான் பேசினார்கள். சி. பி. ஐ., சி. பி. எம். பிரஜா சோஷலிஸ்ட் பார்ட்டி என்று ஒவ்வொருவரும் அதை எதிர்த்துத்தான் பேசியிருக்கிறார்கள். ஆனால் இங்கே இருக்கக்கூடிய திராவிட முன்னேற்றக் கழகத் தலைவர்களும், அவர்கள் கூட இருக்கக்கூடிய ஒன்றிரண்டு தோஸ்துகளும் தான் அதை ஆதரித்தார்கள். (சிரிப்பு) I am sorry, I will amend that word. தோஸ்த் என்பது நல்ல வார்த்தை தான். இருந்தாலும் சொல்லிவிடுகிறேன். அவர்கள் நேசர்கள் என்று அதைச் சொல்லிவிடுகிறேன். அவர்களுக்கும் தெரியும், தாம் அதை ஆதரித்தார்கள். ஆனால் அவர்களுக்கும் தெரியும், மிலிடெரி ஆக்ஷன் எடுப்பதால் விளையக்கூடிய விளைவுகள்

எல்லாம். அவர்களுக்கும் தெரியும் அது. வாஜ்பாய் கூட அது கூடாது என்று சொல்லியிருக்கிறார். பி. இராமமூர்த்தி, சி.பி.எம், அவர்களும் கூடாது என்று சொல்லியிருக்கிறார்கள். எல்லாத் தலைவர்களும் அதற்கு ஆட்சேபணையை தெரிவித்திருக்கிறார்கள். எல்லாத் தலைவர்களும் இந்திரா அம்மையார் எடுத்த ஸ்டேண்ட் தான் இதில் சரியானது என்று சொல்லியிருக்கிறார்களே தவிர, அவர்கள் எடுத்த ஸ்டேண்ட் தப்பு என்று சொன்னதே கிடையாது.

அப்படி இருக்கும்போது நம்முடைய ரகுமான்கான் சாகேப் அவர்களும், கிருஷ்ணமூர்த்தி அவர்களும்தான் அதை மிகப் பெரிய பிரமாதமாக்கி, வேகமாக ஆவேசமாகப் பேசியிருக்கிறார்கள். பேசுவது வரவேற்கத் தக்கதுதான். ஆனால் அது முடிந்திருக்குமா என்பதை மக்கள் ஆராய வேண்டும், அறிய வேண்டும். நாமும் அறிந்திருக்க வேண்டும் என்று நான் சொல்லிக் கொள்கிறேன்.

கலைஞர் அவர்கள், is a good friend of mine. I always regard him as a very respectable frien 13 லட்சம் ஈழத்தமிழர்களைப் பற்றித்தான் அவர்கள் அடிக்கடிப் பேசிக் கொண்டு வந்தார்களே ஒழிய இலங்கையைச் சுற்றி 18 லட்சம் இந்திய வம்சா வழி மக்கள் இருக்கிறார்களே அவர்களுக்கு என்ன சொல்யூஷன் என்று அவர்கள் கேட்டார்களா? ஒன்றும் கேட்கவில்லை. அவர்களுடைய கதி என்ன? அதோகதி தானா? அம்போ என்று அவர்களை விட்டு விடுவதா? என்று நான் கேட்கிறேன்.

You are a very shrewed political leader. If you are taking up a cause, you should take it up on the whole. You cannot sub-divide it. You cannot say that "I want a separate State for Ealam Tamils and I have nothing to do with others". Is it a correct stand, I am asking. Absolutely it is an incorrect stand.

சிலோனைச் சுற்றி 150 மைல் விஸ்தீரணத்திற்குள் இருக்கக் கூடியவர்கள் தமிழர்கள் மட்டுமா? குஜராத்திகள், முஸ்லீம்கள் சிந்திகள், கிறிஸ்தவர்கள் என்று அவ்வளவு பேரும் இருக்கிறார்கள். அவர்களை விட்டுவிட்டு, அங்கே இருக்கக்கூடிய 13 லட்சம் மக்களுக்கு மட்டும் நீங்கள் தனி நாடு கொடுங்கள் என்றால் அதை ஒப்புக் கொள்ள முடியுமா?

What is this separate State business? Can we appreciate this action? Can we support this action? What would be the repurcussion in our own country? How many people want a separate State in our own country? What are the intolerable troubles we are undergoing? Dr. Kalaignar knows about all these things. But still he wants to have some hold in the political field and therefore he is holding this antagonising view.

(மேசையைத் தட்டும் ஒலி)



**திரு. அ. ரகுமான்கான்;** சார், பாயின்ட் ஆப் ஆர்டர். எங்களுடைய கட்சியினுடைய ஸ்டேண்ட் பற்றிக் கேட்கிறார். ஒரே ஒரு விளக்கம் சொல்லி விடுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அவருடைய கருத்தை அவர் சொல்கிறார். கடைசியில் வேண்டுமானால் ஏதாவது கேட்பதாக இருந்தால் கேளுங்கள்.

**திரு. அ. ரகுமான்கான்:** ஈழத் தமிழர்களைப் பற்றிய எங்களுடைய கட்சியின் ஸ்டேண்ட் பற்றிக் கேட்கிறார். ஒரே ஒரு பாயின்ட் தான். பேசவிட்டால்தானே சொல்ல முடியும்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அவர் ஈல்டு பண்ணவில்லை என்று சொல்கிறார். இதிலே குறுக்கீடுகள் வேண்டாம். திரு. ஹாஜாசெரீப் அவர்கள் தொடர்ந்து பேசி முடியுங்கள். (கூச்சல், குழப்பம்)

**THIRU K.S.G. HAJA SHAREEF** : Mr. Deputy Speaker Sir, I have not interfered with any speaker. I do not want any interference, lest my trend will be spoiled. Now I am going to read the resolution passed at the All India Congress Committee meeting.

(நண்பகல் 12-00)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. கிருஷ்ணமூர்த்தி 1 மணி 10 நிமிடங்கள் பேசினார்கள். அப்போது யாருமே குறுக்கிடவில்லை. அதே மாதிரி இப்போது இவரும் பேசட்டும். குறுக்கிட வேண்டாம் (குறுக்கீடு).

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** துணைத் தலைவர் அவர்களே, திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்த துணைத் தலைவர் சொல்ல வேண்டிய கருத்துக்களையெல்லாம் தங்களுடைய கட்சியின் சார்பாக தன்னுடைய இயல்புக்கேற்ப கொள்கைக்கு ஏற்ப திட்டவட்டமாகவும், தெளிவாகவும் சொல்லி முடித்து இருக்கிறார்கள். அதிலே எந்தவித ஐயப்பாடும் கொள்ள வேண்டிய அவசியமும் இல்லை, காங்கிரஸ் கட்சித் தலைவர் இப்போது திட்டவட்டமாகவும் தெளிவாகவும் அவர்களுடைய கருத்துக்களைச் சொல்கிறார்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. கிருஷ்ணமூர்த்தி பேசுகின்றபோது பல்வேறு கேள்விகளைக் கேட்டார்கள். ஒவ்வொரு கேள்விக்கும் ஒவ்வொருவரும் எழுந்து பதில் சொல்ல ஆரம்பித்தால் அவரிடத்திலே விளக்கம் கேட்க ஆரம்பித்தால் அப்படியா, ஆகுமா என்றெல்லாம் கேட்டுக் கொண்டிருந்தால் அவைகளுக்கு விடையிறுக்க முடியாது. மாண்புமிகு உறுப்பினர் திரு. கிருஷ்ணமூர்த்தி அவர்கள் அவர்களுடைய கருத்துக்களைத் தெளிவாகச் சொல்லியிருக்கிறார்கள். இப்போது காங்கிரஸ் கட்சித் தலைவர் அவர்கள் அவர்களுடைய கருத்துக்களைச் சொல்கிறார்கள். இப்போது

திரு. ரகுமான்கான் அவர்களுக்கு சந்தேகம் வருவதற்கு இடமே இல்லை. எப்போதும் சந்தேகமே இல்லாமல் இருப்பவர் அவர்.

THIRU K.S.G. HAJA SHAREEF: Sir, I have not criticised either the D.M.K. Party or the D.M.K. Leaders. I have very high opinion about them and I can assure them that I am least interested in degrading them. திருமதி இந்திரா காந்தி அம்மையார் அவர்கள் இந்த விஷயத்தில் எந்தவிதமான துரிதமும் காட்டவில்லை என்று இங்கே சொன்னார்கள்.

I shall just read the resolution passed at the recent A.I.C. Committe meeting at Bombay. A.I.C.C. (I) notes that normalisation of India's relations with China is proceeding exchanges of visits, etc. The A.I.C.C.(I) views with serious concern and anguish the recent development in Sri Lanka where large scale violence resulted in heavy loss of life and massive destruction of property of Indian Citizens and people of Indian origin. While realising that the problem is an internal matter for the Government of Sri Lanka the A.I.C.C. (I) cannot ignore these massacres and wanton Acts of vandalism since their far reaching concentious are bound to be felt in India. The A.I.C.C. (I) upheld at the sense of insecurity and terror to which the people of Indian origin are being subjected to in Sri Lanka by various methods of intimidation and harrassment. It emphasises the utmost necessity of restoring normal conditions and of preserving its efforts for a lasting solution—please note the word 'for a lasting solution' - of the problem with active co-operation of all concerned. We have offered our good Offices to help with a spirit of friendship in bridging the gap created between the two communities. The A.I.C.C. (I) hopes that this process will bring peace and amity in Sri Lanka. It welcomes the delicate and sympathetic handling of the situation by the Prime Minister, including the establishment of the Sri Lanka relations.

இதற்கென்று ஒரு கோடி ரூபாய் அவர்கள் கொடுத்திருக்கிறார்கள். இன்னும் தொடக்கத்திலிருந்து பிரதமர் அவர்கள் என்ன சொல்லி வந்தார்கள் என்பதை இந்தச் சபையின் முன் வைப்பது அவசியமாகும். ஜூலை 21 ஆம் தேதியன்று கூறினார். உரிமை கேட்டுப் போராடிய தமிழர்களை இராணுவம் கொன்று மரண மருத்துவப் பரிசோதனைக்கு உள்ளாக்சாமல் புதைத்தது மனித உரிமைகளை மீறுகிற செயலாகும். இந்தச் செயல் கண்டு பாரதம் ஆழ்ந்த கவலை கொண்டுள்ளது என்று பேசியிருக்கிறார்கள்.

ஜூலை 23-ம் தேதி கல்பாக்கம் அணு மின் நிலையத்தை துவக்கி வைத்தபோது அவர் சொன்னதாவது—பாரதத்திற்கு எந்த ஒரு நாட்டின் உள்நாட்டின் பிரச்சினையிலும் தலையிட





விருப்பம் இல்லை. அதிலும் அண்டை நாடான இலங்கை நாட்டோடு நட்புறவோடு இருக்கவே விரும்புகிறோம். ஆனால் அதே வேளையில் இலங்கையில் அண்மையில் நிகழ்ந்த சம்பவங்களைக் கண்டு அங்கே தமிழர்கள் பாதிக்கப்படுவதைக் கண்டு பாரதம் ஆழ்ந்த கவலையைத் தெரிவிக்கிறது என்று கூறியிருக்கிறார்கள். இந்த மாதிரியான ஸ்டேட்மெண்டு எல்லாம் ரொம்ப கடுமையான முறையில் அவர்கள் விட்டுக் கொண்டு இருந்தாலும் அடிக்கடி தொலைபேசி மூலம் ஜெயவர்த்தனேவுடன் அவர்கள் பேசிக்கொண்டு இருந்தாலும் அவர்களுக்கு ஒரு அச்சம் ஒரு பயம் ஏற்பட்டது. அதன் காரணமாக, திரு. நரசிம்மராவ் அவர்கள் அங்கே வருவதை அவர்கள் விரும்பினார்கள். திரு. நரசிம்மராவ் அங்கே போனார்கள், அதன்பிறகு தான் அங்கேராணுவமும், போலீசும் உடனே தங்கள் அடக்குமுறையை கைவிட்டார்கள்.

ஆகஸ்டு 1-ம் தேதி இலங்கை வெளிவிவகார அமைச்சர் அவர்கள் கலந்து கொண்ட தென் கிழக்கு ஆசிய மாநாட்டில் உரையாற்றிய பாரதப் பிரதமர் அவர்கள் அண்மையில் உள்ள நாடுகளில் நடக்கும் நிகழ்ச்சிகளைக் கண்டு நாங்கள் கண்களை மூடிக்கொண்டு இருக்க முடியாது.

She said we will not be a spectator. We will certainly take action, beware of it and guide yourself properly and behave yourself properly.

பல இன மக்களைக் கொண்ட நாட்டில் நடக்கும் நிகழ்ச்சிகளைப் பார்த்து அது எங்களை பாதிக்கவில்லை என்பது போல் பாசாங்கு செய்ய முடியாது என்று கூறினார்கள். தமிழ்நாட்டை மட்டும் இந்த இலங்கைப் பிரச்சினை பாதிக்கவில்லை. இந்திய நாட்டையே இது பாதிக்கிறது என்று கூறினார்கள். இதில் எல்லாம் உணர்ச்சியையோ வெறியையோ தூண்டிவிடாமல் மிக நிதானமாக இந்தப் பிரச்சினைக்கு தீர்வு காண வேண்டும் என்று கூறினார்கள். We want a lasting peace. நீங்கள் மிலிடெரியை அங்கே அனுப்பியிருந்தால் என்ன ஆகும் என்பதைக் கவனிக்க வேண்டும்.

பாகிஸ்தானோடு சண்டைபோட்டபோது நாம் பாகிஸ்தான் ராணுவத்தை துரத்தி அடித்தோம். 1967 ஆம் ஆண்டு என்று நினைக்கிறேன். அப்போது திரு. காமராஜ் அவர்கள் ஏ. ஐ. ஐ. சி.யின் பிரசிடெண்டாக இருந்தார். அவரை ஜெனரல் ராஜா அவர்கள் லாகூர் வரை அழைத்துக் கொண்டுபோய் மிலிடெரி ஆக்ஷன் எப்படி எப்படி செய்தார்கள் என்று காட்டினார் களாம். லாகூர் வரை விரட்டி அடித்து துரத்தினார்களாம். நான்கூட காமராஜ் அவர்களைக் கேட்டேன். உங்கள் போட்டோக்களை எல்லாம் பார்த்தேன் ஏன் லாகூர் வரை போனார்களே ஏன் அந்த லாகூரையும் எடுத்துக்கொண்டு இருக்கக்கூடாது. அப்படி எடுத்துக் கொண்டால்தான் அவர்களுக்குப் புத்தி வரும், இனிமேல் இந்த மாதிரி நடவடிக்கைகளில் அவர்கள் ஈடுபடமாட்டார்கள் என்று சொன்னேன்.

அதற்கு என்ன சொன்னார் ராஜா, லாகூரை எடுத்துக்கொண்டால் அவர்களுக்கு யார் சோறு போடுவது அவர்கள் ஒவ்வொருவரும் 3 கோடி சாப்பிடுவார்களே. அவர்களை எங்கே கொண்டு வைப்பது, லாகூரை மட்டும் எடுத்துக் கொள்ள முடியாது பக்கத்தில் உள்ள பகுதிகளை எடுத்துக் கொள்ள வேண்டும்.

It is a military rule that if you go and take one place it is your responsibility to keep that place and see that the people are kept rights so in all respects. நமக்கு ஒரு பெரிய கஷ்டம் வந்து விடும். ஒரு பெரிய பொறுப்பு ஏற்பட்டுவிடும். பங்களா தேஷிலிருந்து, ஒரு கோடி மக்கள் இங்கே வந்ததால் அவர்களை வைத்துக் கொண்டு எவ்வளவு பெரிய கஷ்டத்திற்கு நாம் உள்ளானோம். எத்தனை கேம்பு வைத்தோம். அதனால் நமக்கு எவ்வளவு பொருள் விரயம் ஆனது. நம்முடைய அருமை நண்பர் ரகுமான்கான் அவர்களும் கிருஷ்ணமூர்த்தி அவர்களும் மிலிட்டரியை ஏன் அனுப்பக் கூடாது என்று கேட்கிறார்கள்.

Within a few hours we could have taken Ceylon. It is not a matter. But what will happen? We should get on them. Tomorrow the other people who are friendly with them will come and threat of war will be in our own State not the North India, not the East India, not the West India but Tamil Nadu mostly. Is he prepared to take that risk? He may take that risk. ஊர் இரண்டு ஆனால் கோமாளிக்குக் கொண்டாட்டம் என்று சொல்வது மாதிரி தீ வைத்துவிட்டுப் போவார்கள். அந்தத் தீயை அணைப்பதற்கு யார் பொறுப்பு? இதை எல்லாம் யோசித்துப் பார்க்கவேண்டும். இதனால்தான் பொறுப்பில் இருப்பவர்கள் ரொம்ப ஜாக்கிரதையாக பொறுமையாக இன்ன இன்ன முறையைக் கையாண்டால் அவர்களுக்கு ஒரு நிரந்தரமான அமைதி கிடைக்குமோ அந்த மாதிரி அவர்கள் செய்து வருகிறார்கள்,

(பிற்பகல் 12-10)

யார் அங்கே அடிபட்டு, உதைபட்டு, சொத்து, சுதந்திரம் வீட்டு வசதி, வாகனங்கள் எல்லாம் இழந்தார்களோ அவர்கள் பார்லிமெண்ட் மெம்பரோ, அல்லது மற்றவர்களோ எ. படி இருக்கிறார்கள்? இங்கே அருமை நண்பர் டாக்டர் கருணாநிதி அவர்களும் அவருடைய லெப்டினன்ட் திரு. அன்பழகன் அவர்களும் சட்டமன்ற உறுப்பினர் பதவியை இராஜிநாமா செய்து விட்டார்கள். நான் கூட இரண்டு தடவை அவரை கான்டாக்ட் பண்ண டிரை பண்ணினேன். 'கலைஞரே நீங்கள் ரிசைன் பண்ணாதீர்கள், இது ஒரு பெரிய பிரச்சினை; இந்தப் பிரச்சினையிலே எல்லோரும் ஒன்றாகச் சேர்ந்து இருந்துதான் நாம் தீர்வு காண முடியும்' என்று சொல்லலாம் என்று முயன்றேன். ஆனால் பேச முடியவில்லை.





'Why should he resign, I am asking. What is the necessity? What has he achieved by resigni g his membership? Can he think that Ceylon people will s op all these things? I do not know why he should resign. He is a shrewd Politician. He would have had some other reason for resigning.'

அங்கே உள்ள இண்டஸ்ட்ரியல் பிரண்ட்ஸ் என்னிடம் பேசினார்கள். லிப்ஸ்டிக், சோப், இந்த மாதிரி செய்யக்கூடிய ஒரு இண்டஸ்ட்ரி அங்கே இருந்தது. அந்த இண்டஸ்ட்ரி ரூ. 75 இலட்சம் மதிப்புள்ளது. அது தரை மட்டமாக்கப்பட்டிருக்கிறது. அவர்கள் வைத்திருந்த மூலப்பொருளின் மதிப்பு ரூ 1.5 இலட்சம். பினிஸ்ட் பிராடக்ட்ஸ் மதிப்பு ரூ. 1.5 கோடி. இவையெல்லாம் சேர்ந்து மொத்தம் ரூ. 3.5 கோடி, ரூ.4 கோடியாகிறது. அந்த பாக்டரியை தரைமட்டமாக்கி விட்டார்கள். அங்கே 475 சிங்களவர்கள் வேலை செய்து கொண்டிருந்தார்கள். மாதாமாதம் ரூ. 1000-க்கு மேல் சம்பளம் வாங்கிக் கொண்டிருந்தார்கள். அவர்களே, இந்த மாதிரி செய்து விட்டார்களென்றால், அது மூடத்தனம் அல்லவா? வெறித்தனம் அல்லவா? அதை என்னவென்று சொல்வது? அதே மாதிரி இன்னொரு முஸ்லிம் பிரண்ட் சொன்னார். அவருடைய டெக்ஸ்டைல்ஸ் ரூ. 15 இலட்சம் மதிப்புள்ளது. ரூ. 7, 8 கோடி மதிப்புள்ள தொழிற்சாலை விரயமாயிற்று என்று சொன்னார். அங்கும் ஆயிரக்கணக்கான சிங்களவர்கள் பணியில் இருந்தார்கள். அவர்களே, இலஞ்சம் வாங்கிக் கொண்டு இதைச் செய்தார்கள் என்றால் இந்த வெறித்தனத்தை யார் தூண்டிவிட்டார்கள். இன்றைக்கு சிலோன் இந்த அளவுக்கு வந்திருக்கிறது என்றால், இதற்கு யார் காரணம்?

'It is Tamilians who are responsible for bringing economic prosperity in Sri Lanka.' உலக வங்கி, ஐ.எம்.எப். நிர்வாகிகள் என்ன சொன்னார்கள். உங்களைப் பார்த்து நாங்கள் பணம் கொடுக்கவில்லை. ஆயிரக்கணக்கான கோடிக்கணக்கான பணம் கொடுக்கவில்லை. தமிழர்களைப் பார்த்து உங்களைப் பார்த்து கொடுக்கவில்லை. தமிழர்களைப் பார்த்து கொடுத்தோம்.

'They are the principal entrepreneurs in Sri Lanka. They have got sagacity, they have got perseverence, they have got courage to begin business. They have got courage to start industries. They have got courage to begin business. They have got courage to begin trades. Onaccount of them we have given.

Will you stop this business of carnage? Otherwise we will not give money even for rebuilding Ceylon என்று சொன்னார்கள். அந்த அளவு வார்னிங் கொடுத்தார்கள். ஆயிரம் கோடி ரூபாய்க்கு மேல்சேதம் ஆகியிருக்கிறதே, யாருடைய சொத்து அது? நம்முடைய சொத்து.

இன்றைக்கு சிலோன் அந்த பிரச்சனையாக இருக்கிறது என்றால் அதற்கு மூல காரணம் யார்? தமிழர்களுடைய முயற்சிதான். அதையும் ஆராயாமல் ஜெயவர்த்தனே தூண்டி விட்டு இந்த மாதிரி செய்தது மிகவும் வருந்தத்தக்கது. அது மிகவும் தீவிரமாகக் கண்டிக்கத்தக்கது. அதை நாம் கண்டிக்கிறோம் என்று நான் சொல்லிக் கொள்ள ஆசைப்படுகிறேன்.

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)

பிரைம் மினிஸ்டர் அவர்கள் அங்குள்ள தமிழர்களைப் பாதுகாப்பான இடத்திற்கு கொண்டு போவதற்கு, 3, 4 கப்பல்கள் அனுப்பினார்கள். இருந்தாலும்கூட அங்கே கொழும்பிலிருந்து இங்கே வந்து போவதற்கு யாருக்கும் இஷ்டம் இல்லை. நாங்கள் அங்கேயே தானிருப்போம் என்று சொல்லி விட்டார்கள். அடிபட்டு, உதைபட்டு இருந்தாலுங்கூட, அங்கேயே இருக்க வேண்டுமென்றுதான் அவர்கள் ஆசைப் படுகிறார்கள். ஏதோ நடந்து விட்டது; இனிமேல் நடக்காமல் கௌரவமான முறையில், கம்பீரமான முறையில் நாங்கள் வாழ்வதற்கு நீங்கள் உபகாரம் செய்யுங்கள் என்று அவர்கள் கேட்கிறார்கள். இங்கிருந்து 3, 4 கப்பல்கள் போயின. நான் ஒரு கப்பல் கேப்டனிடம் கேட்டேன். உங்களுடைய கப்பல் கப்பாசிட்டி எவ்வளவு? எவ்வளவு பேர்களை ஏற்றி வந்தீர்கள் என்று. அவர்கள் என்னுடைய கப்பல் கப்பாசிட்டி ஆயிரம் பேர்கள். ஆனால் 434 பேசஞ்சர்ஸ்தான் வந்தார்கள் என்று சொன்னார். இது எதைக் காட்டுகிறது. கப்பல் அனுப்பி இருந்தாலுங்கூட, அவர்கள் அங்கேயே வசிப்பதைத்தான் விரும்புகிறார்கள். வேறு இடத்திற்குப் போக விரும்பவில்லை. பாதிக்கப்பட்ட இலங்கைத் தமிழ் மக்கள் நிவாரணத்திற்காக பிரதமர் அவர்கள் ஒரு கோடி ரூபாய் அவர்களுடைய பண்டிலிருந்து கொடுத்தார்கள். அவர்கள் இதைச் சிந்தித்து இது தமிழர்கள் பிரச்சினை மட்டுமல்ல, இந்தியப் பிரச்சினை; ஏன் இது உலகப் பிரச்சினை மனிதவர்க்கம் சம்பந்தப்பட்ட பிரச்னை என்று கூறினார்கள்.

'It should be taken to U.N.O. What had happened to all the matters taken to U.N.O,? Have they completed their findings?
என்ன ஆயிற்று இப்போது. இப்போது இஸ்ரேலுக்கும், பி.எல்.ஓ. விற்கும் இடையே இருக்கும் பிரச்னை எவ்வளவு வருஷமாக நடந்து வருகிறது. முடித்து விட்டார்களா? காஷ்மீர் பிரச்சினையை முடித்து விட்டார்களா? இன்னும் எவ்வளவு பிரச்னைகள் இருக்கின்றன.

This is a second League of Nation. U.N,O. is nothing but a Second League of Nations.
லீக் ஆப் நேஷனுக்குப் போன எந்தப் பிரச்னை, யூ.என்.ஓ. விற்கு போன எந்தப் பிரச்னை முடிவு காணப்பட்டது. அப்படி போய் அங்கே தாக்கல் செய்து விட்டு இங்கே நாம் பேச முடியுமா, பார்லியமெண்டிலே காரசாரமாக பேசிவிட்டு அங்கே



பேச முடியுமா? யூ.என்.ஓ. விற்கு அனுப்பி விட்டீர்களே. சரி, அவர்களுடைய தீர்ப்பு வரட்டும். அதுவரையில் நான் செய்வதைச் செய்வேன் என்று சொல்வார்கள்.

Is it possible ? Why this sort of thing by D.M.K. leaders? I cannot understand. Only thing is that they should come and tell us
நான் ஒரு கூட்டத்தில் சொன்னேன். உதை வாங்கியவர்களும் உதைத்தவர்களும் சேர்ந்து ஒன்றாகப் போக வேண்டும் என்று நினைக்கிறார்கள். அரசியல் தலைவர்கள் எல்லாம் அதற்கு உறுதுணையாக இருந்து, சுமூகமான தீர்வு கொண்டு வர வேண்டுமே தவிர அவர்களைப் பிரித்து விடுவது சரியாக இருக்காது என்பதைச் சொன்னேன். இதற்கு மக்கள் என்னை ஆதரித்தார்கள்.

'It is a common danger. Our kith and kin are there. It is a commo danger which must be met by a measure agreed upon by all common people'.
இப்போது ஒரு பெரிய சண்டை வந்துவிட்டால் அதற்கு ஒருவர் இந்தப் பக்கம், இன்னொருவர் அந்தப் பக்கம் இருந்தால் அவர்கள் என்ன நினைப்பார்கள். அதே நிலை தான். இந்தப் பிரச்னையை நல்ல சுமூகமான ஒரு முடிவிற்கு கொண்டு வர வேண்டுமென்றுதான் இந்திரா காந்தி அம்மையார் அவர்களும் மற்றவர்களும் நினைக்கிறார்கள். யூ.என்.ஓ. விற்கு நம்முடைய மந்திரி சபையிலிருந்து சென்ற இராமச்சந்திரன் அவர்கள் பேசினார்.

'He has done extremely good work. He is a very shrewd and intelligent man. I am very happy that the Government of India has selected such a shrewd youngster to go to U.N.O to discuss and defend our case.'
யூ.என்.ஓ. விற்கு சிலோனிலிருந்து சென்ற ஃபாரின் மினிஸ்ட்டர் டிபண்ட் செய்தார்.

But I tell you when Mr. Ramachandran was speaking, he was listened with rap attention.
நம்முடைய கிருஷ்ணமூர்த்தி அவர்கள் சொன்னார்கள். ஏன் அவரைக் கொண்டுபோய் பலியாக்கினீர்கள் எனக் கேட்டார். பலியா அது? என்ன பலி? கடாவா பலி.

I am asking you 'enna bali'. It is a tribute to this Ministry for having selected such a man with such intelligence. (Cheers) Such an experienced man you have selected to attend the meeting. He is still there.
நான் ஏ.ஐ.சி.சி. மீட்டிங்கிலே இருக்கிறபோது அதை கேள்விப்பட்டேன். இராமச்சந்திரன் அவர்கள் தமிழகத்தின் நிலை என்னவென்று பேசினார்கள். அதைப் பத்திரிகையிலே பார்த்தேன்.

He has done very well, extremely well. I am happy that you have selected such an intelligent youngman. He has got very bright future. I will tell him to keep it up.
இவ்வளவு தூரம் நாம் முயற்சி செய்து கொண்டு வருகிறோம். இங்கே முதலில் ஒரு அர்த்தால் நடைபெற்றது. அதிலே எல்லோரும் பங்கு எடுத்துக் கொண்டார்கள். இந்திய அரசாங்கமும் பங்கெடுத்தது. ஜெயவர்த்தனேயின் நடத்தையை குறை கூறி நல்ல முறையிலே பெரிய ஊர்வலத்தை நடத்தி தம்முடைய கண்டனத்தைக் காட்டினோம்.

(பிற்பகல் 12–20)

இரண்டாவது முறையாக இரயில்களை நிறுத்த வேண்டுமென்று என்னுடைய அருமை நண்பர் டாக்டர் அவர்கள் அனைத்துக் கட்சிக் கூட்டத்திலே சொன்னார்கள். முதலமைச்சரவர்கள்கூடக் கலைஞரைக் கேட்டார்கள். எப்பொழுது, எங்கே, எந்த இரயிலை நிறுத்தப் போகிறீர்கள் என்று. நான்கூட முதலமைச்சரவர்களைக் கேட்டேன் அரசாங்கத்தின் ஸ்டாண்ட் என்னவென்று.

"No, we are against all this hartal" என்றார்.
உடனே கலைஞரவர்கள் வாக்கவுட் செய்து விட்டார்கள். முன்கூட்டியே நீங்கள் இரண்டு பேரும் பேசிக்கொண்டு வந்து விட்டீர்கள் என்று சொல்லிச் சென்று விட்டார்கள். எல்லாத் தலைவர்களும் இருக்கின்ற ஒரு கூட்டத்திலே அவரவர்கள் விவாதித்து ஒருவர் ஒரு ஸ்டாண்டை எடுக்கிறார்கள். மற்றவர்கள் ஒரு ஸ்டாண்டை எடுக்கிறார்கள். அதற்காக அவை தவிட்டு விலகிச் செல்ல வேண்டுமென்''தற்காக,

We have taken already a decision, and so, " I am walking out" என்று சொல்லி விட்டார்.

I am very grateful to the State Ministry and also the Central Government for having stopped second time the trains in the interests of the people of Tamil Nadu.
இரயில்களில் பயணம் செய்பவர்கள் யார்? நம்முடைய சொந்தக்காரர்கள். ஆண்கள், பெண்கள் பயணம் செய்கிறார்கள். அறிந்தவர்கள், அறியாதவர்கள் பயணம் செய்கிறார்கள்; இப்படி அவ்வளவு பேர்களும் பயணம்செய்கிறார்கள். அவர்களைப் பெரியதொரு கஷ்டத்திற்கு ஆளாக்கி விடுவோம் என்று சொன்னால் அது நல்ல அரசியல் முறையா என்று அறிய விரும்புகிறேன்.

I do not think it is good.

இப்பொழுது என்ன நடக்கிறது, பஞ்சாபில் எவ்வளவு பேர் சாகிறார்கள். எவ்வளவு வெறித்தனங்கள் அகாலிதளத்தால் நடக்கின்றன. உடனே இராணுவத்தை அனுப்பிவிட்டால் என்னவாகும்? ஏ.ஐ.சி.சி. யில் கூட நான் தர்பாராவின் அவர்களைக் கேட்டேன். இதற்கு என்ன சொல்யூஷன் என்று





ஒரே ஒரு சொல்யூஷன்தான் என்று சொன்னார். அது என்ன சொல்யூஷன் அவர்கள் எங்கேயிருந்து எக்ஸ்ட்ரீமிஸ்டாக வருகிறார்களோ அந்தந்த டெண்டுகளுக்குப் போய் அடிக்க வேண்டுமென்று சொல்கிறார்கள். அவர்கள் எங்கேயிருந்து வருகிறார்கள். கோயிலிலே உள்ள ரெஸ்ட் ஹவுசிலேயிருந்து வருகிறார்கள்.

"What will be their feelings", I asked. He said their feelings will be there. But instead of allowing the hundreds of innocent people to die, by murdering, butchering and shooting and damaging the public property, this is much better.
என்று சொன்னார்கள்.

எதற்கெடுத்தாலும் இராணுவத்தை அனுப்பு என்ற பேச்சு கூடவே கூடாது.

Only at the extreme end we can adopt that solution.

ஒவ்வொரு தடவையும் மிகவும் பொறுமையாகவும், துரிதமாகவும் இந்திய அரசாங்கம் இதிலே நடந்து வருகிறது. அது தப்பு என்று யாரும் சொல்ல முடியாது. தேசத் தலைவர்கள் எல்லோரும்—சரண்சிங் அவர்களும், வாஜ்பாய் அவர்கள் அரசாங்கம் எடுத்த முடிவு நல்ல முடிவு என்றுதான் பேசியிருக்கிறார்கள். ஆனால் நம்முடைய திராவிட முன்னேற்றக் கழகத் தலைவர்களும், அவர்களைச் சார்ந்த சில சகாக்கள், நண்பர்கள் ஆகியவர்களும்தான் இது கூடாது என்று சொல்லி வருகிறார்கள்.

இந்தப் பிரச்னையிலே ஒரு நல்ல சுமுகமான, நிரந்தரமான முடிவைக் காண்பதுதான் திறமையான ஒரு ஸ்டேட்ஸ்மென்ஷிப்பின் பாலிசியாகும்.

We are a mighty nation. Our strength is over 75 crores, of people.

நாம் போய் ஒன்றரை கோடி மக்கள் இருக்கின்ற இலங்கையில் இராணுவத்தைக் கொண்டு அடக்கினால் நாளைக்கு உலக சபையிலே, நம்மைப்பற்றி என்ன சொல்வார்கள். ஜெயவர்த்தனே வெறி பிடித்தவர் என்று இப்பொழுது சொல்வதற்குப் பதிலாக நம்மைப் பார்த்து, திருமதி இந்திரா காந்தி அம்மையார் அவர்களைப் பார்த்து, திரு. இராமச்சந்திரன் அவர்களைப் பார்த்து இவர்களுக்கு வெறிபிடித்து விட்டது. ஆகவேதான் படையை அனுப்பி ஆக்கிரமித்துக் கொண்டார்கள் என்று சொல்ல மாட்டார்களா? பாகிஸ்தானுடன் பகை இருந்தது. இப்பொழுது எக்ஸ்டென்ஷன் ஆசை வேறு வந்து விட்டது என்று சொல்லி நம்மைத் தூற்றுவார்களே; அதற்கு இடம் கொடுக்கலாமா?

கிரேனடா நாட்டில் நடக்கின்ற நிகழ்ச்சிகளைப்பற்றி சர்வதேச நாடுகள் கண்டிக்கின்றன.

Do you want that to take Place here? No.

America has already got a fleet in Triconamalai, just waiting for an oPportunity to find fault with India and try to interfere in our domestic affairs. We have got a Policy. We have got a position. We have got a tradition. We can only tell those people to behave better. We can try to Protect the interests of our own people there, barring military action.

எல்லாத் தலைவர்களும் அதாவது அரசியல் தலைவர்களும், மதத் தலைவர்களும் என்ன சொல்கிறார்கள்? ஒரு தேசத்திலே குடியேறிவிட்டீர்கள். அதன்படி இன்னொரு தேசத்தின் மக்களாகி விட்டீர்கள்; எனவே அந்த தேசத்தில் நல்லது, கெட்டதில் நீங்கள் பங்கு கொள்ள வேண்டும், அந்த தேசத்தின் நல்வாழ்வுக்கு நீங்கள் பாடுபட வேண்டும் என்றுதானே சொல்லி இருக்கிறார்கள். இதேபோன்று ஒரு கலவரம் கலைஞர் அவர்கள் முதலமைச்சராக இங்கே இருக்கும்போது ஏற்பட்டது. அப்போது அவர் என்ன சொன்னார்?

It is an internal matter. I am sorry, we cannot interfere.

அப்படி அவர் சொல்லவில்லையா? இதை நான் பத்திரிகையில் படித்தேன். அப்படி அவர் சொல்லவில்லை என்றால் அவர்களுடைய தம்பிமார்கள் இங்கே சொல்லலாம்.

He said that. If he has not said that, why should he have a different Policy now. I am not able to understand.

நம்முடைய ஒவ்வொரு தேச மக்களும் அங்கே இருக்கிறார்கள். அவர்களுக்குத்தான் இந்த கஷ்டம், நஷ்டம் எல்லாம் வருகின்றது. அந்த கஷ்ட, நஷ்டங்களை நிரந்தரமாகப் போக்கி அங்கே ஒரு சுமுகமான ஒரு நிலைமை வரவேண்டும். எனவே, அதிலே நாம் கண்ணும், கருத்துமாக இருக்க வேண்டும். அதை விட்டுவிட்டு இந்தப் பிரச்சினையை அங்கே கொண்டு போகவில்லை, இங்கே கொண்டு போகவில்லை, இங்கே பேசவில்லை, இது குறித்து ஆத்திரம் காட்டவில்லை என்றெல்லாம் சொல்வது

It is not a correct stand. I would appeal to my esteemed friend, Dr. Kalaigner Karunanidhi to give a helping hand and see that his matter is settled in a smooth way.

*மாண்புமிகு டாக்டர் எம். ஜி. இராமச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இரண்டு நாட்களாக இலங்கை அரசைக் கண்டிக்கின்ற தீர்மானத்தின் மீது இங்கே அனைத்துக் கட்சித் தலைவர்களும், உறுப்பினர்களும் கருத்து வெளியிட்டிருக்கிறார்கள். அவர்களுக்கெல்லாம் நான் நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். காரணம் வெளியே பேச முடியாத கருத்துக்களை இங்கே நான் பேச வாய்ப்பு தந்ததற்காகத்தான். குறிப்பாக,



திராவிட முன்னேற்றக் கழகத்தின் துணைத் தலைவர் அவர்களுக்கு நான் பெரிதும் கடமைப்பட்டிருக்கிறேன். இந்த வாய்ப்பினை அவர்கள் தருவார்கள் என்று நான் எதிர்பார்க்க வில்லை. எனவே நான் மிக மிகத் தாழ்மையோடு கை கூப்பி நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இந்தத் தீர்மானத்தில் யாரைக் கண்டிக்க வேண்டுமோ அவர்களைக் கண்டிப்பதைவிட்டுவிட்டு இந்தியாவில் உள்ள நேர்மையாக நடந்துகொண்ட, எச்சரிக்கையாக நடந்துகொண்ட, பொறுப்போடு நடந்து கொண்ட, பதட்டமின்றி நடந்து கொண்ட, அடக்கத்தோடு நடந்து கொண்ட, சிந்தனை செய்து நடந்து கொண்ட இந்தியப் பேரரசையும், மாநில அரசையும் கண்டனக் கணைகளால் தொடுத்து மிக அழகாக, திறமையாக கண்டனத் தீர்மானத்தை நிறைவேற்றும் வகையில்——கண்டனத் தீர்மானத்தை நிறைவேற்றவில்லை—அப்படிப் பேசியிருக்கிறார்கள். இது இலங்கையில் வாழ்கின்ற தமிழக மக்களுக்கு செய்கின்ற நன்மையா, தீமையா என்பது எனக்குத் தெரியவில்லை. ஒருமித்த கருத்து வேண்டும், ஒருமித்த கருத்தை வைத்து நாம் முன்பே பேசி இங்கே வந்து அதற்கு தீர்மானமாக நிறைவேற்றி இருந்தால் பயன் உள்ளதாக இருக்கும் என்று மாண்புமிகு திராவிட முன்னேற்றக் கழகத்தின் துணைத் தலைவர் திரு. கிருஷ்ணமூர்த்தி அவர்கள் கருத்து வெளியிட்டார்கள். இங்கே உள்ளவர்களும் இங்கே வரமுடியாமல் வெளியே இருக்கின்ற அனைத்துக் கட்சித் தலைவர்கள் எல்லோரும் ஒன்று சேர்ந்து பேசி ஏற்றுக்கொண்ட ஒரு கொள்கையின் அடிப்படையில்தான் இந்தத் தீர்மானத்தை இங்கே கொண்டு வந்திருக்கிறோம் என்பதையும் இங்கே நான் நினைவுபடுத்தக் கடமைப்பட்டிருக்கிறேன்.

ஜு (பிற்பகல் 12–30)

இலங்கைப் பிரச்னையை நாம் இன்னும் சரியாகப் புரிந்து கொள்ளவில்லையா அல்லது புரிந்து கொள்ள மறுக்கிறோமா என்ற சந்தேகம் சிலருடைய பேச்சுக்களை கவனித்ததிலிருந்து எனக்குத் தெரியவந்தது. ஏனெனில், துருப்புகளை, படைகளை அனுப்புங்கள் என்று சொல்வது யாருக்காக? ஈழ விடுதலைப் போரை நடத்துபவர்களுக்காகவா? அல்லது சிங்களவர்கள் அதிகமாக வாழ்கிற பகுதிகளில் வாழ்ந்து கொண்டு இருக்கிற இந்தியப் பரம்பரையினர், அங்கே குடியேறி வியாபாரம் செய்து பிழைக்கப் போனவர்கள் ஆகியோரைக் காப்பாற்றுவதற்காகவா என்று இந்த இரண்டு பிரச்னைகளைக் கூட நாம் இன்னும் சரியாகப் புரிந்து கொள்ளவில்லை என்பதை நான் இங்கே குறிப்பிட விரும்புகிறேன்.

அதை முதலிலே நாம் தெளிவுபடுத்திக் கொள்ளவேண்டும். தமிழ்ப் பெண்கள் படையை அனுப்புங்கள் என்று சொல்வது தமிழ் கற்பழிக்கப்பட்டு இருக்கிறார்களே, அந்த இடத்திற்கா,

மக்கள் குடியிருக்கின்ற பகுதிகளில் கோடிக்கணக்கான மக்களின் சொத்துக்களை சூறையாடி, அவற்றை அவர்கள் இழக்கச்செய்து பராரிகளாக ஆக்கப்பட்டு இருக்கிறார்களே அந்தப் பகுதிக்கா என்பதை நாம் தெளிவாகப் புரிந்துகொள்ளவேண்டும். இதிலே ஈழ விடுதலைப் பிரச்னை எங்கே? எப்போது வந்தது என்பதை நாம் அவசரப்படாமல் கவனித்துப் பார்க்க வேண்டும் என்று நான் விரும்புகிறேன்.

போராட்டத்திற்குக் காரணம், இலங்கை வாழ் தமிழ் மக்களுக்கு துன்பம் உண்டாக்கிய ராணுவமா, சிங்கள வெறியர்களா அல்லது அந்த அரசா என்பதைப் பார்க்க வேண்டும். ஈழ விடுதலைப் போரிலே ஈடுபட்டு இருக்கின்றவர்களுடைய இளைஞர்களை ராணுவத்தினர் சுட்டு விட்டார்கள் என்ற காரணத்தைச் சொல்லலாமே தவிர ஈழ விடுதலைப் போரிலே ஈடுபட்டுள்ள ஈழத் தமிழர்கள் வாழும் பகுதியில் படையெடுப்பு நடந்ததா என்றால் இல்லை.

அங்கே சில இடங்களில் ராணுவம் கலகம் செய்தது. சுட்டுக் கொன்றது. மக்கள் அடிக்கப்பட்டார்கள். துன்பப்படுத்தப் பட்டார்கள். வீடு வீடாக விரட்டியடிக்கப்பட்டார்கள். வீடுகள், சொத்துக்கள் எரிக்கப்பட்டன. ஆனால் அதிகமான நஷ்டம் எந்தப் பகுதியில், எந்த மக்களுக்கு என்று எண்ணிப் பார்த்தால், இன்றைக்கு அங்கேயிருந்து அகதிகளாக வருபவர்கள் யார் என்று பார்த்தால், ஈழத்து விடுதலைப் போரில் கலந்து கொண்ட நண்பர்கள் சிலர் வருகிறார்களே தவிர அந்த இளைஞர்கள் வந்து இருக்கிறார்களே தவிர, அங்கேயிருக்கும் மக்கள் யாரும் அகதிகளாக வரவில்லை என்பதை நான் குறிப்பிட விரும்புகிறேன்.

அங்கேயிருந்து அகதிகளாக, திருகோணமலையில் இருந்தும், மற்ற இடங்களில் இருந்தும் வருபவர்கள் தரும் செய்திகள் நமக்கு மகிழ்ச்சி அளிப்பனவாக இல்லை. இதை நாம் முதலில் வரையறுத்துக் கொள்ளவேண்டும். நாம் பேசுவது, கண்டிப்பது எந்தச் செய்கையை, யாருக்கு பாதகமாக அமைந்து இருக்கிறது என்று பார்த்துச் சொல்கிறோமா? ஒட்டுமொத்தமாக இலங்கையிலுள்ள தமிழ் மக்கள் அனைவருக்கும் பேசுகிறோமா என்று பார்த்தால், ஈழ விடுதலை முக்கியம் என்றால், படையை இங்கே இருந்து அனுப்ப முடியும் என்று சொல்வதாக இருந்தால், ஈழத் தமிழகத்தை பாதுகாக்க வேண்டும் அல்லது பாதிக்கப் பட்டவர்களை பாதுகாக்க வேண்டும், துன்பப்பட்டவர்களை, மானம் இழந்த தாய்மார்களின் குடும்பங்களைச் சேர்ந்தர்களை, கணவனை இழந்து நிராதரவாக விடப்பட்டவர்களை— அவர்களுக்குப் பாதுகாப்புக் கொடுக்க வேண்டுமானால், சிங்களவர்கள் அதிகமாக இருக்கும் அந்தப் பகுதிக்குப் படையை அனுப்ப வேண்டும். படையை அனுப்ப வேண்டுமா, வேண்டாமா என்பதைப் பற்றி நான் பின்னால் பேசுகிறேன். அப்படி அனுப்புவதாக இருந்தால் எந்த வகையில் நாம் நடவடிக்கை எடுக்க [illegible] என்பதை சிந்தித்துப் பார்க்கவேண்டும்.



அப்படியானால், சிங்களவர்கள் அதிகமாக இருக்கும் பகுதிக்கு நாம் இங்கே இருந்து ராணுவத்தை அனுப்புவதன் விளைவாக ஈழ விடுதலைக்கு என்ன பயன் கிடைக்கும். அது எப்படி அவர்களுக்கு உதவிகரமாக இருக்கும். எனக்குத் தெரிந்த வரையில், ஈழத் தமிழர்கள் படையை அனுப்புங்கள் என்று கேட்கவே இல்லை என்று நான் சொல்லவேண்டும். தவறு இருந்தால். திருத்துங்கள் நான் ஏற்றுக்கொள்கிறேன். இந்த நிலைமையை நாம் இன்னும் மக்களிடம் மறைக்கிறோம். மறைத்துப் பேசுகிறோம். அவர்களிடம் உண்மைக்கு இடம் இல்லாத வகையில் திருத்திக் கூறி பல விஷயங்களை அவர்கள் மனதில் பதிய வைத்து சிக்கல் உண்டாக்கிக் கொண்டு இருக்கிறோம். தமிழ் ஈழம் விடுதலை பெறவேண்டும் என்று விரும்புகிற இளைஞர்கள் அவர்களே விடுதலைப் போரை நடத்தி விடுதலை பெறவேண்டும் என்று விரும்புகிறார்களே தவிர அதற்கு ஆயுதங்கள் உபகரணங்கள் போன்றவற்றை வேண்டுமென்று கேட்கிறார்களே தவிர, படையை அனுப்புங்கள் என்று அவர்கள் கேட்கத் தயாராக இல்லை. இதை இந்த அவையிலே நான் எடுத்துச் சொல்வதற்காக தயவுசெய்து யாரும் மனவருத்தப்படக் கூடாது. அந்த இளைஞர்கள் அப்படி இல்லை. இதை யாரும் மறுக்கமாட்டார்கள் என்று நான் நம்புகிறேன். இந்த அரசு இந்த விவகாரத்தில் மிக மிகத் தெளிவாக இருக்கிறது. கொஞ்சம் கூட கலக்கமோ, அச்சமோ இல்லாமல் துணிவோடு, முறையோடு, திண்மையோடு, திட்பத்தோடு—நாவலர் அவர்கள் சொல்வதைப்போல—இன்னும் என்னென்ன வார்த்தைகள் உண்டோ அவை எல்லாம் பெற்றுக் கொண்டுதான் இந்த அரசு நடவடிக்கை எடுக்கிறது என்பதை எங்களைக் குறை கூறவேண்டுமென்று பிரச்சனையைத் தேடித் திரிகின்றவர்களுக்குச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். இப்போது பிரச்சனை இல்லை; தேடியாக வேண்டும்.

அண்ணாவை இழுக்கிறார்கள். எனக்கு ஒரு சந்தேகம். இங்கே தி.மு.க. துணைத் தலைவராக இருக்கிற கிருஷ்ணமூர்த்தி அவர்களுக்கு என் மீது கோபமா, அவர் தலைவர்மீது கோபமா என்று எனக்குத் தெரியவில்லை. ஏனென்றால் அவர் பேசிய குற்றச்சாட்டுகள், சொல்லிய வார்த்தைகள் எல்லாம் என்னைச் சேராது, அவை அவரைத்தான் சாரும். என்னென்ன வெல்லாம் சொல்கிறார்? என்ன நடவடிக்கை எடுத்தாய்? அவ்வளவு பெரிய சங்கடங்கள், ஆபத்துகள் வந்தனவே. ஏன் பேசாமல் இருந்தாய் என்று கேட்கிறார். நான்தான் முதலிலே தொலைக்காட்சியின் மூலம் சொல்லிவிட்டு, வானொலியில் பேசினேனே. முன்பு இருந்தவர்கள் எங்கே பேசினார்கள்? அப்போது டி.வி. இல்லாமல் இருந்திருக்கலாம். வானொலியில் பேசியிருக்கலாமே! அறிக்கை விட்டிருக்கலாமே! இந்தக் கேள்வியை என்னிடம் கேட்டால் என்ன செய்வது? உங்களுக்கு கோபம் இருந்தால் அங்கே கேளுங்கள்; பதில் பெறுங்கள். என்னை ஏன் கேட்கிறீர்கள்? குற்றமற்றவனை [illegible]

பதில் கிடைக்கும்? இதற்கு நான் பதில் சொல்வதாக இருந்தால் எல்லோருக்கு மன வருத்தத்தைத் தரும். சிலருக்கு மனக்கசப்பு ஏற்படும். அதை ஏற்படுத்த வேண்டுமா?

இங்கே மாண்புமிகு ஹாஜா செரீப் அவர்கள் கேட்டார்கள். அப்போது என்ன செய்தார்கள் என்று. அப்போது என்ன செய்தார்கள் என்பதை நான் சொல்லி ஆகவேண்டும் அல்லவா? 1973-ல் இதைப்போன்ற பிரச்சனை நடந்தபோது இங்கே முதலமைச்சராக இந்த இடத்தில் வீற்றிருந்த டாக்டர் கலைஞர் கருணாநிதி அவர்கள் செய்தியாளர்களிடம் அளித்த பேட்டி—இலங்கைத் தமிழர்களுடைய அவதிகளைப் போக்க, அவர்களுக்கு பாதுகாப்பு அளிக்க நாங்கள் இங்குள்ள மத்திய அரசை வற்புறுத்தி உரிய நடவடிக்கைகள் எடுக்கச் செய்வோமே ஒழிய தமிழக அரசோ அல்லது தி.மு.கழகமோ இலங்கைத் தமிழர்கள் பிரச்சனையில் நேரடியாகத் தலையிடாது. ஆதாரம் 30-4-1973 ஆம் நாள் ''தினமணி''.

இப்போது ஏன் என்னைப் பேச வைக்கிறீர்கள்? இந்த பதில் அவரைத்தான் போய்ச் சேருகிறது. (குறுக்கீடு) இடையில் பேச நான் யாரையும் அனுமதிக்க முடியாது. என்னுடைய பேச்சு முடிந்த பிறகு பேசட்டும். நான் பதில் சொல்லக் காத்திருக்கிறேன்.

இலங்கைத் தமிழர்கள் போராட்டத்திற்கு உங்களுடைய தார்மீக ஆதரவு உண்டா என்று ஒரு நிருபர் கேட்டதற்கு மாண்புமிகு முன்னாள் முதலமைச்சர் டாக்டர் கலைஞர் கருணாநிதி அவர்கள் பதில் அளிக்கையில் போராட்டத்திற்கு ஆதரவு இல்லை என்று திட்டவட்டமாக கூறினார். ஆதாரம் 30-4-1973 ஆம் தேதிய ''தினமணி''. நான் எங்கே சொன்னேன். ஆதரவு இல்லை என்று? நான் ஒருவன் பட்டுமா? உங்களை எல்லாம் சேர்த்துக்கொள்ளவில்லையா? உங்களை எல்லாம் சேர்த்து நான் நடவடிக்கை எடுக்கவில்லையா? எந்த தமிழக அரசு வெளிநாட்டுப் பிரச்சனையில் கண்டனம் தெரிவித்து பொது வேலை நிறுத்தம் நடத்த முன்வந்தது என்பதை தயவுசெய்து நீங்கள் சொல்லுங்கள் (மேசையைத் தட்டும் ஒலி). எனக்கு நினைவு இல்லை. சொன்னால் நான் ஏற்றுக் கொண்டு வருத்தம் தெரிவித்துக்கொள்ளத் தயாராக இருக்கிறேன்.

இப்படிச் சொன்னவருடைய தலைமையில் இருக்கின்ற நீங்கள் இங்கே இருந்து என்னைக் கேள்வி கேட்கிறீர்களே. இதை அவரிடம் கேட்கக் கூடாதா? (குறுக்கீடு) உங்கள் பேச்சில் நான் குறுக்கிடவில்லை ஐ ஆம் நாட் ஈல்டிங்.

(பிற்பகல் 12—40)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இதிலே அலிகேஷன் எதுவும் வரவில்லை. யாரும் குறுக்கிட அனுமதிக்கப்படவில்லை (கூச்சல், குழப்பம்). உறுப்பினர்கள் அனைவரும் அமைதியாக உட்கார வேண்டும். (குறுக்கீடு) (கூச்சல், குழப்பம்).





மாண்புமிகு டாக்டர் எம். ஜி. இராமச்சந்திரன்: ஐ ஆம் நாட் ஈல்டிங் என்றால் என்ன அர்த்தம். இந்த ஒரு விஷயத்தையே தாங்க முடியவில்லையே...... (கூச்சல், குழப்பம்).

மாண்புமிகு பேரவைத் தலைவர்: உறுப்பினர்கள் அனைவரும் உட்காரவேண்டும். யாரையும் நான் அனுமதிக்கவில்லை. முதலமைச்சர் பேசி முடிக்கட்டும். அவர் பேசிய பிறகு நீங்கள் கேட்கலாம்.

மாண்புமிகு டாக்டர் எம். ஜி. இராமச்சந்திரன்: பேரவைத் தலைவர் அவர்களே, அவர்கள் என்னை எவ்வளவு குற்றம் சாட்டினார்கள் புரட்சித் தலைவர் என்ற அடைமொழியைப் போட்டு, என்பதை இங்கே இருக்கின்ற அத்தனை உறுப்பினர்களும் கவனித்து இருக்கிறார்கள். நாங்கள் எப்படி குறுக்கு விசாரணை செய்யத் தயாராக இல்லையோ, கடைசியிலே நாங்கள் பதில் சொல்லுகிறோமோ அதுவரையில் அவர்களிடம் தகவல் இருந்தால் எடுத்து பதில் சொல்லட்டும். பேரவைத் தலைவர் அனுமதித்தால் என்பதை நான் இங்கே தெரிவித்துக்கொள்கிறேன். (கூச்சல், குழப்பம்).

மாண்புமிகு பேரவைத் தலைவர்: குறுக்கிடுவதும், குறுக்கிடாமல் இருப்பதும் என்னுடைய அனுமதியின் பேரில்தான் முடியும். நான் இப்போது அனுமதி கொடுக்கவில்லை.

மாண்புமிகு டாக்டர் எம். ஜி. இராமச்சந்திரன்: பேரவைத் தலைவர் அவர்களே, உங்களுக்கு கட்டளை இட முடியாது. எல்லோரையும் பேசவிடுங்கள் அல்லது விடாதீர்கள் என்று உங்களிடம் சொல்ல முடியாது. 'நீங்கள் அனுமதித்தால், என்றுதான் நான் வார்த்தையைப் பயன்படுத்தினேன். அதுதான் நாகரிகமான வார்த்தை. அதைத்தான் நான் சொல்கிறேன். இதற்கே இவ்வளவு கோபப்பட்டால் இன்னும் நான் நிறைய சொல்லவேண்டி இருக்கிறதே, அதற்கெல்லாம் அவர்கள் எப்படி.... (கூச்சல், குழப்பம்).

பேரவைத் தலைவர் அவர்களே, நான் பேசும்போது இடைமறித்தவைகள் குறிப்பேட்டில் இருக்காது என்று நான் கருதுகிறேன். (கூச்சல், குழப்பம்). (குறுக்கீடு) இருக்கக்கூடாது என்று கருதுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நான் அனுமதித்தாலொழிய எதுவும் குறிப்பேட்டில் ஏறாது.

மாண்புமிகு டாக்டர். எம். ஜி. இராமச்சந்திரன்: அதோடு யாழ்ப்பாணத்தில் 1974 ஜனவரியில் உலகத்தமிழ் மாநாடு நடைபெற்றபோது இலங்கை போலீஸ் தலையீட்டில் பலர் மாண்டதைப் பற்றி முன்னாள் முதல்வர் மாண்புமிகு டாக்டர் கலைஞர் கருணாநிதி அவர்கள் கருத்து தெரிவிக்கையில், இலங்கையில் நடைபெற்ற சம்பவங்களுக்குள் நுழைந்து விமர்சிக்க நான் விரும்பவில்லை, சட்டம், ஒழுங்கு பிரச்னையில் ஒரு மாநில

அரசு தலையிடுவதாகிவிடும் என்றார். ஆதாரம் 19-1-1974
''முரசொலி''. 22-1-74அன்று தமிழகம்வந்த இலங்கைப் பிரதமர்
பண்டார நாயகாவிற்கு கறுப்புக்கொடி காட்டிய ஜனார்த்தனம்
கைது செய்யப்பட்டார். இலங்கைப் பிரதமருக்கு கறுப்புக்
கொடி காட்டியவர்கள் திராவிட முன்னேற்றக் கழகத்தவர்களாக
இருக்கமாட்டார்கள் என்று கருணாநிதி கூறினார். ஆதாரம்
22-1-74 ''மக்கள் குரல்''.

இது ஒரு சிறிய விளக்கம்தான். இதை எதற்காகக்
கூறுகிறேன் என்றால். 2, 3 முறை இதுபோல் அவ்வப்
போது தமிழக மக்களை வெளியேற்றவேண்டும் என்று விரும்பிய
நேரத்திலே அல்லது வேறு பிரச்னைகளில் அவர்களை உள்ளாக்கிக்
கொண்டு தமிழர்களுக்கு இழைத்த கொடுமைகளின்போது
எந்தெந்த அரசு எப்படி நடந்தது என்பதையும், ஏ தா தமிழர்கள்
மீது பற்று இல்லாத, கொஞ்சம்கூட இலங்கைத் தமிழர்கள் மீது
அக்கறை இல்லாத இந்த அரசு, இவர்கள் எல்லாம் எனக்கு
பயந்து என்னைவிட சீனியராக இருப்பவர்கள் எல்லாம் வாய்
கட்டிக்கொண்டிருக்கிறார்கள் என்ற வகையில் மனம் திறந்து
பேசவேண்டும் நாவலர் அவர்கள் என்று குறிப்பிட்டார்களே,
அதையும் இணைத்துச் சொல்கிறேன். நாங்கள் எல்லோரும்
கொஞ்சம்கூட இதிலே அனுதாப உணர்வோ, அக்கறையோ,
மனிதாபிமானமோ இல்லாமல் இருக்கிறோம் என்று தங்களுடைய
மனதைக் கல்லாக்கிக் கொண்டு குற்றச்சாட்டை எப்படியாவது
சொல்லித் தீரவேண்டும், உண்டாக்கித் தீரவேண்டும் என்ற
வகையில் முயல்கின்றவர்களுக்குச் சொல்கிறேன். எந்த தமிழக
அரசும் இப்படிப்பட்ட வேகமான, முறையான, ஆனால்
தமிழகத்திலே எந்த விபரீதமும் விளையாத வகையில் மக்களுக்கு
நஷ்டம் ஏற்படாத வகையில் எல்லோருடைய கருத்தையும்
ஒருமித்து, இலங்கை அரசுக்கு மட்டுமல்ல, பேரரசையும்
இணைத்துக்கொண்டு, உலக அரசுக்கு, உலக மக்களுக்கு தருகின்ற
அளவில் ந ம் ந த்தினோம் என்பதைச் சொல்லும்போது இந்த
அரசு பெருமைப்படுகிறது, மனநிறைவு கொள்கிறது என்பதை
நான் தெளிவாகச் சொல்கிறேன்.

குற்றம் சொல்கிறவர்கள்கூட, அவர்கள் தனியாக
உட்கார்ந்திருக்கும்போது, அவர்களுடைய மன சாட்சியே
சொல்லும். இராமச்சந்திரன் சொன்னது உண்மைதான்.
நாம் என்ன செய்வது? வேறு வழி இல்லை என்றுதான்
அவர்களுடைய உள்ளம் சொல்லும். நான் அதை
நிச்சயமாக நம்புகிறேன். காரணம் படையெடுப்பு என்பது வேறு;
படை அனுப்புதல் என்பது வேறு; படை அனுப்புங்கள் என்பது
வேறு. படை அனுப்புங்கள் என்று இலங்கையிலிருந்து யாரும்
நம்ம கேட்கவில்லை என்பதை நான் இங்கே கூறிக்கொள்ள
விரும்புகிறேன். அமிர்தலிங்கம் அவர்கள் காலம் தாழ்த்திச்
சொன்னார்கள். இப்போது படை அனுப்பத் தேவையில்லை
என்று சொல்வதை வைத்துக்கொண்டு, இப்போது என்கிற
வார்த்தையை, அப்போது வந்தால் பயன் இருந்து இருக்கும்.
இப்போது வேண்டாம் என்று சொல்லியிருக்கிறார்கள் என்ற ஒரு
கற்பனையை அழகாக ஏற்படுத்திக்கொண்டு விரிவாக்கம் செய்ய,
விளக்கம் தர விரும்புகிறார்கள். அவர்களுக்கு நான் சொல்கிறேன்.
முன்பு எப்படியோ. அண்மைக்காலத்தில் நான் அமிர்தலிங்கம்



அவர்களிடம், மற்றவர்கள்,—இப்போது நாடாளுமன்ற
உறுப்பினர்களா என்று தெரியாது—அங்கே பொறுப்புள்ள தமிழ்த்
தலைவர்களிடமும், புலிப்படையினர் என்று சொல்லுகிறார்களே,
அவர்களில் ஒருசில இளைஞர்களிடமும் நான் சந்தித்துப் பேச
எனக்கு வாய்ப்பு கிடைத்திருக்கிறது. நான் பேசியிருக்கிறேன்.
அதில் ஒரு வினாடியில் கூட, அவர்களுடைய பேச்சில் ஒரு
எழுத்தில் கூட இலங்கைக்கு இந்தியா இராணுவத்தை அனுப்ப
வேண்டும் என்று கோரவில்லை என்பதை நான் இந்த
மாமன்றத்திற்குச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். அத்தோடு
இன் னொன்றையும் நான் குறிப்பிட வேண்டும். தொண்டமான்
வந்தார். அவரோடும் பேசினேன். அவருடைய கோரிக்கைகள்
என்ன என்பதை நான் இங்கே குறிப்பிட்டுக் காட்ட நினைக்கும்
போது எனக்கே கொஞ்சம் சங்கடமாக இருக்கிறது. அதை
எல்லாம், ஏட்டிலேயும், பத்திரி கைகளிலேயும் வெளியிடுவார்களே
யானால், அவர்களை யாரும் தடை செய்ய முடியாது. இந்தப்
பேச்சுக்கள் சட்டத்திற்குப் புறம்பான பேச்சுக்களும் அல்ல.
ஆனால் அவை எல்லாம் வெளியே வந்தால் அங்கே இலங்கையிலே,
இருக்கிற தமிழர்களுக்கு எ ன பாதுகாப்பு கிடைக்கும்?
அவர்களுக்கு வேறு என்ன செய்ய முடியும் ஆபத்தை உண்டாக்கு
வதைத் தவிர என்று நான் உணர்ந்துக் கொண்டிருக்கிறேன்.

(பிற்பகல் 12-50)

குற்றச்சாட்டுக்களைச் சொல்பவர்கள் புரட்சித் தலைவர்,
புரட்சித் தலைவர் என்று அழைத்தாலும், அவர்கள் பின்னால்
பேசுகிற குற்றச்சாட்டுகள் உயர்ந்தவையாக ஆகிவிடாது. குற்றச்
சாட்டுக்களை கூறுவதற்காக மட்டும் அல்ல, என்னைக் குறைத்துப்
பேசவேண்டும் என்பதற்காவே புரட்சித் தலைவர் என்ற
வார்த்தையைப் பயன்படுத்துகிறார்கள். (குறுக்கீடு) நன்றி,
இருக்கட்டும். மரியாதையே டு திட்டுகிறார்கள். கவலை
இல்லை. அது பண்பு. (குறுக்கீடு) அரசியலா, சரி அரசியல்.
அண்ணாவிடம் பண்புள்ள அரசியல் இருந்தது. நம்மில் சிலரிடம்
அரசியல் இருக்கிறது, பண்பு இல்லை போலும் என்று அதைத்தான்
சொல்ல விரும்புகிறேன்.

ஆனால் ஒன்றை நான் திரும்பத் திரும்பச் சொல்கிறேன்.
சட்டசபையை ஏன் கூட்டவில்லை என்று கேட்கிறார் ள். சட்ட
ச பக் கூடியிருந்தால், தீர்மானத்தை நிறைவேற்றியிருக்கலாம்.
இதே தீர்மானத்தை அப்போதும் நிறைவேற்றியிருக்கலாம்.
ஆனால், சட்டசபைக்குள் வர முடியாமல், வெளியே
இருக்கிறார்களே, பல்வேறு கட்சியைச் சேர்ந்தவர்கள், பல்வேறு
ஜாதியைச் சேர்ந்தவர்கள்—நமக்கு ஜாதி இல்லை—பல்வேறு மதங்
களின் தலைவர்கள், மடத்தின் தா லவர்கள், மதவாதிகள்
எல்லோரும், அவர்களை எல்லாம் நாம் சேர்த்து ஒன்றாக
இணைத்து, நீங்களும் நாங்களும் எல்லோரும் சேர்ந்து அந்தப்

பொது வேலை நிறுத்தத்தை நடத்தினோமே, அதை நீங்கள் பெருமையாகக் கருத வேண்டாமா? நாம் கட்டளை இட்டு அவர்கள் செய்ய வேண்டாமா? அவர்களும் நாமும் கலந்து ஆலோசித்து செய்து அந்தப் பொது வேலை நிறுத்தம் என்பதை தயவுசெய்து சிந்தித்துப் பாருங்கள்.

இந்தச் சட்டசபையில் 5 நாட்கள் 10 நாட்கள் பேசினால் என்ன பலன் கிடைக்குமோ, அது ஒரு வினாடியில் கிடைத்து விட்டது, அந்தப் பொது வேலை நிறுத்தத்தால் என்பதை தயவுசெய்து மறந்துவிடக் கூடாது.

அங்கே ஒரு கலகம் முதலிலே நடைபெற்று முடிந்ததற்குப் பிறகு, தமிழர்களுக்கு அநீதி இழைக்கப்பட்ட பின்பு நான் இலங்கைச் செல்லவேண்டிய அவசியம் ஏற்பட்டது. நான் அண்ணாவிடம் கேட்டேன். என்னை அழைத்தவர்கள் யார் என்றால் அங்கே இருக்கக்கூடிய பத்திரிகையாளர்களின் குருப்பைச் சேர்ந்தவர்கள்; 5, 6 பத்திரிகைகளை வைத்துக் கொண்டிருப் பவர்கள். அவர்கள் என்னை அழைத்து, எனக்குப் பட்டம் கொடுத்து, பாராட்டு விழா நடத்த இருந்தார்கள்—இதற்காக நான் அண்ணாவிடம் கேட்டேன். இப்படிப்பட்டவர்கள் என்னை அழைக்கிறார்களே, நான் போகலாமா என்று. அண்ணா அவர்கள் சொன்னார்கள். ''இப்போதுதான் போக வேண்டும். நீ போய் நமது கொள்கையைச் சொல்; தமிழர்கள் யார் என்பதைச் சொல்'' என்றெல்லாம் சொல்லிவிட்டு, கடைசியாக நான் கேட்டதற்குப் பதிலாக ஒன்றைச் சொன்னார்கள்.

இங்கே இருக்கிற திராவிட முன்னேற்றக் கழகத்திற்கும் அங்கே இருக்கிற திராவிட முன்னேற்றக் கழகத்திற்கும் என்ன தொடர்பு என்று நான் கேட்டேன். எந்தத் தொடர்பும் இல்லை, கலாச்சார தொடர்பு தவிர என்று அண்ணா அவர்கள் சொன்னார்கள். இன்று நான் அதை நினைத்துப் பார்க்கிறேன். ஏதோ அண்ணாவின் கொள்கைகளை நாங்கள் கைவிட்டு விட்டது போலவும், ஏதோ அநியாயம் செய்து விட்டது போலவும், தமிழர்களின் மீது பற்றே இல்லாமல் ஒரு ஆட்சி இங்கே இருப்பது போலவும், சொன்னதை எல்லாம் செய்யாமல் ஏதேதோ செய்து கொண்டிருப்பது போலவும் சொல்வதையெல்லாம் கேட்கும்போது நான் திகைப்பு அடைகிறேன். எனக்கு வெறுப்பும் வரவில்லை, வேதனையும் வரவில்லை அல்லது கோபமும் வரவில்லை, வராது. நான் சிரித்துக் கொண்டுதான் இருந்தேன். என்ன நடக்கும் என்று எனக்கு முதலிலேயே தெரியும். ஆகவே சிரித்துக்கொண்டு இருந்தேன். இன்னும் சிரித்துக்கொண்டுதான் இருப்பேன்.

ஆனால் ஒன்று மட்டும் நிச்சயம். டாக்டர் கலைஞர் கருணாநிதி இப்போது இந்த அவையில் இல்லை என்பது எனக்கு வருத்தமாகத்தான் இருக்கிறது. முதலில் அனுப்பிய ராஜிநாமாக் கடிதம் சட்டப்படி தவறு என்றபோது மற்றவர்கள் எல்லாம் கேட்டுக்கொண்டபோது அதை வாபஸ் பெற்றுக் கொண்டால்



இருந்திருந்தால் இங்கே நீங்கள் திரும்ப அனுப்பாமல் இருந்திருந்தால் இங்கே நீங்கள் சொன்னபடி நல்ல கருத்துக்களைக் கேட்டு இருக்கலாம், பதில் களைச் சொல்லியிருக்கலாம். நீங்கள் அவர் இல்லையே என்பதற்காக நாங்கள் பதில் சொல்லவேண்டிய அவசியத்தை நீங்கள் ஏற்படுத்தியதைப்போல் அவர் ஏற்படுத்தியிருக்க மாட்டார், எங்களுக்கும் அப்படிப்பட்ட நிலைமை ஏற்பட்டு இருக்காது. ஆனால் என்ன காரணமோ அது அவருக்குத்தான் தெரியும், உங்களுக்குத் தெரியும், இங்கே அவர் வரமுடிய வில்லை. வருத்தமாக இருக்கிறது. ஆனால் கொள்கையில் ஒன்றுபட்டு இருக்க முடியும் என்பதில், இலங்கைப் பிரச்சினையில் ஏற்பட்டு இருக்கமுடியும் என்பதில், யாருக்கும் சந்தேகமே இல்லை.'

இங்கே சொல்கிறார்கள் பண்ருட்டி இராமச்சந்திரனை நீங்கள் அனுப்பி இப்படிச் சிக்கலாமா என்று எங்களைச் சிக்க வைக்கப் பார்க்கிறார்கள், ஆனால் உங்களுடைய திறமையால் அந்த அரசியலில் சிக்க மாட்டோம், எங்களை சிக்கவைக்க முடியாது. அவர்கள் பூரண சுதந்திரத்தோடு போய்—இங்கே இருந்து டெக்ஸ்ட் அனுப்பினாலும்—எக்ஸ்டெம்பராகப் பேசுவதற்கு உரிமை பெற்று அங்கே இருக்கிறார்கள் என்பதைத் தெளிவுபடுத்திக் கொள்கிறேன். நேரம் இருக்கும் என்று கருதுகிறேன். நேரம் இருந்தால் அவைகளை படித்துக் காட்டத் தயாராக இருக்கிறேன். 2 மணி நேரம் வேண்டும். கண்டிப் பாக. நான் இரண்டு மணி நேரம் எடுத்துக் கொள்வேன். ஏனென்றால் இத்தனை நாட்களாக என்னைப் பற்றித் திட்டிய தற்கும் இப்போது திட்டியதற்கும் நான் பதில் சொல்லியாக வேண்டும். அது என்னுடைய கடமை. நான் ஏன் இந்தப் பிரச்னையை எடுத்துச் சொல்கிறேன் என்றால், ஏன் பண்ருட்டி இராமச்சந்திரனை அனுப்பினேன் என்றால், இப்போது அவருக்கு இங்கே வேலையில்லை, பிரச்சினை இல்லை, அதுபோல் எல்லோரையுமே இங்கிருந்து அனுப்பலாம். எங்கள் அமைச்சரவை யிலே இன்னார் தான் உயர்ந்தவர்கள், இன்னார் திறமை அற்றவர்கள் என்ற வேறுபாடு இல்லையென்பதை நான் துணிவோடு தெரிவித்துக்கொள்கிறேன். நீங்கள் பார்க்கிறீர்கள். காளிமுத்து, எஸ், டி. சோமசுந்தரம், இருவரைத்தான் நீங்கள் கண்டுபிடித்திருக்கிறீர்கள். என்னை ஏன் கண்டுபிடிக்கவில்லை என்று தெரியவில்லை. என்னை மீறி அவர்கள் பேசமாட்டார்கள். நான் அதை இந்த அவையிலே தெரிவித்துக்கொள்கிறேன். இந்த எம்.ஜி.ஆர். என்ற முதலமைச்சரை மீறி எந்தக் கொள்கை யையும் வெளியிடுகிறவர்கள் எங்கள் அமைச்சரவையிலே இல்லை. ஆகவே தயவு செய்து தெரிந்துகொள்ளுங்கள், நாங்கள் அபபடியொரு அமைச்சரவையை வைத்துக்கொண்டு வாழமாட்டோம். எங்களை மீறி எங்களுக்குள் அபிப்ராய பேதம் வந்து விட்டால் நாங்கள் இந்த அமைச்சரவையை கலைத்து விட்டு வெளியே போய்விடுவோம் அல்லது வேறு ஒரு அமைச்சரவையை அமைத்துக்கொள்வோம். நீங்கள் தெரிந்து கொள்ளவேண்டுமென்பதற்காகச் சொல்கிறேன். இந்தப்

[1983 அக்டோபர் 27
(டாக்டர் எம். ஜி. இராமச்சந்திரன்)

பிரச்சினையில் நீங்கள் எங்களுக்குள் முடிச்சுப் போட முனைந்
தால் முடிச்சு விழாது. அந்த முடிச்சு நிற்காது. அறுந்துவிடும்.

காளிமுத்து என்ன பேசுகின்றார் என்பதைப் பற்றி நீங்கள்
இப்போது என்று சொன்னதுபோல், 'இனி இப்படிப் பேசினால்'
என்று வார்த்தையை எடுத்துக்கொள்ளக்கூடாதா? 'இனி'
என்ற வார்த்தையை ஏன் விட்டுவிட்டீர்கள்? அது திரு.
வெங்கட்டராமன், பாதுகாப்பு அமைச்சர் மட்டும் என்று ஏன்
குறிப்பிடுகிறீர்கள்? இனி பேசினால் இது நடக்கும் என்று அவர்
சொல்கிறார். பேசியதற்கு பதில் அல்ல. இனி இப்படி யாராவது
பேசினால் புரிந்து கொள்ளாமல் பேசினால் என்று எடுத்துக்
கொள்ளக்கூடாதா? இங்கே நான் இதைக் குறிப்பிடுவதற்குக்
காரணம் ஒவ்வொன்றையும் நான் கவனித்துக்கொண்டுதான்
இருக்கிறேன். அவர், என்ன பேசப்போகிறார் என்பதைச்
சொல்கிறார். வார்த்தைகளிலே கொஞ்சம் கோபமாக வருமே
தவிர கருத்துக்களிலே மாறுபாடு இல்லை. எங்களிலே எந்தக்
கருத்துவேறுபாடும் இல்லை என்பதை இந்த அவைக்குச் சொல்
வதிலே நான் மகிழ்ச்சியுறுவேன். அவை இதைத் தெரிந்து
கொள்ளவேண்டும். ஏனென்றால் அவையில் உள்ள
எல்லோருடைய நம்பிக்கையிலே தான் அரசு நடக்கிறது. குற்றம்
சொல்லலாம், கண்டிக்கலாம், எதிர்ப்புத் தீர்மானங்கள்
கொண்டுவரலாம், நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டு
வரலாம். இவைகள் எல்லாம் உங்கள் கருத்துக்களைச் சொல்லி
எங்களை திருத்துவதற்கு அல்லது நாட்டிலே உள்ள நிலைமை
களை எடுத்துச் சொல்வதற்குத்தானே தவிர கடைசியாக
இந்தக் காரியத்தைச் செய்கிறபோது இந்த அவையே ஒட்டு
மொத்தமாகச் சேர்ந்து செய்கிறது என்ற பொருள்தானே
தவிர இராமச்சந்திரனோ அல்லது அந்தந்த இலாக்காக்களிலே
உள்ளவர்களோ மட்டும் செய்கிறார்கள் என்று பொருள் அல்ல,
இந்தச் சட்டமன்றப் பேரவை, மேலவை அனைத்தும் சேர்ந்து
செய்கிறது என்று பொருள். நான் இதை ஆரம்பத்திலேயே
குறிப்பிடுகிறேன், ஏனென்றால் உங்களுக்கு இது தெரிய வேண்டு
மென்பதற்காகச் சொன்னேன்.

(பிற்பகல் 1-00)

இன்னும் ஒன்று. அந்த உணர்ச்சி எங்களுக்கு ஏன் வரக்
கூடாது? நாவலருக்கு வரக் கூடாதா என்று அவர் பேசிய
பேச்சையும்—திராவிட முன்னேற்றக் கழகத்தின் துணைத்
தலைவர் அவர்கள் குறப்பிட்டார்கள். இதையாவது அவர்
ஞாபகம் வைத்துக்கொண்டிருக்கிறார்களே என்பதில் நான்
சந்தோஷப்படுகிறேன். நாவலரை மறந்து விட்டாலும் நாவலர்
பேசிய பேச்சை அவர் நினைவு வைத்திருக்கிறார்கள் என்பதால்
எனக்கு மெத்த மகிழ்ச்சி. என்ன சொல்கிறார்கள்



1983 அக்டோபர் 27]
(டாக்டர் எம். ஜி. இராமச்சந்திரன்)

அவர்கள் எப்படி விமர்சனம் செய்
என்றால் வெளியே என்பதை நான் கவனித்துக் கொண்டிருக்
கிறார்கள் பத்திரிகையிலும் படிக்கிறேன்; அந்த நாவலரை
கிறேன். இந்த நாவலரை ஞாபகம் வைத்துக்கொண்டால்
மறந்துவிட்டு உங்களுக்கு நான் கை கூப்பி நன்றியை
அதுவரைக்கும் என்ன இருந்தாலும் சீனியர்
தெரிவித்துக்கொள்கிறேன். 'தம்பி வா தலைமை ஏற்க வா'
அல்லவா, அண்ணாவால் அல்லவா. ஆகவே அவருக்கு இந்த
என்று அழைக்கப்பட்டவர் அதுவரையில் நான் நன்றியை
மரியாதையை கொடுக்கிறார்களே
சொல்லிக் கொள்கிறேன்.

ஒரு கேள்வி என்னுடைய உள்ளத்தில் இருக்கிறது. இந்தத்
தீர்மானம் யாரை கண்டிப்பதற்கு? யாருக்கு உதவி செய்வதற்கு?
யாருக்கு பலம் சேர்ப்பதற்கு? யாருக்கு வலிவு ஊட்டுவதற்கு,
எந்த கொள்கையை உலகத்திற்கு எடுத்துச் சொல்வதற்கு?
இதை நாம் நினைத்துப் பார்க்க வேண்டும் என்று உங்களை
கேட்டுக்கொள்கிறேன். ஏன் என்றால் நாம் இங்கே பேசுகின்ற
கருத்துக்களின் மூலமாக ஒருவரை பிரித்துவிட்டு,
இன்னொருவரை ஒதுக்கி வைத்துவிட்டு, இளைஞர்களை
காட்டிக்கொடுத்துவிட்டு நாம் ஏதாவது இங்கே தீர்மானம்
போட்டு புகழைப் பெற நினைத்தால் அது தமிழர்களுக்கு
நல்லது அல்ல, தமிழ் இனத்திற்கு நல்லது அல்ல இலங்கை
வாழ் கஷ்டப்பட்டுக்கொண்டிருக்கிற, கஷ்டப்படுகிற இனிமேல்
அங்கே வாழ வேண்டும் என்று விரும்புகிற அந்தத் தமிழ்
மக்களுக்கு நன்மை இல்லை என்பதை நான் குறிப்பிட்டுச்
சொல்ல விரும்புகிறேன்.

அந்த தமிழின மக்களுக்கு என்ன வழி
நாம், நஷ்டப்பட்ட யாராவது யோசனைச் சொல்
செய்யப்போகின்றோம் அதற்காக திரு. சங்கரய்யா அவர்கள், அவர்
வார்கள் என்று கருதினேன். சில விளக்கங்களை தெரிவித்
களுடைய தனித் தன்மையோடு தெரிவித்தார்கள். அதேமாதிரி திரு.
தார்கள். கருத்துக்களை மற்றும் சில நண்பர்கள் எல்லாம்
அழகர்சாமி அவர்களும் எல்லாம் நன்றியைச் சொல்லிக்
தெரிவித்தார்கள். அவர்களுக்கு சொல்வதை நாங்கள் ஏற்றுக்
கொள்கிறேன். யோசனைச் இருக்கிறோம். ஏற்றுக் கொள்ளக்கூடிய
கொள்ள தயாராக நாங்கள் சேர்த்துக்கொள்ளப்
சில திருத்தங்களைக் கூட முடிவு, இதையே ஏற்றுக்
போகின்றோம். இதுவே தான் சொல்லப்போவது இல்லை. ஆனால்
கொள்ளவேண்டும் என்று இன்றைய நிலைமை என்ன
திரு. அமிர்தலிங்கத்தின் பாஸ்போர்ட்டு கொடுக்கவில்லை என்றால்
அவருக்கு அவர்கள் என்ன? அவர் நாடு அற்றவர். ஒன்று அங்கு
அவர் நிலைமை வேண்டும். சென்றால் என்ன ஆகும் என்பதற்கு
சென்றுவிட இல்லை. அந்த உத்திரவாதத்தை நாம் பெறு
உத்திரவாதம் தீர்மானத்தை நிறைவேற்றும்போது இவ்வளவு
வதற்கு ஒரு காட்டினால் அந்த அரசாங்கம் மதிக்குமா?
வேறுபாட்டைக்

(டாக்டர் எம். ஜி. இராமச்சந்திரன்)

அச்சத்திற்கு உள்ளாகுமா? என்ன நிலைமையை அவர்களுக்கு துணிச்சலோடு ஏற்படுத்தும் என்பதை ஒரு கணம் சிந்தித்துப் பார்க்கவேண்டும்.

ஒரு வேடிக்கையான செய்தியை இரண்டு நாட்களாகப் படித்தேன். என்னுடைய படத்தை 20 தியேட்டர்களில் இருந்ததை அதை ஓட்டக் கூடாது என்று சொல்லிவிட்டார்கள் அந்த அரசாங்கத்தார் என்ற ஒரு செய்தி. இன்றைய தினம் ஜனாதிபதி சொல்கிறார் எனக்குத் தெரியாது அவர்கள் போட்டுவிட்டார்கள் அது ஓடும். இலங்கையின் நிலைமை இது. இது யாருடைய பாதுகாப்பில் யாருடைய கட்டுப்பாட்டிலே யாரால் இயங்குகிறார்கள் எப்படித் தொடர்பு இருக்கிறது என்றே நமக்குப் புரியவில்லை.

குற்றம் சொல்லும்போது எப்படி நான் பொறுப்பு ஏற்றுக் கொள்கிறேனோ அதேபோல் ஜெயவர்த்தனே பொறுப்பு ஏற்றுக் கொள்ளவேண்டும். நாம் ஜெயவர்த்தனேவைத்தான் குற்றம் சொல்லமுடியும். அங்கே சிரில்மாத்யு என்பவர் ஒருவர் இருக்கிறார் அவரைப் பற்றி சொல்லலாம் என்றால் அது செகண்டரி. அதைப்பற்றி நாம் கவலைப்படவில்லை. அவர் கண்ட்ரோல் பண்ண வேண்டியவர். ஆனால் நிலைமை இப்படி இருக்கும்போது இன்னும் நமக்கு வருகிற செய்திகளை எல்லாம் நாம் எண்ணிப் பார்த்தால் ரெளடிகள் எந்த இனத்தார் என்று தெரியாத வகையில், இந்த பழியில் அல்ல, இந்த வன்முறை செயலில் கொடுமைகளில் ஈடுபட்டிருக் கிறார்கள் என்று செய்தியும் வந்திருக்கிறது. குறிப்பிட்டு சொல்லமுடியாத அளவுக்கு இருப்பதால் நான் குறிப்பிட்டுச் சொல்லவில்லை. செய்தியை நான் சொல்கிறேன். அது உண்மையா? பொய்யா? என்பது சில நாட்கள் கழித்து தெரியும்.

இங்கே, குட்டிமணியின் கண்ணை கீழே வைத்து மிதித் தார்கள் என்று சொன்னார்கள். அது எவ்வளவு கஷ்டமான காரியம் என்பதும் வேதனையாக இருக்கிறது. இன்னொரு சமயம் பத்திரிகையி ந்தது அந்த குட்டிமணியின் கண்ணை எடுத்து எரிந்துவிட் ர்கள் என்று சொன்னார்கள். எது உண்மை என்பதை ங்கே கூட இருந்தார்களே அவர்கள் தான் சொல்லவேண்டும். நமக்குத் தெரியாது. ஆனாலும் எந்த நாட்டிலும் நடைபெறாத—ஒரு கைதிக்கு ஒரு குற்றவாளிக்கு பாதுகாப்பான இடம் எது என்றால் சிறைச்சாலைதான். அந்த சிறையிலே கூட பாதுகாப்பு இல்லை என்ற நிலைமை ஏற்படுமானால் அந்த அரசை எந்த முறையான இயக்கத்தினை அவர்கள் செய்து இருக்கிறார்களோ அந்த செயலை கண்டிப் பதற்கு எவ்வளவு மோசமான வார்த்தை தமிழில் இருந்தாலும் கூட போடலாம், சேர்க்கலாம் அதில் ஆட்சேபணை இல்லை. ஆனால், தீர்மானத்தை நிறைவேற்றிய பிறகு நாம் என்ன செய்யப்போகிறோம் என்பதும், நமது பேச்சுக்களிலே வெளி வந்திருக்குமானால், எனக்கு மிக நன்மையாக இருந்திருக்கும்



(டாக்டர் எம். ஜி. இராமச்சந்திரன்)

அது இல்லை. 'நீ சட்ட சபையைக் கூட்டவில்லை, படை யெடுப்புக்கு நீ ஆதரவு தரவில்லை, தமிழ் விடுதலைக்கு நீ ஆதரவு வார்த்தை சொல்லவில்லை, எப்பொழுதும் போல் தாமதமாக' என்று சொல்கிறார்கள். நான் தாமதப்படுத்துவது தவறுதான் என்றாலும், சில விஷயங்களைத் தாமதமாகச் செய்வதால் ஆபத்துதான். அதைவிட அவசரப்பட்டு செய்தால் மிகமிக ஆபத்து. அண்ணா அவர்கள் கூடச் சொன்னார்கள், நான் மெல்லத்தான் காலடி எடுத்து வைக்கிறேன். அந்தக் காலடி அழுத்தமாக இருக்கும், மெள்ளத்தான் போவேன் என்று. அவ்வளவு சக்தி எனக்கு இல்லை ஆனால், அதைத் தொடர முடியும், தொடருகிறேன். அதிலே தாமதம் ஏற்பட்டால்—என்னுடைய மனசாட்சிப்படி, நாங்கள் எடுத்துக் கொண்ட முடிவுப்படி, அமைச்சரவை தீர்மானம் நிறைவேற்றி னோம். கண்டனக் கூட்டம் என்பதற்குப் பதிலாக பொது வேலை நிறுத்தம் என்று முடிவு எடுத்தோம், அனைவரையும் கூப்பிட்டோம்: வந்தார்கள்; ஆதரித்தார்கள்; நடவடிக்கை எடுத்தார்கள். அந்தக் கண்டனத் தீர்மானத்தை நிறைவேற்றிய பிறகு எல்லோரும் கலந்து கொண்ட பிறகு, யார் யாருக்கு வாய்ப்பு இருந்ததோ, அவர்களை எல்லாம் பிரதம அமைச்சரைக் காணுவதற்கு அழைத்து சென்றேன் என்பதையும் மறந்து விட்டீர்கள். திராவிட முன்னேற்றக் கழக கட்சி எம்.பி. டாக்டர் கலாநிதி அவர்கள் அங்கே இருந்தார்கள் அந்த மனுவில் அவர்கள் கையெழுத்திட்டார்கள். மார்க்சிஸ்ட் கட்சி ஒன்றுதான் கையெழுத்திடாமல் இருந்ததே தவிர, பாக்கி அங்கே வந்த அனைத்துக் கட்சியினரும் கையெழுத்திட்டார்கள். இங்கே உள்ளவர்களும் கையெழுத்திட்டார்கள். நான் எதற்குச் சொல் கிறேன் என்றால், கையெழுத்திடாதவர்கள் ஒத்துக் கொள் கிறார்கள்; கையெழுத்திட்டவர்கள் குற்றம் சொல்கிறார்கள். இதை எங்கே போய் சொல்வது. அந்த மனுவை பிரதமரிடம் கொடுத்து, அவர்கள் சொன்ன வார்த்தையை இன்றைய தினம் சொல்வது தவறு என்று கருதுகிறேன். (திரு. இரா. கருப்பையா குறுக்கீடு)

திரு. என். சங்கரய்யா: இந்திய கம்யூனிஸ்ட் கட்சி மெமோரண்டத்திலே கையெழுத்துப் போட்டதே தவிர அவர்களுக்கும் அதற்கும் வித்தியாசம் இருக்கிறது என்று உங்களிடத்திலே சொன்னோம் என்று சொல்கிறார்.

மாண்புமிகு டாக்டர் எம். ஜி. இராமச்சந்திரன்: எதற்கு சொல் கிறேன் என்றால், கையெழுத்திடாதவர்கள் ஒத்துக் கொள் கிறார்கள், கையெழுத்திட்டவர்கள் குறை கூறுகிறார்கள் என்பதுதான் என்னுடைய வேதனை. அதைத்தான் நான் சொல்கிறேன். அந்த மனுவில் பிரதம அமைச்சரிடம் என்ன சொன்னோம்? ஐக்கிய நாட்டு அமைதிப் படையை பாதுகாப்புப் படையை அங்கே நிறுத்த வேண்டுமென்று கேட்டுக் கொண்டோம். அது அவர்களுக்குப் பிடிக்காத காரியம், அதை அவர்கள் ஏற்றுக் கொள்ளவில்லை. ஆனால் மத்திய அரசாங்கம் எடுத்துக் கொண்ட நடவடிக்கைகளை அவர்கள் ஒத்துக்

கொள்கிறார்கள். வேலை நிறுத்தம் என்றால் நாங்கள் குறை
சொல்வதாக நினைக்கவேண்டாம். கம்யூனிஸ்ட் கட்சிகளைவிட
முன்னால் நிற்கின்றவர்கள் யாருமே கிடையாது. அதற்குப்
பின்னால்தான் எவரும். ஏதாவது பிரச்னையைத் தீர்க்க வேண்டு
மென்றால், வேலை நிறுத்தம் போராட்டம் என்று எதையும்
செய்ய முன்வந்து எந்தத் தண்டனையும் தாங்கிக் கொள்
வதற்கு தயாராக இருக்கின்றவர்கள அவர்கள்தான்--முன்னே
நிற்கிறார்கள். இன்னும் யாராவது இருந்தால் அவர்கள்
பெயரையும் சேர்த்துக்கொள்கிறேன். கோபித்துக்கொள்ள
வேண்டாம். ஆனால், அப்படிப்பட்டவர்கள் எந்த அளவுக்கு
ஒத்துக்கொள்வார்கள் என்பதைத் தயவுசெய்து நினைத்துப்
பார்க்கவேண்டும். அந்த மெமோரண்டத்தில் கையெழுத்துப்
போட்டவர்கள். இவர்களுடைய தலைவர் சொல்லியிருக்கிறார்
படை அனுப்ப வேண்டும், என்று. என்னைக் கேட்டார்களே,
இதற்கு என்ன பதில் சொல்லப் போகிறார்கள் என்று
எனக்குத் தெரியாது. என்னைக் கேள்வி கேட்டார்கள், திரு.
காளிமுத்து ஒன்று பேசுகிறார். திரு. எஸ். டி. எஸ். ஒன்று
பேசுகிறார். உங்களுடைய கொள்கை என்ன? எம். ஜி. ஆர்.
சொல்லட்டும் என்று சொன்னார்கள். நான் சொல்லிவிட்டேன்,
என்னுடைய நிலைமையை. நான் இப்பொழுது கேட்கிறேன்.
பிரதம அமைச்சரிடம் கொடுத்த மனுவில் என்ன இருந்தது?
இப்பொழுது என்ன நிலைமை இருக்கிறது? திரு. இராமச்சந்திரன்
பேசியதில் என்ன தவறு இருக்கிறது? மனித உரிமைகளைப்
பற்றி பேசும்போழுதோ, அதிகாரிகளைப் பற்றி பேசும்போதோ
இந்தப் பிரச்னைகளைப் பேசவேண்டியிருக்கிறது. ஒரு படை
யெடுப்பைப்பற்றி பேசுவதற்காக அங்கே வாய்ப்பில்லை;
அதற்கு இடமும் இல்லை. அகதிகள் பிரச்னை வந்தபொழுது அங்கே
அந்தத் தலைப்பில் என்ன பேச முடியுமோ, எதையெல்லாம்
சொல்ல முடியுமோ, அவைகளையெல்லாம் அவர்கள் கொஞ்சங்
கூட விட்டுக் கொடுக்காமல், பேசி இருக்கிறார்கள் என்பதை
இங்கே நான் சொல்லிக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்,
(குறுக்கீடு) அதை முழுவதும் படிக்கவேண்டும், அப்பொழுது
தான் எல்லோருக்கும் தெரியும்.

(பிற்பகல் 1-10)

நான் மனம் விட்டுச் சொல்கிறேன். அவருக்கு ஒரு பாராட்டா?
என்கிறார்கள். அவரைவிட யாருக்கு பாராட்டு கொடுப்பது என்று
எனக்குத் தெரியவில்லை. நேற்று ஒன்று, இன்று ஒன்று என்று
பேசிவிட்டு பின்னாலே போய்பேசுகிறபோது வேறு ஒன்றை பேசி
விட்டு, பின்னாலே பேசச் சொல்கிறவர்களுக்கு வேறு ஒன்றை
சொல்லிக் கொடுத்துவிட்டு, எங்கோ இருப்பவர்களுக்கு
பாராட்டு என்று சொல்கிறவர்கள்--இதுவரையில் ஐ.நா.
சபையில் தமிழன் ஒருவன் போய் பேசிய வரலாறு கிடை
யாது. தமிழ்நாடு அரசின் சார்பாக தமிழன் அங்கே போய்
பேசி, இலங்கைப் பிரதிநிதிக்கு மறுப்பு சொல்லி, அதை
தோற்கடித்து, அங்கே சென்றிருந்த இலங்கைத் தமிழ் தலை
வர்கள் மாண்புமிகு மின்துறை அமைச்சர் இராமச்சந்திரனை



கட்டித் தழுவி, கைலாகு கொடுத்து அவர்களை பாராட்டியதை
கேட்ட பிறகும், அவருக்கு ஒரு பாராட்டா என்றால்,
இலங்கையைப் பற்றி பேசுகிற நம்மை இலங்கைக்காரர்கள்
பாராட்டுகிறார்கள். நாம் பாராட்டகூடாதாம். அவருக்கு
என்ன பாராட்டு என்று இங்கேயிருந்து பேசுகிறோம். ஈழத்திற்கு
சுதந்திரம் வேண்டுமா, வேண்டாமா என்று முடிவு செய்ய
வேண்டியது ஈழத் தமிழர்களே தவிர இங்கேயிருக்கிற நாம்
அல்ல. இதை ஒரு விவாதப் பொருளாக ஆக்க விரும்புகிறேன்.
அதை நான் சொல்ல வேண்டுமென்றே என்னுடைய கருத்தை
ஆரம்பிக்கிறேன். எங்களுக்கு சுதந்திரம் வேண்டுமென்று யார்
கேட்பது? இன்னொரு நாட்டினுடைய சிபார்சு தேவையில்லை.
அவர்கள் போராட்டம் தொடங்கி, அவ்வளவு நெருக்கடிகளுக்கு
அவர்கள் ஆளாக்கப்பட்டு வேறு வழியில்லை என்று நிலைமை
ஏற்படுகிறபோது உலகம் தானாக ஆதரிக்கும். அந்த ஆதரவு
ஏற்படுகிறபோது அதற்கு ஒரு முடிவு ஏற்படும். அதுவரையில்
அவர்கள்தான் முடிவு செய்யவேண்டும். அவர்களுக்குப் பதிலாக
நாம் முடிவு செய்வது சரியல்ல. தொண்டமான் சொல்கிறார்;
ஈழத் தமிழர் பிரிந்து விட்டால் எங்களுக்கு பாதுகாப்பு
இருக்காதே என்று; அமிர்தலிங்கம் சொல்கிறார் பேசித் தீர்க்க
வேண்டுமென்று, என்ன பேச்சு? வட்ட மேசை என்கிறார்கள்.
இந்தியா சுதந்திரம் அடைவதற்கு எத்தனை முறை பேசியிருக்
கிறார்கள்? இலண்டன் வட்ட மேசையிலே மகாத்மா காந்தி
பேசிவிட்டு வந்தவுடன் கைது செய்யப்பட்டார்கள். அதற்குப்
பிறகும் பேச்சு வார்த்தைகள் நடக்கவில்லையா? இங்கே ஜின்னா
விற்கும், காந்திக்கும் பேச்சு வார்த்தை நடக்கவில்லையா?
இராஜாஜி குறுக்கிட்டு மத்தியஸ்தம் செய்ய முற்பட
வில்லையா? சுதந்திரம் கேட்ட உடனே கிடைத்து விட்டதா?
பிரிவினையிலே நம்பிக்கையில்லை என்று கையெழுத்து போட்டு
நாம் இங்கே அசெம்பிளியிலே உட்கார்ந்து கொண்டிருக்
கிறோம். நாடாளுமன்றத்திலே உட்கார்ந்து கொண்டிருக்
கிறோம். அவர்கள் கையெழுத்து போட மாட்டேன்
என்கிறார்கள், அவர்களை பாராட்டுவதா? தூண்டி விடுவதா.
நமக்கு என்ன உரிமை இருக்கிறது? நமக்கு துணிச்சல் இல்லாத
வேளையில், அவர்களுக்கு துணிச்சல் இருக்கிறதே என்று
பாராட்ட வேண்டுமே தவிர, அவர்களை தனி நாடு
கேளுங்கள்; இங்கேயிருந்து படையெடுக்கச் சொல்லுங்கள்.
என்று சொல்வது--என்ன அரசியல் வியாபாரம்? நாம் செய்ய
முடியாததை இன்னொருவர் செய்தார்கள், என்று பாராட்டு
வதை விட, புகழ்வதை விட, நாம் வேறு ஏதோ பேசிக்
கொண்டிருந்தால் அது எப்படி நியாயமாக இருக்கும் பிரிவினை
கேட்டவர்கள் நாம். இலங்கையிலே உள்ளவர்கள் பிரிவினை
எப்போது [illegible]டார்கள்? உங்களுக்கே தெரியும். [illegible]ங்களே
சொன்னீர்கள் [illegible] அவர்கள் பிரிவினை கேட்க[illegible]லை சம
உரிமை [illegible]டார்கள். அண்ணாவின் வழி வந்த [illegible]களுக்கு
[illegible]ண்டும்; தமிழ் ஆட்சிமொழியாக [illegible]மென்ற

கேட்டிருக்கிறார்கள். இதையெல்லாம் நான் படிக்காமல் இல்லை. எனக்கு ஒருவேளை முன்னால் புரியாமல் இருந்திருக்கலாம். இப்போது படித்துக்கொண்டுதான் இருக்கிறேன். படிக்கவும் செய்கிறேன்.

நாங்களெல்லாம் இளைஞர்கள் என்று சொல்கிறீர்கள், அதை நான் வரவேற்கிறேன். இளைஞர்களாக இருக்க வேண்டியதுதான் வயதானதாக எண்ணமே வரக் கூடாது. அந்த எண்ணம் வந்துவிட்டால் அவர்களால் வேலை செய்ய முடியாது. சீடீரென்று சந்தேகம் வந்து விடும், நெஞ்சு வலிப்பது போல் இருக்கும். படியில்கூட ஏற வேண்டாமே என்ற எண்ணம் வந்துவிட்டால் பிறகு வேலையே ஓடாது.

எதற்காக நான் இதைச் சொல்கிறேன் என்றால், குற்றம் சொல்கிறீர்களே, நாங்களும் அந்தக் கட்சியிலே இருந்தவர்கள் தான் என்பதையும் எண்ணிப் பார்த்துவிட்டுக் குற்றம் சொல்லுங்களேன்; அந்தக் கொள்கை வழிதான் நடக்க விரும்புகிறோம் என்பதை நம்பிச் சொல்லுங்களேன். நாங்கள் செய்வதில் குற்றம் இருக்கலாம். அதைக் களைவதற்கான வழி என்ன என்பதைச் சொல்லுங்கள், ஆனால் குற்றவாளி என்று சொல்லாதீர்கள்.

அண்ணா அவர்கள் திராவிட நாடு வேண்டுமென்று கேட்ட நேரத்தில் அதைச் சொன்னார்கள். ஆனால் அதற்குப் பிறகு அந்தப் பிரச்னையில்லை. என்னை இலங்கைக்கு அனுப்பிய நேரத்தில், இது கலாசாரத் தொடர்புதான், இலங்கைக்கும் இந்தியாவில் உள்ள திராவிட முன்னேற்றக் கழகத்திற்கும் சம்பந்தமில்லை என்று சொன்னார்கள்.

அரசியல் தொடர்பு சம்பந்தமாக அந்த நாட்டைப் பொறுத்தவரையில் அந்த நாட்டில் உள்ள அவர்கள்தான் முடிவெடுத்துக் கொள்ள வேண்டும். நமது நாட்டில் தேவைகளைப் பற்றி நாம் முடிவெடுக்க வேண்டும். இதுதான் இங்கே இருக்க வேண்டிய நிலைமை,

அந்த நிலையில் பார்த்தால் இந்த அரசாங்கம் கொஞ்சம் அத்துமீறிப் போய் இருக்கிறது என்பதை தயவு செய்து ஒத்துக் கொண்டு பாராட்ட வேண்டும். எங்களுக்கு என்று சில பொறுப்புகள் இருக்கின்றன என்பதை ஒப்புக்கொள்கிறீர்கள். உங்கள் தலைவர் பொறுப்போடு இருந்து நிறைவேற்றியிருக்கிறார். நாங்கள் பொறுப்பை மீறி கடமையைச் செய்கிறோம். அதற்கு எங்களுக்கு கிடைக்கின்ற பரிசு திட்டு, பழி, குற்றம், குற்றச்சாட்டு, தமிழர் மீது எங்களுக்கு பாசம் இல்லை. அக்கறை இல்லை என்பவைதான் இப்படியெல்லாம். சொல்வதற்கு உங்களுடைய மனசாட்சி எப்படி இடம் தருகிறது என்று நினைக்கவே முடியவில்லை. நாமெல்லாம் ஒன்றாகப்



9. பேரவை முன்வைக்கப்பெற்ற ஏடுகள்

பழகியவர்கள் அல்லவா? ஒரே இலையில் உண்டவர்கள் அல்லவா? அதையெல்லாம் நினைத்துப்பாருங்கள். எங்களுக்கு அந்த உணர்வு எப்படிப்போகும்? துணிச்சல் அதிகமாகத்தான் ஆகும். மக்கள் சக்தி எவ்வளவுக்கெவ்வளவு அதிகமாகிறதோ அவ்வளவுக்கவ்வளவு துணிச்சல் அதிகமாகுமே தவிர குறையாது. குறை சொல்பவர்கள் அதைத் தயவு செய்து நம்ப வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இன்னும் எவ்வளவு நேரம் வேண்டும்?

மாண்புமிகு டாக்டர் எம். ஜி. இராமச்சந்திரன்; இன்னும் ஒன்றரை மணி நேரம் வேண்டும். இத்துடன் முடித்துவிட்டு நாளைக்கு வேண்டுமானால் தொடர்ந்து எடுத்துக் கொள்ளலாம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இதே விவாதம் நாளைக்குத் தொடரும்.

பேரவையின் இன்றைய அலுவல்கள் இத்துடன் முடிவுற்று 28—10—1983 காலை 9-00 மணிக்கு மீண்டும் கூடும்.

பின்னர் பேரவை பிற்பகல் 1—17 மணிக்கு ஒத்திவைக்கப் பெற்றது.

(அ) சட்டப்படிக்கான விதிகளும், ஆணைகளும்

169. தஞ்சாவூர் தமிழ் பல்கலைக் கழக ஆட்சிப் பேரவை எந்த நாளிலிருந்து செயல்படுகின்ற என்பது குறித்து கல்வி, அறிவியல் மற்றும் தொழில் நுட்பவியல் துறையின் 10.9.1982 ஆம் நாளிட்ட 2013ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை (1982ஆம் ஆண்டு தமிழ் பல்கலைக்கழக சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 9/1982) 49(2) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது).

170. தஞ்சாவூரிலுள்ள தமிழ் பல்கலைக் கழகத்தின் பல்கலைக் கழக ஆட்சிக்குழு தனது நடவடிக்கைகளை செயல்படுத்தும் நாள் குறித்து கல்வி, அறிவியல்—தொழில் நுட்பவியல் துறையின் 1982-ம் ஆண்டு செப்டம்பர் 10-ம் நாளிட்ட 2014ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. (தமிழ்நாடு 1982ஆம் ஆண்டு தமிழ் பல்கலைக் கழக சட்டத்தின் (தமிழ் நாடு சட்டம் 9/1982) 49 (2) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது).

171. தமிழ்நாடு 1982—ஆம் ஆண்டு தமிழ் பல்கலைக் கழகச் சட்டத்தில் சில விதித்துறைகள் செயலுக்கு வரும் நாள் குறித்து கல்வி, அறிவியல்—தொழில் நுட்பவியல் துறையின் 1982-ம் ஆண்டு செப்டம்பர் 10ம் நாளிட்ட 2015ஆம் எண் [illegible]

யிடப்பட்ட அறிவிக்கை. (தமிழ்நாடு 1982-ம் ஆண்டு தமிழ் பல்கலைக் கழகச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 9/1982) 49 (2) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது).

172. தஞ்சாவூரிலுள்ள தமிழ் பல்கலைக் கழகத்தின் நிதிக் குழு தனது நடவடிக்கைகளைச் செயல்படுத்தும் நாள் குறித்து கல்வி அறிவியல்—தொழில் நுட்பவியல் துறையின் 1982ம் ஆண்டு செப்டம்பர் 10-ம் நாளிட்ட 2016-ம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை (தமிழ்நாடு 1982-ம் ஆண்டு தமிழ் பல்கலைக் கழகச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 9/1982) 49 (2) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது.)

173 தமிழ் பல்கலைக் கழகத்தின் வேந்தர் அப்பல்கலைக்கழக ஆட்சிப் பேரவைக்கு உறுப்பினர்களை நியமிப்பது குறித்து கல்வி, அறிவியல்—தொழில் நுட்பவியல் துறையின் 1982-ம் ஆண்டு நவம்பர் 26 ஆம் நாளிட்ட.2606ம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை (தமிழ்நாடு 1982ம் ஆண்டு தமிழ் பல்கலைக் கழகச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 9/1982) 49 (2) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது).

174. தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் 1975—76-ம் ஆண்டு கணக்குகள் மீதான தணிக்கை அறிக்கை. (தமிழ்)

தமிழ்நாடு 1970-ம் ஆண்டு குடிநீர் வடிகால் வாரியச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 4/1971) 44-ம் பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கக்பெற்றது).

(ஆ) அறிக்கைகள் அறிவிப்புகள், ஏனையதாள்கள்

22. தமிழ்நாடு தொழிலாளர் நல வாரியத்தின் 1977-78ம் ஆண்டிற்கான ஆண்டறிக்கை. (ஆங்கிலம்)

தமிழ்நாடு ஆவணக்காப்பக நூலகம் சென்னை-600 008.
136053
V211,31 N83
N83-52-3 94